# மெஹர் பிரபு

## (MEHER PRABHU – LORD MEHER)

**இக்கால அவதார புருஷரின் வருகை**
**(ADVENT OF THE AVATAR)**

# மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு

**(MEHER BABA'S LIFE HISTORY)**

## குறுகிய தமிழாக்கம்

**(TAMIL TRANSLATION - ABRIDGED)**

## தொகுப்பு பதினெட்டு

## (VOLUME EIGHTEEN)

**1962 - 1964**

# இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்தவர், மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

**தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:**
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யா நிர்மல்
பூனா, பிப்ரவரி 2024
🖂 vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/29.07.2025

# நிகழ்வுகளின் காலவரிசை

**1962**
- நவம்பர் 16, அஹமதுநகர் விலூ வில்லா, குஷ்ரு குவார்ட்டர்ஸ் விஜயம்
- டிசம்பர், மெஹராஸாத் - ஏகாந்தவாசம் தொடர்ந்தது

**1962**
- டிசம்பர் 9, மெஹராவின் பிறந்த நாள் (23ஆம் தேதிக்கு பதிலாக) கொண்டாடப்பட்டது; 150 நெருங்கிய அன்பர்கள் கலந்துகொண்டனர்

**1963**
- ஜனவரி 13, அஹமதுநகரிலிருந்து சுமார் 120 சேவகர்களுடன் சந்திப்பு
- பிப்ரவரி 28, மெஹர்ஸ்தான் திறப்பு விழா - பாபாவின் எட்டு சிறப்புச் செய்திகள்

,

**1963**
- மார்ச் 17, அஹமதுநகர் மையம் விஜயம்
- மார்ச் 24, மெஹராஸாத்திலிருந்து பூனா, குருபிரசாத் வருகை

**1963**
- மார்ச் 30, 31, அவதார புருஷர்கள் ஒவ்வொருவரின் 'பலவீனங்கள்' - விளக்கம்
- ஏப்ரல் 7 - ஜூன் 16, குருபிரசாத் தரிசன நிகழ்ச்சி

**1963**
- மார்ச் - ஏப்ரல், பிரதமர் ஜவஹர்லால் நேருவைக் குறித்த மெஹர் பாபாவின் கடிதம்

**1963**
- ஏப்ரல் 25, மீட்பு காவல் இல்லத்தின் 250 குழந்தைகளுடன் சந்திப்பு
- மே 3 - 4, பேகம் அக்தரின் இசை நிகழ்ச்சி

**1963**
- மே 15 மெஹர் பாபாவின் இறைத் தூதர்கள் - வில் பேக்கெட், (அவரது மனைவி மேரி சில மாதங்களுக்கு முன்பு) காலமாயினர் - பாபாவின் செய்தி

**1963**
- ஜூன் 30, மெஹர் பாபா, ஆண், பெண் மண்டலியுடன் குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை; ஏகாந்தவாசம் தொடர்ந்தது

**1964**
- ஏப்ரல் 01, மெஹராஸாத்திலிருந்து பூனா குருபிரசாத் வருகை; ஏகாந்தவாசம் தொடர்ந்தது

**1964**
- மே 1, அவதார் மெஹர் பாபா பூனா மையம் திறப்புவிழா

**1964**
- ஜூலை 1, பூனா குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத் வருகை

**1964**
- தொடரும்...

# பொருளடக்கம்

மெஹராஸாத் - ஏகாந்தவாச பணி ........................................ 3

குருபிரசாத் பூந்தோட்டம் - 1963 - பாகம் 1 ............................. 69

குருபிரசாத் பூந்தோட்டம் - 1963 - பாகம் 2 ............................135

மெஹராஸாத் - ஏகாந்தவாசம்..............................................214

பூனா, குருபிரசாத் - ஏகாந்தவாசம், தரிசனம். ...................254



மெஹராஸாத் (MEHERAZAD) – ஜனவரி (JANUARY) **1963**

# மெஹராஸாத் - ஏகாந்தவாச பணி

(**Seclusion Work In Meherazad**)

மெஹராஸாத் திரும்பி வந்ததும் பாபா, கிழக்கு-மேற்கு சகவாசத்தைக் குறித்து ஒரு புத்தகத் தொகுப்பை உருவாக்குமாறு பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்தினார். ஆனால், இரவுக் கண்காணிப்புப் பணி மற்றும் பகலில் பிற அலுவல்களில் பங்கெடுக்க வேண்டிய நிர்பந்தங்களால், பல தினசரி நடவடிக்கைகளில் பாவ் கல்சூரி கலந்துகொள்ள முடியவில்லை. மண்டலியில், எரச் மற்றும் ஃபிரான்சிஸ் மட்டுமே ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முழுமையாகப் பங்கெடுத்தனர். எரச், பாபாவின் கை அடையாளங்களையும் சைகைகளையும் விவரிக்கும் அதே வேளையில், ஃபிரான்சிஸ் ஆஸ்திரேலியா மற்றும் பிற மேற்கத்திய அன்பர்களுடன் இருந்தார். எனவே, பாவ் கல்சூரி கிழக்கு-மேற்கு சகவாசத்தைக் குறித்த முழு விபரங்களையும் எழுத இயலாமையை வெளிப்படுத்தியபோது, பாபா, ஃபிரான்சிஸிடம் அதைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அதை அவர் பாபாவிற்கு முழுத் திருப்தி அளிக்கும் விதத்தில் செய்து முடித்தார்.

பிற நண்பர்கள் ஓய்வு பெற்ற பின்னர், ஃபிரான்சிஸ் தனக்காக இரவு 9:00 மணிக்கு தேநீர் தயார் செய்து, இரவு 1:00 அல்லது 2:00 மணிவரை எழுதிய பின்பு, மறுபடியும் தேநீர் அருந்தி, படுக்கைக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டார். பாபா காலையில் மண்டலி மண்டபத்திற்கு வந்து, ஃபிரான்சிஸை அழைக்கும் வேளையில், அவர் தூக்கக்கலக்கத்தில், விறைத்துப் போன கால்களுடன் நடந்து வருவது வழக்கம். ஒவ்வொரு காலையிலும், பாபா அவருக்கு தூக்கம் வராமல் இருக்க 'ஹாஃப்-எ-மூன்' (HALF-A-MOON) வினையூக்கியை வழங்கினார்.

மேற்கத்திய அன்பர்கள் தாயகம் திரும்பியதும், அவருக்கு ஒரு கடிதம் எழுதுமாறு பாபா கேட்டுக் கொண்டதன் பேரில், மெஹராஸாத்தில் கடிதங்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தன; ஒவ்வொன்றும் அன்பினால் நிரம்பியிருந்தது. ஒவ்வொரு கடிதமும் பாபாவின் முன்னிலையில் வாசிக்கப்பட்டது, அவர் அதற்கு செவிமடுக்கும் வேளையில், அவரது முகத்தில் அளவிலா அன்பு வெளிப்பட்டது.

பாபாவிற்குக் கடிதம் எழுதுவது என்பது, நாம் நினைப்பது போல் அவ்வளவு எளிதல்ல. சில நேரங்களில் மனிதர்கள், தங்கள் மன வேதனையை இதயப்பூர்வமான வார்த்தைகள் மற்றும் வெளிப்பாடுகள் மூலமாகச் சித்தரிக்க முயற்சி செய்வது உண்டு. பாபாவிற்குக் கடிதம் எழுதுவது தொடர்பான மனதைக் கவரும் சம்பவத்தின் உதாரணம் ஒன்று வர்ஜீனியாவைச் சேர்ந்த ஹென்றி கஷௌடியால் (HENRY KASHOUTY OF VIRGINIA) விவரிக்கப்பட்டது:

1962 நவம்பர் மாதத்தில் நிகழ்ந்த கிழக்கு-மேற்கு சகவாசத்தில், நாங்கள் இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றதும், அவருக்கு கடிதம் எழுதுமாறு பாபா அறிவுறுத்தினார். பாபாவின் இந்த உபதேசம் எனது மனதில் பாரமாக இருந்து, பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவரிடம் என்ன சொல்ல வேண்டும் என்று

என் இதயத்திலிருந்து சொல்ல முடியாமல் தவித்தேன், ஆனால், என்னால் பொருத்தமான வார்த்தைகளைக் கண்டுகொள்ள முடியவில்லை. கடிதம் எழுதுவதில் எனது தாமதம் ஒரு நிலையான கவலையாக இருந்தது.

பின்னர் ஒரு வார இறுதியில் இரவு தாமதமாக, நான் எனது இல்லத்தில் தனியாக இருந்தபோது, நியூயார்க் நகரத்திலிருந்து ஃப்ரெட் வின்டர்ஃபெல்ட் (FRED WINTERFELDT) என்னைத் தொலைபெசியில் தொடர்புகொண்டு, பாபாவிடமிருந்து அவருக்கு ஒரு தகவல் வந்ததாகக் கூறினார்: “ஹென்றியின் கடிதம் எங்கே?”

தொலைபேசி உரையாடலை நிறைவு செய்து, பின்பு பாபாவிற்குக் கடிதம் எழுத அமர்ந்தேன். இது நள்ளிரவு அதிகாலை நேரம், இடி, மின்னலுடன் தொடர்ந்து மழை பொழியத் தொடங்கியது. இதற்கு நடுவே பாபாவிற்கு நான் வரைந்த கடிதம்:

பிரியமானவரே,

என் அன்பான பாபா, நான் உங்களுக்கு எழுதும் எனது வார்த்தைகள் என்னை விட தூய்மையானதாக இருக்க முடியாது, என் இதயம் வலிக்கிறது.

ஓ கவிஞரே, உங்களுக்கான வார்த்தைகள் என்னிடம் இல்லை; எனது ஊமைத்தனம், நீங்கள் கடந்து செல்லும் முன்னர் அழ முயலும் கல் போன்றது.

உங்களைக் காணும் கண்கள் எனக்கு இல்லாததால், எனது கண்ணீர் தப்பிச்செல்ல எந்த வழியுமில்லை.

எனது முரட்டுக் கரங்கள் இந்த இறை ஒளியின் குழந்தைக்கு எந்த அன்பளிப்பையும் கொண்டிருக்கவில்லை.

ஓ அற்புதம் நிறைந்த பாபா, நான் பாபாவை நேசிக்கிறேன் என்று சொல்வீர்களா? எனக்காக நீங்கள் அவரைப் பார்ப்பீர்களா, அவருக்கு ஒரு பரிசை எடுத்துச் செல்வீர்களா?

நான் நித்தியத்திற்கும் உங்களுடையவன்.

- ஹென்றி

நான் எழுதியதை பாபா முன்னிலையில் வாசித்த போது, அவர் தன் இதயத்தின் மீது கை வைத்ததாக ஆதி கே. ஈரானி பின்னர் என்னிடம் கூறினார்.

1962 நவம்பர் 16 வெள்ளி காலை பாபா, விலூ வில்லாவிற்குச் சென்று, அங்கு அவர் ஸரோஷின் குடும்பத்தினரை சந்தித்தார்; அதைத் தொடர்ந்து குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கும் விஜயம் செய்தார், அவ்வேளையில் கில்னானி குடும்பத்தினரையும் சந்தித்தார். அடுத்த நாள் ஹாரி டெடோல்சொவ் (HARRY DEDOLCHOW), பாபாவை மெஹராஸாத்தில் பார்த்த போது, ‘கடைசியாக ஒரு பெண்ணுடன் எப்போது தொடர்பு கொண்டீர்கள்’ என்று பாபா கேட்டதும், ஹாரியின் முகம் சிவந்து, கடந்த காலத்தில் சில தவறான செயல்கள் நிகழ்ந்ததாக ஒப்புக்கொண்டார். பாபா அவரிடம் வலியுறுத்திக் கூறினார்:

**நான் இறைப் பெருங்கடல். அனைத்தும் அதில் கரைந்து மூழ்கிவிடும். இப்போது நீங்கள் என்னிடம் வந்துள்ளீர்கள்; கவலைப்பட வேண்டாம். நான் உங்களை மன்னித்துவிட்டேன்; நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்,**

கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. மனதால் தான் நீங்கள் கவலைப்படுகிறீர்கள். மனம் தொடர்ந்து தந்திரமாக விளையாடி, அதன் விளையாட்டைத் தொடரும் வரை, உங்களுக்கு அமைதியும், நீங்கள் தேடும் மகிழ்ச்சியும் இராது.

உங்களை மனதால் வழிநடத்த அனுமதிக்காதீர்கள். எண்ணங்கள் வந்து விலகும். மனம் ஒரு நல்ல எண்ணத்திலிருந்து மற்றொன்றிற்கும், ஒரு தீய, காம எண்ணத்திலிருந்து வேறொன்றிற்கும் அலைந்து திரியும். மனம் அழியாத வரை எண்ணங்கள் நிற்காது. ஒரு கணம், நல்ல எண்ணங்கள், உயர்வான எண்ணங்கள், எழுச்சியூட்டும் எண்ணங்கள் அனைத்தும் இருக்கும்; மறு கணம் பார்த்தால், மோசமான எண்ணங்கள், மனச்சோர்வடையச் செய்யும் எண்ணங்கள் மற்றும் விரக்தியின் எண்ணங்கள், உங்களை மேம்படுத்தும் எண்ணங்களிலிருந்து கீழே பூமிக்குத் தள்ளிவிடும்.

எனவே எண்ணங்களுக்கு செவி சாய்க்காதீர்கள். காமத்தின் இந்த எண்ணங்களைச் செயலாக மாற்ற வேண்டாம் என்பதில் கவனம் செலுத்துங்கள். ஆண், பெண் எவருடனும் காமச் செயலில் ஈடுபடாதீர்கள். எந்தவொரு காமச் செயலையும் தவிர்க்க, உங்களால் இயன்றவரை முயற்சி செய்யுங்கள். நான் உங்களை மன்னித்துவிட்டேன், இப்போது மகிழ்ச்சியாக இருங்கள்.

கிழக்கு மற்றும் மேற்கத்திய அன்பர்கள் அனைவரும் எனது தாமனை (மேலங்கி) உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று நான் கூறினேன், ஏனெனில் என் இறை வார்த்தைகளின் தாக்கம் என் அன்பர்களின் இதயங்களில் உணரப்படும் நேரம் மிக அருகாமையில் உள்ளது. விரைவில் நான் எனது மௌனத்தைக் கலைப்பேன். அந்த நேரம் நெருங்கிவிட்டது.

உபவாசம் அல்லது எந்த விதமான உணவு முறையையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. நீங்கள் மாமிசம், மீன், முட்டை போன்ற எதை வேண்டுமானாலும் உண்ணலாம். பாபாவின் புகைப்படத்தில் கவனம் செலுத்தவோ, தியானம் செய்யவோ தேவையில்லை. உங்கள் இதயத்தில் எனது உண்மையான ரூபத்தைக் காணும் ஒரு காலம் வரும். அப்போது உங்கள் கவலைகள் அனைத்தும் விலகி, நீங்கள் விரும்பும் பேரின்பத்தை அடையப் பெறுவீர்கள். சுருக்கமாகச் சொன்னால், அனைத்தையும் பாபாவிடம் விட்டுவிடுங்கள், எதைக் குறித்தும் கவலைப்படாதீர்கள்.

எங்கும் பல மகான்களும், துறவிகளும் உள்ளனர். நான் ஒரு துறவி அல்ல, எனவே நான் எந்த ஆன்மீகப் பயிற்சிகளையும் வழங்குவதில்லை. மனித உருவில் நான் கடவுள்! எனது கருணை ஒரே கண நேரத்தில், இறுதி இலக்கின் அனுபவத்தை உங்களுக்கு வழங்க முடியும். என் அருள் உங்களை ஒரு நொடியில் இலக்கை நோக்கி, ஆன்மீகத் தளங்கள் வழியாக அல்லாமல், நேரடியாக அழைத்துச் செல்லும். எனவே, நீங்கள் தியானத்தில் அமரவோ,

**பாபாவின் புகைப்படத்தில் கவனம் செலுத்தவோ தேவையில்லை. உங்கள் இதயத்தில் பாபாவையே உற்று நோக்கும் காலம் வரும்!**

**நான் ஒருவரே குருநாதர் மற்றும் கடவுள். இறை வார்த்தையை வழங்குவதற்கான நேரம் நெருங்கி வருவதால், நீங்கள் என்னையே நினைவில் கொண்டு, மேலும் மேலும் என்னை நேசித்து, எனது தாமனை** (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்.**

நவம்பர் 25 அன்று பாபாவின் பூனா அன்பர்களில் ஒன்பது பேர் மெஹராஸாத்திற்கு வந்தனர். ராமகிருஷ்ணன் கிழக்கு-மேற்கு சகவாசத்தைப் பற்றிய தனது அறிக்கையை வாசித்தார். நரிமனின் பிறந்தநாளை முன்னிட்டு அர்னவாஸ், நரிமன் இருவரும் நவம்பர் 30ஆம் தேதி சிறப்பு உணவைக் கொண்டு வந்தனர். ஜிம் மிஸ்திரி டிசம்பர் 1ஆம் தேதி வந்தார்; மூவரும் மெஹராஸாத்தில் அன்று இரவைக் கழித்து, அடுத்த நாள் மும்பைக்குத் திரும்பிச் சென்றனர்.

1962 டிசம்பர் 1ஆம் நாள் பாபா அவரது மிக முக்கியமான உலகளாவிய பணியின் காரணங்களுக்காக, 1963 பிப்ரவரி மாதத்தில் அவரது பிறந்தநாளை உலகில் எங்கும் கொண்டாட வேண்டாம் என்ற அறிவுறுத்தலுடன், ஒரு வாழ்க்கைச் சுற்றறிக்கை (LIFE CIRCULAR) வெளியிடப்பட்டது. 1963ஆம் ஆண்டு அவசரகாலத் தகவல்கள் தவிர, பாபா அல்லது எந்த ஒரு மண்டலிக்கும் எழுத வேண்டாம் என்ற பாபாவின் விருப்பம் அனைத்து அன்பர்களுக்கும் நினைவு கூரப்பட்டது.

டிசம்பர் 2ஆம் நாள் காலையில் பாபா கீழ்வரும் விளக்கத்தை வழங்கினார்:

**எனக்கு இரண்டு உடல்கள் உள்ளன - ஒன்று மனித உடல் மற்றொன்று உலகளாவிய உடல். மேலும் ஒரு மனித மனம் மற்றும் ஓர் உலகளாவிய மனம். அர்ஜுனனை நம்ப வைப்பது முற்றிலும் இன்றியமையாததாக இருந்த வேளையில், நான் (கிருஷ்ணராக) அவருக்கு என் உலகளாவிய உடலின் ஒரு காட்சியை - மிகக் குறுகிய காட்சியை - வழங்கினேன். அதுவே அவரை அதீத பிரமிப்பில் ஆழ்த்தியது.**

**அனைத்து பேரின்பமும் என்னில் உள்ளது, ஆனால் நான் அதைத் தீண்டுவதும் இல்லை, உபயோகிப்பதும் இல்லை. எனது பேரின்பத்தைப் பயன்படுத்தாமல் இருப்பது எனக்குப் பெரிய வேதனை. ஆனால், அவதார புருஷர் தனக்கே உரித்தான பேரின்பத்தைப் பயன்படுத்துவதானால், அவருடைய துன்பத்தை எப்படித் 'துன்பம்' என்று அழைக்க முடியும், மேலும் மனிதகுலத்திற்காக அவர் மீது சுயமாகத் திணிக்கப்பட்ட துன்பத்தால் என்ன பயன்! ஒரு மனிதனாக, அவதார புருஷரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருக்கும் பேரின்பத்தை அவர் தொடுவதில்லை. அதனால்தான் கிறிஸ்து வேதனையில், "பிதாவே, ஏன் என்னைக் கைவிட்டீர்கள்?" என்று அழுதார். இதை அவர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்!**

**எனது தற்போதைய அவதார உருவில், நான் கிறிஸ்துவைப் போல, நான் அனுபவித்ததை விட அதிகமாகத் துன்பப்படுகிறேன், ஏனெனில் அப்போது நான் சிலுவையில் ஒரு முறை அறையப்பட்டேன் ஆனால் - இப்போது, நான் அனுதினமும் சிலுவையில் அறையப்படுகிறேன். அவதார புருஷர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் துன்பப்படுகிறார்.**

பாபா பலமுறை பணிபுரிந்த இஸ்லாம்பூர் (ISLAMPUR) மஸ்த், தொண்டி புவாவைப் (DHONDI BUA) பற்றி இவ்வாறு எடுத்துரைத்தார்:

**'சௌகரியங்களை என்னால் தாங்க முடியாது' என்று தொண்டி புவா கூறுவது உண்டு. அவர் எல்லா காலநிலையிலும் நடைமுறையில் நிர்வாணமாக இருக்கையில், அவருக்கு எவரேனும் ஒரு போர்வை அல்லது மேல் சட்டை போன்றவற்றை வழங்கினால், அவர் அதை மறுத்து, 'வசதிகள் என்னோடு ஒத்துப்போகாது; அவற்றைத் தீண்டுவதை என்னால் தாங்க முடியாது!' என்று கூறுவதும், சில நேரங்களில் அவர் புழுதியில் உருண்டு புரளுவதையும் காணலாம். இது, மஸ்துகள் கொண்டிருக்கும் கடவுள் மீதான அன்பின் வேதனையின் வெளிப்பாடு. அத்தகைய அன்பு என்ன என்பது குறித்து உங்களுக்கு எதுவும் தெரியாது. இது தாங்கொணா வேதனையைத் தருவதோடு அன்பனை எரிக்கிறது, அதனால் மஸ்த் எப்பொழுதும் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பாக இருக்கிறார்.**

பாதிரி, டாக்டர் டான் மற்றும் மெஹராபாத்தில் வாழ்ந்த பிற அனைவரிடமும் பாபா கூறினார்: **"1963ஆம் வருடம் நிகழும் மாற்றங்களுக்குத் தயாராக இருங்கள்."** ஆனால் டிசம்பர் 10ஆம் தேதியிலிருந்து அனைத்திலிருந்தும் விடுபட்டு, தனக்குத் தானே நிர்ணயித்த பணியைச் செய்ய விரும்புவதாகத் தெரிவித்ததைத் தவிர, தமது திட்டங்களைப் பற்றி உறுதியான எதையும் அவர்களுக்குத் தெரிவிக்கவில்லை.

மன்ஸாரி, ஜெர்பாய், அவரது மூன்று மகள்கள், சுஷீலா ஆகியோரை ஷேக் டிசம்பர் 3ஆம் தேதி காலையில் மெஹராஸாத்திற்குக் காரில் அழைத்துச் சென்று, நண்பகலில் மெஹராபாத் திரும்பினர்.

சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற பாபாவின் விருப்பத்தின் காரணமாக, மெஹராவின் பிறந்த நாள் 1962 டிசம்பர் 9 ஞாயிறு அன்று (23ஆம் தேதிக்கு பதிலாக) கொண்டாடப்பட்டது. பூனாவிலிருந்து பயணம் செய்த ஜோஸஃப் - காரி ஹார்ப் (JOSEPH – KARI HARB) உட்பட பூனா, மும்பை, நவ்ஸாரி, அஹமதுநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 150 நெருங்கிய அன்பர்கள் அன்று காலை 7:30 மணிக்கு மெஹராஸாத் வந்து, மண்டலி மண்டபத்தில் பாபாவிற்கு முன்பாகத் தங்கள் இருக்கைகளில் அமர்ந்தனர். ஜோஸஃபிடம், பாபா, **"சந்தேகத்திற்கு இடமின்றி நான் கடவுள்!"** என்று குறிப்பிட்டார்.



மெஹராஸாத் (MEHERAZAD) - **டிசம்பர்** (DECEMBER) **1963**

மும்பையிலிருந்து தாதாசாஞ்சி முழுக் குடும்பமும் வந்தது. சாஞ்சியை பாபா இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

**இன்று அதிகாலையில் இருந்தே, இந்தியாவிலும் அயல்நாட்டிலும் நான் மேற்கொண்ட அனைத்துப் பயணங்களின் போதும், எனது நிலையான தோழரும், சளைக்காத செயலாளருமான சாஞ்சியை நினைத்துப் பார்த்தேன். நான் (1932இல்) காக்கா பாரியாவுடன் ஹாலிவுட் சென்றிருந்த நேரம் எனக்கு நினைவிருக்கிறது; அப்போது பல பிரபலமான திரைப்பட நட்சத்திரங்கள் என்னை சந்தித்தனர். ஒருமுறை, டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ்** (DOUGLAS FAIRBANKS), **மேரி பிக்ஃபோர்ட்** (MARY PICKFORD) **ஆகியோர் என்னை அவர்களது இல்லத்திற்கு பிரதான விருந்தினராக அழைத்தனர்; பலர் என்னுடன் கைகளைக் குலுக்க அங்கு வந்தனர். மேரி பிக்ஃபோர்ட் என்னை வரவேற்றார்: "எங்கள் இல்லத்தில் நீங்கள் இருப்பதன் மூலம் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம் ..." என்று கூறினார்; பின்னர், அவர் வரவழைத்த அனைவருக்கும் என்னை அறிமுகப்படுத்தினார். அவர்களில் கேரி கூப்பர்** (GARY COOPER), **சார்லஸ் லாட்டன்** (CHARLES LAUGHTON), **மார்லின் டீட்ரிச்** (MARLENE DIETRICH) **மற்றும் வில் ரோஜர்ஸ்** (WILL ROGERS), **அவர் என்னுடன் அரை மணி நேரம் உரையாடினார். மேலும், அங்கு தல்லுலா பேங்க்ஹெட்டும்** (TALLULAH BANKHEAD) **இருந்தார். நான் குறிப்பாக மேரி டிரஸ்லரை** (MARIE DRESSLER) **நினைவில் கொள்கிறேன்; அவர் என்னை ஒரு தாயின் மகனைப் போல் அழைத்துச் சென்றார், அவர் இல்லத்திற்கு என்னை இரவு உணவிற்காக அழைத்தார். அவர் அன்புடன் எனது முகத்தை வருடி "எனது குழந்தை, எனது குழந்தை" என்றார்.**

அன்று காலை மெஹராஸாத்தில் காலநிலை குளிராக இருந்தது. பாபா சில பெண்மணிகளிடம் குளிர்ச்சியாக இருக்கிறதா என வினவிய போது, அவர்கள், 'இல்லை' என்று பதிலளித்தனர். பாபா கேலி செய்தார், **"நான் கடவுளாக இருந்தும் குளிர்ச்சியாக உணர்கிறேன், ஆனால் நீங்கள் அதை உணரவில்லை!"**

மண்டபத்தை ஒட்டியிருந்த வளாகத்திலிருந்து காக்கா பாரியா, பணியாட்களுக்கு அறிவுரைகளை வழங்கும் போது எழுப்பிய கூச்சல்கள், பாபாவின் உரையாடல்களுக்கு இடையூறாக இருந்தது. கடந்த இரண்டு நாட்களாக, அன்றைய தினம் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகளை காக்கா மும்முரமாக செய்து கொண்டிருந்தார். பாபா அவர்களிடம், **"காக்காவிற்கு மூன்று கடுமையான மாரடைப்பு வந்துவிட்டது, மூன்றாவது முறை அவர் இறந்துவிட்டதாக நினைத்தோம். அவர் ஒரு காலத்தில் இந்த அளவுக்கு தீவிர நோயால் அவதியுற்றார் என்று இப்போது யார் நினைக்கக்கூடும்!"**

பாபா தொடர்ந்தார்: **காக்காவிற்கு ஆங்கிலம் அதிகம் தெரியாததால், என்னுடன் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்ல மறுத்து வந்தார். இறுதியாக,**

**நான் அவரை எப்பொழுதும் என் அருகில் இருக்கும் நிபந்தனையுடன் அவர் என்னுடன் வர ஒப்புக்கொண்டார்.**

**லண்டனில் ஒரு தனிப்பட்ட நேர்காணலின் போது, காக்கா என் அறைக்கு வெளியே காத்திருக்க வேண்டியிருந்தது. என்னைப் பின்பற்றும் பெண் அன்பர்கள் சிலர் அவரை சூழ்ந்துகொண்டு, அவருடன் உரையாட விரும்பினர். அவர்களுடன் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற எண்ணம் அப்பாவி காக்காவை அச்சத்தில் ஆழ்த்தியது. மேலும், அந்த சூழ்நிலையிலிருந்து தப்பிக்க, அவர் அற்புதமான தந்திரம் ஒன்றைக் கையாண்டார்: அவர் கண்களை மூடிக்கொண்டு, கைகளை மடித்து, அமைதியாக நின்றார். இந்த விசித்திரமான காட்சி அவரைச் சுற்றி மேலும் அதிகமான பெண்களை ஈர்த்தது; அவர்கள் பிறரையும் வந்து பாருங்கள் என்று அழைத்தனர், ஏனெனில் காக்கா ஏதோ சமாதியில் இருப்பதாக அவர்கள் நினைத்தனர்! காக்கா தனது சற்று மூடிய கண்களின் ஓரத்திலிருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார், அவர் வந்து என்னுடன் இருக்க, நேர்காணலை உடனடியாக முடிக்குமாறு என்னிடம் மனதார வேண்டிக் கொண்டிருந்தார். ஐந்து, பத்து, பதினைந்து நிமிடங்கள் கடந்தும் கதவு திறக்கவில்லை. காக்கா தனது சுயமாக விதிக்கப்பட்ட 'சமாதி'யின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல், திடீரெனக் கண்களைத் திறந்து, அங்கிருந்த அனைவரையும் வணங்கிவிட்டு, வீட்டை விட்டு வெளியேறி கீழே வீதிக்குச் சென்றார்.**

அப்போது பாபா, "**அடுத்த ஆண்டு எனக்கு மிகவும் முக்கியமானதாகும். நாளை** (டிசம்பர் 10) **தொடங்கி, 1963 ஜனவரி 10ஆம் தேதி வரை, எனது ஆன்மீக உள் பணிக்கு மிக முக்கியமான நாட்கள்**" என்று கூறினார்.

ஒரு பாபா-அன்பர் திடீரென அறைக்குள் நுழைந்து அங்கே அமர்ந்தார். பாபா அவரை நோக்கி, "**மகிழ்ச்சியாக இருங்கள், கவலைப்படாதீர்கள். இந்த உலகில் நான் ஒருவரே உண்மையில் உளதாயிருப்பவர்**" என்றார்.

"**நான் எனது மௌனத்தைக் கலைத்ததும், பெரிய அளவிலான மக்கள் அலைகள் என்னிடம் வரும்.**" அங்கிருந்த அன்பர்களைச் சுட்டிக்காட்டி, "**அப்போது புதியவர்களால் நீங்கள் வெளியே தள்ளிவிடப்படுவீர்கள்**" என்றார்.

உரையாடல் அப்போது கிழக்கு-மேற்கு சகவாசத்தை நோக்கி நகர்ந்தது: "**சில சந்தர்ப்பங்களில் மட்டுமே நான் என் இதயத்தை சற்று திறந்து, சிறிதளவு அன்பை வெளிப்படுத்துகிறேன். ஆனால் இம்முறை பூனாவில், நான் என் இதயத்தின் ஒரு சிறிய ஜன்னலைத் திறந்து அன்பை வெளிப்படுத்தி, விரைவில் அதை மூடினேன், நான் எனது மௌனத்தைக் கலைத்ததும், என் இதயத்தை முழுவதுமாகத் திறந்து, திறந்தே வைத்திருப்பேன்.**"

பாதிரி மண்டபத்திற்குள் நுழைந்து, ஜெஹாங்குவின் தந்தை, மிகவும் குள்ளமாக இருந்த மேன்செர்ஷா ஜே. ஸுகத்வாலாவிற்கு (MANCHERSHAW J. SUKHADWALLA) முன்னால் அமர்ந்தார். திரு. ஸுகத்வாலா, பாபாவை சரியாகப்

பார்க்க முடியாததால், தனது இருக்கையில் அமர்ந்த வண்ணம் அங்கும் இங்கும் அசையத் தொடங்கினார். பாபா அவரை கவனித்து, பாதிரியிடம், **"உங்கள் தலையைத் துண்டித்து என்னிடம் கொடுத்தால், ஸூகத்வாலா என்னைப் பார்க்க முடியும், நீங்களும் நிரந்திரமாக என்னிடம் வந்து விடுவீர்கள்"** என்று கூறினார்.

கவாலி இசை நிகழ்ச்சியின் போது, அலோபா அதிக அளவில் உணர்ச்சிவசப்படுவது வழக்கம்; மேலும் பாபா அவரை எச்சரித்தார், **"இன்று கவாலி நிகழ்ச்சியின் போது பரவசத்தில் மேலும் கீழும் குதிக்க வேண்டாம்."**

மெஹராவின் பிறந்தநாளைக் கொண்டாட அப்போது குழு உள்ளே அழைக்கப்பட்டது; பாபா, மெஹராவைப் பற்றி இவ்வாறு கூறினார்: **"மெஹரா என்னை மிகவும் நேசிக்கிறார், நானும் அவரை நேசிக்கிறேன், ஆனால் ஆன்மீகப் பாதை என்ன என்பதை நான் இன்னும் அவருக்கு விளக்கவில்லை. ஆன்மீகப் பாதை என்பது இனிப்பு லட்டுகளை உண்பது போல் எளிதானது அல்ல. நீங்கள் என் அருளைப் அடையப் பெற்றவர்களாக மாறும்போது, அந்தப் பாதை எப்படி இருக்கும் என்பதை நீங்களே அறிவீர்கள்."**

மெஹராவின் பிறந்தநாளைக் கொண்டாட மதுசூதனன் புதிய கவிதை ஒன்றை இயற்றி இருந்தார். அவர் அதை முதலில் வாசித்துவிட்டு, ஹார்மோனியத்தின் பக்கத் துணையுடன் பாடினார். பின்னர் அஹமதுநகரைச் சேர்ந்த ஹபீப் மற்றும் அவரது இசைக் கலைஞர்கள் தலைமையில் கவாலி நிகழ்ச்சி தொடங்கியது. கஸல்களின் முக்கிய வசனங்களின் அர்த்தத்தை பாபா இடையிடையே விளக்கினார், அவற்றில் சில:

**சில நேரங்களில் மட்டுமே ஓர் உண்மையான,**
**தைரியமான இறைப் பிரியர் வருகிறார்.**
**பரிபூரண குருநாதரின் ஒரு குறுகிய அருட்பார்வை**
**ஒருவருக்கு ஏக இறைவன் எனும் சுயத்தை உணர்த்துகிறது.**

பார்வையாளர்களைக் குறிப்பிட்டு, பாபா கூறினார், **"உங்களில் எவரும், எதிர்பார்த்த தரநிலையை இதுகாறும் எட்டவில்லை, அதனால் எனது பார்வை உங்கள் மீது விழவில்லை!... ஆன்மீகப் பாதை மிகவும் கடினமானது. நீங்கள் தூசி போல் ஆக வேண்டும். அப்போதுதான் நீங்கள் உங்களுள் நிலைகொண்டிருக்கும் பாபாவைப் பார்ப்பீர்கள். மிக அரிதாக ஒருவர் மட்டுமே பாபாவை இப்படிப் பார்க்கிறார்.. அன்பன், அவனது குருநாதரிடம் அவர் எவ்வளவு அலட்சியமாக இருக்கிறார் என்று கூறுகிறான், ஏனெனில் அவன், அவரை வணங்கும்போது, குருநாதர் அவன் தலையை உதைக்கிறார்!"**

பாபா, அவரையே உதாரணமாகக் குறிப்பிட்டு இவ்வாறு எடுத்துரைத்தார்: **"பாபாஜான் எனக்கு முத்தமளித்தபோது நான் ஒரு துளியாக இருந்தேன், ஆனால் நான் முழு இறைப் பெருங்கடலையும் விழுங்கினேன்! நீங்கள் அதிர்ஷ்டசாலியாக இருந்தால், என் அருட்பார்வை உங்கள் மீது விழும், அப்போது நீங்களும் இறைப் பெருங்கடலாக மாறுவீர்கள்! இதில் அடங்கிய**

**முக்கிய விஷயம் என்னவெனில், எனது பார்வை உங்கள் மீது விழ வேண்டும்.**"

எண்ணிலடங்கா போலி துறவிகள், சாதுக்களைப் பற்றி பாபா கூறினார்: "**உண்மையான சத்சங்கம்**' (உண்மையான துறவியின் சகவாசம்) **என்பது என் அருகில் இருந்து அடையப் பெறுவதாக மட்டுமே இருக்க முடியும். அந்த சத்சங்கம் ஒன்றுதான் உண்மையானது, அது தூசியை கட்டளைக் கல்லாக்கி, இரும்பைத் தங்கமாக்கும். கடவுளின் உண்மையான அன்பர்கள்** (மர்த்-இ-குதா) **ஒன்றே ஒன்றை மட்டும் கொண்டுள்ளனர் என்று ஹாஃபீஸ் கூறினார் - அதுவே அன்பு; அத்தகைய ஆயிரக்கணக்கான உண்மையான அன்பர்களில் ஒருவர் மட்டுமே ஏக இறைவனின் உணர்வு நிலையை எய்துகிறார், அதுவும் பரிபூரண குருநாதரின் அருட்பார்வை அவர் மீது விழுந்தால் மட்டுமே!**"

கவாலி பாடகர் ஹபீப் நண்பகலில் அவரது நிகழ்ச்சியை நிறைவு செய்தார், பாபா அவரைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து, பெண்மணிகள் அனைவரும் பூந்தோட்டத்திற்குச் சென்றனர், அங்கு அவர்கள் தானே விரும்பியதை உண்ணும் தொகுப்புணவை உண்டனர்; மேலும், மெஹரா ஒரு பெரிய பிறந்தநாள் கேக்கை வெட்டினார். மண்டலி வளாகத்தின் அருகில் ஆண்கள் தங்கள் உணவை உண்டனர். அவர்கள் மண்டபத்தில் மீண்டும் ஒன்று கூடியதும், பாபா மறுபடியும் சாஞ்சியை நினைவு கூர்ந்தார்:

**சாஞ்சி என்னை மிகவும் ஆழமாக நேசித்தார். அவர் எப்பொழுதும் தனது கையடக்கமான தட்டச்சுப்பொறியைத் தன்னுடன் எடுத்துச் செல்வது வழக்கம்; நெரிசலான ரயில் பெட்டியில் கூட குறிப்புகளை தட்டச்சு செய்வதுண்டு. அடிக்கடி ஒரு ரயில் நிலையத்தில், ரயில் நகரும் போது, காத்திருப்பு அறையில் தனது சாமான்கள் இருப்பதை திடீரென நினைவுகூர்நது, பின்னர் அவர் அதை எடுக்க விரைந்து செல்வதும், அவர் அடிக்கடி ஓடும் ரயிலில் மண்டலியால் உள்ளே இழுக்கப்படுவதும் அன்றாடக் காட்சி. சாஞ்சி, காக்கா இருவரும், அவர்களுடன் நான் மிகவும் கடினமாக நடந்துகொண்டாலும், என்னுடன் பல வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.**

அதன் பின்பு, பெண்மணிகள் மண்டபத்திற்குள் அழைக்கப்பட்டனர். பாபாவிற்கு சற்று பின்னால் இருந்த ஜன்னலிலிருந்து கண்ணைக் கூசும் ஒளி வந்தது, அவர்களில் ஒருவர் பாபாவைத் தெளிவாகக் காண முடியவில்லை என்று புகார் கூறினார். திரைச்சீலையை சரிசெய்ய ஒருவர் எழுந்த போது, பாபா இவ்வாறு கூறினார்: "**பாபாவை யாரால் 'பார்க்க' முடியும்? உண்மையில் என்னைப் பார்த்தால், நீங்கள் முடிந்துவிடுவீர்கள்!** (அதாவது பொய்யும், போலியுமான சுயம் அழிந்துவிடும்.)"

வேதாந்தம் மற்றும் உபநிடதங்களை ஆன்மீக அனுபவத்துடன் இணைத்து, குழப்பும் நபர்களைப் பற்றி பாபா பின்பு குறிப்பிட்டார்:

**வட இந்தியாவில், குறிப்பாக ரிஷிகேஷ், ஹரித்வார் போன்ற இடங்களில், துறவிகள், மஹாத்மாக்கள் மற்றும் சாதுக்கள் தங்கள்**

‘சீடர்களுடன்’ பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு வழக்கமான பஜார் உள்ளது, அவர்கள் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவை நாடுபவர்களைக் கவர, தங்களுக்குள் மோதிக்கொள்கிறார்கள். ஆனால் இதிலெல்லாம் உண்மையான ஆன்மீகத்தைக் காண முடியாது. கலிஃபோர்னியாவிலும், ஆசிரமங்கள், மடங்கள் மற்றும் விடுதிகளில் விரிவுரைகள் வழங்கப்படுவதோடு, யோகா பயிற்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆனால் இது உண்மையான ஆன்மீகம் அல்ல. இது அடிப்படையில் வேறுபட்ட ஒன்று. ஆன்மீகம் என்றால் ஒருவர் பொய்யும் போலியுமான நான் எனும் அகந்தையை முற்றிலும் இழந்து, பரிபூரண குருநாதரின் காலடியில் தூசி - முற்றிலும் அற்பமான தூசியாக மாறுவது ஆகும். தூசியாக மாறுவது என்றால் ஒன்றுமில்லாதது என்று அர்த்தம். அதாவது, வாழும்போதே உயிரைத் துறப்பது என்று பொருள்!

ஆன்மீகப் பாதையில் ஒருவர் சாக வேண்டும். இந்தப் பாதையில் அன்பும் அருளும் இன்றியமையா தேவை. அன்பு என்பது கடவுளின் அன்பளிப்பு. அன்பர் மீது கடவுள் மகிழ்ச்சியடையும் போது மட்டுமே, அது வழங்கப்படுகிறது. அது வழங்கப்பட்டால், அன்பர் வாழ்வதும் இல்லை, சாவதும் இல்லை. அவர் நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீன் போலத் தவிக்கிறார். அவர் தொடர்ச்சியான வேதனையில் மூழ்கி இருக்கிறார், ஆனால் அந்த வேதனையிலிருந்து அவர் விடுபடவும் விரும்பவில்லை. பிரியமான கடவுளுடன் ஐக்கியமாகும் ஏக்கத்தில், அன்பர் இந்த உலகின் அனைத்தையும் இழக்கிறார். அத்தகைய அன்பர்கள் மர்த்-இ-குதா (இறைவனுக்காக எதையும் செய்யத் துணிந்தவர்- MARD-E-KHUDA) என்று அழைக்கப்படுகிறார்கள். உலகம் முழுவதும், அத்தகைய மர்த்-இ-குதா 500 நபர்கள் மட்டுமே உள்ளனர். ஹாஃபீஸ் கூறுகிறார், லட்சம் பேரில் ஒருவருக்கு பல வருடங்களுக்குப் பிறகு கூட இறையுணர்வு கிடைப்பதில்லை.

ஒரு சில சந்தர்ப்பங்களில் அன்பர் ஒருவர் தனது சுய முயற்சியால், முதல் ஆன்மீகத் தளத்திற்குள் நுழைகிறார். மிகவும் அரிய சந்தர்ப்பங்களில் மட்டுமே, ஓர் அன்பர் தனது சுய முயற்சியால் ஆறாவது ஆன்மீகத் தளத்தை எட்ட முடியும். அப்போது, அத்தகைய ஒருவர் மீதான ஒரு பரிபூரண குருநாதரின் அருள் மிகு பார்வை ஒன்றே, அவருக்கு இறையுணர்வை வழங்குகிறது. ஐந்து பரிபூரண குருநாதர்களில் ஒருவரின் மேலங்கியை (தாமன்) ஓர் அன்பர் உறுதியாகப் பற்றிக் கொண்டால் மட்டுமே அவருக்கு, கண்ணிமைப் பொழுதில் இறையுணர்வை வழங்க முடியும். மேலும் ஒரு பரிபூரண குருநாதரின் மேலங்கியைப் (தாமன்) பற்றிக் கொள்வது என்பது வேடிக்கையான விஷயம் அல்ல.

நான் இந்த யுகத்தின் அவதார புருஷர். அடுத்த ஆண்டு (1963) மிகவும் முக்கியமான ஆண்டு. அப்போது, எனது தாமன் உங்கள் கைகளிலிருந்து நழுவாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஹாஃபீஸ் கூறுகிறார்:

இறையுணர்தலுக்காக முயற்சி செய்யாதீர்கள், ஏனெனில், அதற்காக முயற்சிப்பது கூட சுத்த பைத்தியக்காரத்தனம்.

பரிபூரண குருநாதரின் பாதங்களில் தூசியாக மாறும் பைத்தியக்காரத்தனம் மட்டுமே வேண்டும்.

தூசியாக மாறுவது என்பது உங்கள் இதயத்தையும் மனதையும் முழுமையாக அர்ப்பணிப்பது ஆகும், இதனால் நீங்கள் ஏற்கனவே உயிரைத் துறந்தவர் போலாகிவிடுகிறீர்கள். இந்தப் பாதையில் சாந்தி (மன அமைதி) இல்லை. நீங்கள் மன அமைதியை விரும்பினால், அதை வேறு இடங்களிலும், வேறு வழிகளிலும் அடையப் பெறலாம் - நீங்கள் இயற்கையான சூழலில், இனிமையான நீண்ட நடைப்பயணங்களுக்குச் செல்லலாம் அல்லது இனிமையான இசையை ரசிக்கலாம் அல்லது மயக்கம் தரும் போதைப் பொருட்களை எடுத்துக் கொள்ளலாம் அல்லது துறவிகள், சாதுக்களிடம் செல்லலாம். ஆனால் அதற்கான இடம் இங்கு இல்லை, ஏனெனில் நீங்கள் என்னிடம் வருவதானால், ஆன்மீகப் பாதை என்பது, துன்பங்களும் துயரங்களும் நிறைந்தது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பிற இடங்களில் இருக்கும்போது, நீங்கள் மன அமைதியை அடையப் பெறலாம், ஏனெனில், அவர்களுக்கு ஆன்மீகப் பாதை குறித்து எதுவும் தெரியாது. ஹஃபீஸ் கூறுகிறார்:

ஒரு பரிபூரண குருநாதரிடம் சரணடையாத ஒருவர் கடவுளை அடைய முடியாது.

எனவே அவர் உங்களை ஒரு படுகுழிக்குள் தள்ளப் போகிறார் என்று நீங்கள் உணர்ந்தாலும், பரிபூரண குருநாதரின் மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வதுதான் ஒரே தீர்வு!

ஹஃபீஸ் கூறுகிறார், கடவுளிடம் பிரார்த்தனை செய்வதை முழுமையாகக் கைவிடுங்கள்!

பரிபூரண குருநாதரிடம் மட்டுமே பிரார்த்தனை செய்யுங்கள்! அவருடைய மேலங்கியை (தாமன்) கெட்டியாகப் பற்றிக் கொள்ளுங்கள், நீங்கள் கடவுளை உணர்வீர்கள்.

அப்போது பாபா கூறினார்:

நாளையிலிருந்து நான் மிகவும் துன்பப்பட வேண்டியிருக்கும். நான் எல்லையற்ற சக்தி, எல்லையற்ற அறிவு, எல்லையற்ற பேரின்பம் போன்றவற்றின் இறைப் பெருங்கடலாக இருக்கும்போது, நான் ஏன், எப்படித் துன்பப்பட முடியும்? கடவுளிடம் எல்லையற்ற ஆற்றல், எல்லையற்ற அறிவு, எல்லையற்ற பேரின்பம் அனைத்தும் உள்ளன. அவதார புருஷர், கடவுள், மனிதனாக பூமியில் அவதரிப்பவர். அவதார புருஷராக அவரது ராஜாங்கத்தில், அவர் எல்லையற்ற அறிவை மட்டுமே பயன்படுத்துகிறார். அவர் தமது எல்லையற்ற சக்தியையும், எல்லையற்ற பேரின்பத்தையும் பயன்படுத்துவதில்லை. ஏனெனில் கடவுள் அவதார புருஷராக மனித உருவில் வருகை தந்து, மனிதகுலத்தை அதன் அறியாமை, துன்பம் மற்றும்

உதவியற்ற தன்மையிலிருந்து விடுவிப்பதற்காக, உலகளாவிய துன்பம் மற்றும் உதவியற்ற தன்மையை அனுபவிக்கிறார்.

அவதார புருஷர் தமது எல்லையற்ற சக்தியைப் பயன்படுத்துவதானால், அவர் எவ்வாறு உதவியற்ற நிலையை அனுபவிக்க முடியும்? அவதார புருஷர் தமது எல்லையற்ற பேரின்பத்தைப் பயன்படுத்துவதானால், அவர் எப்படித் துன்பப்படுவார்? எனவே, அவர் தமது எல்லையற்ற பேரின்பத்தையோ அல்லது அவரது எல்லையற்ற சக்தியையோ பயன்படுத்துவதில்லை. படைப்பின் மீது அவருக்குள்ள அளவற்ற அன்பும் கருணையும் அப்படித்தான்!

எல்லையற்ற சக்தியை அடையப் பெற்றிருந்த இயேசு கிறிஸ்து, தன்னைத் தானே நிராதரவாகச் செய்து, மக்கள் அவரை அறையவும், அவர் மீது துப்பவும், அவரைக் கேலி செய்யவும் இடங்கொடுத்து, அவமானத்தை அனுபவித்தார். அவர் சிலுவையில் அறையப்பட்டு துன்பப்பட்டார், ஆனால் அவர் தனது சக்தி, பேரின்பம் இரண்டையும் பயன்படுத்தவில்லை. மாறாக, “தந்தையே, ஏன் என்னைக் கைவிட்டீர்கள்?” என்று கதறினார். அவர் தந்தையாகிய கடவுளுடன் ஒன்றாக இருந்ததால், அவர் அதைத் தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

மீண்டும் மீண்டும், கடவுள் தமது படைப்புக்காகத் துன்பப்படுவதற்காகவே மனித வடிவத்தை எடுக்கிறார். நான் அந்த ஏக இறைவன். உங்களைப் போலவே, எனக்கும் உடலும் மனமும் உள்ளது, அதனால் நான் பசி மற்றும் தாகம், வெப்பம் மற்றும் குளிர் போன்றவற்றை உணர்கிறேன். ஆனால் எனக்கு உலகளாவிய உடலும், உலகளாவிய மனமும் உள்ளது; எனவே, உங்களின் தனிப்பட்ட துன்பம் எனது நித்திய, எல்லையற்ற உலகளாவிய துன்பத்துடன் ஒப்பிடுகையில் ஒன்றுமில்லை! எனக்கு எல்லையற்ற அறிவும் உள்ளது. அறிவதற்காக நான் எனது மனதைப் பயன்படுத்த வேண்டியதில்லை - எனக்குத் தெரியும்! நான் எனது எல்லையற்ற அறிவைப் பயன்படுத்துகிறேன். ஆனால், எனக்கு எல்லையற்ற ஆனந்தமும் எல்லையற்ற சக்தியும் இருந்தாலும், நான் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. எந்நேரமும் எனது அழைப்பிற்குத் தயாராக என்னில் இருக்கும் பேரின்பத்தை நான் பயன்படுத்துவதானால், எனது துன்பம் எப்படித் துன்பமாக இருக்க முடியும்? அது மனித குலத்திற்கு என்ன நன்மையை விளைவிக்கும்? என்னுடைய எல்லையற்ற சக்தியையும் நான் பயன்படுத்துவதில்லை. நான் அதைப் பயன்படுத்துவதானால், நான் எப்படி உதவியற்றவனாக இருப்பேன்? நான் அளவிறுதியற்ற அளவுக்கு உதவியற்றவனாக இருக்கிறேன், ஏனெனில், என் அதிகாரத்தின் கீழ் எல்லையற்ற சக்தி இருக்கும்போது, நான் அதைப் பயன்படுத்துவதில்லை. நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது மட்டுமே, எல்லையற்ற சக்தியைப் பயன்படுத்தி, உலகளாவிய ஆன்மீக விழிப்புணர்வை வழங்குவேன். இந்தப் பௌதீக உடலை நான் கைவிடும்போது, எனது அடுத்த

**வருகைக் காலம் வரை,** 700 **ஆண்டுகளுக்கு எனது பேரின்பத்தைப் பயன்படுத்துவேன்.**

**நான் செல்லும் இடத்திற்கு உங்களையும் அழைத்துச் செல்ல, என்னைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளுங்கள்; இல்லையேல், நீங்கள் தொலைந்துபோவீர்கள். நான் இறைப் பேரரசர். நீங்கள் என்னுடையவராக இருந்தால், என்னுடையதாக இருக்கும் எல்லையற்ற பொக்கிஷத்தை நீங்களும் அடையப் பெறுவீர்கள்! ஆனால், அதற்கு பதிலாக, நீங்கள் அரண்மனையின் காவலர்கள் மற்றும் சேவகர்களை** (துறவிகள் மற்றும் சாதுக்கள்) **பின்தொடர்ந்து செல்வதானால், அது உங்களைப் பொறுத்தவரை சுத்த முட்டாள்தனமாக நிரூபணமாகும்!**

**நான் மனதளவிலும், உடலளவிலும் துன்பப்படுகிறேன். எனது மனதளவிலான துன்பம் இன்னும் தீவிரமானது. நான் ஆன்மீக ரீதியில் துன்பப்படுகிறேன், ஏனெனில் நான் உங்களின் அறியாமையால் உங்களில் பிணைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேன், உணர்கிறேன், அதனால் நான் துன்பப்படுகிறேன். எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொண்டவர் பாக்கியவான்! இதற்கு முன்னதாக எந்த அவதார காலகட்டத்திலும், நான் இந்த ரகசியங்களை வெளிப்படையாக எடுத்துரைத்ததில்லை, ஏனெனில், அதற்கான சரியான நேரம் வரவில்லை. இன்றைய காலகட்டத்தில், விஞ்ஞானம் அபரிமிதமாக முன்னேறியுள்ளது, கடவுளின் மீதான எதிர்ப்பு அதன் உச்சத்தில் உள்ளது, எனவே ஆன்மீகமும் ஏன் அதன் அதிகபட்ச நிலையில் இருக்கக்கூடாது?**

பாபா தொடர்ந்து இவ்வாறு குறிப்பிட்டார்: **"ஒரு காலத்தில் 'கடவுளின் இருப்பிடம்' என்று கருதப்பட்ட திபெத், இப்போது சீன ஆக்கிரமிப்பால் இராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளது."**

**உண்மையான இறைப் பார்வை என்பது உள்நோக்கிப் பார்ப்பது. இறைவனை நோக்கிச் செல்லும் நான்கு பயணங்கள் அனைத்தும் உள்ளே உள்ளன. அரிதாகவே ஆர்வலர் ஒருவர், முதல் இறைப் பயணத்தின் கடைசி கட்டத்தைச் சென்றடைகிறார்! அதற்கு முன்னர், ஆறு ஆன்மீகத் தளங்கள் உள்ளன. முதல் பயணம் நிர்விகல்ப நிலையில்** (ஃபனா-ஃபில்லா - FANA-FILLA) **முடிகிறது. இங்கே, யாத்திரீகர் எல்லையற்ற சக்தி, அறிவு மற்றும் பேரின்பத்தை அனுபவிக்கிறார்; மேலும் அவர் இலக்கை அடைந்துவிட்டதால் இனி அவர் ஒரு யாத்திரீகர் என்று அழைக்கப்பட மாட்டார். இரண்டாவது இறைப் பயணம் ஸாஹஜ் சமாதி நிலையில்** (பக்கா - BAQA) **முடிவடைகிறது. இந்த நிலையை உணர்ந்தவர் கடவுளின் வாழ்க்கையை வழிநடத்துகிறார். மூன்றாவது இறைப் பயணம் என்பது சத்குருவின் வாழ்க்கை. அவர் மனிதன், கடவுள் இரண்டுமாக ஒரே நேரத்தில் வாழ்கிறார், அத்தகைய சத்குரு 'மனித-கடவுள்' (MAN-GOD) என்று அழைக்கப்படுகிறார்.**

ஒரு கட்டத்தில், அஹமதுநகர் அன்பர் ஒருவர், பாபாவின் சகவாசத்தில் நிரந்தரமாக வாழ வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்தியபோது, பாபா இவ்வாறு பதிலளித்தார்: "**நீங்கள் என் அருகில் இருக்கிறீர்களா அல்லது என்னிலிருந்து தூரத்தில் இருக்கிறீர்களா என்பது முக்கியமல்ல. என்னை மேலும் மேலும் நினைவு கூர்ந்து, நான் மனித உருவில் வந்த கடவுள் என்பதை அறிந்து கொள்வதுதான் முக்கியம். கைக்கோபாத் எங்கு இருந்தாலும் என்னைப் பார்க்கிறார்; ஆனால் என்னைப் பார்ப்பதும், நானாக மாறுவதும் முற்றிலும் வேறுபட்ட விஷயங்கள். நீங்கள் விரும்பியபடி என் அருகாமையில் இல்லாமல் இருப்பது உங்களுக்கு நல்லது, நீங்கள் என் அருகில் இருப்பதானால், உங்கள் மன அமைதியை இழக்க நேரிடும், மாறாக அமைதியற்றவராக இருப்பீர்கள்!**"

அந்த மனிதர் எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் இவ்வாறு எடுத்துரைத்தார், "ஆனால் பாபா, என் உலக வாழ்விலும் நிம்மதி இல்லையே!"

அதற்கு, பாபா புன்னகையுடன் பதிலளித்தார், "**உலக வாழ்வில் நிம்மதி இல்லை என்றால், என்னுடன் இருக்கும் வாய்ப்பை எதிர்நோக்கலாம். ஆனால், என்னுடன் இருந்து, மன நிம்மதியை இழந்தால், எங்கே போவீர்கள்?**"

பாபா தொடர்ந்து பரிபூரண குருநாதர்களின் (சத்குருக்கள்) சில தனித்துவம் மிக்க விசித்திரப் பாங்குகளை விளக்கினார்:

**பாபாஜான் நீராடியதில்லை, ஆனால் எப்பொழுதும் அவர் அருகில் நறுமணம் வீசும். அவர் கழிப்பறைக்குச் சென்றதை எவரும் பார்த்ததில்லை! ஆரம்ப காலத்தில் நான் குஸ்தாஜியுடன் சென்று, தினமும் பாபாஜானை சந்தித்து வந்தேன். அவர் யார் ஒருவரையும் தனது உடலைத் தொட அனுமதிக்கவில்லை என்றாலும், அவர் என்னிடம் அவரது தலையையும் முதுகையும் வருடுமாறு கூறியது உண்டு; அப்போது நான் அதை மணிக்கணக்கில் செய்து வந்தேன். அவர் திறந்த வெளியில், தலை மேல் கூரை இல்லாமல் உட்கார்ந்து தூங்குவது வழக்கம். வெட்டவெளியில் காலநிலையையும் கண்டுகொள்ளாமல் காலத்தைக் கழித்து வந்தார். அவர் அதிகாலை 3:30 மணிக்கு தூங்கச் சென்று, ஒரு மணி நேரம் மட்டுமே ஓய்வெடுத்து, காலை 4:30 மணிக்கு, தேநீர் கடைகள் திறந்ததும், எழுந்திருப்பதை வழக்கமாகக் கொண்டார். அந்த நேரத்தில், அவர் வேப்ப மரத்தின் கீழ் அமர்ந்திருந்த இடத்தில், தலைக்கு மேல் கூரை ஒன்றை எழுப்ப எவராலும் அவரை வற்புறுத்த முடியவில்லை, அல்லது அவருக்காக ஏதாவது இருக்கையை உருவாக்க அவர் இணங்கவுமில்லை. ஆனால் நான் அவரிடம் எனது வேண்டுகோளை முன்வைத்தபோது, அவருடைய வசதிக்காக ஒரு பருத்தி மெத்தையுடன், அவருக்காக ஒரு குறுகிய மர மேடையை உருவாக்க அனுமதித்தார்.**

**குஸ்தாஜி தொடர்பாக, இந்தப் பருத்தி மெத்தையைக் குறித்து ஒரு வேடிக்கையான கதை உள்ளது, ஏனெனில் ஒரு நாள் கனமழை பெய்து, மெத்தை நனைந்தபோது, உலர வைக்கும் நோக்கத்தில், குஸ்தாஜி அதை**

அவரது தலையில் சுமந்து செல்லுமாறு பாபாஜான் அறிவுறுத்தினார். பாபாஜான், குஸ்தாஜிக்கு அதன் காரணத்தை விளக்கினார்: “இது பெரும் மதிப்பு வாய்ந்தது, ஏனெனில் எனது மகன் அதை எனக்கு வழங்கினான்.”

பாபாஜான் பிறருடன் எப்போதும் குழப்பமும், மர்மமும் நிறைந்த வார்த்தைகளில் பேசினாலும், என்னுடன் தனியாக இருக்கும் வேளையில், அவருடைய பேச்சு மிகவும் சாதாரணமாகவும், தெளிவாகவும் இருக்கும். ஒருமுறை அவர் தமது ஆரம்பகால வாழ்க்கையின் கதையை விரிவாக என்னிடம் எடுத்துரைத்தார். அவரது குடும்பம், பலுச்சிஸ்தானைச் சேர்ந்த ஒருவருடன் அவருக்குத் திருமணம் செய்து வைக்க அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது. திருமண நாளில் அவர் வீட்டைவிட்டு வெளியேறி, ராவல்பிண்டியில் தனது குருநாதரைக் கண்டுகொண்டார். பாபாஜான் இறுதியாக இறையுணர்வை அடையப்பெற்று, அதை உறுதிப்படுத்திய அந்த வேளையில், அவர் ஒரு மதவெறியராக பழி சுமத்தப்பட்டு, குழி தோண்டி புதைக்கப்பட்டார். அங்கிருந்த அதே பலுச்சிகளில் சிலர் மும்பைக்கும், பின்பு பூனாவிற்கும் வந்து, அவர் உயிரோடு இருப்பதையும், பிறர் அவரைப் போற்றி வணங்குவதையும் கண்டு திகைத்துப் போயினர். அவர்கள் பாபாஜானின் தெய்வீகத்தன்மையை நம்பி அவரைப் பின்பற்றத் தொடங்கினர்.

அவதார புருஷரின் வருகையின் நிமித்தம், பாபாஜான், பலுச்சிஸ்தானில் அமைந்த தனது பிறந்த இடத்திலிருந்து வந்து, பூனாவில் குடியேறினார். அவர் எனக்காகவே பூனா வந்தார்!

இதற்கு முந்தைய பிறவி ஒன்றில், பாபாஜான், பஸ்ராவின் (ஈராக்) ஸூஃபி துறவி ரபியா ஆவார். நான் அடிக்கடி அவரை, பேரரசர் என்று குறிப்பிடுவது உண்டு. உண்மையில், ‘அம்மா’ (தாயார்) என்று அழைக்கப்படுவதை அவர் விரும்பாததால், ‘பாபா’ (தந்தை) ‘ஜான்’ (இறை ஒருமைப்பாடு) என்று அழைக்கப்பட்டார். எவரேனும் அவரை அம்மா என்று அழைத்தால், அவர் கொதித்துக் கொந்தளித்தார், ஏனெனில் பெண்கள் பலவீனமான பாலினமாக கருதப்படுகிறார்கள், மேலும் இறை-உணர்தல் பலவீனமானவர்களுக்கு இல்லை என்று அவர் கூறுகிறார்!

சாய்பாபா விரும்பி வெளிப்படுத்தும் வாக்கியம், ‘கடவுளே எஜமானர்’ (அல்லா மாலிக் ஹை!) அவர் அப்போது, ஷிர்டிக்குத் தன்னிடம் வருபவர்களிடம் பணம் கேட்பதை வழக்கமாகக் கொண்டார். ஒவ்வொரு மாலையிலும் அந்தப் பணத்தை, அவரைச் சுற்றியிருந்த நபர்களிடையே விநியோகித்து வந்தார். அவர் எப்பொழுதும் ஒரு புகைக் குழாயைப் புகைப்பதும், அதை அவரது அன்பில் நெருக்கமான அனைவருக்கும் புகைக்கக் கொடுப்பதும் வழக்கம். அவர் மென்று உண்ணும் வெற்றிலை சுருளில் சற்று அபின் இருக்கும். தினமும் மாலையில் கவாலி நிகழ்ச்சி நடைபெறும், அதில் அவர் சில வேளைகளில் குறட்டை விடுவதும் அன்றாட நிகழ்வு.

குஸ்தாஜி, சாய்பாபாவிடம் சென்றபோது, அவரிடமிருந்த பணம் அனைத்தையும் கேட்டார். தன்னிடம் பணம் இல்லாததால், குஸ்தாஜி பல நாட்களாக உணவு உண்ணவில்லை. அவரிடம் இருந்த சால்வை ஒன்றை விற்க முயன்றபோது, சாய்பாபா அவரிடம் உடனடியாக அதையும் கேட்டார். சாய்பாபா உயிரைத் துறந்ததும், குஸ்தாஜி, உபாஸனி மஹாராஜுடன் வந்திணைந்தார். பல ஆண்டுகளுக்குப் பின்னர், உபாஸனி மஹாராஜ் அவரை என்னிடம் அனுப்பி வைத்தார், அவர் தனது வாழ்க்கையின் இறுதி காலம் வரை என்னுடன் இருந்தார்.

சாய்பாபா இயற்கையின் அழைப்புகளுக்கு பதிலளிக்கச் சென்ற வேளையிலும் (சிறிது தொலைவில் அமைந்த ஒரு திறந்தவெளியில்), திரும்பி வரும் போதும், இசைக் குழு ஒன்று ஊர்வலமாக அவருடன் செல்வது அனுதினமும் நடந்து வந்தது. சாய்பாபாவின் தனித்துவமான பழக்கவழக்கங்களைக் கருத்தில் கொண்டு, அவர் ஒரு பரிபூரண குருநாதர், சத்குரு (PERFECT MASTER) என்று யார் கூறுவார்கள்? ஆனால் அவர் ஒப்பற்றவர், நான் பார்த்ததில் அவர் மிகவும் பளிச்சிடும் சக்திவாய்ந்த கண்களைக் கொண்டிருந்தார்!

பல மாதங்கள் (1921இல்), உபாஸனி மஹாராஜ் தினமும் நள்ளிரவு முதல் காலை வரை என்னுடன் அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டார். அப்போது நான் பலமுறை வெற்றிலை உண்டு, புகையிலையை மென்று வந்தேன். ஏராளமாக தேநீர் அருந்தினேன். என்னுடைய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் மஹாராஜ், யஷ்வந்த் ராவிற்கு உத்தரவிட்டிருந்தார். மஹாராஜ் ஒருமுறை என்னிடம் 'திறவுகோலை' வழங்கியதாகக் கூறினார். பின்னர் அவரே எனக்கு எதிராக பேச ஆரம்பித்தார். அவர் உயிரைத் துறப்பதற்கு சற்று முன்னர் (1941இல்), அவர் என்னைப் பார்க்க விரும்பிய வேளையில், ஸாக்கோரிக்கு அருகில் அமைந்த தஹிகாவ்ம் என்ற கிராமத்தில் நாங்கள் சந்தித்தோம். எனது பார்வையை ஸாக்கோரியிலும் வைத்திருக்குமாறு என்னிடம் கூறினார்.

தாஜுதீன் பாபா தன்னை நாக்பூரில், மனநல மருத்துவமனை ஒன்றில் பல வருடங்கள் சிறையில் அடைக்க அனுமதித்தார். நாராயண் மஹாராஜ் எப்பொழுதும் வைரம் பதிக்கப்பட்ட பொத்தான்கள் மற்றும் விலையுயர்ந்த கற்களால் மின்னும் மோதிரங்களுடன் மெல்லிய பட்டுச்சட்டையை அணிந்திருந்தார்.

இந்தப் பரிபூரண குருநாதர்கள் ஆன்மீகப் பாதை குறித்த ரகசியங்களை ஒருபோதும் வெளிப்படையாகக் கூறியது கிடையாது. நான் ஐந்து பரிபூரண குருநாதர்களையும் ஒருங்கிணைத்த ஒருவராக வாழ்பவன்! நான் எந்த நேரத்திலும் எனது பூத உடலைத் துறக்கலாம், ஆனால் என்னை அன்புடன் எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். இறை-உணர்தல் ஒரே நொடிப்பொழுதில் நிகழும் சம்பவம்; ஆனால், ஹஃபீஸ் 40 வருடங்களாகத்

**தனது குருநாதரின் காலடியில் தலையை உடைத்துக் கொண்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!**

**மௌலானா ரூமி மிகவும் புத்திகூர்மை மிக்கவர், இன்றைய பண்டிதர்களின்** (மத அறிஞர்கள்) **ஒட்டுமொத்த ஞானத்தைக் காட்டிலும் அவருக்கு அதிக மூளை இருந்தது! ஓர் அறிஞராக, ஆன்மீகம் குறித்து பல புத்தகங்களை எழுதினார். ஒருமுறை, அந்தக் காலத்தின் பரிபூரண குருநாதர்களில் ஒருவரான, ஷம்ஸ்-இ-தப்ரிஸ், ரூமியை எதிர்கொண்டு, அவருடைய சில புத்தகங்களை அருகிலிருந்த கிணற்றில் வீசினார். ரூமியும் அவரைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களும் ஆத்திரமடையவே, ஷம்ஸ் புத்தகங்களை மீண்டும் கிணற்றிலிருந்து வெளியே எடுத்தபோது, அந்தப் புத்தகங்கள் அனைத்தும் சற்றும் ஈரமின்றி உலர்ந்து காணப்பட்டன! இதைப் பார்த்த ரூமி, பரிபூரண குருநாதரின் ஞானத்துடன் ஒப்பிடுகையில், தனது புத்தக ஞானம் ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்து, அவரே தனது புத்தகங்கள் அனைத்தையும் கிணற்றில் வீசி எறிந்துவிட்டு ஷம்ஸ்-இ-தப்ரிஸை பின்பற்றத் தொடங்கினார்.**

**ஷம்ஸ்-இ-தப்ரிஸ், ஒரு பரிபூரண குருநாதராக இருந்தாலும், அவர் மிகவும் விரும்பிய சதுரங்க விளையாட்டை அவ்வப்போது விளையாடி வந்தார். ரூமி அந்த விளையாட்டில் தவறாமல் தோல்வியை சந்தித்தார். ஷம்ஸுடன் இருந்த பல வருடங்களில், ஒரு நாள் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்த போது, ரூமி வழக்கம் போலத் தோல்வியைத் தழுவி, "ஐயோ! நான் மீண்டும் தோல்வியுற்றேன்!" என்றார்.**

**ஷம்ஸ் உடனே "இல்லை, இம்முறை நீங்கள் வென்றுவிட்டீர்கள்!" என்று கூறிய அந்த கணமே, ரூமி, ஷம்ஸிடமிருந்து இறையுணர்வை அடையப் பெற்றார்.**

மதுசூதனன் சில கஸல்களைப் பாடினார், அதன் பொருள் இடையிடையே பாபாவால் விளக்கப்பட்டது. அவர் ஒருமுறை விளக்கினார்:

**ஆன்மீகப் பாதையில், கோழைகளுக்கு இடமில்லை. ஹ்ஃபீஸ் கூறுகையில், தான் கடவுளின் அன்பனாக மாறியபோது, 'ஆழ் கடல் முத்து' மீது தனக்கு ஒரு பிடிப்பு கிடைத்துவிட்டதாக நினைத்தார். ஆனால் இறைப் பெருங்கடலின் ஆழத்தையும், புயல் மற்றும் அலைகளால் எதிர்கொள்ளும் ஆபத்துகளையும் அவர் கனவிலும் நினைக்கவில்லை!**

**குருநானக் ஒருமுறை கூறினார்: "கடவுளே, உங்கள் 'தொடக்கம்', 'முடிவு' இரண்டையும் எவராலும் அறிய முடியாது!"**

**அந்த அளவிறுதியற்ற கடவுள் நான்! நான் கடவுள், இருந்தும் என்னால் எனது 'பரமாத்மா'வை இன்னும் அறிய முடியவில்லை! இந்த எல்லையில்லா பல்வேறு விஷயங்கள் என்னிடமிருந்து வெளிவந்தன. ஒருமுறை, நான் உருவாக்கிய அனைத்தையும் எனது பௌதீகக் கண்களால் பார்க்க நினைத்தேன், எண்ணி கணக்கிட முயற்சித்தேன், ஆனால் எனது முடிவற்ற தன்மையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை! இதில்,**

**ஆச்சரியம் என்னவெனில், அனைத்தும் உங்களுக்குள் உள்ளது, ஆனால் நீங்கள் அதைப் பார்க்க முடியாது. எல்லையற்ற அனைத்தும் உங்களுக்குள் உள்ளது, ஆகாயத்தில் இல்லை. கடவுள் எல்லையற்றவர். நீங்கள் அந்த எல்லையற்ற இறைப் பெருங்கடலில் துளிகள். அறிவு உதயமாகும் போது, நீங்கள் அனைத்தையும் அறிவீர்கள்.**

**கடவுளின் உண்மையான அன்பன்** (மர்த்-இ-குதா), **அவனது தீவிர அன்பில், கடவுளுடன் ஐக்கியமாவதற்கான அதீத ஏக்கத்தை, நெருப்பின் தாக்கத்தை, தொடர்ந்து அனுபவித்து வருகிறான். அப்படிப்பட்ட அன்பன் அளப்பரிய வேதனையில் இருக்கிறான். ஆனால் அவன் தனது வேதனைகளைப் பற்றி அன்பிற்குரியவரிடம் குறை கூறி முறையிடக் கூடாது. அவன் உற்சாகமாக இருக்க வேண்டும். அவன் புகார் கூறிய அடுத்த கணமே, தன்னுள் அமைதியின் பொக்கிஷமாக வைத்திருந்த அனைத்தையும் இழக்கிறான்.**

**சில மஸ்துகள் மிகவும் மேல்நிலையை எட்டியவர்கள்; பிறர் அவ்வாறு இல்லை. தொண்டி புவா என்றழைக்கப்பட்ட ஒரு மஸ்த், எப்பொழுதும் நிர்வாணமாக இருந்து, சேற்றில் உருண்டு புரண்டு கொண்டிருந்தார். "என்னால் சௌகரியங்களைத் தாங்க முடியவில்லை!" என்று கூறுவதோடு, அதீத துன்பங்களுக்கு ஆளானார்; இருந்தும், இன்னும் நான் என் அருளை அவர் மீது பொழியவில்லை. அப்படியென்றால், அன்பில் இதுவரை எந்தத் துன்பத்தையும் அனுபவிக்காத உங்கள் மீது, நான் எப்படி அருளைப் பொழிய முடியும்?**

**மஸ்துகள் கொண்டுள்ளதைப் போன்ற அன்பு மிக மிக அரிது. ஆனால், அதிர்ஷ்டவசமாக, நீங்கள் கடவுளை அடைய அதுபோன்ற அன்பைக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை. உங்களைப் பொறுத்தவரை, கீழ்ப்படிதல் ஒன்றே போதும். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் எனக்குக் கீழ்ப்படிவதுதான், வேறு எதுவும் முக்கியமில்லை. அடைய முடியாத ஒன்றை அடையப் பெறுவது எவ்வளவு எளிது பாருங்கள்!**

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **"நான் பல விஷயங்களை விளக்கியுள்ளேன். ரூமி கூறுகிறார்: 'வார்த்தைகளுக்கு அர்த்தமில்லை; இறை அனுபவங்களை ருசிக்கும் மனிதனாக மாறுங்கள்!' அதற்காக, நிர்மூலமாகி விடுங்கள் - பரிபூரண குருநாதரின் பாதங்களில் தூசியாகுங்கள்."**

நிகழ்ச்சி நிறைவுறும் நேரம் இது, அனைவரும் புறப்பட ஆயத்தமாகுமாறு பாபா சைகையால் தெரிவித்தார். மாலை 4:30 மணி என்பதை அவர்களால் நம்பவே முடியவில்லை. பாபாவின் சகவாசத்தில் ஒரு முழு மகிழ்ச்சியான நாளைக் கழித்து, அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

மெஹராஸாத்தில் எழுப்பப்பட்ட பந்தல் மற்றும் சிற்றுண்டிகளுக்கான ஏற்பாடுகளை சகன் செய்திருந்தார். ஆதி சீனியருடன் பலர் அயராது உழைத்தனர், முந்தைய இரவில் விழித்திருந்து, அவர்கள் நாற்காலிகள்,

பொழுதுபோக்கு மற்றும் மெஹராஸாத்திற்கு வந்து செல்லத் தேவையான போக்குவரத்துக்கு ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தனர். அத்தகைய கூட்டங்களுக்கு முன்னதாக, பாபா திரும்பத் திரும்ப குறிப்புகளை அனுப்புவது, அழைக்கப்பட்ட விருந்தினர் பட்டியலில் திருத்தங்கள் செய்வது, வெவ்வேறு நபர்களுக்கு தந்திகள் மற்றும் தொலைபேசி அழைப்புகளை அனுப்புவது போன்ற பிற அறிவுறுத்தல்கள் அனைத்தும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தது.

1962 டிசம்பர் 8 அன்று, இந்த மாபெரும் கூட்டத்திற்கு முந்தைய நாள், ஆதி தனது நாட்குறிப்பில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்: "(இன்று) பாபா அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்துகிறார், கிட்டத்தட்ட பைத்தியம் பிடித்தது போல, மண்டலியை அதன் எல்லைக்குத் துரத்துகிறார்."

மெஹராஸாத்தில், பாபா தமது ஏகாந்தவாசத்தைத் தொடர்ந்து, கைக்கோபாத்துடன் பணிபுரிந்தார், இருப்பினும் அவர் தினமும் மண்டலியுடன் நேரத்தை செலவிடுவது தவறாமல் நடந்து வந்தது. பாபா எதிர்வரும் ஆண்டின் கடினமான காலங்களைப் பற்றி மண்டலிக்கு முன்னறிவிப்பாகத் தெரிவித்தார், ஆனால் 1963 இறுதியில் அவரது பணியில் 'வெற்றி' உறுதி என்றும் கூறினார். 'கடுமையான ஏகாந்தவாசத்தில் நுழைவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அவர் வெவ்வேறு அன்பர்களுக்கு பல தொலைத்தந்திகள் மற்றும் தகவல்களை அனுப்பினார்', ஆதியின் வார்த்தைகளில், 'அவர்களை உற்சாகப்படுத்த' 'அவரது தாமனை உறுதியாகப் பற்றிக்கொள்ள (அவர்களை ஊக்கப்படுத்த) பாபா செய்த அனைத்தும் பல சிரமங்களை விளைவித்தது; பேரழிவு தரும் 1963ஆம் ஆண்டு அவர்களை வழிதவறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மெஹர்ஜி, டிசம்பர் 14 அன்று மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தார், ருஸ்தத்தின் மகன் மெஹலு (MEHLU) மறுநாள் நாசிக்கிலிருந்து வந்தார். '**கிழக்கு-மேற்கு சகவாசத்தில் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை**' என்று பாபா கேட்டதற்கு, மெஹலு அதைப் பற்றி அவருக்குத் தெரியாது என்று பதிலளித்தார்.

1962 டிசம்பர் 19 அன்று, மஹாராணி ஷாந்தாதேவிக்கு எழுதிய கடிதத்தில் பின்வருவனவற்றையும் குறிப்பிடுமாறு ஆதிக்கு பாபா அறிவுறுத்தினார்: "**அடுத்த ஆண்டு மிகவும் முக்கியமானது மட்டுமின்றி நெருக்கடி நிறைந்ததாகவும் இருக்கும். அடுத்த ஆண்டு முழுவதும் குருபிரசாத் மாளிகை அவருடைய பணிக்காகக் கிடைக்குமா என்று பாபா அறிய விரும்புகிறார், அதனால் அவர் விரும்பும் போதெல்லாம் வந்து செல்லலாம்; மேலும் அவர், உங்களை எப்போது அழைத்தாலும் நீங்கள் அங்கு சுதந்திரமாக வருவீர்களா?**"

டாக்டர் பீடெர்ஸன் (DR. PEDERSEN) டிசம்பர் 23 அன்று மெஹராஸாத்திற்கு விஜயம் செய்தபோது, அவருக்கு கிறிஸ்துமஸ் கேக் வழங்கப்பட்டது.

மெஹர்வான் ஜெஸவாலா மெஹராஸாத்தில் சில நாட்கள் தங்கியிருந்து, 25ஆம் தேதி திரும்பிச் சென்றார்.

இதற்கிடையில், பாவ் கல்சூரியின் குடும்பம் - ரமா, ஷீலா மற்றும் மெஹர்நாத் - சிறந்த பள்ளிக்கூடங்கள் இருக்கும் அஹமதுநகரில் குடியேற வேண்டும் என்று பாபா முடிவு செய்தார். ஆதி 23ஆம் தேதி காலை அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தபோது, பாபா அவர்களிடம் இந்த யோசனையை முன்வைத்தார். ஆதி அவர்களுக்குப் பொருத்தமான ஓர் இடத்தைக் கண்டுபிடிக்கும் பணியை மேற்கொண்டார். அவர்கள் பல சாத்தியமான வாடகை வீடுகளைப் பார்க்க அழைத்துச் செல்லப்பட்டனர், ஆனால் எதுவுமே பொருத்தமானதாக இல்லாததால், இறுதியில், அவர்கள் குஷ்ரு குவார்ட்டர்ஸில் பிரோஜாவின் அறைக்கு அடுத்த சில அறைகளில் தங்குமாறு முடிவு செய்யப்பட்டது.

மெஹராஸாத்தில், கல்சூரி குழந்தைகளுடன் நகைச்சுவையாக பேசி, அவர்களுக்கு சாக்லேட் வழங்கிய பிறகு, பாபா, ரமாவிடம், "நீங்கள் ஏன் மகிழ்ச்சியாக இல்லை?" என்று கேட்டதற்கு, அவர் மகிழ்ச்சியாக இருப்பதாக பதிலளித்தார்; ஆனால் பாபா கூறினார், "**கிழக்கு-மேற்கு சகவாசத்திற்காக வந்த உங்கள் சகோதரர் தீரஜ், உங்கள் தாயார், உங்கள் மூத்த சகோதரரின் மனைவி, உங்கள் மருமகன்கள் வீரேந்திரா, புஷ்பா அனைவரையும் சந்தித்தீர்கள். இருந்தும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பது போலத் தோன்றவில்லை.**"

"நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்," ரமா வலியுறுத்தி கூறினார். "நீங்கள் எங்களை இங்கே அழைத்தீர்கள், நான் ஏன் மகிழ்ச்சியாக இருக்கக்கூடாது?"

"**ஒரு கணம் யோசித்துவிட்டு பதில் சொல்லுங்கள்.**"

ரமா அமைதியாக இருந்து, பின்பு, "நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் பாபா" என்றார்.

பாபா, "**மெஹர்நாத்தின் உடல்நிலை எப்படி உள்ளது?**" என வினவினார்.

"அவனுக்கு சிறுநீர் கழிப்பதில் சிக்கல் உள்ளது. அது நின்று விடுகிறது, சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் அதிகமாக உள்ளது."

ஷீலாவின் உடல்நிலை குறித்து கேட்டபோது, அவரது தொண்டை சதை வளர்ச்சி அடைந்துள்ளதால் அதை அகற்றுமாறு டாக்டர் அறிவுறுத்தியதாக ரமா கூறினார். "**அதைக் குறித்து நீங்கள் கவலைப்படுகிறீர்களா? உண்மையைக் கூறுங்கள்.**"

"ஆம் பாபா, நான் கவலைப்படுகிறேன்."

"**அப்படியானால் ஏன் அதை என்னிடம் மறைத்தீர்கள்? அது எனக்கு முன்பே தெரியாதா? எனக்கு முன்னால் ஏன் திரை போட்டு மறைக்க வேண்டும்? நான் உங்களை நேசிப்பதால் மெஹராபாத்தில் தங்க வைத்துள்ளேன்.**"

**'பாவ் என்னுடன் இருப்பதால் நீங்கள் கவலைப்படுகிறீர்களா?'** என்று பாபா கேட்டதற்கு ரமா, "உங்களுடன் எப்பொழுதும் இருக்கும் வாய்ப்பு எப்போது கிடைக்கும் என்று நான் கவலைப்படுகிறேன்." ரமாவின் பதில் பாபாவை மிகவும் மகிழ்வித்தது, அவர் அவர்களை மீண்டும் மெஹராபாத்திற்கு அனுப்பி வைத்தார்.

பாபா மெஹராபாத்திலிருந்து டாக்டர் டானை அழைத்து, ஷீலா மற்றும் மெஹர்நாத்தின் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யுமாறு கட்டளையிட்டார். டாக்டர் டான் அவர்களை 1963 ஜனவரி 11 அன்று, பூத் மருத்துவமனையில் அனுமதித்தார்; மேலும் ஷீலாவின் தொண்டை சதை வளர்ச்சி அகற்றப்பட்டது.

ஜான் பாஸ் (JOHN BASS) இந்தியாவிலிருந்து திரும்பிச் சென்ற பின்பு, நியூயார்க் நகரில் திங்கள் இரவு கூட்டங்களை (MONDAY MEETINGS) எப்படி நடத்த வேண்டும் என்ற ஆலோசனைகளைக் கேட்டு ஆதிக்குக் கடிதம் எழுதினார்.

1956இல் பாபாவை முதன்முதலில் சந்தித்த ரத் ரிங்கர் (RUTH RINGER), கிழக்கு-மேற்கு சகவாசத்திற்குப் பின்னர் இந்தியா முழுவதும் பயணம் செய்து, மும்பை, டெல்லி, கொல்கத்தா போன்ற நகரங்களில் அமைந்த பாபா மையங்களுக்குச் சென்றார். பாபாவின் ஆரத்தியைப் பாடுவது, தூபம் எரிப்பது, பிரசாதம் வழங்குவது, பாபாவின் பிரார்த்தனைகளை மொழிவது மற்றும் அவரது புகைப்படத்திற்கு மலர்களால் மாலை அணிவிப்பது என, தான் அங்கு நேரில் பார்த்த அனைத்து நடைமுறை வழிகளைக் கடைப்பிடிக்குமாறு ரத் பரிந்துரைத்தார்.

பதிலளிக்கும் விதத்தில், 1962 டிசம்பர் 26 அன்று ஆதி மீண்டும் எழுதினார்:

எந்தச் செயலும் விழாவாக இருக்கலாம், சில செயல்கள் விழாவாக (சடங்கு சம்பிரதாயமாக) இருக்க முடியாது. அன்பும் பக்தியும் சடங்கு சம்பிரதாய முறைகளைச் சார்ந்து இருக்கக் கூடாது, ஆனால் அதை வெளிப்படுத்தப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

திங்கட்கிழமை கூட்டங்கள் (MONDAY MEETINGS), உங்கள் இந்தியப் பயணத்திற்கு முன்னதாக நிகழ்த்திய பழைய வழக்கப்படி நடத்தப்பட வேண்டும் என்று பாபா உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறார்; மேலும், கூட்டம் நிறைவடைவதற்கு சற்று முன்பு, நீங்கள் பாபாவின் ஆரத்தியை மொழியலாம். பாபாவின் புகைப்படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதைப் பொறுத்தவரை, நீங்கள் விரும்பினால், கூட்டத்தின் போது உங்கள் மத்தியில் பாபாவின் பிரசன்னத்தை நீங்கள் அனைவரும் மதிக்கிறீர்கள் என்ற உணர்வு மற்றும் நம்பிக்கையுடன் அவ்வாறு செய்யலாம். பாபாவின் பிரசன்னத்தை உணராமல் இருந்தால், புகைப்படத்திற்கு மட்டும் மாலை அணிவிப்பதால் பயனில்லை.

தூபத்தை எரிப்பதைப் பொறுத்தவரை, சில நேரங்களில் அதை ஒரு கிருமிநாசினியாக எரிப்பது நல்லது. சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்க மேற்கத்திய மக்கள் வாசனைப் பொருட்களைப் பயன்படுத்துவது போல, கிழக்கத்திய மக்கள் தூபத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

டிசம்பர் பிற்பகுதியில், பாபா தொடர்ச்சியான தலைவலியைப் பற்றி புகார் செய்யத் தொடங்கினார், ஆனால் அவர், டாக்டர் கோஹெரை, டாக்டர் கிண்டே அல்லது பிற வெளி மருத்துவர்களை அணுக அனுமதிக்கவில்லை. அவர் நிவாரணத்திற்காக ஆஸ்பிரின் (ASPRIN) மாத்திரைகளை முயற்சித்தார், ஆனால் அது அவருக்கு ஒவ்வாமல் இருந்தது கண்டறியப்பட்டது. பல மாதங்கள் இந்தத் தீவிர தலைவலி தொடர்ந்தது, ஆனாலும் பாபா தனது அன்றாட வழக்கத்தை தொடர்ந்தார்.

கிழக்கு-மேற்கு சகவாசத்திற்குப் பிறகு, பாபாவிற்கு தலைவலி மட்டுமின்றி, நாற்காலியில் நீண்ட நேரம் அமர்ந்திருக்கும் போதெல்லாம் இடுப்பு மூட்டு அல்லது முதுகுத்தண்டில் கடுமையான நடுக்கம் அல்லது பிடிப்பு ஏற்படுவது கண்டறியப்பட்டது. சில சமயங்களில், அவரது வலது இடுப்பின் இணைப்புகள் இயங்கும் எலும்பிலிருந்து சிறிய துண்டுகள் இடுப்பு மூட்டுக்கு இடையே மாட்டிக்கொண்டு, கடுமையான வலியை விளைவித்தது; இதற்கு, படுக்கையில் முழுமையான ஓய்வு அவசியம். ஆனால் அந்த வேதனையுடன் கூட, பாபா மண்டலி மண்டபத்திற்கு நடந்து வந்து, ஆண் மண்டலியுடன் அமர்ந்து, கைக்கோபாத்துடன் பணிபுரிந்து, திரும்பி வந்து தனது உள் பணிகளைச் செய்வது தவறாமல் நடந்தது. மண்டலி அவரிடம் ஓய்வெடுக்கும்படி கெஞ்சினாலும், பாபா, "**எனது பணி முதன்மையானது**" என்று கூறிவந்தார்; மேலும் அவ்வாறு கூறுவது பாபா அவரது பௌதீக உடலைப் புறக்கணித்து, தனது பணிக்காக அதைத் தியாகம் செய்தார் என்றுதான் பொருள்படும்.

அவர் கூறியதாவது: "**என்னால் என்னிடம் கருணை காட்ட முடியாது - இப்போது என்னிடம் அதிக நேரமும் இல்லை, இந்த ஆண்டு இறுதிக்குள் எனது மௌனத்தைக் கலைக்க விரும்புகிறேன்.**" அவர் மேலும் கூறினார், "**நான் எனது மௌனத்தைக் கைவிடும்போது, எனது பிரசன்னம் உலகத்தில் நிரம்பி வழியும், கல்லைப் போன்ற ஓர் உயிரற்ற பொருள் கூட என் அன்பை உணரும்!**"

1963 ஜனவரி 1 முதல் அனைத்து கடிதப் பரிமாற்றங்களும் நிறுத்தப்பட வேண்டும் என்றாலும், ஒவ்வொரு நாளும் ஏராளமான கடிதங்கள் வந்த வண்ணம் இருந்தன; உண்மையில், 1962 முதல் பாபா தனது உடலைத் துறக்கும் வரை, அஞ்சல்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்தது. பகல் நேரங்களில் மணி, எரச் இருவரும் கடிதங்களுக்கு பதில் அனுப்புவதை வழக்கமாகக் கொண்டனர். மணி அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுடனும், எரச், ஆங்கிலத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தானுடனும் தொடர்பு கொண்டனர்; இந்தியா மற்றும் பிற இடங்களில் வாழும் அன்பர்களுக்கு பாவ் கல்சூரி இந்தியிலும், ஈரானுடன் பாரசீக மொழியில் பைதூலும் (பின்னர் அலோபா), தென்னிந்தியா அன்பர்களுடன் ஆதியும் தொடர்பில் இருந்தனர்.

பெண் மண்டலியில், மெஹரா, மெஹரு இருவரும் பாபாவின் தனிப்பட்ட தேவைகளைத் தொடர்ந்து கவனித்து வந்த வேளையில், நாஜா, பாபா

மற்றும் பெண்மணிகளுக்குத் தேவையான உணவைத் தயார் செய்தார். பாபா மற்றும் மண்டலிக்கு டாக்டர் கோஹெர் தனிப்பட்ட மருத்துவராக இருந்ததோடு, பஜார் கணக்கு வழக்குகளையும் முறைப்படி பராமரித்து, பல சிறிய வீட்டு விவகாரங்களையும் கவனித்து வந்தார். காக்கா மெஹராஸாத்தின் மேலாளர்; பாவ் கல்சூரி, பெண்டு, ரானோ மூவரும் மாறி மாறி பாபாவின் இரவு கண்காணிப்பாளர்களாக - பாவ் மதியம் முதல் நள்ளிரவு வரை, பெண்டு மற்றும் ரானோ தலா மூன்று மணி நேரம் காலை 6:00 மணி வரை - பணிபுரிந்தனர். அலோபா ஆண்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு முறை தேநீர் தயார் செய்து, ஒவ்வொரு நாளும் மண்டலி மண்டபத்தை சுத்தம் செய்வதை மேற்பார்வையிட்டார். ஃபிரான்சிஸ் எழுத்துப் பணியில் மும்முரமாக இருந்த அதே நேரத்தில், கைக்கோபாத் பிரார்த்தனையில் மூழ்கி, பாபாவின் நாமத்தைத் தொடர்ந்து தனது அறையில் உச்சரித்துக் கொண்டிருந்தார். பொதுவாக, ஒவ்வொரு பாபா-மண்டலிக்கும் ஒரு குறிப்பிட்ட கடமை ஒதுக்கப்பட்டது, ஆனால் ஏறத்தாழ, ஒவ்வொரு நாளும் சில புதிய பொறுப்புகள் உரசல்களை ஏற்படுத்தும். எல்லோரும் அதை எதிர்கொண்டு கடந்து செல்ல வேண்டிய கட்டாயம். அகங்காரத்தை முறியடிக்கும் பாபாவின் வழி கத்தியால் கழுத்தை அழுத்துவது போலாகும்!

அடுத்த மூன்று மாதங்கள், பாபா அடிக்கடி காலையிலும் சில சமயங்களில் மதிய வேளையிலும் ஆண்களுக்கு ஆன்மீக சொற்பொழிவுகளையும் விளக்கங்களையும் வழங்கி வந்தார். பாரசீக மொழியில் ஹாஃபீஸின் ஈரடிக் கவிதைகளைப் படிக்க அவர் அலோபாவை அடிக்கடி அழைப்பதும், பாபா அவற்றை மொழிபெயர்ப்பதும் வழக்கமாக நடந்தது. ஒருமுறை, பாபா, **"ஹாஃபீஸின் வார்த்தைகள் தெய்வீகப் பெருங்கடலில் முத்துக்கள் போலவும், சராசரி வாசகருக்கு அவரது வார்த்தைகள் வெறும் சிப்பிகளாகவும் தோன்றும்"** என்று குறிப்பிட்டார். பாபா, ஹாஃபீஸின் ஈரடிக் கவிதை ஒன்றை விளக்கும்போது, ஒவ்வொரு 'சிப்பி'யிலும் மறைந்திருக்கும் 'முத்தை' வெளிப்படுத்தினார்.

வேறொரு சந்தர்ப்பத்தில், பாபா, பரிபூரண குருநாதர் துக்காராமின் (TUKARAM) இந்த வசனத்தை மேற்கோள் காட்டினார்:

**உனது சகவாசத்தில் நான் தொடர்ந்து இருப்பதானாலும்,**
**உன்னைப் பற்றிய மர்மம் இன்னும் எனக்குப் புலப்பட்டதாக இல்லை.**

பாபா இதை இவ்வாறு விளக்கினார்: **"நீங்கள் எப்பொழுதும் என்னுடன் இருந்தாலும், உண்மையில் உங்களால் என்னைப் பார்க்க முடியாது."** அவருடைய கருத்தை விளக்குவதற்காக, பாபா தனது கைகளை அவர் முகத்தின் முன்னால் வைத்து, அருகில் அமர்ந்திருந்தவர்களிடம், **"நீங்கள் எனக்கு மிகவும் நெருக்கமாக இருந்தாலும், இப்போது உங்களால் எனது முகத்தைப் பார்க்க முடியுமா?"** என்று கேட்டார். அவர்கள் 'இல்லை' என்று பதிலளித்ததும், பாபா சைகையால் தெரிவித்தார், **"அப்படித்தான் மாயாவின் அடர்ந்த திரை எனது**

**முகத்தை உங்கள் பார்வையிலிருந்து மறைக்கிறது. ஆனால், நீங்கள் கவலைப்பட வேண்டாம்; உங்கள் ஒரே கவலை என்னை எப்படி, மேலும் மேலும் நேசிப்பது, எனக்கு எப்படிக் கீழ்ப்படிவது என்பதாக மட்டுமே இருக்கட்டும்.**"

மெஹராவின் பிறந்தநாளுக்கு அஹமதுநகரிலிருந்து வெகு சில சேவகர்கள் மற்றும் பக்தர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இது குறித்து பாபாவிடம் ஸரோஷ் புகார் செய்தார். பதிலுக்கு, பாபா அவர்களை, 1963 ஜனவரி 13 ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் சந்திப்பதாக நேரம் நிர்ணயித்தார்.

அன்று காலை, உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற பாடகி பேகம் அக்தர் (BEGUM AKHTAR, 49), பூனா அகில இந்திய வானொலி நிலையத்தின் இசை அமைப்பாளர் கோல்வல்கருடன் (GOLWALKAR, THR MUSIC DIRECTOR OF THE POONA ALL INDIA RADIO STATION) ஆதி, மெஹர்ஜி ஆகியோரால் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார். பேகம் அக்தரின் பல இசைப் பதிவுகளை பாபா வைத்திருந்தார், மேலும் அவர் பாபாவிற்குப் பிரியமான கலைஞர்களில் ஒருவர். முன்னதாக ஒருமுறை, 1937-38இல், ஆதி, பேகம் அக்தரை பாபாவின் முன்னால் பாட அழைத்த போது, அவரது கொல்கத்தா-அஹமதுநகர் வரையிலான முழுப் பயணச் செலவுகளை வழங்கி, அவரது பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளைச் செய்யுமாறு தனது விருப்பத்தைத் தெரிவித்ததோடு, அதிக கட்டணமும் கோரினார். அந்த நேரத்தில், பாபா, ஆதியிடம் கூறினார்: "**இப்போது அவரை அழைக்காதீர்கள்; ஒரு நாள் தானாக அவரே வருவார்.**" இதோ அவர் தானாகவே வந்துள்ளார்!

கோல்வல்கரின் செய்திக்கு பதிலளிக்கும் விதமாக, பேகம் அக்தர் முந்தைய கோடையில் குருபிரசாத்தில் பாபாவின் முன்னால் பாட இருந்தார், ஆனால் கடுமையான நோய் காரணமாக அவரால் வர முடியவில்லை. இப்போது பாபாவை சந்தித்து, பேகம் அக்தர் கதறி அழுதார். அவர் பல வருடங்களாக பாபாவின் உள்ளார்ந்த தொடர்பில் இருப்பது போலத் தோன்றியது. அவர் பாபாவிடம் கூறினார், "உங்கள் அழைப்பைக் கேள்விப்பட்ட நாளிலிருந்து, நான் உங்கள் தரிசனத்திற்காகத் துடித்துக் கொண்டிருந்தேன், ஒவ்வொரு நாளும் உங்கள் புகைப்படத்தின் முன்னால் ஒரு சிறப்பு கஸலைப் பாடுகிறேன்."

அந்தப் பாடலை பாபா முன்னிலையில் பாட அனுமதிக்குமாறு பேகம் அக்தர் அவரிடம் மன்றாடினார், அதற்கு பாபா, "**நான் இப்போது ஏகாந்தவாசம் மேற்கொள்கிறேன், கஸல்களைக் கேட்கும் மனநிலையில் இல்லை**" என்று பதிலளித்தார்.

பேகம் அக்தர் கெஞ்சி கேட்டபோது, பாபா இவ்வாறு பதிலளித்தார், "**நீங்கள் பூனாவிற்கு வந்து, ஏப்ரல் அல்லது மே மாதத்தில் எந்த நாளிலும் குருபிரசாத்தில் நான்கு முதல் ஐந்து மணி நேரம் நிகழ்ச்சியை நடத்த ஒப்புக்கொள்கிறீர்கள் என்ற நிபந்தனையின் பேரில் மட்டுமே, நான் எனது**

**அனுமதியை வழங்குவேன். நீங்கள் அதற்கு இணக்கம் தெரிவித்தால், நான் இப்போது ஒரு கஸலை கேட்பேன்.**"

பேகம் அக்தர் மகிழ்ச்சியடைந்து அந்த நிபந்தனையை அன்புடன் ஏற்றுக்கொண்டார். 'கஸல்களின் ராணி' (QUEEN OF GHAZALS) என்று அழைக்கப்படும் அவர், (ஒரு நாளைக்கு ரூ. 1,000 வசூல் செய்கிறார்) பாபாவிடம் தன்னைப் பாட அனுமதிக்குமாறு பிரார்த்தனையுடன் வந்தது, அன்பின் அதிசயம் என்றுதான் கூறவேண்டும்!

பாபா மற்றும் மண்டலிக்கு முன்பாக அமர்ந்து, பேகம் அக்தர், தினசரி பாபாவிற்காக மொழிந்த 'பிரார்த்தனை'யைப் பாடினார். அதன் முதல் வரி: 'ஓ அன்பே, உன்னிடம் சரணடைந்ததன் விளைவுதான் எனது கண்ணீர்' ('ஏ மொஹாபத், தேரே அஞ்ஜாம் பே ரோனா ஆயா' - AI MOHABAT, TERE ANJAM PE RONA AAYA')

பேகம் அக்தர் பாடும் போது, அன்பு மற்றும் ஆனந்தத்தின் கண்ணீர் அவர் கண்களில் பெருக்கெடுத்தது. பாபா அவருடைய கண்ணீரைத் துடைக்கத் தனது கைக்குட்டை ஒன்றைக் கொடுத்தார். அவர் பாடியதில் மிகவும் மகிழ்ச்சியடைந்த பாபா, மேலும் மூன்று கஸல்களைப் பாட அனுமதித்தார்.

மணி இது குறித்து குறிப்பிட்டதாவது:

(அக்தர்) அவர் பாபாவுக்காக இயற்றிய ஒரு பாடலைப் பாடத் தொடங்கி, பின்பு கஸல்களைத் தொடர்ந்தார். அவர் பாடிக்கொண்டிருந்தபோது, கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது, பாபா அன்புடன் சிரித்தார், இசைக்கு இசைந்தாற்போலத் தலையசைத்தார்... பாடலின் இந்த ஒரு வரி எனக்கு நினைவிருக்கிறது, 'எனது பிரார்த்தனையை யார் கேட்பார்கள், யார் என் அழைப்பிற்கு பதிலளிப்பார்கள், அன்பின் ஓர் அம்சமாக எனது தேவைகளை யார் பூர்த்தி செய்வார்கள்? நான் கூறுவதை கேட்பவர் யார், என்னை கவனிப்பவர் யார்?' இந்தப் பாரம்பரியப் பாடலை அவர் பாடிக்கொண்டிருந்த அந்த கணத்தில், பாபா அவரிடம், "**நான் அதைச் செய்வேன்**" என்று சைகையால் தெரிவித்தார். ஒவ்வொரு முறையும் பாடலின் கேள்விக்கு பாபா பதில் அளித்தார். பாபா அப்போது, "**நான் இதயத்தின் குரலைக் கேட்பவன், அன்பர் குறை கூறி முறையிடத் தேவையில்லை**" என்று கூறிக் கொண்டிருந்தார்.

பாபா, அக்தரிடம் கூறினார், "**நான் ஃபக்கீர்களின் ஃபக்கீர், மேலும் பேரரசர்களின் பேரரசர்!**"

பேகம் அக்தர் பதிலளித்தார், "நிச்சயமாக, சந்தேகத்திற்கு இடமில்லாமல்!"

'**குருபிரசாத் நிகழ்ச்சிக்கு என்ன கட்டணத்தை ஏற்றுக்கொள்வீர்கள்**' என்று பாபா கேட்டதற்கு, "உங்கள் அன்பைத் தவிர எனக்கு எதுவும் வேண்டாம்" என்றார்.

அவருடைய பதில் பாபாவை மகிழ்ச்சியடையச் செய்தது.

பேகம் அக்தருடன் அவரது மகளும், தபேலா கலைஞர் காமத்தும் (KAMAT) வந்திருந்தனர். பாபாவின் கழுத்தில் அணிய தாயும், மகளும் இரண்டு பெரிய

மாலைகளைக் கொண்டு வந்திருந்தனர். பேகம் அக்தர் அடைந்த மகிழ்ச்சியில் உணர்ச்சிவசப்பட்டு, பாபாவின் கழுத்தில் இரண்டு மாலைகளையும் அவரே அணிவித்தார்! பாபா அவரிடம், **“உங்கள் பாடல் என்னை எவ்வளவு மகிழ்வித்தது என்று உங்களுக்குத் தெரியாது”** என்ற நம்பிக்கையின் வார்த்தைகளை மொழிந்தார்.

“நானும் அதைச் செய்ததில் மிகப் பெரிய அதிர்ஷ்டசாலி என்பதை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்” என்று மனம் நெகிழ்ந்து கூறினார் அக்தர்.

பாபாவிடமிருந்து விடைபெறும் போது, அவர் பாபாவின் பாதங்களைப் பற்றிக் கொண்டு, அவரது முழங்காலில் தலை வைத்து நீண்ட நேரம் அமைதியாக அழுதார். பேகம் அக்தரின் தலையைத் தொட்டு, பாபா, **“நீங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்”** என்று சைகையால் தெரிவித்தார்.

அன்று மதியம், அஹமதுநகரிலிருந்து சுமார் 120 அன்பர்கள் மெஹராஸாத்திற்கு வந்தனர்; வந்தடைந்ததும் முதலில் தேநீர் அருந்திவிட்டு மண்டபத்திற்குள் நுழைய வேண்டும் என்று பாபா அவர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தார். ஆனால் அவர்கள் பேருந்துகளிலிருந்து இறங்கியதும், பாபா அவர்களை மண்டபத்திற்கு அழைக்கவே, அனைவரும் அவருக்கு முன்பாக அமர்ந்த போது, பாபா கூறினார்:

**லக்னோவின் பேகம் அக்தர் எனது தரிசனத்திற்கு வந்ததால், காலையிலிருந்து நான் இங்கேயே அமர்ந்திருக்கிறேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், என் முன்னால் வந்து பாடுமாறு ஆதி கேட்டுக்கொண்ட போது, அவர் வரவில்லை. அவர் எனது தரிசனத்திற்கான அளப்பரிய ஆர்வத்தில் ஒரு குழந்தையைப் போல் அழுதார். அவர் விடாப்பிடியாக எனது பாதங்களைப் பற்றிக்கொண்டார்; நான் அவருக்கு ஆறுதல் கூறி, அவரைத் தழுவி எனது கைக்குட்டையைக் கொடுத்தேன். அவர் பணம் எதுவும் கேட்கவில்லை, ஆனால் என் அன்பிற்காக என்னிடம் மன்றாடினார். அவர் எனது தரிசனத்திற்காக வந்தாலும், என்னை மகிழ்விக்க ஒரு கஸல் பாட விரும்புவதாகக் கூறினார். நான் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டேன். அவர் ஒரு கஸலுக்கு பதிலாக நான்கு கஸல்களைப் பாடினார், அது என்னைப் பெரிதும் மகிழ்வித்தது. இப்படி சுமார் இரண்டு மணி நேரம் என் அருகில் அமர்ந்து, அவர் வழங்கிய இசை விருந்துக்கு எந்தக் கட்டணமும் இல்லாமல், என் அன்பையே விரும்புவதாகக் கூறி, மே மாதம் குருபிரசாத்தில் எனது முன்னிலையில் பாட இணக்கமும் தெரிவித்தார்!**

இந்த நேரத்தில், அன்பர்கள் அனைவரும் தேநீர் அருந்த வேண்டும் என்று பாபாவை எரச் நினைவுபடுத்தவே, பாபா அவர்களை மண்டபத்தை விட்டு வெளியேற அனுமதித்தார். பதினைந்து நிமிடங்களில், கூட்டம் மீண்டும் கூடியது. தமது அஹமதுநகர் அன்பர்களின் நலனுக்காக, பாபா, டிசம்பர் 9 அன்று விளக்கியதைப் போலவே ‘ஆன்மீகப் பாதையும் அதன் இடர்பாடுகளும்’ (THE PATH AND ITS HARDSHIPS) குறித்து விளக்கினார். அவர் அதைத் தொடங்குவதற்கு முன்பு,

பாபா, பேராசிரியர் அப்துல் கரீமை (PROFESSOR ABDUL KARIM) கடிந்துகொள்வது போலக் கேலி செய்தார். அவரது பெயரை எரச் அழைத்ததும் திடுக்கிட்ட பேராசிரியர், மண்டபத்தின் தொலைதூர மூலையில் எழுந்து நின்றார். பாபா அவரிடம், **“நீங்கள் ‘ஃபனா’விலும்** (FANA) **இல்லை ‘பக்கா’விலும்** (BAQA) **இல்லை. எனவே, நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?”**

பாபா இந்த இரண்டு நிலைகளைப் - **நிர்வாண நிலை** (ஃபனா - FANA) மற்றும் **ஸாஹஜ் ஸமாஜ் நிலை** (பக்கா - BAQA) - பற்றி சுருக்கமாக விளக்கினார். பேராசிரியர் கரீமைக் குறிப்பிட்டு, அவரை இவ்வளவு நாட்களாகப் பார்க்க முடியாததற்காக அவரைக் கடிந்துகொண்டு, **“நவம்பர் மாதம் பூனாவில் நடந்த கிழக்கு-மேற்கு சகவாசத்தின் போது, நீங்கள் எங்கே இருந்தீர்கள்? உலகம் முழுவதிலுமிருந்தும் என் அன்பர்கள் அனைவரும் என்னை சந்திக்க வந்தனர். என்னால் உங்களை எங்கும் கண்டுகொள்ள முடியவில்லை!”** பேராசிரியர் திருப்திகரமான பதிலை வழங்கத் தவறிவிட்டார்.



கஜானன் வாட்வே (GAJANAN WATVE)

பூனாவின் நன்கு அறியப்பட்ட பஜனை பாடகர் கஜானன் வாட்வேயை (GAJANAN WATVE) பாபா முன்னிலையில் பாடுவதற்கு அழைத்து வரும்படி பிக்குபாய்க்கு அறிவுறுத்தப்பட்டது. பாபா கஸல்களை மிகவும் ரசிப்பவர் என்பதை அறிந்த கஜானன், சிலவற்றை சிறப்பாகக் கற்றுக்கொண்டார். ஒரு கட்டத்தில், பாபா '**தெய்வீக அன்பு**' (DIVINE LOVE) குறித்து விளக்கினார்:

**'தெய்வீக அன்பு' என்பது மனிதனுக்கு கடவுள் கொடுத்த வரம். சத்குருவின் அருளுடன் இதை ஒப்பிடலாம், இது மனிதனை ஒரே நொடியில் கடவுளை உணர உதவுகிறது. யார் ஒருவருடைய முழு வாழ்க்கையும் தூசி போல மாறுகிறதோ, அவரே கடவுளின் உண்மையான அன்பர்** (மர்த்-இ-குதா) **ஆவார். அன்பின் வலியை அவர் மனமார விரும்புகிறார், அது அவரை சுட்டெரித்து சாம்பலாக்கினாலும், எதற்காகவும் அவர் அதிலிருந்து பிரிவதில்லை! அது அவரை சமூகத்திலிருந்து ஒதுக்கிவைத்தாலும், தூக்கம், பசி, சௌகரியங்கள் போன்றவற்றைப் பொருட்படுத்தாமல் இருக்கச் செய்தாலும், படைப்பில் அனைத்திற்கும் மேலாக, இந்த ஆனந்தமான சித்திரவதையை அவர் ஆமோதிக்கிறார். கடவுளால் மட்டுமே இந்த இறை அன்பை மனித இதயத்தில் வேரூன்றச் செய்ய முடியும்.**

**தெய்வீக அன்பின் நெருப்பில் அன்பர் தனக்குள் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கிறார். ஆனால், இவ்வளவு நிறைவான வாழ்க்கையை வாழ்ந்தாலும், உண்மையான அன்பர் அதை ஒரு விலைமதிக்க முடியாத பொக்கிஷமாக, தனக்குள் மறைத்து வைத்திருப்பதுதான் ஆச்சரியம். அதை அவர் கைவிட விரும்பவில்லை. அவரது உள்ளத்துள் எரிந்து ஆனந்தமாக இருந்தாலும், இறுதியில் அதன் நெருப்பில் அவர் தூசியாக மாறுகிறார்!**

**அப்படிப்பட்ட வீரர்கள் கூட என் அருளை அடையப் பெறுவதில்லை. கோடிக்கணக்கான அன்பர்களில் அரிதான ஒருவருக்கு மட்டுமே இந்தக் கடைக்கண் பார்வை, இந்த அருள் கிடைக்கிறது. இந்தப் பாதை பலவீனமானவர்களுக்கும், அதைரியமான இதயம் படைத்தவர்களுக்கும் அல்ல! மர்த்-இ-குதா** (இறைப் பைத்தியர்கள்) **கூட என் அருளை அடையப் பெறுவதில் தோல்வியை சந்திப்பதானால், இங்கு இருக்கும் உங்களைப் பற்றி என்னென்பது? எனது பார்வை உங்கள் அனைவர் மீதும் எப்பொழுதும் உள்ளது, ஆனால் இது முற்றிலும் மாறுபட்ட பார்வை, ஒரு குறுகிய வினாடிக்கும் குறைவான நேரத்தில் உண்மைப்பொருளை** (பரமாத்மா) **உணர வைக்கும் அருட்பார்வையில் இருந்து வேறுபட்ட தெய்வீக அருட்பார்வை.**

சரணாகதியின் (SURRENDER) அர்த்தத்தை விளக்கி, பாபா தொடர்ந்தார்:

**பல ஆண்டுகளுக்கு முன்பு, மெஹராபாத்திற்கு வந்து, என்னிடம் அனைத்தையும் அர்ப்பணம் செய்ய விரும்புவதாகக் கூறிய ஓர் ஏழையின் சரணடைதல் என்ற அர்த்தத்தில் நான் கூறவில்லை. 'அனைத்தையும்' என்றால் என்ன என்று நான் கேட்டதற்கு, அவர் இவ்வாறு பதிலளித்தார்: "நான், எனது மனைவி மற்றும் நான்கு குழந்தைகள்!" அப்படிப்பட்ட 'சரணாகதியை' என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை!**

அப்போது நான் டோக்காவில் இருந்த நாட்களில் (1928இல்), உண்மைப்பொருளைத் தேடி அலைந்த சாது ஒருவர், இறையுணர்வை எய்தும் விருப்பத்தை முன்வைத்தார். நான் அவரிடம் எந்த ஒரு துன்பமும் தியாகமும் இதற்கு ஈடில்லை என்று கூறி, உணவு உண்ணாமல், நீர் அருந்தாமல் ஒரு மரத்தின் கீழ் அமருமாறு அறிவுறுத்தினேன். அவர் பத்து நாட்கள் அங்கேயே இருந்தார், ஆனால் அதன் பின்னர் ஓர் இரவு அவர் திடீரெனக் காணாமல் போனார்.

தேவாலயங்களின் வெளியளவினான காட்சிகள் (சடங்கு முறைகள்), சம்பிரதாய நடைமுறையிலான பிரார்த்தனைகள், புனித நூல் அணிவது மற்றும் கோயில்களில் மணியோசை எழுப்புவதன் மூலம் கடவுளை ஒருபோதும் ஏமாற்ற முடியாது. அதற்கெல்லாம் செவிடாக, ஏமாறாமல் இருப்பவர் கடவுள். அன்பு, உண்மையான அன்பு ஒன்றுதான் அவரை அசைக்க முடியும். அன்பு என்பது கடவுள் மனிதனுக்கு வழங்கும் அன்பளிப்பு, பரிபூரண குருநாதரின் அருளால் மட்டுமே இறையுணர்தல் அடையப் பெறப்படுகிறது.

உங்களின் 'நான்' எனும் சுயத்தை விட கடவுள் உங்களுக்கு நெருக்கமானவர், ஆனால் ஏழு முகத்திரைகளின் காரணமாக நீங்கள் அதை அறியவில்லை. ஒரு முகத்திரை அகற்றப்பட்டால், மற்றொன்று அதற்காகக் காத்திருக்க, மொத்தத்தில் ஏழு முகத்திரைகள் அகற்றப்பட வேண்டும். நான்காவது ஆன்மீகத் தளம் வரை, அந்தப் பாதையில் பயணிக்கும் யாத்ரீகர் ஒருவர், உலக ஈர்ப்புகளுக்கு ஆளாக நேரிடும். ஒரு பரிபூரண குருநாதரின் அருட்பார்வை மட்டுமே அவரைக் காப்பாற்ற முடியும்; ஏனெனில், ஒவ்வோர் அடியிலும், ஆன்மீகப்பாதையில் ஒருவர் தடைகளை சந்திக்கிறார்.

இறை-உணர்தல் (GOD-REALIZATION) அனுபவத்தைக் குறித்து பாபா கூறினார்:

மனிதன் இறையுணர்வை அடையப் பெறுவது என்பது, இறைப் பெருங்கடலை விழுங்கும் ஒரு துளி நீர் போன்றது என்றால் மிகையாகாது! இது உங்கள் அறிவுத்திறனுக்கு அப்பாற்பட்டது. பாபாஜானின் முத்தத்திற்குப் பின்பு, நானே இறைப் பெருங்கடல் என்பதை அறிந்தபோது, நான் மட்டுமே இருந்த அந்தப் பேரானந்த நிலையிலிருந்து, சாதாரண 'துளி' எனும் சுயநினைவுக்கு வர விரும்பவில்லை. ஆனால் எனது விருப்பத்தையும் மீறி, ஐந்து பரிபூரண குருநாதர்கள் (சத்குருக்கள்) அவதார புருஷராக பூமியில் வெளிப்படும் எனது விதியின் நிமித்தம், என்னை சாதாரண உணர்வு நிலைக்கு 'கீழே' கொண்டுவந்தனர்.

மேலும், இந்த சலசலப்புகளுக்கு மத்தியில் நான் அனுபவித்த தாங்கொணா வேதனையில், உபாஸனி மஹாராஜ், என்னை சாதாரண உணர்வு நிலைக்குக் கொண்டு வருவதற்கு ஒன்பது மாதங்களுக்கு முன்பு, வீட்டில் என் அறையின் தரையில் இருந்த கல்லில் எனது தலையை அறைந்தேன். அதன் மீது படிந்த இரத்தக் கறைகளுடன் அந்தக் கல் இன்னும் என் அறையில் உள்ளது (பூனா, பாபா இல்லத்தில்); இது வரும் ஆண்டுகளில் உலகளவில் வணங்கப்படும்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

**கவாலி பாடுவதை நான் கேட்க விரும்புகிறேன்; சாய்பாபா, பாபாஜான் இருவரும் அதை விரும்பினர். அவர்கள் இசை நிகழ்ச்சிக்காக நேரம் ஒதுக்கி, தாளத்திற்கு இசைந்தாற் போல முன்னும் பின்னுமாக அசைந்து பாடலைக் கேட்டு உள்வாங்கிக் கொண்டனர்.**

பாபா மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார். கஜானன் வாட்வே பாடும்போது, பாபா தனது தலையையும் கைகளையும் அதற்கு இசைவாக நகர்த்தி, பாடலின் வார்த்தைகளின் தீவிரத்திற்கு ஏற்ப, அவரது வெளிப்பாடு மாறிக் கொண்டிருந்தது.

ஒரு கட்டத்தில், பாபாவின் நிலை குறித்து கிரிஜா கில்னானியின் (GIRIJA KHILNANI) மனதில் எழுந்த சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் விதத்தில், பாபா அவரிடம், "**நீங்கள் ஓர் ஆண் அல்லது பெண் என்பதை உணர, எப்போதேனும் இரண்டு முறை யோசிக்க வேண்டுமா?**" என்று கேட்டார்.

தனக்குத்தானே பதிலளித்த பாபா, "**கிரிஜா தன்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டியதில்லை. அதேபோல, நான் மனித உருவில் வந்த கடவுள், இறை-மனிதன் என்பதை நான் அறிவேன். அதனால்தான், நான் அப்படிச் சொல்கிறேன்.**"

பிக்குபாய் உடனே இடையே குறுக்கிட்டுக் கூறினார், "இப்போதெல்லாம் வானொலியில் தேசபக்தி (போர் முழக்கம்) பாடல்கள் விரும்பப்படுவதால், வாட்வே, பக்தி பாடல்களைப் பாடுவதற்கான வாய்ப்புகள் அரிது. அவரும் போர் வீரர்களுக்காக சில தேசபக்தி பாடல்களைப் பாடக் கற்றுக்கொள்கிறார்."

இந்தியா, சீனா இரு நாடுகளுக்கும் இடையிலான போரைப் பற்றி பாபா குறிப்பிட்டார், "**எல்லோரும் எனது குழந்தைகள். இந்தியாவும் சீனாவும் எனது தேசங்கள், ஆனால் அவற்றினிடையே இந்த வேறுபாடு உள்ளது. இந்தியா எனது வாய், அதே வேளையில் சீனா என் ஆசனவாயைக் குறிக்கின்றன. எதுவாயினும், அத்தகைய அரசியல் விவாதம் இந்த சந்தர்ப்பத்தில் ஏற்புடையதல்ல.**"

இறுதி கஸல் பாடப்படுவதற்கு முன்பு, திருமதி டாக்கே·ஃபால்கர், ஸில்லா காக்கு மற்றும் அங்கிருந்த பிற பெண்மணிகள், மராட்டி பாடல்கள் பாடுவதில் நன்கு அறியப்பட்ட கஜானன் வாட்வேயின் ஒரு குறிப்பிட்ட மராட்டி பஜனையைக் கேட்கும் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர். ஆதலால், பாபா, கஸல்களை அதிகம் விரும்பினாலும், தமது அன்பர்களின் ஆர்வத்தைப் பூர்த்தி செய்ய, வாட்வேயிடம் பாடுமாறு கூறினார். வாட்வே அதைப் பாடியபோது, பாபா தாளம் தப்பாமல் கைகளைத் தட்டிய விதத்தில், அவரும் பாடலைக் கேட்டு நெகிழ்ந்துபோனார் என்பதைக் காட்டியது. வாட்வே இறுதி கஸலைப் பாடினார். அன்று அவர் அற்புதமாகப் பாடியது, பாபாவை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது. அவர், வாட்வே தன் அருகில் நிற்க, பிக்குபாயிடம் புகைப்படம் எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

விழாவின் போது, மஹாராஷ்டிரா முதல்வர் எம்.எஸ். கன்னம்வார் (CHIEF MINISTER OF MAHARASHTRA, N.M. KANNAMWAR) ஜனவரி 14, 15 தேதிகளில் அஹமதுநகர் வருவதாகவும், பாபா விரும்புவதானால், முதல்வருக்கு தரிசனம் வழங்கலாம் என்றும் ஸரோஷ், பாபாவிடம் தெரிவித்தார். நாக்பூரைச் சேர்ந்த லோக்கண்டே (LOKHANDE) என்பவரும் பாபாவை சந்திக்க முதல்வர் விருப்பம் தெரிவித்ததாகக் கடிதம் எழுதியிருந்தார்.

பாபா பதிலளித்தார், "**கன்னம்வாரின் மனைவி எனது நெருங்கிய அன்பர்களில் ஒருவரான இந்துமதி தேஷ்முக்கின் பிரியமான தோழி. அவர் நாக்பூர் மையத்தின் சில கூட்டங்களில் கலந்து கொண்டுள்ளார். கன்னம்வார் ஒருமுறை எனது பிறந்தநாள் விழாவிற்கு தலைமை தாங்கினார், என்னை சந்திக்க விரும்புகிறார். பூனாவில் நடந்த கிழக்கு-மேற்கு சகவாசத்திற்கு அவரால் வர இயலவில்லை, இப்போது என் ஏகாந்தவாசம் தொடங்கிவிட்டது. இருந்தாலும், நான் அவர்களை 15ஆம் தேதி காலை ஒன்பது மணிக்கும் பத்துக்கும் இடைப்பட்ட வேளையில் ஐந்து நிமிடங்கள் சந்திப்பேன்.**"

ஸரோஷ், தான் சில நாட்கள் வெளியூர் பயணம் மேற்கொள்ளப் போவதாகவும், மாவட்ட காவல்துறை அதிகாரி மற்றும் ஆட்சியர், முதல்வரின் வருகை குறித்து ஆதிக்குத் தகவல் தெரிவிப்பதாகவும், ஆதி அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்து வருவார் என்றும் தெரிவித்தார். அதற்கு பாபா, '**தம்பதிகளைத் தவிர வேறு எவரையும் சந்திக்க மாட்டேன்**' என்று கூறினார்.

அஹமதுநகர் மையத்தை நிர்வகிப்பது குறித்து ரங்கோலே, ருஸ்தம் காக்கா, பிலூ மாமா ஸட்டா ஆகியோரிடம் பாபா கேட்டார், பின்னர் அந்தக் குழுவில் ஒவ்வொருவரும் அவரை தூரத்திலிருந்து வணக்கம் செலுத்தி புறப்படுமாறு அறிவுறுத்தினார். அவர்களும் அவ்வாறே செய்து பாபாவின் அன்பில் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர்.

மாலையில் பாவ் கல்சூரி, வழக்கம் போல் இரவு நேரக் கண்காணிப்பிற்காக, பாபாவின் அறைக்குச் சென்ற போது, பாபா அவரிடம், "**முதலில் என்னைத் தழுவிக்கொள்ளுங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார். பாபா கூறினார், "**இன்று எனது பிறந்த நாள்**!" பாவ் கல்சூரி ஆச்சரியப்பட்டாலும், ஒவ்வொரு நாளும் பாபாவின் பிறந்தநாள் என்று நினைத்து அமைதியாக இருந்தார்.

சிறிது நேரம் கழித்து, பாபா கேட்டார், "**இன்று எனது பிறந்த நாள் எப்படிக் கொண்டாடப்பட்டது**?" பாவ் கல்சூரி "மிகவும் அருமையாக!" என்று பதிலளிக்க, பாபா அதே கேள்வியைக் கேட்டுக்கொண்டே இருந்தார். திடீரென, அந்த நாள் அவருடைய பிறந்த நாள், பாபாவின் பிறந்த நாள் அல்ல என்பது பாவ் கல்சூரியின் நினைவுக்கு வந்தது. ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்கு முன்பு, பாபா, பாவ் கல்சூரியின் பிறந்தநாளை நினைவுபடுத்துவதற்காக அவரிடம்

கூறியிருந்தார், ஆனால் பாவ் அதை மறந்துவிட்டார், ஜனவரி 13ஆம் தேதி அவரது பிறந்த நாள் என்று பாபாவிடம் சொல்லவில்லை.

மண்டலியின் ஒவ்வொரு பிறந்தநாளிலும், பாபா குறிப்பிட்ட ஆண் அல்லது பெண் மண்டலியைத் தழுவிக்கொள்வது வழக்கமாக நடந்து வந்தது, ஆனால் மெஹராவின் பிறந்தநாள் மட்டுமே ஒரு சிறப்பு நிகழ்வாகக் கொண்டாடப்பட்டது. தனது பிறந்தநாளை மறந்திருந்த போதும், பாபாவின் அரவணைப்பை அன்றைய தினமே பாவ் கல்சூரி அடையப் பெற்றார். அதை அவருக்கு நினைவுபடுத்தியவர் பாபா.

இதற்கிடையில், ஆட்சியரைத் தொடர்பு கொண்ட ஆதியிடம், எம்.எஸ். கன்னம்வார் அஹமதுநகரிலிருந்து ஜனவரி 15 அன்று காலை 8:00 மணிக்குப் புறப்பட இருந்ததால், மெஹராஸாத் செல்ல முடியாத சூழ்நிலை என்று தெரிவிக்கப்பட்டது. ஆதி, பாபாவிடம் இதைத் தெரிவித்ததும், பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து, காலை எட்டு மணிக்கு, தம்பதியரை சந்திப்பதாகத் தெரிவித்தார். அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, வழித்தடங்களில் காவல்துறை அதிகாரிகள் வரிசையாக நின்றனர். மெஹராஸாத்தின் நுழை வாயில்களிலும் இரண்டு அதிகாரிகள் கண்காணித்தனர். ஆனால் அன்று காலை ஆதி, முதல்வரின் பங்களாவிற்குச் சென்றபோது, அவர் பல்வேறு அலுவல்களில் மும்முரமாக இருந்து, தாமதம் ஏற்பட்டதால், அவர் வர இயலாமையை வெளிப்படுத்தினார். மாறாக, இரண்டு காவல்துறை அதிகாரிகளும் பாபாவை தரிசனம் செய்ய அனுமதிக்குமாறு வேண்டினர். அதற்கு பாபா இணக்கம் தெரிவித்து, "**நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி, உங்கள் பணி நிமித்தம் இங்கே இருப்பதால், உங்கள் முதல்வருக்கு பதிலாக, தரிசனத்தின் பலனை நீங்கள் அடையப் பெற்றீர்கள்**" என்று கூறினார். (சில மாதங்களுக்குப் பிறகு, கன்னம்வார் குருபிரசாத்தில் பாபாவை சந்தித்த போது, மெஹராஸாத்தில் பாபாவை சந்திக்க இயலாமல் போனதற்கு வருத்தம் தெரிவித்தார்.)

1963 ஜனவரி 17ஆம் தேதி பழுதுபார்க்கப்பட்டு வர்ணம் பூசப்பட்ட டிஸோட்டோவை (DeSOTO) மும்பையிலிருந்து கொண்டுவர ஆதி அங்கு அனுப்பப்பட்டார். மும்பையிலிருந்து அடெல் வோல்கினை உடன் அழைத்து வந்து, ஜோஸஃப்-காரி ஹார்ப் ஆகியோருடன் பூனா நேப்பியர் ஹோட்டலில் அன்று இரவைக் கழித்த பின்னர், அடெல் 19ஆம் தேதி காலை 9:40 மணிக்கு மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார். தேநீருக்குப் பிறகு பாபாவை சந்தித்த வேளையில், பாபா தனது பாதங்களைச் சுட்டிக்காட்டி, அடெலிடம் அவற்றைத் தொடுமாறு அறிவுறுத்தினார்; இது ஏதோ வழக்கத்திற்கு மாறான செயலாக இருந்தது.

கிழக்கு-மேற்கு சகவாசத்திற்குப் பின்னர் அடெலை இந்தியாவில் தங்க பாபா அனுமதித்திருந்தார்; கடந்த மூன்று மாதங்களாக, ஏற்கனவே குறிப்பிட்டபடி, அடெல் மும்பையில் ஒரு மருத்துவமனையில் செவிலியராகப் பணிபுரிந்து வந்தார். அவர் தொடர்ந்து இந்தியாவில் தங்க விரும்பினாலும், இந்த சந்திப்பின்


போது, அடெல் அமெரிக்காவிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்று பாபா முடிவு செய்தார். பாபா அவருக்கு உறுதியளித்தார், **“நீங்கள் அங்குப் பணிபுரிவதன் மூலம் எனது நோக்கத்தை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள்.”** ஒவ்வொரு வருடமும் ஒருமுறை மெஹராஸாத் வந்து செல்ல அவர் அனுமதித்தார்.

அடெல், பாபாவின் முடிவை உடனடியாக ஏற்றுக்கொண்டு, பாபாவின் விருப்பம் அதுவாக இருந்தால், தான் மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்வேன் என்று கூறினார். அவரது மனப்பூர்வமான கீழ்ப்படிதல் பாபாவை மகிழச் செய்தது, மேலும் பாபா அவர் மீதான அன்பை வெளிப்படுத்தி, அவரைப் பாராட்டினார், **“நான் உங்களை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன்; என்னைப் பொறுத்தவரை, நீங்கள் அமெரிக்காவில் இருந்தாலும் சரி, இந்தியாவில் இருந்தாலும் சரி, நீங்கள் எங்கிருந்தாலும் நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்; எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் நினைவில் கொள்ளுங்கள், அடெல், நீங்கள் என்னை எப்போதும் நேசிப்பதை விட, நான் உங்களை அதிகமாக நேசிக்கிறேன். நான் ஏழைகளிலும் இருக்கிறேன். நான் ஏழைகளில் ஏழை.”**


அடெல் மெஹராஸாத்தில் மதிய உணவை உண்டு, அன்று பிற்பகல் 3:30 மணிக்கு மீண்டும் மும்பைக்கு ரயிலில் பயணம் செய்து, ஜனவரி 27 அன்று இந்தியாவிலிருந்து கப்பலில் புறப்பட்டுச் சென்றார், அவர் தாயகம் சென்றடைந்ததும் தொலைத்தந்தி அனுப்புமாறு பாபா கூறினார். அடெல் மும்பையை விட்டுச் செல்வதற்கு முன்பு, பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **“என்னை உங்களுடன் அழைத்துச் சென்று, என் அன்பை அடையப்பெறும் அனைவருடனும் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு என் அன்பும் ஆசிகளும்.”** அடெல் பதிலுக்குத் தொலைத்தந்தி அனுப்பினார்: “அன்பான பாபா, நான் உங்களுக்குக் கீழ்ப்படிவதற்காகவே வாழ்கிறேன்.”

அடெல் வோல்கின்,
மெஹராஸாத்,
**19 ஜனவரி 1963**
(ADELE WOLKIN,
MEHERAZAD
19 JANUARY 1963)





பி. ராமலிங்கேஷ்வர ராவ், கோடூரி கிருஷ்ணா ராவ், ?, மெஹர் பாபா, பி. பாப்பிராஜூ
(P.RAMALINGESHWARA RAO, KODURI KRISHNA RAO, ? , MEHER BABA, P)




மெஹர்ஸ்தான் (MEHERSTHAN), கொவ்வூர் (KOVVUR)

ஜனவரி 20 அன்று ஹமிர்பூரிலிருந்து வந்த கேஷவ் நிகம், புக்கார் இருவரும் மெஹராஸாத்தில் அன்று இரவு தங்கினர். காக்கா பாரியாவிற்கு 25ஆம் தேதி நான்காவது மாரடைப்பு ஏற்பட்டது, ஆனால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை.

இதற்கிடையில் கோடூரி கிருஷ்ணா ராவ், ஆந்திராவின் கொவ்வூரில் கோதாவரி நதியின் மேற்குக் கரையில் மெஹர்ஸ்தானை (மெஹரின் இல்லம் - HOUSE OF MEHER) நிறுவினார், அங்கு பாபா 1954இல் தரிசனம் வழங்கினார். மும்பையில் வார்க்கப்பட்ட பாபாவின் ஆளுயர வெண்கல சிலை நிறுவப்பட்டு, அதற்கான திறப்பு விழா 1963 பிப்ரவரி 28 என்று நிர்ணயிக்கப்பட்டது. மெஹர்ஸ்தானில் வெளியிடுவதற்காக பாபா பின்வரும் எட்டு செய்திகளை கோடூரிக்கு அனுப்பி வைத்தார்:

- **சடங்கு சம்பிரதாயங்களின் திரைச்சீலையை ஒட்டுமொத்தமாகக் கிழித்து எறிந்து விடுங்கள்; நானே வணங்கப்படுபவர், நானே வழிபாடு மற்றும் வழிபடுபவர் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.**
- **சடங்கு சம்பிரதாயங்கள் எனும் ஆடைகளை எளிய வழிபாட்டிற்கு அணிவிப்பது என்பது, அறியாமையின் குளிர்ந்த காற்றில் என்னை வெளிப்படுத்துவதாகும்.**
- **இறை-மனிதனை நேர்மையாக நேசிப்பது, கடவுளை உண்மையாக வணங்குவதாகும்.**
- **இங்கே மெஹர்ஸ்தானில் என்னைக் கண்டுகொள்ள, உங்கள் ஆழ் இதயத்தில் என்னைத் தேடுங்கள்.**
- **மெஹர்ஸ்தான் எனக்காக அன்புடன் கட்டி எழுப்பப்பட்டுள்ளது, ஆனால் என்னை இங்கே தன் இதயத்தில் கொண்டு வரும் என் அன்பனால் மட்டுமே நான் இங்குக் கண்டுகொள்ளப்படுவேன்.**
- **இதயம் இருப்பதுபோல், இல்லமும் இருக்கிறது; கண் இருப்பதுபோல் இல்லத்தில் உருவமும் இருக்கும்.**
- **மனிதனின் இதயம் எப்பொழுதும் ஆதிகால புருஷரை வழிபடும் பழமையான கோயிலாக இருந்து வருகிறது.**
- **அன்பு இல்லாத இல்லத்தில் ஆதிகாலத்தவர் குடியிருக்க முடியாது.**

கொவ்வூரில் மேற்குறிப்பிட்ட பாபாவின் செய்திகள் அடையப் பெற்றபோது, புதிதாகக் கட்டப்பட்ட மையத்தில் ‘சடங்குகளைக் கடைப்பிடிப்பது பற்றி பாபா குறிப்பாக என்ன சொல்ல விரும்புகிறார்’ என்ற விவாதம் பெரிய அளவில் நிகழ்ந்தது. ‘வேத நூல்களில் குறிப்பிடப்படும் வைதீக சடங்குகள் அனுமதிக்கப்பட வேண்டும்’ என்று கருத்துத் தெரிவித்தவர், கொவ்வூரில் வாழும் வழக்கறிஞர் பி. ராமலிங்கேஸ்வர ராவ் (P.RAMALINGESHWARA RAO). 1963 ஜனவரி 19 அன்று அவர் ஆதிக்கு எழுதிய கடிதமும், எரச்சின் அடுத்தடுத்த பதிலும் முழுமையாக மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. எதிர்கால சந்ததியினரை சிந்திக்கத்

தூண்டும் இந்த வகையான கேள்விகள் குறித்த முக்கியமான வழிகாட்டுதல்கள் அவற்றில் அடங்கியுள்ளன:

என் அன்பு சகோதரர் ஆதி,

பிரியமானவரின் தாமரைப் பாதங்களுக்குப் பிரணாம் (வணக்கங்கள்).

மெஹர்ஸ்தானின் திறப்பு விழாவை முன்னிட்டு, மெஹர்ஸ்தானிலும் அனைத்து மெஹர் அன்பர்களின் இதயங்களிலும் பொறிக்கப்பட வேண்டிய எட்டு செய்திகளை, பிரியமான பாபா வழங்கியுள்ளார்.

நமது ஆந்திரா மெஹர் மையம் சமீபத்தில் கொவ்வூரில் கூடியது. தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய முதல் செய்தி, ஒரு விதத்தில் விளக்கப்பட்டது; எனது பார்வை சற்று வித்தியாசமானது. இது முதன்மையான செய்திகளில் ஒன்றாக இருப்பதால், மெஹர்ஸ்தானுக்கு அருகில் வாழும் நாங்கள், அவதார புருஷர் எந்த அர்த்தத்தில் இதைக் குறிப்பிடுகிறார், மேலும் இதன் சரியான பார்வை என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதால், இது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று அன்பான அவதார புருஷருக்கு என் உள்ளார்ந்த பிரார்த்தனையை முன்வைக்கிறேன். இந்தக் கடிதம், பாபாவின் அன்பான ஒருவர் தனது பிரியமான பாபாவின் முன் வைக்கும் ஒரு நம்பிக்கைக்குரிய கேள்வி, இது அனைவருக்காகவும் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

பாபா கூறினார்: **“சடங்கு சம்பிரதாயங்களின் திரைச்சீலையை ஒட்டுமொத்தமாகக் கிழித்து எறிந்து விடுங்கள்**; **நானே வணங்கப்படுபவர்**, **நானே வழிபாடு மற்றும் வழிபடுபவர் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்**.”

சடங்குகளை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும் என்பது பெரும்பாலான அன்பர்களின் முக்கிய கருத்து, பாபாவும் அதையே குறிப்பிடுகிறார். மேற்கண்ட எனது நண்பர்களுடன் என்னால் முழுமையாக உடன்பட முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை, இது அவதார புருஷரின் விருப்பம் மற்றும் நோக்கம் என்று நான் உணரவில்லை.

மேற்கூறிய உறுதியான கருத்தைக் கொண்ட சிலர், திறப்பு விழாவிற்கு எந்த வேத சடங்குகளும் பின்பற்றப்படாது என்று தெரிவிக்கின்றனர். ‘ஸ்தாபனத்தில் வேத சடங்குகள் தேவையில்லை என்பது பாபாவின் கட்டளையா’ என்று எனக்குத் தெரியவில்லை. வேதங்கள் அவதார புருஷரான பாபாவின் உருவாக்கம். நமது மதத்தைக் கற்றறிய வேண்டும் என்று வேதம் கூறுகிறது. வேதங்களின் அதிகாரம், அவருடைய சொந்த படைப்பாக இருப்பதால், அனைத்து காலத்திலும் அது நிலைபெற்றிருக்கும் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

சடங்குகள் மதத்தின் மழலையர் பள்ளிக்கூடம். அவை இப்போது இருப்பது போல் உலகிற்கு முற்றிலும் தேவையானவை, நாம் மக்களுக்கு புதிய, புத்துணர்வு பெற்ற சடங்குகளை மட்டுமே வழங்க வேண்டும். சடங்குகள் முற்றிலுமாக ஒழிக்கப்படுவதை பாபா ஆதரிக்கவில்லை என்று

நான் உறுதியாக நம்புகிறேன்; தற்போதைய சம்பிரதாய நடைமுறைகளிலிருந்து, புதிய சடங்குகளை உருவாக்க வேண்டும். எல்லாவற்றிலும் எல்லையற்ற வளர்ப்பு சக்தி உள்ளது; அது எனது நேர்மையான நம்பிக்கை. பாபா என் உள்ளுணர்வின் பார்வையையும், அனைவரின் பார்வையையும் தெளிவுபடுத்தி திறக்க வேண்டும்.

இந்து இனத்தின் முழு வரலாற்றிலும், அழிவுக்கான எந்த முயற்சியும் இல்லை, உருவாக்கத்திற்கான லட்சியம் மட்டுமே உள்ளது. என்றாலும், அழிக்க நினைத்த ஒரு பிரிவினரான பௌத்தர்கள், இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டனர். ராமானுஜம், மாதவா, சைத்தன்யா ஆகியோர் ஆக்கபூர்வமானவர்கள். இந்து இனத்தின் முன்னேற்றம் வேத இலட்சியங்களை நிறைவேற்றுவதை நோக்கியே உள்ளது. வேத இலட்சியத்தை நிராகரிக்கும் எந்த ஒரு சீர்திருத்தப் பிரிவு அல்லது மதம் இருந்தபோதெல்லாம், அது தூக்கி எறியப்பட்டது. இது கடந்த கால வரலாறு.

எண்ணற்ற கருத்துக்கள் மற்றும் எண்ணிலடங்கா பாதைகள் கடவுளை நோக்கிச் செல்கின்றன. கிருஷ்ணராக அவதரித்த பாபா, தனது உலகளாவிய தெய்வீகப் பாடலான பகவத் கீதையில், ஞானம் (அறிவு), கர்மா (செயல்) மற்றும் பக்தி (அன்பு) ஆகிய மூன்று பாதைகளை வகுத்துள்ளார். மேலும் உலக மனிதனின் அறிவும், ஒரு பக்தனின் அறிவும், அவதார புருஷரின் அறிவும் எந்த வகையிலும் ஒரே அளவில் இல்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. மேலும் பக்தர்களிடையே உயர்ந்தவர், சாதாரணமானவர், தாழ்ந்தவர் என்ற பல்வேறு நிலைகள் உள்ளன என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையும் கூட. இவை அனைத்தும் கீதையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இறை-அன்பை அடைய, முதலில் புனித மனிதர்களின் சகவாசம் தேவைப்படுகிறது, இது கடவுள் மீதான நம்பிக்கையை (SHRADDHA) எழுச்சியடையச் செய்கிறது. அடுத்ததாக, ஒருமித்த கவனத்துடன் கூடிய பக்தி (NISHTA); அதன் பின்னர் அன்பு (LOVE), தொடர்ந்து, பரவசம் (ECSTASY); கடைசியாக பிரேம் அல்லது இறை அன்பு (DIVINE LOVE). நிச்சயமாக, அவதார புருஷரின் அருட்பார்வை ஒருவர் மீது வீழ்ந்தால், இறை அன்பு நொடிப்பொழுதில் உதயமாகிறது. அது பல லட்சம் பேர்களில் ஒருவருக்கு மட்டுமே கிடைக்கும் பாக்கியம். கடந்த காலங்களிலிருந்து வரும் பக்தர்களிடையே பல பாதைகள், தளங்கள் மற்றும் நிலைகள் இருக்கும்போது, ஒருவர் திடீரென ஜனக மன்னனாக மாற முடியாது என்பதை பாபா ஒப்புக்கொள்வார். ஜனக மன்னன் கூட ஏகாந்தவாசத்தில் பல எளிமையான வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்தார்.

ராமகிருஷ்ண பரமஹம்சர் (கொல்கத்தாவின் சத்குரு) இறை உணர்வை அடையாமல், சடங்கு சம்பிரதாயங்களை முற்றிலுமாகக் கைவிட முடியாது என்று கூறினார், மேலும், அவரும் நீண்ட காலம் வழிபாட்டு முறைகளைக் கையாண்டார்.

நிச்சயமாக, இது ஓர் அவதார காலகட்டம், அவதார் முழு பிரபஞ்சத்திலும் வியாபித்திருப்பவர். அவதார புருஷரின் அருளால் திரையைக் கிழிப்பது எளிது. மெஹர்ஸ்தான் பாபாவின் அன்பினால் கட்டப்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறேன்; மெஹர்ஸ்தானை தரிசித்து, பாபாவை ஆழமாக நேசிப்பவர், திரையை கிழித்தெறியும் அளவுக்கு அவரது அருளையும் பலத்தையும் அடையப் பெறுகிறார். இறைவனோடு ஒன்றாக இருப்பதை ஒருவர் உணரும்போது, திரை அகற்றப்படுகிறது. ஆனால் பொதுவாக அனைவருக்கும் இது முதல் நிலை அல்ல.

என்றென்றும் வாழும் மதம், ரிஷிகளின் மதம், அனைத்து வழிபாட்டு முறைகளையும் ஆதரித்தது. பழங்கால முனிவர்கள், தங்களின் ஆன்ம சக்தி இருந்தபோதிலும், பிறருக்கு முன்னுதாரணமாக இருக்கும் நோக்கத்தில், துறவறத்தைப் பின்பற்றினர். பாபா (கிருஷ்ணராக) பகவத் கீதையில், அழிவு ஏற்படாமல் இருக்க, பிரபஞ்சத்திற்காக, முன்னுதாரணமாக கர்ம வினையில் ஈடுபடும்போது அவர் கூட பற்றற்றவராக இருந்ததாகக் கூறினார்.

(கீதையின்) ஸ்லோகம்:

"யதி யதி ஆச்சரதி ஸ்ரேஷ்டஸ்..." - 'YAD YAD ACHARATHI SRESTAHS...' (ஒரு பெரிய மனிதர் கர்ம வினையாகச் செய்யும் எந்தச் செயலையும்... சாதாரண மனிதர்கள் பின்பற்றுகிறார்கள். முன்னுதாரணமான செயல்களால், அவர் எந்த அளவுகோலின் படி நிர்ணயித்தாலும், முழு உலகமும் அதைப் பின்பற்றுகிறது).

உலக மனிதன் கபடமற்றவனாக இருக்க முடியாது என்பதை பாபா நன்கு அறிவார். போலித்தனம் அதிகமாகப் பெருகியுள்ளது. உலக மனிதர்கள் கடவுளை நேசிப்பதாகப் பாசாங்கு செய்கின்றனர்; ஆனால் பாபா அடிக்கடி வலியுறுத்துவது போல், அவரை நேசிப்பது எளிதானது அல்ல.

பாபா கூறுவதற்கிணங்க, சடங்கு சம்பிரதாயங்கள் அழிக்கப்பட வேண்டும் என்று நாம் வாதிடுவதானால், நம்மில் சிலர் தற்காலத்தில் மிக எளிதாக ஒத்துக்கொள்கிறார்கள் - பாபா அதை அர்த்தப்படுத்தவில்லை என்றால் - அது நமக்கு மற்றொரு குற்றம் அல்லது குறையாக இருக்காதா?

நீண்ட, நெடிய கடிதம் வரைவதில் என்னையும் எனது கவலையையும் ஆதி மன்னிப்பார். அவதார புருஷர் அறியாதது எதுவுமில்லை, அவருக்கு எல்லாம் தெரியும், அவர்தான் என்னை எழுத வைத்தார், அன்புடன் பதிலளித்து நம் உள்ளுணர்வின் பார்வையை வழங்க வேண்டியதும் அவர்தான்.

இது மெஹர்ஸ்தானுடன் தொடர்புடையது என்பதால், நான் எனது சகோதரர் ஆதிக்கு இதை எழுதத் துணிந்தேன்; அதனால் அவர், பரமாத்மாவாகிய பாபாவின் முன்னிலையில், இந்த ஆத்மாவின் வேதனையை எடுத்துரைத்து, இந்த விஷயங்களைத் தெளிவுபடுத்துவதில் மகிழ்ச்சி அடைவார்; அவதார புருஷர் இப்போது நம் மத்தியில் பௌதீக

உடலில் இருப்பதால், எங்கள் அனைவருக்கும் உள்ளுணர்வுப் பார்வையை வழங்கி அவரது அன்பான செய்தியை அருள வேண்டுகிறேன்:

1. சடங்கு சம்பிரதாயங்கள் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டுமா?
2. மெஹர்ஸ்தான் பாபா மையத்தின் எதிர்வரும் திறப்புவிழாவில், ராமேஸ்வரத்தில் ஸ்ரீராமலிங்கேஸ்வரரை நிறுவியபோது, ஸ்ரீராமரின் அவதார காலகட்டத்தில் செய்ததற்கு இணங்க, ஸ்தாபன விழாவில் உயர்ந்தவர்களில் உயர்ந்தவரைப் புகழ்ந்து, வேத ஆராதனைகள் மொழிவதற்கு பாபா இணங்கவில்லையா?
3. பாபா சிலையை நிறுவுவதற்கான நடைமுறையை பரிந்துரைக்க வேண்டும். நாம் அனைவரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற அவரது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டாமா?
4. சிலை நிறுவிய பின்பு, வழக்கமான வழிபாடுகள் மற்றும் அனுதின செயல்பாட்டு முறைகளை பாபா பரிந்துரைக்க வேண்டாமா?

உங்கள் அன்புடன்,
பி.ராமலிங்கேஸ்வர ராவ்

எரச்சின் பதில் பின்வருமாறு:
மெஹராஸாத், அஹமதுநகர்
1 பிப்ரவரி 1963

என் அன்பு சகோதரரே,

ஜனவரி 19ஆம் தேதியன்று நீங்கள் வரைந்த கடிதம், பிரியமான பாபா முன்னிலையில் வாசித்து, உங்களுக்கு பதிலளிக்கும் நோக்கத்தில் அன்பு சகோதரர் ஆதி அவர்களால் எனக்கு அனுப்பப்பட்டது.

பாபா ஒரு வருடம் முழுவதும் அவருக்குக் கடிதப் போக்குவரத்துக்குத் தடை விதித்திருந்த போதிலும், தற்போது ஏகாந்தவாசம் தொடர்ந்த நிலையிலும், உங்கள் கடிதத்தை அவர் முன்னால் வாசிக்க என்னை அனுமதித்தார்; ஏனெனில், நீங்கள் உங்களை அவருடைய பிரியத்திற்கு உரியவராக்கி, 'பாபாவின் தனிப்பட்ட உதவியாளர்! (PERSONAL ASSISTANT)' என்று கூறிய ஒருவரிடமிருந்து வந்த கடிதம் இது.

சுற்றி வளைத்து பேசாமல், பாபாவிடமிருந்து நான் அடையப்பெற்ற குறிப்புகளின்படி, உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க முயற்சிப்பேன். உண்மையில், 'மெஹர் புக்கார்' (இந்தி இதழ்) - 1962 ஜனவரி-பிப்ரவரி வெளியீடு, பக்கங்கள் 27 முதல் 31 வரை படிக்கச் சொல்லி, உங்கள் நீண்ட கடிதத்திற்கு ஒரு சிறிய வாக்கியத்தில் பதிலளிக்கலாம். இருப்பினும், 1963 பிப்ரவரி 28 அன்று, மெஹர்ஸ்தானின் திறப்பு விழாவிற்காக அன்பான பாபா வழங்கிய எட்டு செய்திகளில் ஒன்றைக் குறிப்பிட்டு, நீங்கள் எழுப்பிய கேள்வியின் அடிப்படையில், உங்கள் நான்கு கேள்விகளுக்கும் நான் பதிலளிப்பேன்; பாபாவின் அந்தச் செய்தி கீழ்வருமாறு:

**“சடங்கு சம்பிரதாயங்களின் திரைச்சீலையை ஒட்டுமொத்தமாகக் கிழித்து எறிந்து விடுங்கள்; நானே வணங்கப்படுபவர், நானே வழிபாடு மற்றும் வழிபடுபவர் என்பதை நீங்கள் கண்டுகொள்வீர்கள்.”**

1) உங்கள் முதல் கேள்வி: சடங்குகள் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டுமா?

இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும் விதத்தில், அன்பான சகோதரரே, யுகத்தின் அவதார புருஷரான மெஹர் பாபா, தமது அன்பர்களின் உண்மையான வழிபாட்டுடன், யாகம், ஹோமம் போன்ற சடங்கு சம்பிரதாயங்கள் பின்னிப் பிணைவதை அவர் விரும்பவில்லை என்பதை நீங்கள் நம்ப வேண்டும் என்று விரும்புகிறார். பாபா, தமது அன்பர்கள் எப்பொழுதும் முறைசார்ந்த, வரையறுக்கப்பட்ட பழக்கவழக்கங்கள் அடிப்படையிலான பிரார்த்தனை செய்வதை விரும்பவில்லை. சம்பிரதாய அனுசரிப்பின் பேரில், கடந்த காலங்களில் உருவான துரு, நீண்ட காலமாகப் படிந்திருக்கும் எந்தவொரு முறைசார்ந்த சடங்கும் அவரது வழிபாட்டு இல்லத்தில் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது.

உண்மையான இறை வழிபாட்டுக் குரலைத் திணறடிக்கும் அளவுக்குக் கட்டுப்படுத்தும் சடங்கு சம்பிரதாயம் எனும் கயிற்றைத் துண்டிக்கும் நோக்கத்தில், இந்த யுகத்தின் அவதார புருஷராக மீண்டும் வருகை தந்ததாக பாபா அடிக்கடி வலியுறுத்திக் கூறினார்.

அன்பான பாபா மேலும் இதைத் தெளிவுற விளக்குகிறார்: கடவுள் மீதான அன்பு தன்னிச்சையாக வெளிப்படுத்தப்படும்போது, அது உண்மையில் அவரை வணங்குவதாகும்; மேலும் சில வேளைகளில் மலர் மாலைகள் அணிவிப்பது, பாடல்கள், பஜனைகள் பாடி ஆரத்தி நிகழ்த்துவது, பரவச நடனம் அல்லது தூசியில் உருண்டு புரளுவது போன்ற மற்றும் பலவற்றில் உண்மையான வழிபாட்டின் வெளிப்பாட்டைக் காணலாம். இத்தகைய வெளிப்பாடுகள் தன்னிச்சையானவை - முறைசார்ந்தவை அல்ல - இருந்தும் உயர்ந்தவர்களில் உயர்ந்தவரைப் போற்றிப் புகழும் போது, அவை கடவுளின் உண்மையான வழிபாட்டை உருவாக்குகின்றன; ஏனெனில் இது அவரை நேரடியாகச் சென்றடையும் தருவாயில் அவரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ஆனால் மனமானது, முறைசார்ந்த சடங்குகள் மற்றும் மாற்றத்தை விரும்பாத சம்பிரதாய வழிபாட்டு முறைகளின் வடிவங்களில், தன்னை வெளிப்படுத்தும் போது, அது ‘இதயத்தின்’ ஈடுபாடு இல்லாமல், தானாகவே நிகழ்த்தப்படும் எண்ணற்ற தலைமுறைகளின் பழக்கவழக்கத்தின் வெற்று எதிரொலியைத் தவிர வேறொன்றுமில்லை. அத்தகைய வழிபாடு அவரைச் சென்றடையாது என்று பாபா கூறுகிறார், ஆனால் வழிபடுபவர் அறியாமையின் பிடியில் மேலும் மேலும் பிணைக்கப்பட்டவராக இருக்கிறார்.

2) உங்களின் இரண்டாவது கேள்வி: ஸ்ரீராம அவதார காலகட்டத்தின் போது, ராமேஸ்வரத்தில் ஸ்ரீராமலிங்கேஸ்வரரை நிறுவியது போல,

மெஹர்ஸ்தான் மையத்தின் திறப்பு விழாவில், உயர்ந்தவர்களில் உயர்ந்தவரைப் புகழ்ந்து, வேத ஆராதனைகள் மொழிவதற்கு பாபா ஒப்புதல் வழங்குகிறாரா இல்லையா?

இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன்னர், அன்பிற்குரிய பாபாவின் சிலை நிறுவப்படக் கூடாது என்பதில் நான் முதலில் உங்கள் கவனத்தை ஈர்க்க வேண்டும், "ஆனால்" அந்தப் பிரியமான பாபாவின் 'அன்புள்ளம் கொண்ட மனித உருவம்' வெண்கலச் சிலையில் நிலைகொண்டு வாழ வேண்டும்.

திறப்பு விழாவிற்குப் பின்னர், உயந்தவர்களில் உயர்ந்தவரைப் புகழ்ந்து வேத கீர்த்தனைகளை மனமார, தாராளமாகப் பாடுவது மட்டுமல்லாமல், இஸ்லாமியர்கள் உயந்தவர்களில் உயர்ந்தவரைப் புகழ்ந்து குரானை ஓதுவதற்கும், கிறிஸ்தவர்களும் அவரையே புகழ்ந்து பாடுவதற்கும், முழு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். மேலும் ஸொராஸ்ட்ரியர்கள் தங்கள் மொனாஜத்துகளை மொழிவதற்கும், ஹரிஜனங்கள் தங்கள் பஜனைகளை சுதந்திரமாகப் பாடுவதற்கும் இடந்தரவேண்டும்.

உண்மையில், ராமர், ஸ்ரீ ராமலிங்கேஸ்வரரை வேத சடங்குகள் மற்றும் கீர்த்தனைகளைப் பாடுவதன் மூலம் நிறுவியிருக்கலாம், ஆனால் அவதார புருஷரின் எந்தச் செயலும், நாம் அதே செயலைச் செய்வது போல் எப்பொழுதும் இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள். பாபாவே அடிக்கடி நம்மிடம் சொல்வது போல: "நான் சொல்வதைச் செய்யுங்கள், செய்வது போல் அல்ல!"

மேலும், அவதார புருஷர் எதைச் செய்தாலும் (அவர் கடவுள் என்பதால்), அது சரியாகவே இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்படும் அவரது செயல்கள், எல்லா காலத்திற்கும் உரியதாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலும், ஒவ்வொரு தொடர்ச்சியான வருகையின் காலகட்டத்திலும், அவதார புருஷர் தமது முந்தைய செயல்பாடுகளுடன் இணைக்கப்பட்ட முறைகேடுகளை, அந்த நேரத்தில் அவற்றின் ஏற்புடைமையை வெளியளவில் மறுத்தாலும் கூட, அகற்றியாக வேண்டும்.

3) பாபா, சிலையை நிறுவுவதற்கான நடைமுறையை பரிந்துரைக்க வேண்டும். நீங்கள் அனைவரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற அவரது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

நீங்கள் பாபாவின் உருவச் சிலையை நிறுவப் போகிறீர்கள் என்ற தவறான எண்ணத்திலிருந்து இந்தக் கேள்வி எழுகிறது! பாபா கூறுகிறார், 'அன்புள்ளம் கொண்ட மனித உருவில்' இருக்கும் அவரே 'கடவுளின் உண்மையான சிலை', வேறு எந்த சிலையும் அந்த இடத்தில் இருக்க முடியாது - 700 ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது அடுத்த வருகையால் மட்டுமே அது மாற்றப்படும்! 'பிராண பிரதிஷ்டை' மூலமாக எத்தனை சடங்குகள் செய்தாலும், ஒரு சிலை உருவில் பாபாவின் உயிரை, அதனுள்

நிலைநாட்ட முடியாது! மெஹர்ஸ்தானில் இருப்பது பாபாவின் சிலை என்று நீங்கள் நினைக்கும் அந்த கணத்தில், பாபாவின் மீதான உங்கள் சுய நம்பிக்கை, பாபா மீதான உங்கள் சுய அன்பு மற்றும் பாபாவின் கட்டளைகளுக்கு உங்கள் சுய கீழ்ப்படிதல் ஆகியவற்றின் அடித்தளத்தை நீங்களே அழித்து விடுகிறீர்கள்! பாபாவின் வெண்கல உருவச் சிலையைத் தவிர, வேறு எங்கும் அவர் உளதாயிருப்பதை உணரத் தவறுபவர்கள் மட்டுமே, அன்பான பாபாவை மெஹர்ஸ்தானில் வெறும் சிலையாகவோ அல்லது தெய்வ உருவ வடிவமாகவோ காண்பார்கள்.

பாபாவை நேசிப்பவர்கள், மெஹர்ஸ்தானை 'உண்மையான வழிபாட்டு இல்லமாக' ஆக்க வேண்டும், அவர் மீதுள்ள தூய அன்பின் வெளிப்பாடாக, அதில் பிரியமான அவதார புருஷர் மெஹர் பாபாவின் பிரசன்னம் உள்ளது என்பதை உறுதியாக நம்ப வேண்டும், அவரது உருவச் சிலையை அல்ல.

உங்கள் மூன்றாவது கேள்விக்கான சுருக்கமான பதில் என்னவெனில், மெஹர்ஸ்தானில் அன்பான பாபா நிலைகொண்டிருப்பதை நீங்கள் உறுதியாக நம்ப வேண்டும், மேலும் பாபாவின் பிரசன்னத்திற்கு பதிலாக, வேத சடங்குகளால் 'புனிதப்படுத்தப்பட்ட' பாபாவின் உருவச் சிலையை நிறுவுவதற்கான அனைத்து எண்ணங்களையும் விரட்டியடிக்க வேண்டும்.

பிரியமான பாபாவின் வெண்கலச் சிலை, பிற்கால சந்ததியினருக்கு மெஹர்ஸ்தானில் பாபாவின் பிரசன்னத்தை நிலைநிறுத்த உதவும்.

4) உங்களின் நான்காவது கேள்வி: உருவச் சிலையை நிறுவிய பின்பு, தினசரி வழக்கமான வழிபாடு என்னவாக இருக்க வேண்டும்?

இதற்கு பதிலளிக்கும் விதத்தில், பாபா-அன்பர்கள் அனைவரும் மெஹர்ஸ்தானில் பாபாவே இருக்கிறார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நுழைந்தால் இந்தக் கேள்வி எழவே எழாது என்று சொல்ல வேண்டும். நீங்கள் அஹமதுநகர் அல்லது பூனாவில் உங்கள் பிரியமான பாபாவின் முன்னிலையில் இருக்கும்போது உங்கள் செயல்பாடு எப்படி இருக்குமோ, அப்படியே மெஹர்ஸ்தானிலும் இருக்க வேண்டும்.

மெஹர்ஸ்தானுக்குள் நுழையும் பாபாவின் எந்த அன்பரும் பாபாவின் பூஜாரி (அர்ச்சகர்) ஆவார்; ஒவ்வோர் அன்பரும் தன் இதயத்தின் கட்டளைப்படி, பாபாவின் மீதான அன்பை வெளிப்படுத்தும் முழு சுதந்திரத்தையும் கொண்டிருக்க வேண்டும். மெஹர்ஸ்தானில் நிலைகொண்டிருக்கும் பாபாவை யார் ஒருவரும் சுதந்திரமாக அணுக வேண்டும் மற்றும் ஜாதி, மதம், இன பாகுபாடு எதுவுமின்றி பாபா மீதான அன்பை வெளிப்படுத்தும் முழு சுதந்திரத்தையும் அனுமதிக்க வேண்டும். மெஹர்ஸ்தானில் பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிவதையும், அவரைப் புகழ்ந்து பாடுவதையும் விட சிறந்த வழிபாடு வேறு எதுவும் இருக்க முடியாது - மேலும் அவ்வாறு பாட முடியாதவர்கள் பாபாவின் செய்திகள் மற்றும் உரைகளை வாசிக்கலாம், திரும்பத் திரும்ப நினைவுகூரலாம், குருநாதருக்கான 'பர்வர்திகார்' பிரார்த்தனை மற்றும் மனம்

வருந்தி முறையிடும் இரங்கல் பிரார்த்தனை போன்றவற்றை மொழியலாம்; ‘உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்’, ‘மெஹர் பாபாவின் அழைப்பு’ போன்ற செய்திகளை உரக்கப் படிக்கலாம்; பாபாவைப் போற்றி, புகழ்ந்து பஜனைகளைக் கேட்கலாம்; அனைத்திற்கும் மேலாக, பாபாவின் முன்னிலையில் அமைதியாக அமர்ந்து, அனைத்து சகவாச மற்றும் சமீபத்திய கிழக்கு-மேற்கு சகவாச நிகழ்வுகள் அனைத்தையும் நினைவுகூரலாம்.

சுருக்கமாகச் சொன்னால், மெஹர்ஸ்தானில் பாபாவை வணங்குவதற்கு எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இருக்கக்கூடாது, மேலும் கடவுள் மீதான அன்பானது, உயர்ந்தவர் தாழ்ந்தவர், ஏழை, பணக்காரர் என்ற எந்தப் பிரிவினையுமின்றி, முழு வெளிப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். மெஹர்ஸ்தான் திறப்பு விழாவிற்கு அன்பான பாபா வழங்கிய அருமையான எட்டு செய்திகள், உண்மையான வழிபாட்டின் நெறிமுறையாகும். கொவ்வூரில் அமைந்த மெஹர்ஸ்தானில் வழிபடும் போது, கட்டாயத்தின் பேரில் உருவாக்கப்பட்ட முறைசார்ந்த, அல்லது வெறும் வழக்கமான நடைமுறைகள் எதையும் கடைப்பிடிக்கக்கூடாது.

இருப்பினும், மெஹர்ஸ்தான் மற்றும் அதை சூழ்ந்த பகுதிகளில் ஒழுக்கம், தூய்மை மற்றும் சுகாதாரமான நிலைமைகளைப் பராமரிக்க கடுமையான விதிகள் உருவாக்கப்பட்டு, அனைவருக்கும் தெரியும் விதத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். மெஹர்ஸ்தான் உடைமைகளை கவனிக்க ஒரு காவலாளி வேண்டும், ஆனால் வழக்கமான மற்றும் ஊதியம் பெறும் பூஜாரிகள் இல்லை, ஏனெனில் பாபாவின் அன்பர் ஒவ்வொருவரும் தனக்குள் ஓர் உண்மையான பூஜாரி.

இந்தக் கடிதம் மிகவும் நீளமாகிவிட்டது, உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் பதில்கள் கிடைத்ததில் நீங்கள் திருப்தி அடைவீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் கடிதத்தில் நீங்கள் எழுப்பிய கேள்விகள் மற்றும் அவ்வப்போது, அனைத்து ஞானமும், கருணையும் மிக்க அன்பான பாபா வழங்கிய குறிப்புகள் மூலம் நான் ஒன்றுதிரட்டிய விபரங்கள் அனைத்திலும் உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க முயற்சித்தேன். எனவே, அன்பான சகோதரரே, நீங்கள் முயற்சி செய்திருந்தால், உங்கள் கேள்விகளுக்கான பதில்களை ஆங்கிலம் மற்றும் இந்தியில் வெளியிடப்பட்ட பாபாவின் பல்வேறு இலக்கியங்களில் - ‘மெஹர் புக்கார்’, ‘பிரேம் மஹிமா’ மற்றும் ‘திவ்ய லீலா’ போன்றவற்றிலிருந்து அடையப் பெற்றிருப்பீர்கள்.

இப்போது இந்தக் கடிதம் உங்கள் கைகளை எட்டியுள்ளதால், கொவ்வூர், ஆந்திராவில் வாழும் அனைத்து பாபா அன்பர்களுடனும் இதன் உள்ளடக்கத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம், நீங்கள் அதை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார். இந்தக் கடிதத்தின் உள்ளடக்கங்களை ஸ்ரீ மற்றும் ஸ்ரீமதி கோடூரி கிருஷ்ணா

ராவ் ஆகியோருக்கு உண்மையாகவும், அதன் முழு வடிவத்திலும் விளக்க வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார்.

அன்பான பாபா உங்களுக்கும், உங்கள் குடும்பத்தில் மற்றும் அன்பான அனைவருக்கும் தனது அன்பை வழங்குகிறார்; மேலும் இந்தக் கடிதத்தின் உட்பொருளை கவனத்தில் கொண்டதை நீங்கள் பாபாவிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார்.

அன்புடன்,
எரச்

பாபாவின் தனித்துவம் மிக்க தெய்வீக லீலைகள், சடங்கு சம்பிரதாயங்களின் முகத்திரையை கிழித்தெறிந்தது; அவர், நௌரங்கா, ஹமிர்பூரில் அமைந்த 'மெஹர் தாம்' (MEHER DHAM) மற்றும் ஆந்திராவின் கொவ்வூரில் அமைந்த 'மெஹர்ஸ்தான்' (MEHERSTHAN) ஆகியவற்றை தனது ஊடகமாகப் பயன்படுத்தினார். கொள்கைகள், கோட்பாடுகள் இல்லாத நிலையில், மெஹர் பாபா, மனிதகுலம் கடவுளுக்கு அன்பான மற்றும் நேர்மையான வழிபாட்டை வழங்குவதற்கான வழியைக் கோடிட்டுக் காட்டினார்; மேலும் எரச் எழுதியதை ராமலிங்கேஸ்வர ராவ் முழுமையாக ஏற்றுக்கொண்டார். மெஹர் தாம் மற்றும் மெஹர்ஸ்தான் நிறுவப்பட்டதன் மூலம், உண்மையான வழிபாடு என்றால் என்ன என்ற விழிப்புணர்வை மக்கள் அடையப் பெற்றனர்; மேலும் அவர்களின் பாரம்பரிய கோட்பாடுகள், மத நெறிகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தும் படிப்படியாக கைவிடப்பட்டன. சடங்கு சம்பிரதாய நடைமுறைகளின் பயனற்ற தன்மையும், ஆன்மீகப் பாதையின் யதார்த்தத்தையும் உள்ளூர உணர்ந்தனர்.

கொவ்வூரில் மெஹர்ஸ்தான் திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த வேளையில், அஹமதுநகர் மையத்தின் உறுப்பினர்களிடையே - குறிப்பாக ரங்கோலே, சகன், ஸில்லா காக்கு மற்றும் லதா - கருத்து வேறுபாடுகள் உருவாயின. பாபாவின் ஏகாந்தவாசம் தொடர்ந்தாலும், அவர் சம்பந்தப்பட்ட அனைவரையும், 1963 ஜனவரி 27 அன்று மெஹராஸாத்திற்கு அழைத்தார். பால் நாத்துவும் அன்றைய தினம் வந்திருந்தார். அவர்கள் வந்த வேளையில், ராமலிங்கேஸ்வர ராவ், பாபாவிற்கு எழுதிய கடிதத்தை எரச் படித்துக் கொண்டிருந்தார். எரச் எழுதிய பதில் கடிதத்தின் முதல் கட்ட வரைவு இரண்டையும் பாபா அவர்களிடம் வாசித்துக் காட்டினார். ராமலிங்கேஸ்வர ராவிற்கு தனது கருத்துக்களைத் தெளிவுபடுத்திய பாபா பின்வருமாறு கூறினார்:

**எனக்கும், வேத சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் முறைசார்ந்த பழக்க வழக்கங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மெஹர்ஸ்தானில் வாழும் என் அன்பர்கள் பஜனை கீர்த்தனைகள் செய்து, மகிழ்ச்சியில் நடனமாடி, அவர்கள் விரும்பினால், மண்ணில் உருண்டு புரளுவதையும் நான்**

**விரும்புகிறேன்! ஒருவர் தனது சொந்த பிரார்த்தனையைக் கூட மொழியலாம். ஆனால் எனது வழிபாட்டு இல்லத்தில் பழமையான வேத மந்திரங்கள் ஓதப்படுவதையோ, முறைசார்ந்த சடங்குகள் எதுவும் நடைபெறுவதையோ நான் விரும்பவில்லை. மெஹர்ஸ்தானில் 'திறப்பு விழாவிற்கான தினமாக' இருப்பதற்கு பதிலாக அது 'வரவேற்பு தினமாக' இருக்க வேண்டும். பாரம்பரிய கோட்பாடுகள், மத நெறிகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தையும் ஒழிப்பதற்காகவே நான் வந்துள்ளேன் என்றும், எல்லா மதங்களுக்கும் மேலானவன் என்றும் முன்னரே பலமுறை அறிவித்திருக்கிறேன்!**

பாபா, தமது அஹமதுநகர் அன்பர்களில் யார் கொவ்வூருக்குச் செல்கிறார்கள் என்று விசாரித்தார். சுமார் ஆறு பேர் செல்லவிருப்பதாகக் கூறினார்கள். ருஸ்தம் காக்காவும் செல்ல விரும்பினார், ஆனால் பாபா அவரது உடல்நிலை குறித்து கவலை தெரிவித்தார். அவர், அங்குச் செல்வதில் எவ்வளவு ஆர்வத்துடன் இருந்தார் என்பதைப் பார்த்த பாபா, பயணம் மேற்கொள்வது கடினமாக இருக்கும் என்பதை அறிந்திருந்தும், அவருடைய செலவுகளுக்கான பணத்தை வழங்க முன்வந்தார். சகன், டாக்கே, பகீரத், கோகிலா, ரங்கோலே, ருஸ்தம் காக்கா, ஸில்லா காக்கு, மானேக், வாமன் மற்றும் மாந்தரே ஆகியோரை கொவ்வூருக்குச் செல்லுமாறு பாபா அறிவுறுத்தினார். **"மெஹர்ஸ்தான் திறப்பு விழாவிற்கு ஆதி, மஹாராணி ஷாந்தாதேவி ஆகியோரை எனது பிரதிநிதிகளாக அனுப்புகிறேன், பூனா மற்றும் மும்பையிலிருந்தும் சில அன்பர்கள் செல்ல உள்ளனர். எனவே நீங்களும் சென்று இந்தக் காதல் விருந்தில் கலந்துகொள்ளுங்கள்"** என்று கூறினார்.

அவர்களுக்கிடையே உருவான கருத்து வேறுபாடுகளைக் குறித்து பாபா இவ்வாறு அவதானித்தார்:

**ஆந்திரா மற்றும் ஹமிர்பூரில் நிறுவப்பட்ட எனது ஏராளமான மையங்கள், எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதைப் பாருங்கள். இந்த இரண்டு இடங்களும் இந்தியாவில் எனது பணியின் முக்கிய களங்களாகும்; இதன் தீ அதீத வேகத்தில் பரவுகிறது. ஆரம்பத்தில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்திருந்தாலும், இப்போது அவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் செயல்படுகிறார்கள். ஆந்திராவில் சமீபகாலமாக, அனைத்து மையங்களையும் நிறுவகிப்பதற்கான சாசனத்தை உருவாக்கி, ஒரு மாநில அமைச்சர், கமிஷனர் மற்றும் ஓய்வுபெற்ற ஆட்சியர் ஆகியோர் ஆர்வமுடன் பணியில் ஈடுபட்டு உதவி வருகின்றனர்.**

**அவர்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் ஒத்துழைத்து செயல்பட முயற்சி செய்கிறார்கள். ஆனால் எனக்கு மிகவும் அருகாமையில் இருந்தும், நீங்கள் அனைவரும் உங்களுக்குள் மோதிக்கொள்வது ஆச்சரியமாக இருக்கிறது! நீங்கள் அனைவரும் அயராது, உண்மையாகவும், நேர்மையாகவும் உழைக்கிறீர்கள். பின்னர் ஏன் உங்களுக்குள் இந்த சலசலப்புகள்?**

**ராமகிருஷ்ணனைப் பாருங்கள், பூனா மையத்தை இப்போது எவ்வளவு அருமையாக நடத்துகிறார். கடுமையாக உழைத்து தினமும் நள்ளிரவுக்குப் பிறகு நன்றாகத் தூங்கிவிடுவார். ஆரம்பத்தில் அவர்களுக்குள் பல சச்சரவுகள் இருந்ததால், ஒவ்வொரு வருடமும் நான் அவர்களிடம் விஷயங்களை விளக்க வேண்டியிருந்தது. ஆனால் இப்போது அனைத்தும் நன்றாக நடைபெறுகிறது.**

**மையத்தின் நலனுக்காக உங்களால் இணக்கமாகப் பணிபுரிய முடியாவிட்டால், அதை மூடிவிடுவது நல்லது. நீங்கள் இணக்கமாகவும், சகோதரத்துவ மனப்பான்மையுடனும் ஒத்துழைக்க முடியாத வரை, உங்கள் பணி, பணியாக இருக்காது, வெறும் வெளிப்புற காட்சியாகவே இருக்கும்!**

பாபா ஒவ்வொருவரிடமும் தன் இதயத்தைத் திறந்து நேர்மையாகத் தனது மனக்குறைகளை அவர் முன் வைக்குமாறு அழைத்தார். டாக்கே குறை கூறி முறையிட்டார்: "ரங்கோலேயின் நடத்தை மிகவும் விவேகமற்றது, இது புது நபர்கள் மீது மோசமான அபிப்பிராயத்தை உருவாக்குகிறது."

அந்த விமர்சனத்திற்கு செவிமடுத்த ரங்கோலே, டாக்கேயிடம் கேட்டார், "நான் எந்த விதத்தில் ஞானமற்றவன்?"

"அடுத்த நாள் அந்தப் பேச்சாளரை நீங்கள் பேச அனுமதிக்கவில்லை!"

ரங்கோலே விளக்கமளித்து கூறினார்: "பாபா, அன்றைய நிகழ்ச்சி, ஏற்கனவே திட்டமிடப்பட்டு விட்டது; ஒருவர் உரை நிகழ்த்த இருந்தார், அதற்கு நடுவில், டாக்கே வேறொரு பேச்சாளரை அழைத்து வந்தார். நான் அவரை விரிவுரை வழங்க அனுமதித்திருந்தால், முதல் மனிதர், அவரும் புதியவர் என்பதால் அது அவரது உணர்ச்சிகளைப் புண்படுத்தியிருக்கும்."

பாபா உடனே இவ்வாறு கூறினார்: "**ரங்கோலே சொல்வது சரிதான். நீங்கள் மையத்தின் விதிமுறைகளுக்கு இணங்கி செயல்பட வேண்டும், ரங்கோலே சொல்வது போலச் செய்ய வேண்டும்.**"

அதைத் தொடர்ந்து, சகன், ரங்கோலேயைப் பற்றியும், மாந்தரே, சகன் மீதும் குறை கூறி முறையிட்டனர். பாபா இடையே குறுக்கிட்டு எடுத்துரைத்தார், "**ரங்கோலே செயலாளராக இருப்பதை பெரும்பான்மையினர் ஏற்கவில்லை என்றால், அவரை நீக்கிவிட்டு வேறு ஒருவரைத் தேர்ந்தெடுக்கவும்.**"

சகன் கூறினார், "ரங்கோலே கடினமாக உழைக்கிறார், ஆனால் அவர் தனது மனப்போக்கையும், அணுகுமுறையையும் மாற்றிக்கொள்ள வேண்டும்."

பாபா, ரங்கோலேயிடம் கூறினார், "**செயலாளராக உங்கள் பொறுப்பு அதிகரித்துள்ளது. நீங்கள் மிகவும் பணிவாக இருந்து, அனைவரின் பாத அணிகளையும் உங்கள் தலையில் சுமக்க வேண்டும்!**"

வாமன் படாலே இவ்வாறு எடுத்துரைத்தார்: "பாபா, மையத்தின் பணியைப் பொறுத்தவரை உண்மையில் எந்தச் சண்டை சச்சரவும் இல்லை. ஒரே ஒரு தவறான புரிதல் உள்ளது. மையத்தை நடத்துவதற்காக மக்கள் பங்களிப்பதில்லை, மேலும் ரங்கோலே அவர்களை உதவிக்காக அடிக்கடி அணுக வேண்டிய சூழ்நிலை, சில சமயங்களில் அவரை வருந்தச் செய்கிறது."

எனவே, '**உறுப்பினர்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையை நன்கொடையாக வழங்க வேண்டும்**' என்று பாபா தீர்மானித்தார். '**மையத்தின் விவகாரங்களில் ஆதியின் ஈடுபாடு இருக்கும் வரை, அவர்கள் எழுப்பிய கருத்து வேறுபாடுகள் அனைத்தும் மேலோட்டமானதாக இருப்பதால், நாளடைவில் பிரச்சினைகள் உருவாகும் வாய்ப்பில்லை**' என்று அவர் குறிப்பிட்டார்.

இறுதியாக, போலி துறவிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது குறித்து அறிவுறுத்தினார்; இந்த நேரத்தில் வட இந்தியாவிலும், பிற இடங்களிலும், முன்னர் அவரது தொடர்பில் இருந்த நான்கு நபர்கள், பாபா அன்பர்களை அவரது பெயரில் ஏமாற்றி, அவரது பொறுப்பாளர் என்று கூறி வருகின்றனர். அத்தகைய நபர்களின் செயல்பாடுகள் குறித்து தனது அதிருப்தியை வெளிப்படுத்திய பாபா, துக்காராமின் இந்த மராட்டி ஈரடிக் கவிதையை மேற்கோள் காட்டினார்:

**"நீண்ட முடியும், திருநீறு படிந்த உடல்களும் கொண்டவர்,**
**பல்வேறு வேடங்களில் பல மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர்;**
**நேர்மையற்ற மனசாட்சியை எரித்து,**
**அவர்களைத் துன்புறுத்துவதில்**
**எந்தப் பாவமும் இல்லை" என்று துக்காராம் கூறுகிறார்**.

பிரேம்-கிரிஜா கில்னானி தம்பதியினருக்கு இடையே நிலவிய தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளையும் பாபா தீர்த்து வைத்தார். கூட்டம் நிறைவடைந்ததும், அன்பர்கள் தத்தமது இல்லங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

எந்த 'முன்னறிவிப்புமின்றி' அன்று மதியம், பார்வையாளர் ஒருவர் வந்தார்; பெயர் ஷியாவுக்ஸ் கோல்வாலா (SHIAVUX GOLWALA). அவர் பஞ்ச்கணி பார்சி உயர்நிலைப் பள்ளியில் (PANCHGANI PARSI HIGH SCHOOL) பயின்ற நாட்களிலிருந்து, ஆதி சீனியரின் பழைய பள்ளிக்கூட வகுப்புத் தோழராக இருந்தார். அவர் மும்பைக்கு வெளியே சுமார் 80 மைல் தொலைவில் அமைந்த தஹானு (DAHANU) புறநகர் பகுதியில் வசித்து வந்தவர், பல ஆண்டுகளாக அந்த இடத்தை விட்டு வெளியே செல்லவில்லை. கோல்வாலா பாபாவிடம் வந்தபோது, 1926இல் பாபா அவருக்கு வழங்கிய சித்திரம் பதித்த லாக்கெட்டை அணிந்திருந்தார். அதற்குப் பின்னர் அவர் பாபாவைப் பார்க்கவில்லை, அல்லது அவரையோ, மண்டலியையோ தொடர்பு கொள்ளவில்லை என்றாலும், மெஹர் பாபாவைப் பார்க்கும் தவிர்க்க முடியாத ஆர்வத்துடன் இருந்தார். பாபாவை சந்திக்க எவரேனும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று அவர் பலரிடம் கேட்டுக்கொண்டாலும், அவரது வயது மற்றும் பலவீனமான உடல்நிலை காரணமாக எவரும் அவ்வாறு செய்யத் தயாராக இல்லை.

அருகில் தங்கியிருந்த இரண்டு பார்சி இளைஞர்கள், சாய்பாபாவின் சமாதிக்கு அஞ்சலி செலுத்த ஷிர்டிக்குச் செல்ல இருந்தனர். அவர்கள் அந்த முதியவர் மீது இரக்கம் கொண்டு, அவரை அஹமதுநகரிலிருந்து 35 மைல் தொலைவில் அமைந்த ஷிர்டிக்கு அழைத்துச் செல்ல முன்வந்தனர். முதியவர்

மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாலும், அவர்கள் ஷிர்டிக்கு வந்து மரியாதை செலுத்தியவுடன், இரண்டு இளைஞர்களும் தஹானுவிற்குத் திரும்பிச் செல்ல முடிவு செய்ததாக முதியவரிடம் கூறினர். சீற்றமடைந்த முதியவர், அவர்கள் அவரை மெஹர் பாபாவிடம் அழைத்துச் செல்ல உறுதியளித்ததாகக் கூறி, ஷிர்டியில் உயிரைத் துறக்க நேரிட்டாலும், அவர் அங்கிருந்து அசையப் போவதில்லை என்றும் கூறினார்!

முதியவர் பிடிவாதமாக இருந்ததை அந்த இளைஞர்கள் உணர்ந்தனர், எனவே அவர்கள் அவரை அஹமதுநகருக்கு அழைத்து வந்து, குஷ்ரு குவார்ட்டர்ஸில் ஆதியை சந்தித்தனர். ஆதி அவர்களை மெஹராஸாத்திற்கு அனுப்பிவைத்தார்; ஆனால் அவர்கள் மதியம் வந்தபோது, பாபா மதிய உணவிற்காகச் சென்றிருந்தார். அலோபா அவர்களை சந்தித்து, பாபாவை இப்போது பார்ப்பது சாத்தியமில்லை என்றும், நான்கு மணிக்குத் திரும்பி வருமாறும் கூறவே, அவர்கள் அஹமதுநகருக்குத் திரும்பிச் சென்றனர்.

ஆனால் அன்று மதியம், 2:00 மணிக்கு மண்டலி மண்டபத்திற்கு வந்த பாபா, முதியவரைப் பற்றி கேள்விப்பட்டதும், அவர்களைத் திருப்பி அனுப்பிய (அலோபா, பாபாவின் நிலையான அறிவுறுத்தலின்படி நடந்து கொண்டிருந்தாலும்) அலோபா மீது அவர் மிகுந்த அதிருப்தியை வெளிப்படுத்தினார். அலோபா, “பாபா, உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்பது உங்கள் உத்தரவு, எனவே நான் அவர்களை நான்கு மணிக்குத் திரும்பி வரச் சொன்னேன்” என்றாலும், பாபாவின் சினம் தணிந்தபாடில்லை; மேலும் அவர்களின் கவனக்குறைவை எண்ணி, இரண்டு மணிநேரம் அனைவரையும் கடுமையாக வசைபாடினார். பாபா கவலையுடனும் அமைதியற்றவராகவும் தோன்றி, அந்த நபர் திரும்பி வருவாரா என்று மண்டலியிடம் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டிருந்தார்.

மூவரும் நான்கு மணியளவில் திரும்பி வந்தனர், கோல்வாலா, பாபாவின் பாதங்களில் விழுந்து மகிழ்ச்சியில் அழுதார். பாபா அவரை ஆரத்தழுவி, அவரைப் பார்த்ததில் மிகுந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். பாபா அந்த முதியவரைத் தம் அருகில் ஒரு நாற்காலியில் அமர வைத்து, அவரைப் புறப்பட அனுமதிப்பதற்கும் முன்னர் அவருடன் சிறிது நேரம் உரையாடினார்.

அந்த முதியவருடன் வந்த இரு இளைஞர்களும் பாபாவின் பாதங்களை வணங்கி, “நாங்கள் அவரை இங்கு அழைத்து வருவதாக இல்லை என்றாலும், நாங்கள் வந்து உங்களை தரிசனம் செய்ததே எங்களின் மிகப் பெரிய அதிர்ஷ்டம்” என்று ஒப்புக்கொண்டனர். ஆழ்ந்த பயபக்தி நிறைந்த அந்த இரண்டு தோழர்களும், பாபாவின் அன்பால் வெகுவாக ஈர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் பாபாவிடம் கூறினார், “அவரை இங்கு அழைத்துவர யார் ஒருவரும் இணங்காத போதிலும், உங்களைப் பார்க்க வருவதில் சிறிதும் மனந்தளராமல் இருந்தார். இப்போது நீங்கள் ஏகாந்தவாசம் மேற்கொண்டாலும், அவர் மூலம், நாங்களும் உங்கள் ஆசீர்வாதத்தையும், தரிசனத்தையும் பெற்றுக்கொண்டோம்.”

கோல்வாலா புறப்படும்போது, பாபாவைத் தட்டிக்கொடுத்து இவ்வாறு கூறினார்: "ஆசீர்வாதங்கள் பாபா. நீங்கள் நீண்ட காலம் வாழ்வீர்களாக! இந்தப் பணிக்காகவும் - உங்கள் குழந்தைகளாகிய எங்கள் அனைவருக்காகவும், நீங்கள் நீடூழி வாழ்வீர்களாக! நீங்கள் ஒருவரே இந்த உலகத்தின் இரட்சகர் மற்றும் நம்பிக்கையின் ஆதாரமாகத் திகழ்பவர்!"

அவர் எரச் மற்றும் சில மண்டலியைத் தழுவி, "அவரை (பாபாவை) பூவைப் போலப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்கள் உயிரை விட அவரை, உங்களுக்குப் பிரியமானவராக ஆக்குங்கள். அவரை சிறப்பாக கவனித்துக் கொள்ளுங்கள், அவருக்கு நன்றாக சேவை செய்யுங்கள், ஏனெனில் அவரே பிரபஞ்சத்தின் அதிபதி (மாலிக்) - அவருக்கு சேவை செய்வதன் மூலம் நீங்கள் அனைவரும் என்றென்றும் வாழ்வீர்கள்."

சில மண்டலி கண்கலங்கி அழுதது மனதைத் தொடும் காட்சியாக இருந்தது.


பாபா அந்த முதியவர் வந்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்; அவர் புறப்பட்டுச் சென்ற பின்பு மண்டலியிடம் கூறினார், "**இதோ இங்கே ஒரு மனிதர் எதையும் கேட்க வரவில்லை, ஆனால் எனக்கு அன்பையும், உலகிற்கு ஆசீர்வாதத்தையும் வழங்குவதற்காக வந்தார். இதுகாறும், எவரேனும் என்னை ஆசீர்வதிப்பார் என்று பல ஆண்டுகளாக நான் காத்திருந்தேன், கடைசியாக இன்று அந்த வயதான பார்சி அதைச் செய்தார்!**"

அந்த மனிதர் அன்பின் கண்ணீருடனும், ஆழமான நேர்மையுடனும் பேசினார், அதற்குப் பிறகு பாபா பெண்மணிகளிடம் கூறினார், "**முதியவரின் பிரார்த்தனை நிறைவேற வேண்டும், ஏனெனில் அது அவருடைய ஆழ் இதயத்திலிருந்து வந்தது, கடவுள் அதற்கு செவிமடுத்தாக வேண்டும்!**"

அஹமதுநகரின் பிரபல திரைப்பட நடிகரான ஷாஹு மோடக், (SHAHU MODAK, 45), 1963 பிப்ரவரி 1 அன்று மெஹராஸாத்தில் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, பிப்ரவரி 3 ஞாயிறு அன்று, மஹாராணி ஷாந்தாதேவி, ஆதியுடன் காலை 9:40 மணிக்கு வந்தார். பாபா நல்ல மனநிலையில் காணப்பட்டார், 'மெஹர்ஸ்தான் திறப்பு விழா' தொடர்பான விளக்கங்களையும், வழிமுறைகளையும் அவர்களுக்கு வழங்கி, ஷாந்தாதேவியிடம், "**உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுங்கள்**" என்று அறிவுறுத்தினார்.

ஹமிர்பூரைப் பற்றி ஷாந்தாதேவி பேசுகையில் இவ்வாறு கூறினார்: "மெஹர் தாம் திறப்பு விழாவிற்கு நான் சென்றிருந்தபோது, எனது சொந்த சாம்ராஜ்ஜியத்தில் இதுவரை எனக்கு வழங்கப்படாத வரவேற்பு வழங்கப்பட்டது. அங்கே உங்கள் அன்பர்களின் அன்பு அளப்பரியது, பாபா."

"**குருபிரசாத்தைப் போலவே நீங்களும் என்றென்றும் நீடூழி வாழ்வீர்கள்!**" என்று பாபா அவருக்கு உறுதியளித்தார்.



மஹாராணி ஷாந்தாதேவி, மெஹராஸாத், **1963**
(MAHARANI SHANTADEVI, MEHERAZAD,1963)

பாபா, மஹாராணி ஷாந்தாதேவியிடம் திரும்பத் திரும்ப கூறினார்: **“நான் என் இறை வார்த்தையைப் பேசி, என் அன்பானவர்களையும், உலகையும் அவரவர் திறனுக்கு ஏற்ப, என் அருளை அடையப்பெறச் செய்யும் வரை, எனது மேலங்கியை** (தாமன்), **தொடர்ந்து பற்றிக்கொள்ளுங்கள்.”**

அவருக்கு பாபா உறுதியளித்தார், **“நீங்கள் என் உண்மையான இறை ஒளியைக் காண்பீர்கள்.”**

ஷாந்தாதேவி மாலை 4:00 மணி வரை பெண் மண்டலியுடன் இருந்து, பின்பு பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

அடுத்த நாள் ஸொராப்ஜி ஸிகன்போரியா, கிஷின்சந்த் கஜ்வானி, கோர்ஷெத் ஆகியோர் மும்பையிலிருந்து வந்தனர். ஜபல்பூர் நகரிலிருந்து பங்க்ராஜ் என்பவரும் வந்தார். ஸிகன்போரியா, கஜ்வானி இருவரும் பாபாவிற்கு அன்பளிப்பாக ஏராளமான இனிப்புகள் மற்றும் பழங்களை கொண்டு வந்தனர், அதே நேரத்தில் பங்க்ராஜ் ஒரு சில அத்திப்பழங்களை மட்டுமே கொண்டு வந்தார்.

பங்க்ராஜை கேலி செய்து, பாபா அவரிடம், **“என்னை ஒரு கோவிலில் நிலைகொள்ள வைத்திருக்கும் சிலை என்று எண்ணி இந்த நைவேத்தியத்தைக் கொண்டுவந்தீர்களா? இத்தனை காலம் என்னுடன் தங்கியிருந்த பைதூல் போன்றவர்கள், அனைவருக்கும் பகிர்ந்தளிக்க முடியாத உங்கள் அத்திப்பழங்களைப் பார்த்து மிகவும் எரிச்சலடைகிறார்கள். எனவே அவர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்!”**

கஜ்வானி, பாபாவுடன் நிரந்தரமாக வாழும் விருப்பத்தை வெளிப்படுத்திய போது பாபா கூறினார், **“என்னுடன் இருப்பது மிகவும் கடினம். எனது அன்றாட கட்டளைகளை நிறைவேற்றுவது சாத்தியமற்றது. இது உங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது!”**

“நான் தயாராக இருக்கிறேன், பாபா,” கஜ்வானி பதிலளித்தார்.

**“சரி. மார்ச் 31 அன்று பூனாவில் என்னைப் பாருங்கள், அப்போது நான் அதை முடிவு செய்கிறேன்.”**

பாபா அவர்களைப் பலமுறை எச்சரித்தார், ‘**பொய்யும் போலியுமான பாசாங்குத்தனம் நிறைந்த துறவிகளைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; இந்தப் புனிதர்கள் என்று அழைக்கப்படும் நபர்களைத் தரிசனம் செய்ய வேண்டாம், அவரது தாமனை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள்**’ என்றும் அவர்களுக்கு வலியுறுத்திக் கூறினார். பாபாவின் வார்த்தைகளால் மிகவும் ஈர்க்கப்பட்ட ஸிகன்போரியா, கஜ்வானி, பங்க்ராஜ் ஆகியோர் அங்கிருந்துப் புறப்பட்டுச் சென்றனர்.

நோஷிர் ஈரானி 4ஆம் தேதி வந்து, மறுநாள் காலையிலும் மெஹராஸாத் திரும்பி வந்தார்.

1963 பிப்ரவரி 10 ஞாயிறு அன்று, ஆதி, மெஹர்ஜி, லதா, ருஸ்தம் காக்கா, ஸில்லா காக்கு, பாஸ்கர், சகன், டாக்கே ஆகியோரை பாபா சந்தித்தார். அன்று மதியம் பூனாவைச் சேர்ந்த விஷ்ணு சவான் குடும்பத்துடன் வந்தார்.

பிப்ரவரி 15ஆம் தேதி, பாபா மற்றும் மெஹராஸாத்தில் வாழும் அனைவரும் பெஹராம், ஜெஹாங்கு எடுத்த இரண்டு காணொளி படங்களைப் பார்த்தனர்: ஒன்று 1962 கோடையில் குருபிரசாத்திலும், மற்றொன்று கிழக்கு-மேற்கு சகவாசத்திலும் காணொளி படமாக்கப்பட்டது. அதற்கான கருவிகளையும், கையடக்க மின்னியக்க மோட்டாரையும் கொண்டுவந்து, அனைத்து ஏற்பாடுகளும் ருஸ்தம் காக்காவின் கண்காணிப்பில் நடந்தது. துரதிர்ஷ்டவசமாக, மின்காப்பு எரியிழை (FUSE) உருகிப்போகவே, ருஸ்தம் அஹமதுநகரிலிருந்து இன்னொன்றை எடுத்துவந்து நாற்பத்தைந்தே நிமிடங்களில் சரி செய்தார்.

1963 பிப்ரவரி 17 அன்று, கில்னானி குடும்பத்தினர் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். அன்றைய தினம் மெஹர்ஜியும், ஜெஹாங்கு ஸுகத்வாலாவும் வந்தனர். கிஷன் ஸிங், கடந்த 20ஆம் தேதி மெஹராஸாத் வந்து, அந்த இரவைக் கழித்தார். அன்று பாபாவிற்கு கடுமையான வயிற்று வலி ஏற்பட்டதால் டாக்டர் டான் வரவழைக்கப்பட்டார்.

யோகி ஷுத்தானந்த பாரதி (YOGI SHUDDHANANDA BHARATI) 'ஸைலண்ட் ஸ்ப்ளென்டர்' (SILENT SPLENDOUR) என்ற தலைப்பில் ஒரு சிறு புத்தகத்தை வெளியிட்டு, அதற்காக பாபாவிடம் ஒரு செய்தியைக் கோரினார். பிப்ரவரி 21 அன்று, பாபா அவருக்கு தொலைத்தந்தி மூலம் கீழ்வரும் செய்தியை அனுப்பினார்:

**உங்கள் சிறு புத்தகத்திற்கான எனது செய்தி பின்வருமாறு: என் மீதான உங்கள் அன்பு 'ஸைலண்ட் ஸ்ப்ளெண்டர்' புத்தகத்தில் ஒளிர்கிறது. நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, என் இறை வார்த்தையின் சிறப்பை உள்வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கும் விதத்தில், இந்தப் புத்தகத்தைப் படிக்கும் அனைவருக்கும் உதவியாக இருக்கும் என்று ஆதிகால புருஷரான நான் என் ஆசிகளை வழங்குகிறேன்.**

ஸர்தார் ராஸ்தே (SARDAR RASTE) 1963 பிப்ரவரி 22 அன்று மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தார்; அர்னவாஸ், நரிமன், ஜிம் மூவரும் அடுத்த நாளும், காரி-ஜோஸஃப் ஹார்ப் இருவரும் பாபாவின் பிறந்தநாளுக்கு மறுநாள் 26ஆம் தேதியும் அவரை சந்தித்தனர்.

1963 பிப்ரவரி 25ஆம் தேதி திங்கட்கிழமை, தமது 69ஆவது பிறந்தநாளைக் கொண்டாட வேண்டாம் என்று பாபா தமது அன்பர்களுக்கு அறிவுறுத்தி இருந்ததால், அது எங்கும் கொண்டாடப்படவில்லை; சிறப்புச் செய்தியும் வழங்கப்படவில்லை. ஆனால் பாபாவின் அன்பர்கள் ஒரு வாழ்த்துத்

தொலைத்தந்தி, தபால் அட்டை அல்லது கடிதம் அனுப்ப அனுமதிக்கப்பட்டனர்; ஆதலால் அஹமதுநகர் தபால் அலுவலகம் முழுவதும் அவற்றால் நிரம்பி வழிந்தது. இந்தியா மற்றும் உலகம் முழுவதிலுமிருந்தும் தபால்கள் வந்து குவிந்த வண்ணம் இருந்தது; தந்தி அலுவலகம் தொலைத்தந்திகளின் தாக்குதலைச் சமாளிக்க, ஒரு வாரத்திற்கு, மேலதிகமான ஊழியர்களை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இரவும் பகலும் தந்தி தட்டச்சு இயந்திரம் 'மெஹர்பாபா'வுக்காகச் செய்திகளை அச்சடித்துக் குவித்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு நாளும் பாபா அவை வாசிக்கப்பட்டதைக் கேட்டார், ஆனால் அதன் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால், அவை அனைத்தையும் படித்து முடிக்க பல நாட்கள் ஆனது.

பிப்ரவரி 27 அன்று, கோடூரி கிருஷ்ணா ராவிற்கு பாபா கீழ்வரும் செய்தியை அனுப்பினார்:

**என் மீதான உங்கள் அன்பில் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். பிப்ரவரி 28ஆம் தேதி, மெஹர்ஸ்தான் திறப்பு விழா நிகழ்ச்சிக்காக கொவ்வூரில் கூடும் என் அன்பர்களின் அன்பு, மெஹர்ஸ்தானை எனது பிரசன்னத்தால் நிரப்பும், ஏனெனில் என் அன்பர்கள் இருக்கும் இடத்தில் நான் இருக்கிறேன். மெஹர்ஸ்தானுக்கும், என்னை வரவேற்க கொவ்வூருக்கு இந்தப் புனித யாத்திரையை மேற்கொண்ட அனைவருக்கும் எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

ஆந்திராவில் 1963 பிப்ரவரி 28 வெள்ளிக்கிழமை அன்று காலை 7:00 மணிக்கு, மஹாராணி ஷாந்தாதேவி, மெஹர்ஸ்தானின் நுழைவாயிலில் கட்டப்பட்டிருந்த ஏழு வண்ண நாடாவை வெட்டியதன் மூலம், மெஹர்ஸ்தான் மையம் பொதுமக்களுக்கென திறந்து வைக்கப்பட்டதாக அறிவித்தார். பாபாவின் ஆளுயர வெண்கலச் சிலையைத் திறந்து வைத்து ஷாந்தாதேவி உரையாற்றினார். பின்னர் ஆதி மெஹர்ஸ்தானின் குவிமாடத்தில் பாபாவின் ஏழு வர்ண கொடியை ஏற்றி உரை நிகழ்த்தினார். பல முக்கியஸ்தர்கள் மற்றும் யோகி ஷுத்தானந்த் பாரதி, கொல்கத்தாவைச் சேர்ந்த டாக்டர் மூர்த்தி, நவ்ஸாரியிலிருந்து ஹோஷங் பரூச்சா உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டு ஒரு சிறிய உரையை வழங்கினர்.

28ஆம் தேதி மெஹராஸாத்தில், பாபா ஆண், பெண் மண்டலி அனைவரையும் மண்டபத்திற்கு அழைத்து, தன் முன்னால் வந்து நிற்குமாறு அறிவுறுத்தினார். காலை 7:32 மணிக்கு, மெஹர்ஸ்தானில் ஷாந்தாதேவி சிலையைத் திறந்துவைத்த அந்தத் தருணத்தில், பாபா கைகளைத் தட்டி, அவரது விருப்பத்திற்கு இணங்க, அனைத்து மண்டலியும் ஒருமித்த குரலில், 'பர்வர்திகார்!' என்று மொழிந்தனர்.

இந்த நேரத்தில் சத்ய சாய்பாபா (SATYA SAIBABA) என்ற யோகி, தென்னிந்தியாவில் பிரபலமடைந்து வந்தார்; ஏனெனில் அவர் தனது சக்திகளைப் பயன்படுத்தி, தனது பக்தர்களுக்காக, உள்ளங்கையில் சாம்பலையும், நகைகள்

மற்றும் பிற பொருட்களை உருவாக்குவதை வழக்கமாகக் கொண்டார். 1963 மார்ச் 2 அன்று, ஒரு பக்தர் எழுதிய கடிதத்தில் சத்ய சாய்பாபாவின் சக்திகளை விவரித்திருந்தார். அதைக் கேட்ட எரச் வேடிக்கையாகக் கூறினார் "அவரைப் போன்ற ஒருவரை மண்டலியிடையே இருக்கச் செய்வது எல்லா வகையிலும் பெரும் உதவியாக இருக்கும்!"

பாபா, "**இவை அனைத்தும் தாந்திரீக சக்திகள்**" என்று கூறினார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், 'சத்ய சாய்பாபா நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருந்தாரா, ஒருவேளை அவரது ஆன்மீக சக்திகளைத் தவறாகப் பயன்படுத்துகிறாரா' என்று விசாரித்து ஐவி டியூஸ் (IVY DUCE) எழுதியிருந்தார். '**அவர் ஒரு தாந்திரீக சக்தி படைத்தவர்**, '**அதிசயங்கள்**' **புரிவதற்காக அவர் தாந்திரீக சக்திகளைப் பயன்படுத்துவதாகவும்**' பாபா மீண்டும் கூறினார்.

இந்த நேரத்தில், ஜேன் ஹெய்ன்ஸ் தனது மூன்று குழந்தைகளுடன் நியூயார்க் நகரில் வாழ்ந்து வந்தார். அவர் பாபாவைப் பற்றிய குழந்தைகளுக்கான புத்தகம் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார், ஆனால் ஏதோ காரணமாக, அந்தத் திட்டம் சீரான முன்னேற்றத்தைக் கண்டதாகத் தெரியவில்லை. பாபா அவருக்கு இவ்வாறு எழுதினார்: "**நீங்கள் கவலையுற வேண்டாம்**. **எழுதப்பட்ட அல்லது எழுதப்படாத எந்தப் புத்தகங்களை விடவும்**, **நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்புதான் எனக்கு முக்கியம்**."

புது டெல்லி 'தொழில் கண்காட்சி'யில் 'பாபா தகவல் மையம்' (BABA INFORMATION BOOTH AT THE NEW DELHI INDUSTRIAL FAIR) அமைக்கும் ஸாக்கரே தம்பதியினரின் பணியைப் பற்றி அறிந்த பின்னர், ஒரு வருடத்தில் திறக்கப்பட இருந்த 'நியூயார்க் உலக கண்காட்சி'யில் மெஹர் பாபாவை ஏன் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாது என்று ஜேன் நினைத்தார். ஜேனின் இல்லத்திற்கு கிட்டி விஜயம் செய்தபோது, அவருடைய இந்த யோசனையை மிகவும் விரும்பி, ஸரோஷுக்குக் கடிதம் எழுதினார்; அவர் இதை பாபாவிடம் தெரிவித்ததும், பாபா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, இந்த யோசனைக்கு ஒப்புதல் அளித்தார்.

பின்னர், 1963 பிப்ரவரி 19 அன்று, ஆதி, ஜேன் ஹெய்ன்ஸுக்கு பின்வரும் குறிப்பை எழுதினார்:

நியூயார்க் உலக கண்காட்சியில் (NEW YORK WORLD'S FAIR) தனக்காக சிறிய அளவில் இடம் ஒன்றை அடையப் பெறுவதற்கான உங்கள் முயற்சிகளில் பாபா மிகவும் மகிழ்ச்சியடைகிறார் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஒன்றைப் பெறுவதில் வெற்றியை சந்திக்கவில்லை என்றால், நீங்கள் ஏமாற்றமடைவதை பாபா விரும்பவில்லை, ஏனெனில் அவருடைய இதயத்தில் உங்களுக்கு ஏற்கனவே ஒரு தனி இடம் உள்ளது. பாபா தனது அன்பை உங்களுக்கும் அவருடைய அன்பான மூவருக்கும் அனுப்புகிறார்.

பாபா இந்தத் தொலைத்தந்தியை ஜேன் ஹெய்ன்ஸுக்கு மார்ச் 7 அன்று அனுப்பினார்:

**இந்தத் திட்டத்திற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் பங்களிக்கக்கூடிய அமெரிக்க அன்பர்கள் அவ்வாறு செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இவ்வண்ணம், அமெரிக்காவில் பாபாவின் செய்தியைப் பரப்புவதில் ஒரு முக்கியமான திட்டம் வகுக்கப்பட்டது**.

1963 மார்ச் 7ஆம் தேதி, அவரைப் பார்க்க பலமுறை வேண்டுகோள் விடுத்த பிறகு, மன்ஸாரி, கைக்கோபாத்தின் குடும்பத்தினர், சுஷீலா ஆகியோரை பாபா மெஹராஸாத்திற்கு வர அனுமதித்தார். ஏறக்குறைய தினமும் வந்து செல்லும் ஆதியுடன் பாதிரி, டாக்டர் டான் இருவரும் 8ஆம் தேதி வந்தனர்.

ஒருமுறை, பிரேம் கில்னானி, அவரது மனைவி கிரிஜா, அவர்களது இரண்டு மகன்களான வினோத், ராஜ் ஆகியோருடன் பாபாவை சந்திக்க மெஹராஸாத்திற்கு வந்தனர். கில்னானி குடும்பம் வாழும் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு எதிரில் ஸரோஷ் சினிமா இருந்தது. உரையாடலின் போது, கில்னானியிடம், "**இப்போது உங்களுக்கு நிறைய பொழுதுபோக்குகள் இருக்க வேண்டும். நீங்கள் திரைப்படங்களைப் பார்க்க விரும்புகிறீர்களா?**" என்று பாபா கேட்டார்.

கில்னானி உடனே, "ஒரு காலத்தில் நான் திரைப்படங்களைப் பார்க்க விரும்பினேன், ஆனால் இப்போது எனக்கு அந்த ஆர்வம் இல்லை" என்று கூறினார். கிரிஜாவைப் பார்த்து பாபா அவரிடமும் அதே கேள்வியைக் கேட்டார். சில குறிப்பிட்ட திரைப்படங்கள், குறிப்பாக ஆன்மீகக் கருப்பொருட்களை விளக்கும் திரைப்படங்களைப் பார்க்க விரும்புவதாக அவர் கூறினார்.

கணவன்-மனைவி இடையே அவ்வப்போது தகராறு ஏற்பட்டு வந்த நிலையில், இந்தப் பிரச்சினை குறித்து பேச்சு எழுந்தது. பாபா அவர்களைப் பார்த்து புன்னகைத்து, "**இன்னுமொரு மோதலா?**" என்று கேட்டார்.

பிரேம் உடனே, "மோதல் எப்பொழுதுமே இருக்கும். உங்கள் அருட்பார்வை கிடைத்தால்தான் அது மறையும்" என்றார்.

"**குருபிரசாத்தில் நான் கூறியது உங்களுக்கு நினைவில் இல்லையா?**"

"எனக்கு நினைவிருக்கிறது, ஆனால் அதை வாழ்வது கடினம்."

"**நீங்கள் எனது கட்டளைகளைப் பின்பற்றுகிறீர்களா?**"

"நான் முயற்சிக்கிறேன்."

"**முயற்சி செய்கிறீர்களா?**" பாபா கேலி செய்தார். "**நீங்கள் எப்பொழுதும் கிரிஜாவுடன் சண்டை போடுகிறீர்கள்! இது தான் முயற்சி செய்வதன் அடையாளமா?**" பாபா மீண்டும் அவர்களை சமரசம் செய்ய உதவும் விஷயங்களை விளக்கினார்; அனைவரும் அப்போது புறப்பட்டுச் சென்றனர்.

1963 மார்ச் 12 அன்று, குடும்ப சாஸ்திரி, அவரது மகன் பாஸ்கர், ஆதி, கில்னானி தம்பதிகள், தலைமை நீதிபதியாக பணிபுரிந்த சைனானி (CHINANI) மற்றும் அவரது மனைவி ஆகியோர் பாபாவை மெஹராஸாத்தில் சந்தித்தனர். '**அன்பு ஒன்றுதான் இறைவனை உணர்வதற்கான வழி**' என்றும், '**ஒருவர்**

**சுதந்திரமான வாழ்க்கையை உண்மையுடனும், நேர்மையுடனும் வாழும் தைரியம் வேண்டும், அந்த தைரியம் ஆயிரத்தில் ஒருவருக்கு மட்டுமே இருக்கும்**' என்றும் பாபா அவர்களுக்கு ஒரு சிறிய சொற்பொழிவை வழங்கி, மேலும் குறிப்பிட்டார்:

**குடும்ப சாஸ்திரி தென்னிந்தியாவில், விரைவில், ஒரு விரிவுரை சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள இருக்கிறார். 'மெஹர் பாபா யுகத்தின் அவதார புருஷர் என்று வெளிப்படையாக அறிவிக்க எந்தத் தயக்கமும் வேண்டாம்' என்று பாபா அவரிடம் வலியுறுத்தி, தொடர்ந்தார், "நீங்கள் அடி, உதை வாங்கினாலும், உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் ஒளிவு மறைவின்றி எடுத்துரைக்க வேண்டும்!**

பூனாவில் பெரியம்மை நோய் பரவலாக பரவி வந்ததால், அன்றைய தினம் மெஹராஸாத்தில் அனைவருக்கும் (பாபா உட்பட) பொது சுகாதார அதிகாரியால் தடுப்பூசி போடப்பட்டது.

அன்றைய தினம், பாபா ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டார்: அடுத்த இரண்டு வாரங்களில் பாபா மண்டலியுடன் குருபிரசாத்திற்குச் செல்வதாகக் கூறி, ஆனால் '**மேற்கத்திய அன்பர்கள் அந்த ஆண்டு பூனாவிற்கு வர அனுமதிக்கப்படவில்லை, ஏனெனில் கிழக்கு-மேற்கு சகவாசத்தில் அவருடன் நெருங்கிய தொடர்புக்கான சிறப்பு வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அவரது மேற்கத்திய அன்பர்கள், குருபிரசாத்தில் தங்கியிருக்கும் காலத்தில், அவரை சந்திக்காமல் இருப்பதன் மூலம், அவருக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் தொடர்ந்து உதவ வேண்டும்**' என்று அவர் விரும்புவதாகக் கூறினார். இருப்பினும், ஏப்ரல் 14 முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் தமது கிழக்கத்திய அன்பர்களை அனுமதிப்பதாக பாபா கூறி, '**நேர்காணல்கள், ஆலோசனைகள் போன்றவற்றிற்கான கோரிக்கைகளை முன்வைக்கக்கூடாது**' என்ற வழக்கமான உத்தரவுகளும் வழங்கப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில் மெஹராஸாத்தில், ஃபிரான்சிஸ் தனது 'கிழக்கு-மேற்கு சகவாசம்' (EAST-WEST GATHERING) குறித்த புத்தகத்தை எழுதி முடித்து, அதில் ஒரு பகுதியை தினமும் பாபா முன்னிலையில் வாசித்தார்.

இந்த நேரத்தில் தலைமையகத்தை பூனாவிற்கு மாற்றுவதற்கு முன்பு, தனது அன்பர்களின் விருப்பத்தைக் கருத்தில் கொண்டு, 1963 மார்ச் 17 ஞாயிறு அன்று பாபா அஹமதுநகர் மையத்திற்கு விஜயம் செய்ய இணக்கம் தெரிவித்தார். அன்று அதிகாலையிலிருந்து, உள்ளூர் பக்தர்களும் குடும்பத்தினரும் மையத்தில் ஒன்றுதிரண்டனர், இதில் பல இராணுவ அதிகாரிகள் உட்பட அவர்களின் மனைவிகள் மற்றும் குழந்தைகளும் கலந்து கொண்டனர். (அஹமதுநகரில் ஒரு பெரிய ராணுவ தளம் உள்ளது.) மண்டபம்

முழுவதும் நிரம்பி வழியவே, மக்கள் வெளியே நின்று கொண்டிருந்தனர். எரச், பாவ் கல்சூரி, பெண்டு, ஃபிரான்சிஸ் ஆகியோருடன் பாபா காலை 9:15 மணிக்கு வருகை தந்தார்; உரத்த 'ஜெய்' முழக்கங்களுக்கு மத்தியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மேடையில் அமர்ந்து, "**என்னை எவரும் தலை வணங்கவோ, எனக்கு மாலை அணிவிக்கவோ, என்னைத் தழுவவோ கூடாது. மையத்தின் தலைவர் என்ற முறையில் ஸரோஷ் மட்டுமே எனக்கு மாலை அணிவிக்க வேண்டும்**" என்று கூறினார். ஸரோஷ் (மற்றும் அவரது சுவிஸ் மருமகள் அனிதா) அவ்வாறு செய்து பாபாவின் அரவணைப்பைப் பெற்றனர்.

டாக்கே சில வார்த்தைகளை மொழிந்து வரவேற்றார், அதைத் தொடர்ந்து டாக்கே, ருஸ்தம் காக்கா இருவரிடமும் பாபா, கொவ்வூரில் நடந்த பொது விழா பற்றி வினவினார். நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக நடந்ததாகவும், அங்கு பாபாவின் பிரசன்னத்தை ஆயிரக்கணக்கானோர் உணர்ந்தனர் என்றும் இருவரும் தெரிவித்தனர்.

பாபாவின் கண்கள் அவருக்கு முன்னால் இருந்த ஒலிவாங்கியை உற்றுப் பார்த்தன; அதை அங்கிருந்து அகற்றுமாறு கூறி வேடிக்கையாக எடுத்துரைத்தார், "**நான் இப்போது எனது மௌனத்தைக் கலைக்கப் போவதில்லை; அதற்கு இன்னும் நேரம் இருக்கிறது! நான் என் இறை வார்த்தைகளின் வார்த்தையை மொழியும் போது, அது அனைவருடைய ஆழ் இதயத்தையும் தொடும்; எனது தொடர்பில் இருப்பவர்கள், தங்கள் தயார்நிலைக்கு ஏற்ப ஆன்மீக ரீதியில் பயனடைவார்கள்.**"

ருஸ்தம் காக்கா இந்தியில் எழுதப்பட்ட பாவ் கல்சூரியின் கஸல்களில் ஒன்றைப் பாடத் தொடங்கினார். பாபாவின் விருப்பத்திற்கிணங்க ஹமிர்பூரிலிருந்து வந்திருந்த கேஷவ் நிகம், புக்கார் இருவரையும் பாபா அழைத்து, அவர்களிடம் மெஹராஸாத்திற்குச் சென்று நீராடி, இளைப்பாறுமாறு கூறி அனுப்பினார். ஏதோ பணி நிமித்தம் அழைத்த அவர்களிடம், அது குறித்து பின்னர் ஆலோசிப்பதாகக் கூறியபோது, இருவரும் திரும்பிச் சென்றனர்.

இந்த நிகழ்ச்சியில், ஸரோஷின் மூத்த சகோதரர் தீன்ஷாவின் (DINSHAW) மனைவி ஸூனாமாய் ஈரானி (SOONAMAI IRANI, கோஹெர், கேட்டியின் தாயாரின் சகோதரி) மண்டபத்திற்குள் நுழைந்து மேடையில் அமர்ந்தார். பாபா அவரிடம், "**இந்த உடலை எந்த நேரத்திலும் துறக்கலாம். ஆகவே, நீங்கள் என்னை நினைவுகூர்ந்து, இயன்றவரை எனது பெயரை உச்சரிக்க முயற்சி செய்ய வேண்டும், அதனால் நீங்கள் உயிரைத் துறந்ததும், உங்களுடைய உலக விவகாரங்களிலிருந்து விடுபடலாம்.**" அந்த நேரத்தில் ஸூனாமாய் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகத் தோன்றினாலும், பின்னர் அவர் புற்றுநோயால் தாக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

பாபா அப்போது கூட்டத்திற்குக் கீழ்வரும் உரையை நிகழ்த்தினார்:

**கடவுள் எல்லையற்றவர்; எங்கும் நிறைந்தவர். ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிடத்திலும் அவர் உளதாயிருக்கிறார். இந்தியாவின் பள்ளிக்கூட குழந்தைகளுக்குக் கூட இது தெரியும், ஏனெனில் இது அவர்களுக்குக்**

கற்பிக்கப்படுகிறது. ஒருவர் வேதாந்தத்தை முழுமையாகக் கற்றறிந்தால், அவர் மாயையில் மூழ்கி, 'நான்-கடவுள்' என்ற நிலையை அடைந்துவிட்டதாகவும், அவர் கடவுள் மட்டுமல்ல, எங்கும், எல்லாவற்றிலும் இருக்கிறார் என்ற முடிவுக்கும் வந்துவிடுகிறார்! வேதாந்தத்தைக் கற்று தேர்ந்தவராக மாறுவது கடவுள் நிலையை எய்தியதாக அர்த்தப்படுத்தக் கூடாது. இதன் மூலம் ஒருவர் மனதுக்கும், அறிவுத் திறனுக்கும் அப்பாற்பட்ட கடவுளைப் பற்றிய வெறும் அறிவார்ந்த புரிதலை அடையப் பெறுகிறார். தூய்மையான அன்பின் மூலம் மட்டுமே அவரை உணரவும், அனுபவிக்கவும் முடியும் - அதாவது இதயத்தின் மூலம், மனதின் மூலம் அல்ல. இந்த அன்பு 100 சதவீதம் தூய்மையாக இருக்க வேண்டும். அது நேர்மையான அன்பாக இருக்க வேண்டும். அப்போதுதான் மனம் மற்றும் புத்தியின் களத்தைக் கடந்து செல்ல முடியும்.

அப்போதும் கூட, அரிதாக ஒருவரே கடவுளை எங்கும் நிறைந்தவராகக் காண்கிறார். இந்த உலகப் பொருட்களை உங்கள் பௌதீகக் கண்களால் பார்ப்பதை விட, அவர் கடவுளை உள்ளளவில் மிகவும் தெளிவாகப் பார்க்கிறார். கடவுளை உள்ளே பார்க்க வேண்டும், வெளியே தேடக்கூடாது. கடவுளோடு ஐக்கியமாக வேண்டும் என்ற உண்மையான ஏக்கம் இருக்கும்போது, ஒருவர் தண்ணீரிலிருந்து வெளிவரும் மீனைப் போல் ஆகிவிடுகிறார். மேலும் அரிதான ஒருவர் மட்டுமே அவரை உணர்கிறார்.

இறைநிலையை எய்திய ஒருவருக்கு இதர அனைத்தும் - மனம், உடல், அறிவு, உலகம் மற்றும் அதன் விவகாரங்கள் போன்ற அனைத்தும் - மறைந்துவிடும். இறைநிலையை எய்திய ஒருவர், அவரது அனுபவத்தின் மூலம் அனைத்தையும், அனைவரையும் அறிந்தவர் என்ற அதிகாரத்தின் அடிப்படையில் 'நான் கடவுள்!' என்று பறைசாற்றுகிறார். வேதாந்தத்தைப் பற்றிய அறிவார்ந்த புரிதலின் மூலம், இந்த நிலையை ஒருபோதும் அடைய முடியாது. இறைநிலையை எய்திய மனிதனின் நிலை விவரிக்க முடியாதது; அதை அனுபவிக்கத்தான் வேண்டும்.

இறை உணர்தலுக்குப் பிறகு, லட்சக்கணக்கான நபர்களில் ஒருவர் மட்டுமே இயல்பான (பௌதீக) உணர்வுநிலையைத் திரும்பப் பெறுகிறார், மேலும் அவர் தன்னிச்சையாக தனது தெய்வீக உணர்வுநிலையை பௌதீக உலகின் விழிப்புணர்வுடன் அனுபவிக்கிறார். அத்தகைய ஒருவர் மட்டுமே உண்மையானவர்; வேதாந்தத்தை எவ்வளவுதான் கற்றறிந்தாலும் இந்த அனுபவத்தை அடையப்பெற முடியாது.

பாபா தொடர்ந்து கூறினார்:

ஆன்மீகப் பாதையில் 100 சதவீதம் நேர்மை இன்றியமையாதது. பாசாங்குத்தனத்தின் சிறிதளவு சாயல் கூட ஒருவரை கடவுளிடமிருந்து துரத்திவிடுகிறது. நயவஞ்சகனாக அல்லது பொய்யும் போலியுமான துறவியாக இருப்பதை விட, நம்பிக்கையற்றவனாக (நாத்திகர்,

**அஞ்ஞானவாதி) இருப்பது மேல். மேலும் கடவுளை அவமதிப்பதை விட கடவுளை மறுப்பதே மேல்!**

**கடவுள் உங்கள் சுவாசத்தை விடவும் உங்களுக்கு அருகில் இருக்கிறார், ஆனால், அதே வேளையில், அவர் உங்களிடமிருந்து வெகு தொலைவிலும் இருக்கிறார். நான் கடவுள் என்பதையும், நீங்கள் அனைவரும் கடவுள் என்பதையும், உண்மையான அனுபவத்தால் நான் அறிவேன். இந்த அனுபவம், இடைவெளி எதுவும் இல்லாத தொடர்ச்சியான அனுபவம். இந்த அனுபவம் உங்களுக்கு இல்லை, ஏனெனில் உங்களுக்கும், கடவுளுக்கும் இடையே ஒரு திரை உள்ளது, அது உங்களை அவரிடமிருந்து பிரிக்கிறது, அவரை அறிந்து கொள்வதைத் தடுக்கிறது. பொய்யும் போலியுமான 'நான்' எனும் உங்களின் அகந்தையே இந்தப் பிரிவினையின் முகத்திரை! இது மிகவும் கடினமாகவும், கடவுளை எவராலும் அறிய முடியாததாகவும் ஆக்குகிறது.**

**ஒரு பரிபூரண குருநாதரின் அருளால், இறை அன்பின் மதுபானத்தை உங்களை அருந்தச் செய்த பின்னரே, இறைநிலையை நீங்கள் ஒரு நொடியில் அனுபவிக்க முடியும்; மேலும் நீங்கள் அந்த மதுபானத்தை உள்வாங்கிக்கொண்டால், உங்கள் உலகப் பற்றுகள் அனைத்தையும் இழந்து, ஒரே உண்மைப்பொருளான இறை உணர்வை அடையப் பெறுவீர்கள். அந்த நிலை விவரிக்க முடியாதது.**

**இறை அன்பின் மதுபானத்தை நீங்கள் அருந்தும் வரை, உங்கள் மனம் உங்களுடன் தந்திரமாக விளையாடுகிறது. உங்கள் ஆசைகள் உங்கள் இதயத்தை நிரப்பி, மாசு படியச் செய்கின்றன; அவை உங்கள் இதயம் தூய்மைப் படுத்தப்படுவதை தடுக்கின்றன, அதனால் நீங்கள் கடவுளைப் பார்க்க முடியாது. ஆசைகள் அகன்று, மாசு படிந்த உள்ளம் அப்பழுக்கற்றதாகும் போதுதான், கடவுளைக் காண்பீர்கள். ஆனால் இதற்கு பரிபூரண குருநாதரின் அருட்பார்வை இன்றியமையாதது.**

அந்த நேரத்தில், பேராசிரியர் அப்துல் கரீம் (PROFESSOR ABDUL KARIM) மண்டபத்தின் உள்ளே நுழைந்து, முதல் வரிசையில் பாபாவை நோக்கி அமர்ந்தார். பாபா வினவினார், **"நீங்கள் எங்கே இருந்தீர்கள்? நான் விளக்குவதை நீங்கள் கேட்டீர்களா? அதை நீங்கள் புரிந்துகொண்டீர்களா?"**

பேராசிரியர், தான் மண்டபத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்ததாகவும், பாபாவின் விளக்கங்களைக் கேட்டு புரிந்து கொண்டதாகவும் பதிலளித்தார். **"நீங்கள் உள்ளே வந்தது நல்லது"** என்று பாபா கூறினார், **"இல்லையேல், எப்பொழுதும் நீங்கள் 'வெளியே' இருந்திருப்பீர்கள்."**

அவருடன் உரையாடும் போது, பாபா, ஹஃபீஸின் ஒரு சில ஈரடிக் கவிதைகளை மேற்கோள் காட்டினார்: **"ஒருவரின் மனம் முழுவதுமாக நிர்மூலமாகும் போது, அவர் அனைத்திலும், அனைவரிலும் தன்னைக் காண்கிறார். அப்போது ஆன்மா, அவ்வப்போது மனிதனின் பங்கையும், சில நேரங்களில் கடவுளின் பங்கையும் வகிக்கிறது. அந்த நிலை விவரிக்க**

**முடியாத அளவுக்கு உயர்ந்திருப்பதால், அது மனம், அறிவு மற்றும் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அது பிரகாசம் மற்றும் ஒளியின் இறைப் பெருங்கடலை ஒரு துளி விழுங்குவது போன்றது! மேலும் அந்த 'நான்-கடவுள்' என்ற நிலையில், பேரின்பம் எல்லையற்றதாக இருப்பதால், உலகின் விழிப்புணர்வை** (பௌதீக உணர்வு) **அடைய கீழே இறங்கி வருவது என்பது, விவரிக்க முடியாத அளவுக்கு வேதனையாக இருக்கும்.**"

பாபா இவ்வாறு கூறி முடித்தார், "**என்னைப் பொறுத்தவரையில், நான், முழு மனிதகுலத்திற்காகவும் துன்பப்படும் நோக்கத்தில், ஐந்து பரிபூரண குருநாதர்கள் என்னை 'வலுக்கட்டாயமாக' பௌதீக உணர்வு நிலைக்குக் கொண்டுவந்தனர்.**"

சிறுமி லதா லிமாயே (LATA LIMAYE) ஒரு கஸலைப் பாடத் தொடங்கி, அவருடைய குரல் இனிமையாக இருந்தாலும், அவர் பதட்டமடைந்து அதை முடிக்க அவசரப்பட்டார். பாபா அவரைப் பொறுமையாகப் பாடுமாறு கேட்டுக் கொண்டதோடு, பூனாவில் பேகம் அக்தர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியில் அவர் முன்னிலையில் பாட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். பேகம் அக்தரின் மெஹராஸாத் விஜயம் மற்றும் அவர் முன்னிலையில் பாடும் விருப்பத்தைத் தெரிவித்தது குறித்தும் பாபா குறிப்பிட்டார். பூனாவில் நடந்த இசைப் போட்டி ஒன்றில் லதா சிறந்து விளங்கி, முதல் இடத்தை அடையப் பெற்றதற்காக அவர் பாராட்டினார், மேலும் அவருக்கு தனித்தன்மை மிக்க இனிமையான குரல் இருப்பதாகக் குறிப்பிட்டார். பாபாவின் விருப்பத்திற்கு மதிப்பளித்து, லதா 'ராஜாஜி' என்ற பஜனை பாடியதும் பாபா அவரை அன்புடன் தழுவினார்.

நான்கு இறைப் பயணங்களைக் (FOUR JOURNEYS) குறித்து பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**ஆன்மீகப் பாதையில் நான்கு இறைப் பயணங்கள் உள்ளன, ஆனால் அவை உள்நோக்கிய பயணம். முதல் இறைப் பயணத்தின் முதல் ஆன்மீகத் தளம், ஆர்வலர்களைத் திகைப்பில் ஆழ்த்துகிறது; ஆனால் அது ஒளி, வண்ணங்கள், வட்டங்கள், இனிமையான வாசனை, இசை மற்றும் பலவற்றின் தமாஷாவே** (காட்சி) **தவிர வேறொன்றுமில்லை. இது கடவுள் அல்ல! அவர் வெகு தொலைவில் இருக்கிறார்! இந்த ஆன்மீகத் தளத்தில் சிக்கிக் கொண்டு, இந்தத் தமாஷாவில் தங்களையும் பிணைத்து, பிறரையும் பிணைக்கச் செய்யும் எத்தனையோ மஹான்கள் என்று அழைக்கப்படுபவர்கள் இருக்கிறார்கள். லட்சக்கணக்கானவர்களில் ஒரு வீரர் மட்டுமே முன்னேறி, முதல் இறைப்பயணத்தின் இறுதி இலக்கை எட்டத் துணிகிறார்.**

பேராசிரியர் அப்துல் கரீமின் அதீத உற்சாகத்தில் உருவான கஸல் ஒன்றை கோகிலா திவாரி (KOKILA TIWARI) பாடினார். பேராசிரியர் இதை இயற்றியதைக் கேள்விப்பட்ட பாபா, "**அப்படியானால், உங்களையோ உங்கள்**

**பேனாவையோ ஓய்வெடுக்க நான் அனுமதிக்க மாட்டேன்! நீங்கள் தொடர்ந்து கஸல்களை இயற்ற வேண்டும்**" என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சி நிறைவடைவதற்கு முன்பு, கடவுளை அடைவது குறித்து பாபா கூட்டத்தில் இறுதி உரை ஒன்றை வழங்கினார்:

**நீங்கள் உலகத்தைத் துறக்கவோ அல்லது எதையும் கைவிடவோ வேண்டாம் - உங்கள் மனைவி, குழந்தைகள், வேலை, பொறுப்புகள். எதையும் நீங்கள் துறக்க வேண்டியதில்லை! நீங்கள் கைவிட வேண்டிய ஒன்றே ஒன்று பொய்யும் போலியுமான 'நான்' எனும் அகந்தை.**

பாபா மேடையிலிருந்து இறங்கத் தயாராக இருந்த வேளையில், மண்டலி மற்றும் மெஹராபாத்தைச் சேர்ந்த குடியிருப்பாளர்களிடம் எழுந்து நின்று வணக்கம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார், அதை அவர்கள் பயபக்தியுடன் செய்தனர். 'ஜெய்' ஆரவாரங்களுக்கு மத்தியில், பாபா அஹமதுநகர் மையத்திலிருந்து மெஹராஸாத்திற்குக் காலை 10:30 மணிக்கு புறப்பட்டுச் சென்றார். ஏகாந்தவாசம் தொடர்ந்த வேளையிலும், பாபா தமது அஹமதுநகர் பக்தர்களின் அன்பிற்கு பதிலளித்தார், மேலும் அவரது இரக்கத்தில், அவர்களுக்கு தரிசனம் வழங்க விசேஷமாக வருகை தந்து, அவர்களின் பிரார்த்தனைக்கும் பதிலளித்தார். அவர் காரில் அமர்ந்திருக்கையில், அவரைத் தொட ஏராளமான மக்கள் ஒன்று திரண்டனர்; அவரைத் தொட்டு திருப்தி அடைய முடியாதவர்கள், அவருடைய தெய்வீகப் பிரசன்னத்திலிருந்த பலனை அடையப் பெற்றனர்.

மெஹராஸாத்தைச் சென்றடைந்த பாபா, புக்கார், கேஷவ் நிகம் ஆகியோருடன் பாபாவின் பெயரில் ஹமிர்பூரில் அவர்கள் புரியும் பணி தொடர்பான விஷயங்களைப் பற்றி விவாதித்தார். அன்று இரவு தங்கி, அடுத்த நாள் தங்கள் இல்லங்களுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

கல்சூரி குடும்பத்தினர், பாதிரி, ஆதி ஆகியோரை 19ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வரவழைத்து, அவர்கள் ஜூன் மாதம் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்குச் செல்வதை பாபா முடிவு செய்தார். ஜால்பாய் 20ஆம் தேதி வந்தார்.

1963 மார்ச் 21 அன்று, டாக்கேயின் ஈரானி புத்தாண்டு வாழ்த்துக்களுக்குப் பதிலளிக்கும் விதத்தில், பாபா அவருக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: "**நித்தியமானவர் தமது அன்பின் ஆசீர்வாதத்தை அவரது நிலையற்ற ஒருவருக்கு அனுப்புகிறார்**."

பூனாவைச் சேர்ந்த எம்.என். மிர்ஸா (M.N. MIRZA) என்ற பாபா அன்பர், தனது மனைவியின் நிலையற்ற மன நிலை காரணமாக, வாழ்க்கையில் பெரும் சிரமத்தை சந்தித்தார். பாபா, அவரை மார்ச் 23 அன்று மதியம் 3:00 மணிக்கு மெஹராஸாத்தில் சந்தித்து, அவருக்கு முன்பாக 'பர்வர்திகார்' குருநாதர்

பிரார்த்தனையும் (MASTER'S PRAYER), மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனையும் (REPENTANCE PRAYER) மொழியப்பட்டன. அவர் மிர்ஸாவிடம் இந்தப் பிரார்த்தனைகளை தினமும் மொழியுமாறும், 30ஆம் தேதி குருபிரசாத்தில் பாபாவை மீண்டும் சந்திக்குமாறும் அறிவுறுத்தினார்.



அஹமதுநகர் மையம் (AHMEDNAGAR CENTER), மார்ச் (MARCH) **1963**





அஹமதுநகர் மையம் (AHMEDNAGAR CENTER), மார்ச் (MARCH) **1963**



ஒலிபெருக்கியில் டாக்கே:பால்கர் (DAKHEPHALKAR ON LOUDSPEAKER)



குருபிரசாத் (GURUPRASAD) - **1963**

# குருபிரசாத் பூந்தோட்டம் - 1963 - பாகம் 1

(**Guruprasad Gardens – 1963 – Part 1**)

1963 மார்ச் 24 ஞாயிறு காலை 8:30 மணிக்கு பாபா, ஆண், பெண் மண்டலியுடன் மெஹராஸாத்திலிருந்து பூனா, குருபிரசாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். காக்கா மெஹராஸாத்தில் தங்கியிருக்க, கைக்கோபாத் மெஹராபாத்திற்கு அனுப்பப்பட்டார்; மேலும் பைதூல் தனது குடும்பத்துடன் பூனாவில் தங்கினார். ஆதி டிஸோட்டோவில் (DeSOTO) பாபாவை அழைத்துச் செல்ல, வழியில் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ் மற்றும் அக்பர் பிரஸில் சிறிது நேரம் நின்று, பாபா தமது அன்பர்களை சந்தித்தார். அஹமதுநகர் ரயில் நிலையம் அருகில் பாபா, மெஹர்ஜியின் காருக்குச் சென்றார்.

பூனா செல்லும் வழியில் பாபா காரை நிறுத்தி, சாலையோரத்தில் மண்டலியால் அமைக்கப்பட்ட ஒரு தற்காலிகத் திரைக்குப் பின்னால், அவர் தனது சிறுநீர் கொள்கலனைப் பயன்படுத்தினார். ஆனால் அவர் வெளியே வந்து கதவருகில் சிறிது நேரம் நின்ற அந்த வேளையில், பின்னால் வந்த காரிலிருந்து ஒரு மனிதர் இறங்கி, கைகளைக் கூப்பிய வண்ணம், நேராக பாபாவிடம் சென்றார். ஆதி அவரைத் தடுக்க முயன்றபோது, பரவாயில்லை என்று பாபா சைகையால் தெரிவித்தார். அந்த நபர் தலை தாழ்த்தி வணங்கி, "நான் உங்களை 35 ஆண்டுகளுக்கு முன்பு, டோக்கா ஆசிரமத்தில் கடைசியாகப் பார்த்தேன்; சாலையில் இந்த எதிர்பாராத சந்திப்பின் ஆசீர்வாதத்தால் அடையப்பெற்ற மகிழ்ச்சியை என்னால் விவரிக்க முடியாது" என்று விளக்கினார். பாபா சிரித்துக் கொண்டே அவரும் மகிழ்ச்சி அடைவதாக சைகையால் தெரிவித்தார். பாபாவின் கார் குறிப்பிட்ட நேரத்தில், அந்த இடத்தில் நிறுத்தப்பட்டதன் உண்மையான காரணம் அப்போது புலப்பட்டது.

ஜோஸஃப், காரி ஹார்ப் இருவரும் பூனாவில் நேப்பியர் ஹோட்டலில் தங்கியிருந்தனர். ஆனால் ஜோஸஃப் பல வாரங்களாக பித்தப்பை பிரச்சினையால் மிகவும் அவதியுற்றார். மேலும் அவரது உடல்நிலை சமீபத்தில் தீவிரமான திருப்பத்தை எட்டியது. அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறப்பட்ட போது, அலு கம்பட்டா அவரைக் கண்காணித்துக் கொள்வதற்காக நியமிக்கப்பட்டார். குருபிரசாத்தில் பாபா வந்த நாள், ஜோஸஃப், காரி இருவரும் அவரைப் பார்க்க வந்தனர். அறுவை சிகிச்சையைத் தொடருமாறு பாபா, ஜோஸஃபிற்கு அறிவுறுத்தி, திரும்பத் திரும்ப அவரிடம் வலியுறுத்திக் கூறினார், "**நான் மட்டுமே உண்மையானவன். உண்மையெனத் தோன்றும் பிற அனைத்தும் மாயை. நான் கடவுள், 100 சதவீதம் கடவுள்! என்னைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனவே, என்னைப் பற்றி மட்டும் சிந்தித்து, எனது பெயரைத் திரும்பத் திரும்ப மொழியுங்கள். நீங்கள் இந்த நொடியில் உங்கள் உடலைத் துறப்பதாக இருந்தால், அதுவே உங்களுக்குக் கைகொடுக்கும்.**"

அந்த ஆண்டு குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்தபோது, வழக்கம் போல சதாஷிவ் பாட்டீல், மெஹர்ஜி, பாபாவின் சகோதரர்கள் ஜால்பாய் & பெஹராம், அவரது சகோதரரின் மகன்கள் ஷெரூ, ருஸ்தம் & ஸொராப், ஜெஹாங்கு ஸுகத்வாலா, மெஹர்வான் ஜெஸவாலா, ஸால் ஐடூன் ஆகியோர் தினமும் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். ஜெஹாங்கு, மெஹர்வான் இருவரும் தங்கள் பணியிலிருந்து ஓய்வு கிடைக்கும் போது மட்டுமே வர முடிந்தது. பூனா மைய சேவகர்கள் அவ்வப்போது அனுமதிக்கப்பட்டனர். சதாஷிவ், ராமகிருஷ்ணன், ஷிண்டே மற்றும் பலர் பூனா மையத்திற்கு ஒரு தனி கட்டிடம் எழுப்ப வேண்டும் என்ற விருப்பத்தை முன்வைக்கவே, பாபா அதை அனுமதித்தார். புதிய கட்டிடம் என்பது தினசரி விவாதப் பொருளாக இருந்தது. கட்டுமானப் பணிகள் தொடங்கிவிட்டன, பாபா அதில் தீவிரமாக ஆர்வம் காட்டினார்.

நானா கேர், நாக்பூரிலிருந்து வந்து, ஜூன் மாத இறுதியில் பாபா திரும்பிச் செல்லும் வரை, குருபிரசாத்தில் ஆண் மண்டலியுடன் தங்கினார். எப்போதேனும் நானா கேர், பாபாவின் உரையை குறிப்பெடுப்பது வழக்கம். மார்ச் 30, 31 தேதிகளில் கடந்த காலகட்டங்களில் வருகை தந்த அவதார புருஷர்கள் ஒவ்வொருவரின் 'பலவீனங்கள்' மற்றும் இறை உணர்வை எய்தும் இரண்டு வழிமுறைகள் குறித்தும் பாபா விளக்கினார்:

**எல்லையற்ற அறிவும், எல்லையற்ற சக்தியும், எல்லையற்ற பேரின்பமும் என்னிடம் இருந்தாலும், இறை-மனிதன் என்ற முறையில், எனது அவதார பணிகளுக்கு எல்லையற்ற சக்தியையும் பேரின்பத்தையும் நான் பயன்படுத்துவதில்லை. இல்லையெனில், முழு உலகின் உதவியற்ற தன்மையை நான் எப்படி அனுபவிக்க முடியும்? மனிதகுலத்தை துன்பத்திலிருந்து விடுவிப்பதற்காக, நான் எல்லையற்ற துன்பங்களை அனுபவித்து வருகிறேன்; ஏனெனில், குறிப்பாக அவர்களின் நன்மைக்காக, நான் அவதார புருஷராக வருகிறேன். நான் உடல் ரீதியாக மிகவும் துன்பப்படுகிறேன். இதனால்தான் இரண்டு** (வாகன) **விபத்துகளில் என் உடல் முழுவதுமாக நொறுங்கியது.**

**உலகின் அனைத்து பாசாங்குத்தனத்திற்காகவும், அனைத்து பாசாங்குத்தனம் நிறைந்த துறவிகளுக்காகவும் நான் துன்பப்படுவது போல், எனது மன வேதனையும் எல்லையற்றது. இறுதியாக, நான் ஆன்மீக ரீதியில் எல்லையற்ற துன்பங்களை அனுபவித்து வருகிறேன், ஏனெனில் நான் முற்றிலும் சுதந்திரமாக இருந்தாலும், அறியாமையில் எல்லா மனிதர்களுடனும் நான் பிணைக்கப்பட்டிருக்கிறேன். அவர்களுக்காக நான் துன்பப்பட வேண்டும். ஆனால் அவதார புருஷராக, என் எல்லையற்ற அறிவைப் பயன்படுத்துவதால் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் அனைத்தையும் நான் அறிவேன். நான் எனது மனதைப் பயன்படுத்தாமல் அனைத்தும் அறிந்தவனாக இருக்கிறேன்.**

**ஒவ்வோர் அவதார புருஷரும், கடவுளின் அவதாரம் என்றாலும், அவருடைய மனித பக்கத்தைப் பொறுத்தவரை, சில மனித பலவீனங்கள் உள்ளதால், அதற்காகவும் நான் துன்பப்படுகிறேன்.** (**ஸொராஸ்டராக, என்னை வாளால் கொன்றவனை நான் கொன்றேன்.**)

**ராமனாக, பதினான்கு வருடங்கள் வனவாசம் சென்று, பெரும் துன்பங்களை சகித்துக்கொண்டு, ஆதரவற்ற நிலையை அனுபவித்தேன். ராமனாக எனது பலவீனம் என்னவெனில், மக்களின் திருப்திக்காக சீதையைக் காட்டிற்கு அனுப்பியதன் மூலம், நான் அவரைத் துறக்க வேண்டியிருந்தது.**

**கிருஷ்ணராக, கௌரவர்களுக்கு எதிராகப் போரிட வேண்டும் என்ற எனது விருப்பத்திற்குக் கீழ்ப்படிவதற்கு முன்னர், அர்ஜுனனுக்கு எனது பிரபஞ்ச உடலை வெளிப்படுத்தியது எனது பலவீனம். எனது கட்டளையை நிறைவேற்றுவதற்கு முன்னர், எனது தெய்வீகத் தன்மையை அனுபவமாகக் கோரியது, என்னுடைய மற்றும் அர்ஜுனனுடைய பலவீனம்.**

**புத்தராக, எனது பலவீனம் என்னவெனில், நான் நிர்வாணத்தைப் பற்றி** (ஃபனா - FANA STATE) **விளக்கினேன். ஆனால் ஸாஹஜ் சமாதி குறித்து** (ஃபனாவிற்குப் பின்னர் உடனடியாக வரும் பக்கா நிலை - BAQA STATE) **நான் ஒருபோதும் வெளிப்படுத்தவில்லை.**

**இயேசு கிறிஸ்துவாக, என்னுடைய பலவீனம் என்னவெனில், நான் பிதாவோடு** (ஏக இறைவனாகிய உண்மைப்பொருளோடு) **ஒன்றியிருந்தாலும், நான் பரலோகத்தின் தந்தை என்பதை அறிந்திருந்தும், சிலுவையில் அறையப்பட்டபோது, "பிதாவே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கதறினேன்.**

**முஹமதைப் பொறுத்த வரையில், எனது பலவீனம் என்னவெனில், சூழ்நிலைகள் காரணமாக, நான் என்னை கடவுளின் தூதர் என்று அழைத்தேன். ஆனால் குறைந்தபட்சம் என் உடலைத் துறக்கும் முன்னர், என் உண்மையான 'நான் அல்லா'** (ஏக இறைவன்) **என்ற நிலையைப் பறைசாற்றியிருக்க வேண்டும்.**

**அவதார புருஷராக, மெஹர் பாபாவாகிய எனக்கு இரண்டு பலவீனங்கள் உள்ளன. ஒரு பலவீனம் என்னவெனில், நான் அப்பாவி, கபடற்றவன்** (BHOLA). **அதாவது, நான் என் அன்பர்கள் அனைவருடனும் நெருங்கிப் பழகுகிறேன், அவர்கள் விரும்புவதைச் சொல்ல அனுமதிக்கிறேன். அவதார புருஷராக நான் அடுத்த காலகட்டத்தில், 700 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வரும்போது, இரண்டாவது பலவீனத்தை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.**

இறை உணர்தல் (GOD REALIZATION) பற்றி விளக்கி, பாபா தொடர்ந்தார்:

**இறைவனை உணர இரண்டு வழிகள் உள்ளன. முதல் வழி அன்பே உருவான இறைவன் மீது அன்பு செலுத்துவது. ஆனால் இந்த அன்பின் பாதை**

**சொல்லொணா துன்பங்களும் சோதனைகளும் நிறைந்ததாக இருக்கும். ஹ:ஃபீஸ் கூறியது போல:**

> **மனமும் புத்தித்திறனும் அன்பை அணுகவே முடியாது.**
> **அன்புள்ளம் படைத்த ஒருவரால் மட்டுமே**
> **அன்பின் வாசலை முத்தமிட முடியும்.**

**இறை அருளால் லட்சத்தில் ஒருவர் இந்த அன்பை அடைய முடியும். இந்த இறையன்பை உங்களுக்கு அருளாதது நல்லது; அதை விழிப்படையச் செய்தால், இந்தப் பிரிவின் நெருப்பில் உக்கிரமாக எரிந்து சாம்பலாகி விடுவீர்கள். தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட மீனைப் போலவோ, அல்லது தண்ணீரின்றி தாகத்தால் மடிந்துபோகும் மனிதனைப் போலவோ இருப்பீர்கள். கடவுளின் கிருபையால் அரிதான ஒருவர் மட்டுமே கொடூரமான துன்பத்தையும், துயரத்தையும் கடந்துசெல்ல முடியும். இது மிகவும் கடினமான பாதை.**

**இரண்டாவது வழி, அவதார புருஷரின் மேலங்கியை (தாமன்) இறுதிவரை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வது; அதாவது, உங்கள் புத்தித்திறனையோ அல்லது மனதையோ முற்றிலுமாகப் பயன்படுத்தாமல் அவருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய விருப்பத்திற்கிணங்க செயல்படுவது. உங்கள் கீழ்ப்படிதல் தலையும்** (புத்தித்திறன்) **பாதமும்** (அடித்தளம்) **இல்லாததாக** (HEADLESS & FOOTLESS) **இருக்க வேண்டும். ஆறு ஆன்மீகத் தளங்களின் அற்புதமான மாயையின் அனுபவங்களை அனுபவிக்காமல், இது உங்களை நேரடியாக இறை உணர்தலுக்கு அழைத்துச் செல்லும்.**

**இவ்வாறு அவதார புருஷருக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படியும் தருணத்தில், நொடிப்பொழுதில், அவருடைய அருட்பார்வை உங்கள் மீது திரும்பும்போது, இறை உணர்வை அடையப் பெறுகிறீர்கள்.**

**நான் இயேசு கிறிஸ்துவாக இருந்தபோது, யூதாஸ் பல ஆண்டுகளாக எனது நெருங்கிய தோழராக இருந்தார். ஆனால் அதற்குரிய நேரம் வந்தபோது, அவர் நம்பிக்கைக்குக் குந்தகம் விளைவித்து, மரணதண்டனையை நிறைவேற்றுபவர்களிடம் என்னை ஒப்படைத்தார். எனக்கு மிகவும் பிரியமான பீட்டர் கூட, எனது மரணதண்டனையை எதிர்கொள்ளும் நேரம் வந்தபோது என்னை மறுத்தார்.**

**எனவே, எனது மேலங்கியை (தாமன்) இறுதிவரை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வது என்பது மிகவும் கடினம். அது என் அருளால் மட்டுமே சாத்தியம்.**

ஆதி 30ஆம் தேதி மும்பையிலிருந்து ஜிம் மற்றும் நரிமனுடன் வந்தார். தக்கத் தருணத்தில் வராமல் அவதார புருஷரின் பலவீனங்களைப் பற்றிய விளக்கத்தைத் தவறவிட்டதற்காக, பாபா அவர்களை லேசாகக் கடிந்து கொண்டார். அன்று அவர் அந்த மூவருக்கும் ஒரு புனைப்பெயரை

(செல்லப்பெயர்) வழங்கினார்: ஆதி - குண்டா (குண்டர்); ஜிம் - கதா (கழுதை); மற்றும் நரிமன் - மாமா மாவலி (முரட்டு மாமா).

அன்று மதியம் எம்.என். மிர்ஸாவை குருபிரசாத்திற்கு அழைத்து வந்தார் ஆதி. பாபா மிர்ஸாவிடம் தினமும் பிரார்த்தனைகளை மொழியுமாறு அறிவுறுத்தினார்; மேலும் ஆறு மாதங்களுக்குள் அவரது நிலைமை மேம்படும் என்று அவருக்கு உறுதியளித்தார். ஹாரி டெடோல்சொவும் அன்று பாபாவை சந்தித்தார்.

ஏற்கனவே அறிவுறுத்தியபடி, 1963 மார்ச் 31 ஞாயிறு அன்று, ஸொராப்ஜி ஸிகன்போரியா மற்றும் கிஷின்சந்த் கஜ்வானி மும்பையிலிருந்து குருபிரசாத் வந்தடைந்தனர். கஜ்வானி பாபாவுடன் நிரந்தரமாக வாழ விரும்பினார். மதியம் 2:00 மணியளவில் இருவரையும் சந்தித்த பாபா, முதலில் கஜ்வானியிடம், **"உங்களுக்கு நான் வேண்டுமா அல்லது கடவுள் வேண்டுமா?"** என்று கேட்டார்.

அதற்கு கஜ்வானி, "நீங்கள், பாபா!"

**"அப்படியானால் நான் கூறியபடி செய்வீர்களா?"**

கூப்பிய கைகளுடன் கஜ்வானி, "ஆம், பாபா" என்றார்.

**"உங்கள் குடும்பத்துடனான அனைத்து தொடர்புகளையும் நீங்கள் துண்டிக்க வேண்டும்; நான் சொல்வதைக் கேட்டு எனது விருப்பங்களை நிறைவேற்றுங்கள்."**

"நான் அதற்குத் தயாராகவே வந்திருக்கிறேன். எனது மகன் நரிமன் நாளை நியூயார்க் நகருக்குச் செல்ல இருக்கிறான்; நான் குடும்பம், வணிக விஷயங்களில் இருந்து துண்டிக்கப்பட்டு, இன்று முதல் உங்களுடன் இருப்பேன் என்று அவரிடம் தெரிவித்தேன்."

**"உங்களை நிர்வாணமாக மும்பையில் அலைந்து திரியச் சொன்னால் நீங்கள் அதைச் செய்வீர்களா?"**

"உங்கள் அருள் எனக்கு அதைச் செய்ய உதவும்" என்று கஜ்வானி கூறினார்.

**"அருளை ஒதுக்கி வைத்துவிட்டு நீங்கள் அதைச் செய்வீர்களா என்று மட்டும் சொல்லுங்கள்?"** பாபா பதிலைக் கோரினார்.

"ஆம், நான் செய்வேன்," கஜ்வானி கூறினார்.

பாபா மகிழ்ச்சியடைந்தார்; தொடர்ந்து ஸிகன்போரியாவிடம் கேட்டார், **"உங்களுக்கு நான் வேண்டுமா அல்லது கடவுள் வேண்டுமா?"**

"நீங்கள், பாபா!"

**"நான் சொன்னபடி செய்வீர்களா?"**

"ஆம்."

"மும்பையில் நிர்வாணமாக நடந்து திரிவீர்களா?"

ஸிகன்போரியா உடனே, "என் அடக்கமான இயல்பு என்னை இதைச் செய்ய அனுமதிக்காது; இந்த உத்தரவைத் தவிர, நான், நீங்கள் கூறுவதைக் கேட்பேன், பாபா, நீங்கள் சொல்லும் எதையும் செயல்படுத்துவேன்" என்றார்.

**“உங்கள் தீர்மானத்தில் நீங்கள் தோல்வியடைந்துவிட்டீர்கள்; நீங்கள் ‘ஆம்’ என்று சொல்லியிருக்க வேண்டும். அதைச் செய்ய நான் உங்களுக்கு உத்தரவிடப் போவதில்லை!”**

“ஆனால் நான் எப்படி பாசாங்குத்தனத்துடன் இருக்க முடியும்?” ஸிகன்போரியா முறையிட்டார்.

பதிலுக்கு, பாபா சிரித்துக்கொண்டே ஸிகன்போரியாவை மன்னித்து, **“கவலைப்படாதீர்கள். உங்கள் இருவரின் அன்பும் எனக்குத் தெரியும், நானும் உங்களை மிகவும் நேசிக்கிறேன்”** என்று கூறினார்.

அதற்குப் பிறகு பாபா, கஜ்வானியிடம் ஹஸ்ரத் பாபாஜானின் சமாதிக்குச் சென்று, தினமும் ஒரு மணிநேரம் அங்கு தலைவணங்கி பிரார்த்தனை செய்யுமாறு அறிவுறுத்தினார். பூனாவில் இருந்தபோது, அவர் மும்பைக்கு இடையிடையே செல்ல அனுமதிக்கப்பட்டார், இது சில மாதங்கள் தொடர்ந்தது. ஸிகன்போரியா மும்பைக்குத் திரும்பிச் சென்றார், ஆனால் ஒவ்வொரு வாரமும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் குருபிரசாத்திற்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டார்.

மார்ச் 31 மதியம் 2:30 மணிக்கு, ராணுவ மேஜர் ஜெனரல் பண்டாரி (ARMY MAJOR GENERAL BHANDARI), அவரது மனைவி கம்லா (KAMLA) மற்றும் அவர்களது இரண்டு மகள்கள் பாபாவின் தரிசனத்திற்காக குருபிரசாத் வந்தனர். பாபா அவரிடம் கூறினார்:

**இந்தியாவைத் தாக்க சீனா தயங்குகிறது. இதைக் குறித்து சீனாவில் இரண்டு கருத்துக்கள் உள்ளன. சீனா தாக்கினால், இந்தியாவில் பல குழப்பங்களும் துன்பங்களும் ஏற்படும்; தாக்கவில்லை என்றால், இந்தியாவில் பதற்றமும் அமைதியின்மையும் நிலவும். எதிர்வரும் பதினைந்து நாட்கள் மிகவும் முக்கியமானவை. எந்த வழி சிறந்தது என்பதை நான் தீர்மானிக்க வேண்டும். ஆனால், இறுதியில் இந்தியா வெற்றியை சந்திக்கும். நான் உலகம் முழுவதையும் கண்காணித்து வருகிறேன். அனைத்து அதிகாரமும் என்னிடம் உள்ளது.**

கோஹெர், கேட்டி இவர்களின் சகோதரர் ஆஸ்பி (ASPI), ராணுவ மேஜராகப் பணிபுரிந்தார், மேலும் சமீபத்திய இந்திய-சீனப் போரின் போது, அவர் சிக்கலான சூழல் ஒன்றில் சிக்கிக்கொண்டார். அவரை நினைவுகூர்ந்த பாபா, இதைக் குறிப்பிட்டு, இரு நாடுகளுக்கும் இடையேயான மோதலின் போது, ஆஸ்பிக்கு என்ன நிகழ்ந்தது என்பதை எரச்சிடம் எடுத்துரைக்குமாறு கேட்டுக் கொண்டார். எரச் இவ்வாறு விவரித்தார்:

ஆஸ்பி, போர் எல்லைக்கு அனுப்பப்பட்டார்; புறப்படுவதற்கு முன்பு, கேட்டி, அவர் மீதுள்ள பாசத்தில், அவருடைய பாதுகாப்பை விரும்பி, பாபாவின் லாக்கெட் ஒன்றைக் கொடுத்து, எப்பொழுதும் அவரது ராணுவ சீருடையின் உள்ளே அணியவும், அவருடைய பெயரை உச்சரிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆஸ்பி, பாபாவை நம்பவில்லை என்றாலும், அவருக்கு மதிப்பளிக்கும் விதத்தில், “சரி கேட்டி, உன்னை மகிழ்ச்சியடையச் செய்ய நான் அதை அணிவேன்” என்றார்.

இந்தியப் படைகள் ஒன்றன் பின் ஒன்றாக தோற்கடிக்கப்பட்டன. ஆஸ்பியும் தனது படைப்பிரிவுடன் பின்வாங்க உத்தரவிடப்பட்டார். அவர் சீனர்களால் சூழப்பட்டதால் காட்டுக்குள் நுழைந்து பின்வாங்கத் தொடங்கினார். அவர்கள் பின்வாங்கும் போது, ஒரு கட்டத்தில், பெரிய ஜிப்ரால்டர் (GIBRALTAR) போன்ற பாறையைக் கண்டனர். 90° செங்குத்தாக ஏற முயற்சி செய்வதைத் தவிர வேறு வழியில்லை. தண்ணீர், உணவு எதுவும் இல்லாமல் படைவீரர்கள் சோர்வாகக் காணப்பட்டனர்; கடுமையான குளிர் வேறு. எப்படியோ ஆஸ்பி முன்னோக்கிச் செல்லத் துணிந்தார், அதிசயமாக இரவில் ஒவ்வோர் அடியிலும் பாதைகள் சீராகி, அவர்களுக்காகத் திறக்கப்பட்டது. ஒருமுறை அவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது, திடீரென அவர் தனது வீரர்கள் எவ்வளவு சோர்வாக இருந்தாலும், அந்த இடத்தில் ஓய்வெடுக்கக்கூடாது என்பதை உணர்ந்து, அவர் வீரர்களுடன் முன்னோக்கிச் சென்றார்; ஒரு மணி நேரத்திற்குள் சீனர்கள் அந்த இடத்தில் இருப்பதைக் கண்டுபிடித்தார். அவர்கள் பிடிபட்டிருந்தால் அவர்களுக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

மலை மீது ஏறும் போது ஆஸ்பி தனது பல வீரர்களை இழந்தார்; பின்னர் அவர்கள் கடக்க முடியாத, கர்ஜிக்கும், விரைந்தோடும் நதி ஒன்றைச் சென்றடைந்தனர். இந்த நேரத்தில் மிகவும் நம்பிக்கையற்ற நிலையில் இருந்தவர்கள் நதியில் குதித்து நீரில் மூழ்கினர்; ஆனால் பின்தொடர்ந்து வந்த சில நபர்களுடன் ஆஸ்பி ஒரு பாலத்தைக் கண்டுகொள்ள நேர்ந்தது. (அது உண்மையாகவே இருந்தது என்பதை அவர் நம்பவில்லை என்று அவர் பின்னாளில் ஒருமுறை கூறினார், அத்தகைய தொலைதூர அடர்ந்த காட்டில் யார் பாலம் கட்டுவார்கள் என்ற எண்ணத்தில்.) அவர்கள் அனைவரும் அதைக் கடந்து, கடைசியாக, பதினான்கு நாட்கள் மற்றும் பெரும் இழப்புகளுக்குப் பின்னர், இந்திய எல்லையை வந்தடைந்தனர்.

அவர்களின் பூட்ஸ் கால் தோல்களில் மிகவும் இறுக்கமாக ஒட்டிக்கொண்டது, அவருடைய 75 படை வீரர்களின் கால்கள் துண்டிக்கப்பட வேண்டிய கட்டாயம். ஆஸ்பி ஒருவர் மட்டுமே அந்த இடர்பாடுகளிலிருந்து காயமின்றி தப்பினார். ஆஸ்பி, பாபாவைக் கண்டதும், அவர் காலில் விழுந்து, தனது படை வீரர்களுக்காகத் கதறி அழுதார். பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், கவலைப்பட வேண்டாம் என உறுதியளித்து, அவர் மீண்டும் போர் எல்லைக்குள் செல்ல வேண்டும், ஆனால் அவர் பத்திரமாக திரும்பி வருவார் என்றும், அதை அவரது மனைவியிடம் கூறுமாறும் அறிவுறுத்தினார்.

இதேபோன்ற ஒரு சம்பவம் டெல்லியைச் சேர்ந்த பாபாவின் தீவிர சீக்கிய பக்தர்களில் ஒருவரான டேக்சந்த் (TEKCHAND) என்பவரை உள்ளடக்கியது. அவரது கதையை எரச்சிடம் எடுத்துரைக்குமாறு பாபா கேட்டுக்கொண்டார்:

இந்திய இராணுவத்தின் எல்லை வழிச் சாலை அமைக்கும் குழுவில் இருந்த டேக்சந்த், 1962 நவம்பர் 9 அன்று ‘ஸுபன்ஸிரி’ (SUBANSIRI) பிரிவில் 700 நிராயுதபாணியான, போரில் பங்கேற்காத நபர்களை, சீனத் துருப்புக்கள் சுற்றி வளைக்கத் தொடங்கியது. அனைத்தையும் விட்டுவிட்டு உடனடியாக பின்வாங்குவதற்கான உத்தரவுகளை அடையப் பெற்றனர். உணவும், ஆயுதமும் இல்லாததால் பீதி அவர்களைப் பற்றிக்கொண்டது! எப்படியோ சீனர்கள் குறுக்கே புகுந்து, அவர்களுக்கும் அவர்களின் தளத்திற்கும் இடையேயான அனைத்து தகவல்தொடர்புகளையும் துண்டித்தனர். ஆனால் டேக்சந்த் தனது குழுவினருக்கு, ‘அவதார் மெஹர் பாபா அவர்களுடன் இருந்ததால், எந்தத் தீங்கும் ஏற்படாது, அவர்கள் பத்திரமாகத் திரும்பிச் செல்வார்கள்’ என்ற நம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டத் தொடங்கினார். பாபாவைப் பற்றி டேக்சந்த் அவர்களிடம் கூறிய அனைத்தும் அவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்தது.

சில மலைவாழ் பழங்குடி மக்களின் உதவியுடன், டேக்சந்த் 700 பேருடன் காடுகளின் வழியாக மீண்டும் மலையேறினார். அவர்கள் ஏழு நாட்கள் இரவும் பகலும், முன்பின் தெரியாத நிலப்பரப்பில், உணவின்றி, கடுமையான குளிர், மழை மற்றும் சேற்றில் போதுமான பாதுகாப்பு உடைகளும் இல்லாமல் பயணித்தனர். வழி நெடுகிலும், டேக்சந்த் பாபாவின் புகழ் பாடும் வகையில் பஜனைகளைப் பாடிக்கொண்டிருந்தார்; பிற அனைவருடன் ஒன்றிணைந்து பாபாவின் நாமத்தை உச்சரித்தார். வழியில் அவர்கள் மூச்சைத் திணறடிக்கும் சிரமங்களை சந்தித்தனர். ஒரு கட்டத்தில் அவர்கள் கொந்தளிக்கும் நீரில் குதித்து நீந்த வேண்டியிருந்தது. பலர் பசியால் துடித்து, தற்செயலாக கைவிடப்பட்ட ராணுவ கூடத்தில் கிடைத்த டிடிடி (DDT) மருந்தை, மாவு என்று தவறுதலாக நினைத்து உண்டு, கடுமையாக நோய்வாய்ப்பட்டனர், தொடர்ந்து விஷத்தை வாந்தி எடுக்கவே, பிற அனைவரும் அவர்களுக்கு உதவினர். இவை அனைத்திற்கும் மத்தியில், சீனர்களால் உளவு பார்க்கப்படும் நிலையான அச்சமும் விடாது தொடர்ந்தது.

கடைசியாக கடினமான பயணம் முடிவுக்கு வந்தது, அனைவரும் அஸ்ஸாமில் தங்கள் தளத்திற்கு, பட்டினியால் வாடி வதங்கி, கந்தலான ஆடைகளுடன், ஆனால் உயிரிழப்பு எதுவும் இல்லாமல் திரும்பி வந்தனர். உண்மையில், அவர்களில் ஒருவர் கூட உறைபனியால் பாதிக்கப்படவில்லை, அல்லது கொடூரமான குளிர் இருந்தபோதிலும் மார்பு பிரச்சினைகள் எதுவும் இல்லை. இவ்வாறு டேக்சந்த் எல்லையிலிருந்து திரும்பி வந்தவர், பாபாவின் அன்பின் மூலம் தனது 700 பேரை பாதுகாப்பாக கொண்டு வருவதற்குக் கருவியாக இருந்தார்.

எரச் கூறி முடித்ததும், பாபா தொடர்ந்தார்: “**இது நான் செய்த அதிசயம் என்று கூறுகிறார்கள், ஆனால் இது எனது அதிசயம் அல்ல. எனது பெயரின் அதிசயம்**!

**“நான் என் உடலைக் கைவிட்ட பின்னர், உலகம் பல அதிசயங்களை அனுபவிக்கும். மேலும், மெஹராபாத், மெஹராஸாத், குருபிரசாத் மற்றும்**

**நான் இருந்த எல்லா இடங்களிலும், திரள் திரளாக மக்கள் வெள்ளம் அலைமோதும். ஆனால் அது அப்போது பயனற்றதாக இருக்கும்; இது இப்போது என்பதுதான் முக்கியம்! நம்பிக்கையும், அன்பும், கீழ்ப்படிதலும் எனக்கு மிகவும் முக்கியம்.** (அவருடன் இருக்கும்) **நீங்கள் உண்மையில் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.**"

ஜெனரல் பண்டாரியும் அவரது மனைவியும் குருபிரசாத்தில் பாபாவுடன் சிறிது நேரம் அமர்ந்து, மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர்.

அன்றைய தினம் பூனா மைய சேவகர்களிடையே நடைபெற்ற கூட்டத்தில், அவர்களின் புதிய கட்டிடத்திற்கான உத்தேச நிதி குறித்து விவாதிக்கப்பட்டது. சதாஷிவ் தனது வீட்டில் ஒன்றை விற்று முதலாக்கிய பணத்தை வழங்குவதாக உறுதியளித்திருந்தார், ஆனால் இப்போது மனம் மாறியதாகத் தெரிந்தது. இதனால் சீற்றமடைந்த பாபா, ஒரு மாதம் தண்ணீர் மட்டுமே அருந்தி உபவாசம் கடைப்பிடிக்குமாறு கட்டளையிட்டார். பாபா, பின்னர் அவரை மன்னித்து, சதாஷிவின் பங்காக ரூ.10,000 நன்கொடையாக வழங்குமாறு கூறினார்.

எந்த விவாதங்களுக்கும், விளக்கங்களுக்கும் இதுவே கடைசி நாள் என்றும், குருபிரசாத்தில் தான் தங்கியிருக்கும் காலம் முழுவதும் மகிழ்ச்சிகரமான மற்றும் இசை நிகழ்ச்சிகள் நிறைந்த சூழலைத் தவிர வேறு எதையும் அவர் விரும்பவில்லை என்றும் பாபா கூறினார்.

1963 ஏப்ரல் 1 அன்று காலை 10:00 மணிக்கு, நோஷிர் ஈரானி, பாபாவை சந்தித்து, அவர் பாபாவுடன் நிரந்தரமாக மெஹராஸாத்தில் தங்க விரும்புவதாக கூறியபோது, விரைவில் அவரை அழைப்பதாக உறுதியளித்தார்.

ஏப்ரல் 14 முதல், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், பாபா தரிசனம் வழங்குவதாக அறிவித்திருந்தார். மும்பை குழுவில் சிலர் 4ஆம் தேதி காலை 11:00 மணிக்கு பூனாவிற்கு வந்தனர். ரயில் நிலையத்திலிருந்து அவர்களை அழைத்துவர பாபா தனது காரை அனுப்பினார்; பாபா அவர்களை குருபிரசாத்தில் பின் அறையில் சந்தித்தார். அவர் ஒவ்வொருவரையும் தழுவி அவர்களுடன் வேடிக்கையாக உரையாடினார். ஃப்ரீனி தாதாச்சாஞ்சியிடம் அவர் உருண்டு திரண்டு இருப்பதாகக் குறிப்பிட்டு, அவர் அதிகமாக உணவு உண்கிறாரா என்று கேட்டார். பாபா ஒரு மகிழ்ச்சியான, களிப்பூட்டும் மனநிலையில் காணப்பட்டார், மேலும் பூனாவில் தங்கியிருப்பது பற்றி கூறினார், "**அடுத்த மூன்று மாதங்களுக்கு, நான் முழுமையாக ஓய்வெடுக்க விரும்புகிறேன்.**" மோபோஸ் ஹோட்டலுக்கு (MOBO'S HOTEL) அவர்களை அனுப்பிவிட்டு, மதியம் 2:00 மணிக்கு மீண்டும் அழைத்தார். அதற்குப் பிறகு, நடைமுறையில் ஒவ்வொரு நாளும், சில நேரங்களில் ஒரு நாளைக்கு இரண்டு முறை கூட, பாபா, மும்பை குழுவை குருபிரசாத்திற்கு அழைத்தார்.

அன்று மதியம் குழு திரும்பி வந்தபோது, பாபா தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். அவர்களை அமரச் சொல்லி, பின்னர், ஏற்கனவே வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட ஒரே ஒரு ஸொராஸ்ட்ரியன் சத்குருவைப் பற்றி அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்:

**அவர் பெயர் அஸார் கைவன்** (AZAR KAIVAN). **ஸொராஸ்டர் வாழ்ந்த வெகு காலத்திற்குப் பின்னர் அவர் வாழ்ந்தார். இறை-உணர்வை அடையப் பெறுவதற்காக, உடலின் குறுக்காகக் கைகளை வைத்து, ஒரு பிணத்தைப் போலப் படுத்தேயிருந்து 40 நாட்கள் உண்ணாமல், அருந்தாமல், இருந்த இடத்திலிருந்து நகராமல், பலவீனத்தால் தனது குரலை இழக்கும் வரை, 'எஸ்தான், எஸ்தான், எஸ்தான்' என்று கூறிக்கொண்டிருந்தார். இந்த நிலையிலும் அவர் அமைதியாக 'எஸ்தான்' என உச்சரிப்பதை மீண்டும் தொடர்ந்தார். 40 நாட்களுக்குப் பின்னர், அவர் கண்ட காட்சி மூலமாக அந்தக் காலத்தின் பரிபூரண குருநாதர் ஒருவரிடம் அவர் வர நேர்ந்தது. சொல்லொணா சிரமங்கள் மற்றும் சோதனைகளுக்குப் பின்னர், அவருக்கு இறை உணர்வு வழங்கப்பட்டது.**

ஷிராஸ் நகரின் குதுப் அத்தரின் (QUTUB ATTAR OF SHIRAZ) கீழ் ஹாஃபீஸின் கடினமான 40 ஆண்டுகளைப் பற்றி பாபா விவரித்தார், "**ஹாஃபீஸ் தனது குருநாதரின் காலடியில்** (உண்மையில்) **40 ஆண்டுகள் தனது தலையை அறைந்த பின்னர், அவருடைய குருநாதர் அவருக்கு ஒரே நொடியில் இறை உணர்வை வழங்கினார். ஆனால் முதலில் அவர் அவருடைய குருநாதரின் பாதத்தின் தூசியாக மாறவேண்டி இருந்தது, அது ஒரு வேடிக்கை நிகழ்வு அல்ல!**"

900 ஆண்டுகளுக்கு முன்பு (1025-1135) வாழ்ந்த திபெத்திய சத்குரு மிலரேப்பாவைப் (SADGURU MILAREPA) பற்றியும் பாபா விவரித்தார்:

**அவர் ஒரு செல்வந்தரின் மகன், ஆனால் மிலரேப்பாவின் ஏழு வயதில், அவனது தந்தை காலமானார்; மேலும் அவ்வப்போது உலகில் நடப்பது போல், அவனது சிறிய தந்தை, அவனது தாயை கற்பழித்து, குடும்ப சொத்துகளைக் கையகப்படுத்தினார். தாயார் வெறுப்படைந்து, பழிவாங்கவும், அவரை அழிக்கவும், சூனிய கலைகளைக் கற்றுக் கொள்ளுமாறு தனது மகனிடம் கேட்டுக்கொண்டார். சிறுவன் இளமையிலேயே அவற்றைக் கற்றுக்கொண்டு இயற்கையின் அழிவு சக்திகளைக் கையாளுவதில் திறன் படைத்தவனாகத் திகழ்ந்து, அவனது சிறிய தந்தையின் குடும்பம் மற்றும் பலரை கடுமையான புயலால் அழித்தான். வன்முறைச் செயலுக்குப் பின்னர், ஏன் இப்படி ஒரு கொலைச் செயலைச் செய்தேன் என்று யோசித்துக்கொண்டே அமர்ந்திருந்தான். அவன் ஒரு மேல்நிலை ஆன்மாவாக இருந்ததால், இயற்கையாகவே உலக நோக்கங்களுக்காக இத்தகைய மோசமான காரியத்தைச் செய்ததற்காக மனம் வருந்தினான்.**

மிகுந்த மனவருத்தத்தில், அவன் தனது சூனிய கலைகள் குறித்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு, குருநாதர் ஒருவரைத் தேடிச் சென்றான். (அவன் குரு ரோங்டனை சந்தித்தபோது, அவர் மிலரேப்பாவை, மார்ப்பாவிடம் அனுப்பி வைத்தார்.) பல இடையூறுகளுக்குப் பின்னர், அவன் தனது குருநாதர் மார்ப்பாவைக் கண்டுகொள்ள முடிந்தது. மிலரேப்பாவிற்கு வயது 38. இறை உணர்வை அடையப் பெறுவதற்கு ஈடாக, அவரிடம் புத்தகங்களைத் தவிர வேறு எதுவும் இல்லை. மார்ப்பா அவரை ஆறு வருடங்கள் தனது சேவகனாக ஏற்றுக்கொண்டார், ஆனால் அவருக்கு உண்ண உணவு எதுவும் வழங்கவில்லை; கடினமான முழு நாள் பணிக்குப் பிறகு, மிலரேப்பா கிராமத்திற்குச் சென்று யாசித்து உணவைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. மிலரேப்பாவிற்கு, தனது வெறும் கைகளால் கற்களாலான சிறிய குடில்களைக் கட்டுவது போன்ற கிட்டத்தட்ட சாத்தியமற்ற, கடினமான பணிகள் வழங்கப்பட்டன. அதைக் கட்டி எழுப்பியதும், குருநாதர் மார்ப்பா முழுக் கட்டிடத்தையும் ஏதோ ஒரு சாக்குப்போக்கில் தகர்த்துவிடுவதும் வழக்கமாக நடந்தது.

இந்த வழியில், அவர் தொடர்ந்து துன்புறுத்தல்களுக்கு ஆளானார்; ஆனால் மிலரேப்பா தனது குருநாதரின் ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படிந்து, அவரது சேவையில் கண்ணும் கருத்துமாக இருந்தார்; இவ்வண்ணம் அவர் மார்ப்பாவின் கால்களின் தூசியாக மாறினார். பல வருடங்கள் இதுபோன்ற துன்பங்களுக்குப் பின்னர் ஒரு நாள், சத்குரு, தமது சீடரின் அன்பு மற்றும் கீழ்ப்படிதலால் மகிழ்ச்சியடைந்து, ஒரே நொடியில் அவருக்கு இறை-உணர்வை வழங்கினார்; அதற்குப் பிறகு மிலரேப்பா ஒரு பரிபூரண குருநாதர் ஆனார்.

இந்தக் கதைகளை எடுத்துரைத்த பாபா, "நீங்கள் எவ்வளவு திறமையற்றவர் என்பதை அறிந்து, நான் உங்களுக்கு இதுபோன்ற கட்டளைகளை வழங்காமல், எனது காலடிகளில் தூசியாக மாறும்படியும் உங்களைக் கேட்டுகொள்ளாமல், என்னை நேசிக்கவும், எனக்குக் கீழ்ப்படிந்து, எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொள்ளவும் கூறுகிறேன். நாள் முழுவதும் என்னை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு, எனது பெயரை எப்பொழுதும் உச்சரித்த வண்ணம், குறிப்பாக நீங்கள் உயிரைத் துறப்பதற்கு முன்பும் உச்சரிக்க வேண்டும்."

பாபாவின் முகம் மிகவும் சோகமாகத் தென்பட்டது. அவர் கூறினார், "நான் கடவுள், ஆனால் உங்களில் எவரும் என்னைப் பார்க்கவும், புரிந்துகொள்ளவும் முடியாது, நான் உங்களுக்குப் பல விஷயங்களைச் சொல்கிறேன், ஆனால் அதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது.

"கடவுள் மீதான எதிர்ப்பு உச்சத்தை எட்டியுள்ளது. மதத்தின் பெயரால் பல பாவங்கள் இழைக்கப்படுவதால், எனது நோக்கத்தை நிறைவேற்றும் விதத்தில், விரைவில் அனைத்தையும் முடிக்க வேண்டும். நான் எனது மௌனத்தைக் கைவிடும்போது, நான் யார் என்பதை உணரவைக்கும்

**அனைத்தும் நடக்கும். அற்புதங்களுக்கு எந்த மதிப்புமில்லை. நான் உங்கள் மத்தியில் இருக்கும் போது, நான் கூறுவதற்குக் கீழ்ப்படிந்து, எனது தாமனைப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள். பீட்டரும் கிறிஸ்துவை மறுத்தார். ஒரு வருடத்தில் நான் எனது மௌனத்தைக் கலைத்து, உடலைக் கைவிடுவேன். இது விரைவில் நடக்கும்.**"

பாபா, பலமுறை, திரும்பத் திரும்ப இவ்வாறு எடுத்துரைத்தார், "**கடவுளைத் தவிர வேறு எதுவும் இல்லை! இந்த உலகம் ஒரு நிழலின் நாடகம்! உங்கள் கனவுகளைப் போலவே இதுவும் ஒரு விழிப்பு-கனவு. நீங்கள் உண்மையில் விழித்திருக்கும்போது, உங்களுக்குத் தெரியும். முதல் ஆன்மீகத் தளத்தில் ஒருவர் ஓய்வெடுக்கக்கூடாது; ஆனால் அதன் வழியாக விரைந்து செல்ல வேண்டும். மூன்றாவது ஆன்மீகத் தளத்தில், நான்காவது ஆன்மீகத் தளம் வழி கடந்து செல்லும் படிக்கல் அருகில் இருப்பதால் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும்.**"

பாபா புன்னகையுடன் இவ்வாறு கூறி முடித்தார், "**இப்போது, நீங்கள் அனைவரும் முதல் ஆன்மீகத் தளத்தில் செல்வது போல விரைந்து செல்லுங்கள்!**"

மும்பையிலிருந்து சிலர் மெஹர்ஸ்தானின் (MEHERSTHAN) திறப்பு விழாவுக்காக ஆந்திராவில் கொவ்வூருக்குச் சென்றிருந்தனர், சிலர் செல்லவில்லை. அவர்கள் குருபிரசாத்திற்கு வந்தபோது, முதலில் பாபா அங்குச் செல்லாதவர்களைக் கடுமையாகக் கண்டித்து, அதைக் குறித்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தினார். (அவர் பூனாவைச் சேர்ந்த ஷிண்டே, காம்ப்ளே ஆகியோருடன் அவ்வாறே நடந்து கொண்டார், அவர்களும் விழாவில் கலந்து கொள்ளவில்லை). பாபா, நர்கிஸ் தாதாசாஞ்சியிடம் அவர் கலந்து கொள்ளாததன் காரணத்தைக் கேட்டதற்கு, அவர் உடல்நிலை அனுமதிக்கவில்லை என்று பதிலளித்தார். (அவருக்கு இதயக் கோளாறு இருந்தது.) பாபா உடனே, "**நீங்கள் கொவ்வூரில் உயிரைத் துறந்திருந்தால் அதிர்ஷ்டசாலியாக இருந்திருப்பீர்கள்!**" என்றார்.

ஆனால் இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா, கோஹெரிடம் நர்கிஸின் இரத்த அழுத்தத்தை சோதனை செய்ய சொன்னபோது, அது மிகவும் அதிகமாக இருந்தது. பாபா அவரிடம், "**உங்கள் ஆரோக்கியத்தில் நீங்கள் ஏன் கவனமாக இருக்கவில்லை?**" என்று கேட்டார்.

நர்கிஸ் அடக்க முடியாமல் சிரித்தார். பாபா, "**ஏன் சிரிக்கிறீர்கள்?**" என்று கேட்டதற்கு அவர், "இரண்டு நாட்களுக்கு முன்னால் என்னை, கொவ்வூருக்குப் போகாததால் திட்டினீர்கள், இன்று என் உடல்நிலையைக் குறித்து அலட்சியமாக இருப்பதாகக் கண்டிக்கிறீர்கள்" என்றார்.

"**அதுதான் என் வழி**" என்று பாபா பதிலளித்தார். "**நான் சொல்வதைத் தொடர்ந்து செய்யுங்கள்!**"

இந்த முறை பாபா தமது மும்பை குழுவிடம் அதிக கவனம் செலுத்தினார், மேலும் அவர்கள் அனைவரும் அருந்துவதற்கு நிறைய 'ஷர்பத்' (அன்பு) வழங்கினார்.

ருஸ்தம் தாதாசாஞ்சியின் மனைவி ஃப்ரீனி, ஹோஷங் தாதாசாஞ்சியின் மனைவி ஹவோவி (HAVOVI) இருவரும் இந்த நேரத்தில் பாபாவின் அன்பின் அரவணைப்பில் நெருங்கி வந்தனர். உண்மையில், அன்பான 'சாஞ்சி' குடும்பத்திலிருந்து பாபாவின் பாதங்களில் தலை வணங்காமல் இருந்தவர்கள் எவரும் இல்லை.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பாபாவின் தரிசனத்தின் பலனை அடையப் பெறும் ஆர்வத்தில், மும்பை குழு, 'கோரேகாவ்ம் பார்க்'கில் (KOREGAON PARK) அமைந்த 'ஜாம்நகர் இல்லத்தை' (JAMNAGAR HOUSE) மூன்று மாதங்களுக்கு வாடகைக்கு ஏற்பாடு செய்தது. அவர்கள் வந்த அந்த நாளே அங்கு நகர்ந்து, கோடை முழுவதும் தங்கினர். முதல் சில நாட்களுக்கு, அர்னவாஸ், ஃப்ரீனி, நர்கிஸ் மற்றும் டாக்டர் அலு மட்டுமே இருந்தனர்; பின்னர், அவர்களுடன் ரோடா, பானு தாதாசாஞ்சி, கேட்டி, தீனா தலாட்டி, கர்மான் மாசி மற்றும் பிற பார்சி பெண்மணிகளும் இணைந்தனர். ருஸ்தம், ஹோஷங், நரிமன், பெஹராம் (தாதாசாஞ்சி) மற்றும் ஜிம் மிஸ்திரி ஆகியோர் வார இறுதி நாட்களில் அவர்களுடன் வந்து இணைந்தனர். முதல் சில நாட்களுக்கு அவர்களது பங்களாவில் தண்ணீர் இல்லை. இதைக் கேள்விப்பட்ட பாபா, ஒரு சந்தர்ப்பத்தில், **"உலகம் முழுவதும் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்படும்"** என்று கூறினார்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து, 1963 கோடையில் குருபிரசாத் பூந்தோட்டத்திற்கு பல அன்பர்கள் வந்து குவிந்தனர், மேலும் மெஹர் பாபாவின் 'ஏஜஸ் ஸ்வீட் க்ரோணிக்கிள்' (AGE'S SWEET CHRONICLE) நாளிதழில், இந்த விலைமதிப்பற்ற நினைவுகள் இணைக்கப்பட்டுள்ளன...

முதலில் தரிசனம் 14ஆம் தேதி தொடங்க திட்டமிடப்பட்டிருந்தாலும், இது மாற்றப்பட்டு, தரிசனத்தின் முதல் நாள், ஏப்ரல் 7 ஞாயிற்றுக்கிழமை என்று, ஒரு வாரம் முன்கூட்டியே வைக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 3:00 முதல் 6:00 மணி வரை மட்டுமே தரிசனம் வழங்கப்படும் என்று பாபா அறிவித்திருந்தார்; ஆனால், உண்மையில், நிகழ்ச்சிகள் வெள்ளிக்கிழமை தொடங்கி, வார இறுதி முழுவதும் நீடித்தது. இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன, கடந்த மூன்று மாதங்களாக மெஹராஸாத்தில் அவர் செய்து வந்த தீவிர ஆன்மீக உள்பணிகளுக்குப் பின்னர், இது அவருக்குத் தேவையான சில இளைப்பாறும் தருணம் என்று பாபா சுட்டிக்காட்டினார், மேலும் மெஹராஸாத் திரும்பிச் சென்றதும், பணி 'இரு மடங்கு தீவிரத்துடன்' தொடர்ந்தது.

ஏப்ரல் 7 அன்று காலை குருபிரசாத்தில் நடந்த சந்திப்பின் போது, பாபா கேலி செய்தார், **“மூன்று விஷயங்கள் என்னை மகிழ்ச்சியடையச் செய்கின்றன: முதலில், பிரபஞ்சத்தின் துன்பத்தை என் மீது எடுத்துக்கொள்வது. இரண்டாவது, சிறப்பான இசை நிகழ்ச்சியை ரசிப்பது - நல்ல பாடல்களைக் கேட்பது, தேஷ்முக் வகை பாடலை அல்ல! மூன்றாவது, விளையாடுவது - எனது** (மும்பை) **அன்பர்களுடன் சீட்டு விளையாடும் வேளையில் அவர்கள் மூக்குகளைத் தரையில் உரசுவதைப் பார்ப்பது!”**

அன்று பிற்பகலில் குழு கூடியபோது, பாபா அவர்களிடம் கூறினார், **“மெஹராஸாத்தில் கடைசியாக மேற்கொண்ட ஏகாந்தவாசத்தில், எனது உலகளாவிய பணியின் அழுத்தத்தால், கடந்த மூன்று மாதங்களில் நான் மிகவும் துன்பப்பட்டேன். அந்த ஏகாந்தவாச காலகட்டத்தில், அத்தகைய துன்பங்களுக்கு மத்தியிலும், நான் பல விளக்கங்களையும் சொற்பொழிவுகளையும் மண்டலிக்கு வழங்கினேன்.”**

அதைத் தொடர்ந்து பாபா, முந்தைய ஆறு அவதார புருஷர்களின் மனித பலவீனங்களைப் பற்றி மீண்டும் வலியுறுத்தி விளக்கமளித்தார்:

**எல்லா அவதார புருஷர்களுக்கும் ஒரு பலவீனம் இருந்தது. பரிபூரணத்தில் அபூரணமும் உள்ளடங்கும், எனவே அவதார புருஷர்களிலும் ஒரு பலவீனம் உள்ளது. ஸொராஸ்டர் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தபோது, அவரது எதிரியால் முதுகில் தாக்கப்பட்டார். அவர் வாளால் குத்தப்பட்டபோது, உயிரைத் துறப்பதற்கு சற்று முன்னர், அவர் தமது மரணத்திற்கு காரணமாக இருந்த எதிரியின் மீது, தமது ஜெபமாலையை வீசி எறிந்ததும், கொலைக்காரன் நெருப்பில் சிக்கி உடனடியாக எரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது ஸொராஸ்டரின் பலவீனம் - அதாவது, சுய பாதுகாப்புக்கான உள்ளுணர்வு மிகவும் வலுவாக இருந்தது.**

**ராமர் தனது அன்பு மனைவியான சீதாவை, அவர் இதயத்திலும் மனதிலும் பரிசுத்தமானவராக இருந்த போதிலும், அவர் இலங்கையிலிருந்து திரும்பிய பிறகு தன்னை அவ்வாறே நிரூபித்துக் கொண்ட பின்னரும், அவர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். இவ்வாறு ராமர் தனது குடிமக்களின் கருத்துகளுக்கு அடி பணிந்து, அதன் மூலம் தனது சிம்மாசனத்தைத் தக்க வைத்துக் கொண்டார். இதை அவர் செய்திருக்கக் கூடாது.**

**அர்ஜுனன் எப்பொழுதும் கிருஷ்ணருடன் இருந்தார், அவரை ஒரு நெருங்கிய தோழராக மட்டுமே எடுத்துக் கொண்டார். கிருஷ்ணா மஹாபாரதப் போரில், அர்ஜுனனை அவரது உறவினர்களுடன் போரிட கூறியபோது, அர்ஜுனன் மறுக்கவே, தனக்குக் கீழ்ப்படியும் நோக்கத்தில், கிருஷ்ணர் தனது விராட் ஸ்வரூபத்தை** (அனைத்து அண்டங்களையும் உள்ளடக்கிய உலகளாவிய உடலை) **அவருக்கு வெளிப்படுத்தினார். இதை கிருஷ்ணர் செய்திருக்கக் கூடாது.**

**புத்தர் தனது அன்பர்களுக்கு, வாழ்க்கையின் குறிக்கோள் 'நிர்வாண நிலை' என்று விளக்கினார்; ஆனால் நிர்வாண நிலைக்கு அப்பாற்பட்ட மஜ்ஜூப் நிலை, ஸலிக் நிலை மற்றும் குதுப் நிலை போன்ற நிர்வாண நிலையைப் பின்தொடரும் மூன்று நிலைகளை அவர் தனது அன்பர்களுக்கு வெளிப்படுத்தி விளக்கவில்லை. இது புத்தரின் பலவீனம். 'நான் கடவுள்' எனும் (நிர்விகல்ப்) நிலையை மக்களுக்கு அவர் கூறியிருக்க வேண்டும்.**

**கிறிஸ்து, தனது அனைத்து சக்தி, அறிவு மற்றும் பேரின்பத்துடன், சிலுவையில் அறையப்பட்டபோது "ஓ பிதாவே! ஏன் என்னைக் கைவிட்டீர்!" என்று கூறி, வலியால் கண்கலங்கி அழுதிருக்கக்கூடாது.**

**கடைசியாக, முஹமது மனித உருவில் கடவுள் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தவில்லை. அவர் ஒரு தீர்க்கதரிசி அல்லது கடவுளின் தூதர் மட்டுமே என்று கூறி வந்தார். அவர் இறை-மனிதன் என்று தெரிந்திருந்தும், இரண்டும் ஒன்றல்ல என்ற தனித்தன்மையை நிலைநிறுத்தினார். அவர் உயிரைத் துறப்பதற்கு சற்று முன்பேனும், அவர் இறை-மனிதன் என்பதை அறிவித்திருக்க வேண்டும்.**

அப்போது பாபா மிகவும் தீவிரமான தொனியில் கூறினார், "**எனக்கும் எனது பலவீனம் உள்ளது. 'சந்தேகத்திற்கு இடமின்றி' நான் அவதார புருஷர், அதனால் சந்தேகத்திற்கு இடமின்றி என்னுடைய பலவீனமும் என்னில் உள்ளது.**"

அவருடைய பலவீனம் என்னவென்று தெரிந்துகொள்ளும் ஆவலில் அனைவரும் தத்தமது செவிகளைத் தயார் நிலையில் வைத்திருந்தபோது, அவர் தொடர்ந்தார், "**என்னுடைய பலவீனங்களில் ஒன்று, நீங்கள் அனைவரும் என்னை சூழ்ந்திருப்பதை நான் பொறுத்துக்கொள்கிறேன். ஆனால் எனது உண்மையான பலவீனத்தை 700 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வரும்போது வெளிப்படுத்துவேன்! நாம் அனைவரும் ஒன்றிணைந்து இருக்கும் அந்த வேளையில், அவதார புருஷர்களின் பலவீனங்களைப் பற்றி மீண்டும் ஒருமுறை நான் உங்களுக்குச் சொல்வேன், மேலும் 'மெஹர் பாபாவிற்கு இந்த பலவீனம் இருந்தது' என்று!**"

அனைவரும் மனமார சிரித்து மகிழ, பாபா தொடர்ந்து விளக்கினார்:

**நிர்வாண நிலையில்** (FANA STATE)**, ஆரம்பத்தில் எல்லையற்ற வெற்றிடத்தின் அனுபவம் உள்ளது. அதன் பின்னர், எல்லையற்ற பேரின்பம் அல்லது நிர்விகல்ப நிலையின்** (FANA-FILLA STATE) **அனுபவம் உடனடியாகத் தொடர்கிறது. ஒரு குதுப் (சத்குரு) எல்லையற்ற சக்தி, எல்லையற்ற அறிவு, எல்லையற்ற பேரின்பம் ஆகியவற்றை அனுபவித்து, இவை அனைத்தையும் பயன்படுத்துகிறார்; அவதார புருஷர் எல்லையற்ற அறிவை மட்டுமே பயன்படுத்துகிறார்; அவரது எல்லையற்ற சக்தியையும் பேரின்பத்தையும் பயன்படுத்துவதானால், மனித குலத்திற்காக அவர் எப்படித் துன்பப்பட்டு, ஆதரவற்றவராக இருக்க முடியும்?**

உரையாடல் அப்போது கொவ்வூர் மெஹர்ஸ்தானில் சமீபத்தில் நிகழ்ந்த திறப்பு விழாவைக் குறித்ததாக இருந்தது: “**ஆந்திரா மக்கள் என் மீது அன்பு வைத்துள்ளனர். இப்போது, டெஹ்ரா டூனில், என் அன்பர்கள் ‘பாபா தாம்’** (பாபாவின் பெயரில் வழிபாட்டு இல்லம்) **எழுப்புவதற்கான அடிக்கல் நாட்டியுள்ளனர்; ஆனால் அது முடிவதற்குள், நான் எனது மௌனத்தைக் கலைக்கலாம்!**”

சில நிமிடங்கள் ஓய்வுக்குப் பிறகு, பாபா திரும்பி வந்து நிரம்பியிருந்த மண்டபத்தில் தனது வழக்கமான இருக்கையில் அமர்ந்தார். பலர் வெளியே வராண்டாவில் அமர வேண்டியிருந்தது. அன்றைய தினம் பாபாவைத் தழுவியவர்கள், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தரிசனத்திற்கு வர நேர்ந்தால், அவ்வாறு செய்ய வேண்டாம் என்று அவர் அறிவுறுத்தினார். அப்போது பாபா கூறியதாவது:

**நானே ‘இறைப் பாடகன்’, பாடல்கள், இசைக்கருவிகள் மற்றும் பார்வையாளர்கள் என்ற தொடர்ச்சியான அனுபவம் எனக்கு உள்ளது.**

**எல்லையற்ற ஆனந்தம் என்றால் என்ன என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது. ஒரு மனிதன் தனது காதலியுடன் மகிழ்ச்சியாக வாழ்வதுதான் மிகப்பெரிய இன்பம். அந்த இன்பம் உண்மையான எல்லையற்ற பேரின்பத்தின் ஏழாவது நிழல் மட்டுமே. நான் உண்மையானவன், ஆனால் எனது நிழல் (மாயை) உண்மையானது அல்ல. அதற்கு எந்த மதிப்பும் இல்லை. அதன் மதிப்பு முற்றிலும் பூஜ்யம்! அதே போல், உண்மையான பேரின்பத்தின் ஏழாவது நிழலான உலக இன்பத்திற்கு முற்றிலும் மதிப்பு இல்லை. அந்த இறைப் பேரின்பத்தை ஒருமுறை அனுபவித்தால், அதை விட்டுவிட்டு, ஒரு பரிபூரண குருநாதராக இருந்தாலும், இந்த உலக உணர்வுக்குத் திரும்பி வர விரும்ப மாட்டார்!**

மும்பையைச் சேர்ந்த எம்.ஒய். மோகன் (M.Y. MOHAN) என்ற ஒரு புகழ்பெற்ற பாடகரைப் பற்றி கோர்ஷெத் பாபாவிடம் கூறியிருந்தார். பாபா முன்னிலையில் பாட, அந்தப் பாடகர் குருபிரசாத்திற்கு வருவாரா என்று கேட்டு, கிஷோர் மிஸ்திரிக்குத் தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. ‘எம்.ஒய். மோகன்’ என்பதற்கு பதிலாக, ‘மை’ மோகன் (MY MOHAN, எனது மோகன்) என்று கிஷோர் பெயரைப் படித்தார்; பாடகரின் உடனடி பதில், “உங்கள் மோகன் வருவதில் மிகவும் மகிழ்ச்சி!”

எம்.ஒய். மோகன் 1963 ஏப்ரல் 7 பிற்பகல் 3:00 மணிக்கு வந்தபோது, பாபா அவரிடம் ஒரு பஜனைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். ஒரு பாடலுக்குப் பின்னர், அவர் கஸல்களைப் பாடத் தொடங்கினார். மிகவும் இனிமையாக இருந்த பாடகர் மோகனின் குரல், பாபாவிற்குப் பிரியமான முன்னாள் பாடகர் கே.எல். ஸைகலை (K.L. SAIGAL) நினைவுபடுத்தியதால், அவருக்கு ‘மோகன்-ஸைகல்’ (MOHAN SAIGAL) என்று செல்லப்பெயர் சூட்டப்பட்டது. பாபா அவரது இசை நிகழ்ச்சியில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்; நிகழ்ச்சி நிறைவடைந்ததும், அவரது

பாராட்டுக்கு அடையாளமாக ஒரு கைக்குட்டையை வழங்கினார். இதற்குப் பிறகு, மோகன்-ஸைகல் பல சந்தர்ப்பங்களில் பாபாவின் முன்னால் இசை நிகழ்ச்சிகளை நடத்தி, பாபாவின் உண்மையான அன்பராக மாறினார்.

மோகன் பாடிய கஸலின் பொருளைப் புரிந்துகொள்ள முடியாதவர்களின் நன்மைக்காக, பாபா அடிக்கடி விளக்கினார். அப்போது அவர் அளித்த சில விளக்கங்கள் கீழ்வருமாறு:

**ஆன்மீகப் பாதையில், அன்பிற்குரியவர் (குருநாதர்) அன்பனிடம் (சிஷ்யரிடம்) அவன் தொடர்ந்து உயிர் வாழ வேண்டும் என்றும், உயிரைத் துறப்பதைப் பற்றி நினைக்க வேண்டாம் என்றும் கேட்கும் ஒரு சந்தர்ப்பம் வருகிறது. மேலும், அன்பன் உயிர் வாழப் போராடும் போது, அவனது குருநாதரால் உயிரைத் துறப்பதற்குத் தயாராக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறான்! ஆனால் இறுதியில் அன்பன், அன்பிற்குரியவருடன் ஐக்கியமாகி விடுகிறான்; அன்பில் மூழ்கிவிடுகிறான்.**

**தெய்வீக அன்பின் நெருப்பு தீவிரமாக எரியும் மனிதனுக்கு, கடவுள் உதவட்டும்! உண்மையில் அவனது வாழ்க்கை அதீத துன்பம் நிறைந்தது. இறுதியில் தனது 'நான்' எனும் சுயம் உட்பட அனைத்தையும் இழக்கிறான். ஆனால், இறுதிவரை எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வதுதான் அனைவருக்கும் எளிதான வழி.**

**கடவுள் எல்லாமாகவும், எல்லோராகவும் இருந்தாலும் அவர் எவ்வளவு அலட்சியமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறார்! நீங்கள் அவரை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக அவர் உங்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்! ஆனால் நீங்கள் விடாது தொடர்ந்து நேசிப்பதானால், அவருடைய முகத்தை உங்கள் பக்கம் திருப்புமாறு அவரை கட்டாயப்படுத்துகிறீர்கள்.**

ஒரு கஸலுக்குப் பிறகு, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**கடவுள் உங்கள் சுவாசத்தை விடவும் உங்களுக்கு நெருக்கமாக உள்ளார், இருந்தும் அவர் வெகு தொலைவில் இருக்கிறார்! அன்பன் கூறுகிறான்: "உன்னை அடையப் பெறுவது என்பது எனது 'நான்' எனும் சுயத்தை இழப்பது! அன்பு என்றால் என்ன? அன்பின் விளைவு என்ன? நீங்கள் என்னை உதவியற்றவனாக்கும் வேளையில், நான் உதவியற்றவனாகிவிடுவது!"**

**எல்லாவற்றிலும் எல்லோரிலும் நான் நிலைகொண்டிருக்கிறேன் என்பதே எனது தொடர்ச்சியான அனுபவம். நான் மனதால் உண்மையைப் புரிந்து கொண்டதன் விளைவாக இது கூறப்படவில்லை; இது நான் உளதாயிருப்பதன் உண்மையான அனுபவம். இந்த அனுபவம் தான் அனைத்து அனுபவங்களிலும் உயர்ந்தது. என்னுடைய இந்த நிலையை மனதின் உதவியால் புரிந்து கொள்ள முடியாது.**

இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தபோது, பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட ஒரு முதியவர் பாபாவிடம் அழைத்து வரப்பட்டார். பாபா அவரிடம், "**நான் எனது மௌனத்தைக் கலைக்கும் வரை, நீங்கள் உயிர் வாழ்ந்தால், உங்களால் மறுபடியும் நடக்க முடியும்**" என்று கூறினார்.

கூட்டத்தினரிடையே இருந்த சுமார் நான்கு வயது சிறுமி பாபாவிடம் வந்து, தலைவணங்கி, அவரது சோஃபாவில், அவரருகில் அமர்ந்தாள். அப்போது பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**சிலர் மது அருந்திவிட்டு முகத்தை மறைத்துக் கொள்கிறார்கள்; சிலர் மது அருந்திவிட்டு தைரியமாக பொது விமர்சனங்களை எதிர்கொள்கிறார்கள். மஸ்துகளும் இறை போதையில் இருக்கிறார்கள்; ஆனால் அவர்கள் எதையும் எவரையும் பொருட்படுத்துவதில்லை.**"

வார்த்தைகளால் விளையாடி, பாபா கேலி செய்தார், "**இந்தக் குழந்தைக்கும் மஸ்தி** (குறும்பு) **உள்ளது, ஏனெனில் அவள் இந்தக் கூட்டத்தைக் கண்டுகொள்ளவில்லை!**"

சுமார் அரை மணி நேரம் பாபாவின் அருகில் அமர்ந்திருந்த சிறுமி எழுந்து, தனது தாயிடம் திரும்பிச் சென்றாள். அந்த சிறுமியைப் பின்பற்றி பிற குழந்தைகளும் பாபாவை தரிசனம் செய்ய வரத் தொடங்கினர். பாபா உடனே, "**நானும் குழந்தையாக இருப்பதால் என்னிடம் வருகின்றனர்**" என்று குறிப்பிட்டார்.

மோகன்-ஸைகல் பாடல்களைத் தொடர்ந்தபோது பாபா, இடையிடையே அதன் அர்த்தத்தை விளக்கினார்:

**அன்பன் கூறுகிறான்: "நான் இந்த பூமியிலும் இல்லை, சொர்க்கத்திலும் இல்லை. அன்பிற்குரியவரைத் தேடி எங்கும் மிதக்கும் தூசித் துகள்களைப் போல் இருக்கிறேன்."**

**ஒரு முஸல்மானைப் பொறுத்தவரை, மது அருந்துவது அவரது மதத்தின் கோட்பாடுகளுக்கு எதிரானது. அவர் மது அருந்துவதைக் கண்டால், பாவி என்று அழைக்கப்படுகிறார். ஆனால் அன்பர் ஒரு கோப்பை நிரம்ப மதுவை அருந்திவிட்டு, அது பாவமில்லை என்று கூறுகிறார். அவர் ஒரு பாவியாகக் கருதப்பட்டால், சொர்க்கம் கூட ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவரது வருகைக்காக காத்திருந்ததாகக் கூறலாம்!**

**தன்னைத் தானே அழித்த பின்னரே இறைவனுடன் ஐக்கியமாக முடியும். உடலும் மனமும் தூள் தூளாக்கப்பட்ட பிறகுதான் இறைவனுடன் ஒன்றிணைவது சாத்தியம்.**

பாபா மேலும் கூறினார், "**இது எளிதானது அல்ல, யார் தூசி ஆக விரும்புகிறார்கள்? கடவுளைத் தேடுபவர் மேலும் கூறுகிறார்: 'என் அன்பு இவ்வளவு உச்சத்தை எட்டியுள்ளது, என் அன்பிற்குரியவரால் கூட என்னை இந்தக் காதல் பிணியிலிருந்து குணப்படுத்த முடியாது!'**"

அப்துல் கனியின் சகோதரர் டாக்டர் அப்துர் ரஹ்மான் பாபாவிற்கு முன்னால் இரண்டு கஸல்களைப் பாடினார்.

மாலை 5.30 மணியளவில் மதுசூதனன் வந்த போது, மெஹர்ஸ்தானின் திறப்பு விழாவிற்காக அவர் இயற்றிய புதிய பாடலைப் பாடுமாறு பாபா கேட்டுக்கொண்டார். அவருடன் பூனா பஜனைக் குழுவைச் சேர்ந்த சஞ்சீவனி பால்சந்திர கேர் (SANJEEVANI BHALCHANDRA KHER), பண்டித் (PANDIT), வாமன் ஸப்னிஸ் (WAMAN SUBNIS) மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து, அனைவரும் பாபாவின் ஆரத்தியைப் பாடினர்; இதற்குப் பிறகு, பாபா அவர்களிடம், எவரும் அவரை அரவணைக்க முன்வர வேண்டாம் என்று கூறி, தத்தமது இல்லங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தி இவ்வாறு குறிப்பிட்டார்: **“மீண்டும் என்னைத் தழுவத் தேவையில்லாத வகையில் என்னைத் தழுவ வேண்டும்!”**

ஜோஸ:ப் ஹார்ப் சமீபத்தில் பித்தப்பை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார், பாபா அவரை மூன்று முறை ஜஹாங்கீர் மருத்துவமனைக்குச் (JEHANGIR NURSING HOME) சென்று பார்த்தார். ஹெர்மன் அல்வராடோவும் (HERMAN ALVARADO) வந்து ஜோஸ:பைப் பார்த்தார். அல்வராடோ வணிகக் கப்பலில் பாதுகாப்பு அதிகாரியாகப் பணிபுரிந்தார். அவருடைய கப்பல் மும்பையில் சரக்குகளை வெளியே இறக்கும் வேளையில், அவர் ஆதிக்குத் தொலைத்தந்தி அனுப்புவது வழக்கம். பாபாவின் தரிசனம் அனுமதிக்கப்பட்டால், ஜால்பாய் அவரை சந்தித்து, பூனா அல்லது அஹமதுநகருக்கு அழைத்துச் சென்றார். ஒருமுறை, பாபாவை சந்திக்க ஹெர்மனுக்கு அனுமதி வழங்கப்பட்டாலும், திடீரென ஏற்பட்ட பருவமழைப் புயல் காரணமாக, அவர் இறங்குவதற்கு முன்னரே அவரது கப்பல் துறைமுகத்தை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

மாலுமியாகப் பணிபுரிந்த ஹாரி டெடோல்சொவ் (HARRY DEDOLCHOW), ஏ.கே. தாஸ் (A.K. DAS) இருவரும் இந்த நேரத்தில் குருபிரசாத்தில் பாபாவை மூன்று நாட்கள் சந்தித்தனர். ஒரு கட்டத்தில், பாபா, ஹாரியிடம், **“நான் உங்களிடம் எதைச் சொன்னாலும் நீங்கள் செய்வீர்களா?”** என்று கேட்டதற்கு, ஹாரி ‘ஆம்’ என்றார். பின்பு ஹாரி, மருத்துவமனைக்குச் சென்று தனது நண்பர் ஜோஸ:பை பார்க்க முடியுமா என்று பாபாவிடம் கேட்க, பாபா அதற்கு ஒப்புக்கொண்டு அவரிடம், **“நீங்கள் அங்குச் செல்லும்போது, ஜோஸ:ப் இறுதி மூச்சை விட இருந்த அவ்வேளையில், ‘எனது பெயரை நினைவுகூர்ந்து உச்சரிக்காததால், நான் அவருடைய உடலைத் துறக்க அனுமதிக்கவில்லை’ என்று ஜோஸ:பிடம் கூறுங்கள்”** என அறிவுறுத்தினார்.

ஹாரி டெடோல்சொவ் இதில் ஏதோ குழப்பம் இருப்பதைக் கண்டு, “பாபா, நான் பல மாதங்கள் ஸான் :பிரான்சிஸ்கோவில் ஹார்புடன் வசித்து வந்தேன்; அவர் தினமும் காலையில் ஒரு மணி நேரம் உங்கள் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிந்து வந்தார்” என்று கூறினார்.

ஆனால் பாபா, **“நான் கூறியதை ஜோஸ்ஃபிடம் தெரிவிக்க மறவாதீர்கள்”** என்று மறுபடியும் கூறி, ஜால்பாயுடன் ஹாரியை அனுப்பி வைத்தார். மருத்துவமனையில் பணியில் இருந்த செவிலியரிடம் ஜோஸ்ஃபின் அறை எண்ணைக் கேட்டபோது அவர், “அதிக நேரம் அவருடன் இருக்காதீர்கள், தயவு செய்து அவருக்கு எந்த மோசமான செய்தியையும் வழங்காதீர்கள், அவர் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது” என்று கூறினார். பதட்டமடைந்த டெடோல்சொவ், பாபா வழங்கிய செய்தியைக் குறித்து மீண்டும் யோசனை செய்தார்.

டெடோல்சொவ், ஜோஸ்ஃப் ஹார்பின் அறைக்குள் நுழைந்தபோது, அவரது முகம் வெளிறிப்போய் இருந்தது. ஜோஸ்ஃப் மெதுவாகப் பேசினார், மேலும் அவர் நீண்ட காலம் உயிர்வாழ மாட்டார் என்று தோன்றியது. அவர்கள் சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசி, ஐவி டியூஸ் மற்றும் அனைத்து ஸான் ஃபிரான்சிஸ்கோ ஸுஃபிக்களின் வாழ்த்துக்களையும் ஜோஸ்ஃபிடம் டெடோல்சொவ் தெரிவித்தார். இறுதியாக, ஜோஸ்ஃப், “நான் சோர்வாக இருக்கிறேன்; நீங்கள் என்னிடம் வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? என் அன்பை பாபாவிடம் தெரிவித்து, நான் நன்றாக உணர்கிறேன் என்று அவரிடம் கூறுங்கள்” என்றார்.

ஜால்பாயைப் பார்த்த டெடோல்சொவ், செவிலியரின் எச்சரிக்கையை மனதில் கொண்டு, பாபா சொன்னதை ஜோஸ்ஃபிடம் கூறவில்லை. அவர், “இல்லை, ஜோஸ்ஃப், சொல்ல வேறு எதுவும் இல்லை” என்றார்.

மதியம் ஒரு மணி ஆகிவிட்டது, அதற்குள் அவர்கள் குருபிரசாத்திற்கு திரும்பி வருவதாக எதிர்பார்க்கப்பட்டதால், மருத்துவமனையிலிருந்து ஒரு வாடகைக் காரில் வந்தனர். பாபா, ஹாரியிடம் செய்தியை வழங்கினாரா என்று கேட்க மாட்டார் என அவர் நம்பினார். அவர்கள் மண்டபத்திற்குள் நுழைந்தபோது, அன்பர்களுடனான சகவாசம் ஏற்கனவே தொடங்கிவிட்டது, டெடோல்சொவ் அங்கு அமர்ந்திருந்தவர்களுக்குப் பின்னால் மறைந்து கொள்ள முயன்றார். பாபா அவரைத் தடுத்து நிறுத்தி, தம் பக்கத்தில் அழைத்து கேட்டார், **“ஹாரி, நான் கூறச் சொன்னதை ஜோஸ்ஃபிடம் கூறினீர்களா?”**

ஹாரி டெடோல்சொவ் அமைதியாக தன்னைத்தானே சபித்து மனதில் நினைத்தார், ‘அடடா, பாபா, நீங்கள் எப்போதும் எதையும் மறக்கமாட்டீர்களா!’ அறையிலிருந்த அனைவரும் அவரது பதிலுக்காகக் காத்திருந்தனர். அவர் தலையைத் தாழ்த்தி, “பாபா, ஜோஸ்ஃப் உயிர் வாழ அதிக நேரம் இல்லை என்பது போலத் தெரிகிறது, அவர் மிகவும் உடல்நலம் குன்றி காணப்பட்டார். அவரிடம் சொல்ல எனக்கு மனமில்லை.”

பாபா பதில் எதுவும் கூறவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு, பாபாவின் வாழ்க்கையைப் பற்றியும், அவரின் எளிய கட்டளைகளை நிறைவேற்றுவது, சில சமயங்களில் மண்டலிக்கு எவ்வளவு கடினமாக இருந்தது என்பதைப் பற்றியும் படித்த பிறகு, ஹாரி டெடோல்சொவ், தனக்கு வாய்ப்பு கிடைத்தால், இது தொடர்பாக கிழக்கத்திய மக்களுக்கு ஓரிரு பாடங்களைக் கற்பிப்பேன் என்று

சபதம் செய்தார். சரி, பாபா இப்போது அவருக்கு வாய்ப்பளித்தார்; தற்போதைய தோல்வி, அவரது அகந்தையை நசுக்கியது. அவர் பாபாவின் செய்தியை வழங்கினால், ஜோஸஃப் அதிர்ச்சியில் உயிரைத் துறந்துவிடுவார் என்று அவர் அஞ்சினார் - மேலும் செவிலியரின் எச்சரிக்கைக்கு செவி சாய்க்காததற்காக அவர் குற்றம் சாட்டப்படுவார். குருநாதருக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிவது, சொல்வது போல் அவ்வளவு எளிதானது அல்ல என்பதை டெடோல்சொவ் புரிந்துகொண்டார்.

அந்த நேரத்தில், ஜோஸஃப் உயிரைத் துறக்கப் போகிறார் என்று அவரது மனைவி காரி ஹார்ப் உறுதியாக நம்பினார், ஆனால் பாபா '**அவர் குணமடைவார்**' என்று உறுதியளித்தார், அவரும் குணமடைந்தார். ஒரு கட்டத்தில், மருத்துவர்கள் வேகமாகப் பரவும் புற்றுநோய் இருப்பதாக சந்தேகித்தனர், ஆனால் பாபா, ஜோஸஃபிற்கு உறுதியளித்தார், "**நான் கூறுகிறேன், உங்களுக்குப் புற்றுநோய் இல்லை. உண்மையில், எனக்குப் புற்றுநோய் உள்ளது. என்னைச் சுற்றியுள்ள நீங்கள் அனைவரும் மற்றும் முழு உலகமும் என்னுடைய புற்றுநோய் தொற்றாக இருக்கிறீர்கள், ஆதலால் நான் தொடர்ந்து அவதிப்படுகிறேன்.**"

பாபாவின் உடல் துன்பம் பூனாவிலும் தொடர்ந்தது. அவரது தலைவலி நின்றபாடில்லை, டாக்டர் கோஹெர் முயற்சித்த எதுவும் வலியைத் தணிக்கவில்லை. பாபாவிற்கு அக்கி தொற்று நோய் (HERPES) தாக்குதலால், டாக்டர் கிண்டே கொடுத்த ஆல்கஹால் ஊசி, அதற்குக் காரணமாக இருக்கலாம் என்று அவர் யூகித்தார். இதைக் குறித்து கேட்க, டாக்டர் கிண்டேயை மெஹராஸாத்திற்கு அழைக்க விரும்பினார், ஆனால் பாபா மறுத்துவிட்டார். அவர்கள் பூனாவிற்கு வந்ததும், டாக்டர் கிண்டேயிடம் ஆலோசனை பெறுவதையும் பாபா தடை செய்தார்.

ஏப்ரல் 8ஆம் தேதி ஜஷன் வாஸ்வானி (JASHAN VASWANI) குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்டார், பாபா அவருடன் முக்கால் மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார். அவர் தனது தந்தையின் சகோதரர் தாதா வாஸ்வானியின் (DADA VASWANI) பதிலுடன் மறுநாள் திரும்பி வந்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, பைதூல் தனது மனைவி ஸொல்டூன் மற்றும் மகள் டவ்லாவின் குடும்பத்துடன் பூனாவில் தங்கியிருந்தார். ஆனால் ஏப்ரல் 10 அன்று அவர் பக்கவாதத்தால் அவதியுற்றார். அன்று காலை பாபா அவர்கள் இல்லத்திற்குச் சென்று, பைதூலுக்கு ஆறுதல் கூறி, அவர் குருபிரசாத் அருகில் அமைந்த டாக்டர் கிரான்ட் ரூபி ஹால் மருத்துவமனையில் (DR GRANT'S RUBY HALL CLINIC) அனுமதிக்கப்பட்டார். பக்கவாதத்தின் விளைவாக, பைதூலின் உடலின் இடது பக்கம் செயலிழந்தது. சில வாரங்களுக்குப் பின்னர், ஏப்ரல் 29 அன்று, டாக்டர் டானின் கண்காணிப்பில் குணமடைய அவர் மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அலோபா பாரசீக மொழி சரளமாக அறிந்தவர்

ஆகையால், பாபாவின் சார்பாக ஈரானில் வாழும் அன்பர்களுடன் கடிதப் பரிமாற்றம் செய்யும் பைதூலின் கடமை அவருக்கு வழங்கப்பட்டது.

தரிசனத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை, ஏப்ரல் 14 அன்று, பாபாவின் அறையில் காலையில் பலர் கூடியிருந்தனர். அது ஈஸ்டர் ஞாயிறு (EASTER SUNDAY) மட்டுமின்றி ருஸ்தம் மற்றும் ஃப்ரீனி தாதாசாஞ்சியின் பதினேழாவது திருமண ஆண்டு. பாபா அவர்களை முதலில் சந்தித்தார். இருவரும் பாபாவிற்கு மாலை அணிவித்தனர், பாபா அவர்களை மூன்று முறை தழுவினார். அன்று ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக ஆண்கள் எட்டு மணிக்கும், பெண்கள் ஒரு மணி நேரம் கழித்தும் அழைக்கப்பட்டனர்.

அன்பர்கள் வந்தபோது பாபா ஒரு நாற்காலியில் தமது பணியில் மூழ்கியிருந்தார்; அவரது விரல்கள் அதி விரைவில் நகர்ந்தன; சூழல் சற்று பதட்டமாக இருந்தது. தனக்கு முன் அமர்ந்திருப்பவர்களை பாபா ஒருமுறை கூட பார்க்கவில்லை. திடீரென பாபா, "**நேற்றிலிருந்து என் மீதான பாரம் கணிசமான அளவில் அதிகமாகிவிட்டது**" என்று சைகையால் தெரிவித்தபோது, அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்தனர்.

காலை 8:20 மணிக்கு, பாபா, ஹோஷங் பரூச்சாவிடம் நேரத்தைக் கேட்டார். தொடர்ந்து பதினைந்து நிமிடங்களில், இதே கேள்வியை வெவ்வேறு அன்பர்களிடம் திரும்பத் திரும்பக் கேட்டார். அதற்குப் பிறகு, வழக்கம் போல், அன்று இரவு அவர்கள் நன்றாகத் தூங்கினார்களா, எப்போது பூனாவிற்கு வந்தார்கள், எங்குத் தங்கியிருந்தார்கள், போன்ற கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்.

ஹாஃபீஸின் ஈரடிக் கவிதை ஒன்றை மேற்கோள் காட்டி, பாபா குறிப்பிட்டார், "**அன்பிற்குரியவரை நீங்கள் அடைய விரும்பினால், அவரை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். பிற அனைத்தையும் மறந்து விடுங்கள். அன்பிற்குரியவரின் அருகில் உடல் ரீதியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அன்புடன் அவரை நினைவுகூருங்கள்.**"

பாபா, டாக்டர் தேஷ்முக்கிடம் கீதையிலிருந்து ஒரு சில ஸ்லோகங்களை மொழியுமாறு கூறவே, அவர் அதைக் கூறி முடித்ததும், "**நான் பராத்பர்-பரபிரம்மா** (அனைத்திற்கும் அப்பாற்பட்ட - THE BEYOND, BEYOND STATE) **நிலையிலிருந்து இறங்கி உங்கள் நிலைக்கு வந்துள்ளேன். அங்கே பிணைப்பு எதுவும் இல்லை; முழுமையான சுதந்திரம், முழுமையாக உளதாயிருக்கும் நிலை.**

"**என்ன ஓர் உன்னதமான நிலை இது! நூறு கோடியில் ஒருவருக்கு மட்டுமே இந்த அப்பாற்பட்ட நிலையின் அனுபவம் உள்ளது! அந்த நிலையிலிருந்து நான் இறங்கி வந்து உங்களோடு பிணைக்கப்பட்டவனாக உணர்கிறேன். இந்தத் துன்பமும், துயரமும் பயங்கரமானது. என்னில், நான் சுதந்திரமாக உள்ளேன். நான் எனது மௌனத்தை கலைக்கும்போது, மனிதகுலத்திற்கு ஒரு பெரிய உந்துதலை வழங்குவேன். கற்கள் கூட**

**நடனமாடத் தொடங்கும்! அதற்குப் பிறகு, நான் 700 ஆண்டுகள் பேரானந்தத்தில் இருப்பேன்.”**

இதைக் கேட்டு, ஹோஷங் பரூச்சாவின் அருகில் அமர்ந்திருந்த ஃபிரான்சிஸ், அவரிடம் கிசுகிசுத்தார், “அப்படியானால் தோழர்களாகிய நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு!”

காலை 9.30 மணியளவில் இரண்டு அமெரிக்கப் பெண்மணிகள் பாபாவைப் பார்க்க வந்தனர். அவர்கள் சமீபத்தில் அவரைப் பற்றி கேள்விப்பட்டு, அர்னவாஸை சந்தித்தனர். பாபா அவர்களை அன்புடன் சந்தித்து, இரண்டு நாற்காலிகளைக் கொண்டு வருமாறு எரச்சிடம் சைகையால் தெரிவித்தார், அவர்களில் ஒருவர் வயதானவர், பிற அனைவருடனும் எளிதில் தரையில் அமர முடியாது. இரண்டாவது பெண்மணியின் பெயர் எல்லா (ELLA). அவர் ஒரு பல் மருத்துவர் மற்றும் ஒரு கலைஞராக இருந்தார், நிறைய தத்துவங்களைப் படித்த ஒரு திறமையான அறிவுஜீவி. குருநாதரின் தேவையை ஒருபோதும் உணராத ஒரு வகை நபர் அவர்.

சிறிது நேரம் கழித்து, பாபா திரும்பி எல்லாவிடம், “**நீங்கள் என்னிடம் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா? உங்கள் மனதில் ஏதாவது உள்ளதா? நீங்கள் என்னிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**” என சைகையால் கேட்டார்.

இல்லை என்றார். சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா மீண்டும் அவரிடம் திரும்பி, “**நீங்கள் என்னிடம் ஏதாவது கேட்க விரும்புகிறீர்களா? என்னிடம் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**” என்று கேட்டார்.

எல்லாவின் முகம் சிவந்தது, “ஆமாம், பாபா. நான் உங்களைக் கடவுளாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று உங்களுக்குத் தெரியும், ஆனால் நான் உங்களை எனது நண்பனாக எடுத்துக் கொண்டால் பரவாயில்லையா?” எனக் கேட்டார்.

பாபா அகன்ற புன்னகையுடன் பதிலளித்தார், “**நான் எப்பொழுதும் தலைசிறந்த நண்பன். நான் தந்தை, தாய், சகோதரன், குழந்தை, அன்பானவன் - நீங்கள் என்னை எப்படி எடுத்துக்கொண்டாலும் - நான் கடவுள்.**

**“உங்களால் பாபாவைக் கடவுளாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், கவலைப்பட வேண்டாம். பாபாவை உண்மையான தோழனாக ஏற்றுக்கொள்ளுங்கள். நான் சந்தேகத்திற்கு இடமின்றி கடவுள்; ஆனால் மேற்கத்திய மனம், மனித உருவில் கடவுள் என்ற கருத்தை ஏற்றுக்கொள்வது கடினம். இயேசுவே கடவுள், ஆனால் யூதாஸால் இயேசுவை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பீட்டர் கூட அவரை மூன்று முறை மறுத்தார்! அப்படியென்றால் எப்படி நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள முடியும்? நான் மட்டுமே ஏக இறைவனான உண்மைப்பொருள், பிற அனைத்தும் பொய்.”**

அதற்குப் பிறகு பாபா தீவிரமாகப் பார்வையை சுழற்றி, “**ஆனால் எதற்கும் இடைப்பட்டவனாக என்னை எடுத்துக் கொள்ள வேண்டாம். நான்**

**வெறும் குருவோ, துறவியோ அல்லது வேறு சில மேல்நிலை ஆத்மாவோ அல்ல. நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்** (THE HIGHEST OF THE HIGH)" என்று கூறினார்.

எல்லா, வெறும் ஆர்வத்தால் மட்டுமே வந்திருந்தாலும், அவரும், உடன் வந்த தோழியும் பாபாவின் வார்த்தைகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டு திருப்தி அடைந்தனர். அன்று மாலை, எல்லா கூறினார், "**பாபா தனது உடலை விட்டு வெளியேறத் தயாராகிக் கொண்டிருப்பதை நான் எப்பொழுதும் உணர்ந்தேன்.**"

குருபிரசாத்தில் ஒரு சந்தர்ப்பத்தில், மற்றுமொரு வயதான பெண்மணி வந்திருந்தார், பாபா மண்டபத்திற்குள் வருவதற்கு முன்பு, மண்டலி அவருக்கு ஒரு நாற்காலியை வழங்கினர். பாபா மண்டபத்தில் நுழைந்ததும் கூட்டத்தினரிடம் கேட்டார்:

**நீங்கள் ஏன் இங்கு வந்துள்ளீர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் ஏன் இங்கு அழைக்கப்பட்டீர்கள்? நான் இறை-மனிதன், மனித உருவில் இறைவன், நான் எங்கும் இருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கவே உங்களை அழைத்தேன். ஆனால், கடவுள் எங்கும் இருப்பதால், நீங்கள் எங்கேயும் போக வேண்டிய தேவை இல்லை என்று கூறத்தான் உங்களை அழைத்தேன். கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார் ஆனால் அவருடைய மனித வடிவம் எல்லா இடங்களிலும் இல்லை.**

**இது குற்றவாளியைக் கண்டுபிடிக்க காவல்துறையினரால் வளர்க்கப்படும் காவல் நாய்களைப் போன்றது: அவர்கள் நாயைக் குற்றம் நிகழ்ந்த இடத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். அதுபோலவே, நான் அனைவரின் இதயங்களையும் கொள்ளையடிப்பவன், மீண்டும் மீண்டும் என்னைக் கண்டுபிடிக்க, நீங்கள் இங்கே வந்து மோப்பம் பிடிக்க வேண்டும், ஏனெனில் என் இருப்பிடம் எனது பிரசன்னத்தின் வாசனையால் சூழப்பட்டுள்ளது; நீங்கள் அந்த வாசனையை நுகர்ந்த பிறகு சென்று விடுகிறீர்கள். ஆனால் நீங்கள் அதை மறந்து விடுகிறீர்கள், ஆகையால் மீண்டும் மீண்டும் என்னிடம் வர வேண்டியதாகிறது.**

நியூயார்க் நகரின் லூயிஸ் அகொஸ்டீனீயிடமிருந்து (LOUIS AGOSTINI) இரண்டு ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்கள் பெறப்பட்டன. ஏப்ரல் 14 காலை சந்திப்பின் போது, இவை சுமார் ஒன்றரை மணிநேரம் ஒலிபரப்பப்பட்டன. 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படைப்பின் கருப்பொருளின் விளக்கமும், ஐந்து பரிபூரண குருநாதர்கள் மற்றும் அவதார புருஷர் குறித்த கருத்தும் ஒரு ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இரண்டாவது ஒலிநாடாவில் கிழக்கு-மேற்கு சகவாசத்தில் பாபா வழங்கிய செய்திகள் மற்றும் சில இந்திய இசை நிகழ்ச்சிகள், குருநாதருக்கான 'பர்வர்திகார்' பிரார்த்தனை (MASTER'S PRAYER) மற்றும் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனை (REPENTANCE PRAYER) பதிவு செய்யப்பட்டிருந்தன. மனம் வருந்தி

மொழியும் இரங்கல் பிரார்த்தனை ஒலிபரப்பப்பட்ட போது, பாபா அங்கிருந்த அனைவரையும் எழுந்து நிற்குமாறு அறிவுறுத்தினார், அவரும் எழுந்து நின்றார். லூயிஸ் அகொஸ்டீனியின் பதிவு காலை 11:45 மணிக்கு நிறைவடைந்ததும், பாபா குழுவை மதிய உணவுக்குக் சென்று, மதியம் 2:30 மணிக்குத் திரும்பி வருமாறு கூறினார். ஃப்ரீனி தாதாசாஞ்சி இது குறித்து பின்பு கூறியதாவது:

மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனை ஒலித்தபோது, பாபா அதில் பங்கேற்ற முறையை நான் இதுகாறும் பார்த்ததில்லை. அளப்பரிய தவிப்புடன் தலைதாழ்த்தி, நடுக்கத்துடன், அவரை அவ்வாறு பார்க்கவே பயமாக இருந்தது. அனைத்து மனிதர்களையும் மன்னித்து, பாவச் சுமையைத் தன் மீது சுமத்தும்படி அவர் கடவுளிடம் மன்றாடிக் கேட்பதாகத் தோன்றியது. மேலும் அவர் சுமையால் நசுக்கப்பட்டவராகத் தோற்றமளித்தார்.

அன்று மதியம், பாபா, மண்டபத்திற்குள் நுழையும் முன்னரே, பல ஆந்திரா அன்பர்களும், பாபாவின் தரிசனத்திற்காக ஒரு சாதுவும் வந்திருந்தனர். மவுண்ட் அபுவைச் (MOUNT ABU) சேர்ந்த சாது, பதினைந்து ஆண்டுகள் மலைகளில் தவம் புரிந்ததால், நீண்ட தாடியுடன், தலைமுடி தோளில் தொங்கியது. பாபாவை தரிசனம் செய்ய நெடுங்காலமாய் ஆர்வத்துடன் இருந்ததாக அவர் கூறினார். பாபா இவ்வாறு பதிலளித்தார், "**நான் உங்கள் இதயத்தில் இருக்கிறேன்**."

அந்த அறையின் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு மரப் பலகையில் துக்காராம் (TUKARAM) எழுதிய பொய்யும் போலியுமான புனிதர்களை துன்புறுத்துவது குறித்து மராட்டி மொழியில் வசனம் ஒன்று எழுதப்பட்டிருந்தது. பாபா ஆந்திரா பக்தர்களிடம் '**அதைப் படிக்க முடிந்ததா**?' என்று கேட்டு, பின்னர் அவர் துக்காராமின் வார்த்தைகளை விளக்கினார்:

**நீண்ட சடை முடியும், திருநீறு படிந்த உடல்களுடன் பல கபட துறவிகள் உள்ளனர். துக்காராம் கூறுகிறார்: "மனசாட்சியற்ற இவர்களை எரிப்பதிலும், அடித்து துன்புறுத்துவதிலும் எந்தப் பாவமும் இல்லை"**

**துக்காராம், இறைநிலையை அடைந்த பரிபூரண குருநாதராக இருந்தாலும், பாசாங்குத்தனம் நிறைந்த துறவிகளை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. புனிதர்கள் என்று அழைக்கப்படுபவர்களில் தொண்ணூற்றொன்பது சதவிகித நபர்களுக்கு ஆன்மீகப் பாதையைப் பற்றி எதுவும் தெரியாது! வட இந்தியாவில் இது போன்ற போலி துறவிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். ஒரு சதவீத உண்மையான துறவிகளில், என்னை இந்த பூமிக்குக் கொண்டு வருபவர்கள் ஐந்து பரிபூரண குருநாதர்கள் மட்டுமே. நான் எனது பௌதீக உடலை கைவிட்ட பிறகு, தற்போது பூமியில் நிலைகொண்டுள்ள ஐந்து பரிபூரண குருநாதர்கள் முக்கியத்துவம் பெறுவார்கள். கபட நாடகமாடும் போலித் துறவியை விட உறுதியான நாத்திகர் எவ்வளவோ மேல்! கடவுளை வானத்திலோ, இமயத்தின் சிகரத்திலோ, மவுண்ட் அபு மலையிலோ காண முடியாது. அனைவரின் இதயத்திலும் அவர் குடியிருக்கிறார்.**

**உங்கள் இதயம் தூய்மையான அந்த கணமே, நான் அதில் பிரகாசிப்பேன். ஆனால் ஒருவருடைய இதயத்தை தூய்மைப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல. இது நெருப்புக் கடலில் ஆழமாக மூழ்குவது போன்றது. கடவுளின் உண்மையான அன்பர்கள் (மர்த்-இ-குதா) ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவருக்கு மட்டுமே அத்தகைய தைரியம் உள்ளது, ஏனெனில் அவர் ஒரு பரிபூரண குருநாதரின் காலடியில் தூசி போல் ஆகிவிட்டார். கடவுளைக் காணவேண்டும் என்று கேட்கும் உரிமை அவருக்கு மட்டுமே உண்டு. கடவுளை நேசிப்பது மிகவும் கடினம். எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகக் பற்றிக் கொள்வதே எளிதான வழி. உங்கள் மனப்படிவங்களின் சுமைகளையெல்லாம் எனது காலடியில் வீசி எறியுங்கள். நான் இறைப் பெருங்கடல் என்பதால் உங்கள் முழுச் சுமையையும் உள்வாங்க முடியும். உண்மையில், மனப்படிவங்களின் அல்லது கர்ம வினையின் சுமை என்று எதுவும் இல்லை; அது அனைத்தும் கற்பனை.**

மக்கள் கூட்டம் நிறைந்திருந்த மண்டபத்தில் மதியம் 2:30 மணிக்கு பாபா வந்து அமர்ந்தார். சஞ்சீவனி கேர் (SANJEEVANI KHER), திருமதி ஆப்டே (MRS. APTE) போன்ற பல்வேறு பாடகர்கள், மனதை நெகிழச் செய்த நிகழ்ச்சிகளை பாபா மிகவும் ரசித்தார்; பாடகர்கள் இருவருக்கு கைக்குட்டைகளை அன்புடன் வழங்கினார். பிற்பகல் கூட்டத்தில் பாபா அதிகம் விளக்கவில்லை, ஆனால் ஒரு கட்டத்தில், "**நான் எல்லோரிடமும் என்னைப் பார்க்கிறேன். நான் வழிபட வேண்டும் என நினைக்கும் போது என்னையே வணங்குகிறேன். வேறு எவரை வழிபட வேண்டும்? இது எனது தொடர்ச்சியான அனுபவம்**" என்று கருத்துரைத்தார்.

சுமார் ஆறு மணியளவில் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்திய பின்பு கூட்டம் கலைந்தது. கூடியிருந்த மக்களின் மனதை ஆக்கிரமித்துள்ள விஷயங்களை எப்பொழுதும் பாபா குறிப்பிடுகிறார் என்பது பின்பு கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு, தரிசனத்திற்காக வருபவர்களுக்கு அவர் விதித்த நிபந்தனைகளில் ஒன்று, '**கேள்விகள் கேட்கக் கூடாது**' என்றாலும், ஒவ்வொரு நபருக்கும் தானாகவே பதில் கிடைக்கும். சில சமயங்களில், பாபாவின் கைகள் எதுவும் பேசாது, அவருடைய மௌனமே அவர்களின் மனக் கேள்விகளுக்கும் பிரச்சினைகளுக்கும் விடையாக அமைந்தது.

1963 ஏப்ரல் 15ஆம் தேதி, ஃபிரீனி, ருஸ்தம் தாதாசாஞ்சி அவர்களின் திருமண ஆண்டு நிறைவை முன்னிட்டு, பாபா மற்றும் மண்டலிக்கு ஒரு சுவையான ஆட்டுக்கறி வறுவலை அனுப்பியிருந்தனர். மாலை 5:15 மணிக்கு, அவர் அர்னவாஸ், ஃப்ரீனி இருவரையும் பார்க்க விரும்பி, பாபா டிஸோட்டோவை (DeSOTO) ஜாம்நகர் இல்லத்திற்கு அனுப்பிவைத்தார். அவர்கள் வந்தபோது பாபா படுக்கையில் அமர்ந்திருந்தார். அவர் முகத்தில் துன்பத்தின் வரிகள் தென்பட்டன. அப்படியிருந்தும், அவர் இரவு உணவை ரசித்ததை

ஃபிரீனியிடம் சொல்ல விரும்பினார். பாபா அவரைத் தழுவிக் கொண்டார், அதுவே போதுமான நன்றி உணர்வை வெளிப்படுத்தியது.

17ஆம் தேதி முதல், பாபா, ஒரு நாள் விட்டு ஒவ்வொரு காலையிலும் மும்பை பெண்மணிகளை அழைக்கத் தொடங்கினார். நெருங்கிய உறவினர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் காலை நேரம் ஒதுக்கப்பட்டது. கடிதப் பரிமாற்றம், குறிப்பிட்ட சிரமங்களுக்குத் தீர்வுகாணல், தனிப்பட்ட கேள்விகளுக்கு விடையளித்தல் போன்றவற்றில் அவர் மூழ்கியிருந்ததால், புதிய பார்வையாளர்கள் எவரும் வருவதை பாபா விரும்பவில்லை. ஆனால் மதிய வேளையில் புதிய நபர்களை சந்திப்பதில் அவர் மகிழ்ச்சி அடைந்தார்; உண்மையில், அவர் அவர்களுக்காகக் காத்திருந்தார்.

கோஹெரின் சகோதரி கேட்டி, பூனாவில் வந்து பதினைந்து நாட்கள் தங்கும்படி கட்டளையிடப்பட்டார், ஆனால் அவரது பணியின் அழுத்தம் காரணமாக (ஜப்பானிய தூதரகத்தில்) அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. அவருடைய கீழ்ப்படியாமை பாபாவை மிகவும் வருந்தச் செய்தது. சில நாட்களுக்குப் பிறகு, கேட்டி கடுமையான முதுகுவலியால் அவதிப்படவே, அலுவலகத்திற்குச் செல்ல முடியமலாயிற்று. பாபா, கோஹெர் மூலம், அவருக்கு சில மாத்திரைகளை அனுப்பிவைத்து, அவரை இழுவிசைக் கருவியுடன் படுக்கையில் ஓய்வெடுக்குமாறு கட்டளையிட்டார். இல்லையேல், கேட்டி பக்கவாதத்தால் முடங்கிவிடுவார் என எச்சரித்தார். பின்பு, பூனாவிற்கு வந்து ஜாம்நகர் இல்லத்தில் தங்கினார். 17ஆம் தேதி காலை, பாபா அவரை ஒரு மணி நேரம் சந்தித்தார், அவர் மும்பைக்குத் திரும்பியபோது, அவருடைய வலி இருந்ததை விட பாதியாகக் குறைந்தது.

மும்பை குழுவைச் சேர்ந்த இதர பெண்மணிகளும் அழைக்கப்பட்டனர். பாபா ஒவ்வொருவரிடமும் அவரது உடல்நிலை குறித்து விரிவாகக் கேட்டார். ஃபிரீனி, ஹவோவி மற்றும் பலர் முன்வந்தபோது, பாபா, எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு நபரிடமும் ஒரு சில சிறிய வெட்டுக் காயங்களைச் சுட்டிக்காட்டி, கோஹெரிடம் வேண்டிய சிகிச்சைக்காக அறிவுறுத்தி, அவர்களைத் தம்மிடம் நெருங்கி வரும் விதத்தில் நடந்துகொண்டார். டாக்டர் அலு கம்பட்டாவும் அவர்களுடன் தங்கியிருந்தார், மேலும் அவருக்கு மும்பை பெண்மணிகளின் உடல்நலம் குறித்த அறிவுரைகளும் வழங்கப்பட்டன. அவர்களில் பலர் ஒரு சில நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதைக் கூட அறியாமல் இருந்தனர்.

உதாரணமாக, ஒரு நாள் குருபிரசாத்தில் ரோடா மிஸ்திரி, பாபாவிற்கு முன்னால் அமர்ந்திருந்தார். திடீரென பாபா அவரை அழைத்து அவரது கண்களை உற்று நோக்கி "**நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?**" என்று கேட்டார். அவர் நன்றாக இருப்பதாகக் கூறினாலும், ஜிம் மிஸ்திரியை பாபா கண்டித்தார், "**நீங்கள் என்ன மாதிரியான கணவர்? உங்களுக்கு ரோடாவைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை! அவருடைய இரத்த அணுக்களின் எண்ணிக்கையை சோதனை**

**செய்தீர்களா?"** அவர்கள் மும்பைக்குத் திரும்பிச் சென்றதும், ஜிம் அவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்றபோது, இரத்த சிவப்பணுக்களின் குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டது. ரோடா சைவ உணவு உண்பவர், பாபா அவரிடம் மாமிசம் மற்றும் மீன் உண்ணத் தொடங்குமாறு அறிவுறுத்தினார்.

முகத்தில் தென்பட்ட கொசுக்கடி சிகிச்சைக்காக ஃபிரீனிக்கு மருந்துகளும் அறிவுரைகளும் வழங்கப்பட்டன. **"வெகுநாட்களுக்குப் பின்னர் எல்லோருக்கும் மருத்துவராகிவிட்டேன்"** என்று பாபா வேடிக்கையாகக் கூறினார்.

17ஆம் நாள் நிகழ்ந்த உரையாடலின் போது, குழுவில் அனைவருக்கும் நீச்சல் தெரியுமா என்று பாபா கேட்டபோது, ஃபிரீனி 'தெரியாது' என்றார். பாபா அவரிடம் நீச்சல் கற்றுக்கொள்ளுமாறு கட்டளையிட்டார். அவர் அதற்கு அஞ்சுகிறாரா என்று கேட்டதற்கு, அவர் உண்மையாகவே 'ஆமாம்' என்று பதிலளித்தார். பாபா அவரிடம், **"எனது பெயரை உச்சரியுங்கள், மூன்றே நாட்களில் கற்றுக் கொள்வீர்கள்; அது உங்களுக்கு மிகவும் நல்லது. நீங்கள் திரும்பிச் செல்லும் முன் தேவையான அறிவுரைகளை நான் வழங்குவேன்"** என்று உறுதியளித்தார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மும்பை குழுவைத் திரும்ப அழைத்தபோதும், இதே கேள்வி எழுந்தது. ஃபிரீனியைப் பார்த்து பாபா கேட்டார், **"உங்களுக்கு என்ன ஆயிற்று? முதலில் வந்தபோது குண்டாக இருந்தீர்கள், இப்போது வெளிறிப்போய் இருக்கிறீர்கள். நன்றாகத் தூங்குகிறீர்களா? சரியாக சாப்பிடுகிறீர்களா? என்ன விஷயம் என்று சொல்லுங்கள்."** கோஹெரிடம் அவரை பரிசோதித்து, ஏதேனும் பிரச்சினை இருக்கிறதா என்று கண்டுகொள்ளவும் அறிவுறுத்தினார். **"நீச்சல் கற்றுக்கொள்வதைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்களா? அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், எனது பெயரைத் தொடர்ந்து நினைவில் கொள்ளுங்கள்."**

பலமுறை அவர் திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார்: **"என்னைத் தவிர இந்த உலகம் முழுவதும் வெறும் மாயை. பீட்டர் கிறிஸ்துவை மறுத்தார்; யூதாஸ் அவர் சிலுவையில் அறையப்பட்டதற்குக் காரணமாக இருந்தார். என்னை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். மிகவும் கடினமான காலம் வருகிறது. என் அவமானம் பெரிய அளவில் இருக்கும்! பூனாவிலிருந்து புறப்பட்டுச் செல்லும் முன், நீங்கள் பின்பற்ற வேண்டிய சில உத்தரவுகளை வழங்குவேன்."**

பாபா பின்னர் 'உள் அறிவு' (INNER KNOWLEDGE) பற்றி சுருக்கமான, ஆனால் சொல்வன்மை மிக்க விளக்கம் அளித்தார்: **"உலகில் அனைத்தையும் உங்கள் கண்களால் நீங்கள் பார்க்க முடியும், ஆனால், கண் தன்னைத் தானே பார்க்க முடியுமா? முடியாது. உங்கள் கண்ணைப் பார்க்க ஒரு கண்ணாடி தேவை. அதுபோல, கடவுளைப் பார்க்க, கண்ணாடியாகத் திகழும் உண்மையான 'உள் அறிவு' தேவை; மேலும் பார்ப்பது உங்கள் உள் கண்ணால்.**

**மனப்படிவங்களின் ஓர் அடுக்கு, கண்ணாடியை மூடி மறைத்திருக்குமே தவிர வேறு எதுவும் இல்லை. அந்த அடுக்கு அகற்றப்பட்டதும், உங்களிடம் இருக்கும் கண்ணாடியால் நீங்கள் கடவுளைக் காண்பீர்கள்."**

அவர் மேலும் கூறினார், **"உங்கள் சுவாசத்தை விட நான் உங்களுக்கு அருகாமையில் இருக்கிறேன். நான் எப்பொழுதும் என் அன்பானவர்களுடன், உடல் ரீதியாக இங்கே உங்களுடன் இருப்பதைக் காட்டிலும், சிந்தனையிலும், செயல் நோக்கத்திலும் இருக்கிறேன்."**

மறுநாள் காலை, 1963 ஏப்ரல் 20, மும்பை குழு மீண்டும் வந்தது; ஆனால் அந்த நாளில் சூழ்நிலை சற்று தீவிரமாகவும், இருள் நிறைந்தும் காணப்பட்டது. பாபா ஜுரத்தில் பரிதாபமாகத் தோன்றினார். **"கடவுளுக்கு முன்பாக வாதிடவோ, முரண்டு பிடிக்கவோ செய்யாதீர்கள், ஏனெனில் கடவுளின் கைகளால் ஒரு பாறை கூட எளிதில் உடைக்கப்படும்!"** என்று பாபா குழுவுடன் கேலி செய்ய முயன்று, பின்பு கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தி கூறினார்:

**இது எனது வழி. நான் ஏதாவது ஒன்றைச் செய்யச் சொல்கிறேன். அப்போது, நீங்கள் சொல்கிறீர்கள், 'பாபா, நீங்கள் சொல்வது போல நான் செய்தால் இது நடக்கும், அது நடக்கும்; நான் அதை இப்படி செய்தால் என்ன?' அப்போது நான், 'சரி, உங்கள் விருப்பப்படி செய்யுங்கள்' என்று கூறுவேன். உதாரணத்திற்கு, கிஷின்சந்திடம் சப்பணம் போட்டு அமரச் சொன்னேன். அவர், 'பாபா, எனது முழங்கால்கள் வலிக்கும்' என்றார். அதனால் நான் அவரிடம், 'சரி, நீங்கள் கால்களை நேராக வைத்து அமரலாம்' என்று கூறினேன்.**

**கேள்விகள் அல்லது உங்கள் கருத்துகளின் பரிந்துரைகள் இல்லாமல் எனது முதல் வார்த்தைக்கு கீழ்ப்படியுங்கள். நான் வழங்கிய முதலாவதான வழிமுறைகளை நீங்கள் பின்பற்றாதபோது, தவிர்க்க முடியாமல் என்னை இணங்கச் செய்கிறீர்கள். மேலும் ஏதேனும் தவறு நடந்தால், "நாங்கள் சொன்னதற்கு நீங்கள் இணக்கம் தெரிவித்தீர்கள்" என்று பாபாவைக் குறை கூறுகிறீர்கள்.**

அவரது வட்டத்திற்கு வெளியே இருக்கும் அன்பர்களைப் பொறுத்தவரை, பாபா இப்போது அவரது 'உதவியற்ற' நிலையில் இல்லை. அவர்கள் கண்ணெதிரே அவரில் நல்ல மாற்றங்கள் தென்பட்டன. இப்போது அவர் விரும்பியதைச் செய்து கொண்டிருந்தார். அவர் கோபமாக இருந்ததைப் போல் இரக்கமாகவும் இருந்தார். முன்னெப்போதையும் விட, சிறிய விஷயங்களில் கூட அவர்களின் கீழ்ப்படியாமைக்கு அவர் தமது வெறுப்பைக் காட்டினார். அவர் பலரிடம் சீற்றத்தை வெளிப்படுத்தி, மீண்டும் ஒருமுறை விழிப்புடன் இருக்கச் செய்தார், அனைவரும் அவருடைய கட்டளைக்கும், வார்த்தைக்கும் வெளிப்படையாகக் கீழ்ப்படிய வேண்டும் என்று கோரினார்.

உதாரணமாக, ஒரு நாள் அர்னவாஸ், கேட்டி இருவரும் அழைக்கப்பட்டபோது, கேட்டி தனது பாத அணியை அறைக்கு வெளியே வைத்தார். பாபாவை சந்தித்த பிறகு, மெஹராவைப் பார்க்க உள்ளே செல்லுமாறு அவர்களிடம் சைகையால் தெரிவித்தார். எந்தக் கதவு வழி செல்லவேண்டும் என்பதையும் பாபா சைகையால் சுட்டிக் காட்டினார். அர்னவாஸ் உடனே உள்ளே சென்றாலும், கேட்டி தனது பாத அணியை எடுக்க முதலில் வெளியே சென்றபோது, பாபா கேட்டார், "**நீங்கள் ஏன் வெளியே சென்றீர்கள்? நான் உங்களை உள்ளே போகச் சொன்னேன். நான் சொன்னபடியே நீங்கள் செய்ய வேண்டும்.**"

அவரது நெருங்கிய அன்பர்கள், பாபா முன்னிலையில் பதற்றமடைந்தனர் என்பது புரிந்துகொள்ளத்தக்கது. ஆனால் பாபா ஒவ்வொருவரையும் திட்டிக் கொண்டிருந்தாலும் - கடந்த இரண்டு வருடங்களில் அவரது செயலற்ற, ஆர்வமற்ற மற்றும் உணர்ச்சி முனைப்பற்ற மனநிலையை விட இது மிகவும் வரவேற்கத்தக்கதாக இருந்தது!

18ஆம் தேதி, பாபா இவ்வாறு கருத்துரைத்தார், "**ஒரு நாட்டு மக்களின் தலைவர், தனது மக்களை சரியாக வழிநடத்த வேண்டும், அவர் மீது மக்கள் கொண்டிருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையின் மூலம், அவர் அவர்களை ஒரு பரிபூரண குருநாதரை நோக்கி வழிநடத்த வேண்டும்.**"

1963 ஏப்ரல் 21 ஞாயிறு அன்று, மூன்றாவது தரிசன நிகழ்ச்சிக்காக, அதிகாலையிலிருந்தே பல அன்பர்கள், குருபிரசாத்தில் ஓரத்தில் அமைந்த அறைக்குள் ஒன்றுதிரண்டனர்; எரச் அவரிடம் இதைக் கூறியபோதும், பாபா மண்டபத்திற்குள் செல்லவில்லை. பாபா, ஹோஷங் பரூச்சாவிடம், "**நேற்று இரவு தூங்கினீர்களா?**" என்று கேட்க, அவர் 'ஆமாம்' என்று பதிலளித்ததும், பாபா, "**என்னால் ஐந்து நிமிடம் கூட தூங்க முடியவில்லை. வேலையின் அழுத்தம் தீவிரமாக இருந்தது**" என்று குறிப்பிட்டார். (முந்தைய நாளும் பாபாவிற்கு ஜுரம் இருந்தது.)

மார்ச் மாதத்தில் குருபிரசாத்தில் தங்குவதற்காக வந்த சகோதரரின் மகன் ஷெரூவிடம் "நீ மட்டுமே உளதாயிருக்கிறாய்!" (துமி தோ ஹோ! - TUMI TAU HO!) என்ற பிரார்த்தனையை மொழியுமாறு கூறினார். இது முக்கியமாக, பாபாவால் எடுத்துரைக்கப்பட்டாலும், பாவ் கல்சூரியின் சில வரிகளும் இதில் இணைக்கப்பட்ட நிலையில், இது 'பாவ் கல்சூரியின் பிரார்த்தனை' என்று அழைக்கப்பட்டது. ஷெரூவிற்கு இந்தி மொழி படிக்கத் தெரியாததால், மணி, எரச் இருவருக்கும் இந்த ஈரடிக் கவிதைகள் வழங்கப்பட்டு அதை அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டனர். இந்த நேரத்தில், பாவ் கல்சூரி மேல்மாடியில் தனது அறையில் 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) புத்தகத்தை இந்தியில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். பிற அனைத்து மண்டலியும் பாபா மற்றும்

பார்வையாளர்களுடன் மண்டபத்தில் இருந்தனர். பாபா, ஷெரூவிடம் இந்தப் பிரார்த்தனையை தினமும் மொழியுமாறு கூறியது, பாவ் கல்சூரிக்குத் தெரியாது; மேலும் தானே இதை இயற்றியதாக பாபா எவருக்கும் தெரிவிக்கவில்லை. அங்கிருந்தவர்கள் அது பாவ் கல்சூரியின் கைவண்ணத்தில் உருவானது என்ற தவறான எண்ணத்தில் இருந்தனர். ஷெரூ இந்தியில் பிரார்த்தனையை மிகவும் இனிமையாகப் பாடினார்.

அதைத் தொடர்ந்து விவாதம் மாயாவின் செயல்பாடுகளை (WORKINGS OF MAYA) நோக்கி நகர்ந்தது. ஒரு கட்டத்தில், பாபா விளக்கினார், "**மாயாவை ஒருவரது தோலில் ஏற்படும் படர்தாமரையுடன் ஒப்பிடலாம். நீங்கள் எவ்வளவு சொறிகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக சொறிந்து கொள்ள விரும்புகிறீர்கள், மேலும் நீங்கள் அதிக வேதனையும் துயரமும் அடைகிறீர்கள். அதேபோல, நீங்கள் மாயையில் எவ்வளவு அதிகமாக ஈடுபட விரும்புகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக ஒருவர் மிகவும் வேதனையாகவும் பரிதாபமாகவும் இருக்கிறார்.**"

சிறிது நேரத்தில், ஹோமா தாதாசாஞ்சி உள்ளே சென்று அமர்ந்தார். பாபா அவரிடம், "**நேற்று இரவு நீங்கள் நன்றாக தூங்கினீர்களா?**" என வினவினார்.

அதற்கு அவர், "மிகவும் நன்றாக பாபா" என்றார்.

பாபா வேடிக்கையாகக் கூறினார், "**நீங்கள் என்னிடத்தில் எந்த விதமான அன்பைக் கொண்டுள்ளீர்கள்? நீங்கள் நன்றாக தூங்கிய அதே வேளையில், நான் ஐந்து நிமிடம் கூட தூங்கவில்லை!**"

1930 ஆண்டுகளின் மத்தியில், இந்திய ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் (PRESIDENT OF INDIA, DR. S. RADHAKRISHNAN), மெஹர் பாபாவைப் பற்றி முதன்முதலில் டாக்டர் தேஷ்முக் மூலமாக அறிந்து கொண்டார். டாக்டர் ராதாகிருஷ்ணன் 1936இல் மைசூரில் பாபாவை சந்திக்க முயன்ற வேளையில், பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டதால் பார்க்க முடியாமலாயிற்று. மனோகர், மோனா ஸாக்கரே இருவரும் டெல்லியிலிருந்து பூனாவிற்கு வந்து, அவர்கள் சமீபத்தில் குடியரசுத் தலைவரை சந்தித்து, 'ஸ்டே வித் காட்' (STAY WITH GOD) மற்றும் பிற இலக்கியங்களின் நகல்களைக் கொடுத்ததாக பாபாவிற்குத் தெரிவித்தனர். டாக்டர் ராதாகிருஷ்ணன் கிழக்கு-மேற்கு சகவாசத்தைப் பற்றியும், பாபாவைப் பற்றி மேலும் கேள்விப்பட்டதில் மிகவும் மகிழ்ச்சியடைந்து, விரைவில் அவரை சந்திக்க விருப்பம் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த பாபா, "**ஜனாதிபதி, என்றாயினும் ஒரு நாள் வருவார். எல்லோரும் ஒரு நாள் வருவார்கள். உண்மையான அல்லது பொய்யான துறவிகள் கூட வருவார்கள். அவர்கள் என்னிடம் வருவதைத் தவிர வேறு எந்த வழியுமில்லை**" என்று கூறினார்.

ஃபிரான்சிஸ், பாவ் கல்சூரி இருவரின் தூண்டுதலின் பேரில், டாக்டர் தேஷ்முக் ஆங்கிலத்தில் இயற்றிய கீர்த்தனையை, பாபா அவரிடம் பாடச் சொன்னார். அதற்குப் பிறகு, பாபா கூறினார், **“வரலாற்றில் இது போன்ற எதுவும் இதற்கு முன்னர் இருந்ததில்லை!”**

அவர் ஜிம் மிஸ்திரியை தேஷ்முக்குடன் இணைந்து பாடுமாறு கூறினார் (அவர்கள் இருவருக்கும் பாடும் குரல் வளம் இல்லை). ஜிம் தனது வாழ்நாளில் பாடியதில்லை, மேலும் அவர் பதட்டமாக நடுங்கத் தொடங்கினார். ஆனால் அவர் பாபாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து முயற்சி செய்தார், மேலும் அவர்களின் ‘ஜோடிப் பாடல்’ அனைவரையும் சிரிப்பு ஆரவாரத்தில் ஆழத்தியது. பாபா அவர்கள் பாடியதை மிகவும் வேடிக்கையாக ரசித்தார். அதைக் கேட்ட அவருக்கு ‘**இதயப் படபடப்பு**’ ஏற்பட்டதாக கேலி செய்து, திடீரென அதை நிறுத்திவிட்டார்!

அப்போது பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

**இறை-உணர்வை அடையப்பெறும் ஒருவருக்கு, மாயைகள் அனைத்தும் மறைந்துவிடும், இருப்பினும் நான் என் நகைச்சுவை உணர்வை தக்கவைத்துக் கொள்கிறேன்; அதனால் உலகளாவிய துன்பத்தை என்னால் தாங்க முடியும்!**

**உண்மையான ஞானத்தை அடையப்பெறும் போது, அப்பாற்பட்ட நிலை** (BEYOND STATE) **அடையப்படுகிறது. அதை மனதால் அடையப்பெற முடியாது. நீங்கள் அனைத்தையும் உங்கள் கண்களால் பார்க்கிறீர்கள், ஆனால் உங்கள் முன்னால் ஒரு கண்ணாடியை வைக்காத வரை உங்கள் கண்களை நீங்கள் பார்க்க முடியாது. அதேபோல், உண்மையான அறிவின் கண்ணாடியை உங்கள் முன்னால் வைக்கும் வேளையில், நீங்கள் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளைக் காண்பீர்கள்.**

**ஆன்மீகப் பாதையில், பரிபூரண நேர்மை மற்றும் தன்னலமற்ற சேவை இரண்டும் இன்றியமையாதது. உங்களைப் பற்றிய ஓர் எண்ணம் கூட உங்களுக்கு இருந்தால், உங்கள் சேவை தன்னலமற்றதாக இருக்காது. ஒரு கவிஞர்** (பாகிஸ்தானின் ஸாயிப் ஆஸ்மி, SAIB ASMI) **கூறினார்:**

**“முதலில் இந்த உலகத்தை துறந்து, பின்னர் அடுத்த உலகத்தையும் துறந்து, தொடர்ந்து கடவுளைத் துறந்து, கடைசியாக துறவையே துறக்க வேண்டும்!”**

பாடகர் பட்வர்தன் (PATWARDHAN) அன்று பாபாவின் முன்னால் பாட வந்து, “‘நான்’ எனும் சுயம் இல்லாத செயல் எது? ‘நான்’ என்ற எண்ணத்தால் தூண்டப்படாதது எது?” என்று கேட்டார்.

பாபா பதிலளித்தார்:

**எல்லா செயல்களிலும் ‘நான்’ எனும் சுயம் உள்ளது. ஆனால் அன்பிற்குரியவரிடம் முழுமையாக சரணடையும் அன்பினால் தூண்டப்பட்ட செயலில் ‘நான்’ எனும் சுயம் இல்லை. அது அகங்காரமற்ற ‘நான்’ எனும் அகங்காரம். உண்மையான அன்பில், அன்பன் தன்னைப் பற்றிய எந்த**

எண்ணமும் இல்லாமல் அன்பிற்குரியவரின் மகிழ்ச்சியைத் தேட விரும்புகிறான். அப்போது அன்பன், அனைவரையும் நேசிப்பதாக உணர்கிறான்.

இது அன்பின் அதி உயர்வான நிலை. நல்லது அல்லது தீயதாகத் திகழும் பிற அனைத்து செயல்களும் பிணைக்கப்பட்டுள்ளன. ஒரு பரிபூரண குருநாதர் அல்லது அவதார புருஷரிடம், 100 சதவீதம் சரணடைந்த ஒருவரின் செயல்களில், 'நான்' எனும் அகங்கார சிந்தனை அறவே இருக்காது. உண்மையான சரணாகதியில், ஏன்? எதற்காக? என்ற எண்ணத்திற்கு இடமே இல்லை. உங்கள் சரணாகதி முழுமையானதும், நீங்கள் செய்யும் அனைத்து செயல்களும் உங்களுடையது அல்ல. உங்கள் 'நான்' எனும் சுயத்தை தவிர வேறு எதையும் நீங்கள் துறக்க வேண்டியதில்லை. ஒருவர் இறுதியில் மனதைக் கடந்து செல்ல வேண்டும், ஏனெனில் உண்மைப்பொருள் அதற்கு அப்பாற்பட்டது.

நீங்கள் எப்படி மனதைக் கடந்து செல்ல முடியும்? அன்பு ஒன்றுதான் அதற்கான ஒரே வழி. இது பரிபூரண குருநாதரின் அருளால் மட்டுமே விளைவது. ஒருமுறை 'நான்' எனும் எண்ணம் அகன்றுவிடுமானால், வேறு எதுவும் மிஞ்சாது. ஆனால் இது மிகவும் கடினம். 'நான் உடல்நலக் குறைவாக உள்ளேன், நான் பசியாக இருக்கிறேன்' என்று ஒருவர் கூறும்போது அவர் தனது 'நான்' எனும் அகங்காரத்தை அறியாமலேயே வலியுறுத்துகிறார். இது ஒருவரது இயல்பான அகங்காரம் (NATURAL EGO); இருப்பினும், இது ஆணவமற்றது. 'நான் ஒரு மருத்துவர்', 'நான் செல்வந்தன்', 'நான் ஏழைகளுக்கு சேவை செய்கிறேன்' என ஒருவர் வலியுறுத்திக் கூறும்போது, அகங்காரம் இன்னமும் எஞ்சி இருப்பதைக் குறிக்கிறது. இந்த அகங்காரம், பெருமை, பொறாமை மற்றும் பேராசையின் பசியை உருவாக்குகிறது.

அன்பின் நிலையை மனதால் எட்ட முடியாது. அன்பின் உணர்வை வெளிப்படுத்தும் ஒருவரால் மட்டுமே அந்த நிலையின் வாசலை எட்ட முடியும். முழுமையான அன்பில், முற்றிலும் கீழ்ப்படியும் தன்மை அடங்கியுள்ளது. வெகு சிலரே இதற்குரிய தைரியத்தை அடையப் பெறுகிறார்கள். கிருஷ்ணரை மிகவும் நேசித்த அர்ஜுனன் கூட, மஹாபாரதப் போரில் தனது உற்றார் உறவினர்களுடன் போரிடுமாறு கட்டளையிட்டபோது, அவருக்குக் கீழ்ப்படியவில்லை. கிருஷ்ணா, இறுதியில் அர்ஜுனனுக்கு தனது விராட் ஸ்வரூபத்தை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. இந்த அனுபவத்திற்குப் பின்னர், அர்ஜுனனின் கீழ்ப்படிதலுக்கு எந்த மதிப்பும் இல்லை. கீழ்ப்படிதல் என்பது சிறிதளவு சந்தேகத்திற்கும் இடமின்றி இருக்க வேண்டும். அப்போதுதான் அது மிக உயர்ந்த நிலையை அடைந்ததாகக் கூறமுடியும். ஆனால் இது சாத்தியமற்றது.

பாபா, **"எல்லோரையும் நேசிப்பவன் நான் ஒருவன் மட்டுமே; இப்போது இங்கு இருக்கும் உங்களில் எவரும் நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் என்னை நேசிக்கவில்லை"** என்று கூறி முடித்தார்.

ரோடா மிஸ்திரியிடம் பாபா, '**அவர் நன்றாகத் தூங்கினாரா**' என்று கேட்டதற்கு, ரோடா 'இல்லை' என்று பதிலளித்தார். பாபா கூறினார், "**நீங்கள் தூங்கவில்லை என்றால் அது நன்றாகவே இருந்திருக்கும், ஏனெனில் நீங்கள் என்னை இன்னும் அதிகமாக நினைவில் கொள்ள முடியும்.**"

மதுசூதனன் ஒரு பாடலைப் பாடும்போது, ஃப்ரீனி தாதாசாஞ்சியிடம் பாபா அதையே கேட்டார். அவரும் 'தூங்கவில்லை' என்று பதிலளித்தார். பாபா வினவினார், "**ஆனால் நீங்கள் ஏன் தூங்கவில்லை? உண்மையைச் சொல்லுங்கள். நானும் தூங்கவில்லை, ஆனால் நீங்கள் தூங்காததன் காரணம் என்ன? நீங்கள் அதிகமாக உணவு உண்டீர்களா? நீங்கள் எதற்காவது அஞ்சினீர்களா?**" கண்களில் ஒளிரும் மின்னலுடன் அவரிடம், "**இதையெல்லாம் கண்டுகொள்ளாதீர்கள், கவலைப்படாதீர்கள். உங்களுக்குத் தூக்கம் வரவில்லை என்றால் எனது பெயரை நினைவுகூருங்கள். எரச் ஒருமுறை தொடர்ந்து பதினாறு நாட்கள் இமைகளை மூடித் தூங்கவில்லை, பாவ் கல்சூரியும் சரியாகத் தூங்கியதில்லை. உங்கள் உடல்நிலை பற்றி கவலைப்படாமல் அனைத்தையும் என்னிடம் விட்டுவிடுங்கள்.**"

பாபா அப்போது வினவினார், "**உங்களில் எவரேனும்** (ஸொராஸ்ட்ரியர்களின் புனித நூலான அவெஸ்தாவிலிருந்து) **கடவுளின் 101 பெயர்களை, அவற்றின் அர்த்தங்களுடன் மீண்டும் மீண்டும் மொழிய முடியுமா?**"

எவராலும் முடியவில்லை.

"**நீங்கள் இந்தப் பிரார்த்தனையை அன்புடன் திரும்பத் திரும்ப மொழிந்தால், வேறு எந்தப் பிரார்த்தனையும் மொழியவேண்டியதில்லை. யார், எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், இந்தப் பெயர்களை அன்புடன் திரும்பத் திரும்ப மொழியலாம்.**"

அப்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார், "**முழுப் படைப்பும் ஒரு நிழல், அதில் எந்த முக்கியத்துவமும் இல்லை. அது எனது நிழல். உங்கள் மனம், 'அது நிழல் அல்ல, நிஜம்' என்று உங்களை உணர வைக்கிறது.**"

பாபா தொடர்ந்து கூறினார், "**ஒரு முஸ்லிம், மதுபான சத்திரத்தின் பின்புற வாசல் வழியாக, எவரும் பார்க்காதபடி நுழைவார், அவர் போதை வரும்வரை மது அருந்திவிட்டு, பின்னர் அவர் முன் வாசல் வழியாக, அச்சமின்றி வெளியே வந்து, யார் ஒருவரை சந்தித்தாலும் சவால் விடுவதும், அது சண்டையில் முடிவதும் வழக்கம்! போதை தணிந்ததும், அவர் வெட்கத்தில் தயங்கி தயங்கி வீட்டிற்கு விலகிச் செல்வார். கடவுளை நேசிப்பதில் ஒருவர் அடையப்பெறும் 'போதை' இதுவல்ல! அன்பின் போதை இடையறாது நிகழ்வது.**"

அனைவரும் ஒன்றாகக் கூடியிருந்தபோது, பாபா, டாக்டர் பரூச்சாவிடம் திரும்பி, அவர் என்ன நினைக்கிறார் என்று கேட்டார். பரூச்சா பதிலளித்தார், "பாபா, நீங்கள் ஏன் எங்களுடன் உங்கள் பாரத்தை பகிர்ந்து கொள்ளக்கூடாது?"

பாபா தீவிரமான தொனியில் எடுத்துரைத்தார், "**நேரம் நெருங்கிவிட்டது. நீங்கள் அனைவரும் பாரத்தைத் தாங்க முடியாமல் நாணல் போல வளைந்து விடுவீர்கள்!**"

அலோபாவிடம், ஹ:ஃபீஸின் ஈரடிக் கவிதை ஒன்றை வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார், அதை பாபா மொழிபெயர்த்தார்: "**அன்பிற்குரியவர் அன்பரிடம் கூறுகிறார், 'என்னுடனான உங்கள் நட்பு எவ்வளவு காலம் நீடித்து இருக்கும் என்பதுதான் முக்கியம், அதைத்தான் நாம் அனைவரும் பார்க்க வேண்டும்!'**"

காலை 11:15 மணிக்கு, பாபா குழுவை மதிய உணவுக்காகச் செல்லுமாறு கூறி, இருபது அல்லது முப்பது ஆண் அன்பர்களை சீட்டு (லா ரிஸ்க் - LA RISQUE) விளையாடுவதற்காக அங்கேயே அமருமாறு அறிவுறுத்தினார். சில நாட்களுக்கு முன்பு, மும்பை குழுவில் சிலருடன் காரில் சென்றபோது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**என்னுடன் சீட்டு விளையாடுபவர்கள், எனது பாதங்களில் தலைவணங்குவதற்கு இணையான,** (அது இப்போது அனுமதிக்கப்படாததால்) **தங்கள் மூக்குகளைத் தரையில் உரசும் பாக்கியத்தை அடையப் பெறுகிறார்கள்.**"

1963ஆம் ஆண்டு குருபிரசாத்தில் ஒரு நாள், ஆண்கள் மட்டுமே இருந்தபோது, பாபா, '**எப்போதேனும் அவர்கள் உடலுறவில் ஈடுபட்டார்களா**' என்று அங்கிருந்த ஒவ்வொருவரிடமும் சாதாரணமாகக் கேட்கத் தொடங்கினார். திருமணமானவர்கள், 'ஆம், எனது மனைவியுடன்' என்று பதிலளித்தனர். '**திருமணத்திற்கு வெளியே அவர்கள் எப்போதேனும் உடலுறவு கொண்டார்களா**' என்று பாபா அவர்களிடம் கேட்டபோது, அவர்களில் சிலர் திருமணத்திற்கு முன்னரே அவ்வாறு ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டனர். '**மேலும், திருமணத்திற்குப் பின்னர், உங்கள் மனைவியைத் தவிர வேறு எவருடனும்?**' என்ற கேள்வியைத் தொடர்ந்த போது, இதையும் சிலர் ஒப்புக்கொண்டனர். பாபா உடனே, "**இதுவரை நீங்கள் எதைச் செய்திருந்தாலும், நான் உங்களை மன்னிக்கிறேன். ஆனால் இனிமேல் அதைத் திரும்பச் செய்யாதீர்கள்**" என்றார்.

பாபா அறை முழுவதும், ஒவ்வொரு நபரிடமும் அதே கேள்வியை தொடர்ந்து கேட்டார்; இறுதியாக ஒரு நபரிடம், "**நீங்கள்.... நீங்கள் எப்போதாவது திருமணத்திற்கு வெளியே உடலுறவில் ஈடுபட்டீர்களா?**" பாபாவின் கேள்வி அந்த மனிதரை பதற்றத்துடன் சிரிக்க வைத்தது.

அதற்குப் பிறகு, பாபா உரையாடலின் தலைப்பை மாற்றி, அதே நபரிடம் அவரது வாழ்க்கை மற்றும் வணிகத்தைப் பற்றி தொடர்ந்து கேட்டார். "**உங்கள் தொழில் எப்படி நடக்கிறது? உங்களுக்கு ஒரு பண்ணை இருக்கிறது, அப்படித்தானே? நீங்கள் நிறைய பணம் சம்பாதிக்கிறீர்கள், இல்லையா?**

**எத்தனை ஆண்களை வேலைக்கு அமர்த்தியுள்ளீர்கள்? எப்போதேனும் பெண்களை விவசாயத்தில் கூலிக்கு அமர்த்தினீர்களா?"** அந்தக் கடைசி கேள்வியைக் கேட்டபோது, அந்த மனிதர், படிப்பறிவில்லாத ஒரு கிராமத்துப் பெண்ணுடன் தனக்குள்ள தொடர்பு பற்றி பாபா அறிந்ததை நினைத்து, சட்டென்று மனம் உடைந்து அழுதார். அந்த மனிதர் அழுது வருந்தியபோது, 'சம்பவம் நிகழ்ந்த அந்த நேரத்தில், அவரையும், அந்தப் பெண்ணையும் தவிர வேறு எவரும் அங்கு வரவில்லை, அவர்களை எவரும் பார்த்திருக்க முடியாது' என்றும் விளக்கினார்.

பாபா அந்த நபரிடம், "**நான் எல்லோரிலும், எல்லாவற்றிலும் முழு உணர்வுடன் இருக்கும் போது, நான் எல்லோரையும் எல்லாவற்றையும் பார்க்க முடியாது என்ற கேள்வி எப்படி எழும்? ஆனால் இன்று என் முன்னால் இதை ஒப்புக்கொண்டதால், நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. இப்போது அதை மறந்து விடுங்கள். ஆனால் அதை மீண்டும் செய்யாதீர்கள்.**"

ஏப்ரல் 21 அன்று பிற்பகலில், குழு மீண்டும் மண்டபத்தில் ஒன்று கூடிய போது, தற்காலிகமாக செயலிழந்த வலது கையுடன் ஒரு வயதான பெண்மணி பாபாவைப் பார்க்க வந்தார். அவர் ஏற்கனவே கையின் சில அசைவுகளை மீட்டெடுத்தார். பாபா அவரிடம் உடற்பயிற்சி செய்யுமாறு வலியுறுத்திக் கூறினார். அந்தப் பெண்மணி, "பாபா, என்னை ஆசீர்வதியுங்கள்" என்றார்.

"**உங்களிடம் உடற்பயிற்சிகளைச் செய்யச் சொன்னதே ஓர் ஆசீர்வாதம்**" என்று பாபா கூறினார். "**என்னை மேலும் மேலும் நினைவில் கொள்ளுங்கள்.**"

அதன் பின்னர் இவ்வாறு கூறினார்: "**ஐந்து பரிபூரண குருநாதர்கள் என்னை இந்த பூமியில் கொண்டு வருகிறார்கள், அவர்களில் 500 பேர் என்னைக் கொண்டுவர நினைத்தாலும், இன்னும் 700 ஆண்டுகளுக்கு நான் வரமாட்டேன்!**"

ஓய்வுபெற்ற இரயில்வே பொறியியலாளராக பணிபுரிந்த ஹோமி மாமா ஸட்டாவிடம் பாபா, அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சில வேடிக்கையான சம்பவங்களை எடுத்துரைக்குமாறு கூறினார். பாபாவையும், அங்கிருந்தவர்களையும் மகிழ்விக்கும் வகையில் அவர் அவ்வாறே செய்தார்.

பாபா பஞ்ச்கணியில் (ஏறக்குறைய 1938) நடந்த ஒரு நகைச்சுவையான சம்பவத்தை எடுத்துரைத்தார். **ஒரு நாள் இரவு, பைதூல் தனது குடலை இலகுவாக்க, காட்டிற்குள் சென்றார். அவர் குந்தி அமர்ந்தபோது, சில அடி தூரத்தில் ஒரு புலியைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர், மலத்தை வெளியேற்ற முடியாமல் அறையை நோக்கி விரைந்தார்.** பாபா பின்பு பைதூலைக் கடிந்துகொண்டார், "**நானும் புலிதான், என்னைப் பார்த்து ஏன் அஞ்சி நடுங்க வேண்டும்? புலி உங்களைத் தின்றிருந்தால், அது என்னைத் தவிர வேறு எவருமல்ல!**"

தரிசன வேளையில், பாபா கூறினார், "**நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, எனது தொடர்பில் வந்த அனைவரின் இதயங்களும், எனது இறை-வார்த்தையை அடையப் பெறுவதற்கும், அன்பால் அதைக் கொழுந்துவிட்டு எரியச் செய்வதற்கும், திறந்தே இருக்கும்!**"

பிற்பகல் 3:00 மணியளவில், இசை வித்வான் பட்வர்தன் 4:30 மணி வரை, அற்புதமான குரலில் இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினார்; பாபாவும் பிற அனைவரும் அதை மிகவும் ரசித்தனர். பாபா தொடர்ந்து கூறினார்: "**அவர் என்னை மகிழ்வுறச் செய்வதால் அவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்.**" நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா, பட்வர்தனை அன்புடன் தழுவி கைக்குட்டை ஒன்றைக் கொடுத்தார். பாடகருடன் தனது புகைப்படத்தையும் எடுத்துக் கொண்டார். அதைத் தொடர்ந்து, மதுசூதனன் சில கஸல்களைப் பாடினார். ஒவ்வொருவரும் பாபாவிடம் சென்று, அவரது கையை முத்தமிட்டு, மண்டபத்தை விட்டு வெளியேறுவதுடன் நாள் இனிதே முடிந்தது.

சில காலத்திற்கு முன்னர், அமர் ஸிங் ஸைகல் அவரது நல்ல நண்பரான பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் பிற மத்திய அமைச்சர்களுக்கு மெஹர் பாபாவைப் பற்றிய சில சிறு புத்தகங்களை வழங்கினார். நேருவுடனான அவரது சந்திப்பின் அறிக்கை மெஹராஸாத்தில் பாபாவிற்கு அனுப்பப்பட்டது; மேலும் 1963 மார்ச் 22 அன்று பாபா இதைக் கேள்விப்பட்டதும், ஸைகலுக்கு கீழ்வரும் வழிமுறைகளை எடுத்துரைத்தார்:

**மெஹர் பாபாவைப் பற்றிய செவிவழித் தகவலை அவர் நம்பவில்லையென்றால், மெஹர் பாபாவை நேரில் சந்தித்து, அவர் அவதார புருஷர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதில், ஸைகல், பிரதமருக்கு உதவ மற்றுமொரு நல்ல வாய்ப்பைக் கண்டுகொள்ள வேண்டும். அவதார புருஷருடனான தனிப்பட்ட தொடர்பு மற்றும் அவதார புருஷரின் கருணை ஆகியவை பிரதமரை நம்பவைப்பதற்கு உதவக்கூடும்.**

**கடவுள், மனித உருவில் அவதார புருஷர்; மனித உருவில் கடவுளின் நிழல், மனிதன்; எனவே, அவதார புருஷரின் அருளுக்கும், துறவிகளின் ஆசீர்வாதத்திற்கும் உலகளவு வித்தியாசம் உள்ளது. அர்ஜுனன் துறவிகள் மற்றும் முனிவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டார், ஆனால் அவதார புருஷரின் உடனடி கருணை, அவரை, கிருஷ்ணர் அவதார புருஷர் என்பதை நம்ப வைத்தது, ஏனெனில், அவதார புருஷர் அவ்வாறு தமது விருப்பத்தை வெளிப்படுத்தும்போது சாத்தியமற்றது எதுவுமில்லை.**

**எனவே, நமது அன்பான பண்டித்ஜி (நேரு) யுகத்தின் அவதார புருஷரின் நேரடித் தொடர்புக்கு வந்து, அந்த இறுதி இலக்காகிய சுதந்திரத்திற்காகப் பாடுபடத் தொடங்க வேண்டிய நேரம் இது; அதை ஒருமுறை அடையப் பெற்றதும், எந்தப் பிணைப்பையும் அது அறியாது, ஆனால் சுதந்திரத்திலிருந்து அதுவாகவே சுதந்திரத்தை அளிக்கிறது!**

கற்றதைக் கைவிடும் செயல்முறைக்கு உதவும் விஷயங்களை வாசிக்க பண்டித்ஜிக்கு நேரமில்லை என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், பண்டித்ஜியின் நேர்மை மற்றும் நாணயத்தால் நெகிழ்ந்து போனதால், பாபா அவரிடம் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை தினமும் ஐந்து நிமிடங்கள், முதல் பக்கத்திலிருந்து தொடங்கி கடைசி வரை படிக்குமாறு கேட்டுக்கொள்கிறார் என்பதை நீங்கள் அவரிடம் சொல்ல விரும்புகிறேன்.

நீங்கள் அவருடன் ஒரு சந்திப்பு நேரத்தை நிர்ணயித்து, குறைந்தது பத்து நிமிடங்களேனும் இடையூறு எதுவும் இல்லாமல், இந்தக் கடிதத்தின் தொடர்புடைய பத்திகளை, மூன்றாவது பத்தியிலிருந்து படிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மேலும், என்னிடமிருந்து பின்வரும் செய்தியை நீங்கள் தவறாமல் அவர் முன்னிலையில் படிக்க வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்:

ஏக இறைவனான உண்மைப்பொருளைப் பற்றிய அறிவார்ந்த நம்பிக்கை கூட முக்கியமில்லை. இறை ஒளி, இறை அன்பு, உண்மைப்பொருள், அளவுகடந்த நேர்மை, எல்லையற்ற சக்தி, ஞானம், பேரின்பம் ஆகியவற்றின் இறைப் பெருங்கடல் - உண்மைப்பொருளை தனக்குள்ளேயே காணும் அனுபவம் ஒன்றுதான் இன்றியமையாதது.

இவ்வாறு கடவுளைக் காணும் ஒரு சிலர் மட்டுமே இந்த எல்லையற்ற இறைப் பெருங்கடலில் ஐக்கியமாகிறார்கள். இந்த உயர்ந்த, உன்னதமான உணர்விலிருந்து, அரிதாக ஒருவர் பூமியில் இறங்கி வந்து 'நான் கடவுள்' என்று பறைசாற்றுகிறார். 'நான்' என்ற இந்த பறைசாற்றல் அகங்காரம் அல்ல, ஆனால் அவரது தொடர்ச்சியான அனுபவத்தின் இயல்பான விளைவு.

நான் அவதார புருஷராக இல்லாத பட்சத்தில், உலகம் என்னை அவதார புருஷராகப் போற்றி வணங்கினால், நான் அவதார புருஷராகிவிட மாட்டேன்! நான் அவதார புருஷராக இருக்கும் தருணத்தில், எவரும் என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவதார புருஷர் எனும் உயர்ந்தவர்களில் உயர்ந்தவரான எனது நிலையில், எந்தக் குறைபாடும் ஏற்படாது.

எல்லையற்ற ஆற்றல், எல்லையற்ற அறிவு, எல்லையற்ற பேரின்பம் இவை அனைத்தும் என் வசம் உள்ளது, ஆனால் நான் எனது எல்லையற்ற ஆற்றலைப் பயன்படுத்துவதில்லை. இல்லையேல், சிலுவையை சுமந்த இயேசு கிறிஸ்துவைப் போல, நான் எப்படி உதவியற்றவனாக உணர முடியும்? எனது பேரின்பத்தைப் பயன்படுத்தினால் நான் எப்படித் துன்பப்படுவேன்?

நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, சர்வ வல்லமையுள்ள தெய்வீக சக்தி கட்டவிழ்க்கப்பட்டு, உலக நிலைமைகளில் புரட்சியை ஏற்படுத்தும். நான் எனது மௌனத்தைக் கலைக்க வேண்டும், இது நடந்தாக வேண்டும்.

பாபா தனது கடிதத்தை இவ்வாறு நிறைவு செய்தார்: "**பண்டித்ஜிக்கும், என்னை நினைவில் கொள்ளும் அனைவருக்கும் என் அன்பான ஆசீர்வாதத்தை நீங்கள் தெரிவிக்க வேண்டும்**."

அமர் ஸிங் ஸைகல் 1963 ஏப்ரல் 11ஆம் நாள், நேருவை மீண்டும் சந்திக்க இருந்தார், ஆனால் எதிர்பாராமல் ஏதோ நிகழ்ந்ததால், அந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டது.

ஏப்ரல் 20 அன்று பாபா, ஸைகலுக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்:

**11ஆம் தேதி பண்டித்ஜியுடன் உங்கள் சந்திப்பு நிகழ்ந்திருந்தால், உங்கள் பணியும் அவரது பணியும் வெற்றிகரமாக முடிந்திருக்கும். காலதாமதத்திற்காக கவலைப்பட வேண்டாம். இப்போது நீங்கள் டெல்லிக்குத் திரும்பியுள்ளீர்கள், என்னுடைய செய்தியை பண்டித்ஜிக்கு வழங்கும் பணியை நிச்சயமாக விரைவில் முடிக்கவும். உங்களுக்கு என் அன்பும் ஆசீர்வாதமும்.**

அதன்படி, ஸைகல் ஒரு சந்திப்பிற்கான ஏற்பாட்டினை செய்து, 1963 ஏப்ரல் 21 காலை 11:15 மணிக்கு, பதினைந்து நிமிடங்கள் நேருவை சந்தித்தார். ஸைகல், நேருவிடம் 'மெஹர் பாபா ஆன் வார்' (MEHER BABA ON WAR) என்ற கையேட்டைக் கொடுத்தபோது, அவர், நேருவைப் பற்றி பாபாவிற்கு எழுதியதாகவும், அதன் விளைவாக பாபாவின் போர் குறித்த செய்திகளை பிரதமருக்கு வழங்குமாறு அறிவுறுத்தி கடிதம் வந்ததாகவும் விளக்கினார். நேரு அதை கவனமாகப் படித்து, உள்ளடக்கங்களைக் கண்டு நெகிழ்ந்து போனதாகத் தோன்றியது. கடந்த 38 ஆண்டுகளாக மெஹர் பாபா பேச்சின் உதவியின்றி எப்படிப் பணிபுரிகிறார் என்று கேட்டார். ஸைகல் உடனே, பாபா, முதலாவதாகப் பயன்படுத்திய எழுத்துப் பலகை, தொடர்ந்து கை சைகைகள் மற்றும் அவர் எப்படி மொழிபெயர்ப்பாளர் மூலம் செய்திகளை எடுத்துரைத்தார் என்பதையும் விளக்கினார்.

1953ஆம் ஆண்டு புதுடெல்லி தேசிய மைதானத்தில் மத்தியப் பிரதேச கிரிக்கெட் போட்டியின் போது, பாபா அவருக்குப் பின்னால் அமர்ந்திருந்தார் என்பதை நேருவிடம் ஸைகல் குறிப்பிட்டார். அப்போது ஸைகல், அவருக்கு பாபாவை அறிமுகப்படுத்தாதது நேருவிற்கு ஆச்சரியமாக இருந்தது. விரைவில், மே 5, 6 தேதிகளில் பூனாவில் பாபாவை சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்ட வேளையில், நேரு 'தன்னிடம், சந்திப்புகள் மற்றும் கூட்டங்களுக்கான முழு நேர அட்டவணை உள்ளது, ஆனால் பாபாவைப் பார்க்க சிறிது நேரம் ஒதுக்க முயற்சிப்பேன்' என்று பதிலளித்தார்,

ஸைகல், மெஹர் பாபாவின் ஐந்து குருநாதர்களைப் பற்றி சுருக்கமாக விவரித்தார், மேலும் கிழக்கு-மேற்கு சகவாசத்தைக் குறித்த விவரத்தையும் கூறினார். பின்னர் அவர் நேருவிடம் 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை கொடுத்து, பாபா அறிவுறுத்தியபடி, ஒவ்வொரு நாளும் ஒரு பக்கத்தை ஐந்து

நிமிடங்களுக்குப் படிக்குமாறு கேட்டுக் கொண்டார்; இதற்கு நேரு இணக்கம் தெரிவித்தார்.

பாபாவைப் பார்க்க வேண்டியதன் அவசியத்தை ஸைகல் மீண்டும் அவருக்கு உணர்த்தினார், நேருவின் சொந்த வார்த்தைகளில், 'பாபாவை சந்திக்கும் வரை, அவரைக் குறித்த ஒரு கருத்தை உருவாக்க முடியாது' என்று தெரிவித்து, "மெஹர் பாபாவை சந்திக்கும் விருப்பம் எனக்கு இதுவரை இல்லை" என்று கூறினார்.

துரதிர்ஷ்டவசமாக, நிகழ்வுகளின் காலப்போக்கில், நேரு ஒருபோதும் பாபாவைப் பார்க்க வரவில்லை.

1963 ஏப்ரல் 22 திங்கட்கிழமை காலை 10:00 மணிக்கு, எரச், கோஹெர் ஆகியோருடன், பாபா, ஜாம்நகர் ஹவுஸ், 50-51 கோரேகாவ்ம் பார்க்கில், தனது மும்பை அன்பர்களை சந்திக்கச் சென்றார். ரோடா மிஸ்திரி, பாபாவிற்கு மாலை அணிவிக்க, ஃபிரீனி தாதாசாஞ்சி அவருக்கு ஒரு கூடை பூக்களை வழங்கினார். பாபா ஒரு புதிய இளஞ்சிவப்பு கோட் மற்றும் சத்ரா அணிந்திருந்தார்; மேலும் அவர்கள் ஒவ்வொருவரையும் தழுவி இவ்வாறு குறிப்பிட்டார், அவரது வழக்கமான பழக்கத்திற்கு மாறாக, "**இன்று நான் நீண்ட நேரம் இங்கு இருக்கப் போகிறேன்; அவசர விஜயம் அல்ல!**" என்று தெரிவித்தார்...

பாபா அமர்ந்ததும், குழுவில் அனைவரும் அவரைச் சுற்றி சோஃபாக்கள் மற்றும் நாற்காலிகளில் அமர்ந்தனர். அவர்களின் உடல்நிலை, தூக்கம், உணவு பற்றிய வழக்கமான கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார்; மேலும் விசாலமான பங்களாவை அவர் பெரிதும் விரும்புவதாகக் கருத்துத் தெரிவித்தார். உடல்நலம் குன்றி படுக்கையில் இருந்த நர்கீஸ், கேட்டி இருவரையும் பார்க்க பாபா உள்ளே சென்று, சிறிது நேரத்தில் தனது நாற்காலிக்குத் திரும்பி வந்தார்.

ஒரு கட்டத்தில், பாபா கூறினார், "**நீங்கள் என்னை மிகவும் நேசித்தாலும், உங்களால் என்னைப் பார்க்க முடியாது. ஆனால் நான் எனது மௌனத்தைக் கலைக்கும் போது, நான் யார் என்பதை நீங்கள் அனைவரும் உறுதியாக, உங்கள் இதயத்தால் அறிவீர்கள். இந்த வழியில் இது மிகவும் சிறந்தது - ஏனெனில் தெரியாமலும், பார்க்காமலும் நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள்; பிற்காலத்தில் எல்லா மக்களும் என்னிடம் வருவார்கள்; அதனால் என்ன பயன், என்ன பலன்? அப்போது உங்களைப் பார்க்க நான் இங்கு இருக்க மாட்டேன்.**"

அவர் மேலும் கூறினார், "**நான் உங்களுக்கு எந்த அனுபவத்தையும் வழங்காத போதும், நீங்கள் அனைவரும் என்னை நேசிக்கிறீர்கள். எனவே நீங்கள் புனிதர்களை விட பெரியவர்கள்!**"

பாபாவிற்கு ஷர்பத் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன, அவர்களை மகிழ்விக்க அவர் தனது பானத்தில் ஒரு வாய் அருந்தி, மீதியைப் பிரசாதமாக வழங்கினார். புறப்படுவதற்கு முன்னர், அவர் மீண்டும் ஸொராஸ்ட்ரியன் குருநாதர் அஸார் கைவனைப் பற்றி குறிப்பிட்டார். வெள்ளி, சனி மற்றும்

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.30 மணிக்கும், ஞாயிறு மதியம் 3:00 மணிக்கும் குருபிரசாத்திற்கு வரலாம் என்று அவர்களிடம் கூறினார். ஒவ்வொரு மூன்றாவது நாளிலும் மெஹரா மற்றும் பிற பெண்மணிகளுடன் அவர்களை சந்திப்பதாக பாபா தெரிவித்தார். மும்பை குழு, ஒவ்வொரு மாலையிலும் நடைப்பயிற்சி மேற்கொள்ளவும், இரவு 9:00 மணிக்குள் தூங்கச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் பூனாவில் இருக்கும் போது, வெளியே உணவு உண்ணக்கூடாது. பாபா, ஒவ்வொருவரையும் தழுவி, காலை 11:00 மணிக்கு, பெஹராம் தாதாசாஞ்சியின் காரில் குருபிரசாத்திற்குத் திரும்பிச் சென்றார். பாபா, அர்னவாஸ், எரச் மூவரும் பின் இருக்கையிலும், பெஹராம், கோஹெர், ஃப்ரீனி ஆகியோர் முன்னாலும் அமர்ந்தனர்.

அந்தக் கோடையில் மும்பை 'பறவைகள்' பூனாவில் மிகவும் மகிழ்ச்சியாகத் தங்கியிருந்தன. உண்மையில், குருபிரசாத் பூந்தோட்டத்தில் பாடும் பிற குழுக்களைக் காட்டிலும் அவர்களும், பூனாவைச் சார்ந்தவர்களும் அதிக வாய்ப்பைப் பயன்படுத்தி, தோட்டத்தின் உரிமையாளர் அதைக் கேட்கச் செய்தனர்!

மும்பை குழு இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபாவுடன் அதிக நெருக்கமான தருணங்களை செலவிடும் நோக்கத்தில், ஏப்ரல் 24 புதன்கிழமை காலை 10:30 மணிக்கு, குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்டது. அன்று பாபா, தமது பெயரைத் தொடர்ந்து உச்சரிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்: **"ஒவ்வொரு நொடியும், ஒவ்வொரு கணமும் எனது பெயரை திரும்பத் திரும்ப மொழியுங்கள்! அது உங்கள் ஆழ்மனதில் மிகவும் இயல்பாக இருந்தால், சிரமமான தருணங்களில் உங்களுக்கு உதவவும், உங்களைப் பாதுகாக்கவும் தானாகவே வெளிப்படும்."**

அவர் மேலும் கூறினார், **"சில நாட்களுக்கு முன்பு, டாக்டர் பரூச்சா, எனது துன்பங்களில் சிலவற்றை என் அன்பர்களுக்குக் கொடுக்கும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார், நான் அவரிடம், 'ஆம், அந்த நேரம் நெருங்கிவிட்டது' என்று கூறினேன். எத்தனை பேர் என்னுடன் தோழமையை வைத்திருக்கிறார்கள் என்பதை நான் அப்போது பார்ப்பேன்."**

இதற்கிடையில், ஜோஸஃப் ஹார்ப் தனது அறுவை சிகிச்சையிலிருந்து மீண்டு, மனைவி காரியுடன் குருபிரசாத்திற்கு வந்தபோது, பாபா அவர்களிடம், **"உங்கள் சமீபத்திய உடல்நலமின்மை காரணமாக, நீங்கள் இப்போது இந்தியாவில் வாழும் எண்ணத்தைக் கைவிடவேண்டும். காரியின் ஆரோக்கியத்தையும் இங்கே பராமரிக்க முடியாது. நீங்கள் அமெரிக்காவிற்குத் திரும்பிச் சென்றாலும், கவலைப்பட வேண்டாம்; இங்கு உங்கள் இரண்டு ஆண்டுகள் வீண் போகவில்லை. 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய கர்மவினைகளை நீங்கள் சமன் செய்துள்ளீர்கள்!"**

பாபாவின் அறிவுறுத்தல்படி, ஏப்ரல் 25 அன்று ஜோஸஃப், காரி ஹார்ப் இருவரும் பூனாவிலிருந்து லெபனான் வழியாக அமெரிக்காவிற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

அதே நாளில் குருபிரசாத்தில், மீட்பு காவல் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த 250 குழந்தைகளுக்கு, பாபா தனது ஸ்பரிசத்தை வழங்கினார். அவர்கள் அனாதைகள், திருமணத்திற்கு வெளியே பிறந்த குழந்தைகள் மற்றும் சிதைந்துபோன குடும்பங்களிலிருந்து இடம்பெயர்ந்த, மூன்று முதல் பதினாறு வயது வரையிலான குழந்தைகள், பெண்கள் மற்றும் சிறுவர்கள். ஒவ்வொரு குழந்தையையும் தொட்டு ஆசீர்வதிக்கும் போது, பாபா மிகத் தீவிரமாக தோற்றமளித்தார். அவரில் ஏதோ தெய்வீகத்தை உணர்ந்து, அனைத்து குழந்தைகளும் பாபாவே தங்களின் இரட்சகர் என்பதை அறிந்தது போல, நன்றாக நடந்து கொண்டனர்! பாபாவின் முன்னிலையில் இரண்டு பாடல்களைப் பாடினர்.

பாபா மண்டலியுடன் அனாதை இல்லத்தை விட்டு வெளியேறிய பிறகு, பாபாவின் மனநிலை லேசானது, அவர் தனது வழக்கமான முகமலர்ச்சியுடன் காணப்பட்டார். அவர் 'புது வாழ்வு' (NEW LIFE) கதைகள், அவரது மஸ்த் பயணங்கள் மற்றும் ஏழைகளுடன் அவர் செய்த பணிகளை விவரிக்கத் தொடங்கினார். பாபா, பல நகைச்சுவையான சம்பவங்களையும் எடுத்துரைத்து, அங்கிருந்தவர்களை சிரிப்பில் ஆழ்த்தினார்.

வறுமையில் வாடும் உயர் மற்றும் நடுத்தர குடும்பங்களுக்குச் செய்த பண உதவியை பாபா விவரித்தார். அன்றைய தினம், கோஹெரிடம் ஒரு குறிப்பிட்ட இளைஞனுக்கு ரூ.150 வழங்க பாபா கட்டளையிடவே, பெருமைமிக்க, கண்ணியமான அந்த இளைஞன், "நான் யாசித்து வாழ்வதை விட, பட்டினி கிடப்பதே மேல்!" என்று கோஹெரிடம் பணிவுடன் கூறினான். பாபா உடனடியாகத் தலையிட்டு, கல்லூரியிலும் அவருக்கு உதவுவதாக உறுதியளித்தார். இதற்கிடையில், பாபா அந்த இளைஞனின் தாயார் மற்றும் குடும்பத்திற்கு உதவ, இந்தத் தொகையை அவருக்கு வழங்கினார். (தந்தை சிறையில் இருந்தார்.)

பாபா ஏப்ரல் 26ஆம் தேதி மும்பை குழுவை குருபிரசாத்திற்கு அழைத்தார். மிகுந்த வேதனையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டாலும், அனைவரும் சிரித்து, மகிழ்ச்சியாக இருக்கும் ஒரு லேசான சூழ்நிலையை உருவாக்க விரும்பினார்; எனவே அவர் கெய்மாயிடம் அவரது வாழ்க்கையின் வேடிக்கையான சம்பவங்களையும், பப்பா ஜெஸவாலாவைப் பற்றிய கதைகளையும் எடுத்துரைக்குமாறு கூறினார். அன்று இரவு, பாபா மும்பை குழு இரவு 9:00 மணிக்குப் படுக்கைக்குச் செல்லும் உத்தரவைத் தளர்த்தினார்; நிகழ்ச்சி இரவு 11:00 மணி வரை நீட்டிக்கப்பட்டது. குறிப்பாக ஆண்கள் நிம்மதி அடைந்தனர்.

மும்பை குழு மீண்டும் குருபிரசாத்தை அடுத்த நாள் காலை 9:30 மணிக்கு வந்தடைந்தது. ருஸ்தம் தாதாசாஞ்சி குழுவில் இல்லாததை கவனித்த பாபா, கிரிக்கெட் மட்டையால் பந்தை அடிப்பது போல சைகை செய்து, அவரைப் பற்றி கேட்டார் - குறிப்பாக அது, கிரிக்கெட் விளையாட்டை விரும்பும் ருஸ்தத்திற்கான அடையாளம். மலை வழி செல்லும் சாலையில் வாகன விபத்து காரணமாக, சாலை தடைப்பட்டது, ஆனால் சிறிது நேரத்தில் ருஸ்தம் குருபிரசாத் வந்து சேர்ந்தார். பாபா அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த பல கதைகளை எடுத்துரைத்தார்.

அந்த ஆண்டு, பாபா பூனாவில் இருந்த ஒரு நாள், குருபிரசாத்திற்கு எதிரில் அமைந்த பங்களாவிலிருந்து பெகு என்று அழைக்கப்பட்ட ஆண் ஸியாமி பூனை ஒன்று திடீரெனத் தோன்றியது. பூனை, பாபாவைத் தனியாக விட்டபாடில்லை, அவருடைய படுக்கையறைக்கு வெளியே அவருக்காகக் காத்திருந்தது. பாபா கதவைத் திறந்ததும், பூனை அவரை முந்திக்கொண்டு, பாபாவின் பாதங்களில் தலையை வைத்து வருடியது. பூனையின் உரிமையாளர் டாலி எம். டிட்டீ (DOLLY M. DIDDI), அந்தச் செல்லப்பிராணியை மிகவும் நேசித்தார், மேலும் அது காணாமல் போனதை நினைத்து கவலைப்பட்டார். சில நாட்களுக்குப் பின்னர், அவர் பெகுவைத் தேடி குருபிரசாத்திற்கு வந்தபோது, பூனை அவருடன் திரும்பிச் சென்றது. ஆனால் அவர் பெகுவை வீட்டிற்கு அழைத்துச் செல்லும் வேளையில், பூனை அவர் கைகளிலிருந்து குதித்து, மீண்டும் குருபிரசாத்திற்கு ஓடி, பாபாவின் அறைக்குள் சென்றது. திருமதி டிட்டீ, பெகுவைத் தன்னுடன் அழைத்துச் செல்ல தன்னால் இயன்ற அனைத்தையும் செய்தாலும், குருபிரசாத் தோட்டத்தின் தெய்வீக மதுபானத்தின் நறுமணத்தால் ஆட்கொள்ளப்பட்ட பூனை, அங்கிருந்து வெளியேறுவதாகத் தோன்றவில்லை. இதன் விளைவு என்னவெனில், பெகு குருபிரசாத்தில் தங்கத் தொடங்கியது, மேலும் அதன் உரிமையாளர் திருமதி. டிட்டீ, பாபா-அன்பரானார். “பெகு எவ்வளவு அதிர்ஷ்டசாலி” என்று திருமதி டிட்டீ கூறினார், “என் செல்லப்பிராணியின் மூலம் பாபாவைக் கண்டுகொண்டதில் நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி!”

தரிசனத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமை, 1963 ஏப்ரல் 28 அன்று, அனைவரும் குருபிரசாத்தின் சிறிய மண்டபத்தில் ஒன்றுதிரண்டனர். ஆதி வழக்கம் போல வந்து, ஏற்கனவே அறிவுறுத்தியபடி, பாபாவின் தூக்கு நாற்காலியை மெஹராஸாத்திலிருந்து கொண்டு வந்தார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குருபிரசாத்திற்கு அவரும், அஹமதுநகர் மையத்தின் அன்பர்களும் வரவேண்டும் என்று பாபா ஆதியிடம் கூறினார். (ஆதி, டாக்கே இருவருக்கும் குருபிரசாத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது.) ஆசிரியராக பணிபுரிந்த பால் நாத்து, குருதுவாடியிலிருந்து அன்றைய தினம் வந்து, குருபிரசாத்தில் ஐந்து வார கோடை விடுமுறை நாட்களில் தங்க இருந்தார்.

இரண்டு குழந்தைகளுடன் பாபாவைப் பார்க்க வந்த ஒரு பெண்மணியிடம் அவர், **“இருவரும் உங்களை தொந்தரவு செய்கிறார்களா?”** என்று கேட்டதற்கு அவர் ‘ஆமாம்’ என்று பதிலளித்தார். பாபா கூறினார், **“இந்த இரண்டு சிறிய குழந்தைகளால் மட்டுமே உங்கள் வாழ்க்கையை நரகமாக்க முடியுமானால், கோடிக்கணக்கான குழந்தைகளால் எனக்கு விளையும் அவலநிலையை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா?”**

பெண்மணிகளின் குழு ஒன்று வந்து, பாபாவைத் தழுவும் விருப்பத்தை வெளிப்படுத்திய போது, **”என் அன்பைப் பெற நீங்கள் பெரிய கொள்கலன்களுடன் இங்கு வந்துள்ளீர்கள், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, உங்கள் கொள்கலன்கள் அவற்றின் மூடிகளால் இறுக்கமாக மூடப்பட்டுள்ளன. எனவே, நீங்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், உங்களால் என் அன்பை அள்ளிச் செல்ல முடியவில்லை. இதன் விளைவாக, நீங்கள் இங்கு வரும் ஒவ்வொரு முறையும் என்னைத் தழுவ விரும்புகிறீர்கள்!”** என்று கூறினார்.

டாக்டர் பரூச்சா தனது சொந்த ஊரில் (நவ்ஸாரி) வாழும் ஒரு மனிதனைப் பற்றி பாபாவிடம் கூறினார்; அவர் தீய சக்திகளால் ஆட்கொள்ளப்பட்ட மக்களிடமிருந்து அவற்றை விரட்டும் ஆற்றல் படைத்தவர் என்று கூறிவந்தார். டாக்டர் பரூச்சா, “அத்தகைய சக்திகள் எவ்வாறு உருவாகின்றன, அவற்றை அடையப் பெற்றவர்கள் உண்மையில் மேல்நிலை ஆத்மாக்களா?” என்று பாபாவிடம் கேட்டார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார்:

**நீங்கள் தாந்த்ரீக அறிவைப் பெற்றால், அத்தகைய சக்திகளை அடையப் பெறுவது சாத்தியம்** (இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளை அடைவதற்கான மாய சூத்திரங்கள்). **இந்த சக்திகள் நல்ல அல்லது தீய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம் - மனிதர்கள் மற்றும் பேய்களிடமிருந்து தீய ஆவிகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும்போது நல்லது எனவும், சுயநல நோக்கங்களுக்காகவும், சுய செல்வாக்கைப் பெருக்குவதற்காகவும் பயன்படுத்தப்படும்போது, தீயது என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் தாந்த்ரீக சக்திகளுக்கும், ஆன்மீகத் தளங்களுக்கும், தெய்வீக சக்திகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இத்தகைய சக்திகளைக் கொண்டவர்கள் செய்யும் அற்புதங்கள் மிகவும் குழந்தைத்தனமானவை. விவேகானந்தர் கூட அத்தகைய சக்திகளுக்கான ஏக்கத்தில் மிகவும் மோசமான, சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டார். அவரது குருநாதர் ராமகிருஷ்ணர், அவரை சரியான நேரத்தில் திசை திருப்பி வழிநடத்தினார்.**

பாபா மேலும் விளக்கினார்:

**அத்தகைய சக்திகளைப் பெற விரும்பும் ஒருவர் தன்னைச் சுற்றி ஒரு சிறிய வட்டத்தை** (சில்லா-நாஷினி, CHILLA NASHINI) **உருவாக்கி, அதன்**

**எல்லைக்குள் 40 பகல் மற்றும் இரவுகள் இருந்து, ஒரு குறிப்பிட்ட மந்திரத்தைத் திரும்பத் திரும்ப மொழிவது பழக்கம். 40 நாட்கள் வட்டத்தின் வெளியே வராமல், அங்கேயே அமர்ந்து, மந்திரத்தை மொழிந்து வெற்றி கண்டால், அவர் சில சக்திகளை அடையப் பெறுகிறார். ஆனால் அந்த நபர் அடிக்கடி விசித்திரமான, திகிலூட்டும் காட்சிகளைக் காணும் வேளையில், பீதியடைந்து வட்டத்தின் எல்லையை விட்டு வெளியேற வேண்டிய நிர்பந்தத்தில் இருப்பதால், அத்தகைய சோதனையை கடந்து, தவம் புரிவது அவ்வளவு எளிதானது அல்ல. அவர் வட்டத்தை விட்டு வெளியேறினால், எந்தத் தாந்த்ரீக சக்திகளையும் பெறமுடியாது; அனைத்து செயல்முறையையும் மீண்டும் தொடங்க வேண்டும்.**

அற்புதங்களைப் பற்றி கூறுகையில், 'பாபா-ஃபரீத்-ஷக்கர்' கஞ்சின் (BABA FARID SHAKKAR GANJ) கதையை எடுத்துரைத்தார்:

**பாபா ஃபரீத், சக்திகளைப் பெறுவதற்காக நீண்ட நெடிய தவம் புரிந்தார். தொடர்ந்து பல நாட்களாக உணவு உண்ணாததால் அவருக்கு அடிவயிற்றில் கடுமையான வலி ஏற்பட்டது. கடைசி முயற்சியாக, கிணற்றுக்குள் தலைகீழாகத் தொங்கினார். பல நாட்களுக்குப் பின்னர் அவர் அதிசயமாக கிணற்றிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்ட வேளையில், அவர் சில மிகப் பெரிய சக்திகளை அடையப் பெற்றிருப்பதைக் கண்டார். அவர் உடனடியாக அவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினார். அருகில் இருந்த மரத்தில் சில பறவைகள் அமர்ந்திருந்தன. அவற்றை நோக்கி 'அந்தப் பறவைகள் மடிந்து வீழட்டும்,' எனக் கூறியதும், அனைத்து பறவைகளும் உயிரை இழந்து தரையில் விழுந்தன! பின்னர் அவர் கூறினார்: 'பறவைகள் உயிர்பெற்று பறந்து செல்லட்டும்,' உடனடியாக முழுப் பறவை கூட்டமும் உயிருடன் பறந்து சென்றது!**

**அவர் கிராமம் கிராமமாகச் சென்று, தனது சக்திகளை வெளிப்படுத்தி, அகங்காரத்தை ஊட்டி வளர்த்தார். ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், வயதான பெண்மணி ஒருவர் கிணற்றிலிருந்து நீர் இறைத்து, கிணற்றுக்கு வெளியே தெளித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். அந்தப் பெண்மணி, இதைத் தொடர்ந்து, நீண்ட நேரம், பலமுறை செய்துகொண்டிருந்தார். ஃபரீத், பைத்தியக்காரத்தனமாகத் தோன்றிய அந்தச் செயலைக் கண்டு, வெறுப்படைந்து, அவரை எதிர்கொண்டு, அவர் ஏன் இப்படி ஒரு முட்டாள்தனமான செயலில் ஈடுபட்டு, நேரத்தையும் சக்தியையும் வீணடிக்கிறார் என்று கேட்டதற்கு அந்தப் பெண்மணி, "மகனே, இங்கே நான் தண்ணீரைத் தெளித்து, இங்கிருந்து பத்து மைல் தொலைவில் அமைந்த ஒரு கிராமத்தில் எரியும் நெருப்பை அணைக்க முயற்சிக்கிறேன்! உயிரைத் துறந்த பறவைகளை மீண்டும் உயிர்ப்பித்து பறக்க விடுவது போல் இந்த செயல் அவ்வளவு எளிதானது அல்ல!" என்றார்.**

**அந்தப் பெண்மணி சாதாரணமானவர் அல்ல என்பதை உடனடியாக உணர்ந்த ஃபரீத், தனது கடந்தகாலச் செயல்களுக்கு மன்னிப்புக் கோரினார்.**

**சிறிது தூரத்தில் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்த ஒரு பரிபூரண குருநாதரிடம் அந்தப் பெண்மணி அவரை வழிநடத்தவே, ஃபரீத் அவரை அணுகியபோது, அவர் கீழே அமர்ந்திருந்த அந்த மரம் முற்றிலும் காய்ந்திருப்பதைக் கண்டார், மேலும் வெப்பமான சூரியன் அவரை கடுமையாக தாக்கியது. உடனே, அவர் தனது சக்தியைப் பயன்படுத்தி, மரத்தின் கிளைகளை பச்சை இலைகளால் மாறச் செய்தார்.**

**குருநாதர் மரத்தைப் பார்த்த அந்த கணத்தில், கிளைகள் மீண்டும் கருகிவிட்டன. ஃபரீத் மறுபடியும் மரத்தை பசுமையாக்கினார், ஆனால் குருநாதரின் மற்றுமொரு பார்வை அதை மீண்டும் வெறுமையாக்கியது. இப்படி ஐந்து முறை தொடர்ந்து நடந்தது. இறுதியில் ஃபரீத், குருநாதரின் சக்திகளுடன் ஒப்பிடுகையில், தனது சக்திகளுக்கு எந்த மதிப்பும் இல்லை என்பதை உணர்ந்து, அவரிடம் சரணடைந்தார். ஃபரீத் ஓர் உண்மையான ஃபக்கீராக (துறவி) மாறவும், அத்தகைய சக்திகளைக் கொண்ட குழந்தையைப் போல விளையாடவும் வேண்டாம் என்றும் குருநாதர் அறிவுறுத்தினார். 'அற்புதங்கள் ஒரு துறவிக்கான அளவுகோல் அல்ல' என்று அவர் கூறினார்.**

**பாபா-ஃபரீத்-ஷக்கர் கஞ்ச் இறுதியில் ஒரு பரிபூரண குருநாதர் ஆனார்.**

தாந்த்ரீக அறிவின் மூலம் சில சக்திகளை அடையப்பெற்ற ஒரு முஹமதியரைப் பற்றி மெஹர் பாபா 1926இல் மண்டலியிடம் கூறிய ஒரு கதையை மீண்டும் எடுத்துரைத்தார்:

**இந்த மனிதனுக்கு, பார்வையற்றவர்களுக்குப் பார்வையை வழங்கும் ஆற்றலும் இருந்தது, அதனால் மிகப் பெரிய அளவில் அவரைப் பின்பற்றுபவர்களும் இருந்தனர். பல மாடிகளைக் கொண்ட ஒரு பெரிய கட்டிடத்தில் அவர் தங்கியிருந்தார். ஒரு நாள் தனது வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்த வேளையில், கிணற்றில் மாடு ஒன்று விழுந்ததைக் கண்டு, அவரது சக்தியை உடனே பயன்படுத்தி, கிணற்றை நோக்கி கையை நீட்டி, பசுவை வெளியே இழுத்தார்.**

**அவரது வீட்டிற்கு மிகவும் அருகாமையில் ஒரு நதி இருந்தது, மறுகரையில் ஒரு பரிபூரண குருநாதர் வாழ்ந்து வந்தார். குருநாதர் எந்த அற்புதங்களையும் செய்யாததால், அவரைப் பின்பற்றுபவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். இந்த மாடு சம்பவத்தை அறிந்த குருநாதர், அந்த முட்டாள்தனத்தை நிறுத்த, முஹமதியரிடம் கூறுமாறு தனது சீடர்களில் ஒருவரை அனுப்பிவைத்தார். முஹமதியர் ஆத்திரமடைந்து, குருநாதரைப் பழிவாங்குவதாக சபதம் செய்து, அதற்கான தனது திட்டங்களைத் தீட்டினார்.**

**ஓர் இரவு அவர் மிகவும் அழகான விலைமாதுவை அழைத்து, அதற்குரிய பணத்தைத் தருவதாகக் கூறி, மது மற்றும் பன்றி இறைச்சியுடன் குருநாதரிடம் செல்லுமாறு அறிவுறுத்தினார். பன்றி இறைச்சியை உண்டு, மதுவை அருந்தும் விதத்தில் குருநாதரை வசீகரிக்குமாறு அந்தப்**

**பெண்ணுக்கு அறிவுறுத்தப்பட்டது. குருநாதர் அவளைப் பார்த்ததில் மிகவும் மகிழ்ச்சியாகத் தோன்றினார், மேலும் அவளது சகவாசம் மற்றும் அவருக்காக கொண்டு வந்த உணவு, மது அனைத்தையும் மிகவும் ரசித்து உண்டார்.**

**மறுநாள் காலையில், விலைமாது தனது முயற்சியில் வெற்றியடைந்த செய்தியை மிகுந்த மகிழ்ச்சியுடன் முஹமதியரிடம் தெரிவித்தார். முஸ்லீம் மதக் கோட்பாடுகளுக்கு மாறாக,** (பன்றி இறைச்சி மற்றும் மது அருந்திய) **குருநாதரையும் அவரது ஆன்மீகத்தையும் கண்டிப்பதற்கான ஆதாரம் தன்னிடம் இருந்ததால், முஹமதியரும் இப்போது மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.**

**முஹமதியர், அவரைப் பின்பற்றுபவர்களின் குழு ஒன்றைத் திரட்டி, அவரைக் கண்டிக்க, குருநாதரிடம் செல்ல முடிவு செய்தார். குதிரையில் சவாரி செய்தவர், விரைவில் ஒரு நதியைக் கடக்கத் வேண்டியிருந்தது, அவரது பக்தர்களும் அவரைப் பின்தொடர்ந்தனர். குதிரை நதியின் ஒரு பாதியைக் கடந்ததும், அங்கேயே நின்று சிறுநீர் கழிக்க ஆரம்பித்தது. இதை கவனித்த குருநாதர், குதிரை, நதியை மாசுபடுத்த அனுமதித்த முஹமதியரை கடுமையான குரலில் கண்டித்தார்.**

**முஹமதியர் இதைக் கேலி செய்து, குருநாதர் முழுப் பைத்தியம் என்று நினைத்தார், ஏனெனில், சிறிய அளவு சிறுநீர் எப்படி முழு நதியையும் மாசுபடுத்த முடியும் என்பதை அவரால் கற்பனை செய்ய முடியவில்லை. அவர் குருநாதரை நோக்கித் திரும்பக் கத்தினார்: "இந்த சிறுநீர் எப்படி ஒரு நதியை மாசுபடுத்தும்?"**

**குருநாதர் பதிலளித்தார்: "அப்படியானால், சிறிதளவு மதுவும் பன்றி இறைச்சியும் என் இறைப்பெருங்கடலை எப்படி மாசுபடுத்தும்?" முஹமதியர் இந்த வார்த்தைகளின் ஆழத்தைப் புரிந்துகொண்டு, குருநாதரிடம் சென்று சரணடைந்தார்.**

பாபா இவ்வாறு கூறி முடித்தார், "**சக்திகளுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. அன்பு ஒன்றுதான் ஆன்மீகப் பாதையில் அளவிடத்தக்கது. இதற்கு தன்னையே அழித்துக்கொள்ளும் துணிச்சல் தேவை. அற்புதங்கள் அனைத்தும் குழந்தைத்தனமான விஷயங்கள்.**"

இந்த நேரத்தில், ஒரு வயதான பெண்மணி, பாபாவைத் தழுவ வந்தார். அவர் மிகவும் நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்தார். பாபா அவருக்கு ஆறுதல் கூறி, '**மேலும் மேலும் அவரை நினைவுகூருமாறும், அவர் இறுதி மூச்சை விடும் வேளையில் பாபாவை மறந்துவிடக்கூடாது**' என்றும் அறிவுறுத்தினார்.

தாந்த்ரீக அறிவின் மூலம், மாயாஜால சக்திகளை அடைவது குறித்த அதே தலைப்பில் தொடர்ந்து பாபா கூறினார்:

**எனது தந்தை, ஷெரியார்ஜி, ஓர் உண்மையான துறவி. கடவுளைத் தேடி, பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, ஈரான் முழுவதும் அலைந்து திரிந்து,**

**பின்னர் அவர் இந்தியாவிற்கு குடிபெயர்ந்து, தனது தேடலைத் தொடர்ந்தார். ஒரு நாள் கட்ச் பாலைவனத்தில் தொலைந்து போன அவர், அதீத தாகத்தால் அவதிப்பட்டார். அவரது கால்கள் கொப்புளங்களால் நிறைந்திருந்தன, மேலும் அவரது உள்ளங்கால் ரப்பர் சக்கரங்களைப் போல கடினமாகிவிட்டது. திடீரென ஒரு மனிதன், கோப்பை ஒன்றில் தண்ணீருடன் அவர் முன்னால் தோன்றி, அதை அவருக்கு வழங்கினார். உயிரைக் காத்த தண்ணீரைக் குடித்துவிட்டு, தேடுதலைத் தொடர்ந்தார்.**

**(விரக்தியின் ஒரு கட்டத்தில்), கடைசி முயற்சியாக, அவர் முன்பு குறிப்பிட்டபடி (ஒரு வட்டம் வரைந்து அதனுள்) 40 நாள் தவமிருந்தார். அவர் 30 நாட்கள் மட்டுமே அங்கு அமர முடிந்த நிலையில், தனது தோல்வியை நினைத்து மிகவும் மனச்சோர்வடைந்தார். இந்த நேரத்தில்தான் அவர், 'கடவுள் ஒரு குழந்தையாக உங்களுக்குப் பிறப்பார்' என்ற குரல் ஒன்றைக் கேட்க முடிந்தது. இதையே நினைத்துக் கொண்டு, என்னை கடவுள் என்று நம்பி, கடைசி வரை எனது புகைப்படத்தை வணங்கி வந்தார்.**

அவரது பிரியமான கவிஞர் ஹ:பீஸை நினைவுகூரவே, பேச்சின் தலைப்பு அவரை நோக்கி நகர்ந்தது:

**கவிதையில் ஹ:பீஸுக்கு நிகரானவர் எவரும் இல்லை. அவர் ஒரு பரிபூரண குருநாதர். அவர் தடித்த, மிகவும் இனிமையற்ற தோற்றத்தில் ஏழை பெற்றோருக்குக் குழந்தையாகப் பிறந்தார். இவரது தந்தையைப் போல, ஹ:பீஸும் ஒரு நிலக்கரி வியாபாரி; மிகவும் கறுப்பு நிறத்தில் இருந்ததால், அவர் எப்படி இருந்திருப்பார் என்பதை கற்பனை செய்து பாருங்கள். குழந்தைப் பருவத்திலிருந்தே, பரிபூரண குருநாதர்களின் கதைகளைக் கேட்கும் ஆர்வம் அவருக்கு இருந்தது. அவர் குரானை முழுமையாகக் கற்றறிந்திருந்தார், எனவே அவருக்கு ஹ:பீஸ் என்ற பட்டம் வழங்கப்பட்டது.**

**ஹ:பீஸ் அவரது 21ஆவது வயதில், ஒரு பெரிய மாளிகையைக் கடந்து செல்லும்போது, மொட்டை மாடியில் ஓர் அழகான பெண்ணைக் கண்ட அந்த நொடியில், அவளை விரும்பி, திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார். வீதியில் நடந்து சென்ற இனிய தோற்றமற்ற ஹ:பீஸை அந்தப் பெண் கவனிக்கவில்லை. ஹ:பீஸ் உதவியற்றவராக உணர்ந்ததால், 40 நாள் தவத்தால் அவளை அடைய நினைத்தார். அவர் அதை** (சில்லா-நாஷினி) **முயற்சித்து வெற்றியும் கண்டார்; ஆனால், நாற்பதாவது நாளில், பிரதான தேவதூதன் கேப்ரியல்** (ARCHANGEL GABRIEL) **அவரிடம் வந்து, அவர் விரும்பும் எதையும் கேட்குமாறு கூறினார். கேப்ரியலின் அழகு அவரை மிகவும் பிரமிக்க வைத்ததால், அந்தப் பெண்ணின் அழகை ஹ:பீஸ் மறந்துவிட்டார். கேப்ரியலே இவ்வளவு அழகாக இருக்க முடியும் என்றால், கடவுளின் அழகு எவ்வளவு மெச்சத்தக்கதாக இருக்கும் என்று அவர் நினைத்தார்! எனவே, அவர் உடனே "எனக்குக் கடவுள் வேண்டும்!" என்று பதிலளித்தார்,**

**கேப்ரியல் அவரை, பரிபூரண குருநாதரான அத்தரிடம் வழிநடத்தினார்; அவர் 40 நீண்ட நெடிய வருடங்கள் அத்தருக்கு சேவை செய்தார். அவர் அத்தரின் காலடியில் தனது தலையை உடைத்தார் என்று கூறப்பட்டாலும், குருநாதர் இன்னும் ஹாஃபீஸ் மீது இரக்கம் காட்டவில்லை. பூமியில் 40 வருடங்கள் வாழ்ந்த நரக வாழ்க்கைக்குப் பின்னர் ஒரு நாள், அத்தர் திடீரென ஹாஃபீஸுக்கு இறை-உணர்வை வழங்க நேர்ந்தது. இறை அனுபவத்தை அடையப்பெற்ற பிறகு, ஹாஃபீஸ் கவிதைகளை மொழியத் தொடங்கினார், அதனால்தான் அவரது கவிதை உண்மைப்பொருளின் பிரதிபலிப்பு, மிகவும் அழகானது, அனைத்து அறிவையும் வழங்குவது!**

பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

**அதிகார ஆற்றல்களுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. ஒரு பரிபூரண குருநாதரின் காலடியில் தன் உயிரை அர்ப்பணம் செய்யாதவர், கடவுளை அறிய முடியாது என்கிறார் ஹாஃபீஸ். கடவுளுடன் ஐக்கியமாவது என்பது மிகவும் கடினம். ஒரு குருநாதரின் அருள், அதை மிகவும் எளிதாக்குகிறது, ஆனால், அவருடைய அருளை அடையப் பெறுவது என்பது ஒருவரின் சுய முயற்சியால் கடவுளை உணர முயற்சிக்கும் அளவுக்குக் கடினமானது. ஒரு பரிபூரண குருநாதரின் காலடிகளில் ஒருவர் அடிமையாகிவிட்டால் அது எளிதாகிவிடும். ஒருவர் தனது வாழ்க்கையை அவர் காலடியில் அர்ப்பணித்த அடுத்த கணமே, அமைதியின்மையின் காலங்கள் எளிதாகி விடுகின்றன. தலையைத் துண்டித்து குருநாதரின் காலடியில் சமர்ப்பிப்பதை இது அர்த்தப்படுத்தவில்லை. இதன் அர்த்தம் முழுமையான கீழ்ப்படிதல்.**

பாபா, தேஷ்முக்கிடம், '**நாக்பூருக்குத் திரும்பிச் சென்று, அதன் தெருக்களில் முற்றிலும் நிர்வாணமாக நடந்து செல்லுமாறு கட்டளையிட்டால், நீங்கள் அதற்குக் கீழ்ப்படிவீர்களா?**' என்று கேட்டார். 'செய்வேன்' என்று அவர் பதிலளித்தார். பாபா நகைச்சுவையாக, "**டாக்டர். சி. டி. தேஷ்முக் மிகவும் புத்திசாலித்தனமான நபர். நான் அவரிடம் ஒருபோதும் அப்படிச் செய்யுமாறு கூறமாட்டேன் என்று அவருக்குத் தெரியும், எனவே அவர் அப்படி பதிலளித்தார்.**"

மதுசூதனன் சில கஸல்களைப் பாடினார். பாபா, கஸல் ஒன்றிலிருந்து இடையிடையே ஒரு சில வரிகளை விளக்கினார்:

**அன்பன் தன் அன்பிற்குரியவரிடம் கூறுகிறான்: "நான் உம்மை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கிறேன், அதனால்தான் உமது துன்பத்தில் எனக்கும் ஒரு பங்கு உண்டு. நான் தொடர்ந்து உமது கால்தடங்களைத் தேடிக்கொண்டிருக்கிறேன், அவற்றைக் கண்டுகொண்டதும் நான் தலை வணங்குகிறேன் என்று உறுதியளிக்கிறேன். தலை வணங்க எனக்கு, காபா** (முஸ்லீம்களின் புனித ஸ்தலம்) **இல்லை. உம்மைப் பற்றிய ஒவ்வொரு சிந்தனையும் எனக்குக் காபாதான். உம்மை**

**எப்படி வணங்குவது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் உமது கட்டளையின்படி தலைவணங்க வேண்டும் என்பதுதான்." இதன் அர்த்தம் 100 சதவீதம் கீழ்ப்படிதல்.**

**அன்பன் கூறுகிறான்: "கடவுளைக் காணும் உண்மையான பார்வை மின்னலில் கூடு கட்டுவது போன்றது." கூடு என்றால் பாதுகாப்பு இடம், மின்னல் என்பது அழிவைக் குறிப்பது. அன்பன் மின்னலில் தனது கூட்டைக் கட்டத் தயாராக இருக்க வேண்டும்; வேறு வார்த்தைகளில் கூறுவதானால், முழுமையான அழிவுக்குத் தயாராக இருக்க வேண்டும். உடல் இன்பங்களை அனுபவித்து, அன்பிற்குரியவரைத் தேடாமல், நிலையான துன்பத்தில் அவரைத் தேட வேண்டும்!**

பன்வேல் (PANVEL) அருகே அமைந்த சிர்லே கிராமத்தில் (CHIRLE) வசிப்பவர்கள், பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். பாபா அவர்களைப் பற்றி குறிப்பிட்டார்: "**கிராமத்தில் மொத்தம் 30 வீடுகள் மட்டுமே உள்ளன, அவர்கள் என்னிடம் வர முடிவு செய்தனர், அனைத்து வீடுகளும் பூட்டப்பட்டிருந்தன, கிராமம் முழுவதும் வெறிச்சோடிக் கிடந்தது. அவர்கள் திரும்பிச் செல்லும் வரை, தங்கள் கால்நடைகளுக்குப் போதுமான தீவனத்தை விட்டுச் சென்றனர். நீண்ட அடர்ந்த தாடியுடன் கூடிய ராம்ராவ் பாட்டீல் என்பவர், பாபாவின் அன்பை கொழுந்துவிட்டு எரியச் செய்தார். கிறிஸ்துமஸ் தந்தையை ஒத்த தோற்றத்தில் இருந்த அவர், கிராம மக்கள் அனைவருக்கும் பாபா-அன்பைப் பரிசாக வழங்கினார்.**"

எரச் குறிப்பிட்டார், "பல புதிய மையங்கள் (இந்தியாவில்) உருவாகி வருகின்றன, அவற்றைக் கண்காணிப்பது சாத்தியமில்லை."

அதற்கு பதிலளித்த பாபா கூறினார், "**நான் எனது மௌனத்தைக் கலைத்த அடுத்த கணமே, அனைவரும் என்னை அறிந்து கொள்வார்கள். ஆனால், இப்போது என்னை அறிந்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள்!**"

ஒருமுறை நிகழ்ச்சியின் போது பாபா கூறினார்: "**'நான்' எனும் நீங்கள் இருக்கும் இடத்தில் கடவுள் இல்லை. கடவுள் இருக்கும் இடத்தில் 'நான்' எனும் நீங்கள் இல்லை. நல்லவராக மாறுவது** (BECOMING GOOD) **மிகவும் எளிதானது, ஆனால் கடவுளாக மாறுவது** (BECOMING GOD) **மிகவும் கடினம்.**"

"நல்லவனாக (GOOD) மாறிய பிறகு, கடவுளாக மாறுவது மிகவும் எளிது - ஆங்கில எழுத்து 'ஓ' (O) ஒன்றை மட்டும் அகற்ற வேண்டும்!" என்று ஆதி கேலி செய்தார்.

பாபா பதிலளித்தார், "**'ஓ'** (O) **என்ற ஒன்றை மட்டும் அகற்ற முயற்சிப்பதில் நீங்கள் உயிரைத் துறக்கலாம், ஆனால் நீங்கள் வெற்றியடைய மாட்டீர்கள், அது அவ்வளவு எளிதானது அல்ல.**"

குஸூம் மொக்கம் ஸிங் (KUSUM MOHKAM SINGH) கஸல்களைப் பாடத் தொடங்கிய போது, பாபா மேலும் பல விளக்கங்களை அளித்தார்: "**அன்பன்,**

**அன்பிற்குரியவரிடம் புகார் கூறுகிறான்: 'நான் என்னை முழுவதுமாக உங்களுக்குக் கொடுத்துவிட்டேன், ஆனாலும் நீங்கள் என்னைக் குறித்து கவலைப்படாத அளவுக்குக் கொடூரமாக இருக்கிறீர்கள்!'**

**"அதன் பின்னர்: 'அன்பே, உங்களின் எளிமையே உங்கள் அழகு. உங்கள் அழகே உங்கள் எளிமை.'**

**"அன்பன் கூறுகிறான்: 'ஒருமுறை நீங்கள் என்னைத் தழுவியதும், என்னை விட்டுப் பிரிந்துவிடாதீர், ஏனெனில், இப்போதைக்கு இது எனக்கு வாழ்வா அல்லது சாவா என்ற கேள்வி மட்டுமே... உங்களோடு ஐக்கியமாக இருப்பது இயலாத காரியம், அதனால் நான் உமது அன்பின் வேதனையை மட்டுமே அனுபவிக்கிறேன்.'"**

பாபா அதைத் தொடர்ந்து, மோனா ஸாக்கரேயிடம் குருநாதருக்கான பிரார்த்தனையை (MASTERS' PRAYER) மொழியுமாறு கூறியதும், அவர் பதற்றமடைந்தார்; பாபா அவரிடம் கூறினார், **"நான் மட்டுமே இங்கே இருக்கிறேன், அதனால் ஏன் கவலைப்பட வேண்டும்? நான் மட்டுமே கேட்கிறேன்."**

பாபா, அதற்குப் பிறகு, சிலரை அங்கேயே அமருமாறு கூறி, பிறரிடம் மதிய உணவுக்குச் சென்று மதியம் 2:30 மணிக்குத் திரும்புமாறு சைகையால் தெரிவித்தார். அங்கு அமர்ந்திருந்தவர்கள் பாபாவுடன் பலமுறை 'லா ரிஸ்க்' (LA RISQUE) சீட்டு விளையாடி மகிழ்ந்தனர். இதில் 36 பேர் விளையாடினர். தோல்வியடைந்த நபர்கள் (பொதுவாக பாபாவின் எதிர் குழுவைச் சார்ந்தவர்கள்) தங்கள் மூக்குகளைத் தரையில் உரச வேண்டும். சிறிது நேரத்தில் அவர்களும் மதிய உணவிற்குச் சென்றனர்.

மும்பை குழு மதியம் 2:00 மணிக்கும் சற்று முன்னதாக வந்தது. கோஹெரின் கையைப் பற்றிக் கொண்டு பாபா வெளியே வந்தபோது, மெஹராவின் அறைக்குள் செல்லும் கதவருகில் இருந்த முன் அறையில், ஃபிரீனி தாதாசாஞ்சி நின்று கொண்டிருந்தார். பாபா, அவரை நோக்கி நடந்தபோது, அவர் பாபாவின் முகத்தில் விவரிக்க முடியாத துன்பத்தைக் காண நேர்ந்தது. "எனது கால் வலிக்கிறது" என்று சைகையால் தெரிவித்து, **"என்னால் அமர முடியாது, நான் சிறிது நேரம் உள்ளே செல்கிறேன்"** என்றார்.

ஐந்து நிமிடத்தில் வெளியே வந்து அவர்கள் மத்தியில் அமர்ந்தார். முன் அறையில் நான்கு அல்லது ஐந்து பேர் மட்டுமே இருந்தனர்.

அன்று மதியம் பாபா, '**அவருடைய உண்மையான அடையாளத்தை மறைத்தவண்ணம், அவர் ஏழைகளுக்காக எவ்வளவு பணிபுரிந்தார் என்பது, ஒரு சில மண்டலியைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது**' என்று குறிப்பிட்டார். ஏழைகளுடன் பாபாவின் பணியைப் பற்றி எரச் பல கதைகளை எடுத்துரைத்தார், அதைக் கேட்டு பலரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

முடிவில், பாபா கூறினார், “**முன்பு, நான் மக்களைத் தேடிச் செல்வது வழக்கம்; இப்போது மக்கள் என்னைத் தேடி வருகின்றனர்**.”

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “**முன்பு நான் முற்றிலும் சுதந்திரமாக இருந்தேன், என்னில் எழுந்த அந்தத் ‘திடீர் ஆர்வம்’** (தற்போக்கு எண்ணம் - WHIM) **இந்தப் படைப்புடன் என்னை முழுவதுமாகப் பிணைத்தது**! **உண்மையில், கடந்த காலம், எதிர்காலம் என்று எதுவும் இல்லை. இந்தத் தருணம் மட்டுமே உள்ளது. கடந்த காலமும், எதிர்காலமும் இந்த நிகழ்காலத்தில் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து உள்ளன**; **அதுவே நித்தியம்**.

**“என்னை எனது சுய ரூபத்தில் காண்பது மிகவும் கடினம். சிறுவயது முதல் இயேசுவுடன் வாழ்ந்த யூதாஸால் கூட அவரை கிறிஸ்து என்று அறிய முடியவில்லை. ‘அந்தக் காலகட்டத்தின்** (யுகம்) **மாயத் தன்மையால், அவர் நித்தியமானவர், எல்லையற்றவர் என்ற உண்மை மக்களுக்குத் தெரியாது’ என்று கிருஷ்ணர் கூறினார். நீங்கள் எதைப் பார்த்தாலும் அது கடவுள் அல்ல. ‘நான்’ எனும் அகங்காரம் இல்லாதபோது, நீங்கள் கடவுளைக் காண்கிறீர்கள்**!”

அன்று மதியம் 3:00 மணிக்கு, பிரபல பாடகர் வஸந்த்ராவ் தேஷ்பாண்டே (VASANTRAO DESHPANDE) இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினார். அவருடைய ஒரு பாடலின் போது, பாபா திடீரென தனதருகில் அமர்ந்திருந்த ஒரு பெண்மணியிடம் திரும்பி, “**நீங்கள் இங்கே இருக்கும்போது, என்னைப் பற்றி மட்டுமே நினைக்க வேண்டும். பிறரைப் பற்றி நினைப்பவர் இங்கு இருப்பதாக எடுத்துக்கொள்ள முடியாது**” என்று குறிப்பிட்டார்.

பிரதான மண்டபத்தில் தேஷ்பாண்டேயின் இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததும், குழுவில் பெரும்பாலானோர் வெளியேறினர். பாபா, தமது அறைக்குச் சென்று ஓய்வெடுக்காமல், பிரதான மண்டபத்தை ஒட்டிய சிறிய மண்டலி மண்டபத்தில் சென்று அமர்ந்தார். சில நெருங்கிய அன்பர்கள் அவரைச் சுற்றி அமர்ந்திருந்தனர். பாபாவின் முகபாவம் கடுமையாக இருந்தது; அவர் கலக்கமடைந்த நிலையில் காணப்பட்டார். சிறிது நேர உரையாடலுக்குப் பிறகு, மதுசூதன் மற்றும் பூனா பஜனைக் குழுவிடம் மேலும் சில கஸல்களைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார்.

அவர்களின் இறுதி கஸல், மறைந்த உருது கவிஞரான ஸீமாப் (SEEMAB) எழுதிய, ‘அப் க்யா பத்தாவும்..’ (‘WHAT CAN I TELL YOU…’ நான் இப்போது உங்களுக்கு என்ன சொல்வேன்…) என்று தொடங்கும் புகழ்பெற்ற ஒன்றாகும். காலம் இவ்வாறு குறிப்பிட்டது, “கஸல் பாடப்பட்டபோது, கவிஞரின் ஆழ் இதயத்திலிருந்து வெளிப்பட்ட ஒவ்வொரு வார்த்தையிலும் அன்பானவர் கவனம் செலுத்துவது போலத் தோன்றியது.”

பாபா சில வரிகளுக்குப் பின்வருமாறு விளக்கம் அளித்தார்: “**ஒரு பரிபூரண குருநாதரை சந்தித்தபோது, வேண்டிய அனைத்தையும் அவர் அடையப் பெற்றார் என்று ஸீமாப் எழுதுகிறார். குருநாதரின்**

**கால்தடங்களைக் கண்டபோது, தனக்குத் தேவையான அனைத்தையும் அவர் கண்டுகொண்டார்; தன்னையும், பிற அனைவரையும், அனைத்தையும், ஆன்மீகப் பாதையையும் அறிந்த ஒருவரை அவர் சந்தித்தார்; சந்தேகத்திற்கு இடமின்றி கடவுளை மனித உருவில் சந்தித்ததாக அவர் கூறினார்.**"

குழுவினர், இறுதிச் சரணத்தைப் பாடத் தொடங்கியபோது, பாபா சிந்தனையில் ஆழ்ந்து சோகத்துடன் காணப்பட்டார். பாடல் முடிந்ததும், பாபா தனது மணிக்கட்டுகளை ஒன்றின் மீது மற்றொன்றை வைத்து, அவை கட்டப்பட்டதைப் போலவும், பின்னர் அவற்றைப் பிரிப்பது போலவும் சைகையால் தெரிவித்தார். ஸீமாபின் இசைத் தொகுப்பு பாபாவை மிகவும் கவர்ந்தது, அவர் இவ்வாறு அறிவித்தார்: "**ஸீமாப்! அவர் எழுதியதன் ஆழத்தை அவர் உணரவில்லை. அது என் இதயத்தைத் தொட்டது. ஸீமாபின் முழு வாழ்க்கையும் துயரம் நிறைந்தது; அவர் ஒருபோதும் மகிழ்ச்சியாக இல்லை. இன்று, அவர் எங்கிருந்தாலும், நான் அவரை விடுவித்தேன்.** (அவருக்கு முக்தி வழங்கப்பட்டது)."

அன்று பாபாவின் முன்னால் லதா லிமாயேயும் பாடினார்.

நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா அனைவரையும் அழைத்து, அவரது கையில் முத்தமிட்டு புறப்படுமாறு கூறினார். அன்று பாபாவிற்கு இடுப்புப் பாகத்தில் கடுமையான வலி இருந்தது, ஆனால் மூன்று மணிநேரம் தன்னைத் தானே தியாகம் செய்தார். சிரிப்பு, சிறு சிறு உரையாடல், இசை போன்றவற்றின் மூலம் தனது வலியை 'மறக்க', 'மறைக்க' முயன்றாலும், முழு நேரமும் அவர் நாற்காலியில் அசௌகரியமாக அமர்ந்திருந்ததிலிருந்து தெரிந்தது.

மறுநாள் குருபிரசாத்தில் மும்பை குழு அழைக்கப்பட்டது. பாபாவின் உடல்நிலை அல்லது வேறு எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம் என்றும், அவருடன் இருக்கும் போது மகிழ்ச்சியாக இருக்குமாறும் அவர்களிடம் வலியுறுத்திக் கூறினார்.

ஆனால் அடுத்த நாள், ஏப்ரல் 30 அன்று, பாபா சிறுநீரகக் கல் காரணமாக மிகவும் அவதிப்பட்டார். டாக்டர் கிரான்ட் குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்டார். பாபாவை மருத்துவமனைக்கு அழைத்து வருமாறு அவர் கேட்டுக் கொண்டதற்கு பாபா மறுத்துவிட்டார். கடைசியாக, பல வற்புறுத்தலுக்குப் பிறகு, பாபா இணக்கம் தெரிவிக்கவே, 'ரூபி ஹால்' (RUBY HALL) மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவருக்கு ஊசி போடப்பட்டு, நரம்பு வழியாக 'சிறுநீரின் இயல்பான ஓட்டத்திற்கு எதிராக - பின் திசையில் மருந்தைச் செலுத்தும் செயல்முறை (PYELOGRAM, பைலோகிராம்) செய்யப்பட்டது. மாலை 4:00 மணியளவில், ஒரு பின் கடைவாய்ப் பல் அளவுள்ள ஒரு கூர்மையான கல் வெளியே எடுக்கப்பட்டது. பாபா சற்று நிம்மதி அடைந்தார்; ஆனால் அவர் மிகுந்த வலியை தாங்கிக் கொண்டதால், மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார். டாக்டர் கிரான்ட் கூறினார்: "செயல்முறையின் போது, பாபா வலியை மீறி, ஒரு சிறிய

சத்தத்தைக் கூட எழுப்பவில்லை; முழு விஷயத்தையும் மிகவும் அமைதியாகவும், ஆசுவாசமாகவும் தாங்கிக் கொண்டார்."

இடுப்பு வலி தவிர, பாபாவின் இரத்த அழுத்தம் அதிகரித்தது, மேலும் அவருக்கு ஜுரம், பிளவு பிரச்சினை மற்றும் இதய பகுதியில் வலியும் இருந்தது. பாபா ஒருமுறை கூறினார்: "**என் உடலைக் கைவிடும் நேரத்தில், என் உடல் துண்டு துண்டாகும்**!" அவர் உயிருடன் இருக்கும்போதே இது நடந்ததாக அவர் அருகில் இருந்தவர்களுக்குத் தோன்றியது.

இதற்கிடையில், பக்கத்து அறையில் (திரு) ஷா (SHAH) என்று அழைக்கப்பட்ட, தீவிர மாரடைப்பு நோயாளி ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தார்; அவரது நோய் குறித்த முன்கணிப்பு மிகவும் மோசமாக இருந்தது; அவர் உயிர் பிழைப்பதற்கான அதிக நம்பிக்கையை டாக்டர் கிரான்ட் கொண்டிருக்கவில்லை. பாபா புறப்படும் ஆயத்தத்தில் காரில் ஏறியபோது, ஷாவின் மனைவி டாக்டர் கிரான்டிடம், பாபா தனது கணவரை சந்திக்குமாறு வேண்டினார். பாபா கருணையுடன் மீண்டும் ஷாவின் அறைக்குச் சென்று, தம்பதியினருடன் சில கணங்களைக் கழித்தார். "**கவலைப்படாதீர்கள் டாக்டர்**" என்று பாபா, கிரான்டிடம் கூறினார். "**அவர் நன்றாக இருப்பார்**." ஆச்சரியப்படும் விதத்தில், அந்த நபர் முழுமையாகக் குணமடைந்தார்.

நானா கேரின் சகோதரர் வினு கேர், அம்ராவதியில் (AMRAOTI) இயற்பியல் கல்லூரி பேராசிரியராகப் பணிபுரிந்தார். அவர் 1963 மே 1 புதன்கிழமை அன்று காலை பாபாவை சந்திக்க வந்தார். பாபாவின் பிறந்தநாளன்று அம்ராவதியில் தனது அறிவியல் சக தோழர்கள் முன்பு, வினு ஒரு உரை நிகழ்த்தினார்; பாபாவின் அந்தஸ்தை விஞ்ஞானப் பகுத்தறிவின் உதவியுடன் விளக்க முயன்றதாக எரச் பாபாவிடம் தெரிவித்தார்.

மறுநாள் காலை, பாபா, வினுவிடம் அவரது உரையின் சுருக்கத்தை வாசிக்குமாறு கேட்டுக்கொண்டார், பின்னர் பாபா கூறினார்: "**படைப்பின் அடிப்படை, வாயுவைத் தவிர வேறொன்றுமில்லை, ஏனெனில், படைப்பிலிருந்து முதலில் வந்தது வாயு. வாயுவைத் தவிர வேறு எதுவும் இல்லை, சொல்லப்போனால் வாயுவும் இல்லை. ஆனால் 'ஒன்றுமில்லாத ஒன்று' என்ற ஒன்று மட்டும் நிலைகொண்டிருக்கும்**."

அதை மேலும் விளக்கி, பாபா கூறினார், "**நானா ஒரு வித்தியாசமான மூக்கு உள்ளவர்; மோனா வெள்ளைத் தோல் படைத்தவர்; மெஹர்ஜி இங்கே இருப்பவர். ஆனால் இதெல்லாம் ஒன்றுமில்லை என்று நான் சொல்கிறேன், வினு, இதற்கு உங்கள் பதில் என்ன?**"

"இது ஒன்றும் இல்லை என்று அனுபவப்பூர்வமாக நாம் அறியும் வரை, அதை உண்மை எனக் கருதுகிறோம்," என்று வினு பதிலளித்தார்.

மெஹர்வான் கேட்டார், "இதை ஒன்றுமில்லை என்று காட்ட ஒரு கனவின் ஒப்புமையைப் பயன்படுத்தலாமா?"

எரச், “ஆனால், மக்கள் கூறுவார்கள், ‘நாங்கள் இதை உண்மையாக உணர்கிறோம், பார்க்கிறோம். எனவே இது எப்படி ஒன்றுமில்லாததாக இருக்க முடியும்?’”

“ஒரு கனவிலும் அதுதான் நடக்கும்!” மெஹர்வான் இடையே குறிப்பிட்டார்.

“இவையெல்லாம் ஒன்றும் இல்லையென்றால், ‘நாம் எதற்காக எதையும் செய்ய வேண்டும்’ என்று மக்கள் கேட்பார்கள்” என்றார் வினு.

அதற்கு பாபா கூறினார், **“எவரும் எதுவும் செய்வதில்லை!”**

எரச் அப்போது கேட்டார், “விஞ்ஞானிகள் ‘பொருள்’ என்று எதுவும் இல்லை, அனைத்தும் ‘ஆற்றல்’ என்று கூறுவது உண்மையா?”

அதற்கு வினு, “இது அப்படியல்ல. பொருளும், ஆற்றலும் அவற்றினுள்ளே மாறக்கூடியவை. பொருளும், எதிர்ப்பொருளும் ஒன்று சேரும்போது ஆற்றலை உருவாக்குகின்றன.”

அதற்குப் பதிலளித்த பாபா இவ்வாறு கூறினார்:

**நவம்பர் (கிழக்கு-மேற்கு) சகவாசத்தில், நான்கு இறைப் பயணங்கள் பற்றி விளக்கினேன். அவை உள்ளளவிலான பயணங்கள். வெளியளவிலான பயணங்களும் உள்ளன. படைப்பு, வாயுவை அடிப்படையாகக் கொண்டது; வாயு, ஒன்றுமில்லை என்றாலும், ஒன்றுமில்லாதது நிலைகொண்டுள்ளது.**

**மனம் என்பது உள் பயணங்களுக்கும், வெளிப் பயணங்களுக்கும் இடையிலான சந்திப்பு. உள் மற்றும் வெளி என இரண்டு மடை அல்லது மதகுகள் உள்ளன. வெளியளவிலான படைப்பு, ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் நிழலைத் தவிர வேறொன்றுமில்லை. உங்கள் நிழல் உங்களால் உருவாவது போல், உண்மைப்பொருளின் காரணமாக படைப்பு உருவாகிறது. மனம் என்பது, எப்பொழுதும், பொருளுக்கும் ஆற்றலுக்கும் ஒரு மதிப்பு அல்லது முக்கியத்துவத்தை வழங்குகிறது. நீங்கள் வெளியுலகப் பயணங்களை மேற்கொண்டால், எண்ணற்ற சூரியன்களை உள்ளடக்கிய லட்சக்கணக்கான பிரபஞ்சங்களைக் கொண்ட எண்ணிலடங்கா பரந்த புலங்கள் விண்வெளியில் இருப்பதைக் காண்பீர்கள். படைப்பில் மனிதன் வாழும் 18,000 உலகங்கள் உள்ளன. மெஹராஸாத்தில் இதைப் பற்றி நான் ஃபிரான்சிஸ், எரச் இருவருக்கும் விளக்கினேன்.**

**விரிவடைந்தும், சுருங்கியும், பரிணமித்தும், கரைந்தும் போகும் எண்ணிலடங்கா பிரபஞ்சங்கள் உள்ளன என்று விஞ்ஞானிகள் என்றாவது ஒரு நாள் தங்களுக்குள் ஒப்புக்கொண்டாக வேண்டும். வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப, ஒரு நிழல், சில நேரங்களில் பெரிதாகவும், சில சமயங்களில் சிறிதாகவும் இருக்கும், அதே போல விண்மீன் திரள்களிலும் உள்ளது.**

**படைப்பின் பரந்து விரிந்த வரம்பற்ற தன்மையை மனம் எப்படி கற்பனை செய்ய முடியும்? அது முடியாது. ஏன் முடியாது? ஏனெனில்,**

**மனதிற்கு அப்பாற்பட்டதை மனதால் புரிந்து கொள்ள முயற்சிப்பதே அதற்குக் காரணம். மனமும், ஆற்றலும் முற்றிலும் ஒன்றுமில்லாதவை. எனவே, விஞ்ஞானிகள் கண்டுகொள்ளும் மிகவும் பிரமிக்க வைக்கும் இந்த பிரபஞ்சங்கள் அனைத்தும் ஒன்றும் இல்லாதவை.**

**இப்போது மனதின் மறுபுறம், 'உள் பக்கம்', கரையின்றி, வரம்பற்ற நிலையில் உள்ளது. நீங்கள் எந்த திசையிலும் எதையும் சுட்டிக்காட்ட முடியாது. பிரபஞ்சங்கள் இல்லை, விண்மீன் திரள்கள் இல்லை! பின்னர், என்ன இருக்கிறது? உங்கள் ஆழ்ந்த தூக்கத்தில் யார் இருக்கிறார்கள்? எவரும் இல்லை! உளதாயிருப்பது** (IS-NESS) **மட்டுமே உள்ளது. ஆழ்ந்த தூக்கத்தில் முழுமையாக விழித்திருப்பதுதான் குறிக்கோள் (இறுதி இலக்கு) என்று அர்த்தம். எனது அருள் இல்லாமல் இது சாத்தியமில்லை.**

வினு கேர் பாபாவிடம், "மனம் என்றால் என்ன?" என்று கேட்டார்.

**"எனது உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலும், நான் இந்த விவாதத்தை அனுபவித்து ரசிக்கிறேன்"** என்று கூறி பாபா தொடர்ந்தார்.

**இப்போது மனம் என்றால் என்ன என்பதை விளக்க, மணிக்கணக்கில் நேரம் இருந்தாலும் போதாது. நான் ஏற்கனவே விளக்கியதை இன்னும் ஆழமாக சிந்தித்துப் பார்ப்பது நல்லது. இருப்பினும், மனம் என்று ஒன்று உள்ளது. இது பொருளுலகிலிருந்து வேறுபட்டது.**

**உங்கள் ஆழ்ந்த தூக்கத்தில், ஏதேனும் இருக்குமானால், அதுதான் கடவுள். உங்களின் ஒவ்வோர் எண்ணமும் மனதில் அதன் முத்திரையைப் பதிக்கிறது. இந்த மனப்பதிவுகள் உங்களை தூக்கத்திலிருந்து விழித்தெழச் செய்கின்றன. இதனால், நீங்கள் தினமும் விழித்தெழுந்து மீண்டும் தூங்குகிறீர்கள். இப்படி, காலங்காலமாக யுகங்கள் கடந்துவிட்டன; ஆனால் மனம், ஆற்றல் மற்றும் பொருள் ஆகியவை 'எதுவும் இல்லை' என்றாலும் நிலைகொண்டுள்ளன. மனம் என்றால் என்ன என்பதை ஒரு நாள் விளக்குகிறேன்.**

பாபா, வினு கேரிடம் '**பாரசீக மொழி தெரியுமா?**' என்று கேட்டதற்கு எதிர்மறையான பதிலைப் பெற்றார்.

பாபா தொடர்ந்தார்:

**இறைநிலையை எய்திய பாரசீகக் கவிஞரான ஹஃபீஸ், அவரது ஈரடிக் கவிதை ஒன்றில் இவ்வாறு கூறுகிறார்:**

**இறை அன்பின் நிலை மிகவும் உன்னதமானது;**
**அதை ஒருபோதும் மனதால் அடைய முடியாது!**
**மனதின் உதவியுடன், மனதிற்கு 'அப்பாற்பட்டதை' அடைய**
**முயற்சி செய்யுங்கள், இதுதான் கடினமானது.**

**ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள மஜ்ஜூப்-இ-கமில்** (MAJZOOB-E-KAMIL, DIVINELY ABSORBED) **முற்றிலும் மனம் நிர்மூலமானவராக இருக்கிறார். அவர் முழுவதுமாக கடவுளில் ஒன்றிணைந்து லயிக்கப்பட்டவர்.**

**உங்கள் பௌதீகக் கண்களால், அவர் உண்பது, அருந்துவது, உரையாடுவது, நடப்பது அனைத்தையும் பார்க்கிறீர்கள். ஆனால் மஜ்ஜூப் மனதிற்கு மேலே நிலைகொண்டுள்ளவர். அவருக்கு மனம், ஆற்றல் மற்றும் உடல் பற்றிய விழிப்புணர்வு இல்லை. நீங்கள் தூங்கும்போது குறட்டை விடுகிறீர்கள். ஆனால் நீங்கள் அதை அறிவதில்லை. அது போலவே, ஒரு மஜ்ஜூபின் செயல்களிலும் நிகழ்கிறது. அவரை சூழ்ந்திருப்பவர்களுக்கு அவர் உண்பது, அருந்துவது போலத் தோன்றுகிறது.**

பாபா, பின்னர் ஓர் இறுதிக் கருத்தை விளக்கினார்: "**சரி, மனம் என்றால் என்ன? மனம் என்பது அகத்திற்கும் புறத்திற்கும் இடையே, நிஜத்திற்கும் அதன் நிழலுக்கும்** (மாயை) **இடையேயான 'சந்தி'. மனம் அழிந்தால், நீங்கள் நிஜத்தின் அளவிறுதியற்ற தன்மையை அனுபவிக்கிறீர்கள்!**"

பாபா இந்தக் கேள்வியை வினுவிடம் வைத்தார், "**இந்த அறையில் இருக்கும் அனைத்தையும் நீங்கள் பார்க்கிறீர்கள்; அப்படித்தானே? ஆனால் யார் பார்க்கிறார்கள்?**"

"எனக்குத் தெரியாது" என்றார் வினு.

எரச் அதை விளக்க முன்வந்தார், "மனம் பார்க்கிறது. பார்ப்பது - பார்க்காமல் இருப்பது, உண்பது - உண்ணாமல் இருப்பது, பேசுவது - பேசாமல் இருப்பது, தூங்குவது - தூங்காமல் இருப்பது இப்படி எல்லாவற்றையும் செய்வது மனமே என்று பாபா கூறியுள்ளார்."

பாபா விளக்கினார், "**நீங்கள் 'ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள்', எதையும் பார்க்காதவர், ஆனால் உளதாயிருப்பவர். நீங்கள் மனதினால் உங்களை அடையாளம் கண்டதும், நீங்கள் ஒரு நபர் இல்லை என்றால், நீங்கள் எல்லையற்ற உண்மைப்பொருள்.**"

பாபா, வினுவிடம் கேட்டார், "**நீங்கள் ஏன் பிறரை பகுத்தறிவு மூலமாகத் திருப்திப்படுத்தும் அளவுக்குச் செல்கிறீர்கள்? இது அவர்களுக்குத் தவறிழைப்பதோடு, தவறிழைக்கவும் தூண்டுகிறது.**"

"காரணம் அவர்கள் பகுத்தறிவில் இருக்கும் சக்தியை நம்புகிறார்கள்" என்று வினு விளக்கினார்.

"**இல்லாமல் மறைந்துபோகும் ஒன்றால் ஏன் அவர்களுக்கு உணவும், ஊட்டமும் அளிக்க வேண்டும்?**"

அதற்கு வினு, "பகுத்தறிவின் உதவியுடன், பகுத்தறிவைக் கடந்து செல்ல அவர்களுக்கு உதவுவது" என்று பதிலளித்தார்.

பாபா அறிவுரை வழங்கினார், "**உங்கள் சக தோழர்கள் கற்றதைக் களைய உதவுங்கள்!**"

நரேந்திர தாடேயின் (NARENDRA THADE) திருமணம் 1963 மே 1 அன்று நடந்தது. திருமணத்திற்குப் பின்னர் அவரும், புதுமணப் பெண் ஷீலாவும் (SHEILA) குருபிரசாத்தில் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். அன்று முதல், '**தாடே தனது மனைவிக்கு முத்தம் கொடுத்தாரா இல்லையா**' என்று பாபா

கேட்டுக்கொண்டே இருந்தார். தாடே வெட்கத்தில், “இல்லை, இன்னும் இல்லை” என முணுமுணுத்து வந்தார்.

சில நாட்களுக்குப் பிறகு, பாபா, தாடேயிடம் கூறினார், “**நீங்கள் ஒரு நல்ல கணவனாக இருக்க எவ்வளவு தகுதியற்றவர் பாருங்கள்! அந்த ஏழைப் பெண் உங்களைப் பற்றி என்ன நினைக்கக் கூடும்!**”

ஷீலாவை உடனடியாக குருபிரசாத்திற்கு காரில் அழைத்து வருமாறு பாபா கட்டளையிட்டார், அவரும் அவ்வாறே செய்தார். ஷீலாவைத் தன் அருகில் அமர வைத்து, “**நான் கடவுள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்**” என்று அழுத்தம் திருத்தமாக சைகையால் தெரிவித்தார். மெஹர் பாபாவுடனான தொடர்பு காரணமாக, நரேந்திர தாடேயுடன், தனது திருமண வாழ்க்கை உண்மையில் எப்படி இருக்கும் என்று ஷீலா யோசித்துக் கொண்டிருந்தார். பாபா, தம்பதியரை தனக்கு முன்னால் ஒருவரையொருவர் கட்டித்தழுவுமாறு கட்டளையிட்டார், அதை அவர்கள் செய்தனர். பாபா தனது மலர் மாலையிலிருந்து இதழ் ஒன்றை எடுத்து ஷீலாவிடம் விழுங்கக் கொடுத்தார்.

மறுநாள் குருபிரசாத்திற்கு நரேந்திர தாடே வந்தபோது, ”**என்ன முன்னேற்றம்?**” என்று பாபா விசாரித்தார்.

“எதில் பாபா?” என்று தாடே கேட்டார்.

“**ஒரு குழந்தை, நீங்கள் சுத்த முட்டாள்!**”

“எனக்குத் தெரியாது!” தாடே வெட்கமுற்ற நிலையில், முகம் சிவந்து காணப்பட்டார்.

பாபா, பிரதாப் பக்கம் திரும்பி, “**நரேந்திராவிடம் கண்டிப்பாக ஒரு குழந்தை வேண்டும் என்று சொல்லுங்கள்!**” என்று சைகையால் கூறினார். குருபிரசாத்திலிருந்து மெஹராஸாத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, நரேந்திராவிடம், “**ஷீலா கர்ப்பமாக இருக்கிறார் என்பதை விரைவில் எனக்குத் தெரிவிக்கவும்**” என்று அறிவுறுத்தினார் பாபா. (நான்கு மாதங்களுக்குப் பின்னர், அவர் ஒரு குழந்தையை எதிர்பார்ப்பதாக செய்தி வந்தது.)

ஒரு நாள் நரேந்திராவின் சகோதரர் கிஸன் தாடே (KISAN THADE), பாபாவுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்த போது, பாபாவைப் பற்றிய சந்தேக சிந்தனைகள் அவர் மனதில் அலைபாயத் தொடங்கியது. திடீரென பாபா அவரிடம், “**நான் யார்?**” என வினவினார்.

அவர் பதிலளித்தார், “உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்!”

பாபா சைகையால் தெரிவித்தார், “**நான் கடவுள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!**”

ஒரு நாள் மாலை வேளையில், ஸாம் கேரவாலா (SAM KERAWALA) குருபிரசாத்திற்கு வந்தார். வணிகக் கப்பலில் கடல் வானொலி அதிகாரியாகப் பணிபுரிந்த அவர், ஆறு மாத விடுப்பில் வந்திருந்தார். பாபா அவரிடம், “**என்னை விட ரோஷனை** (அவரது மனைவியை) **நீங்கள் அதிகமாக நேசிக்கிறீர்களா?**” என்று கேட்டார்.

"என்னால் சொல்ல முடியாது, ஆனால் ரோஷனைப் பார்க்கத் துடிப்பதைப் போல் உங்களைப் பார்க்கத் தவிப்பது இல்லை" என்று ஸாம் கூறினார்.

**"நான் உங்களை விட்டு தொலைவில் இருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா?"** பாபா விசாரித்தார்.

"நான் ஒருபோதும் அப்படி நினைக்கவில்லை; நீங்கள் எப்பொழுதும் என்னுடன் இருப்பதை நான் உணர்கிறேன்."

**"அதனால்தான் நீங்கள் அப்படி இருக்கிறீர்கள்! ரோஷனைப் பார்க்கும் ஆர்வத்தில் இருப்பதைப் போல், என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் நீங்கள் இருந்தால், அந்த அமைதியின்மை உங்களில் தூண்டப்படும். நான் உங்களுடன் இருக்கிறேன் என்று மட்டுமே நினைக்கிறீர்கள், ஆனால் நான் உங்களுடன் இருப்பதை நீங்கள் ஒருபோதும் பார்க்க முயற்சிக்கவில்லை. அவ்வாறு செய்தால், உங்களிலும் அந்த அமைதியின்மை உருவாகும்."**

இதற்கிடையில், பாபாவின் சகோதரரின் மூத்த மகன் ஷெரூ, பாபாவின் முன்னால் 'நீர் மட்டுமே உளதாயிருக்கிறீர்…' (YOU ALONE EXIST…) என்ற பிரார்த்தனையை தினமும் பாடிக்கொண்டிருந்தது, பாவ் கல்சூரிக்குத் தெரியாது. இந்தப் பிரார்த்தனையில் இணைப்பதற்காக பாபா எடுத்துரைத்த சில வரிகளில், 'புழு பூச்சிகள், நாய்கள், பூனைகள், கழுதைகள், பன்றிகள், பாம்புகள் போன்ற அனைத்தும் அவரே,' மற்றும் பிற உயிரினங்கள், அவற்றில் சில இனியதல்லாத, ஏற்கத்தகாததாக இருந்தன.

பிற்பகல் 3:00 மணி ஓய்வுநேரத்தில், பாவ் கல்சூரி, பாபாவின் அறையில் அவருடன் வந்து இணைவது அன்றாட வழக்கம். ஒரு நாள் மதியம் தேஷ்முக், பால் நாத்து இருவரும், பாவ் கல்சூரி இயற்றியதாக நினைத்த பிரார்த்தனையின் வார்த்தைகள், தங்களுக்கு ஏற்புடையதாக இல்லை என்று கூறி, அவரைப் பார்த்து எள்ளி நகையாடினர். "எந்தப் பிரார்த்தனை?" அவர் குழப்பத்துடன் கேட்டபோது, இருவரும் அதை விளக்கினர்.

"இது என்ன வகையான பிரார்த்தனை?" பால் நாத்து கேலி செய்தார். "கடவுளின் உன்னதமான பண்புகளை விவரிக்கும் போது, கொசுக்கள், பூச்சிகள் போன்ற இனங்களைத் தவிர, சிறந்த உதாரணங்களை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்க முடியாதா?" பாபாவே இந்த வரிகளை இயற்றினார் என்பது அவர்களுக்குத் தெரியாது; அதற்கு பாவ் கல்சூரி எந்த பதிலும் கூறவில்லை.

குழப்பமடைந்த பாவ் கல்சூரி, பாபாவை சந்தித்தபோது, பிரார்த்தனையின் வரிகளை மாற்றி வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தலாமா என்று கேட்டார், மக்கள் அதைக் கண்டு எள்ளி நகையாடுகிறார்கள், வார்த்தைகளின் தேர்வை கேலி செய்கிறார்கள் என்று விளக்கினார்.



பேகம் அக்தர் (BEGUM AKHTAR), குருபிரசாத் (GURUPRASAD), **3 மே 1963**



**"ஒரு வார்த்தையையும் மாற்றாதீர்கள்"** என்று பாபா பதிலளித்தார். **"பரவாயில்லை. இந்தப் பிரார்த்தனையின் முக்கியத்துவத்தைப் பற்றி உங்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை; எதிர்காலத்தில், இந்தப் பிரார்த்தனை உலகம் முழுவதும், அனைத்து இல்லங்களிலும் மொழியப்படும்."**

1963 மே 3 அன்று காலை 9:30 மணிக்கு பேகம் அக்தர் (BEGUM AKHTAR), ஷாந்தாதேவி இருவரும் குருபிரசாத்திற்கு வந்து, மும்பை மற்றும் பூனாவிலிருந்து வந்த பிற அன்பர்களுடன் பாபாவை சந்தித்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான அன்பர்கள், கொல்கத்தாவைச் சேர்ந்த டாக்டர் மூர்த்தி உட்பட பலர், மறுநாள் காலை, அங்கு ஒன்றுதிரண்டனர்.

பாபா இவ்வாறு கருத்துரைத்தார்: **"எனது உலகளாவிய பணியின் அழுத்தம் மிகவும் அதிகமாக உள்ளது, நான் கடந்த இரண்டு இரவுகள் ஓய்வெடுக்கவில்லை. இப்போது சொற்பொழிவுகள் வழங்கும் மனநிலையிலும் இல்லை; இந்தியாவின் தொலைதூரப் பகுதிகளிலிருந்து, ஏராளமான என் அன்பர்கள் என்னைப் பார்க்க வந்துள்ளனர். அடுத்த மூன்று நாட்கள், பெரும்பாலும் காலையில் தரிசனம் வழங்குவேன்; இன்றும், நாளை மதியமும் நீங்கள் அனைவரும் பேகம் அக்தர் பாடுவதைக் கேட்கலாம்."**

ஹமிர்பூரிலிருந்து இரண்டு பெரிய குழுக்கள் ரயிலிலும், ஒன்று தனியார் பேருந்திலும் வந்தன. அவர்கள் ஒரு பள்ளிக்கூடத்தில் தங்கி, பாபாவைப் போற்றிப் புகழ்ந்து பாடல்களைப் பாடிய வண்ணம், குருபிரசாத்திற்கு நடந்து சென்றது, குறிப்பிடத்தக்க காட்சியாக இருந்தது. ஹமிர்பூரைச் சேர்ந்த இந்த ஏழை கிராமவாசிகள், பூனாவின் நகர்ப்புற பொதுமக்களுக்கு அவதார புருஷரின் வருகையை அறிவித்தனர்.

அவர்கள் குருபிரசாத்திற்கு வந்ததும், பாபா ஒவ்வொருவரையும் ஆரத் தழுவினார். லதா லிமாயே சில கஸல்களைப் பாடினார்; அருகில் அமர்ந்திருந்த பேகம் அக்தர், அவர் மிகவும் நன்றாகப் பாடியதைக் கேட்டு, மகிழ்ச்சியில் கைகளைத் தட்டியதோடு, அவரது முதுகிலும் தட்டிப் பாராட்டினார். பாபா, லதாவிடம், **"நீங்கள் பேகம் அக்தருடன் ஆறு மாதங்கள் தங்கி, கஸல்களைக் கற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?"** என்று கேட்டபோது, அத்தகைய அதிர்ஷ்டத்தை எண்ணி ஆவலுடன் ஒப்புக்கொண்டார்.

அன்று மதியம் பேகம் அக்தர் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் பாடினார். அவருடன் ஸாரங்கியில் கோல்வல்கரும் (GOLWALKAR), தபேலாவில் முஹமது அஹமதும் (MUHAMMAD AHMED) இணைந்தனர். அனைவரும் வல்லமைமிக்க இசைக்கலைஞர்கள், அவர்களின் இசையைக் கேட்பது ஒரு சிறப்பு நிகழ்வாக இருந்தது. அவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்குவதற்கு முன்னதாக, தங்கள் இசைக்கருவிகளில் சரியான சுருதியை சேர்த்துக் கொண்டிருந்த நேரத்தில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"ஆதிமுதலான அசல் நாதம்** (விண்ணுலக இசை அல்லது ஒலி), **தாளம், சுருதி போன்ற எதுவும் இல்லாதது. இது தொடர்ந்து இசைத்துக் கொண்டிருப்பது. துறவிகளும், சத்குருக்களும் இதைக்**

**கேட்கின்றனர். உலக இசை அனைத்தும் அந்த அசல் நாதத்தின் ஏழாவது நிழல் மட்டுமே. அதைக் கேட்க நேர்ந்தால் மெய்மறந்து விடுவீர்கள்.**

இசை நிகழ்ச்சி அற்புதமாக இருந்தது, பாபா மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். இந்த நிகழ்ச்சியின் போது, குருபிரசாத் மண்டபம் நிரம்பி வழிந்தது. பாபா, பெண் மண்டலியை கதவுக்குப் பின்னால் அமர்ந்து கேட்க அனுமதித்தார், மேலும் நிகழ்ச்சியினிடையே அவ்வப்போது அவர்களை நோக்கி, ஒளிரும் வெளிப்பாட்டுடன், "**என்ன அற்புதமான குரல்!**" என்று சைகையால் தெரிவித்தார்.

பின்னர், அவரது குடும்பக் கடிதத்தில் (FAMILY LETTERS - 1963 ஜூன் 12), புகழ்பெற்ற பாடகியைப் பற்றி மணி எழுதினார்: "அவரது தோற்றமும், கனிவான ஆளுமையும், அவரது பாடல்களின் செழுமைக்கு மெருகூட்டியது. அவரது தெளிவான, இதமான குரலில் உணர்வின் அலை வீசியது. போதையூட்டும் விதத்தில் அவரது இசை, அதன் மலை முகடுகளைத் தழுவிச் சென்றது."

பாபா, பேகம் அக்தரிடம், "**உங்களைப் போன்ற ஒரு குரல் வளம் மிக மிக அரிது**" என்று கூறினார்.

அவர் தலைதாழ்த்தி வணங்கி "அனைத்தும் உங்கள் அருள்" என்றார்.

இசை நிகழ்ச்சி நிறைவடைந்ததும், அனைவரும் பாபாவிடம் வந்து, அவரது கையை முத்தமிட்டு, மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, ஜவஹர்லால் நேருவைத் (JAWAHARLAL NEHRU) தொடர்பு கொண்ட அமர் ஸிங் ஸைகல் உட்பட, பெருந்திரளான பாபா அன்பர்கள் 1963 மே 5 ஞாயிற்றுக்கிழமை காலை குருபிரசாத்தில் ஒன்று கூடினர்.

ஒரு கட்டத்தில், பாபா, வினு கேரிடம் இவ்வாறு கூறினார்:

**அன்பை விட கீழ்ப்படிதல் மேலானது. நாளை நான் உங்களைப் புறப்படச் சொன்னால், நீங்கள் உடனே எனது விருப்பத்தை ஏற்றுக்கொண்டு, புறப்பட வேண்டும். இன்னும் இரண்டு நாள் விடுப்பு உள்ளது என்று சொல்வதானால், அது கீழ்ப்படிதல் ஆகாது.**

**எனது உண்மையான சுய ரூபத்தில் உங்களில் எவரும் என்னை பார்ப்பதில்லை. என்னை எனது சுய ரூபத்தில் கண்டுகொள்ள, நீங்கள் உங்கள் சுயத்தை இழக்க வேண்டும். என்னைக் கண்டுகொண்டவரைக் கூட கண்டுகொள்வது மிகவும் கடினம். நீங்கள் பார்ப்பது எனது கைகள், கால்கள் மற்றும் உடலை மட்டுமே. உண்மையான பாபா எல்லையற்றவர்!**

காலை இசை நிகழ்ச்சியின் போது, கிரிஜா கில்னானியிடம் (சீக்கியர்களின் பரிபூரண குருநாதர் நானக்கை வணங்கும் சிந்தி இனத்தைச் சார்ந்த ஒரு பாபா-அன்பர்) பாபா, "**நான் குருநானக்கை மிகவும் நேசித்தேன், அவரைப் போன்ற ஆன்மாக்கள் மிகவும் அரிதானவை**" என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

**அன்பானவர், அரிதாகவே அன்பர் ஒருவருக்கு தெய்வீக மதுபானத்தை அருந்தக் கொடுக்கிறார். அவர் எப்போதேனும் அதைக் கொடுக்கும் அந்தத் தருணத்தில், 'துளி' உடனடியாக 'இறைப்பெருங்கடலாக'**

**மாறும். நான் எனது மௌனத்தைக் கலைக்கும் நேரம் வந்துவிட்டது. முழு உலகமும் ஆன்மீக உந்துதலை அடையப்பெறும் தருணம் நெருங்கிவிட்டது; ஆனால் எனது நெருங்கிய அன்பர்களின் இதயங்கள் அப்போது திறக்கப்படும். அப்படி ஒரு காலம் மீண்டும் வராது, கடந்த காலத்திலும் வந்ததில்லை.**

**இன்று, ஆன்மீக எதிர்ப்பு அதன் உச்சத்தை எட்டியுள்ளது. ஒரு காலத்தில் கடவுளின் இருப்பிடம் என்று அழைக்கப்பட்ட திபெத், இன்று சீன ராணுவ முகாம்! இக்காலத்தில் கபட வேடதாரிகளும், பொய்யும், போலியுமான துறவிகளும் மிகவும் அதிகம். விஞ்ஞானம் முன்னெப்போதையும் விட, கடந்த பத்து வருடங்களில் பிரம்மாண்டமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. எனவே, இந்தக் காரணிகள் அனைத்தும் மிக உயர்ந்த நிலையில் இருக்கும் வேளையில், ஆன்மீகம் இவற்றை சீர்படுத்துவது மட்டுமின்றி, அடக்கியாளும் அளவுக்கு மிக உயர்ந்ததாக இருக்கும்.**

**எனது மௌனத்தைக் கலைக்கும் நேரம் மிக அருகில் உள்ளது; எனவே, எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். ஒன்பது மாதங்களில் எனது மௌனத்தைக் கலைப்பேன். இதுவரை நடக்காதது எனது மௌனம் கலைந்த பிறகு நடக்கும்.**

ஒரு கட்டத்தில், பாபா, அன்பர் ஒருவரின் தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி விசாரித்து, பின்னர் இவ்வாறு கருத்துரைத்தார்: "**நான் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன், இருந்தும் நான் உங்கள் நிலைக்கு இறங்கி வந்து, உங்கள் அன்றாட பிரச்சினைகளுக்கு செவிமடுக்கிறேன். ஆனால், அதே வேளையில் நான் ஏழு ஆன்மீகத் தளங்களையும் உணர்வில் கொண்டிருக்கிறேன். மேலும், நான் அனைத்திற்கும் அப்பாற்பட்டவனும் கூட.**"

சாது ஒருவர் பாபாவைப் பார்க்க வந்தார். பாபா அவரிடம், '**குறிப்பிட்டு எதையேனும் சொல்ல விரும்புகிறீர்களா**' என்று கேட்டார். அவர் பாபாவின் ஆசீர்வாதத்திற்காக வந்ததாகக் கூறினார்; மேலும் சாது, ஒரு புதிய உலகளாவிய ஆன்மீக மையத்தைத் தொடங்குவதற்கான அவரது திட்டத்தையும் வெளிப்படுத்தினார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார்: "**உங்கள் யோசனை மிகவும் நல்லது, ஆனால் அனைத்தையும் 100 சதவிகிதம் நேர்மையுடன் செய்ய வேண்டும். உங்கள் செயல்களில் சிறிதளவு பாசாங்குத்தனமும் நுழைய வேண்டாம். உங்கள் அகந்தையைத் தூண்ட வேண்டாம். நீங்கள் அதைச் செய்யவில்லை, ஆனால் இது கடவுளின் விருப்பம் என்பதால் செய்யப்படுகிறது என்ற எண்ணம் உங்கள் மனதில் இருக்கட்டும்; அப்போதுதான் என் அருட்பார்வை உங்கள் மீது விழும்.**"

பாபா, அவரது அன்பர் ஒருவரிடம் கூறினார், "**நீங்கள் ஒரு குடும்பத்துடன் இந்த உலகில் வாழலாம், ஆனால் முற்றிலும் பற்றற்ற**

**நிலையில் இருங்கள். பற்றற்று இருப்பதன் அர்த்தம் என்ன? இதன் அர்த்தம் என்னவெனில், உங்கள் மனைவியும் குழந்தைகளும் திடீரென உயிரைத் துறக்க நேர்ந்தால் அல்லது நீங்கள் உங்கள் பணத்தை இழக்கவும், அல்லது ஒரு தொழுநோயாளியாக மாறவும் நேர்ந்தால், நீங்கள் அதைக் கடவுளின் விருப்பமாக எடுத்துக் கொள்ள வேண்டும், அதைப் பற்றி கவலைப்படக் கூடாது.**"

கொல்கத்தாவைச் சேர்ந்த புதிய அன்பரான, பஞ்சு கோபால் நந்தி (PANCHU GOPAL NANDI, **45**), ஒரு பிரதேசத்தின் பொறியியலாளராக பணிபுரிந்த, பக்திமிக்க இந்துவான அவருக்கு, பாபாவின் வார்த்தைகள், குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. மிகவும் கடினமான சோதனைக்குப் பின்னர், அவரது மனைவி, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் உயிரைத் துறந்த போது, நந்தி, அவருக்கு வழி காட்ட கடவுளை நோக்கி தனது கவனத்தைத் திருப்பினார். நண்பர் ஒருவர் அவருக்கு 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை வழங்க, பின்னர் அவர் உள்ளூர் மெஹர் மையத்தைத் தொடர்பு கொண்டார். அன்று பாபாவை தரிசனம் செய்து, பாபாவின் பாதங்களில் தலைவணங்கிய அந்த வேளையில், அவர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

வழக்கத்திற்கு மாறான, பரந்த நெற்றியுடன் கூடிய அவரது ஒளிரும், மிக அழகான மற்றும் இரக்கமுள்ள முகத்தை நான் இடைவிடாது உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். இடம், நேரம் இரண்டையும் மறந்துவிட்டேன். சூரிய உதயத்தைப் பார்ப்பது போல் எனக்குத் தோன்றியது. ஒரு கணம் கண்கள் கூசும் அளவுக்கு வெளிச்சம் என்னைத் தாக்கவே, நான் ஓரளவு என்னை நோக்கியிருந்த அவரது பாதத்தை உற்று நோக்கினேன். பகவான் கிருஷ்ணரைப் பற்றி நான் அறிந்ததற்கு இணங்க, தாமரை, சங்கு, கொடி போன்றவற்றின் அடையாளங்கள் உள்ளனவா என்று அதைக் கூர்ந்து கவனித்தேன். அத்தகைய வாய்ப்பு எனக்கு இனி ஒருபோதும் வராது என்பதால், மெஹர் பாபாவின் உள்ளங்கால் பகுதியின் ஓரளவு வெளிப்பட்ட மேற்பரப்பைப் பார்க்க நான் சிரமப்பட்ட அந்த கணத்தில், அவர் உடனடியாக முழு பாதத்தையும் எனது பக்கம் திருப்பவே, நான் அதை நன்றாகப் பார்க்க முடிந்தது. அவர் என் எண்ணங்களை அறிந்திருந்தும், என்னால் எந்த அடையாளங்களையும் காணமுடியவில்லை என்றாலும், அனைத்தும் அறிந்த, என்றென்றும் இரக்கமுள்ள ஒருவரால் கவனிக்கப்படாமல் எதுவும் நடக்காது என்பதை இந்தச் சிறிய சம்பவம் எனக்கு உணர்த்தியது.

என் அன்பான மனைவியின் மரணத்திற்குப் பிறகும், மெஹர் பாபாவின் தொடர்பில் நான் வருவதற்கு முன்பும், எனது வாழ்க்கை வறண்டு, பரிதாபமாக இருந்தது; முற்றிலும் சின்னாபின்னமாகி, அனைத்து மதிப்பு அல்லது அழகு மற்றும் மகிழ்ச்சியின் எந்த உணர்வும் இல்லாமல் இருந்தது.

நான் சமூகத்தைப் புறக்கணித்தேன்; எல்லாவற்றிலிருந்தும் முற்றிலும் ஒதுங்கி தொலைவில் இருந்தேன். உள்ளே, நான் ஒவ்வொரு கணமும் இறந்து கொண்டிருந்தேன். ஆனால் நான் பாபாவின் தொடர்பில் வந்த பின்னர், எனது

வாழ்க்கையில் ஒரு முழுமையான உருமாற்றம் ஏற்பட்டது. இருள் நிறைந்த விரக்தி, முழுவதுமாக என்னை விட்டு விலகி, அவரது இதமான, இனிமையான அன்பின் நினைவுகளால் மாற்றப்பட்டது.

பாபாவிற்கு எதிரே அமர்ந்திருந்த மூன்று வயது சிறுமியை அவர் அழைத்தபோது, அவள் உடனே அவரிடம் சென்று தலைவணங்கினாள். அந்த சிறுமி, தனது பெற்றோர் உடன் இல்லாத பட்சத்தில், (மத்திய இந்தியாவின்) ஸாகர் (SAGAR) எனும் குறு நகரிலிருந்து பாபாவைப் பார்க்க பூனாவிற்கு வந்ததாக அவர் குறிப்பிட்டார். அவரது தரிசனத்திற்காக குடும்பத்தின் அண்டை வீட்டார் வந்து கொண்டிருந்தனர், அவர்களுடன் இணைந்து பூனா வரும் பிடிவாதத்தில் இருந்தார் அந்த சிறுமி.

மதுசூதனன் சில கஸல்களைப் பாடினார், அதைத் தொடர்ந்து குழு மதிய உணவுக்காகக் கலைந்தது.

அன்று மதியம் ஓர் ஈரானியப் பெண்மணி, தனது குழந்தைகளுடன் பாபாவை அணுகினார். பாபாவிடம், அவரது அருட்பார்வையை அவர்கள் மீது பொழியுமாறு வேண்டினார். அவர் சென்ற பின்பு, பாபா இவ்வாறு அவதானித்தார், **“எனது அருட்பார்வை எல்லோர் மீதும் எப்பொழுதும் விழுகிறது; இருப்பினும், அது குறிப்பாக யார் ஒருவர் மீதும் விழுவதில்லை; அவ்வாறு விழுவதானால், அவர் உடனடியாக எல்லையற்ற சக்தியாகவும், எல்லையற்ற அறிவாகவும், எல்லையற்ற ஆனந்தமாகவும் மாறிவிடுவார்!”**



மெஹர் பாபா, குருபிரசாத் - மே 1963



# குருபிரசாத் பூந்தோட்டம் - 1963 - பாகம் 2

(**Guruprasad Gardens – 1963 – Part 2**)

**48** வயதான எஸ்பந்தியார் வெஸாலி (ESPANDIAR VESALI), **1927-28** ஆண்டுகளில் மெஹராபாத் பிரேம் ஆசிரமத்தில் மாணவராக இருந்தார். பள்ளிக்கூடம் மூடப்பட்டதும், அவர் ஈரானுக்குத் திரும்பிச் சென்றவர், **1929**ஆம் ஆண்டிலிருந்து பாபாவைப் பார்க்கவில்லை. எஸ்பந்தியார், பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கினாலும், அவர் இந்தியாவிற்குச் செல்ல போதுமான பணம் தன்னிடம் இல்லை என்று எழுதியிருந்தார். பைதூல் மூலமாக, '**எஸ்பந்தியார் எவ்வளவு சம்பாதிக்கிறார், அவருடைய வாழ்வாதாரம் என்ன**' என்று கேட்டு, பாபா, பதில் கடிதம் எழுதினார். அவர் ஒரு செர்ரி மற்றும் ஆப்பிள் பழத்தோட்டத்திலிருந்து (CHERRY & APPLE ORCHARD) சுமாரான வருமானத்தை ஈட்டுவதாக விரிவாக பதிலளித்தார், ஆனால் பெரும்பாலான ஆண்டுகளில் குளிர்கால பனி, மரங்களில் பூக்களை அழித்தது. நல்ல விளைச்சல் இருந்தால், அதை விற்று விலையாக்கி, பராமரிப்புக்குத் தேவையான பணத்தில் மீதம் வைத்து, அவர் இந்தியாவிற்கு வர முடியும், இல்லாவிடில் பாபாவை பார்க்க முடியாது.

'**எஸ்பந்தியார் அவரது பழத்தோட்டத்திலுள்ள மரங்களை அணுகி, அவற்றுடன் பேச வேண்டும்**' என்று பைதூலிடம் பதில் எழுதுமாறு பாபா அறிவுறுத்தினார்: "**நான் மெஹர் பாபாவைப் பார்த்து 35 வருடங்கள் ஆகிறது, நான் அவரை அங்குச் சென்று பார்க்க விரும்புகிறேன். எனவே, எனது பயிர்களாகிய நீங்கள், பனியில் உறைந்து போக அனுமதிக்கப்படவில்லை. நான் என் இறைவனை தரிசிக்கச் செல்வதற்காக, நீங்கள் மரங்களில் கணிசமாகக் காய்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு பனி நிறைந்த குளிர்காலம் எனது பயிர்களை அழித்துவிடக்கூடாது.**" **மரங்களைச் சுற்றி நடந்து வந்து, இந்த வார்த்தைகளை மொழியவும், பின்பு வேறு எதைப் பற்றியும் நினைக்க வேண்டாம், கவலைப்படவும் வேண்டாம்** என்றும் பாபா அறிவுறுத்தினார். எனவே, எஸ்பந்தியார் தினமும் காலையில் தனது மரங்களுடன் 'பேசினார்'.

விளைச்சல் நஷ்டப்படாது என்பதில் உறுதியாக இருந்த எஸ்பந்தியார், பணம் கடன் வாங்கி, மும்பைக்கு விமானத்தில் விரைந்து, அவர் **1963** மே **5** அன்று குருபிரசாத்தை வந்தடைந்தார்; **30** ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்த பிறகு, தனது குருநாதரை சந்திக்கும் அதீத ஆர்வத்தில் இருந்தார்; ஆனால், பாபா அவருக்கு உடனடியாக தரிசனம் வழங்கவில்லை. மாறாக, அவரை வெளியே அமர வைத்து, திவான்-இ-ஹ:ஃபீஸின் (DIVAN-E-HAFIZ) ஈரடிக் கவிதைகளை வாசிக்குமாறு கூறி அனுப்பினார். எஸ்பந்தியார் மண்டபத்தின் வராண்டாவில் அமர்ந்து, புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அரை மணி நேரத்தில் பாபா அவரை உள்ளே அழைத்தார். பல வருடங்களுக்குப் பின்னர் அவர் பாபாவை

சந்தித்தது, மனதை நெகிழச் செய்யும் காட்சியாக இருந்தது. பாபாவின் பாதத்தில் தலைவணங்கி அழுதார். சில நிமிடங்களுக்குப் பின்னர், எஸ்பந்தியார் எழுந்ததும் பாபா அவரை ஆரத் தழுவினார்.

எஸ்பந்தியாருக்கு ஒருமுறை தெஹ்ரானில் (TEHRAN), அவரது இல்லத்தில் அசாதாரணமான அனுபவம் ஒன்று ஏற்பட்டது. ஒரு நாள் வாசற்கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு, கதவைத் திறந்தபோது, வாசலில் ஓர் இமாம் (IMAM, முஸ்லீம் பாதிரியார்) நிற்பதைக் கண்டார். ‘ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இமாம் மெஹ்தி (ஸாஹேப்-இ-ஸமான், ரஸூல், அவதார புருஷர்) இப்போது பூமியில் இறங்கி வந்துள்ளார், தெஹ்ரானில் ஒரு குறிப்பிட்ட இல்லத்தில் அவரைக் கண்டுகொள்ளலாம்’ என்று கனவில் ஒரு குரலைக் கேட்டதாக இமாம் கூறினார். அவரது கனவில், தெளிவான விவரங்களுடன், அவர் கண்ட இல்லத்திற்கு வழிநடத்தப்படவே, மறுநாள் காலை, இமாம் நகரில் அமைந்த அந்த இல்லத்தைத் தேடி, கண்டுபிடித்து கதவைத் தட்டினார். அவர் இந்த விபரங்களைக் கூறுகையில், எஸ்பந்தியாரின் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது; அந்த இல்லம் தெஹ்ரானில் அமைந்த அவதார் மெஹர் பாபா மையமாக இருந்தது, அங்கு ஒவ்வொரு வாரமும் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பிற்பகல் 2:30 மணிக்கு, பேகம் அக்தர் அவரது இரண்டாவது கவாலி நிகழ்ச்சியைத் தொடங்கினார். பாபா அவருக்கு ஒரு கைவிரல் மோதிரத்தையும், மதியம் முழுவதும் அணிந்திருந்த இளஞ்சிவப்பு துண்டையும் அன்புடன் வழங்கினார். இறுதியாக இரண்டு கஸல்களைப் பாடும் போது, அவர் கன்னங்களில் கண்ணீர் வழிந்தாலும், அவரது குரலில் எந்தத் தடங்கலும், தடுமாற்றமும் இல்லை. மெஹராஸாத்தில் நடந்ததைப் போலவே, பாபா மீண்டும் ஒரு பாடலின் போது, அவரது கண்ணீரைத் துடைக்கத் தனது கைக்குட்டையைக் கொடுத்தார். பாபா மிகவும் விரும்பிய அவரது கடைசி கஸலின் முதல் வரி: “நான் அணைக்கப்பட்ட மெழுகுவர்த்தியின் புகை, என் இறுதி இலக்கை நோக்கிச் செல்கிறேன்!” (‘I AM THE SMOKE FROM A SNUFFED-OUT CANDLE, GOING TOWARD MY GOAL!’)

தபேலா வித்வான் முஹமது அஹமது, இசைக்கலைஞர் கோல்வல்கர் இருவரும் சிறப்பாக வழங்கிய இசை நிகழ்ச்சியை பாபா ரசித்தார். பேகம் அக்தர் அவரது இறுதி இரண்டு கஸல்களைப் பாடியபோது அங்கிருந்த பலர் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு, அமைதியாக அழுதனர். நிகழ்ச்சி மாலை 6:00 மணிக்கு நிறைவடைந்தது.

ஸாக்கோரி ஆசிரமத்தின் மேலாளர் வாக், புரந்தரே இருவரும் பாராயணத்தில் கலந்து கொண்டனர். தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட தூன் ஸட்டா, குருபிரசாத் நிகழ்ச்சிக்காக அழைத்து வரப்பட்டார். பாபா அவரிடம், “**ஒரு வருடத்திற்குள் நீங்கள் நடக்க முடியும்**” என்று கூறினார்.

“சொர்க்கத்தை நோக்கியா அல்லது வேறு திசையிலா?” தூன் வினவினார்.

**“நீங்கள் ஏன் மேலே, கீழே என்று சொல்கிறீர்கள்? கடவுள் எங்கும் இருக்கிறார்! மேலும், கீழும் குறித்து பேசுவது வெறும் மாயை. அனைத்தும் பூஜ்யம்.**” என்று பாபா பதிலளித்தார்.

தூன் நகைச்சுவையாகக் கூறினார், “விஞ்ஞானிகளுக்கு சூரிய உதயமும் இல்லை, சூரிய அஸ்தமனமும் இல்லை என்று தெரியும், ஆனால் நாங்கள் அதை ஒவ்வொரு நாளும் பார்க்கிறோம்.”

பாபா சிரித்துக்கொண்டே பேகம் அக்தரிடம், “**தூன் அதி புத்திசாலி!**” என்றார்.

மறுநாள், 1963 மே 6 திங்கட்கிழமை காலை 7:00 முதல் 9:15 வரை, பல நபர்களுக்கு பாபா தனிப்பட்ட நேர்காணல்களை வழங்கி, பின்னர் அவர் மண்டபத்தில் வந்து அமர்ந்தார்; அங்கு, ஹமிர்பூர் அன்பர்கள் பாவ் கல்சூரியின் ‘பிரேம் மஹிமா’ (THE GLORY OF LOVE) என்ற நாடகத்தை அரங்கேற்றினர். மெஹர் பாபாவை நம்பாத ஹமிர்பூர் மாவட்டத்தில் வாழும் பழமைவாத மக்களின் ஆரம்பகால எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டது இந்த நாடகம். இந்தப் போராளிக் கூட்டம் பாபா-அன்பர்களை வன்முறை மூலமாக எதிர்த்து, அவர்களின் குடிசைகளுக்கு நெருப்பு வைத்து, விளைநிலத்தில் பயிர்களை அழிக்கும் அளவிற்குச் சென்றனர். அவர்கள் இப்படி நடந்துகொண்ட போதிலும், பாபாவின் அன்பர்கள், அனைவரையும் அன்பால் வென்றனர். சாதாரணமாக ஆறு மணி நேரம் நடத்தப்படும் இந்த நாடகம், பாபா கேட்டுக் கொண்டதற்கு இணங்க, ஒன்றரை மணி நேரமாகக் குறைக்கப்பட்டது.

பாபா அவர்களின் நடிப்புத் திறனைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார், மேலும் ‘மெஹர் தாம்’ எழுப்பப்பட்ட நௌரங்காவை தாம் பார்வையிடுவதாக உறுதியளித்தார். ஒரு கட்டத்தில், ஹமிர்பூரில் மையம் கட்டுவது தொடர்பாக விவாதம் எழுந்தது. மெஹர் தாம் (மெஹரின் இருப்பிடம்) என்றால் என்ன என்பதைக் குறித்து, எழுத்து மூலம் விளக்குமாறு பாவ் கல்சூரியிடம் பாபா கூறினார். அவர் அதே பெயரில் ஒரு குறும் நாடகத்தை எழுதி, பாபா முன்னிலையில் வாசித்தார். பாபா அதைப் பெரிதும் விரும்பவே, இந்தி மொழியில் அச்சிட ஹமிர்பூருக்கு அனுப்பப்பட்டது.

1963ஆம் ஆண்டில் ஹமிர்பூரிலிருந்து மற்றுமொரு நாடகத்திற்கான வேண்டுதல் கடிதங்கள் வந்த வண்ணம் இருந்தன. ‘இறை நம்பிக்கை’ (FAITH IN GOD) என்ற தலைப்பில் இந்தி மொழியில் ஒன்றை எழுதுமாறு பாவ் கல்சூரிக்கு பாபா அறிவுறுத்தினார். பாவ் கல்சூரியின் கைவண்ணத்தில் உருவான ‘விஷ்வாஸ்’ (நம்பிக்கை - FAITH) என்ற நாடகம் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டு, அச்சிடப்பட்டு பின்னர் இந்தியா முழுவதும் வெவ்வேறு மையங்களில் அரங்கேற்றப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் ‘சத்ய நாராயண் பூஜை’ (SATYA NARAYAN PUJA) என்ற பெயரில் இந்துக்களால் சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது. ஒரு நாள் ‘விஷ்வாஸ்’ நாடகம் நிறைவடைந்ததும், பாபா, “**உண்மையான வழிபாடு என்றால் என்ன**

**என்பதை அனைத்து மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும்”** என்று குறிப்பிட்டு, அதை விளக்கும் விதத்தில் **‘பூஜை’** (WORSHIP, வழிபாடு) என்ற தலைப்பில் மற்றுமொரு நாடகத்தை எழுதுமாறு பாவ் கல்சூரிக்கு உத்தரவிட்டார்.

மே 6 அன்று, குருபிரசாத் நாடகத்திற்குப் பிறகு, பாபா, பொய்யும் போலியுமான சாதுக்களைப் பற்றி விளக்கினார்:

**இந்த நாட்களில் உலகம், பொய்யும் போலியுமான சாதுக்களால் நிறைந்துள்ளது. அவர்களில் சிலர் ‘மாயாஜால வித்தை’களில் திறமை வாய்ந்தவர்கள், அவர்கள் அப்பாவிகளையும், ஏமாளிகளையும் தன் வயப்படுத்தும் வசீகர சாஸ்திரம்** (HYPNOTISM) **மூலம் தங்களை நோக்கி ஈர்க்கின்றனர். அவர்களில் சிலர் ஒரு நிலையான பார்வையால், விசித்திரமான காட்சிகளை வழங்கி, பிறரை தங்கள் பக்கம் ஈர்க்கின்றனர். ஆனால் எனது பெயர், இந்த மந்திரங்களையும் வசீகரங்களையும் வென்று அவர்களை அடக்கி ஆளும்.**

**இதை ஒப்பிடுகையில், கைக்கோபாத்தின் அனுபவங்கள் மிகவும் ஆழமானவை. நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள யாத்ரீகர் ஒருவருக்கு, அற்புதங்களை நிகழ்த்த எந்த ஊடகமும் தேவையில்லை. அவர் அதை நினைத்தாலே போதும், அவருடைய விருப்பத்திற்கு இணங்க அனைத்தும் நடக்கும். அவர் கடவுளின் எல்லையற்ற சக்தியை அடையப் பெற்றிருப்பதால், அவரது அற்புதங்கள் முற்றிலும் மாறுபட்டவை.**

பாபா தொடர்ந்து கூறினார்: **“மூன்று விஷயங்கள் என்னை மகிழச் செய்கின்றன: பிரபஞ்சத்தின் துன்பத்தை என் மீது ஏற்றுக்கொள்வது; நன்றாகப் பாடுவதைக் கேட்பது, ரசிப்பது - அதாவது நல்ல இசை, தேஷ்முக்கின் வகை அல்ல; என் அன்பர்களுடன் சீட்டு விளையாடி, இறுதியில் அவர்கள் தரையில் மூக்கை உரசுவது!”**

பிற்பகல் 3:00 மணி முதல் 4:30 வரை, பாடகர் வாட்வே பல கஸல்களைப் பாடிக் கொண்டிருந்த வேளையில், அடுத்த நாள் திரும்பிச் செல்ல இருந்த அனைவரையும் பாபா தழுவினார். விழா நிறைவடைந்ததும், பாபா எழுந்து நின்று, அனைவரையும் வணங்கி, தமது அறைக்குச் சென்றார்.

மே 7 அன்று குருபிரசாத்திற்கு எஸ்பந்தியார் வெஸாலி வந்தபோது, பாபா, தீவிரமான தொனியில் அவரிடம் கூறினார்: **“இதற்கு மேலும் நீங்கள் இங்குத் தங்க முடியாது. நீங்கள் ஈரானுக்குத் திரும்பியாக வேண்டும்.”**

அதற்கு வெஸாலி, “பாபா, நான் உங்களை 35 வருடங்களுக்குப் பிறகு பார்க்கிறேன். ஒரு மாதம் அல்லது குறைந்தபட்சம் 20 நாட்களாவது உங்களுடன் இருக்க எனக்கு அனுமதி வழங்குங்கள்” என்று வேண்டினார்.

அதற்கு பாபா, **“இல்லை, நான் உங்களுடன் ஈரானிலும் இருக்கிறேன். நீங்கள் திரும்பிச் சென்று, பாபாவுக்காகப் பணிபுரிய வேண்டும். நீங்கள்**

**வாங்கிய கடனுக்காக, உயிரை இழக்க வேண்டியிருந்தாலும், அதைக் கண்டுகொள்ளாதீர்கள், எனக்காகப் பணிபுரியுங்கள்"** என்றார்.

எனவே எஸ்பந்தியார் வெஸாலியை, ஆதி மெஹராபாத்திற்குக் காரில் அழைத்துச் சென்றார்; அங்கு அவர் பைதூலை சந்தித்த அடுத்த நாள் மெஹராஸாத்திலிருந்து மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆனால் விமான நிலையத்தில் அவர் பாரசீக நாணயத்தில் பயணச்சிட்டு வாங்க வேண்டும் என்று அவருக்குத் தெரிவிக்கப்பட்டது; மேலும் அவரிடம் இந்திய ரூபாயைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதால், ஈரானிலிருந்து பயணச்சீட்டை அனுப்புவது நல்லது என்று அவரிடம் கூறப்பட்டபோது, அவர் குருபிரசாத்திற்குத் திரும்பி வந்தார். பாபா அவரை அழைத்து, நடந்ததைக் கேட்டதும், **"சரி, உங்கள் கடிதத்திற்கு பதில் வரும் வரை, இங்கேயே இருங்கள்"** என்று கூறினார்.

ஒரு வாரத்திற்குப் பிறகு, பாபா, வெஸாலியிடம் மும்பைக்குச் சென்று பதில் ஏதேனும் வந்ததா என்று பார்க்குமாறு அறிவுறுத்தினார். கடிதம் வராததால், மீண்டும் குருபிரசாத்திற்கு திரும்பி வரவே, பாபா, அவரை பூனாவில் தங்க அனுமதித்தார். மற்றுமொரு வாரத்திற்குப் பின்னரும் கடிதம், பணம் எதுவும் வராததால் பூனாவில் தங்க வேண்டிய கட்டாயம். இவ்வாறு, வெஸாலி பூனாவில் 20 நாட்கள் தங்கியிருந்தார், இறுதியாக பாபா அவரை மும்பைக்குச் சென்று, அங்கு, கடிதத்திற்காகக் காத்திருக்குமாறு அறிவுறுத்தினார். பயணச்சீட்டு வந்ததும், புறப்படுவதற்கு சற்று முன்பு, பாபாவிடம் பிரியாவிடை பெறுவதற்காக குருபிரசாத்திற்குத் திரும்பி வந்தார்.

அந்த ஆண்டின் பிற்பகுதியில் பழத்தோட்டப் பயிர், அறுவடை செய்யப்பட்டபோது, கடுமையான குளிர்கால உறைபனி காரணமாக, அக்கம் பக்கத்து பழத்தோட்டங்கள் கடுமையாக சேதமடைந்து பாதிக்கப்பட்டிருந்தாலும், உள்ளூர் விவசாயிகள் வியப்படையும் அளவுக்கு, வெஸாலியின் பயிர்கள் அதிக விளைச்சலைக் கண்டன.

ஞாயிற்றுக்கிழமைகள் மட்டுமே தரிசன நாட்களாக அறிவிக்கப்பட்டாலும், ஒவ்வொரு நாளும் சில குழுக்கள் அல்லது பிற நபர்களுக்கு சகவாச நாளாகவே தென்பட்டது. வார இறுதியை கழிக்க மும்பை அன்பர்கள் பூனாவிற்கு விரைந்ததால், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைக்குள், வருபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. ஞாயிற்றுக்கிழமை காலை மற்றும் பிற்பகல்களில், குருபிரசாத் மாளிகையில், நூற்றுக்கணக்கான நபர்கள் தங்கள் பிரியமான இறைவனின் அருகில் ஒன்றுதிரண்டனர். ஆனால், ஒரு கோழி தனது சிறகுகளுக்குள் குஞ்சுகளை ஒன்றிணைத்து பாதுகாப்பது போல, பாபா தமது ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அன்பையும், அரவணப்பையும் வழங்க முடிந்தது.

பாபா அனைவரையும் ஆரத்தழுவி, தரிசனம் மற்றும் ஆன்மீக உரைகளை வழங்கிக் கொண்டிருந்தார். சில நேரங்களில் கடந்த கால வேடிக்கையான சம்பவத்தை நினைவுகூர்ந்து, அல்லது எவரிடமேனும்

நகைச்சுவை துணுக்குகளை பகிர்ந்து கொண்டது, அரங்கம் முழுவதும் சிரிப்பொலியை எழுப்பியது. ஒளிரும் முகபாவத்துடன், ஒவ்வொன்றையும் பாராட்டும் விதத்தில், பாபா இசை நிகழ்ச்சிகளையும், பாடல்களையும் கேட்டுக்கொண்டிருந்தார். நிகழ்ச்சியின் இடையே, எதிர்பாராத தருணங்களில், தேஷ்முக்கின் பாடல்கள் திடீரென ஒலிக்கவே, பாபா அவரைக் கேலி செய்து கொண்டிருந்தார். ஆனால், சில வேளைகளில் பாபா, பார்வையாளர்களுக்கு இவ்வாறு நினைவூட்டினார், **“நான் இதையெல்லாம் செய்வதை நீங்கள் பார்க்கிறீர்கள், ஆனால் அதே நேரத்தில், நான் என்ன செய்துகொண்டிருப்பது போலத் தோன்றினாலும், எனது (உள்) பணி தொடர்ந்துகொண்டே இருக்கும்.”**

அந்த ஆண்டு பூனாவில் தங்கியிருந்த போது, பாபா தனது நெருங்கிய அன்பர்களின் இல்லங்களுக்கு விஜயம் மேற்கொண்டார். ஒருமுறை, அவர் 25 குயின்ஸ் கார்டனில் (25, QUEEN'S GARDEN) அமைந்த பண்டாரியின் இல்லத்திற்கு, சிற்றுண்டி மட்டும் தேநீருக்காக சென்ற வேளையில், மெஹரா, மணி, கோஹெர், மெஹரு, ஆதி, எரச் ஆகியோரும் உடன் சென்றனர்.

குருபிரசாத் தரிசன நாட்களில், சில நேரங்களில், பாபாவை சந்திக்க முக்கிய பிரமுகர்கள் வருவது வழக்கம். அவர்கள் அவசரமாகத் திரும்பிச் செல்லும் பட்சத்தில், பூனா சேவகர்கள் சிலர், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி, நீண்ட வரிசையில் நிற்காமல் உள்ளே செல்ல அனுமதித்து, பாபாவைப் பார்க்க அவர்களை முன்னால் அழைத்துச் செல்வதும் வழக்கமாக நடந்தது. பிற நேரங்களில், சிலர் தாமதமாக வரும்போது, பாபாவின் அருகில் அமர வாய்ப்பு இல்லாததால், உடனடியாக பாபாவிடம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பாபா செல்வந்தர்களுக்கும், முக்கிய நபர்களுக்கும் முன்னுரிமை வழங்குகிறார் என்று சிலர் நினைத்திருக்கலாம். ஒரு நாள், குருபிரசாத்தின் முன் வராண்டாவில் அமர்ந்திருந்த பாபா, **“எனக்கு மஹாராணியும், ‘மேத்ராணி’யும்** (கழிவறை துப்புரவாளர்) **ஒன்றுதான்”** என்று குறிப்பிட்டார். ‘தற்செயலாக’ அன்று மதியம் பாபா தரிசனம் வழங்கும் வேளையில், அவருக்கு ஒருபுறம் பரோடா மஹாராணியும், மறுபுறம் ஒரு ஏழை ‘மேத்ராணி’யும் அமர்ந்திருந்தனர்.

1963 மே 11 சனிக்கிழமை ஒரு பெண்மணி மலர் மாலையுடன் பாபாவிடம் வந்தார். பாபா தம் அருகில் அமர்ந்திருந்தவர்களிடம் கூறினார், **“ஒரு காலத்தில் பெரும் செல்வந்தராக இருந்த அவரிடமிருந்து, உறவினர்கள் சொத்துக்களை சட்டவிரோதமாகப் பறித்துவிட்டனர். அவர் நீதிமன்றத்திற்குச் சென்று அவர் மீதான 83 வழக்குகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவ்வளவு மனம் மற்றும் பணப் பிரச்சினைகள் இருந்தபோதிலும், அவர் இன்னும் என்னுடன் ஒட்டிக்கொண்டிருப்பது அவருடைய அதிர்ஷ்டம்.”** பாபா அந்தப் பெண்மணியிடம் அனைத்து பிரச்சினைகளையும் அவரிடம் விட்டுவிட்டு, முடிவுக்காகக் காத்திருக்குமாறு அறிவுறுத்தினார்.

அன்றைய தினம், டாக்டர் ராம் கிண்டே மும்பையிலிருந்து வந்தவர், பாபாவுக்காகக் கொண்டுவந்த திராட்சைப்பழங்களைக் கூட்டத்தில் அனைவருக்கும் விநியோகித்தார்.

பின்னர், எரச்சின் சகோதரி மனு ஜெஸவாலாவிடம் பாபா சில பஜனைகளைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். நீண்ட நாள் பயிற்சி இல்லாவிடிலும், அவர் நன்றாகப் பாடியதோடு, ஹார்மோனியமும் வாசித்தார்.

உரையின் தலைப்பு அப்போது ஆன்மீகத் தளங்களின் அனுபவங்களை நோக்கிச் சென்றது, அதைக் குறித்து பாபா விளக்கிக் கூறியதாவது:

**ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில், யாத்ரீகர் ஒருவர், தன்னிடமிருந்து வெளிவருவதாக உணரும் வானுலக இசையை** (அன்ஹாத் நாதம்) **சிறிதளவு அனுபவிக்கிறார். ஆறாவது ஆன்மீகத் தளத்தில், அவர் எங்கும் கடவுளை மகிமையின் ஒளியாகக் காண்கிறார். இந்த ஆன்மீகத் தளத்தில்தான், அன்பிற்குரியவருடன் இணைவதற்காக அன்பன் மிகுந்த வருத்தத்திற்கு உள்ளாகிறான்; ஆனால் இறைவனோடு ஐக்கியம் என்பது அவ்வளவு எளிதல்ல. ஐக்கியமானதும், அனைத்தும் முடிவற்றதாகவும், எல்லையற்றதாகவும், தொடர்ச்சியாகவும் மாறும். அந்த உன்னதமான நிலையிலிருந்து, நான் உங்கள் நிலைக்கு வந்துள்ளேன்.**

**பாபாஜான், நான் இத்தகைய உயர்ந்த நிலையிலிருந்து கீழே பூமிக்கு வந்து, கட்டுண்டவனாக இருப்பதைப் பற்றி அடிக்கடி கூறுவது வழக்கம். இப்போது நான் அதை ஏற்றுக்கொண்டதால், 700 முதல் 1400 ஆண்டுகளுக்கு ஒருமுறை வந்து செல்ல வேண்டும்.**

பாபா மேலும் விளக்கினார்:

**சட்டம் மாயையைக் கட்டுப்படுத்துகிறது; அன்பு உங்களை மாயைக்கு அப்பால் அழைத்துச் செல்கிறது. கடவுள் மனித உருவில் பூமியில் வரும் வேளையில், அவர் சட்டங்களைக் கட்டுப்படுத்துகிறார், அவற்றைக் கடைப்பிடிக்கிறார், ஆனால் அனைவருக்கும் அன்பைக் கொடுக்கிறார். அவர் அந்த தெய்வீகச் சட்டத்தின் அதிபதி, அதேசமயம் நீங்கள் அதற்கு அடிமைகள். பல்வேறு விஷயங்களுக்கு நீங்கள் மாயையில் அடிமையாக இருப்பது போல, மாயாவிற்கு அடிமையாகி விட்டீர்கள். இந்த அடிமைத்தனத்தை உங்களால் வெல்ல முடியும், ஆனால் மாயாவின் அடிமைத்தனத்தை முறியடிக்க குருநாதரின் அருள் இன்றியமையாதது.**

**ஸந்த் துளசிதாஸ் இளமையில் வீட்டை விட்டு வெளியேறி, பல தவங்களில் ஈடுபட்டார். பல வருடங்களுக்குப் பின்னர் ஒருமுறை சொந்த ஊருக்கு வந்தபோது, ஒரு வயதான பெண்மணி அவரைப் பார்த்து, அவரது சிறுவயது செல்லப் பெயரான 'துலாசியா' என்று அழைத்தார். துளசிதாஸ், அவருக்குரிய மரியாதையுடன் அழைக்கப்படாததால், அவமானப்பட்டதாக உணர்ந்து, அவர் தனது கிராமத்தை விட்டு வெளியேறினார். மாயையின் சில அம்சங்களுக்கு இன்னும் அடிமையாக இருந்ததால் அவர் இதைச் செய்தார்.**

**ஆரம்ப காலத்தில் நான் அவமானப்படுத்தப்பட்டேன்; ஆனால் நான் கடவுள் என்பதாலும், மாயையின் அடிமைத்தனத்திற்கு அப்பால் இருந்ததாலும், எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருந்தேன். நான் எனது மௌனத்தைக் கலைக்கும் வேளையில், நான் யார் என்பதை அனைவரும் அறிவர்!**

மீண்டும் ஒருமுறை, அவெஸ்தாவில் கடவுளைப் போற்றிப் புகழும் 101 நாமங்களைக் குறிப்பிட்டு பாபா விளக்கமளித்தார்:

**இந்த நாமங்கள் ஸொராஸ்டரால் வழங்கப்பட்டதாக கருதப்படுகிறது. அவை அனைத்தும் கடவுளுக்கு 'அப்பாற்பட்ட' நிலையின்** (BEYOND STATE – PARAMATMA) **பண்புகளாகும், 'அனைத்திற்கும் அப்பாற்பட்ட' நிலையில் அல்ல** (BEYOND BEYOND STATE - PARATPAR PARABRAHMA)**. இந்த நாமங்கள் எனது பண்புக்கூறுகள். கடவுளுக்கு எல்லையற்ற பண்புகள் உள்ளன, ஆனால் புத்தகத்தில் 101 மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.**

பாபா அப்போது மஸ்துகளைக் (GOD-INTOXICATED MASTS) குறித்த விளக்கங்களுக்குத் தாவினார்; மேலும் அவர்களைத் தேடி அலைந்து, அவர்களுடன் பணிபுரிந்த, அவரது சுற்றுப்பயணத்தின் போது நிகழ்ந்த பல வேடிக்கையான சம்பவங்களை விவரித்தார்:

**நான் மஸ்துகளை மிகவும் நேசிக்கிறேன்; அதனால், நான் அவர்களை சந்திக்கும் நோக்கத்தில் அளவிலா சிரமங்களையும், இடர்பாடுகளையும் தாங்கிக் கொண்டேன். மூன்றாம் வகுப்பு ரயில், பேருந்து, கார், மாட்டு வண்டி, டோங்கா போன்றவற்றில் பயணம் செய்து, தாங்க முடியாத வெயிலிலும், குளிரிலும், மழையிலும் அடிக்கடி நடந்து சென்று, எங்கிருந்தாலும் அவர்களைத் தொடர்பு கொண்டேன். ஒருமுறை, அலஹாபாத்தில் வெப்பம் கடுமையாக இருந்தது; ஸவக் கொத்வால் அவரது கடமைகளிலிருந்து அவரை விடுவித்து வீட்டிற்கு செல்ல அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஸவக் என்னுடன் பல வருடங்களாக இருந்து வந்தாலும், அந்த மஸ்த் பயணங்களின் அழுத்தத்தை அவரால் தாங்க முடியவில்லை. எனக்கு ஒரு மஸ்தைக் குறித்த தகவல் கிடைத்ததும், இரவு பகல் பாராமல், பயணத்திற்கான வசதிகள் இருந்தாலும், இல்லாவிடிலும், உடனடியாக பயணத்தைத் தொடங்கும் முழு முனைப்பில் ஈடுபட்டேன். மஸ்துகளை தொடர்பு கொள்வது எனக்கு அளப்பரிய ஆனந்தத்தைத் தந்தது; அவர்கள் என்னிடம் கேட்கும் அனைத்தையும் செய்யும் ஆயத்தத்தில் நான் இருந்தேன். அவர்கள் எனக்கு வழங்கிய அசுத்தமான உணவுகளையும் தயக்கமின்றி உண்டேன்; எனக்குப் பரிசாக அளித்த பல பொருட்களை மெஹராபாத் மேல்மலையில் இன்னும் பாதுகாப்பாக வைத்துள்ளேன்.**

**ஒருமுறை, பத்து மைல் தொலைவில் அமைந்த கிராமத்தில் ஒரு மஸ்த் வாழ்ந்ததாகக் கேள்விப்பட்டு, ஒரு மாட்டு வண்டிக்கு ஏற்பாடு செய்யுமாறு மண்டலியைக் கேட்டுக்கொண்டேன். அவர்கள் குடிகாரன்**

ஒருவனை சந்தித்து, அவன் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தினால், தனது மாட்டு வண்டியைக் கொண்டு வருவதாகவும், அவனுக்கு ஒரு சிறிய அன்பளிப்பை வழங்குமாறும் கேட்டுக்கொண்டான். அதற்கு ஒப்புக்கொண்டதும், அவனுக்கு வழங்கவேண்டிய சிறிய அன்பளிப்பை முதலில் கோரினான்; அதை வாங்கிக்கொண்டு ஓட்டம் பிடித்த அவன், மாட்டு வண்டியை கொண்டுவராமல், முதலில் அருகிலிருந்த மதுக்கடைக்குச் சென்று மனமார மது அருந்தினான்! அதற்குப் பிறகு, தன்னிடம் சொந்தமாக மாட்டுவண்டி எதுவும் இல்லாததால், நண்பர்களின் வண்டியை நாடி புறப்பட்டான். நீண்ட நெடிய நேரம் காத்திருந்த பின்னர், அவன் ஒரு மாட்டுவண்டியைக் கொண்டு வந்தான், அப்போது அவனது கண்கள் சிவந்து சுழன்றுகொண்டிருந்தன.

நானும் மண்டலியும் வண்டியில் ஏறினோம்; அவன் குடிபோதையில் காளைகளை சவுக்கினால் அறைய, வண்டி கல் பாதை வழியாக, வெகுவாக ஆடி அசைந்து சென்றது. வழியில் ஒரு மலையடிவாரத்திற்கு வந்ததும், குடிகாரன் காளைகளை சவுக்கால் அறைந்து, அதீத வேகத்தில் மலையில் ஏறினான். இறங்கும் வேளையில் கடிவாளத்தை விட்டு, காளைகள் அசுர வேகத்தில் ஓடும் சுதந்திரம் கிடைக்கவே, வண்டி எங்கள் அனைவருடனும் மலையில் தடதடவென சத்தமிட்டது. உயிர் தப்பிப் பிழைப்போம் என்று ஒருவரும் நினைக்கவில்லை. வண்டி உருளும் வேகத்தில் அந்தக் குடிகாரன் மகிழ்ச்சியடைந்து, சவாரியை முழுவதுமாக ரசித்தான். வண்டி மலை அடிவாரத்தை வந்தடைந்ததும் ஒவ்வொருவரின் மூட்டுகளும் முறிந்துவிடும் என உணரும் அளவுக்கு உடல் எலும்புகள் சலசலத்தன! ஏழை, வயதான குஸ்தாஜி இந்த உல்லாசப் பயணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டார்.

எனது மஸ்த் பயணத்தின் போது, மண்டலி அல்லது பயணத்தில் பங்கெடுத்த எவர் மீதும் நான் இரக்கம் காட்டுவதே இல்லை. அதி வேகத்தில் மஸ்துகளைக் கண்டுகொள்ள வேண்டும் என்பதுதான் எனது ஒரே யோசனை. சில நேரங்களில், நாங்கள் பல மைல் தூரம் நடந்து சென்றதால், இறுதியில், எங்கள் இடுப்பும் தொடையும் இணையும் இடம் புண்ணாகி வலித்தது. ஈரப்பதமான உளுந்து மாவை புண் பகுதிகளுக்குப் பூசுவது கிராமத்து வைத்தியம். ஒருமுறை மண்டலி அதை என் உடலில் தடவ, நாங்கள் அனைவரும் சோர்வாக இருந்ததால், அதை சுத்தம் செய்யாமலே தூங்கச் சென்றோம். மறுநாள் காலையில் என் உடலில் காய்ந்து ஒட்டிக்கொண்ட மாவை அகற்ற, மண்டலி நரக வேதனையை அனுபவிக்க வேண்டியதாயிற்று.

பைதூல், காக்கா இருவரும் பிரதான மஸ்த் வேட்டைக்காரர்கள். அவர்கள் எப்பொழுதும் மஸ்துகளைக் கொண்டு வருவதில்லை. சில சமயங்களில் பைத்தியக்காரர்களையும் அழைத்து வந்ததுண்டு.

பாபா நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்:

காக்காவும், பைதூலும் அந்த மனிதன் ஒரு மஸ்தா அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பதில் எந்நேரமும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர்! காக்கா, தான் மஸ்த் என்று நினைத்து அழைத்து வந்த ஒரு மனிதனை, அவன் ஒரு பைத்தியக்காரன் என்று பைதூல் கடுமையாக முரண்பட்டது உண்டு!

மஸ்துகள் தங்களுக்குள் ஓர் அன்பின் எரிமலையை உள்ளடக்கி வாழ்பவர்கள். ஒரு மஸ்த் பீடிகளைப் புகைத்து, பின்னர் அவற்றை என்னிடம் வழங்கியபோது, நான் அவற்றைப் புகைக்கத் தவறியதில்லை, ஏனெனில் ஒரு மஸ்த் எதை வழங்கினாலும், அதை நான் மறுக்க மாட்டேன். எனக்கு மயக்கம் வரும் வரை பீடியைக் கொடுத்துக்கொண்டே இருக்க, கடைசியில் அதை ஒரே ஒரு முறை புகைத்து தூக்கி எறிந்து வந்தேன்.

இரவில் மஸ்துகளை சந்திக்கச் செல்வதை நாங்கள் வழக்கமாகக் கொண்டிருந்தோம், ஏனெனில் அந்த நேரத்தில் அவர்களைப் பின்பற்றும் நபர்களிடமிருந்து எந்தத் தொந்தரவும் இராது என்பதில் நாங்கள் உறுதியாக இருந்தோம். பகலில் நாங்கள் பயணம் செய்து, இரவில் மஸ்துகளை சந்தித்தோம். இதனால், மண்டலிக்குத் தூக்கம், ஓய்வு என்பது மிகவும் அரிது.

ஒருமுறை, இந்தப் பயணங்களின் போது, அரிதாக அமைந்த ஓர் இரவில், ஓய்வுக்காக அரசு விடுதிக்கு வந்தோம். நிர்வாக அதிகாரி அதில் தங்கி வந்ததால், நாங்கள் அங்குத் தங்க அனுமதிக்க முடியாது என்று காவலாளர் கூறவே, நீண்ட வாக்குவாதத்திற்குப் பின்னர், அந்த அதிகாரி அனுமதி வழங்கினால் தங்குவதற்கு அறை ஒன்றைத் தருவதாக அவர் ஒப்புக்கொண்டார். மண்டலியில் ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டதும், நாங்கள் அனைவரும் ஓர் அறையை ஆக்கிரமித்தோம். அப்போது இரவு 9:00 மணி, அனைவரும் ஒரே நேரத்தில் தூங்கச் சென்றதில் மிக்க மகிழ்ச்சியடைந்தோம். பக்கத்து அறையில் தங்கியிருந்த அதிகாரி தனது பணியில் மும்முரமாக இருந்ததால், அதீத வெப்பம் காரணமாக மின்விசிறி எழுப்பிய ‘கிரீச்’ என்ற ஓசை, எனக்குத் தொந்தரவாக இருந்தது. மின்விசிறியை நிறுத்தக் கூறுமாறு எரச்சை அனுப்பி வைத்தேன். அதிகாரி எங்கள் துணிச்சலைக் கண்டு எரிச்சலடைந்தாலும், இறுதியாக அதை அணைக்க ஒப்புக்கொண்டார். ஆனால் சிறிது நேரத்தில், அறையில் அவரது அசைவுகளின் ஓசை தாங்க முடியாமல் இருந்ததால், அதைத் தவிர்க்குமாறு கூறி எரச்சை மீண்டும் அனுப்பி வைத்தேன். பொறுமையை இழந்து, அதன் உச்சத்தை எட்டிய அந்த அதிகாரி, சீற்றத்தில், விடுதியை விட்டு எங்களை வெளியேற்ற முடியும் என்பதை மறந்து, அமைதியாக இருக்குமாறு நாங்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். மறுநாள் காலையில், அவருடைய கோபத்திற்கு நான்தான் காரணம் என்று தெரிந்திருந்தும், காவலாளிக்கு ஆச்சரியமளிக்கும் விதத்தில், அதிகாரி அவரது மரியாதையைச் செலுத்த என்னிடம் வந்தார்.

எரச் கூறினார், “பாபாவின் கட்டளைகளுக்கு இணங்க, அவர் ஓய்வெடுக்கும் வேளையில், மண்டலி எழுப்பும் சிறிய ஓசையைக் கூட அவர் தாங்குவதில்லை; இருப்பினும், இதுபோன்ற சுற்றுப்பயணங்களின் போது, ரயில் நடைமேடைகளில் தூங்கிக் கொண்டிருந்தாலும், ரயில்கள் நகர்வதால் அவருக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது. ஒருமுறை, மண்டலியுடன் பாபா ஒரு நடைமேடையில் தூங்கிக் கொண்டிருந்தார்; ஒரு திருடன், காவல்துறையினரிடமிருந்து தப்பிப்பதற்காக, பதுங்கிக் கொண்டு எங்களுக்கிடையே நுழைந்து தூங்கினான்; அதுபோல, பாபா காரில் பயணிக்கும் போது, அது எப்பொழுதும் மண்டலி மற்றும் பல்வேறு பொருட்களால் நிரம்பியிருக்கும்; இருந்தும், பாபா காரை நிறுத்தி, அவ்வப்போது சாலையில் செல்லும் முதியவர் அல்லது வயதான பெண்மணிக்கு இடம் கொடுக்கத் தவறியதில்லை.”

எரச் தொடர்ந்து கூறினார், “ஒருமுறை காரில் ஓர் அங்குலம் கூட இடமில்லாத நிலையில், நான் அதைக் கண்டு முறையிட்டு, சீற்றமடைந்த அதே வேளையில், பாபா வழிப்போக்கர் ஒருவருக்கு இடம் கொடுக்க விரும்பினார். பாபாவிடம், ‘நான் நடந்து வருகிறேன்; இந்த மனிதன் என் இடத்தை ஆக்கிரமிக்கட்டும்’ என்றேன். பாபா எங்களது பொறுமை, அன்பு மற்றும் நம்பிக்கையை எப்பொழுதும் தீவிர சோதனைக்குள்ளாக்கினார்.

பாபா அப்போது தொடர்ந்தார்:

**ஒருமுறை நெரிசலான மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டியில், தூங்குவதற்காக எனக்கு சிறிது இடம் கொடுக்கும் நோக்கத்தில், மண்டலி நின்றுகொண்டிருக்க வேண்டியிருந்தது. அங்கே நின்று கொண்டிருந்த இதர பயணிகள், ‘நான் ஏன் தூங்க வேண்டும்’ என எதிர்ப்புத் தெரிவித்தனர். எனக்குக் கொடுத்த அந்த இருக்கைகள் மண்டலியின் இடம் என்றும், அதனால் மோதிக்கொள்வதற்கு எந்தத் தேவையுமில்லை என்றும் மண்டலி விளக்க முயன்றனர். சீற்றம் அடங்கியதும், நான் எழுந்து ஒரு முதியவருக்கு அந்த இருக்கையைக் கொடுக்க முன்வந்தபோது, இதர பயணிகளுக்கு இது அதிக கோபத்தை ஏற்படுத்தவே, மீண்டும் ஒரு வாக்குவாதம், மோதல் தொடங்கியது.**

**ஒருமுறை** (குஜராத் மாநிலத்தில்) **நாடியாட் ரயில் நிலையத்தில், ரயில் பெட்டி நிரம்பி வழிந்தது; பைதூல் அதன் வாசலில் நின்று கொண்டிருந்தார். ஏதோ ஓர் இடத்திற்கு மேயராக இருந்த ஒரு நபர், தவறான நுழைவாயில் வழியாக, ஏற்கனவே நிரம்பியிருந்த ரயில் பெட்டிக்குள் நுழைய முயன்றார். பைதூல் அதைத் தடுக்கவே, அங்கு ஏற்பட்ட சலசலப்பில், மேயர் நடைமேடையில் தடுக்கி விழுந்தார். அவர் காவல்துறைக்கு அழைப்பு விடுத்ததும், உள்ளூர் காவல்துறையினர் சம்பவத்தை நேரில் பார்த்த அனைத்து பயணிகளிடமிருந்தும் வாக்குமூலத்தை சேகரிக்கத் தொடங்கினார். ஏறக்குறைய ஒரு மணி நேரம் ரயில் நிறுத்தப்பட்டது. இறுதியாக, காவலர், ரயிலில் ஏறுமாறும், ரயில்**

நகர்ந்தபோது தொடர்ந்து வாக்குமூலங்களை சேகரிக்குமாறும் கேட்டுக்கொண்டார். ரயில் நாங்கள் இறங்கும் இடத்தைச் சென்றடைந்ததும், நானும், மண்டலியும் இறங்கி நடந்தோம், அதே நேரத்தில் நெரிசலான பெட்டியில் குற்றம் சாட்டப்பட்டவர் யார் என்பதை காவல்துறையினர் இன்னும் உணரவில்லை!

சமீபத்தில் நிகழ்ந்த உலகப் போரில், ரயில்வேயின் பல பெட்டிகள் ராணுவ வீரர்களுக்காக ஒதுக்கப்பட்டபோது, ரயிலில் கூட்டம் அதிகமாக இருந்ததால், நானும், மண்டலியும் ஒரு முறை ராணுவத்திற்கான ரயில் பெட்டியில் ஏறினோம். பல வீரர்கள் அதை எதிர்த்த அவ்வேளையில், பிறர் என்னையும் மண்டலியையும் உள்ளே செல்ல உதவினர். உள்ளே இருந்த ராணுவ வீரர்களிடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. ரயில் புறப்பட்டதும், அந்த சூழ்நிலைக்குக் காரணமாக இருந்த நாங்களே, அந்த மோதலை சுவாரஸ்யமாக பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. அடுத்த ரயில் நிலையத்தில் ரயில் நின்றதும், நான் சத்தமாகக் கைகளைத் தட்டி, மோதலை நிறுத்துமாறு அவர்களிடம் சைகையால் தெரிவித்தேன். இரு தரப்பினருக்கும் இனிப்புகளை வழங்கி, பதற்றமான சூழலில் முழு மாற்றத்தை கொண்டு வந்தேன். நாங்கள் இறங்கும் இடத்தை வந்தடைவதற்கு முன்னரே அனைத்து வீரர்களும் மீண்டும் நட்புடன் ஒன்றாக இருந்தனர்.

பாபா, அவருக்குப் பிரியமான மஸ்துகளை நினைவுகூர்ந்து தொடர்ந்து கூறினார்:

எனது மஸ்த் பயணத்தின் போது, நான் தொடர்பு கொண்ட அனைத்து மஸ்துகளில், 50 நபர்கள் என்னை மிகவும் மகிழ்வுறச் செய்தனர். அவர்களில் சட்டி பாபாவும் ஒருவர். நான் அவரை தினமும் 100 முதல் 150 வாளிகள் நிரம்ப தண்ணீரால் நீராட்டினேன்! கடும் குளிராக இருக்கும் குவெட்டாவில், சட்டி பாபா இடுப்பில் ஒரு லங்கோட்டியை மட்டும் அணிந்து நடமாடினார்; அவர் ஒருபோதும் சளி, இருமலால் பாதிக்கப்பட்டதில்லை. அஜ்மீரில், அவரது அறை ஒரு நெருப்புக் கிடங்கு போல் இருந்தாலும், அவர் வெப்பத்தை உணரவில்லை. அவர் வாழ்ந்த இடத்தில் பலர் அவரை வணங்கினர்; அவர் ஆங்காங்கே அலைந்து திரிந்த சாலையில், மக்கள் அவரை வணங்கிய வேளையில், பதிலுக்கு அவர் கீழே குனிந்து, ஒரு சிட்டிகை மண்ணை எடுத்து அவர்களுக்கு பிரசாதமாக வழங்குவதை வழக்கமாகக் கொண்டார்.

ஒருமுறை, பைதூல் ஒரு மேல்நிலை மஸ்த் சிறிது தூரத்தில் இருப்பதாக செய்தி ஒன்றைக் கொண்டு வரவே, நானும் மண்டலியும் அவரைப் பார்க்க இரவில் புறப்பட்டுச் சென்றோம். பைதூல் அங்குச் செல்லும் பாதையை மறந்து, எங்களை வேறொரு வீட்டிற்கு அழைத்துச் சென்றார், அங்கு பர்தா அணிந்த முஹமதியப் பெண்மணிகள், தனிமையில் வாழ்ந்து வந்தனர். மண்டலி இரவில் கதவைத் தட்டியதும், அவர்களால் கடுமையாகக் கண்டிக்கப்பட்டனர்.

அன்று காலை 11:00 மணியளவில், பாபா மதிய உணவிற்காக உரையை நிறைவு செய்தார்; பிற்பகல் சிறப்பு நிகழ்ச்சி எதுவும் இல்லாததால், பாபா, மண்டலியுடன் 'லா ரிஸ்க்' (LA RISQUE) சீட்டு விளையாடினார். விளையாடிக்கொண்டிருந்த வேளையில் ஒருவர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். இந்தக் குறுக்கீட்டால் பாபா சற்று சீற்றமடைந்து, "**சீட்டாட்டத்தின் போதும், நான் அமைதியாக எனது உள் பணிகளில் ஈடுபட்டுள்ளேன், ஆதலால் குறுக்கீடுகளை நான் விரும்பவில்லை**" என்று குறிப்பிட்டார். பாபா மாலை 3:30 மணிக்கு ஓய்வெடுக்கச் சென்றார்.

1963 மே 12 ஞாயிற்றுக்கிழமை காலை பாபா, முதல் முறையாக அவரை சந்திக்க வந்த நபர்களுக்கு தரிசனம் வழங்கினார். டெல்லியில் ஓர் ஆசிரமத்திற்குத் தலைவரான சாது ஒருவர் தரிசனத்திற்கு வந்தார். அவர் பாபாவின் பாதங்களில் தலைவணங்கி, பயபக்தியுடன் அவர் அருகில் தரையில் அமர்ந்தார். "**சாதுவை பின்பற்றுபவர்கள் பலர் இருந்தாலும், அவர் மிகவும் அடக்கமாக இருப்பது சிறப்பிற்குரியது**" என்று பாபா குறிப்பிட்டார்.

பாபா அவரை நோக்கிக் கூறினார், "**எல்லோரிலும் நான் இருக்கிறேன் என்பதே எனது தொடர்ச்சியான அனுபவம். என்னை எங்கும் பார்க்கும் அனுபவம் உங்களுக்கு வேண்டும். ஆன்மீகப் பாதையில் 100 சதவீதம் நேர்மை தேவை. இந்தக் காலத்தில் பல கபட வேடதாரிகள் உள்ளனர், ஏனெனில் எனது மௌனத்தைக் கலைப்பதற்கான நேரம் மிக அருகாமையில் உள்ளது.**"

ஜான்சியிலிருந்து வந்திருந்த பக்தர் ஒருவர், சமீபத்தில், பாபா அவருக்கு எப்படி உதவினார் என்பதை, மனதைக் கவரும் வகையில் விவரித்தார். மகனின் திருமணத்திற்காக டெல்லி செல்ல இருந்த அவரால், திருமண குழுவிற்குத் தங்கும் இடம் ஏற்பாடு செய்ய இயலாத நிலையில், அவர் சில உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்ட பின்னரும், அது மறுக்கப்பட்டது. அவர் அனைத்தையும் பாபாவின் விருப்பத்திற்கு விட்டுவிட்டு அலுவலகத்திலிருந்து வெளியேறி, வாசலை வந்தடைந்ததும், அவர் மீண்டும் அழைக்கப்பட்டு, 'திருமண விழாவிற்காக ஒரு வீட்டை ஏற்பாடு செய்ய முடியும்' என்ற தகவல் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அவரது மகன் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியதால், அவரது இடது கால் செயலிழந்தது. நரம்பியல் மருத்துவர்கள் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யுமாறு பரிந்துரைத்தனர்; இருப்பினும், அவர் தனது மகனுக்கு அறுவை சிகிச்சை செய்வதில் பெரும் அச்சத்தை வெளிப்படுத்தினார். நொண்டி நடைபோட்டு வந்த மகனை பாபா அழைத்து, ஒரு பாக்கெட் இனிப்பு மிட்டாய்களை வழங்கி, தினமும் அவருடைய நாமத்தைத் திரும்பத் திரும்ப மொழிந்து, ஒரு சிறு துண்டு இனிப்பை உண்ணுமாறு அறிவுறுத்தினார்.

மீண்டும் சாதுவை நோக்கி பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

**அகங்காரத்தில் இரண்டு வகைகள் உள்ளன - ஒன்று, 'நான்' எனும் இயல்பான** (சாதாரண) **அகங்காரம், மற்றொன்று, 'நான் கடவுள்' எனும் தெய்வீக அகங்காரம். இறை உணர்வை எய்திய ஒருவர், மக்கள் நம்பினாலும் நம்பாவிடிலும், 'நான் கடவுள்' என்கிறார். அவர் அதை உறுதிப்பட பறைசாற்ற வேண்டும். நீங்கள் ஒரு பெண் என்று மக்கள் உங்களிடம் கூறினால், நீங்கள் ஓர் ஆண் என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருப்பீர்கள். அதுபோலவே, இறை உணர்வை எய்திய ஒருவர், தான் கடவுள் என்று உறுதிப்படக் கூற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். நான், எனது மௌனத்தைக் கலைக்கும்போது, நான் கடவுள் என்பதை மக்கள் உணர்வார்கள். நான், எனது மௌனத்தைக் கலைக்கும் முன்னர் என்னைக் கடவுள் என அடையாளம் கண்டுகொள்பவர்கள் பாக்கியவான்கள்.**

**உணர்வு நிலையின் ஆறாவது ஆன்மீகத் தளத்தில், அன்பர் கடவுளுடன் ஒன்றிணைவதற்காக ஏங்குகிறார். இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான அன்பர்களில் ஒருவர் இறையுணர்வை எய்துகிறார். இவ்வண்ணம் இறைநிலையை எய்திய ஆயிரக்கணக்கானவர்களில், அபூர்வமாக ஒருவர் பூமியில் பரிபூரண குருநாதராக வருகிறார்.**

**ஒருவர், தான் கடவுள் என்றும், அனைவருடனும் ஒன்றறக் கலந்தவர் என்றும் அறிவுபூர்வமாக நம்பலாம். ஆனால் கடவுளை எங்கும், எதிலும் காண்பதற்கு முன்னர், ஒருவர் ஆறு 'முகத்திரைகளை' அகற்ற வேண்டும். அப்போது, இந்த உலகை உங்கள் பௌதீகக் கண்களால் பார்ப்பதை விட, அந்தப் பார்வை மிகத் தெளிவாக இருக்கும். 'நான் கடவுள்' என்று சொல்வது எளிது; ஆனால் அதை அனுபவிப்பது மிகவும் கடினம்.**

பூனா மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் சதாஷிவ் ஜி.பல்ஸுலே (POONA DISTRICT CRICKET ASSOCIATION, SADASHIV G. PALSULE) மற்றும் தீவிர கிரிக்கெட் ரசிகரும், புகைப்பட கலைஞருமான டி.டி. ரெகே (D.D. REGE) இருவரும் அன்று குருபிரசாத்திற்கு வந்து, பூனா சங்கத்துடன் இணைந்த பல கிரிக்கெட் அணிகளுக்கு பாபா பரிசுகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். பாபா கிரிக்கெட் விளையாட்டை நேசிப்பதை இருவரும் அறிந்திருந்தனர், மேலும் அவரை சந்திப்பதில் கிரிக்கெட் வீரர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என இருவரும் சுட்டிக்காட்டினர்.

26ஆம் தேதி மதியம் 2 மணி முதல் 3 வரை பரிசுகளை விநியோகிக்க பாபா இணக்கம் தெரிவித்தார். அவர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், **"நான் இப்போது கிரிக்கெட் விளையாடுவதில்லை - ஆனால் கிரிக்கெட்டை உள்ளடக்கிய உலகளாவிய தெய்வீக விளையாட்டை விளையாடுகிறேன்"** என்றார்.

அன்று பிற்பகலுக்குப் பிறகு, பாபா கூறினார், **"நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, உலகில் மிகப் பெரிய எழுச்சி உருவாகும். எனது மௌனத்தைக் களைந்த ஒரு வருடத்தில், நான் என் உடலைக்**

**கைவிடுவேன். நான் ஒரு கடினமான 'பணி ஏவுனர்', எனவே நீங்கள் அனைவரும் தைரியத்துடன் அனைத்தையும் எதிர்கொள்ள வேண்டும். பல ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனால் எதிர்வரும் ஆண்டுகள் மிகவும் முக்கியமானவை."**

சில தனிப்பட்ட பிரச்சினைகளால் பக்தர் ஒருவர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார். பாபா அவரிடம், "**100 சதவிகிதம் எனது விருப்பத்திற்கு அடிபணிந்தால், அனைத்தையும் நான் பார்த்துக் கொள்வேன்**" என உறுதியளித்தார். முயற்சி செய்கிறேன் என்று அந்த மனிதர் பதிலளித்தார்.

அப்போது பாபா, "**கடந்த 2,000 ஆண்டுகளில் ஹ∴பீஸைப் போன்ற கவிஞர் வேறு எவரும் இல்லை. அனைத்து உருது மற்றும் பாரசீக கவிஞர்களும் அவரது படைப்புகளிலிருந்து உத்வேகத்தை அடையப் பெற்றவர்கள்**" என்று ஹ∴பீஸைப் பாராட்டினார்.

இப்படி உரையாடல் தொடர்ந்த வேளையில், பத்து மாதக் குழந்தை ஒன்று பாபாவின் காலடியில் விளையாடிக் கொண்டிருந்தது. அது, பாபாவின் சத்ராவை இறுகப் பற்றிக்கொண்டு, அங்கும் இங்கும் இழுத்துக்கொண்டிருந்தது. அப்போது பாபா இவ்வாறு குறிப்பிட்டார், "**மஸ்துகளும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறியாமலேயே என்னுடன் விளையாடினர்; அவர்களில் சிலர் தங்கள் நீண்ட விரல் நகங்களால் எனது சதையில் குத்த முயற்சித்தனர்! மஸ்துகள் வளர்ந்த குழந்தைகள்.**"

அன்று மதியம் 2:00 மணிக்கு அஹமதுநகரைச் சேர்ந்த ஹபீப் (HABIB) கவாலி பாடகரின் இசை நிகழ்ச்சி இரண்டு மணி நேரம் நடைபெற்றது. பாபா அதை மிகவும் ரசித்து ஹபீபிற்கு தனது கைக்குட்டையைக் கொடுத்தார். மாலை 4:00 மணியளவில், அனைவரும் பாபாவின் முன்னால் வந்து அவரது கையை முத்தமிட்டனர்.

அடுத்த நாள், மெஹரா, மணி, கோஹெர் ஆகியோருடன் ஜாம்நகர் இல்லத்தில், பாபா ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தனது மும்பை அன்பர்களை சந்தித்தார்.

வில் பேக்கெட், அவரது மனைவி மேரி காலமானதைத் தொடர்ந்து சில மாதங்கள், லண்டனில், அவர் இல்லாமல் வாழ்வதில் பல சிரமங்களை சந்தித்து, உடல்நலம் குன்றி காணப்பட்டார். அடுத்த வருடம் அவருக்கும் மேரிக்கும் 50ஆவது திருமணநாள். அவருக்கு ஆறுதல் கூறும் விதத்தில், பாபா பல தொலைத்தந்திகளையும் செய்திகளையும் ஆதி ஜூனியர் மூலம் அனுப்பினார், குறிப்பாக, "**நீங்கள் தனியாக இல்லை; நான் உங்களோடு இருக்கிறேன்.**"

அவரது பலவீனமான உடல்நிலை காரணமாக, வில் பேக்கெட் கிழக்கு-மேற்கு சகவாசத்தில் கலந்து கொள்ள முடியவில்லை; பாபா அவருக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பி, அவருடைய அன்பை உறுதிப்படுத்தினார். மோலி ஈவ்

(MOLLIE EVE) என்ற அன்பர் மூலமாக, பாபா தரிசனத்தின் போது அணிந்திருந்த மாலையையும் வில் பேக்கெட்டிற்கு அனுப்பி வைத்தார்.

1963 மே 15 அன்று, 83 வயதில், வில் பேக்கெட் லண்டன் மருத்துவமனையில் அமைதியான மரணத்தை சந்தித்தார். லண்டனிலிருந்து மோலி ஈவ் அனுப்பிய தொலைத்தந்திக்கு பதிலளிக்கும் விதத்தில், பாபா இந்தச் செய்தியை அனுப்பினார்: **"வில்லின் மறைவு தொடர்பான உங்கள் தொலைத்தந்தி பெறப்பட்டது. என் அன்பான இறை தூதர்களான வில்-மேரி பேக்கெட் என்னிடம் வந்து, என்றென்றும் என்னில் வாழ்கிறார்கள்."**



மெஹர் பாபாவின் இறைத் தூதர்கள் - வில் & மேரி பேக்கெட்
(MEHER BABA'S ARCH-ANGELS, WILL & MARY BACKETT)

மெஹர் பிரபு முன்னிலையில் அந்த வார இறுதியை கழிக்க மே 17ஆம் தேதி ஆந்திராவிலிருந்து சுமார் 200 பேர் பூனாவிற்கு வந்தனர். முதல் நாள், ஆந்திராவில் நிறுவப்பட்ட பல மையங்கள் மெஹர் பாபாவின் பெயரில் சிறப்பாக செயல்படுவது குறித்து, குருபிரசாத்தில் விவாதம் ஒன்று நடந்தது. ஆந்திராவுடனான அனைத்து கடிதப் போக்குவரத்துக்கும் பொறுப்பாக இருந்த ஆதி சீனியரும், இந்த விவாதத்தில் பங்கெடுத்தார்.

அடுத்த நாள் காலை பாபா ஆந்திராவிலிருந்து வந்த ஒவ்வொருவரையும் ஆரத் தழுவினார். அந்தக் குழுவினர் பாபாவின் இரண்டு ஆளுயர அளவிலான சித்திரங்களைக் கொண்டு வந்திருந்தனர். பாபா முந்தைய நாள் விவாதத்தின் தலைப்பைக் குறித்து, பாபா-பணியை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் சுருக்கமாக விவரித்தார்: "**என் அன்பர்களிடையே கோபம், பொறாமை, வெறுப்பு போன்ற உணர்வுகள் அறவே கூடாது. நீங்கள் அனைவரும் ஒரே நேரத்தில் குரல் எழுப்பி பேசும் வரை, மேலும் பேசுவதை நடைமுறைப்படுத்தாத வரை, எந்த முடிவும் எடுக்க முடியாது. உங்கள் அனைவரின் இதயங்களும் எனது பணியில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்; ஒருவர் பிறரிடம் என்ன செய்யச் சொல்கிறாரோ, அதற்கிணங்க அவரும் வாழ வேண்டும்; இல்லையேல், அது அவர்களின் இதயங்களை ஒருபோதும் தொடாது.**"

'**ஆந்திராவில் பாபாவின் பணியைக் குறித்து பிறர் திருப்தியாக உள்ளனரா**' என்று பாபா பிரதான சேவகர்களில் ஒருவரிடம் கேட்டபோது, அந்த நபர் எதிர்மறையாக பதிலளித்தார். பாபா கூறினார், "**பாசாங்குத்தனம் பாபாவின் பணியை பயனற்றதாக்குகிறது! எனக்காகப் பணிபுரியும் போது, தூய்மையான இதயமும், பிறருடனான ஒற்றுமை உணர்வும் இன்றியமையா தேவை.**"

பிரதான சேவகர்களில் ஒருவர் மனமார மன்னிப்புக் கோரி, இனிமேல் பிற சேவகர்களுடனான உறவில் மிகவும் கவனமாக இருப்பதாக உறுதியளித்தார்; அவர் தனது தவறை ஒப்புக்கொண்டதால், பாபா அவர் மீது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். வேறொரு சேவகர், பாபாவின் கட்டளைகளைப் பின்பற்ற முயற்சிப்பதாகக் கூறியதும், பாபா அவரைத் திருத்தினார்: "'**முயற்சி செய்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே இருக்காதீர்கள், அதைச் செய்யுங்கள்; அப்படியே இருங்கள்; முயற்சி செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டே போவதில் பலனில்லை, உங்கள் காலத்திற்கு முன்பே வயதாகிவிடுவீர்கள். உண்மையை அறிந்த அடுத்த கணமே, நீங்கள் வெறுமனே முயற்சிக்காமல், அதைச் செய்யுங்கள்! ஒன்று அல்லது இரண்டு முறை முயற்சி செய்யுங்கள், ஆனால் அதை வாழ்நாள் பழக்கமாக்காதீர்கள்.**"

பாபா, சதாஷிவ் பாட்டீலிடம் பாபா-பணியைச் செய்வது எப்படி என்று கேட்டதற்கு சதாஷிவ், "நாம் குறைவாகப் பேசி, அதிகமாகப் பணிபுரிய வேண்டும். பாபா-பணியில் ஆழமாக மூழ்கும் போது, அர்த்தமற்ற சிறு சிறு வாக்குவாதங்களுக்கு நேரமிராது" என்று பதிலளித்தார்.

பாபா கூறினார், "**ஒன்பது மாதங்களில் நான் எனது மௌனத்தைக் கைவிட விரும்புகிறேன்; இந்தத் தருணத்தை எதிர்நோக்கி நீங்கள் அனைவரும் தீவிரமாக உழைக்க வேண்டும். நீங்கள் பிறருக்குச் சொல்வதை செயல்படுத்தி வாழுங்கள். 100 சதவிகிதம் நேர்மையாக இருங்கள் அல்லது உங்கள் வாயைத் திறவாதீர்கள்! நீங்கள் நேர்மையாக வாழ்கிறீர்களா, உள்ளதை உள்ளபடி செய்கிறீர்களா என்பதற்கு உங்களின் உள்ளமே உண்மையான நீதிபதி. அவதார புருஷர் மாயையில் நிறுவப்பட்ட அனைத்து சட்ட திட்டங்களுக்கும் அதிபதி என்றாலும், அவர் அவற்றைத் துல்லியமாகக் கடைப்பிடிப்பவர்.**"

முஹமது நபியின் வாழ்க்கையில் நீண்ட காலத்திற்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை எடுத்துரைத்து, 'ஒருவர் எப்படி வாழ வேண்டும் என்று பிறருக்கு உபதேசிப்பதை' பாபா விளக்கிக் கூறினார்:

**முஹமது பேரீச்சம்பழம் உண்பதைப் பெரிதும் விரும்பினார். ஒரு நாள் ஒரு தாயார் தனது மகனை அவரிடம் அழைத்து வந்து, சிறுவன் தினமும் நிறைய பேரீச்சம்பழத்தை உண்டு வயிற்றுப்போக்கால் அவதிப்பட்டான் என்று புகார் கூறினார். சிறுவன் தனது பெற்றோருக்குக் கீழ்ப்படிய மறுத்து, 'முஹமது சொன்னால் மட்டுமே அதற்கு செவிமடுப்பேன்' என்று அவர்களிடம் கூறினான். முஹமது சிறுவனிடம் பேரீச்சம்பழம் சாப்பிட வேண்டாம் என்று சொல்ல முடியவில்லை, ஏனெனில், அவரே அவற்றை மிகவும் விரும்பி நிறைய உண்டு வந்தார். எனவே, சில நாட்கள் கழித்து தாயையும் மகனையும் திரும்ப வருமாறு கூறி அனுப்பினார். இதற்கிடையில், முஹமது பேரீச்சம்பழம் உண்பதை நிறுத்திவிட்டார்; தாயார் சிறுவனுடன் வந்ததும், அவனிடம் பேரீச்சம்பழம் சாப்பிட வேண்டாம் என்று கூறவே, சிறுவனும் உடனடியாகக் கீழ்ப்படிந்தான்.**

**பிறரிடம் பொய் சொல்லாதே என்று சொன்னால், உயிரை விலையாகக் கொடுத்தேனும் பொய் சொல்லக் கூடாது; இல்லையேல், அது பாசாங்குத்தனமாக இருக்கும். எனது சேவகர்கள் 100 சதவீதம் நேர்மையாகவும், எனது பணியை அனைத்து இதயங்களும் ஒன்றிணையும் விதத்திலும் செய்ய வேண்டும். இரு தரப்பினரும் விட்டுக்கொடுக்க வேண்டும்; அப்போதுதான் பாபா-பணியில் எந்த இடையூறும் இருக்காது.**

பழைய ஆந்திரா சேவகர் ஒருவர், தன்னைப் போன்ற சேவகர்கள் கிராமம் கிராமமாகச் சென்று, பாபாவைப் பற்றி மக்களிடம் எடுத்துரைக்க, மோட்டார் வாகனம் மிகவும் தேவையான ஒன்று என்று பாபாவிடம் விவரித்த போது, பாபா கேட்டார், "**வாகனத்திற்கு வேண்டிய பணத்தை யார் கொடுக்க வேண்டும்? நான் சில அன்பர்களிடம் கேட்டால், அவர்கள் அதை மனமுவந்து செய்வார்கள்; ஆனால், நான் ஏன் எனது பணிக்காகப் பணம் கேட்க வேண்டும்? நான் ஒன்பது மாதத்திற்குள் எனது மௌனத்தைக் கலைப்பதானால், இந்த வாகனம் அல்லது எனது செய்திகளைப் பரப்பும்**

**திட்டங்கள் அனைத்தும், நான் மௌனத்தைக் கலைத்ததும் செய்யும் பணியுடன் ஒப்பிடுகையில், மிகவும் முக்கியமற்றதாகத் தோன்றும். உங்களிடம் மோட்டார் வாகனம் இல்லையெனில், மாட்டுவண்டியில் பயணம் செய்யுங்கள்; அதுவும் இல்லையெனில், நடந்து செல்லுங்கள். உங்களுக்கு வயதாகி, எனது பணியைச் செய்யும் போது உயிரைத் துறக்க நேர்ந்தால், அது உங்களுக்கு நல்லது..**

**"சுருக்கமாகக் கூறுவதானால், சேவகர்களுக்குள் பொறாமை அல்லது புறங்கூறும் மனப்பான்மை கூடாது. 100 சதவிகிதம் நேர்மையும், நாணயமும் தேவை. வேறொரு சேவகரைப் பற்றி ஏதேனும் சொல்ல வேண்டுமெனில், அவரது முகத்திற்கு நேராக, நேர்மையுடன் அதைச் சொல்லுங்கள், அவருடைய முதுகுக்குப் பின்னால் அல்ல!"** என்று பாபா கூறினார்.

இதைத் தொடர்ந்து, ஆந்திராவை சேர்ந்த பக்தர்கள் பஜனை பாடினர். ஒரு கூட்டத்தில் ஒரு முறை, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"நான் அனைத்திலும் உயர்ந்த உணர்வு நிலையில் இருப்பவன், அதே நேரத்தில் நான் அனைத்து உணர்வு நிலையின் தளங்களிலும் இருப்பதால், உங்கள் அனைவருடனும் ஒன்றறக் கலந்து இருக்கிறேன்.**

**"உங்களோடு உங்களுக்கு இருக்கும் நெருக்கத்தை விட, நான் உங்களுக்கு மிகவும் அருகாமையில் இருக்கிறேன் என்பதை ஞானத்தால் மட்டுமே உணர முடியும். உங்கள் கண்கள் உங்களுக்கு மிக அருகில் இருந்தாலும், உங்கள் முன்னால் கண்ணாடி ஒன்றை வைக்கும் வரை, உங்களால் அவற்றைப் பார்க்க முடியாது. நீங்கள் என்னைப் பார்க்க விரும்பினால், ஞானம் எனும் கண்ணாடியை உங்கள் முன்னால் பிடித்துக்கொள்ள வேண்டும்; இது என் அருளால் மட்டுமே சாத்தியம்."**

அன்று காலை சுமார் 11:00 மணிக்கு ஆரத்தி நிகழ்த்தப்பட்டது; பாபா ஆந்திரா பக்தர்கள் வெளியே சென்று, அரை மணி நேரம் இளைப்பாறுமாறு கேட்டுக்கொண்டார். பின்னர், இதர மையங்களிலிருந்து அன்பர்கள் வந்து, பாபாவின் அருகில் அமர்ந்தனர். பாபா, மனு ஜெஸவாலாவிடம் பஜனைப் பாடல்களைப் பாடச் சொன்னார்; தொண்டை வலி இருந்தபோதிலும் ஆதியும் கஸல் ஒன்றைப் பாடினார்.

அகில இந்திய இந்து மஹாசபாவின் (ஒரு இந்து தேசியவாத அரசியல் கட்சி) தலைவர் பாபாவைப் பார்க்க வந்தவர், அவரிடம் ஒரு செய்தியைக் கோரிய போது, பாபா இவ்வாறு கூறினார்:

**நீங்கள் கடவுளாக மாறும் அளவுக்கு, கடவுளை நேசிக்க வேண்டும்! தன்னலமற்ற சேவையின் மூலம் அந்த அன்பை அடையப்பெற முடியும்; ஆனால் இந்த சேவை, சுயத்தைக் குறித்த எந்த சிந்தனையும் இல்லாமல் உன்னதமானதாக இருக்க வேண்டும். மிகவும் முக்கியமானது இறை அனுபவமே தவிர, வெறும் அறிவார்ந்த புரிதல் அல்ல. ஒருவர், அவருடைய**

**மனதையும் கடந்து செல்ல வேண்டும்! உங்களுக்குள் நிலைகொண்டிருக்கும் யதார்த்தத்தை, உண்மைப்பொருளை நீங்கள் காணலாம்; ஆனால், இதற்கு நீங்கள் உங்களுக்குள்ளே ஆழமாக மூழ்க வேண்டும்.**

**அறிவுத்திறன்** (கற்றறிந்து, சிந்திப்பது) **மூலம் கடவுள் உளதாயிருப்பதை நம்புவது சாத்தியம்; ஆனால் கண்ணால் காண்பதால் வரும் உறுதியான நம்பிக்கை சிறந்தது. மேலும் உண்மையில் கடவுளுடன் ஒன்றிணைவதன் மூலம் விளையும் உறுதிப்பாடு இதைவிட மிகச் சிறந்தது. கடவுளுடன் ஒன்றிணைந்த பின்னர், ஆயிரத்தில் ஒருவர் இந்த பூமியில் சாதாரண மனித உணர்வோடு, பரிபூரண குருநாதராக வருகிறார்.**

மஹாசபையின் தலைவர் விரும்பத்தகாத, திமிர்பிடித்த மனப்பான்மையைக் கொண்டிருந்தார்; மெஹர் பாபா அரசியல் சமாச்சாரங்களில் ஒருபோதும் நுழைவதில்லை என்பது அவருக்குத் தெரிந்திருந்தும், அடுத்த நாள் அவரது சொற்பொழிவுக்காக ஒரு சிறப்புச் செய்தியை வழங்குமாறு பாபாவை வற்புறுத்த முயன்றார். பாபாவின் முன்னிலையில் சிறிது நேரம் அமரவும் நேரம் இல்லாமல், பாபாவை சந்தித்த அடுத்த கணமே திரும்பிச் சென்றார். அப்போது ஏளூரிலிருந்து சில அன்பர்கள் வரவே, பாபா அவர்களைத் தழுவினார்.

மதிய உணவுக்குப் பிறகு, பிரதான வரவேற்பறைக்குப் பக்கத்தில் அமைந்த அறையில், நெருங்கிய அன்பர்கள் சிலர் ஒன்றுகூடினர். இந்த நேரத்திலும் பாபா மதிய உணவை உண்ணாமல், தமது அன்பர்கள் சென்ற பின்பு, மாலை 6:00 மணிக்கு சாதமும் பருப்பும் உண்பதை வழக்கமாகக் கொண்டார். பக்கத்து அறையில், டாக்கே மற்றும் பிரபோத் (தேஷ்முக்கின் மகன்) பாபாவை மகிழ்விக்கும் சில வேடிக்கையான கதைகளை எடுத்துரைத்தனர்.

ஒரு கட்டத்தில் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், “**சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள், இந்த உலகில் மதிப்பையும் மரியாதையும் பெறுகிறார்கள். ஆனால், அத்தகைய நபர்களுக்கு ஆன்மீக மதிப்பும், அந்தஸ்தும் இல்லையென்றால், சூட்சும மற்றும் ஆழ் மன உலகங்களிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.**” தொடர்ந்து பாபா கூறினார், “**என்னை நேசிப்பவர்களுக்கு நான் அடிமை.**”

மதியம் 1:00 மணிக்கு, பாபா மண்டபத்திற்கு வருகை தந்தார். ஏராளமான பக்தர்கள் பஜனைகள் பாடினர். ஆந்திராவைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் மிகவும் சிறப்பாகப் பாடினர்; அவர்கள் தெரு இசைக்கலைஞர்கள், கிராமம் கிராமமாகச் சென்று, பாபாவைப் புகழ்ந்து பாடல்களைப் பாடினர். பாதுகாப்பு நிதிக்கு உதவும் வகையில் பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வது வழக்கம். ஆரத்திக்குப் பிறகு, பாபா கூறினார்:

**நான் மிகவும் எல்லையற்றவனாக இருப்பதால், எனது சொந்த முடிவிலா தன்மையை நானே அறிய முடியாது. அது போல், எனது நிழலாகிய**

படைப்பும் எல்லையற்றது; ஒருமுறை என்னிடமிருந்து வெளிவந்த அனைத்தையும் - அனைத்து பிரபஞ்சங்களையும் - எனது பௌதீகக் கண்களால் கணக்கிட முயன்று, தோல்வியை சந்தித்தேன்.

நான் சொல்வதில் ஒரு குறுகிய அளவை விஞ்ஞானிகள் விரைவில் கண்டுபிடிப்பார்கள். பிரபஞ்சத்தில் மனிதர்கள் வாழும் 18,000 உலகங்கள் உள்ளன. சிலவற்றில் மக்கள் மிகவும் புத்திசாலிகளாகவும், சிலவற்றில் சற்று குறைவான திறனுடனும், இன்னும் சில உலகங்களில் அதைவிடக் குறைவான அறிவுத்திறனுடனும் உள்ளனர். இவ்வுலகங்களில் வாழும் எவருக்கும் சூட்சும அல்லது ஆழ் மன உலக அனுபவங்கள் இல்லை. அந்த கிரகங்களில் வாழும் மனிதர்கள் இப்பூவுலகில் பிறவி எடுத்து, சூட்சும மற்றும் ஆழ் மன உலகங்களை அனுபவிக்க வேண்டும்.

இது ஓர் அவதார யுகம்; நான் மௌனம் கடைப்பிடிப்பதால் இது ஒரு சிறப்பு அவதார காலகட்டம். அடுத்த ஒன்பது மாதங்களில், நான் எனது மௌனத்தைக் கலைப்பதற்கு முன்னர், அறிவியலும், இறை-எதிர்ப்பு சக்திகளும் அதன் உச்சத்தை எட்டும். அதற்கு இணங்க, எனது வெளிப்பாடும் மிகப்பெரியதாக இருக்கும். எனது மௌனத்தைக் கலைப்பது, நூறாயிரக்கணக்கான அணுகுண்டுகள் வெடிக்கும் சக்திக்கு நிகரானது! நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, நான் யார் என்பதை முழு உலகமும் உணரும். அதன் தாக்கம் உலகத்தை அதன் ஆன்மீக மந்த நிலையிலிருந்து வெளியேற்றும்; மேலும் என்னை நேசிக்கும், எனது தொடர்பில் இருக்கும் அனைவரின் இதயங்களையும் அழுத்தித் திறக்கும். நான் எனது மௌனத்தைக் கலைக்கும் வேளையில் இதுவரை நடக்காதது நடக்கும்.

பிற கிரகங்களிலிருந்து மிகவும் புத்தித்திறன் படைத்த ஆன்மாக்கள் இங்கு வருவதால், இன்று அறிவியல், நடைமுறையில், அதன் உச்சத்தை நோக்கிச் செல்கிறது. இந்த அவதார காலகட்டத்தில், மனித உடலை விரும்பும் ஆன்மாக்கள் வேறு உலகங்களிலிருந்து பூமியை நோக்கி இடம்பெயர்கின்றன; இதன் காரணமாக நமது மக்கள்தொகை வேகமாக அதிகரித்து வருகிறது. இவை அனைத்தும் காலங்காலமாக முடிவில்லாமல், கடல் நீர் மேலும் கீழுமாகி, ஓயாத அலைகள் வீசுவது போல, மீண்டும் மீண்டும் நிகழ்ந்து வருகின்றன. காலப்போக்கில் இந்த பூமியும் விரயமாகும் தருணத்தில் இது போன்ற வேறொரு பூமி அதன் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள்: அனைத்தும் மாயை, கடவுள் மட்டுமே உண்மையானவர், நான் மனித உருவில் வருகை தந்த கடவுள். பிற கிரகங்களில் மனித இனம் வாழ்கிறது, அனைத்தும் அளவிறுதியற்றது என்றும், அன்பும் இதயமும் இருக்கும் இடத்தில் அறிவுத்திறனுக்கு முற்றிலும் இடமில்லை என்பதையும் விஞ்ஞானிகள் அறிந்து கொள்வார்கள்.

மும்பை குழு மாலை 3:00 மணிக்கு வந்தது. பாபா அவர்கள் வர வேண்டாம் என்று முன்பே அறிவித்திருந்தாலும், அவரே அவர்களை அழைத்து அரை மணி நேரம் அவர்களுடன் செலவிட்டார். இந்த சந்திப்பில், பிரார்த்தனையைப் பற்றி பாபா விளக்கினார்: “**பிரார்த்தனை செய்யும் போது, மக்கள் மேல்நோக்கிப் பார்க்கும் போக்கு உள்ளது, ஆனால் ஏன்? எதற்காக? அதற்கு எந்தக் காரணமும் இல்லை. அங்கு எதுவும் இல்லை. கடவுள் உங்கள் உள்ளத்தில் வாழ்கிறார். எனவே உள்ளத்தின் உள்ளிருந்து பிரார்த்தனை செய்யுங்கள்; உங்கள் இதயத்தை தூய்மைப் படுத்துங்கள். வானத்தில் எதுவும் இல்லை!**”

ஒரு நாள் பாபா, எவரேனும் பிரார்த்தனையை மொழியுமாறு கேட்டுக் கொண்டபோது, பக்தர் ஒருவர் இவ்வாறு தொடங்கினார்: “கடவுளே, எனக்கு ஆரோக்கியம் கொடுங்கள், நான் உமக்கு சேவை செய்ய நீண்ட ஆயுளைக் கொடுங்கள்...”

பாபா இடையே குறுக்கிட்டு அவரைத் திருத்தினார், “**இது பிரார்த்தனை அல்ல, ஆனால் உங்கள் விருப்பங்களின் பட்டியல்! உண்மையான பிரார்த்தனை, அன்பின் மூலம் அவரைப் புகழ்வதே தவிர வேறொன்றுமில்லை! நீங்கள் மாயையில் இருப்பதை அறிந்த பின்னர், அதை ஏன் மேலும் அதிகமாகக் கேட்க வேண்டும்?**”

உலகில் மாயாவின் பிடி எவ்வளவு வலிமையானது என்பதை விளக்குவதற்கு, மண்டலியில் ஒருவரிடம் இந்தக் கதையை எடுத்துரைக்குமாறு பாபா கேட்டுக்கொண்டார்:

ஒருமுறை ஒரு கோவிலின் வாயிலில் அமர்ந்திருந்த பிச்சைக்காரர் ஒருவர், யாசித்து 100 நையா பைசா சேகரித்த அடுத்த கணமே, அவற்றை ஒரு வெள்ளி ரூபாய் நாணயமாக மாற்றி வந்தார். அவர் 25 வெள்ளி ரூபாய் நாணயங்களை வசூல் செய்த அந்த நேரத்தில், வயதாகிவிட்டதால், விரைவில் உயிரைத் துறக்கப் போகிறார் என்பதை உணர்ந்தார். தனது விலைமதிப்பற்ற நாணயங்களை என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார். அவை அனைத்தும் தனது வாழ்நாள் சேமிப்பு என்பதால், அவற்றை விட்டுப் பிரியக்கூடாது என்று நினைத்தார். அந்த சேமிப்பு, அவருக்குப் பெரு மதிப்பு வாய்ந்ததாகவும், இதயத்திற்கு நெருக்கமாகவும் இருந்ததால், அது அவரது இறுதி உடலுடன் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். ஆனால், உயிரைத் துறந்த பின்பு, தன் உடலிலிருந்து பணத்தை மக்கள் கொள்ளையடித்து விடுவார்கள் என்பதை அறிந்த அவர், அந்த நாணயங்களைத் தன் உடலுக்குள்ளேயே வைத்துக்கொள்ள ஒரு திட்டம் தீட்டினார். 25 வெள்ளி நாணையங்களைக் குவித்து, அனைத்தையும் விழுங்க முயன்ற போது, வாயை அழுத்தி மூட வேண்டியிருந்தது. இந்த முயற்சியால் சிரமப்பட்டு, திடீரென உயிரைத் துறந்தார்! இருந்தும் அவர் ஆசை நிறைவேறியது. காசுகள் அனைத்தும் அவர் வாயில் இறுக்கமாக மூடப்பட்டிருந்தன!

அவரது இறுதிச் சடங்கு, பொதுச் செலவில் நடந்ததால், அது முறையாகச் செய்யப்படவில்லை; விரைவில் அந்த உடலை விலங்குகள் தின்றுவிட்டன. மண்டை ஓட்டுடன் அவரது எலும்புகள் (அதன் உள்ளே 25 நாணயங்கள்) தரையில் கிடந்தன. அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த கிராமத்தைச் சேர்ந்த சில பள்ளிச் சிறுவர்கள், அதை எதிர்கொண்டு, மண்டை ஓட்டை கால்களால் உதைத்தபோது, நாணயங்களின் ஓசையைக் கேட்க முடிந்தது. காசுகளை வெளியே எடுக்க அவர்கள் அனைவரும் மண்டை ஓட்டை வேகமாக உதைத்தும் பலனில்லாமலாயிற்று; பற்களின் பிடி மிகவும் இறுக்கமாக இருந்தது. அவர்கள் மண்டை ஓட்டை கற்களால் உடைக்க முயன்றும் முடியவில்லை.

எனவே, அந்த மண்டை ஓட்டை கிராமத்தில் அறிவாளி ஒருவரிடம் கொண்டு சென்றனர், அவர் அதைப் பார்த்து இவ்வாறு கூறினார், "இங்கே பார், மனிதா, இவர்கள் அனைவரும் உனது விலைமதிப்பற்ற பணத்தை எடுத்துச் செல்லத் துடிக்கிறார்கள், ஆனால் நான் அத்துடன் மேலும் பணத்தைச் சேர்க்க விரும்புகிறேன், இதோ இன்னும் ஐந்து நாணயங்கள்!" இதைக் கேட்டதும் மண்டை ஓடு உடனடியாகத் திறக்க, அந்த அறிவாளி அதை பின்னாலிருந்து உதைத்து நாணயங்களை வெளியே எடுத்தார்.

**எனவே மாயாவின் தாக்கம் எவ்வளவு வலிமையானது என்பதை இந்தக் கதையிலிருந்து பார்க்கலாம். நீங்கள் எவ்வளவு அதிகமாக உங்களுக்கென அடைய விரும்புகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் அதில் சிக்கிக் கொள்கிறீர்கள்.**

அன்று மாலை ஆந்திரா அன்பர்களில் சிலர் ஆதி, ஃபிரான்சிஸ், டாக்டர் தேஷ்முக், டாக்டர் பரூச்சா ஆகியோரை இரவு உணவிற்காக அழைத்தனர்; அந்த நேரத்தில் அவர்கள் பாபாவின் விளக்கங்களைப் பற்றி விவாதித்தனர். 1963 மே 19 ஞாயிற்றுக்கிழமை காலை, உரையாடல், முந்தைய இரவு விருந்தை நோக்கி நகர்ந்தது. பாபா, அவரது மௌனத்தைக் கைவிடும் தேதியை ஏன் தள்ளிப் போடுகிறார் என்பது உட்பட பல விஷயங்கள் விவாதிக்கப்பட்டதாக டாக்டர் பரூச்சா, பாபாவிடம் கூறி, தனது கருத்தை வெளிப்படுத்தினார், "நீங்கள் தேதியை தள்ளிப்போடுவது உங்கள் அன்பர்களுக்கு ஒரு பொருட்டல்ல, ஆனால் பிறர் அதன் காரணத்தைக் கேட்கும் போது, விளக்குவது எளிதல்ல."

அதற்கு பதிலளித்த பாபா, "**ஒன்பது மாதங்களுக்குப் பிறகு நான் எனது மௌனத்தை நிச்சயமாகக் கலைப்பேன்**" என்று உறுதியளித்தார்.

ரோடா துபாஷ் அவரது மகன் மேர்வானுடன் அன்று வந்தார். அவர்கள் பாபாவைத் தழுவி, இருவரும் கிழக்கு-மேற்கு சகவாசத்திலிருந்து இல்லம் திரும்பிய பின்பு, மேர்வான் எந்த அளவுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதை ரோடா அவருக்குத் தெரிவித்தார். மேர்வான் கிழக்கு-மேற்கு சகவாசத்திலிருந்து கராச்சிக்குத் திரும்பிய சில நாட்களில், அவரது முதுநிலை கேம்பிரிட்ஜ் தேர்வு தொடங்கவிருந்தது; ஆனால் அவர் திரும்பி வந்ததும்

தட்டம்மையின் கடுமையான தாக்குதலால் நோய்வாய்ப்பட்டார். கராச்சியில் வாழும் பார்சி சமூகத்தினர், தாயும், மகனும் தேர்வு நெருங்கிய வேளையில் பாபாவின் தரிசனத்திற்காகச் சென்றதை குறைகூறினர். முதல் மூன்று தேர்வுத் தாள்களைத் தவறவிட்ட பிறகு, மேர்வானின் மருத்துவர் அவரை எஞ்சிய தேர்வுகளை எழுத அனுமதித்தார்; ஆனால் அவர் தேர்வில் தோல்வியை சந்திப்பார் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். முதல் மூன்று தேர்வுகளுக்குத் தோன்ற முடியாவிடிலும், வகுப்பில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்ற ஒரே பார்சி என்ற தேர்வின் முடிவு, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

குருபிரசாத் மண்டபம் முழுவதும் ஆந்திரா அன்பர்களால் நிரம்பியிருந்தது; பாபா, குடும்ப சாஸ்திரியிடம் ஆந்திராவில் பாபா-பணியை நடத்தும் வழிமுறை குறித்து அவர் ஏற்கனவே கூறியதை சுருக்கமாக எடுத்துரைத்தார். இதைத் தொடர்ந்து, மோகன்-ஸைகல் வழங்கிய அற்புதமான இரண்டு மணி நேர பாராயணத்தை பாபா மிகவும் ரசித்தார். ஒருமுறை மோகன்-ஸைகலிடம் சற்று ஓய்வு எடுத்து, தேநீர் அருந்துமாறு வெளியே அனுப்பினார். அவர் இல்லாத அந்த நேரத்தில், ஆந்திராவைச் சேர்ந்த கண்பார்வையற்ற ஒருவர் வயலினும், தொடர்ந்து புல்லாங்குழலும் வாசித்தார்.

கஸல்களின் சில வரிகளை பாபா இவ்வாறு விளக்கினார்:

**அன்பன் தன் அன்பிற்குரியவரின் புருவம், வில் போன்றது என்றும், அவரது அருட்பார்வை, அம்பு போன்றது என்றும் கூறுகிறான். அன்பன் தன் இதயத்தில் ஆழமாகப் பாயும் அத்தகைய அம்பை ஏவும்படி அன்பிற்குரியவரிடம் கேட்கிறான்! அன்பிற்குரியவருக்காக அன்பனின் அழுகை மிகவும் தீவிரமாகவே, கண்ணீர் அலைகள், வழக்கமான வலியின் புயலோடு இணைந்து வழிந்தோடியது என்று சொல்லலாம். அவனது அன்பு அவனை எங்கே கொண்டு செல்லும் என்று தெரியவில்லை என்று அலறுகிறான்!**

**அன்பன் கூறுகிறான்: "நான் ஏன் வாழ்கிறேன்? உனக்காக உயிரைத் துறப்பதற்காக!"**

**அன்பன் மேலும் கூறுகிறான்: "எனக்குப் பிரியமானவரே! உமக்காக நான் துன்பப்படும் காட்சியை என் எதிரிகளால் கூட தாங்க முடியாது!"**

காலை 11:00 மணிக்கு பாபாவின் ஆரத்தியை நிகழ்த்திய பின்னர், அனைவரும் மதிய உணவிற்காகச் சென்றனர். சில நிமிடங்களில் பாபா பக்கத்து அறைக்கு வந்த வேளையில், டாக்கே ஒரு வேடிக்கையான கதையை விவரித்தார், இது பாபாவை அகமகிழச் செய்தது.

அன்று மதியம், பாபா குருபிரசாத் மண்டபத்தில் அமர்ந்ததும், லதா லிமாயே சில கஸல்களைப் பாடினார். தொடர்ந்து, பிற்பகல் 3:00 முதல் 4:00 மணி வரை, தாடேபள்ளிகுடம் பாஸ்கர ராஜு, மேலும் இரண்டு கலைஞர்களுடன் (பி. சத்யம், கே. வெங்கடாச்சார்யா) இணைந்து தெலுங்கு இசைக் கதையான 'புர்ரா கதா'வின் ஒரு பகுதியை நிகழ்த்தினார். பாஸ்கரின் சகோதரர் ராமபத்ர ராஜு

குழுவுடன் தபேலாவும், ராமபத்ராவின் மகன் பி. சத்தியநாராயண ராஜு ஹார்மோனியமும் வாசித்தனர். பாபாவின் வாழ்க்கையை சித்தரிக்கும் இந்தக் கதாகாலட்சேப இசை நாடகத்தை அவர்கள் நடத்த ஆரம்பித்த கடந்த எட்டு ஆண்டுகளில், இது அவர்களின் 153ஆவது நிகழ்ச்சி மற்றும் பாபாவிற்கு முன்னால் நடத்தும் நான்காவது நிகழ்ச்சியாகும். நாடகத்தில், பாடல்களுக்கு இடையே குறுக்கிட்டு, வெங்கடாச்சாரியார், பாபாவைப் பற்றி ('ஏன் அவர் பேசவில்லை?) போன்ற பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்க, வேறொருவர் பதிலளித்தார். இறுதியில், வெங்கடாச்சாரியார் கூறினார், "இப்போது நான் மெஹர் பாபாவைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன், தயவுசெய்து என்னை அவரது தரிசனத்திற்காக அழைத்துச் செல்லுங்கள்." பாஸ்கர ராஜு அவரது கையைப் பற்றிக்கொண்டு பாபாவிடம் அழைத்துச் சென்று, "இவரே அவதார் மெஹர் பாபா!" என்று அறிமுகப்படுத்த, பாபாவும் அங்கிருந்த அனைவரும் நாடகத்தை மிகவும் ரசித்தனர்.

மெஹர்ஸ்தான் மையத்தின் திறப்பு விழாவிற்காக, ஏளூர் கலாக்ஷேத்ரா நடனப் பள்ளி மாணவிகள், பாபாவின் வாழ்க்கையைப் பற்றி இந்தி மொழியில் பாவ் கல்சூரி எழுதிய 'மெஹர் லீலா' என்ற நாடகத்தை நிகழ்த்தினர். பாபா அதை குருபிரசாத்தில் அவர் முன்னிலையில் நிகழ்த்தும்படி கேட்டுக் கொண்டார்; இது 'புர்ரா கதை'யைத் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டது. பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட பத்து சிறுமிகள், அற்புதமான ஆடைகளை அணிந்துகொண்டு, நாடகத்தில் அழகாக நடனமாடினர். மேடை பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது, அவர்களின் நளினத்துடனான அசைவுகளும், வெளிப்பாடுகளும் அற்புதமாக இருந்தன. மிகவும் நன்றாகப் பயிற்சியளிக்கப்பட்டதால், அவர்களுக்குள் சரி நிறைவான இணக்கம் இருந்தது. அவர்கள் மீது வண்ண விளக்குகள் பிரகாசித்தது, காட்சிக்கு அழகு சேர்த்தது.

முதல் நடனம் சொர்க்க லோகத்தில் விஷ்ணுவை சுற்றி, தேவதேவதைகள் நடனமாடுவதாக அமைந்தது. அவதார புருஷராக அவர் பூமியில் அவதரிக்க வேண்டிய இன்றியமையா தேவையை எடுத்துரைக்கும் ஒரு குரல், பின்னணியில் ஒலித்துக்கொண்டே இருந்தது. அடுத்த காட்சியில் கடவுள் மேர்வான் ஷெரியார் ஈரானியின் வடிவத்தில் பூமியில் இறங்குவதைக் காட்டுகிறது; அதைத் தொடர்ந்து பாபாஜானின் முத்தம் மேர்வானின் முகத்திரையைக் கிழித்தெறிந்து இறையுணர்வை வெளிப்படுத்துகிறது. நாடகத்தின் இறுதிக் காட்சி கிழக்கு-மேற்கு சகவாசம்; பின்பு பாபாவின் ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

சிறுமிகள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை, ஆனால் அவர்களின் நடனத்தின் மூலம் கதையை தெள்ளத்தெளிவாக வெளிப்படுத்தினர். இரண்டு கண்பார்வையற்ற இசைக்கலைஞர்கள் மேடைக்குப் பின்னால் இசைக்கருவிகளை இசைத்துக் கொண்டிருக்க, ஆந்திராவைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள் ஒவ்வொரு நடனத்திற்கான பாடல்களைப் பாடினர். ஒவ்வொரு

காட்சிக்கும் முன்பாக ஆங்கிலத்தில் ஒரு வர்ணனை வழங்கப்பட்டது. பாபாவாக நடித்த பால் ராணி (BAL RANI) என்ற பெண் மிகவும் இயல்பாகவும், பாபாவை மிகவும் தத்ரூபமாகப் பின்பற்றி நடித்ததைக் கண்டு பாபாவே அடிக்கடி கைகளைத் தட்டினார். நடன நாடகத்திற்குப் பிறகு, பாபா, சிறுமிகளை ஆரத்தழுவி, அனைத்து நடிகர்களுடன் இணைந்து தனது புகைப்படத்தை எடுத்துக் கொண்டார்.

அதற்குப் பிறகு பாபா ஓய்வு பெற்றார். மாலை 6:00 மணி என்பதால் தரிசனம் வழங்கவில்லை. மறுநாள், 'புர்ரா கதா' குழுவினர் பாபாவிடம் விடைபெறுவதற்காக மீண்டும் குருபிரசாத்திற்கு வந்தனர். பாபா, பாஸ்கர ராஜுவிடம் அவர்களின் பயணச் செலவுக்காக ஒரு பொட்டலத்தில் பணத்தை வைத்து கொடுத்து, "**இந்தத் தொகையை எனது பிரசாதமாக ஏற்றுக் கொள்ளுங்கள்**" என்று கூறினார். பாபா, ஆதி சீனியரை அழைத்து, "**இன்று இவர்கள் அனைவரும் நமது விருந்தினர்களாக இருப்பார்கள்**" என்று குறிப்பிட்டார். எனவே, ஆந்திராவிற்குச் செல்வதற்கு முன்பு, மண்டலியுடன் மதிய உணவை உண்டனர்.

1963 மே 21 செவ்வாய் அன்று, குருபிரசாத்தில் அதிக வெப்பமாக இருந்தது, பாபா அங்கிருந்தவர்களிடம் "**இன்று மழை பொழியுமா?**" என வினவினார்.

அதற்கு பதிலளித்த பிரதாப், "நரேந்திர தாடே வானிலை ஆய்வு மையத்தில் பணிபுரிவதால் அவரைத் தான் கேட்க வேண்டும்" என்றார்.

வெளியே சென்று மழைக்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா என்று பார்க்கும்படி பாபா, தாடேயிடம் சைகையால் தெரிவித்தார். வெளியே சென்று வானத்தை நோட்டமிட்டு திரும்பி வந்ததும் பாபா கேட்டார், "**இப்போது சொல்லுங்கள் மழை வருமா, வராதா?**"

தாடே "மழை வரும்" என்றார்.

"**எந்த நேரத்தில்?**" பாபா கேட்டார்.

மனம் தடுமாறிப்போன தாடே, "மாலை 6:00 மணிக்கு!" என்று திடுக்கிட்டு உளறினார்.

ஐந்து மணி வரை மழைக்கான அறிகுறியே இல்லாததால், தாடே கவலைக்குள்ளானார். உள்ளுக்குள் மழை பொழிய வேண்டும் என்று பாபாவிடம் வேண்டிக் கொண்டிருந்தார். பாபா அவரை எச்சரித்தார், "**இன்று மழை பொழியவில்லை என்றால், நாளையிலிருந்து நான் உங்களை குருபிரசாத்திற்குள் நுழைய விடமாட்டேன்.**" தாடே அச்சத்தில் தனது இல்லத்திற்குச் சென்றார், ஆனால் அவரது பிரார்த்தனைக்கு பதில் கிடைத்தது. மாலை 6:00 மணிக்கு கடுமையான மழை பொழியத் தொடங்கியது.

ஜி.எஸ். ஸ்ரீவஸ்தவாவின் (G,S, SRIVASTAVA) மகள் ஸரோஜ் (SAROJ), அவரது கணவர், லக்னோவைச் சேர்ந்த ஷிவேந்திர ஸஹாய் (SHIVENDRA SAHAI OF LUCKNOW) இருவரும் 1962 கிழக்கு-மேற்கு சகவாசத்தில் கலந்துகொள்ள ஆவலுடன்

காத்திருந்தனர், ஆனால் ஸரோஜ் அவர்களின் இரண்டாவது குழந்தையை எதிர்பார்த்து இருந்ததால், பாபா அவர்களை சகவாசத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தினார்.

குழந்தை பிறந்த பிறகு, பாபா அவர்களுக்கு 1963 மே மாதத்தில் ஒரு தனிப்பட்ட நேர்காணலை வழங்கினார். குடும்பத்தினர் பூனாவிற்கு ரயிலில் வந்து கொண்டிருந்த வேளையில், வழியில், புதிதாகப் பிறந்த குழந்தை வயிற்றுப்போக்கால் கடுமையாக அவதிப்பட்டது.

ஷிவேந்திரா இது குறித்துக் கூறுகையில், "குழந்தையின் உடல்நிலை நாள் முழுவதும் மோசமடைந்து வந்தது, எந்த மருந்தோ, மருத்துவ உதவியோ இல்லாத பட்சத்தில், குழந்தையின் நிலை மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. முழுமையான விரக்தியில், கிட்டத்தட்ட வெறுமையான மனநிலையில், நான் கதவருகே நின்று கொண்டிருந்தேன். ரயில் மெஹராபாத் மேல்மலையைக் கடந்து செல்லும் போது நான் வெளியே பார்த்துக் கொண்டிருக்க, ஸரோஜ் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு மெல்ல அழுது கொண்டிருந்தாள். அப்போது, 'குழந்தைக்கு எதுவும் ஆகாது, கவலைப்படாதீர்கள்' என்ற உறுதியான நம்பிக்கையின் குரல் ஒன்று எனக்குள் ஒலித்தது. நான் உடனடியாக ஸரோஜிடம், கவலைப்பட வேண்டாம், பாபா கவனித்துக் கொள்வார் என்று உறுதியளித்தேன்.

"பூனா வந்து ஹோட்டலைச் சென்றடைந்த வேளையில், குழந்தை ஒன்று அல்லது இரண்டு தேக்கரண்டி (செரிமானத்திற்கான) 'கிரைப்' நீரை விழுங்க முடிந்தது. அவர்கள் அடுத்த நாள் 1963 மே 22 அன்று காலை குருபிரசாத் மாளிகையைத் தொலைபேசியில் தொடர்புகொண்ட போது, பாபா அவர்களை விரைவில் அழைப்பதாக எரச் தெரிவித்தார்."

ஷிவேந்திரா தொடர்ந்து கூறினார், "பாபாவின் பிரசன்னம் மிகவும் ஆறுதலாகவும், அவருடைய தனிப்பட்ட வினவல்கள் மிகவும் அன்பானவையாகவும் இருந்தன; நாங்கள் எங்கள் பிரச்சினைகளை முற்றிலும் மறந்துவிட்டோம். பாபா எங்கள் இரண்டு வயது மகன் ஷசீந்திரனை (SHACHINDRA,TUTU - டுட்டு - செல்லப்பெயர்) வருடிக் கொடுத்து, புதிதாகப் பிறந்த குழந்தையைக் கையில் எடுத்தார். திடீரென எங்கள் கடந்த 24 மணிநேர பதற்றம் முற்றிலும் விலகவே, முழு அத்தியாயத்தையும் பாபாவிடம் எடுத்துரைத்தோம். அவர் மிகுந்த கவனத்துடனும், வெளிப்படையான ஆச்சரியத்துடனும் செவிமடுத்தார்."

பாபாவிடம் குழந்தைக்குப் பெயர் சூட்டுமாறு தம்பதியினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, எரச் 'மெஹர்நாத்' என்ற பெயரை பரிந்துரைத்த போது, பாபா அதற்கு ஒப்புதல் அளித்தார். பாபா அவர்களிடம், "**நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன். கோடை வெயிலில் குழந்தைகளுடன் என்னிடம் வர வேண்டிய தேவை இல்லை**. **அன்புடன் என்னை நினைவுகூருங்கள், கவலைப்படாதீர்கள்**" என்று கூறினார்.

பாபா, தம் ஆள்காட்டி விரலை அவர் கண்ணில் வைத்து, "**எனது பார்வை (நஸர்) உங்கள் மீது உள்ளது**" என்றார். அந்தத் தம்பதிகள் பாபாவின் கருணை நிறைந்த வார்த்தைகளைக் கேட்டுக் கண்கலங்கிய போது மீண்டும் கூறினார், "**உங்கள் குடும்பத்தின் மீது என் அருட்பார்வை என்றென்றும் இருக்கும்**."

அவர் தம்பதியினரை தன் அருகில் அழைத்து, அவர்களின் தலையை தனது மடியில் வைத்து, மெஹராபாத்திற்கும், மெஹராஸாத் இல்லத்திற்கும் செல்லுமாறு அறிவுறுத்தினார். பாபா அவர்களைத் தனது காரில் ஹோட்டலுக்குத் திருப்பி அனுப்பி வைத்தார்.

கடந்த 23ஆம் தேதி ஹைதராபாத்தை சேர்ந்த அன்பர் ஒருவர் பாபாவை பார்க்க வந்தார். (1951ஆம் ஆண்டில்) பாபா சில காலம் ஏகாந்தவாசத்தில் பணிபுரிந்த ஒரு மலையில் சிறியதொரு குடிசையை எழுப்ப அவர் மண்டலிக்கு உதவினார். பாபா அங்கிருந்து சென்ற பின்னர், அந்த மனிதர் பாபாவின் புகைப்படம் ஒன்றை குடிசையில் வைத்து, வழிகாட்டுதலுக்காக பிரார்த்தனை செய்தார். பாபா மீது மிகுந்த நம்பிக்கையையும் அன்பையும் வளர்த்துக் கொண்ட அவருக்குத் திடீரென ஒரு நாள் பக்கவாதம் ஏற்பட்டு, ஒரு கை, கால் மற்றும் முகம் செயலிழந்தது. அவரால் நகர முடியவில்லை; அவரது நிலை மிகவும் மோசமாக இருந்தது. ஆனால், அவர் எந்த மருந்து, ஊசிகளையும் எடுக்க மறுத்துவிட்டார். அவர் பாபாவின் சித்திரத்திற்கு முன்னால் ஒரு குவளை தண்ணீரை வைத்து, அவரிடம் பிரார்த்தனை செய்து, பின்னர் அந்தத் தண்ணீரை மருந்தாக அருந்தி வந்தார். பாபா மீது அவருக்கு அதீத நம்பிக்கை இருந்ததால் அவர் குணமடைந்து இப்போது பாபாவை பார்க்க வந்தார். பாபா அவரிடம் கை கால்களை உயர்த்தச் சொன்ன போது, அதை அவர் மிகவும் எளிதாகச் செய்தார்.

1963 மே 25 சனிக்கிழமை அன்று பாபா கூறினார், "**நான் யார் ஒருவரையும் சந்திக்கும் மனநிலையில் இல்லை, ஏனெனில் எனது உலகளாவிய பணியின் சுமை மிகையாக உள்ளது**." இருப்பினும், அன்று காலை வந்திருந்த பல அன்பர்களை பாபா பல மணிநேரம் தன் அருகில் இருக்க அனுமதித்தார். "**நான் என்ன செய்வேன்?**" பாபா புன்னகைத்து நிரஞ்சன் ஸிங்கிடம் லாவகமாகக் கேட்டார். "**உங்கள் அனைவரின் அன்பும் என்னை பல மணிநேரம் உங்களுடன் அமருமாறு தூண்டுகிறது. உங்கள் அன்பின் காரணமாக நான் அதைச் செய்கிறேன்**."

ஒரு பக்தர் பாபாவை அணுகி, கடந்த ஒரு வாரமாக, பாபா ஒரு சுத்த ஏமாற்றுக்காரர் என உணர்ந்ததால், அவரிடம் மீண்டும் வரக்கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்ததாகக் கூறினார்.

அதற்கு பாபா, "**எனது மௌனத்தைக் கலைக்கும் நேரம் நெருங்கிவிட்டது. இந்த நேரத்தில்தான் எனது மேலங்கி** (தாமன்) **உங்கள் கைகளிலிருந்து நழுவுவதற்கான வாய்ப்புகள் அதிகம். மாயா உங்களை என்னிடமிருந்து பறிக்க முயல்வாள். நான் ஓர் ஏமாற்றுக்காரனாக இருந்தால்**

**என்னவாகும்? அனைத்தும் நானே - உயர்ந்தவர்களில் உயர்ந்தவர், அதே போல் அனைத்திலும் தாழ்ந்தவர்! ஆனால் நான் ஏமாற்றுக்காரன் என்று நீங்கள் உணர்ந்தாலும் இங்கு வருவதை நிறுத்தாதீர்கள். இதர குருநாதர்கள் அல்லது துறவிகளைத் தேடி அலையாதீர்கள். முழு உலகமும் சூழ்ச்சியும், தந்திரமும் நிறைந்தது; ஆனால், நான் அல்ல!"**

மருத்துவம் பயிலும் ஓர் இளம் பெண், சமீபத்திய தேர்வுக்குப் பிறகு பாபாவைப் பார்க்க வந்தார். பாபா '**அவரின் இறுதித் தேர்வு எப்படி நடந்தது**' என்று கேட்டதற்கு, 'நான் திருப்தி அடையும் அளவுக்கு இல்லை' என்றார்.

பாபா உடனே "**தேர்வில் ஏமாற்றவில்லையா?**" என்று கேலி செய்தபோது, இல்லை என்றார் அந்த இளம் பெண். பாபா பின்பு, "**நான் பள்ளி மாணவனாக இருந்தபோது, எனது தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு கணிதத்தில் எப்போதும் ஏமாற்ற வேண்டியிருந்தது**" என்று பாபா கூறினார்.

பாபாவை முதன்முதலில் சந்திக்கும் ஒரு நபர் அவரை அணுகினார். அவர் திறமையான மற்றும் புத்திசாலியாக இருந்தும், மனரீதியாக பாதிக்கப்பட்டு, மனச்சிதைவு (SCHIZOPHRENIC) நோயால் அவதிப்படுவதாகக் கண்டறியப்பட்டார். இதனால் அவர் மருத்துவ படிப்பை கைவிட வேண்டியதாயிற்று. அவர் பல்வேறு மருந்துகளுடன் சிகிச்சை பெற்ற அதே நேரத்தில் மின் அதிர்ச்சி (ELECTRO-CONVULSIVE THERAPY) சிகிச்சையும் பெற்றார். '**அவருடைய மனம் எந்த விதமான கஷ்டங்களுக்கு உள்ளானது**' என்று பாபா கேட்டார். முரண்பட்ட எண்ணங்கள், அதி வேகமான சுவாசம், குறிப்பாக இரவில், கடந்த பதினான்கு ஆண்டுகளாக அவர் சரியாக தூங்கவில்லை என்று பதிலளித்தார். பாபா அவருக்கு ஒரு மாதத்திற்கான சில மாத்திரைகளை பரிந்துரைத்தார். மண்டபத்திலிருந்து வெளியே வந்த பின்னர், அந்த நபர் டாக்டர் பரூச்சாவிடம், ஏற்கனவே இதே மாத்திரைகளை எடுத்துக் கொண்டதாகவும், ஆனால் பலனளிக்கவில்லை என்றும் கூறினார். 'பாபா என்ன மருந்து கொடுத்தார் என்பது முக்கியமல்ல' என்று பரூச்சா விளக்கினார். 'மிக முக்கியமான விஷயம் என்னவெனில், பாபா - கடவுளே - அவற்றைப் பரிந்துரைத்தார். பாபா ஒரு சிட்டிகை தூசி கொடுத்தாலும் அது அற்புதங்களை விளைவிக்கக்கூடும்!' எனவே அந்த மனிதர் பாபாவிற்குக் கீழ்ப்படிந்து, அன்றிரவு மாத்திரைகளை உட்கொண்டார். மறுநாள் காலையில் அவர் வந்தபோது, பாபா '**நன்றாகத் தூங்கினீர்களா?**' என்று கேட்டதற்கு அவர், "பாபா, கடந்த பதினான்கு ஆண்டுகளில், நான் நிம்மதியாக தூங்கிய முதல் இரவு இது" என்று பதிலளித்தார்.

ராமாராவ் என்பவர் மஹாராணி ஷாந்தாதேவியின் ஏழை உறவினர் ஆவார்; அவர் குருபிரசாத்தின் பணியாட்களை மேற்பார்வையிட பணியமர்த்தப்பட்டார். ஒரு வருடத்திற்கு முன்னர், அவரது மனைவி ஈன்றெடுத்த ஒரு பெண் குழந்தை இறந்துவிட்டது. மனைவி, பாபாவிடம் தனக்கு இன்னுமொரு குழந்தை பாக்கியம் வழங்குமாறு வேண்டினார், பாபா

வழங்குவதாக உறுதியளித்தார். இரண்டு வாரங்களுக்கு முன்பு, தாய் இரண்டாவது பெண் குழந்தையை ஈன்றெடுத்தார், ஆனால் மருத்துவர்கள் குழந்தையை உயிர் பிழைக்க வைக்க அரும்பாடுபட்டனர். குழந்தை ஒரு மருத்துவமனையில் இருந்து வேறொரு மருத்துவமனைக்கு மூன்று முறை மாற்றப்பட்டது. சில நேரங்களில் குழந்தை நன்றாக இருந்தது, சில சமயங்களில் அது இறப்பின் எல்லையை நோக்கிச் சென்றது போலத் தோன்றியது. தாய் மீண்டும் பாபாவிடம் தனது குழந்தையை வாழவைக்குமாறு வேண்டினார். பாபா அவரது சக்தியைப் பயன்படுத்தவில்லை, எனவே இந்த விஷயத்தில் தலையிட முடியாது என்று பதிலளித்தாலும், மே 25 அன்று, குழந்தையை மீட்கும் நோக்கத்தில் கடினமாக பிரார்த்தனை செய்ய, மெஹராபாத் மேல்மலையில் வாழும் கைக்கோபாத்திற்கு ஒரு செய்தியை வழங்குமாறு, எரச் தொலைபேசி மூலமாக ஆதிக்கு அறிவுறுத்தினார். குழந்தையைக் காப்பாற்ற கைக்கோபாத் தனது பிரார்த்தனை மூலம் கடவுளிடம் மன்றாட வேண்டும் (அதே வேளையில், 26ஆம் தேதி குருபிரசாத்தில் நடைபெற இருக்கும் பல்வேறு கிரிக்கெட் அணிகளுக்கு பாபா பரிசுகளை வழங்கும் நிகழ்ச்சி - வெற்றிகரமாக நிறைவுற வேண்டும் என்று கைக்கோபாத் பிரார்த்தனை செய்யுமாறு பாபா கேட்டுக் கொண்டார்.)

பாபா பின்பு விளக்கினார், “**கைக்கோபாத் தீவிரமாகப் பிரார்த்தனையில் ஈடுபடும்போது, குழந்தை நன்றாக உணர்கிறது, ஆனால் அவர் தூங்கி விழும்போது, அதன் நிலை மோசமடைகிறது! குழந்தையை உயிர் பிழைக்க வைக்க வேண்டும் என்று கைக்கோபாத் கடவுளிடம் வேண்டுகோள் விடுத்தது, இறுதியில் என்னையே வந்தடைந்தது.**”

‘**குழந்தை உயிர் பிழைக்குமா, இல்லையா**’ என்று டாக்டர் அலு கம்பட்டாவிடம் பாபா கேட்டதற்கு அவர், “உங்கள் அருள் குழந்தை மீது இருந்தால் அது உயிர் வாழும்” என்று பதிலளித்தார்.

அதற்கு பதிலளிக்கும் விதத்தில் பாபா கூறினார், “**என் அருள் இருந்தால், குழந்தை, இறைவனுடன் ஒன்றிணைந்துவிடும்!**”

அப்போது பெகு (PEGU) என்ற ஸியாமி பூனை மண்டபத்திற்குள் நுழைந்து, பாபாவின் மடியில் தாவியது. அந்தப் பூனை குருபிரசாத் அருகில் அமைந்த பங்களாவில் தங்கியிருந்த திருமதி டிட்டிக்கு (MRS. DIDDY) சொந்தமானது என்று பாபா விளக்கினார். கடந்த சில நாட்களாக, குருபிரசாத்திற்கு வந்து கொண்டிருந்த பூனை, திருமதி டிட்டியின் தீவிரமான முயற்சிகளுக்குப் பிறகும் வீடு திரும்பவில்லை. பெகு, பாபாவின் சகவாசத்தை விரும்பியது. பாபா இவ்வாறு தெரிவித்தார், “**அவதார புருஷரின் பௌதீக உடலின் ஸ்பரிசத்தை அடையப்பெறும் எந்த விலங்கும், அதன் அடுத்த பிறவியில் மனித உடலை அடையப் பெறுகிறது.**”



பெகு, குருபிரசாத் – (PEGU GURUPRASAD)

முந்தைய நாள் பல்வேறு வகையான குதுப்கள் (பரிபூரண குருநாதர்கள், சத்குரு) பற்றி எடுத்துரைத்ததாக பாபா கூறி, மீண்டும் விளக்கினார்:

**குதுப்களில் மூன்று வகை - கலந்தர்** (QULANDER), **க்வாஜா** (KHWAJA) **மற்றும் கோஸ்** (GHOUSE). **குதுப் அவரது உண்மையான நிலையில் ஒரு கலந்தர், க்வாஜா அல்லது கோஸ் அல்ல; ஆனால் அவர், ஒரு கலந்தர், க்வாஜா, அல்லது கோஸ் போல நடந்து கொள்கிறார்.**

**கலந்தர் வகையைச் சார்ந்த குதுப், பொதுவாக நிர்வாணமாக இருப்பதோடு, எந்த இடத்திலும் நீண்ட நேரம் தங்குவதில்லை. கொல்கத்தா ராமகிருஷ்ணரின் குருநாதர் தோத்தாபுரி இந்த வகையைச் சார்ந்தவர்.**

**பொதுவாக ஒரு க்வாஜா வகை குதுப், அவரது இடத்தை விட்டு நகர்வதில்லை, ஒரே இடத்தில் நிலைகொண்டிருப்பவர். உபாஸனி மஹாராஜ் மற்றும் பாபாஜான் இந்த வகையைச் சார்ந்தவர்கள்.**

**கோஸ் வகை தனது உடலின் அனைத்து உறுப்புகளையும் தனித்தனியாகப் பிரித்து, விரும்பியபடி மீண்டும் ஒன்றிணைக்க முடியும். எந்த ஒரு மனிதனும் அவரை அந்த நிலையில் பார்க்க முயன்றால், அவர் கண்பார்வையை இழப்பது உறுதி. சாய்பாபா, கோஸ் வகையைச் சார்ந்தவர். தூங்கச் சென்ற பின்னர் அவரைப் பார்க்கக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவுகளுடன் இரவுக் காவலாளிக்கு அவர் அறிவுறுத்தினார். ஒரு நாள் இரவு காவலாளி, தூங்கிக்கொண்டிருந்த சாய்பாபாவை உற்று நோக்கும் அளப்பரிய ஆர்வத்துடன், பார்க்க முயன்ற அதே கணத்தில் பார்வையை இழந்தார்.**

**நான் ஸாக்கோரியை விட்டு வெளியேறிய பின்னர், இப்போது ஃபெர்குஸன் கல்லூரி** (FERGUSSON COLLEGE) **அமைந்துள்ள இடத்திற்கு மிக அருகில், பூனாவில் ஒரு சிறிய குடிலில்** (JHOPDI, ஜோப்டி) **தங்கியிருந்தேன். பகல் வேளைகளில் மக்கள் என்னுடன் இருக்க வந்து, அந்திப் பொழுது சாயும் வேளையில் சென்று விடுவது வழக்கம். எனது தோழர் அர்ஜுன் (ஸுப்பேக்கர்) இரவு காவலாளியாகப் பணிபுரிந்தார். அர்ஜுன் ஒரு வலிமையான, திடகாத்திரமான நபர். நான் அவரை குடிலுக்கு வெளியே அமருமாறும், எந்த சூழ்நிலையிலும் உள்ளே நுழையக்கூடாது என்றும் கட்டளையிட்டேன். ஒரு நாள் இரவு பணியில் நான் மும்முரமாக இருந்தபோது, அர்ஜுன் ஒரு பெரிய பயங்கரமான வடிவத்தைப் பார்க்கவே, பயத்தால் பீதியடைந்த அவர், எனது குடிலுக்குள் விரைந்து, எனது உத்தரவை மீறினார். அன்று முதல் அர்ஜுனின் உடல் எடையும், வலிமையும் குறையத் தொடங்கி, இறுதியில் அவர் உயிரைத் துறந்தார்.**

**நான் உங்களோடு பேசிக்கொண்டிருக்கும் நேரத்திலும் எனது பணி தொடர்கிறது. இது உங்கள் சுவாசத்தைப் போல - நீங்கள் உரையாடுகிறீர்கள், பணிபுரிகிறீர்கள், விளையாடுகிறீர்கள், உண்கிறீர்கள், உறங்குகிறீர்கள், ஆனால் உங்கள் சுவாசம் இடைவிடாமல் தொடர்ந்துகொண்டே இருக்கும். நான் வேறு ஏதேனும் செய்வது போலத் தோன்றினாலும், தங்குதடையின்றி**

**எனது பணியும் அவ்வாறே தொடரும். இருப்பினும், எனது சிறப்புப் பணிகளில் ஈடுபடும் வேளையில், எந்தத் தொந்தரவையும் விரும்பாததால், நான் ஏகாந்தவாசம் மேற்கொள்கிறேன்.**

ஸாம் மற்றும் ரோஷன் கேரவாலாவின் மகள், நான்கு வயது மெஹரா, பாபாவின் அருகில் அமர்ந்திருந்தாள். அவர் அவளை தனக்கு முன்னால் அழைத்து, குருநாதரின் பிரார்த்தனையை மொழியுமாறு கேட்டுக் கொண்ட போது, மெஹரா தைரியமாக ஆங்கிலத்தில் சரியாக மொழிந்து, அங்கிருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். அதைத் தொடர்ந்து சில பஜனைகள் பாடப்பட்டன, பின்னர் அனைவரும் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினர்.

1963ஆம் ஆண்டில், பாபா, ஒன்பது மாத இறுதியில் தனது மௌனத்தைக் கலைப்பதாக அடிக்கடி கூறிவந்தார். மே 25 அன்று காலையில், பாபா தனது மௌனத்தை நிறைவு செய்வதற்கு முந்திய ஒன்பது மாதங்களை, ஒரு தாய் தனது வயிற்றில் சுமக்கும் ஒன்பது மாத கர்ப்ப காலத்துடன் ஒப்பிட்டுக் கூறினார்:

**இப்போது எங்குத் திரும்பினாலும் மனச்சோர்வு, குழப்பம், சச்சரவுகள் தென்படுகின்றன. இது, நான் விரைவில் எனது மௌனத்தைக் கலைத்து, சத்தியத்தின் புதிய காலகட்டத்தை வெளியிடுவதன் அறிகுறியே தவிர வேறொன்றுமில்லை.**

**நான் மெஹராஸாத் திரும்பிச் சென்ற பின்னர், உலகம் முழுவதும் வேதனை, துன்பம், மனச்சோர்வு மற்றும் குழப்பம் அதிகரிக்கும். இது, ஒன்பது மாதங்களில் நான் படும் துன்பத்தின் பிரதிபலிப்பாக இருந்து, 'பிரசவ' நேரத்தில் அதன் உச்சத்தை அடைவது என்பது, எனது மௌனத்தைக் கலைப்பது போலாகும். அந்த நேரத்தில் 'பிரசவம்' நிகழ்ந்து, 'தாயும், சேயும்' துயர் நீங்கி மன நிம்மதி அடைவர்.**

**அந்த நேரம் விரைவில் நெருங்கி வருகிறது, அப்போது நான் தடையாக இருக்கும் அனைத்தையும் தட்டித் தகர்த்துவிடுவேன். அதனால்தான் நான் தொடர்ந்து சொல்கிறேன், எனது மேலங்கி** (தாமன்) **மீதான உங்கள் பிடி மிகவும் உறுதியாக இருக்கட்டும். எனவே எதிர்வரும் ஒன்பது மாதங்களில், என் அன்பின் செய்தியைப் பரப்புவதில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்; மேலும் பிறர் எப்படி வாழ வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அந்த வாழ்க்கையை வாழ உங்களால் இயன்றவரை முயற்சி செய்யுங்கள். நீங்கள் பிறருக்குச் சொல்வதை நீங்களும் வாழ வேண்டும்; இல்லையேல், உங்கள் வாயை மூடிக்கொண்டு இருப்பதே சாலச் சிறந்தது!**

**இதில் சமரசத்திற்கு எந்த இடமும் இல்லை. அன்பு மற்றும் உண்மைப்பொருளைப் பற்றிய எனது செய்தியை பரப்புவதில் என் அன்பர்கள் 100 சதவீதம் நேர்மையாக இருக்க வேண்டும். அதில் எந்தப் பாசாங்குத்தனமும் நுழைய இடந்தராதீர்கள்! பொறாமையும், புறங்கூறலும் அதில் நுழையாமல் பார்த்துக் கொள்ளுங்கள், இல்லையேல் அனைத்து**

**காரியமும் கெட்டுவிடும். பாபா-பணியைச் செய்ய உங்களால் ஆகாய விமானம், ரயில், கார் அல்லது மாட்டு வண்டியில் செல்ல முடியாவிடில், நடந்தே செல்லுங்கள். ஆனால் பாபாவுக்காக எந்த வேலை செய்தாலும் அதை நேர்மையாகச் செய்யுங்கள். நீங்கள் வேலை செய்கிறீர்கள் என்று நினைக்க வேண்டாம். அது கடவுளின் விருப்பத்தால் செய்யப்படுகிறது.**

பாபா சில முறை இடையிடையே இருமிய போது, இங்கிலாந்தில் 1931 செப்டம்பர் மாதத்தில், கடுமையான குளிரில், காட்டன் சத்ராவை மட்டுமே அணிந்துகொண்டு, தனது புகைப்படம் எடுக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்பு படுத்தி இவ்வாறு கூறினார்:

**நாங்கள் அங்குச் சென்றபோது குளிர்காலமாக இருந்தது, மண்டலிக்கு கம்பளி ஆடைகள் மற்றும் போர்வைகள் வழங்கப்பட்டன; இருந்தும் கனி தனது காலணிகளுடன் தூங்கினார். மெரடித் ஸ்டார், இந்த வசதிகள் எதையும் எனக்கு வழங்கவில்லை, ஏனெனில் நான் கடவுளாக இருந்ததால் குளிரை உணரமாட்டேன் என அவர் நினைத்தார்! இரவுகள் கடுமையான குளிராக இருந்தது, எனது உடலைப் பாதுகாக்க ஒரு மெல்லிய போர்வை மட்டுமே வழங்கப்பட்டது. எனக்கு ஒரு துண்டு ரொட்டி மற்றும் வெண்ணெய் மட்டுமே வழங்கிய அதே வேளையில் மண்டலிக்கு திட உணவு வழங்கப்பட்டது; ஏனெனில் என் ஆங்கிலேய அன்பர்கள் கடவுளுக்கு உணவு தேவையில்லை என்று நினைத்தனர்! பின்பு நான், கடவுள், மனித உருவில் அவதரிக்கும்போது, சாதாரண மனித உடலின் அனைத்து வரையறைகளும் அவருக்கு இருப்பதாக விளக்கினேன். நான் ஒரு மஸ்தாக இருந்திருந்தால், குளிர்ச்சியை உணர்ந்திருக்க மாட்டேன்.**

காலை 10:30 மணியளவில், பாபா ஒரு பக்தரிடம் பெங்காளி மொழியில் அவரது ஆரத்தியைப் பாடுமாறு கூறினார்; அதற்குப் பிறகு கூட்டம் கலைந்து சென்றது.

மண்டலியும் இன்னும் சிலரும் பக்கத்து அறையில் ஒன்று கூடி, பாபாவுடன் ‘லா ரிஸ்க்’ (LA RISQUE) சீட்டு விளையாடத் தொடங்கினர். சிறிது நேரத்தில், ஒரு மனிதர் அறைக்குள் நுழைந்தார். ஆறு வருடங்களாக இடது கை மற்றும் கால் செயலிழந்த நிலையில் அவர், பாபாவின் தரிசனத்திற்காக வந்து, அவரிடம் கெஞ்சினார்; அவர் எல்லாவிதமான சிகிச்சைகளையும் பெற்றுக் கொண்டதாகவும், ஆனால் அவர் தனது கைகால்களை நன்றாக அசைக்க முடியாமல், விரும்பத்தகாத தசைப்பிடிப்புகளால் அவதியுறுவதாகவும் கூறினார். **முழு நம்பிக்கையுடனும், அன்புடனும் பாபாவின் நாமத்தைத் திரும்பத் திரும்ப மொழியவும், எந்தவித உதவியுமின்றி ஒவ்வொரு நாளும் சில பயிற்சிகளைச் செய்யவும்** பாபா அவரிடம் கேட்டுக்கொண்டார். **பாபா அறிவுறுத்தியபடி செய்தால், ஆறு மாதத்தில் உடல் நலம் தேறிவிடும்** என்று குறிப்பிட்டார்.

மதிய உணவுக்குப் பிறகு சிறப்பு நிகழ்ச்சி எதுவும் திட்டமிடப்படவில்லை. பாபா ஆண்களுடன் சீட்டு விளையாடினார், மேலும் சிலர் வேடிக்கையான கதைகளைக் கூறும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். பிற்பகல் 3:30 மணிக்கு பாபா ஓய்வெடுக்க தனது அறைக்குச் சென்றார்.

ஒருமுறை குருபிரசாத்தில் நானா கேரிடம் பாபா, "**நான் கைகளைத் தட்டும்போது நீங்கள் சிரிக்க வேண்டும், நான் மீண்டும் கைகளைத் தட்டும்போது அழ வேண்டும். நீங்கள் அதைச் சரியாகச் செய்யாவிட்டால், உங்களை நாக்பூருக்குத் திருப்பி அனுப்புவேன்!**" என்றார்.

அப்போது பாபா கைகளைத் தட்டவே, நானா மனதார சிரித்தார். அடுத்த கணம் பாபா மீண்டும் கைகளைத் தட்டிய போது, நானா அழுது புலம்புவது போல் நடித்தார். பாபா அவரது 'கீழ்ப்படிதலை' நன்கு ரசித்தார்.

மறுநாள் 1963 மே 26 ஞாயிறு காலை 7:30 மணிக்கு ஒரு சிலர் குருபிரசாத்திற்குத் திரும்பி வந்தனர். காலை 6:30 மணி முதல், தான் மண்டலியுடன் இருந்ததாக பாபா குறிப்பிட்டார். பாபாவின் மீதான நம்பிக்கையை இழந்து, பாபாவை முழுக்க முழுக்க ஏமாற்றுக்காரர் என்று கூறிய அந்த மனிதரை, அங்கு வந்தவர்களில் ஒருவராக பாபா கண்டுகொண்டார். பாபா அந்த மனிதரிடம் கூறினார், "**யூதாஸ், இயேசுவோடு வளர்ந்தார், ஆனால் இறுதியில் அவர் நம்பிக்கை துரோகம் செய்து அவரைக் காட்டிக் கொடுத்தார். கிறிஸ்துவின் தலைமை அப்போஸ்தலராக இருந்த பீட்டரும் அவரை மறுத்தார். எனவே என்னைப் பற்றி உங்களுக்கு இதுபோன்ற எண்ணங்கள் வந்தால் கவலைப்படுவானேன்? என்னுடன் ஒட்டிக்கொண்டு இருங்கள். எனது மேலங்கியை** (தாமன்) **உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். குறைந்தபட்சம் 1964 ஜனவரி 1 வரை திடமான பிடியில் இருங்கள். எந்தத் துறவியிடமும் செல்ல வேண்டாம்! அடுத்த பதினைந்து நாட்களுக்கு தினமும் இங்கு வந்து செல்லுங்கள், உங்கள் மனம் அத்தகைய எண்ணங்களிலிருந்து விடுபடும்.**"

பாபா அங்கிருந்த அனைவரிடமும் தரிசனம் பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். ரோடா துபாஷ் தனது தலையை பாபாவின் பாதங்களில் மூன்று முறை வைத்து வணங்கினார்: ஒருமுறை தனக்காக; கணவன் ஆதிக்கு ஒருமுறை; ஒருமுறை அவர்களின் ஐந்து வயது மகன் ஹோமிக்காக, அவன் ஜன்னலுக்கு வெளியே விழுந்து எட்டு ஆண்டுகளுக்கு முன்பு காலமானான்.

அன்று காலை டாக்டர் ராம் கிண்டே, பாபாவைப் பார்க்க வந்தார். பாபாவின் தூக்கு நாற்காலியில் அவரை குருபிரசாத்தின் படிக்கட்டுகளைக் கடக்க உதவுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். கிண்டேயின் உடல்நிலையும் மோசமாக இருந்தது, ஏனெனில் அவருக்கு சமீபத்தில் இதயக் கோளாறு ஏற்பட்டது. கிண்டேயின் சகோதரர் (இசைக் கல்லூரி ஒன்றில் முதல்வராகப் பணிபுரிந்தார்) அவருடன் வந்திருந்தார், அவர் பாபா முன்னிலையில் பாடினார்.

பாபா பின்பு பிரதான மண்டபத்திற்குள் நுழைந்தார், வசந்த்ராவ் தேஷ்பாண்டே இந்திய பாரம்பரிய இசை நிகழ்ச்சியை சுமார் 20 நிமிடங்கள் வழங்கினார். அதைத் தொடர்ந்து, மோகன்-ஸைகல் பாடிய கஸல்களையும் பாபா மிகவும் ரசித்தார். பின்னர் அனைவரும் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி, அன்று புறப்பட இருந்தவர்கள் அனைவரும் அவரைத் தழுவினர்.

மதிய உணவுக்குப் பிறகு, பாபா தனது அன்பர்களால் சூழப்பட்ட வராண்டாவில் அமர்ந்தார். பூனா மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் பல கிரிக்கெட் அணிகளுக்கு அன்றைய தினம் கோப்பைகளை விநியோகிக்க பாபா ஒப்புக்கொண்டதால், பிரதான மண்டபம் முற்றிலும் காலியானது. மதியம் 1:45 மணியளவில், பல்வேறு அணிகள் மண்டபத்தில் ஒன்றுதிரண்டன. பல உள்ளூர் மக்களும் அழைக்கப்பட்டனர். பாபா தனது வழக்கமான திவானில் அமர்ந்திருக்க, கோப்பைகள் மற்றும் சான்றிதழ்கள் அவரது இடதுபுறத்தில் ஒரு மேஜையில் இருந்தன. இந்நிகழ்ச்சியை செய்தியாக்க, பத்திரிகை நிருபர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் பலர் வந்திருந்தனர். பாபா கூறினார்:

**இதுபோன்ற விழாவில் நான் பங்கேற்பது இதுவே முதல் முறை. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, நான் மஹாராஷ்டிராவின் பூனாவில் பிறந்தேன். மற்றொன்று, சிறுவயதிலிருந்தே எனக்கு கிரிக்கெட் மீது அதீத ஆர்வம். ஆன்மீக ரீதியாக, நான் உலகளாவிய இறை-மனிதன். நான் எப்போதும் கிரிக்கெட் போட்டிகளை பார்க்க விரும்புகிறேன், ஆனால் மக்கள் என்னை அமைதியாகப் பார்க்க அனுமதிப்பதில்லை.**

**ஒருமுறை, ஒரு சிறப்பான கிரிக்கெட் போட்டியைக் காண அஹமதுநகர் மேயர் என்னை அழைத்தார். இது ரஞ்சிக் கோப்பை போட்டிகளில் ஒன்று. நான் அங்குச் சென்றபோது, மேயர் மலர் மாலையுடன் எனக்காகக் காத்திருந்தார், அவருக்குப் பின்னால் அவரது முழுக் குழுவும், ஒருவர் பின் ஒருவராக எனது தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். மக்கள் என்னைச் சுற்றி ஒன்றுதிரள ஆரம்பித்தனர், இறுதியாக நான் போட்டியைப் பார்க்காமல் வெளியேற வேண்டியதாயிற்று.**

மதியம் 2:00 மணிக்கு, பூனா மாவட்ட கிரிக்கெட் சங்கச் செயலர் சதாஷிவ் பல்ஸுலே, பாபாவிற்கு மாலை அணிவித்து, செயற்குழு உறுப்பினர்களை அறிமுகப்படுத்தி, சிறு உரை ஒன்றை நிகழ்த்தினார். ‘வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள் மட்டுமல்ல, அவதார புருஷரான மெஹர் பாபாவின் ஆசீர்வாதமும் கிடைக்கும்’ என்றார். அவரது உரைக்குப் பிறகு, பாபா அணிகளின் தலைவர்களுக்கு கோப்பைகள், கேடயங்கள் மற்றும் தகுதிச் சான்றிதழ்களை வழங்கினார். எரச் கிரிக்கெட் வீரர்களுக்கான பாபாவின் செய்தியை வாசித்தார்.

**இன்று இந்தக் கோப்பைகளை வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். பள்ளி, கல்லூரியில் சிறுவனாக இருந்தபோது கிரிக்கெட் விளையாடினேன். இப்போது நான் கிரிக்கெட்டை உள்ளடக்கிய எனது**

**தெய்வீக உலகளாவிய விளையாட்டை விளையாடுகிறேன்; அதனால் நான், இன்றும் அந்த விளையாட்டை விரும்புகிறேன்.**

**ஒருவர் எதை முயற்சித்தாலும் அதில் சிறந்து விளங்கி, மேல்நிலையை அடைவது நல்லது; இந்த மேன்மையுடன் பணிவு உணர்வு இருக்கும் வரை, இது கடவுளை நேசிக்க வழிவகுக்கிறது; மேலும் அவர் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் கடவுளை நேசிப்பதே மேன்மையிலும் மேன்மையாகத் திகழும். ஒரு நாள் நீங்கள் ஒவ்வொருவரும் இந்த அன்பைப் பெற என் ஆசீர்வாதத்தை வழங்குகிறேன்.**

அப்போது பாபா அவரது இளமைப் பருவத்தில் நடந்த சம்பவம் ஒன்றை எடுத்துரைத்தார்:

**கிரிக்கெட்டை விளையாட்டாகக் கருதி விளையாடுங்கள்; வெற்றி, தோல்வியை நினைத்துப் பாராமல், ஓர் உண்மையான விளையாட்டு வீரரைப் போல, பார்வையாளர்களை மகிழச் செய்யுங்கள். பார்வையாளர்களை மகிழ்விப்பதற்காக நீங்கள் முழு மனதுடன் விளையாடினால், அது நீங்கள் செய்த பெரிய பணியாகக் கருதப்படும். ஆனால் நீங்கள் விளையாட்டிலிருந்து வெளியேறாமல் இருக்கும் எண்ணத்தில் விளையாடினால், அது பார்வையாளர்களை அதிருப்தியடையச் செய்து, அவர்களின் பணத்தை வீணடிப்பது போலாகும். பார்வையாளர்களைச் சலிப்படையச் செய்யாதீர்கள். அனைத்திற்கும் மேலாக, அவர்கள், சிறப்பான, உற்சாகத்தைக் கிளறும் கிரிக்கெட்டைப் பார்க்கும் நம்பிக்கையுடன் வருகிறார்கள். நீங்கள் விளையாட்டைக் கருத்தில் கொண்டு விளையாட எனது ஆசிகளை வழங்குகிறேன்.**

**ஒருமுறை நான் ஸெயின்ட் வின்ஸெண்ட் உயர்நிலைப் பள்ளியில் மாணவனாக இருந்தபோது, நாங்கள் 'புதிய உயர்நிலைப் பள்ளி'யுடன்** (NEW HIGH SCHOOL) **போட்டியிட்டோம். நான் ஒரு நல்ல 'விக்கெட் கீப்பராகவும்' சிறந்த பந்தடிப்பவராகவும் இருந்தேன். அந்தப் போட்டியில், நான் தொடக்க ஆட்டக்காரராக இருந்து, எனது முழு அணியும் ஆட்டமிழந்தபோதும், நான் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்து திரும்பி வந்தேன், ஆனால் நான் 33 ஓட்டப்புள்ளிகளை மட்டுமே எடுத்திருந்தேன். நான் காட்சி அரங்கிற்குத் திரும்பி வந்தபோது, சிறுவர்கள், பார்வையாளர்கள் அனைவரும் என்னைப் பார்த்து ஏளனம் செய்தனர். நான் சீராக விளையாடினேன், ஆனால் பார்வையாளர்கள் மகிழ்ச்சியடையவில்லை. எனவே பார்வையாளர்கள் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் உணரும் வகையில் விளையாட்டை விளையாடுங்கள்.**

சில பஜனைகளுக்குப் பின்னர் ஆரத்தி நிறைவடைந்ததும், கிரிக்கெட் வீரர்கள் புறப்பட்டுச் செல்லவே, பாபா-அன்பர்களும் பக்தர்களும் மீண்டும் மண்டபத்தை நிரப்பி தேஷ்பாண்டேயின் இசை நிகழ்ச்சியை மாலை 4:30 மணி வரை ரசித்தனர். அன்று பாபாவைத் தழுவாதவர்கள், நிகழ்ச்சி முடிந்ததும், பிரியாவிடையாக அவருடைய அரவணைப்பை நாடி வந்தனர்.

அடுத்த நாள், 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' (TIMES OF INDIA) பத்திரிகை அதன் விளையாட்டுப் பக்கத்தில் ஒரு கட்டுரையை வெளியிட்டது: "உற்சாகமான, மக்களை மகிழச் செய்யும் விளையாட்டாக உங்கள் கிரிக்கெட் இருக்கட்டும் - மெஹர் பாபா கூறுகிறார்." 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' (INDIAN EXPRESS) இந்தத் தனித்துவமான நிகழ்வின் விபரங்களை வெளியிட்டது, மேலும் ஒரு செய்தித்தாள் கீழ்வரும் இந்தச் செய்தியை வழங்கியது: "மெஹர் பாபாவிற்குப் பிரியமான பல கிரிக்கெட் வீரர்கள் உள்ளனர், அவர்களில் முக்கியமானவர்கள் இந்தியாவின் கேப்டன் நரி காண்டிராக்டர் (NARI CONTRACTOR), பாலி உம்ரிகர் (POLLY UMRIGAR), கந்து ரங்னேக்கர் (KHANDU RANGNEKAR) போன்ற பலர்."

1963 மே 27 திங்கட்கிழமை காலை பாபா, பெஹராம் மற்றும் பானு தாதாசாஞ்சியின் ஒன்பது வயது மகள் அர்மைட்டியின் (ARMAITY) ஸொராஸ்ட்ரியன் நவ்ஜோத் விழாவை (ZOROASTRIAN NAVJOT CEREMONY) நிகழ்த்தினார். அவர் முதலில் அந்த சிறுமியிடம் உரத்த குரலில் (குஜராத்தியில்) பிரார்த்தனையை மொழியுமாறு கூறினார்: "**அஹுரமஸ்தா**, **புனித ஸொராஸ்டர்**, **அவதார் மெஹர் பாபா**! **நான் எப்பொழுதும் நல்ல எண்ணங்களைக் கொண்டிருந்து**, **நல்ல வார்த்தைகளைப் பேசி**, **நல்ல செயல்களைச் செய்ய வேண்டும்**."

அந்த சிறுமி பாராயணத்தை ஓதிக் கொண்டிருக்கவே, பாபா பிரார்த்தனையின் முக்கியத்துவத்தை விளக்கி, அவளை முத்தமிட்டார். அவர் அதை மூன்று முறை மீண்டும் மீண்டும் செய்யுமாறு அறிவுறுத்தினார்; அதனால், அர்மைட்டிக்கு மூன்று முத்தங்கள் கிடைத்தன! அதைத் தொடர்ந்து, பாபா அவளுக்கு பாரம்பரிய சத்ரா மற்றும் கஸ்தியை (புனிதநூல்) வழங்கி, பிரார்த்தனையை மீண்டும் ஒருமுறை மொழியுமாறு கூறினார். சிறுமியின் தாயார் அவளுக்கு சத்ராவை அணிவித்த போது, மீண்டும் பிரார்த்தனை மொழியப்பட்டது. பாபா அவளைத் தழுவியதும், பெற்றோர், சகோதரி மற்றும் தாத்தா பாட்டிகளைப் போலவே அவளும் பாபாவிற்கு மலர் மாலை அணிவித்தாள். பின்பு மெஹராவை சந்திக்க உள்ளே சென்ற அர்மைட்டிக்கு இனிப்புகள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. பாபா இளநீரை அருந்தியவாறு அவளைத் தன் அருகில் அமர வைத்து, தனது கண்ணாடி டம்ளரிலிருந்து சிறிது இளநீரை அந்த சிறுமிக்குக் கொடுத்தார். விழா ஐந்து நிமிடங்களே எடுத்தாலும், பாபா அதைச் செய்தபோது அவர்கள் உணர்ந்த புனிதத்தன்மையை விவரிக்க வார்த்தைகள் இல்லை. சூழ்நிலை மிகவும் தெய்வீக அழகுடன் இருந்தது, பாபா பிரகாசமாகவும் புன்னகையுடனும் தோற்றமளித்தார். எந்த ஒரு தஸ்தூர்ஜியும் (ஸொராஸ்ட்ரிய பாதிரியார்) அர்மைட்டிக்காகவும், அங்குக் கூடியிருந்தவர்களுக்காகவும் அன்று பாபா அவர்களுக்கு வழங்கியதை சாதித்திருக்க முடியாது.

பின்னர் இசை நிகழ்ச்சியும், குருபிரசாத் வராந்தாவில் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது. பாபா அவர்களுடன் அமர்ந்து அனைவரும் உண்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

நியூயார்க் நகரிலிருந்து வந்த ஹாரி கென்மோர் அன்று பூனாவிற்கு வந்தார். கென்மோர் வந்தது மண்டலிக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் மூன்று வாரங்கள் தங்கி, தினமும் குருபிரசாத்திற்கு வர அனுமதிக்கப்பட்டார். இந்த முறை புதிய போலராய்டு கேமராவையும் (POLAROID CAMERA) கொண்டு வந்திருந்தார். அது புது விதமான வண்ணப் படங்களை எடுக்கும் செயல்திறன் படைத்தது; மேலும், கென்மோர் ஒருவரின் உதவியுடன் பாபாவின் பல புகைப்படங்களை எடுத்தார்.



கிரிக்கெட் - பரிசு வழங்குதல், குருபிரசாத், **26** மே **1963**
(CRICKET PRIZE DISTRIBUTION, GURUPRASAD, 26 MAY 1963)



ஹாரி கென்மோர், குருபிரசாத் (HARRY KENMORE, GURUPRASAD)

இந்தக் காலகட்டத்தில், காக்கா பாரியா சிறுநீரில் நச்சுத்தன்மை மிகையானதால் (UREMIA) வெகுவாக பாதிக்கப்பட்டார். ஆதியின் தூண்டுதலால், மே 31 அன்று, காக்காவை பூத் மருத்துவமனையில் அனுமதிக்க பாபா இணக்கம் தெரிவித்தார். அவ்வேளையில் பாபாவின் அறிவுறுத்தலின்படி, பாதிரி மெஹராஸாத் வளாகத்தை மேற்பார்வையிட அங்குச் சென்றார். '**காக்கா உயிரைத் துறந்தால், எரச்சின் அறைக்குப் பின்னால் இருந்த ஆறு மாமரங்களுக்கு நடுவே மெஹராஸாத்தில் புதைக்கப்பட வேண்டும்**' என்றும் பாபா குறிப்பிட்டார்.

1963 ஜூன் 1 சனிக்கிழமை காலை, பாபாவின் மனநிலை சரியில்லாமல் இருந்தது. அவர் தனது அன்பர் ஒருவரின் தனிப்பட்ட விஷயத்தை கவனிக்க வேண்டியிருந்த நிலையில் அவர் கூறினார்: "**இது போன்ற சிறிய, சிறிய பிரச்சினைகளை கவனிக்க நான் எனது உயர்ந்த நிலையிலிருந்து கீழே இழுக்கப்படுகிறேன்! முழுப் பிரபஞ்சமும் ஒரு பூஜ்ஜியமாகும், ஆனால் இந்த பூஜ்ஜியத்தை நான் கண்காணித்து, கவனித்துக் கொள்ள வேண்டும்! நீங்கள் தற்போது அனுபவிக்கும் உலகின் அனைத்து துன்பங்களும், நான் எனது மௌனத்தைக் கைவிடும்போது முக்கியமற்றதாகிவிடும். இப்போதும் கூட, இந்தத் துயரங்கள் அனைத்தும் ஒன்றுமில்லாதவை, ஆனால் நீங்கள் அவற்றை அவ்வாறு உணர்வதில்லை.**"

ஆஸ்திரேலியாவில் அச்சிடப்பட்ட அவரது புதிய சொற்பொழிவு தொகுப்புகள் அடங்கிய புத்தகம் 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) - அதன் முதல் பிரதி, விமான அஞ்சல் மூலமாக வந்ததாக பாபா அறிவித்தார். '**ஃபிரான்சிஸ் பிராபஸோன் எழுதிய 'தி ஈஸ்ட்-வெஸ்ட் கேதரிங்'** (THE EAST-WEST GATHERING) **என்ற புதிய புத்தகமும் சிறப்பாக இருந்தது**' என்று அவர் குறிப்பிட்டார். ஒருமுறை காலை சந்திப்பின் போது பாபா கூறினார்:

**அறிவுத் திறனை விட கற்பனைத் திறன் பெரிது. உதாரணமாக, நீங்கள் இங்கே அமர்ந்திருக்கும்போது, எதையேனும் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் மனம் அதை கற்பனை செய்யும் போது, நீங்கள், குறிப்பிட்ட பொருள் ஒன்றை உருவாக்கியவராகக் (படைப்பவர் -** CREATOR**) கருதப்படுகிறீர்கள். இப்போது இதை விரிவடையச் செய்யும் விதத்தில், உங்கள் கற்பனையை மேலும் அதிகரிக்க, அது உங்களை எந்த எல்லைக்கும் அழைத்துச் செல்லும். அவ்வாறு செய்வதன் மூலம், நீங்கள் பாதுகாப்பவர்** (PRESERVER) **ஆகிறீர்கள் - ஏனெனில் உருவாக்கப்பட்ட எதுவும் அழிக்கப்படும் வரை பாதுகாக்கப்படுகிறது. நீங்கள் உருவாக்கியதை நீங்கள் பாதுகாக்கிறீர்கள்.**

**இப்போது நான் உங்களிடம் 'கற்பனை செய்வதை நிறுத்திவிடுங்கள்' என்று சொல்வதானால், நீங்கள் அதை நிறுத்திவிடுகிறீர்கள்; அப்போது அங்கு ஒன்றுமில்லாத நிலை, கற்பனை மறைந்த நிலை உருவாகிறது. அதாவது உருவாக்கிய பொருள் கலைக்கப்படுகிறது அல்லது அழிக்கப்படுகிறது.**

**எனவே, உங்கள் அன்றாட வாழ்வில் கூட, கடவுளின் மூன்று அம்சங்களாகிய படைப்பவர்** (CREATOR), **காப்பவர்** (PRESERVER), **அழிப்பவராக** (DISSOLVER OR DESTROYER) **நீங்கள் செயல்படுகிறீர்கள். இவை, ஆற்றல், அறிவு, பேரின்பம் போன்ற பண்புகள் அல்ல, ஆனால் கடவுளின் அம்சங்கள்.**

**கடவுளின் எல்லையற்ற கற்பனை, படைப்பை உருவாக்கி நிலைநிறுத்துகிறது (பாதுகாக்கிறது). ஆனால் கடவுளைப் படைத்தது யார்?**

ஹோஷங் பரூச்சாவிடம் பாபா அந்தக் கேள்வியைக் கேட்டபோது, அவர் இவ்வாறு பதிலளித்தார், "கடவுள் உளதாயிருந்தார், கடவுள் உளதாயிருக்கிறார், கடவுள் எப்போதும் உளதாயிருப்பார்."

**"கடவுள் உளதாயிருக்கிறார், எப்போதும் உளதாயிருப்பார். அது சரி"** என்று பாபா கூறினார். **"ஆனால் 'கடவுள் உளதாயிருந்தார்' என்ற நிலையை உருவாக்கியது யார்? கடவுள் எப்படி உருவானார்?"**

பாபா விளக்கினார்: **"கடவுள், தானே கடவுளைப் படைத்தார், அதனால் அவர் குதா** (KHUDA - **சுயமாக இருக்கும் கடவுள்) என்று அழைக்கப்படுகிறார். கடவுளின் கற்பனையானது, அப்பாற்பட்ட நிலையில்** (BEYOND STATE - பரமாத்மா) **உலகை உருவாக்கியது, ஆனால் அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில்** (BEYOND BEYOND STATE - பராத்பர் பரபிரம்மா) **கடவுளின் கற்பனை, கடவுளைப் படைத்தது. இந்த உண்மையை மனதால் புரிந்து கொள்ள முடியாது, ஆனால் உண்மையான அறிவால் மட்டுமே அனுபவிக்க முடியும்."**

பச்சூபாய் மற்றும் நவ்ஸாரியைச் சேர்ந்த பிற அன்பர்கள் சில பஜனைகளைப் பாடினர். அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த பாபா, **"இன்று நான் 1400 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வர வேண்டும் என உணர்கிறேன்; 700 ஆண்டுகளுக்குப் பிறகு வர வேண்டும் என்ற எண்ணம் சோர்வடையச் செய்வதுபோலத் தோன்றுகிறது"** என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

ஹாரி கென்மோர் குருநாதரின் பிரார்த்தனையை மொழியும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அதைத் தொடர்ந்து, தேஷ்முக், கில்னானி இருவரிடமும் பாபா நகைச்சுவையாகப் பேசினார், அவர்களை அவர் எப்பொழுதும் கையிறுக்கமானவர்கள் என்று அழைப்பதுண்டு, **"நீங்கள் எனக்கு ஒரு கோடி ரூபாய் பணம் கொடுத்தால், நான் உங்களுக்கு இறை-உணர்வைத் தருவேன்!"**

தேஷ்முக்கிற்கு பாபா உதவினால், அந்தத் தொகையை அவரால் அடையப்பெற முடியும் என்று பதிலளித்தார். பாபா அவரைத் திருத்தும் விதத்தில் கூறினார், **"எனக்கு உங்கள் பணம் வேண்டாம்! எனக்கு வேண்டியது உங்கள் அன்பும், கோடிக்கணக்கான ரூபாய்களைத் தாண்டிய தூய்மையான இதயமும்தான்."**

ஆரத்திக்குப் பிறகு, பாபா பக்கத்து அறைக்குள் நுழைந்து, அங்கு அவர் மண்டலி மற்றும் சிலருடன் சீட்டு விளையாடினார். பாபா அவர்களிடம்,

**“சிறுநீரக கோளாறு காரணமாக, அஹமதுநகர் மருத்துவமனையில் காக்கா பாரியா அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் மெஹராஸாத்தை விட்டு வெளியேற விரும்பவில்லை, அவ்வாறு செய்ய நான் அவருக்கு உத்தரவிட வேண்டியிருந்தது.**” மதியம், குழு கலைந்து சென்றது.

மதியம் 1:15 மணிக்கு மண்டபத்திற்குத் திரும்பி வந்து அவர் கூறினார், **“எதிர்வரும் ஒன்பது மாதங்கள் எனக்குப் பெரும் துன்பமாக இருக்கும். நான் மெஹராஸாத் திரும்பிச் சென்ற பின்னர், அது தொடங்கும். எனது தாமன் மீதான உங்கள் பிடியை விட்டுவிடாதீர்கள் என்று நான் உங்களை எச்சரிக்கிறேன். நினைவில் கொள்ளுங்கள்: நான் கடவுள், எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி நான் கடவுள்!”**

ஒரு முறை, கென்மோர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு உணவு பண்டங்களை வழங்குவதற்காக சென்ற ஆதி, குருபிரசாத்திற்குத் திரும்பி வர காலதாமதமானது. உண்மையில், கென்மோர் குருபிரசாத்திற்குத் திரும்பி வந்த நீண்ட நேரத்திற்குப் பிறகுதான், ஆதி வந்து சேர்ந்தார். ‘**ஏன் இவ்வளவு தாமதமாக வந்தீர்கள்**’ என்று பாபா அவரிடம் கேள்வி எழுப்பியதற்கு, ஆதி, அவரது தாமதத்தை, தேவையற்ற வார்த்தைகளுடனான விளக்கத்துடன் நியாயப்படுத்தத் தொடங்கினார்.

அதற்கு பதிலளித்த பாபா, **“என் இதயம் மெழுகு போன்று மென்மையானது, ஆனால் கல்லைப் போலக் கடினமானது. ஹபீஸ் கூறுகிறார்:**

**அன்பிற்குரியவரிடம் அகங்காரம், ஆணவம் எதுவும் வேண்டாம்**
**அவர் கையில் கடினமான பாறையும் மெழுகு போல் உருகிவிடும்!**
**பிரியமானவரை வருந்தச் செய்தால், தீர்வு என்பதே இல்லாமலாகும்.**

ஆதியைத் திருத்தும் விதத்தில் பாபா அறிவுரை வழங்கினார்: **“நான் எனது மண்டலியுடன் நெருக்கமாக இருக்கிறேன், ஆனால் நான் வழங்கும் சுதந்திரத்தை நீங்கள் தவறாகப் பயன்படுத்தக்கூடாது; தவறு செய்தால், அதை ஒப்புக்கொள்ளுங்கள், வாதிடக் கூடாது.”**

அதற்குப் பிறகு பாபா ஒரு சொற்பொழிவை வழங்கினார்:

**பரிணாம வளர்ச்சியில் ஏழு நிலைகள் உள்ளன. இவற்றையெல்லாம் கடந்த பிறகு, மனித உருவில் ஒருவர் முழு உணர்வு நிலையை அடையப் பெறுகிறார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இந்த முழு உணர்வுடன், ஒருவர் மனப்படிவங்களையும்** (MENTAL IMPRESSIONS) **சேகரித்துள்ளார். ஆன்மீக உட்சுழற்சி செயல்முறையின் போது** (INVOLUTION PROCESS) **ஒருவர் அந்த மனப்படிவங்களை அகற்ற வேண்டும்; ஆன்மீக உட்சுழற்சியிலும் ஏழு நிலைகள் உள்ளன. அனைத்து மனப்படிவங்களும் விரயமான அடுத்த கணமே, ஒருவர், தான் கடவுள் என்பதை உணர்கிறார்.**

**பரிணாம வளர்ச்சியின் முதல் நிலையை அடைய லட்சக்கணக்கான ஆண்டுகள் ஆகும். இரண்டாவது நிலையை அடைய குறைவான நேரமே**

தேவைப்படுகிறது, மற்றும் மூன்றாவது நிலைக்கு அதைவிடக் குறைவாக, இப்படிப் பல. இதேபோல், ஆன்மீக உட்சுழற்சி செயல்முறையில் முதல் ஆன்மீகத் தளத்தை எட்ட, பல யுகங்கள் எடுக்கும்; ஆனால், அடுத்தடுத்து வரும் ஆன்மீகத் தளங்களை விரைவாகச் சென்றடைய முடியும்.

உணர்வு நிலையின் முதல் ஆன்மீகத் தளத்தைச் சென்றடைந்த ஒருவர், நீண்ட காலம் அங்கேயே நிலைகொண்டிருக்க வாய்ப்புள்ளது என்று ஹாஃபீஸ் கூறுகிறார். முதல் ஆன்மீகத் தளத்தில் பயணித்த மனிதரை, கவிகை வாகனத்தில் பயணிக்கும் ஒருவருடன் ஒப்பிட்டார். அனைத்து பயணிகளுடன் கவிகை வாகனம் இரவில் ஓய்வெடுக்கவே, அதிகாலையில் அதன் நடத்துநர் மணியோசையை எழுப்பி, அனைவரையும் பயணத்தைத் தொடர தயாராகுமாறு அறிவுறுத்துகிறார். இவ்வண்ணம், முதல் ஆன்மீகத் தளத்தில் ஒருவர் காலதாமதமாகும் வாய்ப்பு உள்ளது; எனவே, பரிபூரண குருநாதர், அந்த மனிதரின் பயணத்தைத் தொடர அவரை நினைவூட்ட வேண்டும். பரிணாம வளர்ச்சியில் பல யுகங்களுக்குப் பின்னரே, முதல் ஆன்மீகத் தளத்தைச் சென்றடைந்ததாக யாத்ரீகர் புகார் கூறுகிறார், ஆனால் அவர் அங்குச் சென்றதும், அவரது குருநாதர் மணியோசை எழுப்புவதன் மூலம் நீண்ட நேரம் அங்குத் தங்க விடாமல் தடுப்பதாகவும் ஹாஃபீஸ் கூறுகிறார்.

மூன்றாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருப்பவர் அதைக் கடக்க அவசரப்படக்கூடாது என்றும் ஹாஃபீஸ் கூறுகிறார், ஏனெனில் வளைந்து நெளிந்து போகும் ஒரு பாதை அதன் முன்னால் உள்ளது, மேலும் நான்காவது ஆன்மீகத் தளத்திலிருந்து ஒருவர் கீழ்நோக்கி விழும் வாய்ப்பு உள்ளது. எனவே, ஹாஃபீஸ் யாத்ரீகரிடம் கேட்கிறார், "கடவுளின் உறைவிடத்தின் வாசலை அடைய நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்?"

இந்த நான்காவது ஆன்மீகத் தளத்தில், அனைத்து சக்திகளின் பொக்கிஷம் உள்ளது. அதன் நுழைவாயிலை எட்டியதும், ஒருவர் பெரிதும் மெச்சத்தக்க சொர்க்கலோகத்திலிருந்து, அதல பாதாளத்தில் விழக்கூடும் என்பதால், அதை அதி விரைவில் கடக்க வேண்டும் என்று ஹாஃபீஸ் கூறுகிறார். ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் ஒருவர் நிலைநிறுத்தப்பட்டதும், கீழே விழும் சாத்தியம் இல்லை.

ஆறாவது ஆன்மீகத் தளத்தில், யாத்ரீகர் எங்கும், எதிலும் கடவுளைக் காண்கிறார், எனவே அவசரம் அல்லது தாமதம் என்ற கேள்விக்கு இடமில்லை. கடவுளை நேரடியாகக் காணும் இந்த நிகழ்வு திடீரென வருவது. ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள இறைப் பிரியர், "இன்றிரவு எனது அன்பிற்குரியவர் திடீரென என் அறைக்குள் நுழைந்ததில் நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி!" என்று கூறுவதாக ஹாஃபீஸ் விவரிக்கிறார்.

ஆறாவது ஆன்மீகத் தளம் 'இரவு' என்று குறிப்பிடப்படும் அதே வேளையில், ஏழாவது ஆன்மீகத் தளம் 'வைகறை'யைக் குறிக்கிறது. பிரியமானவர் 'உள்ளே' வந்ததும், இறைப் பிரியர், பிரகாசத்தின் இறைப்

பெருங்கடலைக் கண்டு, அடிபணிந்து வணங்கி, மிகவும் ஆனந்தமாக உணர்ந்தார். இந்த அனுபவத்தைப் பற்றி ஹஃபீஸ் கூறுகையில், "அன்றிரவு அவர் தனது அன்பிற்குரியவரைப் பார்த்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை, ஏனெனில் அது 40 ஆண்டுகளாக பரிபூரண குருநாதரின் பாதங்களில் அர்ப்பணித்த அவரது உழைப்பின் பலன்!" என்றார்.

ஹஃபீஸ் தொடர்ந்து கூறுகிறார்: "அவர் தனது அன்பிற்குரியவரை வணங்கிவிட்டு எழுந்தபோது, அவர் பிரகாசத்தின் இறைப் பெருங்கடலில் மூழ்க விரும்பினாலும், இன்னும் எல்லையற்ற வெற்றிடத்தைக் கடக்க வேண்டியிருந்தது."

இந்த ஈரடி வியாக்கியானம் ஆறாவது மற்றும் ஏழாவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையிலான அந்த நிலையைக் குறிக்கிறது. இந்தத் தருணத்தில் இறைப் பிரியர் அச்சத்தில் ஆழ்ந்து, 'கடலில்' மூழ்குவதா அல்லது 'கரையில்' இருப்பதா என்ற தயக்கத்தில் இருக்கிறார். 'வைகறை'ப் பொழுதில் (ஏழாவது ஆன்மீகத் தளத்தைச் சென்றடையும்போது), அவர் தனது பிரிவின் அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுபட்டு, அன்பிற்குரியவருடன் ஒன்றிணைகிறார். ஹஃபீஸ் கூறினார், "நான் முழு நிர்வாண நிலைக்குத் தள்ளப்பட்டேன், எல்லா மகிமையிலும் நான் தனிமைப்படுத்தப்பட்டேன்! உயர்ந்தவரிலும் உயர்ந்தவரின் நிலைக்கான அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டதால் என்ன ஓர் அற்புதமான 'வைகறை' இது! எனது குருநாதரின் கருணையால், நான் அவரது காலடியில் தூசியாக மாறினேன், இதனால் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் ஆனேன்!"

கடவுள் ஒருவரே உண்மையானவர், பிற அனைத்தும் மாயை என்று அர்த்தம்.

தொடர்ந்து பாபா கூறினார்:

பரமாத்மா உளதாயிருக்கிறார். அவர் அனைத்திலும் அனைவரிலும் வாழ்கிறார். அனைத்து ஆத்மாக்களும் பரமாத்மாவில் உள்ளன. அனைத்து ஆத்மாக்களும் பரமாத்மா. பரமாத்மாவிலிருந்து ஓர் ஆத்மா வெளிப்படுகையில், அது ஜீவாத்மா (தனிப்பட்ட ஆன்மா - INDIVIDUAL EMBODIED SOUL) என்று அழைக்கப்படும்; அது பொய்யும் போலியுமான உணர்வைப் பெறத் தொடங்குகிறது. ஜீவாத்மா, ஷிவாத்மாவுடன் (கடவுள், பரமாத்மா - GOD THE SUPREME SOUL) ஒன்றாக மாறுவதே குறிக்கோள். பரிணாமம், மறுபிறவி, உட்சுழற்சி செயல்முறைகளைக் கடந்து சென்ற பிறகு, ஜீவாத்மா இறுதியில் ஷிவாத்மா என்ற நிலையை அடையப் பெற்று, என்றென்றும் ஷிவாத்மாவாகவே நிலைகொண்டிருக்கும்.

ஷிவாத்மா இருமைத்தன்மையில் (மாயையில்) சாதாரண உணர்வு நிலைக்கு வரும் வேளையில், அதாவது, ஷிவாத்மா இருமை உணர்வுடன் இருக்கும்போது, அவர் ஒரே நேரத்தில், 'நர்' (மனிதன் - MAN) மற்றும் நாராயணனாக (கடவுள் - GOD) இருக்கிறார். எனவே இருமையில் சாதாரண பௌதீக உணர்வை மீண்டும் அடையப்பெறும் ஆத்மா ஜீவ்-ஷிவாத்மா (JIV-

SHIVATMA) **என்று அழைக்கப்பட வேண்டும். ஆத்மா சுய இறை-உணர்வை அடைவதற்காக, நரகம் எனும் இப்பூவுலகில் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்தாக வேண்டும். சுய இறை-உணர்வை அடைவது என்பது 'நான்-கடவுள்' நிலையை உணர்வுபூர்வமாகவும் தொடர்ச்சியாகவும் அனுபவிப்பதாகும். ஷிவாத்மா நிலையை அடைந்த பின்பு, நிர்விகல்ப நிலை** (பக்கா நிலை - BAQA STATE) **உள்ளது. நிர்விகல்ப நிலையில் இருக்கும் அத்தகைய ஷிவாத்மா, புருஷோத்தம்** (PURUSHUTTAM) **எனப்படும்.** (புருஷ் + உத்தம் என்பது மனிதனில் சிறந்த மனிதனுக்கு சமம் - SUPREME BEING, THE BEST OF MAN.)

**ஆத்மா என்பது புருஷ்** (மனிதன்); **பிரக்ருதி** (இருமைத்தன்மை, மாயா) **ஒன்றுமில்லாத ஒன்றிலிருந்து வந்தது. புருஷ், பிரக்ருதியிலிருந்து தன்னை விடுவித்து, சுய இறை-உணர்வை அடையும் வரை, புருஷும், பிரக்ருதியும் நித்தியமாக இணைக்கப்பட்டிருக்கும். ஏழாவது ஆன்மீகத் தளத்தின் மஜ்ஜூப் என்பவர் ஷிவாத்மா. அவதாரப் புருஷர், ஷிவ்-ஜீவாத்மா** (SHIV-JIVATMA), **பரம்-புருஷ்** (PARAM-PURUSH), **உயர்ந்தவர்களில் உயர்ந்தவர்** (THE HIGHEST OF THE HIGH), **அல்லது பிரியமான நித்திய இறை மனிதன்** (BELOVED AND ETERNAL MAN, GOD-MAN).

பாபா சொற்பொழிவை இவ்வாறு நிறைவு செய்தார், "**நான் சொல்வது அனைத்தும் எனக்குத் தெரிந்தவை; ஆனால் இவை அனைத்தும் உங்களுக்கு வெறும் வார்த்தைகள்!**"

பாபா பின்பு பச்சூபாயிடம் பாடுமாறு கேட்டுக்கொண்டார். அவர் பாடி முடித்ததும், பாஜ்வா நகரின் ஹரிபாய் பட்டேல், பரவசத்தில் நடனமாடியது மட்டுமின்றி பாடவும் தொடங்கினார். அவர் கண்களில் நீர் வழிய, பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார். பாபா தமது ஒவ்வொரு பாஜ்வா அன்பர்களையும் அரவணைத்து, பின்னர் அன்றைய தினம் ஓய்வு பெற்றார்.

மறுநாள் 1963 ஜூன் 2 ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு, ஒரு பெரிய குழு குருபிரசாத் மாளிகைக்கு வந்தது. பாபா மண்டபத்தில் அமர்ந்திருந்த வேளையில் ஆந்திராவிலிருந்து வந்த அன்பர்களைத் தழுவினார். நவ்ஸாரி குழு நிகழ்த்திய பஜனை நிகழ்ச்சியைத் தொடர்ந்து, மும்பையைச் சேர்ந்த மோகன்-ஸைகல் சில கஸல்களைப் பாடினர்.

பாபா கூறினார், "**ஆன்மீகப் பாதையில், 100 சதவீத நேர்மை இன்றியமையாதது. குறைந்த அளவிலான பாசாங்குத்தனமும் உங்களை யதார்த்தத்தின் கரையிலிருந்து துடைத்துத் தள்ளி விடும். கடவுள் ஒருபோதும் தூய்மையற்ற இதயங்களில் வெளிப்படுவதில்லை. ஆனால் தூய்மையான இதயம் ஒரு பரிபூரண குருநாதரின் அருளின்றி சாத்தியமற்றது.**"

கற்பனைக்கு எட்டும் எந்தவோர் ஒலியையும் நையாண்டி செய்யக்கூடிய ஒரு தொழில்முறை பொழுதுபோக்கு கலைஞர், பாபாவையும் அங்கிருந்த அனைவரையும் மகிழ்விக்கும் விதத்தில், ஒரு சிறிய நடிப்பை வழங்கினார்.

10:30 மணிக்கு குருநாதரின் பிரார்த்தனை ஹாரி கென்மோரால் மொழியப்பட்டது, அதைத் தொடர்ந்து ஆரத்தி, பின்னர் அனைவரும் புறப்பட்டுச் சென்றனர்.

குருபிரசாத் ஊழியர்களில் ஒருவரான ராமராவ் என்பவரின் குழந்தை நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டு காலமானது. குழந்தையின் தாயார் பாபாவிடம் வந்தபோது, கண்கலங்கி அழவில்லை. பாபாவின் விருப்பம் எதுவோ அதில், தான் மகிழ்ச்சி அடைவதாக பணிவாகவும் தைரியமாகவும் அந்தப் பெண்மணி கூறினார். பாபா அவருக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் அவருக்குக் கொடுத்த இரண்டு குழந்தைகளையும் (கடந்த ஆண்டு ஒன்று, இந்த ஆண்டு மற்றொன்று) தன்னிடம் அழைத்தாகக் கூறி **"இப்போது நான் உங்களுக்கு இன்னுமொரு குழந்தையை ஆசீர்வதிப்பேன், ஆனால் நீங்கள் இந்தக் குழந்தையை உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள்"** என்று கூறினார்.

பிற்பகலில் நவ்ஸாரி பாபா-அன்பர்கள் சுமார் இரண்டு மணி வரை பஜனை நிகழ்த்தினர். மும்பை நகரின் ஜெய் ஹிந்த் கல்லூரியின் பேராசிரியர் ராம் பஞ்ச்வானி, ஒரு கடத்தில் தாளமிட்டு, ஒரு மணி நேரம் கஸல்களைப் பாடினார். மோகன்-ஸைகலும் மீண்டும் பல கஸல்களைப் பாடினார். மாலை சுமார் 4:00 மணியளவில் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி, அங்கிருந்த அனைவரும் அவருடைய அரவணைப்பைப் பெற்றுச் சென்றனர்.

அன்று வந்த ஆதி துபாஷ் மற்றும் அவரது மகன் மேர்வானையும் தினமும் குருபிரசாத்திற்கு வர பாபா அனுமதித்தார். பல மாதங்களாக, மேர்வானுக்கு மூக்கை வெகுவாக உறிஞ்சும் பழக்கம் இருந்தது. அவர் அதை எந்த நேரத்திலும் செய்வதுண்டு. ஆதியும், ரோடாவும் அதைத் தடுக்க எல்லாவித முயற்சிகளையும் மேற்கொண்டனர், ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை.

ஒருமுறை, குருபிரசாத்தில் மூவரும் இருந்தபோது, பாபா, தாதி கேரவாலாவிடம், **"என்ன யோசனை செய்துகொண்டு இருக்கிறீர்கள்?"** என வினவினார்.

அதற்கு தாதி, "அது உங்களுக்குத் தெரியும், பாபா!" என்றார்.

பாபா, **"நிலவைப் போன்ற அழகான மனைவியை உங்களுக்குத் தருவேன் என்று நான் பலமுறை சொன்னேன், இன்னும் நீங்கள் அதையே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் என் மீது முழு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். ஒரு தனிமனிதன் என் மீது 100 சதவிகிதம் நம்பிக்கை வைத்து, அனைத்தையும் என்னிடம் விட்டுவிடும் போது, சுமை தானாக எனது தோள்களில் விழுகிறது. நான் செய்ய வேண்டிய உலகளாவிய பணியில், நான் முழுவதுமாக மூழ்கிவிடுகிறேன், ஆனால் அந்த தனி நபரின் சுமையின் பாரம், எனக்கு அவர் மீதான எனது பொறுப்பை நினைவூட்டுகிறது, மேலும் நான் அந்த நபருக்கு எல்லாவற்றையும் செய்கிறேன்."**

இதை பாபா கூறிய உடனேயே, ரோடா துபாஷின் மனதில் ஓர் எண்ணம் எழுந்தது: "சரி பாபா, மேர்வானின் மூக்கு பிரச்சினையை 100 விழுக்காடு உங்களிடமே விட்டு விடுகிறேன்."

இந்த சிந்தனை மனதில் உதயமான உடனேயே பாபா, ரோடாவை நோக்கி, **"ஏன் மேர்வான் மூக்கை உறிஞ்சுகிறான்?"** என்று சைகையால் வினவினார்.

ரோடா கெஞ்சினார், "ஓ பாபா, நாங்கள் அனைத்தையும் முயற்சித்தோம், அது நின்றபாடில்லை!"

பாபா சிறுவனின் பக்கம் திரும்பி, **"மேர்வான், ஏன் இப்படிச் செய்கிறாய்?"** என்று கடுமையாகத் திருத்தும் விதத்தில், பாபா அதைப் போன்ற கச்சிதமான பாவனை ஒன்றைச் செய்தார்: **"அது நல்ல பழக்கம் அல்ல. எப்போதேனும் யாரோ ஒருவர் அதற்காக உன்னை அறைய நேரிடும்."**

அப்போது பாபா இந்த சம்பவத்தை விவரித்தார்:

**எனது தந்தையின் நண்பர் ஒருவருக்கு கண் சிமிட்டும் பழக்கம் இருந்தது. ஒருமுறை அவர் ஷெரியார்ஜியுடன் எங்கோ சென்று கொண்டிருந்தபோது, சில மீனவர்கள் அவர்களது மனைவிகளுடன் அவர்களைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். தற்செயலாக, நண்பர் திடீரெனக் கண் சிமிட்டியதைக் கண்டு, மீனவர்கள் மிகவும் சீற்றமடைந்தனர்** (அவர் தங்கள் மனைவிகளைப் பார்த்து கண் சிமிட்டுகிறார் என்று மீனவர்கள் நம்பினர்). **அவரைப் பற்றிப் பிடித்து, ஒருவர் அவரை அறைய ஆயத்தமான போது, ஷெரியார்ஜி தலையிட்டு, "அவர் வேண்டுமென்றே அதைச் செய்யவில்லை, அது அவருடைய பழக்கம்" என்று கூறினார். அந்த நேரத்தில், நண்பர் தற்செயலாக அந்த மீனவரைப் பார்த்து கண் சிமிட்ட நேர்ந்தது; அதைக் கண்ட மீனவர்கள் இது ஒரு தன்னுணர்வற்ற பழக்கம் என்பதைக் கண்டு அவரை விடுவித்தனர்.**

மேர்வானிடம் பாபா, **"இதுபோல நீயும் ஒரு நாள் மாட்டிக்கொள்ள வாய்ப்புள்ளது!"** அதன் பின்னர் அவர் மிகவும் தீவிரமாகி, **"இனிமேல் மூக்கை உறிஞ்சுவதை நீ நிறுத்த வேண்டும்; மறுபடியும் அதை நான் கண்டுபிடித்தால், உனது முகத்தை மீண்டும் பார்க்க மாட்டேன்!"** என்றார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, மேர்வான் மூக்கு உறிஞ்சுவதை பாபா பார்த்தார், ஆனால் அவன் அதை அறியாமல் செய்ததால் அவனை மன்னித்தார். இது சில முறை நடந்தது, ஒவ்வொரு முறையும் மேர்வானை மன்னித்து பாபா கூறினார், **"நீ அறியாமல் செய்வதால் நான் அதை இன்றைக்கு விட்டுவிடுகிறேன். ஆனால் நினைவில் கொள், நாளை முதல் மூக்கு உறிஞ்சுவதை நான் பார்த்தால், உன் முகத்தைப் பார்க்கமாட்டேன்!"**

அவர் ஆதி, ரோடா இருவரிடமும், **"நீங்கள் வீடு திரும்பிய பின்னர், அவன் இதை மீண்டும் செய்தால், எனக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பவும்"** என்று கூறினார்.

ரோடா, “மேர்வானின் கைச்செலவுக்கான பணத்திலிருந்து தொலைத்தந்திக்கு பணம் தருகிறேன்” என்றார்.

அதற்கு பாபா, “**இல்லை, இல்லை, அதில் பாதியை நீங்கள் செலுத்துங்கள்**” என்றார்.

அப்போதிலிருந்து, மேர்வான் மூக்கு உறிஞ்சுவதை நிறுத்தினான். ஒருமுறை கூட அவன் அதை மீண்டும் செய்யவில்லை. அடுத்தடுத்த ஆண்டுகளில், பாபா கடுமையான ஏகாந்தவாசம் கடைப்பிடித்த போது, கடிதப் பரிமாற்றம் அனுமதிக்கப்படாத வேளையில், ஆதியும் ரோடாவும், மேர்வானின் முன் அமர்ந்து, “எங்கே மேர்வான், இப்போது உனது மூக்கை உறிஞ்சி காட்டினால், நாங்கள் பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்ப முடியும்!” என்று கேலி செய்து வந்தனர். ஆனால் மேர்வான், “அப்படியானால், நீங்கள் என்னிடம் அவ்வாறு செய்யச் சொன்னதாக நான் பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்புகிறேன்” என்று பதிலளித்தான்.

ஒருமுறை குருபிரசாத்தில் ஆதி துபாஷ், பாபாவுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தார். அவர் சீட்டுகளை விநியோகித்துக் கொண்டிருந்த போது, பாபாவின் கைகளுக்கு நல்ல சீட்டுகள் வந்தன. பாபா வினவினார், “**இந்த அட்டைகளை வேண்டுமென்றே என்னிடம் கொடுத்தீர்களா? நீங்கள் இதில் தந்திரம் ஏதேனும் செய்தீர்களா?**” அடியில் இருந்த அட்டைகளை பாபாவிற்கு வழங்கியதாக ஆதி ஒப்புக்கொண்டார். எனவே பாபா, ஆதியின் காதை மெதுவாகத் திருகினார்; அவர் அதிக அழுத்தம் கொடுக்கவில்லை என்றாலும், ஆதியின் காது பல மணி நேரம் வலித்துக் கொண்டிருந்தது.

1963 ஜூன் 3 திங்கட்கிழமை, தரிசன நாளான அன்று, தூக்கு நாற்காலியை தாரா தாதாசாஞ்சி, ஜெஹாங்கு ஸுகத்வாலா, ஆதி துபாஷ் மூவரும் தூக்கிச் சென்றனர். அன்று காலை 7:45 மணிக்கு, பாபா மண்டபத்திற்குள் நுழைந்ததும், புதிய நபர்களுக்கு முதலில் தரிசனம் வழங்கினார். அஹமதுநகர் பஜனை குழுவினர், இதயத்தை வருடும் சிறந்த பாடல்களை வழங்கினர். மானேக் அன்று காலையில் ஒரு கஸல் பாடினார், பாபா அவரை அன்று பிற்பகல் மேலும் ஐந்து கஸல்களைப் பாடுமாறு கூறினார்.

கிழக்கு அரைகோளப் பகுதியில், பொய்யும் போலியுமான துறவிகள் மற்றும் குருக்கள் என்று அழைக்கப்படுபவர்கள் ஏராளமாக இருப்பதைக் குறிப்பிட்டு, பாபா ஒரு கட்டத்தில் பாடலை இடையே நிறுத்திவிட்டு இவ்வாறு கூறினார்: “**அவர்கள் கடற்கரையில் சிதறிக்கிடக்கும் கிளிஞ்சல் சிப்பிகள் போன்றவர்கள், அவற்றின் மிதமிஞ்சிய மினுமினுப்பு கடற்கரையில் ஆங்காங்கே அலைந்து திரிபவர்களை ஈர்க்கிறது; அப்போது அவர்கள் கடலின் புதையலை அடையப் பெற்றதாக நினைக்கின்றனர்.**”

**ஆழ்கடல் முத்துக்களை கிளிஞ்சல் சிப்பிகளுடன்**
**ஒப்பிடும் மக்கள் எவ்வளவு முட்டாள்கள்.**
**உண்மையான முத்து இங்கே உள்ளது,**
**சிப்பிகளுக்குப் பின்னால் ஓடாதீர்கள்.**

ஹாஃபீஸின் '**உண்மையான முத்து இங்கே உள்ளது**' என்று பாபா மேற்கோள் காட்டியபோது, அவர் தன்னைச் சுட்டிக்காட்டினார். கவிஞர் ஜிகரின் கஸலிலிருந்து ஓரிரு வரிகளை அவர் சில முறை விவரித்தார்:

**நான் அன்புக் கடலில் மூழ்கும்போது,**
**என்னை அரவணைப்பதோ துன்ப அலைகள்.**
**அந்த அரவணைப்பு எனது தாயின் அணைப்பு போன்றது;**
**கரையின் புகலிடத்தை நாடுபவர்கள்,**
**பயந்து நடுங்கும் கோழைகள்!**

காலை 10:30 மணிக்கு, ஹாரி கென்மோர் குருநாதரின் பிரார்த்தனையை மொழிந்தார், அதைத் தொடர்ந்து ஆரத்தியும் நிகழ்த்தப்பட்டது. அதன்பின், பாபா, ஹரிபாய் மற்றும் அவரது குடும்பத்தினருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். ஹரிபாயின் புதிதாக திருமணமான மகனும் வந்திருந்ததால், தான் இதற்கு சம்மதம் தெரிவித்ததாக பாபா குறிப்பிட்டார். அங்கிருந்த அனைவருக்கும் இதை ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று அவர் தெரிவித்தார்.

பாபா பக்கத்து அறைக்குள் சென்று, சுமார் 45 நிமிடங்கள் அமர்ந்து, பல்வேறு விஷயங்களைப் பேசி முடித்து, 11:45 மணியளவில் தனது அறைக்குச் சென்றார். மதியம் 12:10 மணிக்கு அவர் மண்டபத்திற்குத் திரும்பி வந்தபோது, அஹமதுநகர் பஜனைக் குழுவினர் தங்கள் இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்தனர். அன்று, ஃப்ரீனி தாதாசாஞ்சி கராச்சியிலிருந்து வந்த தனது உறவினர்களுடன் பாபாவை சந்திக்க வந்தார்.

இதற்கிடையில், மானேக், ருஸ்தம் காக்கா, சகன், ரங்கோலே, வாமன், பகீரத் ஆகியோர் கவாலி பாடகர்களாக மாறுவேடமிட்டு வந்தனர். அவர்கள் மண்டபத்திற்குள் நுழைந்ததும், மஹாராணி ஷாந்தாதேவியிடம் பாபா, "**இன்று ஒரு பிரபலமான கவாலி பாடகர் வந்துள்ளார். அவருடைய நிகழ்ச்சி குருபிரசாத்தில் இதுவரை நடந்திராத, சிறப்பு வாய்ந்ததாக இருக்கும்**" என்று கூறினார்.

வேடிக்கையாக, பாபா, மானேக்கிடம் அவரது பெயரைக் கேட்டார், அதற்கு அவர், "மக்கள் என்னை ஷாஸதா லக்னவி கவால் (SHAHZADA LAKHNAVI QUWAAL!) என்று அழைக்கிறார்கள்!"

**"உங்கள் குரு யார்?"**

சகனைச் சுட்டிக்காட்டி, மானேக், "அவரேதான், பிர்ஸாதா லக்னவி கவால் (PIRZADA LAKHNAVI QUWAAL!) என்று அழைக்கப்படுகிறார்." (பிர்ஸாதா என்றால் பீரின் மகன் என்று பொருள்; லக்னவி என்றால் லக்னோவைச் சேர்ந்தவர்.)

பாபா நகைச்சுவையாகக் குறிப்பிட்டார், "**அவர் ஒரு 'பிர்ஸாதா' போல் இல்லை**! **அவர் வாழ்வாதாரத்திற்காக நடைபாதையில் வேர்க்கடலையை வறுத்து விற்பனை செய்யும் ஒரு சிறுவனைப் போலவே இருக்கிறார்** (வேறுவிதமாகக் கூறினால், அழுக்கடைந்த தோற்றமுடைய ஒருவர்)." அனைவரும் அடக்க முடியாமல் சிரித்தனர், அப்போதுதான் 'பிரபலமான' கவாலி பாடகர்கள் யார் என்பதை ஷாந்தாதேவி கண்டுபிடித்தார்.

ஆயினும்கூட, மானேக் நன்றாகப் பாடினார், கவாலி பாடகரின் வழக்கமான சைகைகளை உற்சாகமாக வெளிப்படுத்தினார். மாலை 3:30 மணிக்கு ஆரத்திக்குப் பின்னர் அனைவரும் கலைந்து சென்றனர். நிகழ்ச்சிக்குப் பிறகு மானேக், பாபாவிடம் 'மாறுவேடத்தில் ஏமாற்றியதற்காக' மன்னிப்புக் கோரினார், அதற்கு பாபா பதிலளித்தார், "**நீங்கள் என்னை மிகவும் மகிழ்வித்ததால் மன்னிக்கப்பட்டீர்கள்**."

ஐந்து வாரங்கள் குருபிரசாத்தில் தங்கிய பிறகு, பால் நாத்து தனது பள்ளி ஆசிரியர் பணிக்குத் திரும்புவதற்காக அடுத்த நாள் காலையில் புறப்பட்டார்.

வழக்கம் போல் 1963 கோடையில் சில நாட்களுக்காக பாவ் கல்சூரி குடும்பத்தினரை பாபா பூனாவிற்கு அழைத்தார். அவர்கள் மெஹராபாத்திலிருந்து அஹமதுநகரில் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு மாறுவது, ஆதியின் கண்காணிப்பில் அவர்களை அங்குத் தங்கவைப்பது குறித்தும் அவர்களுடன் கலந்துரையாடினார்; இது அஹமதுநகரில் அமைந்த பள்ளி, கல்லூரியில் குழந்தைகளுக்கு சிறந்த கல்வி வழங்க வாய்ப்பாக அமைந்தது. (கல்சூரி குடும்பத்தினர் 1963 ஜூன் 13 அன்று இடம்பெயர்ந்து மேற்குப் பகுதியில், பிரோஜாவின் அறைக்கு அடுத்ததாக ஒரு சில அறைகளை ஆக்கிரமித்தனர்.)

ஜூன் 5 அன்று, பாபாவை ஒருவர் தனது ஊருக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தபோது, பாபா இவ்வாறு பதிலளித்தார், "**நான் இங்கேயும் அங்கேயும் இருக்கிறேன்; நான் அருகிலும், தொலைவிலும் இருக்கிறேன். நான் எங்கும் இருக்கிறேன்!**"

அன்று பாபா சொற்பொழிவு வழங்கும் மனநிலையில் காணப்பட்டார். அவர் 'நிர்வாணா' (ஃபனா - FANA) - பொய்யும் போலியுமான மனதை நிர்மூலமாக்குவது குறித்து விளக்கமளித்தார்:

**ஃபனாவில் மூன்று வகை - ஃபனா-ஃபில்லா** (FANA-FILLAH) **ஃபனா-ஃபி-ஷேக்** (FANA-FI-SHEIKH) **மற்றும் ஃபனா-ஃபி-ரஸூல்** (FANA-FI-RASOOL). **முதல் வகையில், ஒரு நபர் கடவுளுடன் ஐக்கியமாகிறார். இந்த நிலையில் எப்பொழுதும் 56 நபர்கள் உள்ளனர்.**

ஃபனா-ஃபி-ஷேக்கில், **ஒரு நபர் ஒரு சத்குருவின்** (குதுப்) **உணர்வு நிலையுடன் ஒன்றிணைகிறார். அவர் சத்குருவின் எல்லையற்ற உணர்வை அடையப் பெற்றவர், ஆனால் அவர் சத்குருவின் அலுவலக செயற்பாட்டில் பங்கெடுக்க முடியாத நிலையில் இருப்பவர். இந்த நிலையில் அவர் சில**

**வேளைகளில் தனது எல்லையற்ற ஆற்றல்-அறிவு-ஆனந்தம் அனைத்தையும் மிகக் குறுகிய அளவிலேயே பயன்படுத்துகிறார். அவரை இந்த நிலைக்கு கொண்டு வந்த சத்குரு, அவரது உடலைத் துறந்த பின்னர், ஃபனா-ஃபி-ஷேக்கும் உடனடியாக தனது உடலைக் கைவிடுகிறார்.**

(பூமியில்) **எப்பொழுதும் ஐந்து சத்குருக்கள்** (குதுப், பரிபூரண குருநாதர்கள்) **உள்ளனர். ஃபனா-ஃபி-ரஸூல் மிகவும் அரிதான நிலை, மிகவும் அரிதாகவே நிகழ்கிறது; அதாவது ஒரு நபர் அவதார புருஷருடன்** (ரஸூல்) **ஒன்றிணைகிறார். அது, உலகில் அவதார புருஷர் பௌதீக உடலில் வருகை தரும் போதும், அவதார புருஷரின் தனித்துவமான உலகளாவிய வெளிப்பாட்டிற்கு சற்று முன்னரும் நிகழும் ஓர் அரிதான நிகழ்வு. இது கடந்த காலத்தில் நடந்துள்ளது.**

**ஃபனா-ஃபில்லா நிலையிலிருந்து எவரும் ஃபனா-ஃபி-ரஸூல் நிலையை அடைய முடியாது. அவதார புருஷரால் தேர்வு செய்யப்பட்ட முழுநிறை உணர்வு மிக்க ஒரு சாதாரண மனிதன் மட்டுமே, ஃபனா-ஃபி-ரஸூல் நிலையை எய்தும் வாய்ப்பை அடையப் பெறுகிறார். இந்த நிலையில், தேர்ந்தெடுக்கப்பட்ட நபர், அவதார புருஷரைப் போல மாறும் அதே வேளையில், அவதார புருஷரின் அலுவலக அதிகாரத்தை வகிப்பதில்லை. அவதார புருஷர் அவரது பௌதீக உடலைத் துறந்த உடனேயே ஃபனா-ஃபி-ரஸூலும் தனது உடலைக் கைவிடுகிறார்.**

பாபா தொடர்ந்து கூறினார்:

**நான்காவது ஆன்மீகத் தளம் கடவுளின் உறைவிடத்தின் நுழைவாயில் என்று அழைக்கப்படுகிறது. நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் யாத்ரீகர் ஒருவர், ஐந்தாவது ஆன்மீகத் தள யாத்ரீகரை, தனது சக்தியால் துன்புறுத்த முயன்றால், ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் வாலி, அவதார புருஷரின் உதவியை நாடுகிறார்; ஆனால் ஒரு சத்குருவின் உதவியை நாடுவதில்லை. இவ்வாறு நான்காவது ஆன்மீகத் தள யாத்ரீகரின் குறும்புகளிலிருந்து வாலி, அவதார புருஷரால் நேரடியாகப் பாதுகாக்கப்படுகிறார்; அவ்வேளையில் துன்புறுத்தும் யாத்ரீகரின் சக்திகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. மிகவும் அரிதாகவே, நான்காவது ஆன்மீகத் தள யாத்ரீகர், சத்குருவின் முன்னால் ஆணவத்துடன் செயல்படுகிறார். ஏதேனும் குறும்புத்தனம் அல்லது ஆணவம் வெளிப்பட்டால், சத்குரு அப்படிப்பட்ட ஒருவரைக் கடுமையாகக் கையாள்கிறார்; அவர் இறுதியில் சத்குருவிடம் சரணடைகிறார். சத்குரு, அதே நேரத்தில் அவருக்கு ஐந்தாவது ஆன்மீகத் தளத்திற்கான உந்துதலை வழங்குகிறார்.**

**ஃபனா-ஃபில்லா நிலையில்,** (சுயம் அழிந்து கடவுளோடு ஒன்றிணைந்த நிலை) **பூமியில் 56 ஆன்மாக்கள் வாழ்கின்றன. நிர்விகல்ப் (பக்கா - BAQA) நிலை என்பது கடவுளாக நிலைகொண்டிருக்கும் அதே வேளையில் எல்லையற்ற ஆற்றல், அறிவு, பேரின்பம் ஆகியவற்றைப் பயன்படுத்த**

**முடியும். ஒரு சத்குரு** (குதுப்) **என்பவர் கடவுளின் வாழ்க்கையை வாழ்ந்து, எல்லையற்ற ஆற்றல், அறிவு, பேரின்பம் ஆகியவற்றைப் பயன்படுத்துபவர். சில ஸூஃபிக்கள், ஃபனா-ஃபில்லா மிக உயர்ந்த நிலை என்று நம்பும் அதே வேளையில், பிற ஸூஃபிக்கள் ஒரு சத்குருவின்** (குதுப்) **நிலை மிக உயர்ந்தது என்றும், இன்னும் சிலர் ரஸூலின்** (அவதார புருஷர்) **நிலை மிக உயர்ந்தது என்றும் நம்புகிறார்கள்.**

அடுத்த நாள், ஜூன் 6ஆம் தேதி, பாபா தனது ஐந்து சத்குருக்களைப் பற்றிக் குறிப்பிட்டார்:

**தாஜுதீன் பாபா, சாய்பாபா, ஹஸ்ரத் பாபாஜான் ஆகியோர் ஜலாலி** (எளிதில் சினத்தை வெளிப்படுத்தும்) **மற்றும் ஜமாலி** (அன்பான, அமைதியான) **பண்புகளைக் கொண்டிருந்தனர். உபாஸனி மஹாராஜ் ஜலாலி வகையைச் சார்ந்தவராகவும், நாராயண் மஹாராஜ், ஜமாலி குணங்களை வெளிப்படுத்துபவராகவும் இருந்தனர். இந்த ஐந்து சத்குருக்கள், இந்த யுகத்தின் அவதார புருஷரின் வருகைக்கு வித்திட்டு, உலகில் கொண்டு வந்தவர்கள்.**

**தற்போது பூமியில் வாழும் ஐந்து சத்குருக்களில் மூவர் இந்துக்கள் மற்றும் இருவர் முஸ்லீம்கள்.** (பாபா அவர்களின் பெயர்களை வெளிப்படுத்தவில்லை) **அவர்கள் அனைவரும் ஆண்கள். 700 ஆண்டுகளுக்குப் பின்பு நிகழும் எனது அடுத்த வருகையின் போது, ஐந்து சத்குருக்களும் ஆண்களாக இருப்பார்கள்.**

**நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் ஒருவர் தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால், சத்குரு ஒரு ஜமாலியாக இருக்க நேர்ந்தால், நான்காவது ஆன்மீகத் தளத்தில் இருக்கும் அவரை அதல பாதாள கல் உணர்வுக்குக் கொண்டு வராமல், ஒரு சாதாரண மனிதனின் பௌதீக உணர்வு நிலைக்குக் கொண்டுவருகிறார். ஆனால் சத்குரு ஜலாலி வகையாக இருந்தால், அவர் அந்த வீழ்ச்சியை நேரடியாக கல் உணர்வுக்கு கொண்டு வருவார்!**

**அவதார புருஷர் நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் ஒரு மனிதனை ஒருபோதும் தொடர்பு கொள்ளாத பட்சத்தில், அந்த நபர் தானாகவே தனது அனைத்து சக்திகளையும் இழக்க நேரிடும். ஆனால் நான்காவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ளவர், ஒரு சத்குருவை அணுக நேர்ந்தால், அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டு, சத்குருவால் ஐந்தாவது ஆன்மீகத் தளத்திற்கான உந்துதலை அடையப் பெறுகிறார்.**

அடுத்த நாள் 1963 ஜூன் 7 அன்று பாபா அவரது சொற்பொழிவைத் தொடர்ந்தார்:

**ஒரு பரிபூரண குருநாதர்** (சத்குரு) **ஒரே நேரத்தில் பத்து இடங்களில் உடல் வடிவில் தோன்றலாம்; அதே நேரத்தில், அவதார புருஷர் ஒரே**

நேரத்தில் ஆயிரம் வெவ்வேறு இடங்களில் தோன்றலாம். நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, சில நேரம் ஓரிடத்தில், சில நேரம் ஆயிரம் இடங்களில் தோன்றுவேன். இதுவரை இப்படி ஒரு சம்பவம் நடந்ததில்லை.

ஒரு சத்குருவிற்கு 'அப்தல்' (ABDAL) மற்றும் 'அவ்தாத்' (AVTAD) என இரண்டு வகையான முகவர்கள் உள்ளனர். ஓர் அப்தல் பல வடிவங்களை எடுக்கலாம் - பொதுவாக ஒரு முதியவர் அல்லது குழந்தை. ஆன்மீகப் பாதையில் யாத்ரீகர் ஒருவர் அதீத தாகத்தால், உயிரைத் துறக்கும் நிலையில் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். ஒரு சத்குரு உடனடியாக அப்தல் ஒருவரிடம் அங்குச் சென்று, அவருக்கு உதவுமாறு அறிவுறுத்துகிறார். தாகத்தால் உயிரைத் துறக்கும் நிலையில், கட்ச் பாலைவனத்தில் தொலைந்து போன எனது தந்தை ஷெரியார்ஜிக்கு அப்தல் உதவினார். அந்த நேரத்தில், நீண்ட தாடியுடன், தோளில் ஒரு தோல் பை நிரம்ப தண்ணீரை சுமந்து கொண்டு ஒரு நபர் ஷெரியார்ஜி முன்னால் தோன்றினார். தண்ணீரை அருந்திய அடுத்த கணமே அந்த முதியவர் மாயமாக மறைந்தார்.

ஓர் அப்தல் முக்கியமான பணியை பெரும்பாலும் ஆண் வடிவில் செய்கிறது. அப்தல்களுக்கு ஆண் அல்லது பெண் வடிவங்கள் உள்ளன. பெண் வடிவத்தில் இருக்கும் அப்தல் ஆண் வடிவத்தில் தோன்றுவதில்லை, ஆனால் சத்குருவால் வழங்கப்பட்ட கடமைக்கு ஏற்ப, ஒரு பெண் வடிவத்திலிருந்து வேறொரு வடிவத்திற்கு மாறுகிறது. அதேபோல், ஆண் வடிவத்தில் இருக்கும் ஓர் அப்தல், பெண் வடிவத்தில் தோன்றாது. அவ்தாத் எப்பொழுதும் ஆண் வடிவில் இருப்பதோடு, சத்குருவால் நிர்ணயிக்கப்பட்ட வழக்கத்திற்கு மாறான சிறு சிறு பணிகளில் செயல்படுகிறது.

அதைத் தொடர்ந்து, காலத்தைப் பற்றிப் பேசுகையில், பாபா கூறினார், **"மாயையில் ஐநூறு கோடி ஆண்டுகள் என்பது நித்தியத்தில் ஒரு கணம் மட்டுமே!"**

பாபா தொடர்ந்து கூறினார்: **"மூன்றாவது மற்றும் நான்காவது ஆன்மீகத் தளத்திற்கு இடையிலான பயணம் மிகவும் கடினமானது. இந்தக் கட்டத்தில், யாத்ரீகர் ஒருவருக்கும் சத்குருவிற்கும் இடையிலான தொடர்பு, மயிரிழையால் இணைக்கப்பட்டது போன்று மிகவும் மென்மையானது என்று சொல்லலாம்! இணைப்பு துண்டிக்கப்படாமல் இருக்க அவர்கள் மிகப்பெரிய கட்டுப்பாட்டைக் கையாள வேண்டியது அவசியம்."**

மேலும், **"யாத்ரீகர் ஒருவரின் வாழ்வில், கடவுளோடு ஒன்றிவிட வேண்டும் என்ற ஏக்கத்தைக் கூட கைவிட வேண்டிய காலம் வரும்"** என்றார்.

படைப்பைப் பற்றி விளக்கி பாபா கூறினார்:

**'எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒன்றிலிருந்து'** (EVERYTHING), **'ஒன்றுமில்லாத ஒன்று'** (NOTHING) **வெளிவந்தது. இந்த 'ஒன்றுமில்லாத ஒன்றி'லிருந்து** (NOTHING) **படைப்பு என்று அழைக்கப்படும் இப்பூவுலகம் வெளிவந்தது. இந்த 'ஒன்றுமில்லாத ஒன்று'** (NOTHING), **எல்லாமாகத்**

(everything) **தோற்றமளிக்கிறது. இப்படி, ஒருவர் ஆறாவது ஆன்மீகத் தளத்தைக் கடந்து, உண்மைப்பொருளை** (REALITY) **நோக்கிச் செல்லும்போது, ஒருவர் ஒரு முழுமையான வெறுமையை - வெற்றிடத்தை கடந்து செல்ல வேண்டும். இந்த வெறுமையின், வெற்றிடத்தின் அனுபவத்தை விவரிக்க இயலாது. சத்குருக்கள் மற்றும் மஜ்ஜூப்கள் அனைவரும் இந்த அனுபவத்தைக் கடந்து சென்றவர்கள். இந்த வெற்றிடம் மிகக் குறுகிய காலத்திற்காக மட்டுமே, ஏனெனில் யாத்ரீகர் உடனடியாக அங்கிருந்து 'நான்-கடவுள்'** (I-AM-GOD) **எனும் உறுதிப்பாட்டின் கடவுள் உணர்வை எய்தும் (ஃபனா-ஃபில்லா) நிலைக்குச் சென்று, தன்னை எல்லாம் வல்ல** (EVERYTHING) **கடவுளாக உணர்கிறார்.**

**சாதாரண, பௌதீக உணர்வு நிலையைத் திரும்பப் பெறும் பரிபூரண குருநாதருக்கு (சத்குரு), இந்த 'ஒன்றுமில்லாத ஒன்று'** (NOTHING) **அவரது உலகளாவிய உடலாக மாறுகிறது. இந்த உலகளாவிய உடலிலிருந்து, படைப்பில் உள்ள அனைத்தும் வெளியே கொணரப்பட்டு, உள்வாங்கி, மென்று உமிழப்படுகின்றன.**

முந்தைய ஆறு அவதார புருஷர்களின் பலவீனங்களை மீண்டும் ஒருமுறை விவரித்த பிறகு, பாபா, **மாயாஜால சக்திகள்** - 'தாந்த்ரீக வித்யா' என்ற தலைப்பிற்குச் சென்றார்: **"தீவிரமான தியானம், ஒருமித்த கவனம் மற்றும் பிற வழிகளில் மாயாஜால சக்திகளை எவர் ஒருவரும் அடைய முடியும், ஆனால் அவை ஆன்மீகத் தளங்களின் சக்திகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை; ஆன்மீகத் தளங்களின் சக்திகள் தெய்வீக சக்திகள். இவை அனைத்தையும் மூன்று வழிகளில் - நல்ல, தீய அல்லது தீங்கிழைக்கும் வகையில் - சொல்லப்போனால், தந்திரச் செயல்களைச் செய்பவராக இருந்த முஹமது சேல்** (MOHAMMED CHHEL) **செய்தது போல - வேடிக்கையான வழியில் பயன்படுத்தப்படலாம்."**

முஹமது சேலின் வாழ்க்கையிலிருந்து பாபா ஒரு நகைச்சுவையான சம்பவத்தை விவரித்தார்: **"அவர் தனது சக்தியை, ரயில்களை நிறுத்தவும், ரயில் பயணச்சீட்டுகளை வரவழைத்து வழங்கவும் பயன்படுத்தினார். ஒருமுறை அவர் ஒரு குழந்தையை ஓடும் ரயிலிலிருந்து வெளியே வீசி எறிந்தார், மேலும் பெற்றோரின் அழுகை மற்றும் ஆரவாரங்களுக்கு மத்தியில், அவர் அமைதியாக இருந்து, அந்தக் குழந்தையை பத்திரமாகத் திருப்பிக் கொடுத்தார்."**

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **"இந்த சக்திகள், வேடிக்கையான விதத்தில் வீணடிக்கப்பட்டாலும், எந்தவிதமான பாதிப்பையும் விளைவிக்காமல், மனிதன் தனது தாந்திரீக சக்திகளோடு விளையாடிக்கொண்டே இருக்கிறான். ஆனால் தீங்கிழைக்கும் விதத்தில் பயன்படுத்தப்படுவது மிக மிக மோசமானது."**

மும்பை குழு பாபாவுடன் தவறாமல் தினமும் காலை 8:00 மணி முதல் 10:30 அல்லது 11:00 வரை இருந்தது. பொதுவாக, பாபா சோர்வடைந்த நிலையில் காணப்பட்டார், இருந்தாலும், அவர் அனைவருக்கும் தமது அன்பான சகவாசத்தை வழங்க, உரைகள், நகைச்சுவை துணுக்குகள் அல்லது இசை நிகழ்ச்சியுடன் நேரம் கடந்தது. இருந்தபோதிலும், அவர் உண்மையிலேயே மிகவும் சோர்வாக இருந்ததை அங்கிருந்த அனைவரும் காண முடிந்தது. நான்கு தாதாசாஞ்சி சகோதரர்கள் - நரிமன், ருஸ்தம், ஹோஷங், பெஹராம் - ஒவ்வொரு வார இறுதியிலும் மாறி மாறி வந்து கொண்டிருந்தனர்; ஆனால் ஜூன் மாத இறுதியில் பாபா பூனாவிலிருந்து மெஹராஸாத் புறப்படும் வரை மண்டலியுடன் குருபிரசாத்தில் தங்குமாறு நரிமன் அறிவுறுத்தப்பட்டார்.

ஒருமுறை, பாபாவிற்கு ஏன் இரவு கண்காணிப்பாளர் தேவை என்று ஒருவர் கேட்டபோது, அவர் இந்தக் கதையை எடுத்துரைத்தார்:

**சத்குருக்களைத் தவிர அனைத்து மனிதர்களையும் ஸுஃபிகள், நாய்கள் என்று அழைக்கிறார்கள்; ஏனெனில், அவர்களைப் பொறுத்தவரை, உலகின் சாதாரண மனிதர்கள் வேறு எந்தப் பெயராலும் அழைக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள்.**

**ஒரு காலத்தில் நதிக்கரை ஒன்றில் சத்குரு ஒருவர் வாழ்ந்து வந்தார்; எப்பொழுதும் அவரை ஒருவன் கதவருகே காவல் காத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அந்நகரின் மன்னன் சத்குருவின் வாசலில் வந்து, அவரது தரிசனத்தைக் கோரினான். காவலாளி மன்னனைத் தடுத்து, உள்ளே சென்று தனது குருவிடம் அனுமதி கேட்கவே, சத்குரு அந்த மனிதரை இப்போது பார்க்க மாட்டேன் என்று மறுத்துவிட்டார். குருநாதர் ஏன் கதவுகளை மூடி வைத்திருக்கிறார் என்று கேட்டு, மன்னன் காவலாளியிடம் விவாதத்தில் ஈடுபட்டான். "கடவுளின் மனிதனாக இருப்பதால், அவர் எந்நேரமும் தனது கதவுகளைத் திறந்து வைக்க வேண்டும், அவை மூடப்படவே கூடாது. உள்ளே செல்ல எவரையும் தடுக்கக் கூடாது. உங்களைப் போன்ற காவலாளிக்கு என்ன தேவை?" என்று மன்னன் கேட்டான்.**

**சத்குரு உள்ளிருந்து பதிலளித்தார்: "உங்களைப் போன்ற நாய்களைத் துரத்த ஒரு காவலாளி மிகவும் அவசியம்!" சத்குருவை சந்திப்பதில் மன்னன் வெளிப்படுத்திய தனது அடாவடித்தனத்தையும் அகந்தையையும் உடனடியாக உணர்ந்தான். மன்னன் முழங்கால்களில் பணிந்து, காவலாளியிடம் தனக்கு தரிசனம் வழங்க குருநாதரிடம் மன்றாடுமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டான். சத்குரு உடனே மன்னனை உள்ளே அனுமதித்து அவரை சந்தித்தார்.**

**அகந்தை எப்பொழுதும் நம்மைத் தூண்டிவிடுகிறது, குறிப்பாக, ஆன்மீகத் தளங்களில் நாம் பயணிக்கிறோம் என்பதை உணர்ந்து, பெருமிதம் அடையும்போது, நம் அனுபவங்களை பிறரிடம் சொல்ல ஆசைப்படுகிறோம். சில நாட்களுக்கு முன்னர், ஒரு நபர் என்னிடம் வந்து, அவரது**

**அனுபவங்களை எடுத்துரைத்தார். அவர் முதல் ஆன்மீகத் தளத்தில் இருந்தார் என்பதை நான் பின்னர் அவருக்கு விளக்கினேன்; ஆனால் உங்கள் அனைவருக்கும் இந்த ஆன்மீகத் தளங்கள் அனைத்தும் அர்த்தமற்றது மற்றும் முக்கியமற்றது.**

**ஆன்மீகத் தளங்களின் இந்த அனுபவங்கள் அனைத்தும், படைப்பு எனும் மாபெரும் மாயைக்குள் அடங்கும் சின்னஞ்சிறு மாயைகள். நான் அந்த மனிதனிடம் 'அவரது அனுபவங்களை பிறரிடம் சொல்லாதீர்கள், எனது பெயரை உச்சரியுங்கள், தனக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள், இல்லையேல், அவரது அனைத்து சிறப்புகளுடன் முதல் ஆன்மீகத் தளத்தின் பரவசத்தில் சிக்கி, அவரது முன்னேற்றம் தடைபடும்' என்று கூறினேன்.**

**அதனால்தான் ஹ:ஃபீஸ் கவிகை வாகனத்திலிருந்து எழுந்து விரைந்து செல்லுமாறு கூறுகிறார். 'நீங்கள் இங்கே ஓய்வெடுக்க வேண்டாம்,' என்று அவர் அவர்களை எச்சரிக்கிறார். கவிகை வாகனத்தின் உறுப்பினர் ஒருவர் கூறுகிறார்: "நாங்கள் இப்போதுதான் வந்துள்ளோம்; இந்த இடத்தின் சிறப்பை அனுபவிப்போம்." ஹ:ஃபீஸ் 'வேண்டாம்' என்று கூறி, அங்கிருந்து விரைந்து செல்லுமாறு எச்சரிக்கிறார். ஆனால் மூன்றாவது ஆன்மீகத் தளத்தில், ஹ:ஃபீஸ் கூறுகிறார்: "மெதுவாகச் செல்லுங்கள், அவசரம் வேண்டாம், அதன் எல்லையற்ற சக்தி மற்றும் சபலங்களை உள்ளடக்கிய நான்காவது ஆன்மீகத் தளத்தின் வாசல் நெருங்கிவிட்டது, எனவே மிகுந்த கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் உள்ளே நுழையுங்கள்."**

1963 ஜூன் 8 சனிக்கிழமை காலை 7:45 மணிக்கு பாபா மண்டபத்தில் அமர்ந்திருந்தார்; அன்று வந்த புதிய நபர்களைத் தழுவினார். கடந்த நான்கு நாட்களாக பல விஷயங்களை விளக்கியதாகக் கூறி, பின்னர் 'அவர்கள் எப்படித் தூங்கினார்கள்' என வினவினார். அப்போது அங்கிருந்த பெண்மணிகளில் ஒருவர், தலைவலியால் தூங்க முடியவில்லை என்றதும், **"என்னை நினைவில் கொள்ளுங்கள், தலைவலிகள் அனைத்தும் மறைந்துவிடும்"** என்று பாபா அறிவுறுத்தினார்.

வேறொரு பெண்மணி, பாபாவையே தொடர்ந்து நினைத்துக் கொண்டிருந்ததால் தூக்கம் வரவில்லை என்றதும் அவர், **"இதனால் தூக்கம் வரவில்லையென்றால் நல்லதுதான்"** என்றார்.

மும்பையிலிருந்து பூனாவிற்குச் சென்றுகொண்டிருந்தபோது பக்தர் ஒருவரின் உடைமைகள் திருடப்பட்டன. அவர் கிட்டத்தட்ட அனைத்து ஆடைகளையும், சிறிது பணத்தையும் இழந்ததாகத் தெரிவித்த போது, பாபா அவரைக் கேலி செய்தார், **"உங்களுக்குக் குடும்பம் இல்லாதது நல்லது, அல்லது நீங்கள் அவர்களையும் இழந்திருப்பீர்கள்! நீங்களே தொலைந்து போயிருந்தால், நன்றாக இருந்திருக்கும்! உங்கள் உடைமைகளை இழந்ததை எண்ணி வருந்தாமல் இருந்தால், நீங்கள் எதையாவது சாதித்துவிட்டதாகப் பொருள்படும்."**

தேஷ்முக்கின் மனைவி இந்துமதி நாக்பூரிலிருந்து வந்திருந்தார். பல வருடங்களாக பாபாவைப் போற்றி, புகழ்ந்து இயற்றிய கவிதைகளில் சிலவற்றை மொழியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். 'பாபாவின் பாதங்களில் நிரந்தரமாக இளைப்பாற அழைக்கப்பட வேண்டும்' என்பதே அவருடைய பாடல்களின் கருவாக இருந்தது. அவர் பாபாவின் பாதங்களின் அருகில் அமர்ந்து சிறப்பாகப் பாடி, பின்பு கண்கலங்கி அழுதார். பாபா கூட்டத்தில் இருந்த ஒருவரிடம் அவர் எழும்புவதற்கு உதவுமாறு சைகையால் தெரிவித்தார்; பின்னர் அவர் தனது இருக்கைக்குத் திரும்பிச் சென்றார். அவர் தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றதாக பாபா குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து லதா லிமாயே பாடினார். காலை 9:00 மணிக்கு வானொலி இசைக்கலைஞர் ஒருவர் சுமார் அரை மணி நேரம் ஷெஹ்னாய் (SHEHNAI) வாசித்தார்.

அப்போது பாபா, சமீபத்தில் அவரிடம் நேர்காணலுக்காக வந்திருந்த ஒருவர் எதிர்கொண்ட அனுபவங்களை பாபாவிடம் எடுத்துரைத்ததைக் குறித்து கூறினார்:

**அந்த நபர், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மன உளைச்சலால் அவதிப்படவே, அவர் மருத்துவரை அணுகினார். அதற்கு அடுத்த நாள், அவர் முதன்முறையாக என்னிடம் வந்து என்னைத் தழுவினார். இந்த அரவணைப்பைத் தொடர்ந்த அடுத்த எட்டு நாட்கள், அது அவருக்கு மன அமைதியையும் நிம்மதியையும் தந்தது என்றும், வானுலக இசையைக் கேட்பது, விசித்திரமான வாசனைகளை நுகர்வது, வட்டங்கள், வண்ணங்கள் மற்றும் வெளிச்சங்களைப் பார்ப்பது போன்ற உள் அனுபவங்களையும் அடையப் பெற்றதாக அவர் கூறினார். இந்த அனுபவங்களை பிறரிடம் எடுத்துரைத்து விவாதித்து வருகிறார். அவர் இறுதி இலக்கை நெருங்கிவிட்டதாக உணர்ந்தார். இந்த அனுபவங்களைப் பற்றி விவாதிக்க வேண்டாம் என்று நான் அவரிடம் கூறினேன், ஏனெனில் அவற்றில் எந்த முக்கியத்துவமும் இல்லை, அனைத்தும் மாயை. அவரது வழக்கமான தியான பயிற்சியைப் போலவே, அதிகாலை 3:00 மணிக்கு எழுந்து, தியானத்தைத் தொடங்கும் முன்னர் என்னை நினைவில் கொள்ளுமாறும் அவருக்கு அறிவுறுத்தினேன்.**

**நான் அவருக்கு** (அவ்வாறு செய்ய) **உபதேசம் வழங்காமல் இருந்திருந்தால், இன்றைய பொய்யும் போலியுமான புனிதர்களில் ஒருவராக அவர் இருந்திருப்பார்! இத்தகைய அனுபவங்களில் மதிமயங்குபவர்கள் ஆன்மீகப் பாதையில் கற்றுக்குட்டிகள் எனக் கருதப்படுவார்கள். கடவுள் மீதான அன்பு முற்றிலும் மாறுபட்ட ஒன்று. அன்பில் சமரசம் என்பதற்கு இடமில்லை. ஒன்று நீங்கள் கடவுளை நேசிக்கிறீர்கள், அல்லது நீங்கள் நேசிக்கவில்லை! இடைப்பட்ட நிலை என்பது இல்லை!**

ஹ:ஃபீஸ் கூறுகிறார்: **"கடவுளின் பள்ளிக்கூடத்திலும், குருநாதரின் சகவாசத்திலும் இருக்க முயற்சி செய்யுங்கள், முழு மனதோடு முயற்சி செய்யுங்கள், மீண்டும் மீண்டும் முயற்சி செய்யுங்கள், ஒரு நாள் நீங்களும் அவரைப்போல பரிபூரண நிலையை அடைவீர்கள். இந்தத் தாமிரத்தை ஒத்த உலக வாழ்க்கையைக் கைவிட்டு விடுவதால், ஒரு நாள் அன்பின் ஆக்கசக்தியால் பொன்னாக மாறுவீர்கள்."**

**ஹ:ஃபீஸ் மேலும் கூறுகிறார்: "கடவுளோடு ஐக்கியமாக நினைப்பது கூட சுத்த பைத்தியக்காரத்தனம், ஏனெனில் அது கிட்டத்தட்ட சாத்தியமற்றது! ஆனால் நீங்கள் தொடர்ந்து உங்கள் பைத்தியக்காரத்தனத்தில் விடாப்பிடியாக இருந்து, ஒரு பரிபூரண குருநாதரின் பாதங்களில் தூசியாக மாறினால், அது சாத்தியமாகலாம்."**

லதா லிமாயே மற்றுமொரு கஸலைப் பாடவே, பாபா சில வரிகளை விளக்கினார்:

**ஆன்மீக உள் பயணத்தில், உணர்வு நிலையின் ஏழு ஆன்மீகத் தளங்கள் உள்ளன; மேலும் ஒவ்வோர் ஆன்மீகத் தளத்திற்கும் அதன் வாழ்விடமும், பயண இலக்கும் உள்ளது. அன்பர் கூறுகிறார்: "நான் என் இதயத்தைத் தூய்மையாக்க முயற்சி செய்கிறேன், ஆனால் நான் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்கவில்லை; எல்லா வாழ்க்கையும் அர்த்தமற்றது என்று உணர்கிறேன், இப்போது மரண பயமும் மறைந்துவிட்டது!"**

**அன்பில் அச்சம் என்பது இல்லை. உண்மையான ஆர்வலர்களுக்கு, பாதையும், இலக்கும் ஒன்றாகிவிடும். எனவே தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்.**

பாபா மேலும் கூறினார், **"அன்பனை அன்பிற்குரியவரிடம் அழைத்துச் செல்வதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றால், அன்பன் அனைத்தையும் அன்பிற்குரியவரின் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும்" என்று ஹ:ஃபீஸ் அன்பனுக்கு ஆறுதல் கூறுகிறார்.**

ஆதி ஹார்மோனியத்தை இசைத்து ஒரு கஸலைப் பாடினார், பாபா அதன் அர்த்தத்தையும் விளக்கினார்:

**அன்பெனும் களத்தில் அடியெடுத்து வைப்பவர்கள், இலக்கை எட்டிவிட்டதாக நினைக்கின்றனர். அது என்ன முட்டாள்தனமான சிந்தனை என்று கடவுளுக்கு மட்டுமே தெரியும். முதலில், 'கடற்கரையில்' கால்களை வைத்த அந்த கணமே, 'முத்து" அவரது கைகளுக்கு வந்துவிட்டது என்று நினைத்ததாக ஹ:ஃபீஸ் கூறுகிறார். ஆனால் 'முத்தை அடையப் பெறுவதற்கு முன்னர், அவர் அலைகள், புயல்கள் மற்றும் சுழல்களை எதிர்கொண்டு, கடலில் ஆழமாக மூழ்க வேண்டும்' என்பது அவருக்குத் தெரியாது.**

**அன்பன் கூறுகிறான்: "தொலைதூரத்தின் வறண்ட பாலைவனத்தின் கானல் நீரை நான் கடலாக உணர்கிறேன், ஏனெனில், நான் அன்பில் அதீத முதிர்ச்சி அடைந்ததால், தாகத்தால் எனது தாகத்தைத் தணிக்கிறேன்!"**

**ஹாஃபீஸ் கூறுகிறார்:**

**உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே இருக்கும்**
**முகத்திரையே 'நீங்கள்',**
**உங்கள் 'நான்' எனும் சுயத்தை களைந்து விடுங்கள்,**
**அப்போது கடவுளை உணர்வீர்கள்.**
**இது ஆழ்ந்த தூக்கத்தில் முழு விழிப்புடன்**
**இருப்பது போன்று கடினமானது.**
**இந்த இயலாமை என் அருட்பார்வையால்**
**என்றென்றும் சாத்தியமாகிறது.**

**அன்பன் தன் அன்பிற்குரியவரிடமிருந்து அடையப் பெறும் ஒரு சிறு அறிகுறி அல்லது குறிப்பின் பேரில், இம்மையிலும் மறுமையிலும் தன்னிடம் உள்ள அனைத்தையும் அள்ளிக் கொடுத்துவிடுகிறான். அவன் தனக்கு சொந்தமாகக் கருதும் ஒரே விஷயம், அன்பிற்குரியவரின் மீதான அவனது அன்பு மட்டுமே.**

இந்தக் கட்டத்தில், ஹாரி கென்மோர், குருநாதர் மற்றும் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனைகளை (MASTER'S & REPENTANCE PRAYERS) மொழியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்குப் பிறகு பாபா, பக்கத்து அறைக்குச் சென்று சில விஷயங்களை மண்டலியுடன் சிறிது நேரம் விவாதித்தார். பின்னர், ஆதி பாடிய கஸலின் விளக்கத்தைத் தொடர்ந்தார்:

**உண்மையான அன்பனுக்கு இவ்வுலகில் இருக்கும் இடங்கள் அல்லது பொருட்கள் மீது ஆர்வம் இராது. அவனைப் பொறுத்தவரை, அவன் உள்வாங்கும் ஒவ்வொரு சுவாசமும் அவனுக்கு ஒரு புது உலகை வெளிப்படுத்துகிறது. பிரியமான இறைவனின் கண நேர பார்வைக்காக, தீவிர ஏக்கத்துடன் இருக்கும் அவனது கண்கள் மட்டுமே, பிரியமானவரின் கண்கள் வழங்கும் அந்த 'இறை போதை'யின் ரகசியத்தைக் குறித்து சிறிதளவேனும் சிந்திக்க முடியும்.**

**ஆன்மீகப் பாதையில் பயணிக்காமல், தெய்வீக மதுபானம் மற்றும் மதுபான கோப்பையைப் பற்றி, வெகுவாக உயர்த்திப் பேசும் ஒருவர், காலாதி காலத்திலிருந்தே தெய்வீக மதுபானத்தின் ரகசியங்களை அறிந்த குருநாதரின் அறிவை ஆழங்காண முடியாது! அன்பில் முதிர்ச்சி அடையாத ஒருவர், அன்பிற்குரியவருக்குக் கொடுக்கும் வலி அவருக்குத் தெரியாது. அன்பிற்குரியவருக்கு சிறிதளவும் பாரத்தைக் கொடுக்கும் அந்த அன்பு, அன்பு அல்ல.**

பாபா பின்பு தனது அறைக்குச் சென்றார், மண்டலி மதிய உணவை உண்டனர். மதியம் 12:40 மணிக்குத் திரும்பி வந்து, பாபா, மண்டலி மற்றும் நெருக்கமான சிலருடன் அமர்ந்திருந்தார். ஆந்திராவிலிருந்து சமீபத்தில் கே. வெங்கடேஸ்வரலு குடும்பத்தினர் உட்பட பல அன்பர்கள் வந்திருந்தனர். பாபா ஒவ்வொருவரையும் தழுவினார். அவர்கள் கூட்டம் கூட்டமாக இருந்ததால்,

பாபா பிரதான மண்டபத்திற்குச் செல்ல வேண்டியதாயிற்று. ஆதியும், லதாவும் காலையில் பாடிய அதே கஸல்களைப் பாட, மோகன்-ஸைகலும் பாடினார்.

ஆந்திரா அன்பர்களில் ஒருவர் தெலுங்கில் பாடினார். குழுவின் செய்தித் தொடர்பாளர் பாபாவை மீண்டும் ஆந்திராவிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார். அதற்கு பாபா, "**எனக்குத் தெரியும், ஆந்திரா அன்பர்களை நான் மிகவும் நேசிக்கிறேன், ஆனால் விஜயம் செய்வதாக உறுதியளிக்க முடியாது. இருப்பினும், நான் எங்கேனும் செல்வதாக இருந்தால், ஆந்திராவிற்குச் செல்வேன்**" என்று பதிலளித்தார்.

நியூயார்க் நகரில் வாழும் லூயிஸ் அகொஸ்டீனீயிடம் (LOUIS AGOSTINI) இருந்து பெறப்பட்ட ஒலிப்பதிவு நாடாவில், அவர் இந்திய இசையுடன் பல உரைகளை வழங்கியிருந்தார். அது நிறைவடைந்ததும் பாபா கூறினார்:

'**கடவுள் பேசுகிறார்**' (GOD SPEAKS) **புத்தகத்தில், 'விஞ்ஞான் பூமிகா'வைக்** (VIDNYAN BHUMIKA - REALM OF MASTERY) **குறிக்கும் சூரியனைப் பற்றி விளக்கியிருக்கிறேன். அதற்கு அருகிலுள்ள பகுதி ஆழ் மனம் - அல்லது ஆழ் மன உலகம்** (MENTAL WORLD), **மேலும் அதிலிருந்து தொலைவில் அமைந்த பகுதி பிராண - அல்லது சூட்சும உலகம்** (SUBTLE WORLD) **ஆகும், அதே சமயம் அதிலிருந்து வெகு தொலைவில் அமைந்தது இந்தப் பௌதீக உலகம்** (PHYSICAL WORLD). **ஆனால் பௌதீக உலகம் இரண்டு நிலைகளைக் கொண்டது என்று நான் அதில் குறிப்பிடவில்லை; முதலாவது அறியாமை** (IGNORANCE); **இரண்டாவது அறிவுபூர்வமான நம்பிக்கை** (INTELLECTUAL CONVICTION).

**சூரியன் எல்லாவற்றின் மீதும் தனது கதிர்களை வீசுகிறது. ஆழ் மன உலகில், சூரிய கதிர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. சூட்சும உலகில் அவை குறைவாகவும், பௌதீக உலகில் அவை அதைவிடக் குறைவாகவும் இருக்கும். சிலர், சூரியனை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, பௌதீகத் தளத்தில் சூரிய ஒளியில் நனைகின்றனர், பிறர் அறியாமையால் கூரையின் கீழே ஒதுங்கி சூரிய ஒளியைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருக்கின்றனர். பௌதீகத் தளத்தில் சூரிய ஒளியில் மிதப்பது என்பது அறிவுபூர்வமான நம்பிக்கை** (இல்ம்-உல்-யக்கின் - ILM.UL.YAKIN).

**சத்குருவின் ஆதிக்க நிலை** (குதூபியாத் - QUTUBIYAT), **பௌதீகத் தளத்தில் இருந்தாலும், அது சூரியனிலேயே தனது இடத்தை அமைத்துள்ளது, ஏனெனில் அது சூரியனுடன் உளதாயிருக்கும் ஒன்றாகும். எனது உணர்வு அனைத்து ஆன்மீகத் தளங்களிலும் ஒரே நேரத்தில் உள்ளது. ஜிகர் கூறுகிறார்: "அன்பின் வேறொரு பெயர் அழிவு** (நிர்மூலமாதல்); **எனவே அன்பில் வாழ்க்கையை நாடாதே. சூரியனின் கதிர்களிலும் வாழ்க்கையைத் தேடாதே, ஆனால் சூரியனாக** (SUN) **மாறிவிடு!"**

அதைத் தொடர்ந்து பாபா தமது ஐந்து பரிபூரண குருநாதர்களைக் குறிப்பிட்டார்:

**அவர்களில் இருவர் இந்துக்கள், இருவர் முஸ்லீம்கள், சாய்பாபா இந்து மற்றும் முஸ்லீம். அவ்வப்போது அவர் அணியும் ஆடைகளையும், இரவில் ஓய்வெடுக்க, அவரது ஆதரவாளர்கள் வழங்கிய ஏழு அடுக்கு துணியையும் பயன்படுத்தினார். மசூதியை விட்டு வெளியேறி, சாவடிக்குச்** (இரவு ஓய்வெடுக்கும் இடம்) **செல்வதற்கு முன்பு, சாய்பாபா ஒருவரை ஆசீர்வதிப்பது போல், ஏழு முறை காற்றில் கையை அசைப்பதை வழக்கமாகக் கொண்டார்.**

**பாபாஜானை எவரேனும் 'அம்மா'** (மாயி) **என்று அழைத்தால், அவர் மிகவும் சீற்றமடைந்து, 'அவர் ஒரு பெண் அல்ல!' என்று எதிர்வினையாற்றினார். எதையாவது தள்ளி விடுவது போல் அவர் கைகளைத் தொடர்ந்து அசைப்பது வழக்கம். அவருடைய இந்த சைகை ஒரு பெரிய முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது.**

தொடர்ந்து பாபா இந்த நகைச்சுவையான சம்பவத்தை எடுத்துரைத்தார்:

**ஒருமுறை நான் காஷ்மீரில் ஒரு மலை உச்சியில் ஏகாந்தவாசம் மேற்கொண்டபோது, குஸ்தாஜி, சாஞ்சி இருவரும் இரவு கண்காணிப்பாளர்களாகப் பணிபுரிந்தனர். சாஞ்சி ஒரு சிறிய பேனாக்கத்தியை தன்னுடன் வைத்திருந்தார், குஸ்தாஜி மௌனம் காத்தார்! காலியான மண்ணெண்ணெய் டின் மீது வைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய விளக்கு, கும்மிருட்டை அகற்ற உதவியது. அந்த இடத்தில் புலிகள் அதிகம் வாழ்ந்தன. ஒரு நாள் இரவு சாஞ்சி தூங்கி விழுந்தபோது, அவருடைய கால் மண்ணெண்ணெய் டின்னை உதைக்கவே, பெரிய சத்தத்துடன் விளக்கும் டின்னும் கீழே விழுந்தன. ஒரு புலி தம் மீது பாய்ந்து தாக்கப் போவதாக நினைத்து, இருவரும் அச்சத்தில் உயிரைத் துறந்து விடுவதுபோல் உறைந்தனர்!**

**இவர்கள் இருவரும் நான் கிருஷ்ணனாக இருந்த காலத்தை நினைவூட்டினர். அப்போது எனக்கு நான்கு தோழர்கள் இருந்தனர் - ஒருவர் திக்கித் திணறி பேசுபவர், இரண்டாவது உடல் முடமானவர், மூன்றாவது கண் பார்வையற்றவர், நான்காவது காது கேளாதவர்.**

பிற்பகல் 3:30 மணிக்கு ஆரத்தி நிகழ்த்திய பின்பு கூட்டம் கலைந்தது. வாஸ் தேவ் கெய்ன் பல நாட்களாக குருபிரசாத்தில் இருந்தவர், பிரியமானவரின் சகவாசத்தில் அவர் கழித்த நேரத்தைப் பற்றி ஒருமுறை விவரித்தார்:

ஒருவர் எவ்வளவு கவலையடைந்தாலும், மனம் எவ்வளவுதான் குமுறினாலும், பாபாவிடம் சென்றபோது, முழுச் சூழலிலும் அமைதி நிலவுவதைக் காண முடிந்தது. மேலும், "கவலைப்படாதீர்கள், மகிழ்ச்சியாக இருங்கள்" (DON'T WORRY, BE HAPPY) என்று பாபா கூறியதும், அவர் எங்களிடமிருந்து அனைத்து கவலைகளையும் அகற்றி, அந்த இடத்தில் தன்னம்பிக்கையையும், மகிழ்ச்சியையும், மனநிறைவையும் ஏற்படுத்தியது போலத் தோன்றியது. பொருளாசை நிறைந்த இவ்வுலகில், நமக்கு மிகவும் தேவை மன அமைதி.

பாபாவை ஒருவர் அணுகியபோது கிடைத்தது இதுதான். உண்மையான மகிழ்ச்சி, உண்மையான அமைதி, உண்மையான பேரின்பம் ஆகியவற்றின் ஆதாரத்தை வேறு எங்கும் காண முடியாது.

சில சமயங்களில் எங்களை மிகவும் ஆச்சரியப்படுத்தியது என்னவெனில், நம்முடைய வெவ்வேறு உறவுகளின் பெயர்கள், நம் வாழ்வில் நடந்த பல்வேறு சம்பவங்கள் பற்றி பாபா கொண்டிருந்த அற்புதமான நினைவுகள். அவர்களைப் பற்றி எங்களிடம் பேசி, அவர்களின் உடல்நலம் மற்றும் மகிழ்ச்சியைப் பற்றி விசாரிப்பது தவறாமல் நிகழ்ந்தது. எங்களிடம் மட்டுமல்ல, அவருடைய தொடர்பில் வந்த எத்தனையோ பேர்.

1963 ஜூன் 9 ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு, பாபா குருபிரசாத் மண்டபத்தில் இருந்தார். ஆந்திராவைச் சேர்ந்த தர்மாராவ் உள்ளிட்ட பலருக்கு தரிசனம் வழங்கியதைத் தொடர்ந்து, ஓர் இசைக் கலைஞர் சித்தார் வாசித்தார். பாபா அதைப் பெரிதும் விரும்பினார். மோகன்-ஸைகல் கஸல்களைப் பாடினார், அவற்றில் சிலவற்றை பாபா விளக்கினார்:

**அன்பன், அன்பிற்குரியவரிடம் கூறுகிறான்: "கடந்து செல்லும் போது, நீங்கள் கடைக்கண்ணால் என்னை ஒரு பார்வை பார்த்தால், எனது தலைவிதி மாறிவிடும்."**

**பிரிவின் வலியால் இதயம் நின்றுபோன அன்பன், அன்பிற்குரியவரிடம் கூறுகிறான்: "ஓ என் இரக்கமுள்ள அன்பே! நீர் மிகவும் தாமதமாக வந்தீர்!"**

**(கவிஞர் கூறுகிறார்): "கடவுள் மீதான அன்பில் பித்து பிடித்தவனை வெறுப்புடன் பார்க்காதே. அவனுடைய அன்பே, அன்பிற்குரியவரை எல்லா மகிமையிலும் தோன்றச் செய்கிறது."**

**அன்பன், அன்பிற்குரியவரிடம் சொல்கிறான்: "நீர் மிகவும் மகிமை வாய்ந்தவர் என்று நான் பல ஆண்டுகளாகக் கேள்விப்பட்டு வருகிறேன், ஆனால் எனது கண்கள் இன்னும் உங்கள் மகிமையைக் காணவில்லை. எனவே எனது புகார் எனது காதில் அல்ல, எனது கண்களில் உள்ளது."**

**அன்பன், அன்பிற்குரியவரிடம் முறையிடுகிறான்: "உமது இதயத்தில் ஒரே ஒரு குறைபாடு உள்ளது, அதுவே, நீர் எனது காதலைப் பற்றி அலட்சியமாக இருக்கிறீர்!"**

**அன்பன் சொல்கிறான்: "என்னுடைய அதிர்ஷ்டத்தில் உம்முடன் ஒன்றிவிட்டால், அது எனது துரதிர்ஷ்டவசமாக இருக்கும், ஏனெனில் நான் உன்னில் இணைவேன், பின்னர் உனக்காக ஏங்குவதில் வலியின் இனிமை இராது!"**

**வேதனையில் இருக்கும் அன்பன் கூக்குரலிடுகிறான்: "உமது அன்பின் அம்பு என் இதயத்தை ஆழமாகத் துளைத்திருந்தால், அது, எனது துன்பத்திலிருந்து என்னை விடுவித்திருக்கும்."**

**அன்பன் கூறுகிறான்: "ஒருமுறை இறப்பது எளிது. ஆனால் நான் ஒவ்வொரு கணமும் உமக்காக இறக்கவும் வாழவும் செய்கிறேன்! இறுதியில் என் இதயம் மிகவும் அமைதியற்றதாகும் வேளையில், என் அன்பிற்குரியவர் பதிலளிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார்."**

**அன்பனை அன்பிற்குரியவர் சந்திக்க மாட்டார் என்பதை அன்பன் ஆழ் இதயத்தில் அறிந்திருந்ததால் அவன் கூறுகிறான்: "நீர் உமது வாக்குறுதியை நிறைவேற்ற மாட்டீர் என்று எனக்குத் தெரியும். ஆனால் நாளை சந்திப்பதாக அளித்த வாக்குறுதி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது, நான் உம்மை ஏற்கனவே சந்தித்ததாக உணர்கிறேன்!"**

**ஜிகர் கூறுகிறார், "நான் என் இதயத்தை அன்பானவரின் பாதங்களில் வைத்தபோது, யுகம் யுகமாக இருந்த அமைதியின்மை முடிவுக்கு வந்தது."**

காலை 11:00 மணிக்கு ஆரத்தியை நிகழ்த்தி, மதிய உணவுக்காக அனைவரும் கலைந்து சென்றனர். மதியம் 12:20 மணிக்கு பாபா மீண்டும் மண்டபத்திற்கு வந்தார். லதா லிமாயே சிறிது நேரம் பாடியதைத் தொடர்ந்து, ஒரு சித்தார் இசைக்கலைஞரின் நிகழ்ச்சி நடைபெற்றது.

மும்பையைச் சேர்ந்த பிரபல கவாலி பாடகர்களான சகோதரர்கள் ஷங்கர், ஷம்பு இருவரும் மதியம் மூன்று மணி நேரம் பாடினர். பாபா, அந்தக் குழுவின் ஒவ்வோர் இசைக்கலைஞருக்கும் ஒரு கைக்குட்டையை வழங்கினார் (ஆதி சீனியரின் கூற்றுப்படி, பாபா அவர்களின் குரல்களை ரசிக்கவில்லை). மாலை 5:00 மணிக்கு ஆரத்தி நிகழ்த்தப்பட்ட போது, அனைவரும் கூப்பிய கைகளுடன் பாபாவைக் கடந்து சென்றனர். பாபா, மாலை 5:30 மணிக்கு ஓய்வு பெற்றார்.

அந்த ஆண்டு பாபாவின் முன்னிலையில் பல பிரபலமான பாடகர்கள் பாடினர், அவர்களில் பூனாவைச் சேர்ந்த இரண்டு சகோதரிகள், ஹீராபாய் பரோடேக்கர் (HIRABAI BARODEKAR) மற்றும் சரஸ்வதிபாய் ரணாய் (SARASWATIBAI RANAY) ஆகியோர் அடங்குவர். மற்றுமொரு பிரபலமான பாடகர் டி.வி. கரந்திக்கர் (D.V. KARANDIKAR), இவர் இதற்கு முன்னர் ஒருமுறை குருபிரசாத்தில் இசை நிகழ்ச்சியை நடத்தினார். அஹமதுநகரைச் சேர்ந்த ஷாஹு மோடக் (SHAHU MODAK) என்பவரும் பாபாவின் முன்னால் பாடினார்.

மெஹராபாத்தில் உடல்நலம் சீராகும் விதத்தில் ஆறு வாரங்கள் ஓய்வெடுத்த பிறகும், பைதூல் மகிழ்ச்சியாக இல்லாததால், 1963 ஜூன் 12 அன்று பாபா, பைதூலை ஆதி மூலம் பூனாவிற்கு வரவழைத்து, ரூபி ஹால் (RUBY HALL) மருத்துவமனையில் அனுமதித்தார். பைதூல் ஒரு மாதம் அங்கேயே சிகிச்சை பெற்று, பின்பு செவிலியராக பணிபுரிந்த அவரது மகள் ஸர்வாருடன் தங்குவதற்காக மும்பைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ருஸ்தம், ஃப்ரீனி தாதாச்சாஞ்சி ஆகியோர் 11ஆம் தேதி காலை பாபாவை தனிப்பட்ட முறையில் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர், இருவரும் அவருக்கு மாலை அணிவித்தனர். அன்று மதியம் அர்னவாஸுடன் ஃப்ரீனி மீண்டும் அழைக்கப்பட்டார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஜூன் 13 அன்று, பாபாவின் அழைப்பின் பேரில், மும்பை அன்பர்கள் அனைவரும் குருபிரசாத்திற்கு வந்தனர். பாபா மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். சில சமயங்களில் வாரத்தில் ஆறு அல்லது ஏழு முறை பாபா, மும்பை குழுவை அழைத்ததுண்டு. அவர்கள் வெளித் தோற்றத்தில் மகிழ்ச்சியாகவும், களிப்புணர்வுடனும் இருந்து, பாபாவை சிரிக்க வைக்கும் நோக்கத்தில், வேடிக்கையாகப் பேச முயற்சித்தனர்; ஆனால், பாபா அனுபவித்த துன்பத்தின் காரணமாக அவர்கள் உள்ளளவில் அழுது கொண்டிருந்தனர். அன்று மதியம், பாபா, அவர்களில் எவரும், இதுவரை அவரைப் பார்த்திராதது போலத் தோற்றமளித்தார். அவர் வெண்மையான சத்ராவைப் போல வெளிறிப்போய் காணப்பட்டார். அவர் தீவிரமாகத் தமது பணியில் ஈடுபடத் தொடங்கினார். குண்டூசி கீழே விழுந்தாலும் கணீர் என்று கேட்கும் அளவுக்கு மௌனம் நிலவியது. சில நிமிடங்களில் நரிமன், அர்னவாஸ், ருஸ்தம், ஃப்ரீனி மற்றும் எரச் ஆகியோரைத் தவிர அனைவரையும் வெளியே செல்லுமாறு கேட்டுக்கொண்டார். பாபா அவர்களிடம் சில விஷயங்களைக் கூறினார்; ருஸ்தம், ஃப்ரீனி இருவரையும் மீண்டும் தழுவி, அவர்களுடன் அமைதியான சிந்தனையில் அமர்ந்தார். ஃப்ரீனியைப் பார்த்து பாபா, **"நான் கடவுள்"** என்று சைகையால் தெரிவித்தார், **"உங்களுக்கு என்மீதான அன்பு மற்றும் நம்பிக்கையுடன், நீங்கள் இந்த உண்மையை ஏற்றுக்கொள்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான் உங்களுக்கு இதைச் சொல்கிறேன், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்."**

கராச்சியில் வாழும் தனது சகோதரி ஸரீன் மாவல்வாலாவிற்கு (ZARINE MAVALWALA) ஃப்ரீனி எழுதிய கடிதத்தில், பாபாவின் உடல்நிலையை இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

பாபா துன்பப்படுவதைக் கண்டு, நான் வலியால் உயிரைத் துறந்து விடுவது போல் உணர்கிறேன். இந்த நாட்களில் அது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இது ஓர் இனிமையான உணர்வு அல்ல. பெண் மண்டலியும் நல்ல மனநிலையில் இல்லை. நாங்கள் அவர்களுடன் அமர்ந்து பேசுவதோ, அவர்களை சந்தித்து உரையாடுவதோ, பாபாவின் உணவு மேசையில் கடந்த ஆண்டு செய்ததைப் போல விருந்து உண்பதோ எதுவும் இல்லை. ஏதோ ஒரு பயங்கரமான சம்பவத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் உணர்வு. **"நீங்கள் அனைவரும் என்னைப் பார்க்கத் துடிக்கும் அளவுக்கு நான் மிகவும் ஒதுங்கி இருப்பேன்"** என்று பாபா இதற்கு முன்னரே சூசகமாகக் கூறியிருந்தார். தற்போது இலகுவாக பாபாவை சந்திக்கும் இந்த வாய்ப்பு, எதிர்காலத்திற்காக சேமிக்கப்படும் என்பது போன்ற உணர்வை நாம் அனைவரும் அடையப் பெறுகிறோம். பாபா இதை அறிவார்: நம்மால் யூகிக்க மட்டுமே முடியும்,

நல்லதே நடக்கும் என எதிர்பார்க்க முடியும், அவருடைய சித்தம் நிறைவேறும் என்று சொல்ல முடியும், காத்திருந்து பார்க்கலாம், அவ்வளவுதான்.

அன்று மதியம் ஆண்கள் ‘லா ரிஸ்க்’ (LA RISQUE) சீட்டு விளையாட இருந்தனர்; அர்னவாஸ், ஃப்ரீனி இருவரும் அங்கே இருந்து விளையாட்டைப் பார்க்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். சீட்டாட்டத்தில் சுமார் 25 ஆண்கள் கலந்து கொண்டனர். ஆட்டம் தொடங்கியதும், கோஹெர், பாபாவிற்கு சோடா நீரைக் கொண்டு வந்தார், இரண்டு அல்லது மூன்று வாய் அருந்தி, பாபா மீதியை ஃப்ரீனியிடம் கொடுத்தார். மாலை 3.30 மணி வரை சீட்டாட்டம் நீடித்தது. பாபா அவர்களை வணங்குவது போலப் பணிவுடன் விடைபெற்றார்.

முந்தைய நாள், 1963 ஜூன் 12 அன்று பாபா விளக்கினார்:

**ஒரு மனிதனுக்கு மூன்று நிலைகள் உள்ளன: விழிப்பு நிலை, கனவு நிலை மற்றும் ஆழ்ந்து தூங்கும் நிலை. விழிப்பு நிலையில், மனிதன் பார்ப்பதற்கு அவனது பௌதீகக் கண்களையும், கேட்பதற்கு பௌதீகக் காதுகளையும், அவனது பௌதீக மூக்கு வாசனையை நுகர்வதற்காகவும், அது போல பிற அனைத்து புலன்களையும் பயன்படுத்துகிறான். கனவு காணும் நிலையில், கனவில் நிகழும் அனைத்து செயல்களுக்கும் மனிதன் தனது சூட்சும உடலைப் பயன்படுத்துகிறான், அவனது பௌதீக உடலை அல்ல. இவ்வாறு ஒரு கனவில், அவன் தனது சூட்சும கண்களால் பார்ப்பதற்கும், சூட்சும காதுகளால் கேட்பதற்கும் அவன் தனது சூட்சும உடலைப்** (SUBTLE BODY) **பயன்படுத்துகிறான். ஆழ்ந்த தூக்க நிலையில், மனிதனின் மனம் முழுவதுமாக ஓய்வில் இருக்கும்.**

**உணர்வின் ஆறு நிலைகள்:**

1) **உணர்வற்ற நிலை** (UNCONSCIOUSNESS)
2) **உள்மன உணர்வு நிலை** (SUB-CONSCIOUSNESS)
3) **உணர்வு நிலை** (CONSCIOUSNESS)
4) **உள்மன அதீத உணர்வு நிலை** (SUB-SUPERCONSCIOUSNESS)
5) **அதீத உணர்வு நிலை** (SUPERCONSCIOUSNESS)
6) **இறை-உணர்வு** (GOD-CONSCIOUSNESS)

**கடவுளின் அனைத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில்** (BEYOND BEYOND STATE OF GOD), **உணர்வற்ற தன்மை உள்ளது, ஆனால் அனைத்தும் இந்த நிலையிலிருந்து வெளிவருகின்றன. உள்மன உணர்வு நிலையில், வாயு மண்டலத்தின் ஏழு நிலைகள் உள்ளன. உண்மையில், உணர்வு கல் வடிவத்திலிருந்து தொடங்குகிறது, ஆனால் அங்கு உணர்வு மிகச்சிறிய அளவிலானது. வடிவங்களின் ஏழு நிலைகளின் பரிணாம வளர்ச்சியின் உச்சக்கட்டமாகத் திகழும் மனித வடிவத்தில், உணர்வு முழுமையடைகிறது. ஆனால் பரிணாம வளர்ச்சியின் காலகட்டத்தில், மனப்படிவங்கள் குவிந்து கிடப்பதால், மனிதன் கடவுளை உணர்ந்து கொள்வதில்லை.**

**மனப்படிவங்களின் குவியல்கள் இல்லாமல் இருந்திருந்தால், மனிதன் முதல் மனித வடிவத்தை அடையப்பெற்ற அந்த கணமே, தன்னைக் கடவுள் என்று உணர்ந்திருப்பான். ஆனால் எண்ணிலடங்கா மனப்படிவங்களால், பிறப்பு இறப்பு சக்கரம்** (REINCARNATION) **கோணல்மாணலான முறையில் சுழல்கிறது. அதாவது, ஆன்மா, ஆண் வடிவம், தொடர்ந்து பெண் வடிவம், நல்லவர்-தீயவர், அழகற்றவர்-அழகானவர், அரசன்-ஆண்டி போன்ற பல வடிவங்களை மறுபிறவியில் எடுக்கிறது. ஒவ்வொரு மரணத்திற்குப் பிறகும் மனப்படிவங்கள் வலுவான அதிர்வுகளை சந்தித்து சீரமைக்கப்படுகின்றன.**

**கடைசியில் (மனதின் உணர்வு நுட்பமாக மாறும் போது) உட்சுழற்சி** (INVOLUTION) **செயல்முறை தொடங்குகிறது. மனம் ஐந்தாவது ஆன்மீகத் தளம் வரை** (எண்ணங்களின் வடிவத்தில்) **நிலைத்திருக்கும். ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில், மனம், மனதின் மூலம் செயல்படுகிறது. ஆறாவது ஆன்மீகத் தளத்தில் மனம் இயங்காமல், அகக் கண்ணாக மாறி, இறைவனை நேருக்கு நேர் காண்கிறது. ஆறாவது ஆன்மீகத் தளத்தில் 'அதீத உணர்வு'** (SUPERCONSCIOUSNESS) **உள்ளது. ஏழாவது ஆன்மீகத் தளத்தில் மனம் அழிந்து, மனிதன் இறை உணர்வை எய்துகிறான்.**

**கனவு நிலையில், மனிதன் தனது சூட்சும உடலைப் பயன்படுத்துகிறான் மற்றும் உள் மன உணர்வு நிலையை** (SUB-CONSCIOUSNESS) **அனுபவிக்கிறான், ஆனால் சூட்சும உடல் ஒரு நீராவி அல்லது மேகம் போல மிகவும் மங்கலாக இருக்கிறது. மனிதன் ஆன்மீக சூட்சும தளங்களில் நிலைகொண்டிருக்கும்போது - ஒன்று முதல் நான்காவது ஆன்மீகத் தளம் வரை - அவர் சூட்சும உடலுடன் உள்மன அதீத உணர்வு நிலையை** (SUB-SUPERCONSCIOUSNESS) **அனுபவிக்கிறார். சூட்சும உடலின் அனுபவம் மிகவும் பிரகாசமானது.**

இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஜூன் 14 அன்று, மேல்நிலை ஆன்மீகத் தளங்கள் மற்றும் கனவுகளின் வகைகள் பற்றிய விளக்கங்களை பாபா தொடர்ந்தார்:

**ஒரு சத்குரு (குதுப்) சூட்சும மற்றும் ஆழ் மன தளங்களில் பணிபுரியும் போது, அவர் தனது பௌதீக உடலை ஒருபோதும் பயன்படுத்த வேண்டியதில்லை. ஆனால், பௌதீக உணர்வுடன் இருக்கும் உயிருள்ள மற்றும் உயிரற்ற ஜடப் பொருட்களுக்கு உதவுவதற்காக, பௌதீக உலகில் அவர் பணிபுரிவதற்கு உடல் உழைப்பு அவசியம்.**

**ஏழாவது ஆன்மீகத் தளத்தின் மஜ்ஜூப், வேதாந்திகளால் 'பால்-உன்மந்த்-பிஷாஷ்'** (BAL-UNMANT-PISHASH) **என்றும் ஸூஃபிக்களால் இளவரசர்** (PRINCE) **எனவும் அழைக்கப்படுகிறார். சத்குரு அல்லது குதுப், அரசர்** (KING) **என்றும், அவதார புருஷர் அல்லது ரஸூல், அரசர்களின் அரசர்** (KING OF KINGS) **எனவும் அழைக்கப்படுகிறார்கள்.**

**உண்மைப்பொருள் நிலைகொண்டிருக்கும் நித்தியத்தில் கடந்த காலமும், எதிர்காலமும் இல்லை; நித்திய நிகழ்காலம் மட்டுமே உள்ளது. ஆனால் விழித்திருக்கும் கனவு நிலையில், கடந்த காலமும் எதிர்காலமும், நிகழ்காலத்தைச் சுற்றி வருகின்றன. தூங்கும் போது ஏற்படும் கனவு, கனவுக்குள் கனவாகும். தூக்கத்தின் இந்த கனவு மூன்று வகையானது: தூய கனவுகள்** (PURE DREAMS), **பிரமைகள்** (HALLUCINATIONS) **மற்றும் கொடுங்கனவுகள்** (NIGHTMARES). **பிரமைகள் மற்றும் கொடுங்கனவுகளுக்கு கடந்த காலத்துடனும், எதிர்காலத்துடனும் எந்த தொடர்பும் இல்லை. ஆனால் ஒரு தூய கனவு கடந்த காலத்துடனும், எதிர்காலத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது.**

**விழித்திருக்கும் கனவு நிலையில், எதிர்காலத்தை முன்னறிவிக்கும் சில அரிதான மனிதர்கள் உள்ளனர், ஆனால் இதற்கும் ஆன்மீகத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சாதாரண விழித்திருக்கும் கனவு நிலையில், கடந்த காலத்தையும் எதிர்காலத்துடன் இணைக்கிறோம். ஒரு மனிதன் நேற்று மாலை சப்பாத்தி மற்றும் காய்கறிகளை உண்டான் என்று வைத்துக்கொள்வோம், இன்று மாலையில் அதே உணவை உண்ணலாம் என்று அவனுக்குத் தெரியும். இந்த வழியில் அவன் கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும் நிகழ்காலத்துடன் இணைக்கிறான். சாதாரண வாழ்க்கையில், எதிர்காலத்திற்காக பல திட்டங்களை வகுக்கிறோம்.**

சூட்சும ஆன்மீகத் தளங்களில் (SUBTLE PLANES), **கொடுங்கனவுகள்** மற்றும் **பிரமைகள்** பற்றி விளக்கி, பாபா கூறினார்:

**மூன்றாவது மற்றும் நான்காவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையில் நிலைகொண்டிருக்கும் ஒரு யாத்ரீகர், தெய்வீகக் கொடுங்கனவைக்** (DIVINE NIGHTMARE) **காண்கிறார் - அதாவது குழப்ப நிலை** ((முக்கம்-இ-ஹைரத் - MUKAM-E-HAIRAT). **அவர் கொடுங்கனவைக் கண்ட உடனேயே, அந்த நேரத்தில் அவர் எந்த நிலையில் இருந்தாலும், குறுகிய காலத்திற்கு, நீண்ட காலத்திற்கு அல்லது பல ஆண்டுகளுக்கு அந்த நிலையிலேயே தொடர்கிறார். உதாரணமாக, கொடுங்கனவைக் காணும் நேரத்தில், யாத்ரீகர் ஒருவர், தனது கால்களை உயர்த்திக் கொண்டிருந்ததாக வைத்துக்கொள்வோம்; ஒரு சத்குரு, பிர்** (PIR) **அல்லது வாலி** (WALI) **அவருக்கு உதவி செய்து உந்துதலை வழங்கும் வரை, அவர் குறுகிய அல்லது நீண்ட காலத்திற்கு அப்படியே இருப்பார்.**

**சூட்சும உணர்வுடன் ஆர்வலர் ஒருவர், நான்காவது மற்றும் ஐந்தாவது ஆன்மீகத் தளங்களுக்கு இடையில், தெய்வீக பிரமையைக்** (DIVINE HALLUCINATION) **காணும் தருவாயில், அவர் இறை-உணர்வை அடைந்ததாக உணர்கிறார். ஆனால் நான்காவது ஆன்மீகத் தளத்தைக் கடந்து, ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நுழைந்ததும், தான் நினைத்தது தவறு என்று தெரிந்து, இப்போது பாதுகாப்பாக இருக்கிறார்.**

**ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் ஒரு வாலி, உயிரைத் துறந்து வேறொரு வடிவத்தை எடுத்தால், அவர் ஆறு அல்லது ஏழு வயதில் கூட மிகவும் புத்திசாலியாகத் தோன்றுவார். கற்றறிந்தவர்களால் கூட பதில் சொல்ல முடியாத கேள்விகளை அவர் கேட்கிறார்.**

பாபா மேலும் கூறினார், "**தெய்வீக பிரம்மையைக் காணும் யாத்ரீகருக்கு ஒரு பரிபூரண குருநாதர் (சத்குரு), பிர் அல்லது வாலி மூலம் உதவ முடியும்.**" பிரான்-இ-பிர் தஸ்தகீர் (PIRAN-E-PIR DASTAGIR) பற்றிய இந்தக் கதையுடன் அவர் முடித்தார்:

**சத்குருவின் (குதுப்) அறிவு மற்றும் ஆற்றலைப் பற்றிய கதை இது. ஒரு காலத்தில் பாக்தாத்தில் பிரான்-இ-பிர் தஸ்தகீர் என்ற முஸ்லீம் குருநாதர் இருந்தார். சத்குருவாக (குதுப்) இருந்த அவர் ஒரு சிறுவனை மிகவும் நேசித்தார். சிறுவன் தனது தந்தையை மிகவும் நேசித்தான். ஏழு வயதில், சிறுவனின் தந்தை காலமானதும், அவன் சத்குருவுடன் இணைந்தான்.**

**பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு நாள், சத்குரு தஸ்தகீர் மிகவும் இனிமையான மனநிலையில் இருந்த வேளையில், சிறுவனிடம் அவன் எதை விரும்பினாலும் தருவதாகக் கூறினார். முட்டாள் சிறுவன், இறை-உணர்வுக்கு பதிலாக, உயிரைத் துறந்த தனது தந்தையை மீட்டெடுக்குமாறு கேட்டுக் கொண்டான். தஸ்தகீர் அதே கேள்வியை மூன்று முறை திரும்பத் திரும்பக் கேட்டார்; ஆனால் முட்டாள் சிறுவன் தனது தந்தைக்காக மட்டுமே வேண்டினான். சத்குரு சிறுவனின் விருப்பத்தை நிறைவேற்றவே, அவன் தனது தந்தையை உயிருடன் கண்டுகொண்டு அன்புடன் அரவணைத்தான்.**

**இப்போது சத்குருவின் ஆற்றலையும் அறிவையும் பாருங்கள். பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னர் உயிரைத் துறந்த சிறுவனின் தந்தையை உயிரோடு மீட்பதற்கு, அவர் ஒரு நொடியில் எண்ணற்ற மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது, ஏனெனில் அந்த சிறுவனின் தந்தை பல உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பலருடன் தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும். சுருக்கமாக, வெளியளவில் ஒரு சிறிய மாற்றத்தைச் செய்ய, குருநாதர் பிரபஞ்சத்தில் எண்ணற்ற மாற்றங்களைச் செய்ய வேண்டும்.**

**1963** ஜூன் **15** சனிக்கிழமை அன்று, ஆந்திரப் பிரதேச மாநில கலால் வரி, மதுவிலக்கு மற்றும் சமூக நலத்துறை (MINISTER FOR EXCISE, PROHIBITION & SOCIAL WELFARE) அமைச்சர் எம்.ஆர். அப்பா ராவ் (M.R. APPA RAO), பாபாவின் தரிசனத்திற்காக, தனது மனைவியுடன் வந்தார். பாபாவின் பாதங்களில் பால் மற்றும் தேனால் அபிஷேகம் செய்ய விரும்பினார், ஆனால் பாபாவிடம் அனுமதி கேட்க தயங்கியபோது, பாபா அவரிடம் '**உங்களுக்கு என்ன வேண்டும்?**' என்று கேட்டார்.



அபிஷேகத்திற்குப் பின்னர் எரச், பாபாவின் பாதங்களை சுத்தம் செய்தல்
(ERUCH CLEANING BABA'S FEET AFTER THEY WERE ANNOINTED)

தயக்கத்துடன், "உங்களுக்கு எந்தத் தொல்லையும் இல்லை என்றால், உங்கள் பாதங்களை வணங்க விரும்புகிறேன்" என்று பதிலளித்தார். பாபா இணக்கம் தெரிவித்து, மறுநாள் காலையில் வருமாறு அறிவுறுத்தினார்.

மறுநாள் காலை 7:00 மணியளவில் அப்பா ராவ் திரும்பி வந்தார்; அவரும் அவரது மனைவியும் பாபாவின் பாதங்களில் தேன், பால், தயிர், வாசனை திரவியங்கள் மற்றும் பலவற்றால் அபிஷேகம் செய்தனர். பின்னர் அவர்கள் அவரது கால்களை மீண்டும் நறுமணத் திரவியத்தாலும், இறுதியாகப் பன்னீராலும் கழுவினர். அவர்கள் பாபாவிற்குத் தேநீர் வழங்கிய வேளையில், பாபா ஓரிரு வாய் அருந்தி, மீதியை அவர்களுக்கே பிரசாதமாகத் கொடுத்தார். அப்பா ராவ், பாபாவிடம், "எங்கள் இதயத்தில் நாங்கள் நம்புவதை - அதாவது நீங்கள் அவதார புருஷர் - மனித உருவில் பூமியில் அவதரித்த கடவுள் என்பதை என் சார்பாகவும் எனது மனைவி சார்பாகவும் பகிரங்கமாக அறிவிக்க விரும்புகிறேன்." தம்பதியரின் நேர்மையை பாபா பாராட்டினார்.

தரிசனத்தின் இறுதி வார கடைசி நாளான அன்று, ஏராளமானோர் வந்து நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தனர். பாபா மண்டபத்திற்குள் நுழைந்து, தரிசனம் வழங்கிய போது, மதுசூதனன் பஜனை பாடினார். பாபா, லதாவிடமும் கஸல்களைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார்.

வேறொரு பெண், குறிப்பாக ஒரு பித்தளைத் தட்டின் விளிம்பில் நின்று நடனமாடியது பாபாவை மிகவும் அகமகிழச் செய்தது. கவாலி பாடகர் ஒருவர் சுமார் ஒன்றரை மணி நேரம் பாடினார். பாபா அவருடைய கஸல்களை விரும்பி, கைக்குட்டையை அன்பின் சின்னமாக வழங்கினார். காலை 10:50 மணிக்கு ஆரத்தியை நிகழ்த்தி அனைவரும் வெளியேறினர்.

பாபா மண்டலியை சந்திக்க பக்கத்து அறைக்குச் சென்று மீண்டும் எடுத்துரைத்தார்: "**எனது பணியின் நிலைப்பாட்டிலிருந்து அடுத்த ஒன்பது மாதங்கள் மிகவும் முக்கியமானவை. எந்த சூழ்நிலையிலும் எனது தாமனை (மேலங்கி) விட்டுவிடக் கூடாது**" என்று எச்சரித்தார். அன்று மதியம் சிறப்பு நிகழ்ச்சி எதுவும் இல்லை, பாபா மாலை 3:30 மணிக்கு ஓய்வு பெற்றார்.

மறுநாள் ஜூன் 16 காலை 6:45 மணிக்கு பாபா மண்டலியின் அறைக்குச் சென்று, கீழ்வரும் வழிபாட்டு வாய்ப்பாட்டை மீண்டும் மொழியுமாறு கூறினார்: "**கடவுளே! கடைசி வரை பாபாவின் தாமனைப் பற்றிக்கொள்ள எங்கள் அனைவருக்கும் உதவுவீராக!**"

மும்பையிலிருந்து கிரிக்கெட் வீரர்கள் நரி காண்டிராக்டர், பாலி உம்ரிகர் ஆகியோர் வந்தனர். பாபா அவர்கள் இருவரையும் பார்த்ததில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி அவர்களைத் தழுவினார்.

அதற்குப் பிறகு பாபா மண்டபத்திற்குள் நுழைந்தார். பாபா அவரது அன்பர்களை சந்திக்கும் கடைசி நாள் இது என்பதால், அவரது தரிசனத்திற்காக

நீண்ட வரிசையில் பலர் காத்திருந்தனர். இசை நிகழ்ச்சியுடன் தரிசனமும் தொடங்கியது. காலை 8:30 மணிக்கு, ஹாரி கென்மோர் குருநாதரின் பிரார்த்தனையை மொழிந்தார்.

சுமார் ஒரு டஜன் குஜராத்தி பெண்கள் பாபாவை தரிசனம் செய்ய வந்தனர். அவர்கள் ஒரு துறவியாக மதிக்கப்பட்ட பெண்மணி ஒருவரால் வழிநடத்தப்பட்டார்; அவரைப் பின்பற்றுபவர்கள் குஜராத்தில் ஏராளமானோர் இருந்தனர். பாபா முன்னிலையில் பஜனை பாடும் வாய்ப்பு கிடைக்குமா என்று கேட்டபோது, பாபா அதை அனுமதித்தார்; அனைவரும் ஒன்றிணைந்து அழகாக இசைந்து பாடினர். அங்கிருந்தவர்களில் பலர் அவர்களோடு இணைந்து பாடினர். பாபாவும் இசைக்கு இசைந்தாற் போல நாற்காலியில் தாளமிட்டார். இதைத் தொடர்ந்து, பாபாவின் சகோதரரின் பேத்தி மெஹர்னாஸ் (ஜெஹாங்கு மற்றும் குல்னாரின் நான்கு வயது மகள்) அழகான நடன நிகழ்ச்சி ஒன்றை வழங்கினார். அன்று புகைப்படம் எடுப்பதில் மும்முரமாக இருந்த பெஹராமிடம் பாபா, குழந்தையின் நடனத்தை, காணொளி படமாக்கக் கூறினார்.

மும்பையைச் சேர்ந்த பிரபல அகில இந்திய வானொலி இசைக்கலைஞர் விட்டல் ஷிண்டே (ALL INDIA RADIO MUSICIAN VITHAL SHINDE) அன்று காலை 9:30 மணியளவில், பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், பல கஸல்களைப் பாடினார். அவரது இனிமையான குரலையும் நடிப்பையும் பாபா நன்கு ரசித்தார். ஒரு குறிப்பிட்ட கஸலுக்குச் செவிமடுத்த பாபா, **"இதில் அடங்கியுள்ள நகைச்சுவையைப் பாருங்கள்! நடைமுறையில் இருக்கும் மஹாராஷ்டிரா அரசின் தடையை மீறி, பலர் மது அருந்துகிறார்கள். ஆனால், தெய்வீக அன்பின் மதுவை அருந்துவதற்கு தடை இல்லை என்றாலும்** (அது ஒருவர் விரும்பும் எந்த அளவிலும் அனைவருக்கும் வழங்கப்படும்) **அரிதாகவே அந்த மதுவை அருந்த ஒருவருக்குத் தாகம் ஏற்படும்! என்ன ஒரு கேலிக்கூத்து பாருங்கள்!"** என்றார்.

ஒரு பார்சி பாதிரியார் பாபாவிடம் வந்தபோது, பாபா அவரிடம் ஒரு பஜனைப் பாடலைப் பாடுமாறு கேட்டுக்கொள்ளவே, அந்த மனிதரும் பாபாவை நேசித்ததால் பாட இணக்கம் தெரிவித்தார். ஒரு ஸொராஸ்ட்ரியன் பாதிரியார் (சாதாரணமாக, இவர்களில் பெரும்பாலானோர், பிற பூசாரிகளைப் போலவே, சடங்கு சம்பிரதாயங்களில் மிகவும் மூழ்கியிருப்பவர்கள்) இந்து பஜனை ஒன்றைப் பாடுவது, மிகவும் அசாதாரணமான காட்சியாக இருந்தது, அதில் ராமர் ஒருவரே (அவதார புருஷர்) என்றென்றும் உளதாயிருக்கிறார் என்ற கருத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை.

காலை 10:30 மணிக்கு பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி, அனைவரும் புறப்பட்டுச் சென்றனர். அரை மணி நேரத்தில் பக்கத்து அறைக்கு வந்த பாபா, பாலி உம்ரிகர், நரி காண்டிராக்டர் மற்றும் மும்பையிலிருந்து மூன்று பார்சி கிரிக்கெட் வீரர்களை சந்தித்தார். அவர் கிரிக்கெட் விளையாடிய தனது பள்ளி

நாட்களை அவர்களுடன் நினைவு கூர்ந்தார், பின்னர், "**என்னை உண்மையில் என்னவென்று அறிவது மிகவும் கடினம். நான் எல்லையற்றவன், நான் அதை தொடர்ந்து அனுபவிக்கிறேன். அரிதான ஒருவர் மட்டுமே இந்த நிலையை அனுபவிக்கிறார்**" என்று கூறினார்.

கிரிக்கெட் அணியின் தலைவனான நரி காண்டிராக்டரிடம் பாபா கருத்துரைக்கையில், '**அவர் அடிக்கடி நல்ல கிரிக்கெட் போட்டிகளைக் காண விரும்புவதாகவும், ஆனால் மக்கள் அமைதியாக அவ்வாறு செய்ய அனுமதிக்க மாட்டார்கள்**' என்றும் கூறினார். நரி காண்டிராக்டர், பாபாவை மும்பைக்கு அழைத்தார், அவர் 'ஒரு போட்டியை எந்தவித இடையூறும் இல்லாமல் பார்ப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறேன்' என்று கூறினார். பாபா இவ்வாறு பதிலளித்தார், "**ஒன்பது மாதங்கள், நான் மெஹராஸாத்தில் இருப்பேன், எந்தத் தொந்தரவும் இல்லாமல் இருக்க விரும்புகிறேன். நான் பல நாட்கள் உணவு உண்ணாமல், நீர் அருந்தாமல் இருக்கலாம். ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, முழு உலகமும் என்னிடம் வரும். நான் யார் என்பதை அப்போது அனைவரும் தெரிந்துகொள்வர். ஆனால் நான் எனது மௌனத்தைக் கலைத்த பின்னர், என்னிடம் வருவதில் எந்த சிறப்பு அம்சமும் இல்லை. இப்போது என்னிடம் வருபவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்!**"

பாபா தொடர்ந்து கூறினார், "**ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை மறைக்க முடியாது. உண்மைப்பொருளாக இல்லாமல் இருந்திருந்தால், இந்த அளவிலான வார்த்தைகளும், வெளிப்பாடுகளும் எனது தெய்வீகத்திற்கு உதவாது. பாபா, பாபாவாக இல்லை என்றால், அவரைப் பார்க்க பலர் வருவதில் எந்த பயனும் இருக்க முடியாது.**"

பாபா மீண்டும் 11:50 மணிக்கு பக்கத்து அறைக்குத் திரும்பி வந்தபோது, நவ்ஸாரியை சேர்ந்த ஒரு பெண் பக்தரிடம் பாடுமாறு கேட்டுக்கொண்டார். அவர் பல வருடங்களுக்கு முன்பு பாபா முன்னிலையில் பாடியிருந்தார்.

மதியம் 12:20 மணியளவில், பாபா மண்டபத்திற்குத் திரும்பி வந்த போது, அங்கு அவரது தரிசனத்திற்காக மக்கள் காத்திருந்தனர். ஏற்கனவே குறிப்பிட்டது போல், இறுதி நாள் என்பதால், கூட்டம் அதிகமாக இருந்தது. மதுசூதனன் அவரது பஜனைகளைத் தொடர்ந்தார்.

மெஹரா கேரவாலா என்ற நான்கு வயது சிறுமி பாபாவின் தரிசனத்திற்காக அவரை அணுகியபோது, குருநாதரின் பிரார்த்தனையை ஒலிபெருக்கியில் மொழியுமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட வேளையில், அவர் அதை தயக்கமின்றி செய்தார். மஹாபலேஷ்வரில் வாழும் கோஹியார் சத்தாராவாலா, பழங்கால ஸொராஸ்ட்ரிய பிரார்த்தனையை மொழியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார். பாரசீக மொழியில் அமைந்த வார்த்தைகள் பலருக்குப் புரியவில்லை என்றாலும், அது அவர்களின் கண்களில் கண்ணீரை வரவழைக்கும் அளவுக்கு உணர்ச்சி பொங்க அவர் மொழிந்தார்.

குருபிரசாத் மாளிகையை கௌரவிக்கும் வகையில் மதுசூதனன் புதிய பாடல் ஒன்றை இயற்றியிருந்தார். அவர் முழுப் பாடலையும் அச்சிட்டு, சட்டமிட்டு பாபாவிடம் கொடுக்கவே, அவர் அதை மஹாராணி ஷாந்தாதேவியிடம் கொடுத்து, மதுசூதனிடம் பாடுமாறு கேட்டுக்கொண்டார். அன்று காலையில் பாடிய விட்டல் ஷிண்டே மேலும் சில கஸல்களைப் பாடினார். கோல்வல்கரும் கலந்து கொண்டு, பைரவி ராகத்தில் அமைந்த இறுதிப் பாடலைப் பாடினார். நடைமுறையில் மண்டபத்தில் இருந்த அனைவரும் கண்கலங்கி அழுது கொண்டிருந்தனர். அதற்குப் பிறகு மதுசூதனன் அன்பின் பிரியாவிடை பாடலைப் பாடினார். கண்ணீரில் உருகாமல் இருந்த இதயங்களும் இப்போது உருகத் தொடங்கின.

ஹாரி கென்மோர் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனையை மொழியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார், அதைத் தொடர்ந்து ஆரத்தியும் நிகழ்த்தப்பட்டது. அன்று பாபாவின் தரிசனத்தை அடையப் பெறாதவர்கள் இறுதியாக அவரிடம் வந்தனர்.

மாலை 5:15 மணிக்கு, பாபா மண்டபத்தை விட்டு வெளியேறிய வேளையில், அவரது அன்பர்கள் தங்கள் இதயங்களில் 'வலி' மற்றும் 'மகிழ்ச்சி'யின் ஒருங்கிணைந்த உணர்வுடன் புறப்பட்டுச் சென்றனர் - பிரிவினால் உருவான வலி மற்றும் அவரது சகவாசத்தில் பங்கெடுத்ததால் விளைந்த மகிழ்ச்சி.

காலம் இதை இப்படிப் பதிவுசெய்தது: "இவ்வாறு 1963 கோடையில் குருபிரசாத்தின் பத்து வார தரிசன நிகழ்ச்சிகள் நிறைவுக்கு வந்தது. இந்தியா முழுவதிலுமிருந்தும் அனைத்து சாதி, மதம் மற்றும் இனத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் தங்கள் பிரியமான கடவுளைக் காண பூனாவிற்கு புனித யாத்திரை மேற்கொண்டு, இறை-மனிதனின் அன்பின் சூரிய ஒளியில் நனைந்தனர். ஒவ்வொரு வார இறுதி நாட்களில் வந்தவர்களுக்கு, பாபாவின் இறை ஒளியின் பிரகாசம், அவர்களை வாரந்தோறும், வீடுகள் மற்றும் வேலைகளை விட்டு வெளியேறி, நெரிசலான ரயில்களிலும் பேருந்துகளிலும் பயணித்து, அவரது பாதங்களில் அடிபணிய தூண்டுதலாக இருந்தது. ஆனால் இறை மனிதனின் பிரசன்னத்தால் அடையப்பெற்ற அமைதி, அவர்கள் வாழ்க்கையில் தங்கள் கடமைகளை மீண்டும் தொடங்குவதற்கும், புதுப்பிக்கப்பட்ட மற்றும் புத்துணர்ச்சியூட்டப்பட்ட அவரது நோக்கத்திற்கான சேவையைத் தொடர்வதற்கும் தேவையான பலத்தை அளித்தது."

பாபா விரும்பியபடி, பூனாவில் அவர் தங்கியிருந்த அடுத்த இரண்டு வாரங்களில், சதாஷிவ் பாட்டீல், மெஹர்ஜி, ஜால்பாய், பெஹராம் மற்றும் அவரது மூன்று மகன்கள், ஜெஹாங்கு, மெஹர்வான் ஜெஸவாலா போன்ற சில நெருங்கிய நபர்கள், மற்றும் ஜாம்நகர் ஹவுஸிலிருந்து ஒரு சிலரைத் தவிர, வேறு எவரும் அவரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. துபாஷ் குடும்பத்தினர் தினமும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர்.

**1963** ஜூன் **18**ஆம் தேதி, ரூபி ஹால் மருத்துவமனையின் டாக்டர் கிரான்ட், நோய் தொடர்பான பரிசோதனைகளைச் செய்ய பாபா ஒப்புக்கொண்டார். 'ஸ்கியகிராம்' (SKIAGRAM) சோதனைகள் மூலம், அவரது இரண்டு சிறுநீரகங்களிலிருந்தும் மிகக் குறைவான வெளியேற்றம் இருந்தது கண்டறியப்பட்டது, மேலும் அவரது இரத்த அணுக்களின் கணக்கீடும் செய்யப்பட்டது. **21**ஆம் தேதி சர்க்கரையின் அளவும் பரிசோதனை செய்யப்பட்டது. இந்த முடிவுகளிலிருந்து, டாக்டர். கிரான்ட், பாபா மிதமான ஆனால் சற்று கடுமையான நீரிழிவு நோய், நாள்பட்ட சிறுநீரக அழற்சி, வீக்கம் (CHRONIC GLOMERULO NEPHRITIS), 'ஆக்ஸலேட்' (HYPEROXALURIA) எனும் ஈரெதிர்மின் அயனி மற்றும் அதிக கொழுப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது கண்டறியப்பட்டது.

டாக்டர் கிரான்ட், மெஹர் பாபாவின் பக்தராக அல்லது அவரைப் பின்பற்றுபவராக இல்லை என்றாலும், அவர் பாபாவின் முன்னிலையில் இருக்கும் போதெல்லாம் 'ஏதோ ஒரு விதத்தில் நிம்மதியாகவும் அமைதியாகவும் உணர்ந்ததோடு, அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியான, நம்பிக்கையூட்டும் மனநிலையில் திரும்பிச் சென்றதாக' ஒப்புக்கொண்டார்.

ஜூன் **20** அன்று, பாபா மெஹர்ஜியின் 'ஃபில்டர் பேப்பர்' தொழிற்சாலையான 'ஒயிட் கிளவுட்' (WHITE CLOUD) நிறுவனத்திற்கும், பின்னர், அருகில் அமைந்த மலையில் ஹார்ப் தம்பதிகள் கட்டி எழுப்பிய புதிய இல்லத்திற்கும் சென்றார். குருபிரசாத் திரும்பி வருவதற்கு முன்பு, பாபா, மெஹர்ஜியின் இல்லமான 'மெஹர் வில்லா'விற்கும் (MEHER VILLA) விஜயம் செய்தார்.

மறுநாள், சர்க்கரை பரிசோதனைக்காக ரூபி ஹால் மருத்துவமனைக்குச் சென்ற பிறகு, பாபா பதினெட்டு ஆண்கள் மற்றும் பரோடா மஹாராணியுடன் காலை **10:00** மணிக்கு ஜாம்நகர் இல்லத்திற்கு வந்து, ஒரு மணி நேரம் அவர்களுடன் செலவிட்டார். வீடு முழுவதும் அலங்கார தோரணங்கள் தொங்கிக் கொண்டிருந்தன; பாபா ஒவ்வொருவரையும் அன்புடன் தழுவினார். உரையாடலின் போது, அவர் குறிப்பிட்டார், "**கடந்த நாளில், நான் தலைமுடியை ஷாம்பூ தடவி சுத்தம் செய்து நீராடினேன்; இதனால் சித்திரவதை செய்யப்பட்டது போல மிகவும் துன்பப்பட்டேன்.**"

அந்த சந்தர்ப்பத்தில் பாபா இவ்வாறு கூறினார்: "**நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, ஒரே நேரத்தில் ஏழு வெவ்வேறு இடங்களில் உடல் ரீதியாகத் தோற்றமளிப்பேன்.**"

சிறிது நேர உரையாடலுக்குப் பிறகு, ரோடா மிஸ்திரி பாட அனுமதி கோரினார். பாபா, பின்பு ஃப்ரீனியிடம் பாடுமாறு கேட்டுக்கொண்டார். ஃப்ரீனியின் வாழ்க்கையில் முதல் முறையாக, அவரது முழங்கால்கள் பதட்டத்தில் நடுங்கின. சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன, ஆனால் பாபா தனது டியூக் மங்கோலா ஸோடா (DUKE'S MANGOLA SODA) பாட்டிலை மட்டும் பருகி, அதில் பெரும்பகுதியை

பிரசாதமாக வழங்கினார். அவர் அங்கிருந்து புறப்படும் முன்னர், அவர்களிடம் ஆரத்தியை நிகழ்த்துமாறு கூறினார்.

பாபா வெளி நபர்களைப் பார்க்கவில்லை என்றாலும், 1963 ஜூன் 23 ஞாயிறு அன்று, குருந்த்வாடி மஹாராஜாவின் அழைப்பின் பேரில், ஷாந்தாதேவி மற்றும் மண்டலி உட்பட, அவரது 32 அன்பர்களுடன் பாபா அங்குச் சென்றார். இந்தியாவின் தற்காப்பு முயற்சிகளுக்கு ஆதரவாக, ஷிவாஜிநகர் அருகே அமைந்த பாம்பூர்டா போலீஸ் தலைமையக பொழுதுபோக்கு மண்டபத்தில் நடைபெற்ற 'ராஷ்ட்ரிய சஹாயக் ஸ்திரீ சமிதி' கலைக் கண்காட்சியை (RASHTRIYA SAHAYAK STREE SAMITI ART EXHIBITION AT THE BHAMBURDA POLICE HEADQUARTERS RECREATION HALL) அவர்கள் பார்வையிட்டனர்.

ஜூன் 25ஆம் தேதி, ஆன்மீகப் பாதையில் அனுபவங்களின் மூன்று நிலைகளைப் பற்றி பாபா விளக்கினார் - உற்சாகம் (ENTHUSIASM), மனச்சோர்வு (DEPRESSION) மற்றும் நம்பிக்கை (HOPE):

**அனுபவங்களில் மூன்று நிலைகள் உள்ளன. இறை நாட்டம் மிக்க ஒருவர், ஆன்மீகப் பாதையில் நுழையும் போது, பன்னிரண்டு ஆண்டுகள் அவர் உற்சாகத்தின் அனுபவத்தை அடையப் பெறுகிறார். அதைத் தொடர்ந்து மனச்சோர்வின் காலகட்டம் வருகிறது. இந்த மனச்சோர்வு அதன் ஆழத்தை எட்டும் நிலையில், ஆர்வலர் உலகில் அல்லது கடவுள் மீது ஆர்வம் காட்டுவதில்லை. இந்தக் காலகட்டம் பன்னிரண்டு ஆண்டுகள் நீடிக்கும். மனச்சோர்வின் காலகட்டத்தை கடந்த பின்னர், ஆர்வலர் மீண்டும் கடவுள் மீது ஆர்வத்தை உணரத் தொடங்கும் போது, நம்பிக்கையின் காலகட்டம் வருகிறது. இதுவும் பன்னிரண்டு ஆண்டுகள் தொடரும். இக்காலகட்டத்தின் முடிவில், ஆர்வலர் சத்குருவின் (குதுப்) அருளால் இறை-உணர்வை எய்துகிறார்.**

**சில சந்தர்ப்பங்களில் ஆர்வலர் முறையே மூன்று வருடங்கள் உற்சாகம் மற்றும்** (ஓர் இருள் நிறைந்த) **மனச்சோர்வை அனுபவிக்கிறார். அதற்குப் பின்னர் 20 ஆண்டுகள் நம்பிக்கையின் காலகட்டம் தொடரும். அதன் முடிவில் அவர் கடவுளின் ஒரு குறுகிய பார்வையை அடையப் பெறுகிறார்.**

**பௌதீக கோளத்தில் உடல் ஆரோக்கியம், உணவு, பார்ப்பது, கேட்பது, வாசனையை நுகர்வது போன்ற பல்வேறு அனுபவங்கள் உள்ளன. ஆனால் ஆர்வலர் ஒருவர் சூட்சும உலகை அனுபவிக்கும் போது, பௌதீக உலகின் அனுபவங்கள் அனைத்தும் முக்கியமற்றதாகிவிடும். சூட்சும உலகின் அனுபவங்கள் பௌதீக உலக அனுபவங்களைப் போலவே எண்ணிலடங்காதவை.**

**ஆழ் மன உலகிலும், சில அனுபவங்கள் உள்ளன. யாத்ரீகர் ஒருவர் ஆழ் மன உலகில் நுழைந்து அதை அனுபவிக்கும் போது, பௌதீக மற்றும் சூட்சும உலகின் அனுபவங்கள் முக்கியமற்றதாகிவிடுகிறது. ஏழாவது ஆன்மீகத் தளத்தில் இறை அனுபவம் மட்டுமே உள்ளது. ஏழாவது ஆன்மீகத்**

**தளத்தை ஆர்வலர் ஒருவர் அனுபவிக்கும் போது, பௌதீக, சூட்சும மற்றும் ஆழ் மன உலகங்களின் அனைத்து அனுபவங்களும் அவருக்கு முற்றிலும் முக்கியமற்றதாகிவிடும்.**

**ஒரு பரிபூரண குருநாதரின் அருளால் ஒருவர் இறையுணர்வை அடையப் பெறும்போது, அது நள்ளிரவில் அல்லது அதிகாலை ஐந்து மணிக்கு நிகழும். ஆனால் அவதார புருஷர் எந்த நேரத்திலும் இறையுணர்வை வழங்க முடியும்.**


பாபா கீழ்வரும் வரிகளை மேற்கோள் காட்டி முடித்தார்:

**விடியற்காலையில் 'சூரியன்' மலை உச்சியில்,**
**குறிப்பிட்ட நேரத்தில் கொடியை பறக்கவிட்ட வேளையில்,**
**அன்பிற்குரியவர் கதவைத் தட்டி அன்பனிடம் கூறினார்,**
**'இதோ, நான் வந்துவிட்டேன்!'**


அடுத்த நாள் ஜூன் 26 அன்று, ஆன்மீகத் தளங்களின் அனுபவங்களைப் பற்றி பாபா மேலும் சில விஷயங்களை எடுத்துரைத்தார்:

**சில நேரங்களில் ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் வாலி, ஆறாவது ஆன்மீகத் தளத்தின் ஒரு குறுகிய காட்சியை சிறிது நேரம் காண்கிறார், பின்னர் அந்த அனுபவம் மறைந்துவிடும். மீண்டும் சிறிது நேரம் கழித்து, வாலி ஆறாவது ஆன்மீகத் தளத்தின் காட்சியின் அனுபவத்தைப் அடையப் பெறுகிறார், அதுவும் சிறிது நேரத்தில் மறைந்துவிடும். எனவே அவர் மேலதிக காட்சிகளின் அனுபவத்திற்காக ஒரு பரிபூரண குருநாதரின் உதவியை நாடுகிறார்.**

**ஹஃபீஸ் இந்த நிகழ்வை ஒரு உருவகத்துடன் விளக்குகிறார். நடுக்கடலில் படகு ஒன்று, பெரிய அலை மேல் தூக்கி எறியப்படுகிறது. அலையில், மேலே எழும்பும் போது, படகோட்டி இலக்கின் ஒரு குறுகிய காட்சியைக் காண்கிறார். ஆனால் அலை கீழே வரும் வேளையில், படகோட்டியால் அந்தக் காட்சியைக் காண முடிவதில்லை. எனவே படகோட்டி சத்குருவை நெருங்கி, அலையின் உச்சத்திலிருந்து கண்ட அந்தக் காட்சியை மீண்டும் காணும் நோக்கத்தில் மற்றுமொரு பெரிய அலையை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறார்.**



மெஹர் பாபா, குருபிரசாத், ஏப்ரல் - ஜூன் **1963**
(MEHER BABA, GURUPRASAD, APRIL – JUNE 1963)



ஃபிரான்சிஸ் பிராபஸோன்
(FRANCIS BRABAZONE)



மெஹர் பாபா
(MEHER BABA) **- 1963**

# மெஹராஸாத் - ஏகாந்தவாசம்

(**Seclusion In Meherazad**)

ஸரோஷ், விலூ இவர்களின் மகன் மேர்வான், இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்து, அவரது சுவிஸ் வருங்கால மனைவியான அனிதாவைத் திருமணம் செய்து கொள்ளவிருந்தார். ஒரு நாள் அவரும் ஸரோஷும் குருபிரசாத்திற்கு வந்த வேளையில், மேர்வான், பாபாவிடம், "பாபா, எனது திருமண நாளில் உங்கள் ஆசீர்வாதம் வேண்டும்" என்றார்.

பாபா, "**சரி**" என்று சைகையால் தெரிவித்து, அஹமதுநகரில் நிகழும் திருமணத்திற்குப் பிறகு, மணமகனும், மணமகளும், ஸரோஷ்-விலூவுடன் அவரைப் பார்க்க குருபிரசாத்திற்கு வருமாறு அறிவுறுத்தினார்.

1963 ஜூன் 27 வியாழன் அன்று திருமணம் நடைபெற்றது. அன்றைய தினம், பாபா, எரச்சிடம், ஸரோஷை தொலைபேசியில் தொடர்புகொண்டு, திருமணத்திற்கான ஏற்பாடுகள் எப்படி நடக்கிறது என்பதை விசாரிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஸரோஷ் எரிச்சலுடன், "இங்கே பயங்கரமான மழை பெய்கிறது, பாபாவிடம் சொல்லுங்கள்! திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் உள்ளே மாற்ற வேண்டிய கட்டாயம்" என்று ஸரோஷ் தொலைபேசியில் கத்தினார். இதை எரச் கூறியபோது, பாபா அதைக் கேட்டுக் கொண்டாரே தவிர, கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

மறுநாள் காலை திருமணக் குழுவினர் குருபிரசாத்திற்கு வந்தனர். பாபாவின் முன் அமர்ந்திருந்தவர்களில் ஆதியும், ரோடா துபாஷும் அடங்குவர். வழக்கமான வாழ்த்துகளுக்குப் பிறகு, விலூ, ஸரோஷ் இருவரிடமும் பாபா திருமணத்தைப் பற்றி கேட்டார். விலூ, "பாபா, கடுமையான மழை பெய்தது!" என்றார்.

அதற்கு பாபா, "**ஆமாம், உங்கள் மகன் என்னிடம் கேட்ட ஆசீர்வாதத்தை நான் அவருக்கு வழங்கினேன்**" என்று பதிலளித்தார். பாபா, ரோடா துபாஷின் பக்கம் திரும்பி, அவரை நோக்கி சைகை செய்து, "**அவருடைய திருமண நாளில் என்ன நடந்தது என்று அவரையே கேளுங்கள்**" என்று கூறினார்.

1945இல் பாகிஸ்தானில் நடந்த ரோடா-ஆதி திருமணத்தின் போது, இதேபோன்ற சம்பவம் நிகழ்ந்தது. அப்போது பாபாவை நம்பாமல் இருந்த ரோடா, அவருக்கு ஒரு சவால் விடுத்தார்: "அவர்கள் சொல்வது போல நீங்கள் கடவுளாக இருந்தால், எனது திருமண நாளில் எனக்கு சொர்க்கலோகத்தின் ஆசீர்வாதங்களை அனுப்புவீர்கள்!" அன்றும் பலத்த மழை பெய்தது. ஆனால் ரோடா இந்த சம்பவத்தைப் பற்றியோ, பாபாவிடம் தனது சவாலைக் குறித்தோ எதுவும் கூறியதே இல்லை! அன்று குருபிரசாத்தில், பாபா அவரிடம் இதைப் பற்றி கேட்டபோது, அவர் மிகுந்த ஆச்சரியத்தில் வாயடைத்து போனார். தனது திருமண நாளில் பாபா, அவரது ஆசீர்வாதங்களை அனுப்பினார் என்பதை ரோடா,

ஆழ் இதயத்தில் அறிந்திருந்தார், ஆனால் இப்போது கடவுளே அதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

எரச் உடனே, “சரி, ரோடா, உனது திருமண நாளில் என்ன நடந்தது? நாங்கள் தெரிந்துகொள்ள ஆவலாய் உள்ளோம்” என்றார்.

ரோடா கதையைச் சொல்லத் தொடங்கினார், அவர் பேசிக்கொண்டிருந்த போது, பாபா இடையே குறுக்கிட்டு, அவருக்கு நினைவூட்டும் விதத்தில், **“என்னிடம் இந்த சவாலை விடுத்து, திருமணத்திற்குப் பிறகு நீங்கள் அதை முழுவதுமாக மறந்துவிட்டீர்கள் என்பதை நீங்கள் அவர்களிடம் சொல்லவில்லையே!”** என்று கூறினார். இது உண்மையிலும் உண்மை.

1963 ஜூன் 30 ஞாயிறு அன்று, ஆண், பெண் மண்டலியுடன் பாபா குருபிரசாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார். பூனா அன்பர்கள் பந்த் கார்டனில் காலை 7:45 மணிக்கு ஒன்றுதிரண்டனர். பாபா (ஹோஷங் தாதாசாஞ்சியின் ஃபியட் காரில் சவாரி செய்தார்) அவர்களிடம் விடைபெறுவதற்காக காரை அங்கே நிறுத்தி, காரிலிருந்து இறங்கி, பாபாஜான் சமாதியின் மரத்தடியில் சிறிது நேரம் அமர்ந்திருக்க, அன்பர்கள் அவரைச் சுற்றி ஒன்றுதிரண்டனர். அந்த ஆண்டு அவரது அன்பர்களுக்கு, பாபாவின் நீண்டகால சகவாசத்தில் இருப்பதற்கான வாய்ப்பைக் கருத்தில் கொள்ளும்போது, அது மிகவும் கடினமான பிரிவாக இருந்தது. பலரின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. முந்தைய நாள் **“குருபிரசாத்தை விட்டுச் செல்ல எனக்கு வருத்தமாக இருக்கிறது, ஆனால் எனது பணியின் நிமித்தம் நான் சென்றாக வேண்டும்”** என்று பாபாவே குறிப்பிட்டிருந்தார்.

பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தி, ஒவ்வொருவரும் அவரது கையை முத்தமிட்ட பின்னர், ஆதி ஓட்டிச் சென்ற மெஹர்ஜியின் காரில் பாபா மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அவர்கள் அஹமதுநகரை வந்தடைந்ததும், வழக்கம் போல் அக்பர் பிரஸ் மற்றும் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் சிறிது நேரம் நின்று, 11:00 மணிக்கு மெஹராஸாத் வந்து சேர்ந்தனர்.

ஜூலை 2ஆம் தேதி, பாபா விரும்பியபடி காக்கா பாரியா பூத் மருத்துவமனையிலிருந்து அழைத்து வரப்பட்டார். மூன்று நாட்களுக்குப் பிறகு, காக்கா இல்லாத போது ஒரு மாதம் மெஹராஸாத்தில் தங்கியிருந்த பாதிரி, மெஹராபாத் திரும்பிச் சென்றார். சில நாட்கள் உணவு தயார் செய்வதில் நாஜாவிற்கு உதவ, சுஷீலா, கைக்கோபாத்துடன் அதே நாளில் மெஹராஸாத் வந்தார்.

கோஹெர், பாபாவின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்து வந்த இந்தக் காலகட்டம், அனைவருக்கும் கவலையும், பதட்டமுமாக இருந்தது. ஜூலை 2, 3 தேதிகளில் பாபாவின் உடல்நிலையைப் பற்றி விவாதிக்கவும், உணவைத் திட்டமிடவும் மெஹராபாத்திலிருந்து டாக்டர் டான் அழைக்கப்பட்டார். இந்த நேரத்தில் பாபாவின் எடை சுமார் 150 பவுண்டுகளாக

இருந்த நிலையில், டாக்டர் டானின் கூற்றுப்படி, பாபா சுமார் 20 பவுண்டுகள் குறைக்க அறிவுறுத்தப்பட்டார். எனவே அவர் எண்ணெய், மாவுச்சத்து, புரதங்கள் மற்றும் உப்பு உட்கொள்வதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. (இந்த நேரத்தில் பாபாவின் உயரம் 5' 5", முன்னர் இருந்ததை விட ஓர் அங்குலம் குறைவு.)

1963 ஜூலை 7 ஞாயிறு அன்று, ரமா, ஷீலா, மெஹர்நாத் ஆகியோரை ஆதி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்த வேளையில், பாபா அவர்களுடன் குஷ்ரு குவார்ட்டர்ஸில் அவர்களின் புதிய ஏற்பாடுகளைப் பற்றி விவாதித்தார். அடுத்த நாள் கோர்ஷெத் வந்தார்.

சுவாமி சத்யபிரகாஷின் 'திவ்ய வாணி' இதழுக்காக, பாபாவின் மௌன தினத்தை ஒட்டி செய்தி ஒன்றை வழங்குமாறு கேட்டதற்கு, பாபா, ஜூலை 5 அன்று கீழ்வரும் செய்தியை அவருக்கு அனுப்பினார்: "**எனது மௌனமும், குறிப்பிடப்பட்ட நேரத்தில் அந்த மௌனத்தைக் கலைப்பதும், கடவுளைத் தவிர பிற அனைத்தையும் பேசும் நபர்களை மௌனமாக்கும்**."

மெஹர் பாபாவின் மௌனத்தின் 38ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், உலகம் முழுவதும் வாழும் அவரது அன்பர்கள் அனைவரும் 1963 ஜூலை 9ஆம் தேதி நள்ளிரவு முதல், ஜூலை 10 நள்ளிரவு வரை, மௌனம் கடைப்பிடித்தனர். தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் மௌனம் அனுஷ்டிக்க முடியாதவர்கள், 10ஆம் தேதி காலை 8:00 மணி முதல் இரவு 8:00 வரை, பன்னிரண்டு மணி நேரம், தண்ணீர் கூட அருந்தாமல், உபவாசம் கடைப்பிடித்தனர்.

அன்றைய தினம் மெஹராஸாத் மண்டலி மண்டபத்தில் பாபாவின் முன்னால் ஆண்கள் மௌனமாக அமர்ந்திருந்தனர். வழக்கமான கை சைகைகள் மூலம், 'மௌன உரையாடல்கள்' நடந்தன. முன்தினம் இரவு, ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது. பாவ் கல்சூரி இரவு கண்காணிப்புப் பணியில் அமர்ந்திருந்தார். பாபா அவரிடம் ஏதோ கேட்டபோது, பாவ் கல்சூரியால் அதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில், பாபா அவரது விரல் அடையாளங்கள் மற்றும் முகபாவனைகளைக் கண்டு அகமகிழ்ந்தார்; மேலும் வேடிக்கையாக அவரிடம் ஒன்றன்பின் ஒன்றாக எதையேனும் கேட்டுக்கொண்டே இருந்தார். கை சைகைகளைப் புரிந்துகொள்வதில் பாவ் கல்சூரி முற்றிலும் தோல்வியடைந்த நிலையில், பாபா கேட்டார், "**நான் உங்களை நீண்ட நேரம் மௌனம் காக்குமாறு கேட்டுக்கொண்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**"

சரியாக பதிலளிக்க எந்த சைகைகள் அல்லது விரல் அடையாளங்களைக் காட்ட வேண்டும் என்று பாவ் கல்சூரிக்குத் தெரியவில்லை. பாவ் கல்சூரி தனது கைகளால் எதையாவது 'எடுத்துரைக்க' தன்னால் இயன்றவரை முயன்றார், அவரது இக்கட்டான நிலையைக் கண்டு, பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். கடைசியாக, பாபா, "**உங்கள் சைகைகளைப் புரிந்து கொள்ள முயன்றால் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்**!

**உங்கள் சைகைகளால் ஏதாவது 'பேச' விரும்புகிறீர்களா அல்லது கேலி செய்கிறீர்களா?"** என்று கேட்டார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, பாபா தூங்கும் வேளையில் அவரது அறையில் வெளிக்காற்று வருவதை அவர் விரும்பியதில்லை. ஜன்னல்கள், கதவுகள், காற்று துவாரங்கள் அனைத்தும் இறுக்கமாக மூடப்பட்டிருப்பதைத் தவிர, பாபா இரவில் ஓய்வெடுக்கும் முன்பு, மெஹராஸாத் மற்றும் குருபிரசாத் ஆகிய இரு இடங்களிலும், சத்தம் எதுவும் வராமல் இருக்க, காதுகளில் பருத்திப் பஞ்சை வைத்து நிரப்புவது வழக்கம். பாபா இரவில் எதையேனும் வாயிலிட்டு மெல்லும்போது - அவர் சாக்லேட்டுகள், கேக், மிட்டாய் அல்லது பாலாடைக்கட்டி போன்றவற்றில் சிறிய துண்டு ஒன்றை பாவ் கல்சூரிக்கும் கொடுப்பது உண்டு. ஒருநாள் இரவு எழுந்து அமர்ந்து, **"எனக்கு பசிக்கிறது. சாப்பிட ஏதாவது கொடுங்கள்"** என்று சைகையால் கேட்கவே, பாவ் கல்சூரி சாக்லேட் டின்னை எடுத்து வந்து படுக்கையில் வைத்துவிட்டு, ஜன்னலைத் திறக்கச் சென்றார். இதற்கிடையில், அவர் ஜன்னலை நோக்கித் திரும்பிய அந்த நேரத்தில், பாபா அவரது காதுகளில் இருந்து பஞ்சை எடுத்தார். பாவ் கல்சூரி மீண்டும் படுக்கைக்கு வந்ததும், பாபா அதை அவரிடம் கொடுக்கவே, சாக்லேட் துண்டு என்று நினைத்து பாவ் கல்சூரி அதை வாயிலிட்டு மென்று சாப்பிடத் தொடங்கினார். பாவ் கல்சூரி இப்படி செய்ததைப் பார்த்து பாபா அடக்க முடியாமல் சிரித்தார்.

மறுநாள் காலை, பாபா மண்டலி மண்டபத்திற்கு வந்தபோது, அவர் ஆண்களிடம் கேட்டார், **"ஒரு மனிதன் பருத்திப்பஞ்சு சாப்பிடுவதை நீங்கள் எப்போதேனும் பார்த்திருக்கிறீர்களா? விலங்குகளால் கூட அதை சாப்பிட முடியாது! ஆனால் இந்த மனிதன் நேற்று இரவு பருத்திப்பஞ்சை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்!"** பாபா அதை முக பாவனையால் காட்டியது அனைவரையும் சிரிப்பில் ஆழ்த்தியது.

மூன்று தசாப்தங்களுக்கும் முன்னதாக, தீனா தலாட்டியின் இளைய சகோதரர், 'மெஹராஷ்ரம் பள்ளி'யின் முன்னாள் மாணவனான தீன்ஸி கரனி (DINSI KARANI), ஜூலை 11 அன்று அஹமதுநகருக்கு வந்து, பாபாவிடம் ஒரு நேர்காணலைக் கோரினார். பாபா அவரை சந்திக்க இணக்கம் தெரிவிக்காமல், தீன்ஸிக்கு சில அறிவுறுத்தல்கள் அடங்கிய குறிப்பை, ஆதி சீனியர் மூலமாக அனுப்பிவைத்தார்; அதை அவர் ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்க ஒப்புக்கொண்டார். அதே நாளில் மெஹராஸாத்திற்கு வந்த மூர்த்தி, சில நாட்கள் அங்குத் தங்க அனுமதிக்கப்பட்டார்.

நோஷிர் ஈரானி, ஜூலை 16 அன்று பாபாவை சந்தித்தவர், மெஹராஸாத்தில் தங்க விரும்பினார்; ஆனால் அதற்கு பதிலாக, பாபா அவரை ஒரு மாதத்திற்காக ஸாக்கோரிக்கு அனுப்பி வைத்தார். சில நாட்களுக்காக இந்தியா வந்திருந்த ஹாரி டெடோல்சொவை (HARRY DEDOLCHOW) பாபா மெஹராஸாத்திற்கு வர அனுமதித்தார், ஆனால் டெடோல்சொவின் கப்பல் விரைவில் பயணத்தைத் தொடர இருந்ததால், ஹாரியால் வர முடியவில்லை.

பாபா மெஹராஸாத் திரும்பி வந்ததும், அவரது துன்பம் மேலும் மேலும் தீவிரமடையும் என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார்; அவர் கூறியது இப்போது உண்மையானது. இந்தக் காலகட்டத்தில், பாபாவிற்கு சிறுநீரக கற்களால் தொந்தரவும், இடுப்புப் பாகத்தில் தொடர்ந்து வலியும் இருந்து வந்தது.

ஓய்வெடுக்கும் போதும் அவருக்கு இடுப்பு வலி இருந்தது. இரவில், அவரது மூட்டுகள் மேலும் கடினமாகி வலிக்கத் தொடங்கியது; சில சமயங்களில் அவர் தசைப் பிடிப்புகளால் அவதியுற்றார். அவருக்கு முழங்கால் மூட்டு வலி, சில சமயங்களில் அடிப்பகுதி வரை இருந்தது; ஆனால் அது அவரது இடுப்பு வலியை விட சற்று குறைவாகவே இருந்தது.

முன்பு, பாபா தினமும் தமது இல்லத்திலிருந்து மண்டலியின் அறைகள் பக்கம் நடந்து செல்வது வழக்கம், ஆனால் இப்போது அவரை தோட்டப் பணியாளர்கள் தூக்கு நாற்காலியில் அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. இரண்டு கால்களிலும் நீடித்த வீக்கம் மீண்டும் வெளிப்படவே, அது ஓய்வுக்குப் பின்னரும் சீரானபாடில்லை. பொதுவாக இதுபோன்ற வீக்கத்திற்கு சிறுநீர்ப்போக்கைத் தூண்டும் மருந்து கொடுக்கப்படும், ஆனால் பாபாவின் சிறுநீரக பாதிப்பு காரணமாக அவர் அவற்றை உட்கொள்ள முடியவில்லை.

ஜூலை 22ஆம் தேதிக்குள், பாபாவின் எடையில் சில பவுண்டுகளும், கொழுப்பு அளவும் குறைந்தன; மேலும் அவரது கால்களில் வீக்கம் கிட்டத்தட்ட மறைந்து விட்டது, ஆனால் வயிறு மற்றும் முதுகில் வலி இருந்தது, மேலும் அவர் தலைச்சுற்று இருப்பதாகப் புகார் கூறினார். அவரது நாடித்துடிப்பும், 82 என்ற அளவில் ஆரோக்கியமாக இல்லை.

ஜூலை 31 அன்று, ஸரோஷின் மகன் மேர்வான், அவரது மனைவி அனிதா ஆகியோர் இங்கிலாந்து திரும்புவதற்கு முன்பு, மெஹராஸாத்தில் பாபாவிற்கு மரியாதை செலுத்த அவர் அனுமதித்தார். ஆகஸ்ட் 4 அன்று காலை, மன்ஸாரி மற்றும் கைக்கோபாத்தின் குடும்பத்தினரும் அழைக்கப்பட்டனர்.

11ஆம் தேதி, பாபா, மேற்கத்திய அன்பர்களுக்கு தொலைத்தந்தி மூலம் பின்வரும் செய்தியை அனுப்பினார்: “**எப்போதையும் விட இப்போது எனது மேலங்கியை (தாமன்**, DAMAN) **உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்**.”

ஆகஸ்ட் 13ஆம் தேதி, அக்பர் பிரஸ் மற்றும் பிந்த்ரா ஹவுஸ் குடும்பத்தினரின் பொதுச் சொத்து தொடர்பாக, மெஹராஸாத்தில் பாபா முன்னிலையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

1963 ஆகஸ்ட் 18 ஞாயிறு அன்று, லதா லிமாயே, ஆதியுடன் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். லதா டெல்லியில் ஒரு பாட்டுப் போட்டியில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டதில், பாபா தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து அவரை ஊக்குவித்தார். ஆதி சமீபகாலமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மௌனம் கடைப்பிடிக்கத் தொடங்கினார்; அவர்

விரும்பினால் இது பரவாயில்லை, ஆனால் பாபாவின் முன்னிலையில் அவருடன் பேச வேண்டும் என்று கூறினார், அதை அவர் செய்தார்.

ஆதியின் உதவியாளர் ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா 23ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார்; மேலும் ஒரு மாற்றத்தை விரும்பும் வகையில், செப்டம்பர் 1 முதல் ஒரு மாதம், மெஹராஸாத்தில் தங்குமாறு பாபா அறிவுறுத்தினார். ஃபெராம் அதற்குப் பின்னர் ஒவ்வோர் ஆண்டும் அதையே செய்து வந்தார்.

இதற்கிடையில், சுவாமி சத்யபிரகாஷ் ஆந்திராவின் விஜயவாடா நகரில் 'மெஹர் விஹார்' ('MEHER VIHAR', மெஹரின் உறைவிடம்) என்ற புதிய மையத்தை நிறுவ விரும்பினார். பாபா அந்த யோசனையை விரும்பி, **"நீங்கள் செய்யும் அனைத்திலும் நேர்மையைக் கடைப்பிடியுங்கள், இது உங்களை எப்பொழுதும் பாபாவுடன் இருக்கச் செய்யும்; மேலும், மெஹர் விஹாரில் பாபாவின் அன்பை என்றென்றும் ஒளிரச் செய்யும்"** என்று ஜூலை மாதம் அவருக்குத் தொலைதந்தி அனுப்பினார். இந்த மையத்தின் திறப்பு விழா ஆகஸ்ட் 24 அன்று நடைபெற்றது, பாபா, ஜால்பாயை தனது பிரதிநிதியாக அனுப்பி வைத்தார்.

பாபா கீழ்வரும் தொலைத்தந்தியையும் அனுப்பினார்:

**மெஹர் விஹாரில் அனைவருக்கும் எனது அன்பின் ஆசிகளை வழங்குகிறேன். மெஹர் விஹாரை என் அன்பால் ஒளிரச் செய்து, வாழ்க்கையில் உங்களின் நேர்மையாலும், எனது தாமனைப் பற்றிக் கொண்ட உங்களின் உறுதித்தன்மையாலும், ஏக இறைவனாகிய என் இறை அன்பு மற்றும் உண்மைப்பொருளின் செய்தியைப் பரப்பும் உங்களின் உழைப்பாலும், என் மீதான உங்கள் அன்பின் தீபத்தை எப்பொழுதும் பிரகாசமாக எரியச் செய்யுங்கள்.**

இதற்கிடையில், அமெரிக்காவில், வாஷிங்டன் டி.சி.இல் (WASHINGTON D.C.) 1963 ஆகஸ்ட் 28 அன்று, மார்ட்டின் லூதர் கிங் - ஜூனியர், பொது உரிமைகள் தலைவர் (MARTIN LUTHER KING, JR., A CIVIL RIGHTS LEADER ), பிரிவினைக்கு எதிராக பத்து லட்சம் கறுப்பர்கள் மற்றும் வெள்ளையர்களை 'சுதந்திர அணிவகுப்பு' (FREEDOM MARCH) ஒன்றில் வழிநடத்தினார். இந்தச் செய்தியைக் குறித்த கட்டுரை பாபாவின் முன்னால் குறிப்பிடப்பட்டது.

இந்த நேரத்தில் ஏராளமான அமெரிக்க மற்றும் ரஷ்ய ராக்கெட் விண்வெளி விமானங்களும் செய்திகளில் இடம்பெற்றன. ஒரு நாள் காலையில் மண்டலியில் ஒருவரிடமிருந்து இது குறித்த கருத்துக்கள், பாபாவிடமிருந்து விண்வெளி ஆய்வு பற்றிய இந்தத் தகவலை வரவழைத்தது:

**மனிதன் விண்வெளியை நோக்கி எவ்வளவு தூரம் பறந்து சென்றாலும், பிரபஞ்சத்தின் மிகவும் தொலைதூர பொருளை அடைவதில் வெற்றி கண்டாலும், மனிதனில் எந்த மாற்றமும் ஏற்படாது. எங்குச்**

**சென்றாலும் அவன் இருந்தபடியே இருப்பான். மனிதன் தன் உள்ளே பயணிக்கும் போது மட்டுமே, தனது சுயத்தின் உருமாற்றத்தை அனுபவிக்கிறான். இந்தப் பயணம் ஒன்றுதான் இன்றியமையாதது, ஏனெனில் எல்லையற்ற பொக்கிஷமாக, கடவுள், மனிதனுக்குள்ளேயே உளதாயிருக்கிறார், மேலும் தனக்கு வெளியே, எங்குமே காண முடியாது.**

குருபிரசாத்தில் பாபா கூறியதையே மீண்டும் கூறினார்:

**விண்வெளியில், மனதால் உருவாக்கப்பட்ட பொருட்களை நோக்கி மனம் உயரப் பறக்கும் போது, அது வெறுமையை சந்திக்கிறது; ஆனால் மனிதன் தனக்குள்ளே ஆழமாக மூழ்கும்போது, அவன் வாழ்வின் முழுமையை அனுபவிக்கிறான்.**

ஆகஸ்ட் 25 அன்று, உலக கண்காட்சிக்கான மையங்களில் பணிபுரிந்து கொண்டிருந்த நியூயார்க் நகர அன்பர்களுக்கு, இரண்டாவது செய்தி அனுப்பப்பட்டது. பாபாவின் பிரபஞ்சத்திற்கான 'உலகளாவிய செய்தி' (UNIVERSAL MESSAGE) அச்சிடப்பட்ட ஐந்து லட்சம் பிரதிகள், ஒரு சுருக்கமான 'பாபாவின் வாழ்க்கை வரலாறு' (BRIEF LIFE HISTORY) மற்றும் பிக்குபாயின் கைவண்ணத்தில் உருவான புகைப்படங்கள் (பாபாவால் தேர்ந்தெடுக்கப்பட்டது) அனைத்தும் அவர்களின் கைகளில் இருந்தன. பாபாவின் இரண்டாவது செய்தியும் அத்துடன் இணைக்கப்பட்டது. பாபாவின் ஒப்புதலுக்காக அனைத்தும் அடங்கிய ஒரு மாதிரி கோப்புறை அனுப்பப்பட்டபோது, அவர் பதில் தொலைத்தந்தி அனுப்பினார்: "**அனைத்தும் சரியாக உள்ளது. பாபா மகிழ்ச்சியில் அவரது அன்பை வழங்குகிறார்.**" பாபாவின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தாலும், சிறிய சிறிய விஷயங்களில் அவர் தொடர்ந்து கவனம் செலுத்தி, தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு விஷயத்தையும் கண்காணித்துக் கொண்டிருந்தார்.

பிரேம் கில்னானி ஆகஸ்ட் 25ஆம் தேதி கிஷோர் மிஸ்திரியை (KISHORE MISTRY) மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். அன்று இரவு 8:30 மணிக்கு, எதிர்பாராத பார்வையாளர் ஒருவர் டோங்காவில் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு திடீரென வருகை தந்தார். அவர் நியூயார்க்கின் லாங் ஐலேண்டைச் சேர்ந்த ஸ்டெல்லா குஸீவிக் (STELLA KUSEVICH OF LONG ISLAND, NEW YORK) என்ற அமெரிக்கப் பெண்மணி ஆவார். அவரும் அவரது கணவர் மார்கோவும் (MARKO) 1958ஆம் ஆண்டு மர்டில் பீச் மையத்தில் பாபாவை சந்தித்தனர். கிழக்கு-மேற்கு சகவாசத்தில் தங்களால் கலந்து கொள்ள இயலவில்லை என்பதையும், இப்போது பயணத்தை மேற்கொள்ள பாபா தன்னை ஈர்த்ததாக உணர்ந்ததையும் (மௌனமாக இருந்த) ஆதியிடம் விளக்கினார். அவர் தொடர்ந்து பயணம் செய்து களைத்துப் போயிருந்தார், ஆனால் அவர் பாபாவைப் பார்க்கும் வரை உணவு உண்ண மறுத்ததால், அவரை அன்று இரவே விலூ வில்லாவிற்கு அழைத்துச் சென்றார் ஆதி.

மறுநாள் காலை 5:00 மணியளவில், ஆதி மெஹராஸாத்திற்கு ஒரு சிறப்பு தூதரை அனுப்பினார்; காலை 9:00 மணிக்கு ஸ்டெல்லாவைப் பார்ப்பதாக

பாபாவின் பதில் 8:15 மணிக்கு வந்தது. ஆதி அவரை உடனடியாக அங்கே காரில் அழைத்துச் சென்றார். பாபா அந்தப் பெண்மணியை அன்புடன் வரவேற்று ஒரு மணி நேரம் உரையாடினார். பாபாவை பார்க்க அனுமதி வழங்கியதற்கு ஸ்டெல்லா கண்ணீருடன் நன்றி பாராட்டினார். மெஹராவை சந்தித்த பின்பு, பாதிரி மற்றும் டாக்டர் டான் ஆகியோரால் சுற்றுப்பயணத்திற்காக மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதே மாலையில் ஆதி, ஸ்டெல்லாவை பூனாவிற்கு அழைத்துச் சென்று, அங்கு அவருக்கு வெவ்வேறு பாபா தொடர்பிலான இடங்களும் காட்டப்பட்டன. மறுநாள் மாலை மும்பையிலிருந்து அமெரிக்காவிற்குப் பயணம் செய்தார்.

ஒரு நாள் பாபா கூறினார், "**சத்தியம் (உண்மைப்பொருள்) கடவுளுக்கு சொந்தமானது; சட்டம் (விதிமுறைகள்) மாயைக்கு சொந்தமானது. காரணமும் விளைவும் அந்த சட்டத்திற்கு சொந்தமானது, அதிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது. ஆனால் என்னால் சட்டத்தை முறியடித்து மாயையை அழிக்க முடியும். கடவுளுடன் ஐக்கிமானவர்களால் மட்டுமே எதையும் செய்ய முடியும்; ஏனெனில் அவர்கள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள்.**"

1963 ஆகஸ்ட் 31 அன்று, பெரின், ஜெஹாங்கு ஸுகத்வாலா மூலமாக பாபா மற்றும் மண்டலிக்கு உணவு அனுப்பி வைத்தார். ஒரு வாரத்திற்கு பின்பு, செப்டம்பர் 7ஆம் தேதி, குருபிரசாத்தில் பாபாவைச் சந்தித்த மும்பையைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட இளம் பெண் ரதி பாலிவாலா (RATI BALIWALA), மெஹராஸாத் சுற்றுப்புறங்களில் அலைந்து திரிந்தார். பாபா அவரை மீண்டும் மும்பைக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தினார்.

பூனாவில் இருந்த வேளையில் பாவ் கல்சூரி இந்தி மொழியில் 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' (THE EVERYTHING AND THE NOTHING) புத்தகத்தின் மொழிபெயர்ப்பு மற்றும் வர்ணனையை நிறைவு செய்திருந்தார். பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, பாவ் கல்சூரி அந்தப் புத்தகத்தை உரையாடல் மற்றும் கவிதை வடிவில் மீண்டும் எழுதி விரிவுபடுத்தினார். இறுதியில் அது ஒரு பெரிய புத்தகமாக உருவெடுத்தது; அவர்கள் மெஹராஸாத் திரும்பிய பிறகு, பாபா அதன் ஒரு பகுதியை மண்டபத்தில் சத்தமாக வாசிப்பதை தினமும் கேட்டுவந்தார்.

புத்தகம் முழுவதையும் பாபா முன்னிலையில் படித்து முடித்த பின்னர், இரண்டு நாட்களுக்காக ஹமிர்பூரிலிருந்து கேஷவ் நிகம், புக்கார் இருவரையும் அழைத்தார். அவர்கள் செப்டம்பர் 5ஆம் தேதி வந்தபோது, பாபா, கேஷவிடம் புத்தகத்தை அச்சிடுமாறு அறிவுறுத்தினார். கேஷவ் இசையமைத்த 'மெஹர் சாலிஸா'வும் (MEHER CHALISA) ஒரு புத்தகமாக வெளியிடப்பட்டது, அதன் பிரதி ஒன்றில் பாபா கையெழுத்திட்டு அவருக்கு வழங்கினார்.

தூன் ஸட்டா, அவரது தந்தை ஹோமி ஆகியோர் செப்டம்பர் 9ஆம் தேதி, பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர். அன்று, பாபாவும் மண்டலியும் ரோஷன் கேரவாலா மற்றும் அக்பர் பிரஸ்ஸின் ஸட்டா குடும்பத்தினர் தயார் செய்த உணவை உண்டு மகிழ்ந்தனர்.

1963 செப்டம்பர் 12ஆம் தேதி, எரச், அஹமதுநகர் பூத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார், அடுத்த நாள் அவருக்கு மூல நோய்க்கான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இரண்டு வாரங்கள் மருத்துவமனையில் தங்கியிருந்த பிறகு, செப்டம்பர் 25 அன்று மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், ஸ்டெல்லா குஸீவிக் திடீரென 20ஆம் தேதி அஹமதுநகர் திரும்பி வந்து, மீண்டும் பாபாவை சந்திக்க மெஹராஸாத் செல்வதாக அறிவித்தார். ஆதி அவரை அங்கே அழைத்துச் சென்றபோது, பாபா அவரை பத்து நிமிடங்கள் சந்தித்து நேராக தனது இல்லம் செல்லுமாறும், அனுமதியின்றி மீண்டும் வர வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார். அவர், எதிர் வரும் 1964 ஏப்ரல் மாதத்தில் ஒரு வாரத்திற்காக பூனா வரலாம் என்றும் பாபா கூறினார்.

ஜால்பாய் செப்டம்பர் 22 அன்று, ஆந்திராவிலிருந்து திரும்பி வந்து, பாபாவிற்கு முழு அறிக்கையை வழங்கினார். ராமின் சகோதரர் லட்சுமணனுக்கு இணையாக தான் அங்கு வரவேற்கப்பட்டதாக அவர் கூறினார். ஜிம், நரிமன் மற்றும் அவரது சகோதரர்கள், பெஹராம், ருஸ்தம், ஹோஷங் ஆகியோர் ஆதியுடன் 27ஆம் தேதி பிற்பகல் 3:00 மணிக்கு மெஹராஸாத்திற்கு வந்தனர்.

மோகன்-ஸைகல் மதியம் 1:00 முதல் மாலை 5:00 மணி வரை மெஹராஸாத்தில் இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்கினார். 1963 செப்டம்பர் 28 சனிக்கிழமை, கஸல்களின் அற்புதமான இசை விருந்தின் நாளாக இருந்தது. மும்பையிலிருந்து கஜ்வானி, ஸிகன்போரியா, எரச் பட்டேல், மெஹர்வான் ஜெஸவாலா மற்றும் அஹமதுநகரைச் சேர்ந்த பலரும், மேல் மற்றும் கீழ் மெஹராபாத்தில் வாழும் சுமார் 105 பேரும் கலந்து கொண்டனர். குருபிரசாத்தில் மோகன்-ஸைகலின் பாடலை வெகுவாக ரசித்த பாபா, அவரை மெஹராஸாத்திற்கும் வரவழைப்பதில் மகிழ்ச்சி அடைந்தார். லதா மற்றும் கில்னானி சிறுவர்களும் பாடினர்; டாக்கே, அவர் இயற்றிய மராட்டி பிரார்த்தனையையும் மொழிந்தார்.

ஒரு மாதத்திற்கும் மேலாக மெஹராஸாத்தில் தங்கியிருந்த ஃபெராம், அக்டோபர் 9 அன்று குஷ்ரு குவார்ட்டர்ஸுக்குத் திரும்பிச் சென்றார்.

எரச்சின் பிறந்தநாளான 1963 அக்டோபர் 13 ஞாயிற்றுக்கிழமை, புதிய பூனா மையத்தின் கட்டுமான பணியின் முன்னேற்றம் குறித்து விவாதிக்க, ஆதி,

மெஹர்ஜி, ராமகிருஷ்ணன், காம்ப்ளே, சதாஷிவ், மன்செர்ஷா ஸுகத்வாலா, ஷிண்டே, பவ்ஸார், தாடே, ஜால்பாய் ஆகியோர் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். அவர்களால் திட்டமிடப்பட்டதற்குத் தேவையான நிதியைத் திரட்ட முடியாததால், ஆந்திரா அன்பர்களிடமிருந்து இதற்கான நன்கொடையைப் பெற, பாபா, ஜால்பாயை அனுமதித்தார்; மேலும், ஜால் வசூல் செய்த ரூ.33,400, பூனா மையத்தின் பொருளாளரான காம்ப்ளேயிடம் ஒப்படைக்கப்பட்டது. மூன்று மணி நேரம் நடந்த கூட்டத்திற்கு பிறகு பூனா சேவகர்கள் வீடு திரும்பினர்.



பூனா மையத்தின் கட்டுமான பணி, ஜூன் 1963 – தூக்கு நாற்காலியில் பாபாவிற்கு உதவியாக தாரா தாதாசாஞ்சி, ஜெஹாங்கு ஸுகத்வாலா, ஆதி துபாஷ்
(POONA CENTER UNDER CONSTRUCTION, JUNE 1963 – DARA DADACHANJI, JEHANGU SUKHADWALA, ADI DUBASH CARRYING THE LIFT CHAIR)

டான் ஸ்டீவன்ஸ், ஸ்டாண்டர்ட் ஆயில் நிறுவனத்திற்கான (STANDARD OIL COMPANY) வணிகத்தில் பணிபுரிந்ததால், அதிக அளவில் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவர் டோக்கியோ (TOKYO) நகரில், பல பேச்சுவார்த்தைகளில் மும்முரமாக இருந்தார்; ஆனால் திட்டமிடப்படாத வார இறுதி வரவிருந்ததால், அவர் சந்திப்புகளை முன்கூட்டியே முடித்துவிட்டு, விமானத்தில் ஞாயிற்றுக்கிழமை மும்பைக்கு வந்து, பாபாவுடன் அன்றைய தினத்தைக் கழிக்க அஹமதுநகருக்கு நேரடியாகச் செல்லவும், பின்பு மாலையில் அதே காரில் மீண்டும் மும்பைக்குச் சென்று, டோக்கியோ நகரத்திற்குத் திரும்பும் விமானத்தில் பயணம் செய்யவும் விரும்பினார்; இதனால் அடுத்த நாள் அவரது பணியைத் தொடர முடியும் என்றும் திட்டம் வகுத்தார். ஸ்டீவன்ஸ் ஒரு நீண்ட தொலைத்தந்தி மூலம் பாபாவிற்கு இந்தத் திட்டத்தைத் தெரிவித்த போது, பாபா அதை ஏற்றுக்கொண்டார்.

அக்டோபர் 13 அன்று டான் ஸ்டீவன்ஸ் வந்தபோது, பாபா அவரைக் கூட்டத்திற்கு அறிமுகப்படுத்தி, '**ஸ்டீவன்ஸ் எப்படி மும்பையிலிருந்து ஒரு வாடகைக்காரில் மெஹராஸாத்தில் சில மணிநேரங்களைக் கழிப்பதற்காக வந்தார்**' என்பதை குழுவிற்குத் தெரிவித்தார்; பாபா '**அதற்கு எவ்வளவு பணம் செலவானது**' என்பதை அறிய விரும்பிய போது, டான் ரூ.400 என்று கூறியதும், அங்கிருந்தவர்கள் வாயடைத்துப் போயினர். பாபா குறிப்பிட்டார், "**நான் எதைச் சொன்னாலும், அதை அவர் செய்வார். உண்மையில், நான் அவரிடம் கூறினால் அவர் ஒரு குன்றிலிருந்தும் குதிப்பார். அப்படித்தானே டான்?**"

பாபா வேறு எதையோ சூசகமாகத் திட்டமிடுகிறார் என்று ஒரு கணம் சிந்தித்து, டான் ஸ்டீவன்ஸ், "ஆம், நான் செய்வேன்" என்றார்.

பாபா புன்னகைத்து ஆமோதித்தார். டான் அப்போது விடைபெற்றுச் செல்லவே, மெஹர்ஜியும் வேறு சிலரும் அவருடன் பூனா வரை சவாரி செய்தனர்.

அப்போது கூட்டத்தில் இருந்த தாதி கேரவாலாவிடம் பாபா, சாதாரணமாக வினவினார், "**நீங்கள் ஏன் வெளிநாடு செல்லக்கூடாது?**"

தாதி, பாபா சொன்னதை நினைத்துப் பார்த்து, தனது மேற் படிப்பிற்காக அமெரிக்காவில் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தொடங்கினார். தாதி, விவசாயத்தில் பட்டம் பெற்றிருந்ததால், அவருக்கு மிச்சிகன் மாநில பல்கலைக்கழகத்தில் (MICHIGAN STATE UNIVERSITY) உதவியாளர் பதவி வழங்கப்பட்டது. அடுத்த வருடம் மே மாதம் பாபாவின் ஒப்புதலுடன் மேற்படிப்பிற்காக அமெரிக்கா சென்றார். மிச்சிகன் பல்கலைகழகத்தில் அவர் நான்கு ஆண்டுகள் பயின்று விவசாயத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். பாபா அவருக்கு (1967இல்) எழுதிய கடிதத்தில், இந்தச் செய்தியை அனுப்பினார்: "**என்னை அசைக்க முடியாத அன்புடன் நேசிப்பவர்கள், அவர்களிடையேயான அன்பின் பரிவர்த்தனை மூலம், உரிய பிரதிபலனை எப்பொழுதும் முழு அளவில் அடையப் பெறுவார்கள்.**"

பூனா சேவகர்களுடன் நடந்த சந்திப்பிற்குப் பிறகு, கே.கே. ராமகிருஷ்ணன், பாபாவிற்கு ஒரு கடிதம் எழுதி, தனது மனச்சோர்வை வெளிப்படுத்தினார்; மேலும் பூனா மையத்தின் செயலாளர் பொறுப்பிலிருந்து அவரை விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டார். அக்டோபர் 16ஆம் தேதி, பாபா அவருக்குப் பதில் கடிதம் அனுப்பினார்: "**உண்மையான அன்பன், புயல் மற்றும் மன அழுத்தம் போன்ற அனைத்து கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்வது மட்டுமல்லாமல், தன் இதயத்தின் அன்பானவரின் அரவணைப்பைப் பெற, கழுத்தளவு ஆழத்தைக் கூட கடந்து செல்ல வேண்டும்.**"

அக்டோபர் மாதத்தில் பூனாவில் பேகம் அக்தரின் இசை நிகழ்ச்சி ஒன்று திட்டமிடப்பட்டிருந்தது. அவர் அஹமதுநகருக்கு மிகவும் அருகாமையில்

இருந்ததால், மெஹராஸாத்தில் பாபாவிற்கு முன்பாக பாடுவதற்கு தன்னை அனுமதிக்குமாறு வேண்டி அவருக்குக் கடிதம் எழுதினார். பாபா, ஏகாந்தவாசம் கடைப்பிடித்தாலும், அவர் அதற்கு ஒப்புக்கொண்டார். 1963 அக்டோபர் 15 செவ்வாய்கிழமை காலை 10:00 மணிக்கு, பேகம் அக்தர் தனது காரில் மெஹர்ஜியுடன் வந்தார்; அவரது தபேலா கலைஞர் முஹமது அஹமது மற்றும் ஒரு சாரங்கி இசைக்கலைஞரும் உடன் வந்தனர். அவர் பாபாவிற்கு ஒரு பெரிய மலர் மாலையை அணிவித்து, மூன்று கஸல்களைப் பாடியபோது, பாபா மிகவும் மகிழ்ச்சியாகத் தோற்றமளித்தார். பாபா, அவருக்கும் அஹமதுக்கும் அவர் பயன்படுத்திய சால்வைகளை அன்புடன் வழங்கினார்; மூன்றாவது இசைக்கலைஞருக்கு அவரது கைக்குட்டைகளில் ஒன்று வழங்கப்பட்டது. பாபா மீதான அளப்பரிய அன்பில், பேகம் அக்தர் பாபாவிடம், அவரை ஒரு மாதம் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்குமாறு கெஞ்சினார், அதனால் அவர் ஒவ்வொரு நாளும் பாபா முன்னிலையில் பாட முடியும். (அக்தரின் கோரிக்கையில் பாபா மகிழ்ச்சியடைந்தார், ஆனால் அது நிறைவேறவில்லை.) பேகம் அக்தர் லக்னோவில் ஒரு புதிய இசைப் பள்ளிக்கூடத்தை நிறுவிக் கொண்டிருந்தார், அதற்காக அவர் பாபாவின் ஆசீர்வாதங்களை நாடினார். பள்ளிக்கூட சுவரை அலங்கரிக்கும் விதத்தில், பாபாவின் பெரிய புகைப்படம் ஒன்றை அவருக்கு வழங்கியதும், மகிழ்ச்சியில் பேகம் அக்தர் 11:15 மணிக்கு விடைபெற்றுச் சென்றார்.

மூன்று நாட்களுக்குப் பின்னர் அக்டோபர் 18 அன்று, மதியம் 1:00 மணி முதல் மாலை 4 மணி வரை, மற்றுமோர் இசை நிகழ்ச்சி மெஹராஸாத்தில் நடைபெற்றது. கிஷின்சந்த் கஜ்வானி (KISHINCHAND GAJWANI), ஜெய்ப்பூர் கவாலி பாடகரையும் அவரது இசைக்கலைஞர்களையும் அழைத்து வந்தார். இம்முறை அஹமதுநகர், பூனா, மும்பை, நவ்ஸாரி போன்ற இடங்களிலிருந்து 100 பேர் அழைக்கப்பட்டனர். குறிப்பாக அழைக்கப்பட்ட மஹாராணி ஷாந்தாதேவியைத் தவிர, இது ‘அனைத்தும் ஆண்கள் விவகாரம்’. பாபா, பாடல்கள் பாடுவதை மிகவும் ரசித்தார். ஒரு கட்டத்தில், அவர் தமக்கு முன் அமர்ந்திருந்தவர்களிடம் இவ்வாறு கூறினார், “**இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் என்னை அருகிலிருந்து பார்ப்பது மிகவும் கடினமாக இருக்கும் நேரம் விரைவில் வரும். நீங்கள் கூட்ட நெரிசலில் பின்புறமாகத் தள்ளப்படுவீர்கள். புதியவர்களில் பலர் என்னிடம் வருவார்கள்.**”

கிஷின்சந்த் கஜ்வானி அறுபது வயதை எட்டிய போதிலும், பாபா அவரை தனது ‘குழந்தை’ என்று குறிப்பிட்டு, அந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்: “**இன்று எனது குழந்தை என் உலகளாவிய பணியிலிருந்து எனக்கு சிறிது ஓய்வு கொடுத்துள்ளார், நல்ல கவாலி இசை நிகழ்ச்சி எனக்கு எப்பொழுதும் சற்று ஆறுதலை வழங்கும்.**”



பாபா, கஜ்வானியின் புதிய காரில் அமர்ந்து
அதை ஆசீர்வதிக்கிறார்
(BABA BLESSES GAJWANI'S NEW CAR BY SITTING IN IT)

அடுத்த நாள், நரிமனின் பிறந்தநாள், சகன் தயார் செய்து அனுப்பிய உணவுடன் கொண்டாடப்பட்டது. நரிமன், அவரது சகோதரர்கள், ஜிம் மிஸ்திரி, மெஹர்வான் ஜெஸவாலா, பாபாவின் சகோதரரின் மகன்கள் ருஸ்தம், ஸொராப் மற்றும் ஜெஹாங்கு ஸுகத்வாலா ஆகியோர் கடந்த சில நாட்களாக மெஹராஸாத்தில் தங்கியிருந்து, அன்று மாலை புறப்பட்டுச் சென்றனர்.

மெஹர்நாத் கல்சூரியின் பத்தாவது பிறந்தநாள் (22ஆம் தேதி) 1963 அக்டோபர் 21 அன்று கொண்டாடப்பட்டது. ரமா, ஷீலா, மெஹர்நாத் மூவரும் 21ஆம் நாள் பாபாவுடன் இருக்கவும், அவருடன் மதிய உணவு உண்ணவும் மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர்.

பால் நாத்து ஒரு பள்ளிக்கூட ஆசிரியராகப் பணிபுரிந்ததால் தீபாவளி விடுமுறையில், 22ஆம் தேதி முதல் ஐந்து நாட்கள் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டார். ஆந்திராவில் இருந்து கோடூரி கிருஷ்ணராவ் தனது மகன் பிரசாத்துடன் அக்டோபர் 25ஆம் தேதி வந்தார். பாபா அவரை சிறிது நேரம் சந்தித்து, கொவ்வூரில் மெஹர்ஸ்தானை நிறுவ கிருஷ்ணராவ் மேற்கொண்ட முயற்சிகளில் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

பூனாவைச் சேர்ந்த இந்திய ராணுவத் தலைவர் பண்டாரியும் அவரது மனைவி கம்லாவும் அன்று பார்வையாளர்களாக வந்திருந்தனர். ராணுவத் தலைவர் டெல்லிக்குச் செல்ல வேண்டியிருந்ததால், அவர் அங்குச் செல்வதற்கு முன்பு, பாபாவைப் பார்க்க அவரது அனுமதியைப் பெற்றார். இருக்கையிலிருந்து எழுந்து வெளியில் வருவது கூட உடல் வலியைத் தந்தபோதிலும், அவர்களுடன் புகைப்படங்கள் எடுக்கும் அளவுக்கு பாபா, கருணையுடன் நடந்துகொண்டார். அவர்கள் செல்வதற்கு முன்பு, பாபா கையொப்பமிட்ட இரண்டு புத்தகங்களைத் தம்பதியருக்கு வழங்கினார்.

அன்று மதியம் 2:00 மணிக்கு வந்த ஸரோஷ், விலூ இருவரும், பாபா மற்றும் மண்டலிக்கு உணவு கொண்டு வந்தனர். நவம்பர் கடைசி வாரத்தில் நௌரங்காவில் அமைந்த மெஹர் தாமில் 'மெஹர் பாபா கண்காட்சி' (MEHER BABA FAIR) என்ற வருடாந்திர மேளா நடைபெற்றது, மேலும் அந்த ஆண்டு ஹமிர்பூரில் நடந்த கண்காட்சியில் டாக்கே மற்றும் சுஷீலாவுடன், ஸரோஷ், விலூ இருவரும் தமது முக்கிய பிரதிநிதிகளாகப் பங்கேற்குமாறு பாபா அவர்களைக் கேட்டுக் கொண்டார். அவர்களும் அதற்கு ஒப்புக்கொண்டனர்.

கைக்கோபாத்தின் மகன் ரத்தன் (RATAN) அக்டோபர் 28 அன்று, பாபாவையும் அவரது தந்தையையும் சிறிது நேரம் சந்திக்க அனுமதிக்கப்பட்டார். ருஸ்தம் காக்கா, மானேக் இருவரும், மானேக்கின் எதிர்கால வாழ்க்கைத் திட்டங்களைப் பற்றி விவாதிக்க நவம்பர் 2 அன்று பாபாவுடன் ஒரு சந்திப்பை நிகழ்த்தினர்.

இந்தக் காலக்கட்டத்தில் பாபாவின் இடுப்பில் ஏற்பட்ட காயத்தால், உடல் வலி தொடர்ந்து தொந்தரவு தந்தது. அவர் நடந்து செல்வது மிகவும் குறைவாக மட்டுப்படுத்தப்பட்டாலும், இப்போது அவர் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கும்போது கூட சங்கடமாக உணர்ந்தார். ஏற்கனவே குறிப்பிட்டபடி, பாபாவைத் தூக்கு நாற்காலியில் மண்டபத்திற்கு அழைத்து வரும் வேளையில், தினமும் காலை எட்டு மணி முதல் மதியம் வரையிலும், மீண்டும் மதியம் இரண்டு மணி நேரமும் அமர்ந்திருந்தார். அவர் மண்டபத்திற்குள் நுழைந்ததும், பாபா உட்பட அனைத்து ஆண்களும், எரச், குருநாதர் மற்றும் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனைகளை (MASTER'S & REPENTANCE PRAYERS) மொழியும் வரை எழுந்து நின்றனர். பிற்பகல் சந்திப்பிற்கு முன்பும் பிரார்த்தனைகள் மொழியப்பட்டன. உடல் வலியுடன், களைப்பை விளைவிக்கும் ஏகாந்தவாசப் பணியை அவர் தீவிரமாக மேற்கொண்டாலும், பாபா அவ்வப்போது வெவ்வேறு நபர்களை வரவழைத்து, அவர்களுடன் பல மணி நேரம், பல விஷயங்களைப் பற்றி விவாதித்தார்.

தீபாவளி விடுமுறையில் அங்கு வந்தவர்களில் ஒருவர் டெல்லியைச் சேர்ந்த நிரஞ்சன் ஸிங். நிரஞ்சன் ஓர் அசாதாரணமான அறிவுத்திறன் படைத்தவர்; அவரது கல்லூரியில் அறிவியல் துறையின் முதல்வராக நன்கு மதிக்கப்பட்டார். அவர் வரும்போதெல்லாம், தவிர்க்க முடியாமல் பாபாவிடம், பிரபஞ்சம் (CREATION) உருவான விதம் அல்லது ஒருமைத்தன்மை (ONENESS) மற்றும் பன்மைத்தன்மை (MANYNESS), பிற கிரகங்களில் வாழும் மனிதர்கள், பரிணாமம் (EVOLUTION), மறுபிறவி (REINCARNATION) மற்றும் உட்சுழற்சி (INVOLUTION) பற்றிய கேள்விகளை எழுப்புவது வழக்கம்: சுருக்கமாகச் சொன்னால், பல்வேறு வகையான கேள்விகளை, துருவித் துருவிக் கேட்டார். பாபா எப்பொழுதும் பெருந்தன்மையுடனும் மிகுந்த நகைச்சுவை உணர்வுடனும், அவரது மனதைத் திருப்திப்படுத்தும் விளக்கங்களை அளித்து வந்தார்; ஒவ்வொரு முறையும் நிரஞ்சன் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் காணப்பட்டார்.

நிரஞ்சன் ஸிங்கிற்கு வழங்கிய பாபாவின் பல விளக்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டு, **'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்'** (THE EVERYTHING AND THE NOTHING) என்ற புத்தகத்தில் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளன. 1963இல், நிரஞ்சன் மண்டலி மண்டபத்திற்குள் நுழைந்தபோது, பாபா, அவருக்காக, புத்தகத்தின் ஒரு நகலைக் கொண்டு வருமாறு ஃபிரான்சிஸிடம் சைகையால் தெரிவித்தார், ஏனெனில் பாபாவின் பார்வையில், **"நிரஞ்சனின் கேள்விகள் மூலம், அவர் அதை உருவாக்குவதற்கு (ஓரளவு) பொறுப்பாக இருந்தார்."**

ஃபிரான்சிஸ் புத்தகத்தை பாபாவிடம் கொடுத்ததும், அவர் நிரஞ்சனிடம் **"இதோ பாருங்கள், இங்கே, உங்கள் அனைத்து கேள்விகளுக்குமான பதில்கள்"** என்று கூறினார். நிரஞ்சன் புத்தகத்தை மேலோட்டமாக நோட்டமிட்டு, ஒருபுறம் வைத்தார். பாபா ஆச்சரியப்படுவது போல் அவரைப் பார்த்த போது, விஞ்ஞானியின் தோற்றத்தில் மகிழ்ச்சியோ முகமலர்ச்சியோ எதுவும்

தென்படவில்லை. பாபா உடனே, **"என்ன விஷயம்? இது உங்களுக்கு மகிழ்ச்சியாக இல்லையா?"** என வினவினார்.

"ஐயகோ," என்று பெருமூச்சு விட்டபடி, "உங்களுக்கு நான் என்ன சொல்ல?" என்று கேட்டார்.

**"என்ன விஷயம்? என்ன நடந்தது? உங்கள் கேள்விகள்தான் இந்தப் புத்தகம் உருவாகக் காரணமாக இருந்தது, மக்கள் அதைப் படித்து பயனடைவார்கள். சிலர் இதைப் புரிந்துகொள்வார்கள், சிலர் புரிந்து கொள்ளாமல் போகலாம், ஆனால் அது மனிதகுலத்திற்கு நல்லது - அனைத்திற்கும் காரணம் உங்களது கேள்விகள். அது உங்களுக்கு மகிழ்ச்சியாக இல்லையா?"** என்று கேட்டார்.

"பாபா, கேள்வி அதுவல்ல."

**"வேறு என்ன கேள்வி? என்ன விஷயம்?"**

நிரஞ்சன் ஸிங் விளக்கினார், "உண்மையாகவே நீங்கள் மனித உருவில் அவதரித்த கடவுள் என என் இதயம் சொல்கிறது. நான் உங்களை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இந்த முட்டாள் மனம் என்னை துன்புறுத்துகிறது. ஒரு பயங்கரமான விஷயம் நடந்தது. கடைசியாக உங்களை சந்தித்து, இங்கிருந்து மீண்டும் ரயில் நிலையத்திற்குச் சென்றபோது, நான் மிகவும் மகிழ்ச்சியாகவும், முழுத் திருப்தியுடனும் இருந்தேன்; ரயிலில் அமர்ந்திருந்த வேளையில், திடீரென, எனது மனதில் ஏதோ ஒன்று தோன்றியது, அது என்னை முற்றிலும் குழப்பத்தில் ஆழ்த்தியது."

**"என்ன நடந்தது? சொல்லுங்கள்."**

"என்ன சொல்வது பாபா? எனக்குத் தெரியவில்லை. என் இதயம் உங்களை முற்றிலும் ஏற்றுக்கொள்கிறது. ஆனால் இந்த மனதால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அன்றிலிருந்து எனக்கு அமைதி இல்லை. எனது மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்துவது இதுதான்: நீங்கள் எல்லையற்ற உணர்வு நிலையில் இருப்பதாகக் கூறுகிறீர்கள்; நீங்கள் அளவிறுதியற்றவர். இதை நீங்கள் மீண்டும் மீண்டும் எங்கள் மனதில் பதிய வைத்துள்ளீர்கள். ஆனால் ஒரு விஞ்ஞானியாக இருப்பதால், நான் பார்க்கும் இந்த வரையறுக்கப்பட்ட பௌதீக உடலில், உங்களின் எல்லையற்ற தன்மை எவ்வாறு உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இது என்னை தொந்தரவு செய்கிறது."

அதற்கு பாபா, **"நீங்கள் கல்லூரி முதல்வராகவும், விஞ்ஞானியாகவும் இருப்பது, உங்களில் மனக்கிளர்ச்சியை உருவாக்குகிறது. ஆனால் நான், இந்த முழுப் பிரபஞ்சத்தின் படைப்பாளராக இருப்பதால், எனது சொந்த படைப்பு என்னில் மனக்கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது! அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனது மனதில் கிளர்ச்சியை உருவாக்கும் விஷயங்களைப் பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது"** என்று கூறினார்.

திடீரென, பாபா சிரித்துக்கொண்டே, **"வெளியே உற்றுநோக்குங்கள். நீங்கள் என்ன பார்க்கிறீர்கள்?"** என்று சைகையால் கேட்டார்.

அதற்கு நிரஞ்சன், "நான் வெளியே பாத அணிகளைப் பார்க்கிறேன்."

**"அவ்வளவுதானா?"**

"நான் தரிசு நிலத்தைப் பார்க்கிறேன்."

**"அது மட்டுமா?"**

"நான் மரங்களையும், வயல்களையும் பார்க்கிறேன்... அங்கே மேய்ப்பர்கள் இருக்கின்றனர்."

**"வேறு எதாவது?"**

"ஆடு, மாடுகள் மேய்கின்றன. ஒரு விவசாயி வயலை உழுது கொண்டிருக்கிறார்."

**"வேறு என்ன?"**

"நான் ஒரு மலைத் தொடரைப் பார்க்கிறேன்."

**"மேலும்?"**

இன்னொரு மலைத்தொடர் அதற்கு அப்பால் நீண்டுள்ளது."

**"வேறு எதாவது?"**

"அங்கே ஒரு பரந்த அடிவானம் உள்ளது. நான் வானத்தையும், மேகங்களையும் பார்க்கிறேன்.."

பாபா சிரித்துக்கொண்டே கேட்டார், **"உங்கள் கண்கள் மிகவும் சிறியவை, நீங்கள் பார்க்கும் அனைத்துடனும் ஒப்பிடும் போது மிகவும் சிறியவை. உங்கள் சிறு சிறு கண்ணின் மணிகளால் தொலைதூரத்தில் இருக்கும் இவ்வளவு பெரிய பொருட்களை எப்படிப் பார்க்க முடிகிறது? இவையெல்லாம் எப்படி உங்கள் கண்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன?"**

**"உங்கள் கண்களில் தெரிவதெல்லாம் எப்படி அவற்றின் உள்ளே உள்ளது என்பதை நீங்கள் சொல்லுங்கள்; அப்போது நான், என்னுள் எல்லையற்றது எப்படி அடைக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்கிறேன்!"** என்று கூறி முடித்தார்.

பாபாவின் விளக்கத்தில் நிரஞ்சன் ஸிங் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

1963 நவம்பர் 10ஆம் தேதி, பாபா, டாக்கே மற்றும் சுஷீலாவைச் சந்தித்து, நௌரங்காவிற்கான அவர்களின் எதிர்வரும் பயணத்தைப் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தினார். பாவ் கல்சூரி இந்தியில் எழுதிய உரை ஒன்றை சுஷீலா அங்கு வழங்க இருந்தார். பாபா அந்த உரையை அவர் முன்னால் எடுத்துரைக்குமாறு கூறினார். மூர்த்தியும் அன்று மெஹராஸாத்திற்கு வந்தார்.

ஷோலாபூர் நகரைச் சேர்ந்த பக்தரும், பாடகருமான மணிபென் இ.பாரேக் (MANIBEN E. PARAKH) என்பவர் 'இசைக் கலைஞர்கள்' சங்கத்தின் வெள்ளி விழாவையொட்டி, பாபாவிற்கு அழைப்பிதழ் அனுப்பினார். அதற்கு மறுமொழி கூறும் விதத்தில், பாபா அவருக்கு 11ஆம் தேதி இந்தச் செய்தியை வழங்கினார்:

**கலைஞருக்குத் தனது கலையில் இருக்கும் திறமையைத் தவிர, தனது அன்பிற்குரியவர் (கிருஷ்ணர்) மீது, புனித மீராவின் பக்தி இருந்தால், அவர் உண்மையிலேயே கடவுளுக்காகப் பாடுவதாகக் கூறலாம். பாடல்**

**பாடும் கலையை விரும்புபவர்கள் அனைவருக்கும் எனது அன்பின் ஆசிகளை வழங்குகிறேன்.**

11ஆம் தேதி, எரச், மும்பை வாழ் அன்பர்களுக்கு அவர்களின் மையத்தின் விவகாரங்களை நடத்துவது குறித்து எழுதினார்:

'பணிவின் இனிமை, ஒற்றுமையின் வாசனை மற்றும் ஒவ்வொருவர் மீதான அன்பின் ஒட்டுமொத்த எளிமை போன்றவற்றால் ஒன்றிணைந்த ஒரு சூழலில், தனது அன்பர்கள் வாழ்வதையும், தனக்காக உழைப்பதையும் கண்டால், தான் எப்போதும் மகிழ்ச்சியாகவும், தன்னிறைவில் முகமலர்ச்சியாகவும் இருப்பதாக' பாபா கூறுகிறார்.

'பாபாவுக்காக செய்ய வேண்டிய பணியைச் செய்வதிலும், அதைச் செய்ய வேண்டிய முறையிலும் அன்பர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவும் என்பது நிதர்சனம்' என்று பாபா கூறுகிறார்; 'ஆனால் அவர்கள் ஆணவம் மற்றும் அவமரியாதையின் கொடூரத்தை உடன் எடுத்துச் செல்லாதவரை, எப்பொழுதும் அத்தகைய வேறுபாடுகள் ஒரு வகையில் ஆரோக்கியமாகவும் உற்சாகமாகவும் இருக்கும்.'

பாபா, 'எப்பொழுதும் தன் அன்பர்கள், எல்லா எதிர்ப்புகளையும் அமைதியாகவும் அடக்கமாகவும் எதிர்கொள்ளவும், சமாளிக்கவும் தயாராக இருக்க வேண்டும்' என்று எதிர்பார்க்கிறார். 'பிறரின் கண்ணோட்டத்திலிருந்து கற்றுக்கொள்ளவும், பயனடையவும் மனப்பூர்வமாக விரும்பும் ஒருவரின் மனப்பான்மையுடன், வேறுபாடுகள் மகிழ்ச்சியுடன் சுமூகமாக தீர்வு காணப்படும் போது, அவ்வாறு அடையப்பட்ட முடிவுகள், சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.'

'நீங்கள் உங்கள் அகங்காரத்தின் கட்டளைகளுக்கு அடிபணிந்து, ஆணவத்தையும், அவமரியாதையும் தலை நிமிர அனுமதித்த அந்த கணமே, இந்த மனப்பான்மை பாபாவையே பின்வாங்கச் செய்கிறது; ஏனெனில் நீங்கள் அவருடைய பிரியமான அன்பர்(கள்) ஆதலால் உங்கள் அன்பான பாபா அவமானத்தால் தலைகுனிந்த நிலையில் இருக்க வேண்டியதாகிறது. இவ்வாறு அவருடைய செயல்பாட்டில் நமது மனப்பான்மையே அவருடைய தொடர்ச்சியான துன்பங்களுக்குக் காரணமாகிறது, மேலும் அவர் நம்மீதான அன்பிற்காக இந்த சிலுவையின் பாரத்தை அவர் தொடர்ந்து சுமக்கிறார். அவரது அரவணைப்பில் வரும் அன்பர்கள், இந்த பாரத்தைப் பகிர்ந்து கொள்ளத் தயாராகாத வரை, அவர் இத்தகைய தொடர்ச்சியான அவமானங்களை அனுபவித்துக்கொண்டே இருப்பார். அவரது அன்பர்கள் பிறரின் தவறான புரிதல் அல்லது ஆணவத்தால் தங்களுக்கு ஏற்படும் எந்த அவமானத்தையும் பொறுத்துக் கொள்வதன் மூலம், இந்த பாரத்தை அவருடன் பகிர்ந்து கொள்ள இப்போது கற்றுக்கொள்ளலாம்.'

பூனா மெஹர் பாபா மைய சேவகர்களிடையேயும் கருத்து வேறுபாடு நிலவியது. நவம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை, பூனா சேவகர்களின் மற்றுமொரு

கூட்டம் மெஹராஸாத்தில் நடைபெற்றது. மையத்திற்காக செலவு செய்த ஒவ்வொரு நயா பைசாவிற்கும் கணக்குகளைப் பராமரிக்குமாறு ராமகிருஷ்ணனுக்கு, பாபா கட்டளையிட்டார். கூட்டத்தில் பாபா கூறியதாவது:

**பூனா மையத்தைப் போல் இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ, வேறு எந்த மையத்திலும் நான் இந்த அளவுக்கு ஆர்வம் காட்டவில்லை. பல்வேறு இடங்களில் வாழும் என் அன்பர்கள் மையங்களை எழுப்புகிறார்கள், கட்டமைப்புகளை உருவாக்குகிறார்கள் மற்றும் நிகழ்ச்சிகளை தாங்களாகவே ஏற்பாடு செய்கிறார்கள். அஹமதுநகரில், ஸரோஷ் ஒரு மண்டபம் கட்டியிருந்தார், அதை அவர் எப்படி எழுப்பினார் என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை!**

**இங்கே நீங்கள் இருக்கிறீர்கள். என்னால் உங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. நீங்கள் ஒரு மையத்தை நிறுவ விரும்புகிறீர்கள், ஆனால் நான் சிறிய சிறிய விஷயத்தையும் பார்க்க வேண்டியதாகிறது! சரி, பரவாயில்லை. அதை மறந்துவிடுங்கள். ஆனால் மையத்தை நான் கட்டியெழுப்ப எவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்கிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!**

1963 நவம்பர் 21 அன்று, நாக்பூரைச் சேர்ந்த ஸந்த் துக்டோஜி மஹாராஜ் (SAINT TUKDOJI MAHARAJ, 54), ஸரோஷ், விலூ, ஆதி ஆகியோருடன் பாபாவைப் பார்க்க வந்தார். துக்டோஜி மஹாராஜிடம் 1948இல் பாபாதாஸ், பங்க்ராஜ் ஆகியோர் பாபாவைப் பற்றிய விபரங்களை எடுத்துரைத்தனர். அவர் தனது ஆதரவாளர்களின் கூட்டங்களில் கலந்துகொள்ள அஹமதுநகர் வந்திருந்தார். பாபா அவரிடம், **“நான் இப்போது ஏகாந்தவாசம் மேற்கொள்கிறேன், எவருக்கும் தரிசனம் வழங்குவதில்லை. நான் பூனாவிற்குச் செல்லும் போது, மக்கள் என்னைப் பார்க்க அனுமதிக்கிறேன்”** என்று கூறினார்.

அதற்கு துக்டோஜி மஹாராஜ், “தரிசனத்தில் இரண்டு வகை. ஒன்று உடல் ரீதியாக பார்ப்பது, மற்றொன்று எல்லா இடங்களிலும் பார்ப்பது!”

பாபா புன்னகைத்து பதிலளித்தார், **“தனிச் சிறப்புமிக்க ஒருவர் மட்டுமே என்னை எங்கும் பார்க்கிறார். நான் எல்லையற்றவன்!”**

1955ஆம் ஆண்டில், உலக மதங்கள் மற்றும் உலக அமைதி (WORLD RELIGIONS AND WORLD PEACE) பற்றிய மாநாட்டில் கலந்து கொள்ள துக்டோஜி மஹாராஜ் அழைக்கப்பட்டார். அங்கு அவர் தனது அனுபவங்களை எடுத்துரைத்ததாக விவரித்தார். பின்னர் அவரை ஆதி மற்றும் பாவ் கல்சூரியுடன் மெஹராஸாத் வளாகத்தை சுற்றிப்பார்க்க பாபா அனுப்பிவைத்தார்.

இதற்கிடையில், ஸரோஷ், விலூ ஆகியோருக்கு நௌரங்காவிற்கான அவர்களின் எதிர்வரும் விஜயத்தைப் பற்றி பாபா அறிவுறுத்தினார். **‘ஹமிர்பூரின் ஏழை கிராமவாசிகளின் வறுமை, தூய்மையின்மை, கல்வியறிவின்மை மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டாம்,**

**ஆனால் பாபாவின் மீதான அவர்களின் அன்பின் செழுமையை மட்டுமே பார்க்குமாறு**' பாபா, விலூவை எச்சரித்தார். அவர் இருவரையும் தழுவி, **"என்னுடைய இந்த அரவணைப்பு, உங்கள் மூலம் ஆயிரக்கணக்கானோரைச் சென்றடையும்!"** ஸரோஷும் விலூவும் அவரது வார்த்தைகளின் ஆழத்தை அப்போது உணரவில்லை.

25ஆம் தேதி மேளா தொடங்க இருந்ததால், டாக்கே மற்றும் சுஷீலாவுடன் அவர்கள் மறுநாள் அதிகாலையில் காரில் நௌரங்காவிற்குப் புறப்பட்டனர். வழியில், நௌரங்காவில் தங்களுடைய தங்குமிடம் எப்படி இருக்கும் என்று விலூ அச்சத்துடன் யோசித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர்கள் வந்தவுடன், அனைவருக்கும் ஒரு பெரிய வரவேற்பு வழங்கப்பட்டது மற்றும் அன்பான விருந்தோம்பல் மழை பொழிந்தது. பாபாவுடனான அன்பின் தனித்துவமான சூழ்நிலை மிகவும் உற்சாகமாக இருந்தது, விலூ, ஸரோஷ் இருவரிலும் அதீத தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் தங்களை முற்றிலும் மறந்துவிட்டனர்.

அவர்கள் தங்கியிருந்த கடைசி நாளில், கிராமவாசிகள் ஒவ்வொருவரும் அவர்களை அரவணைக்க விரும்பி, இரண்டு நீண்ட வரிசைகளை உருவாக்கினர். ஸரோஷ் ஆண்களைத் தழுவத் தொடங்க, விலூ பெண்மணிகளைத் தழுவினார். ஒருவேளை, மிகவும் சுத்தமாக இல்லாத ஆயிரக்கணக்கான விவசாயிகளையும், கிராம மக்களையும் அரவணைக்கும் எண்ணம் அவர்களுக்கு வெறுப்பூட்டுவதாக இருந்திருக்கும், ஆனால் இப்போது இருவரும் கண்கலங்கி அழத்தொடங்கினர்! தொடர்ந்து நான்கு மணி நேரம் அழுது கொண்டே இருந்தனர். பாபா, விலூவிடம் (அவரது அரவணைப்பு ஆயிரக்கணக்கானோரைச் சென்றடையும் என்று கூறியது) அவரது செவிகளில் ஒலித்தது. அவர்கள் தங்கள் வாழ்நாளில் அத்தகைய அன்பைக் கண்டதில்லை, இருவரும் வெகுவாக பாதிக்கப்பட்ட நிலையில் ஆழமான உணர்ச்சிக்குள்ளாயினர்.

விலூவும் ஸரோஷும் டிசம்பர் 1ஆம் தேதி அஹமதுநகர் திரும்பி வந்ததும், அவர்கள் பாபாவிடம் அனைத்தையும் தெரிவிக்க மெஹராஸாத்திற்குச் சென்றனர். பாபா உடலளவில் அங்கு இல்லாத நேரத்தில், பாபாவுக்காக மக்கள் கூடும் கூட்டத்தில் இவ்வளவு பக்தியையும் உற்சாகத்தையும் இதற்கு முன் கண்டதில்லை என்று அவர்கள் அறிவித்தனர்.

பேகம் அக்தர் ஏற்கனவே உறுதிசெய்த இசைநிகழ்ச்சி ஒன்றை ரத்துசெய்துவிட்டு, ஹமிர்பூர் மேளாவில் கலந்துகொண்டு பாடினார். ஹமிர்பூருக்குச் செல்லும் போது, அவர்கள் அருமையான வானிலை மற்றும் அனைத்து விஷயங்களும் சிறப்பாக நடந்ததை அனுபவித்தனர். ஆனால் திரும்பி வரும் வழியில், கார் பயணத்தில், எதிர்பாராமல் நடக்கக்கூடிய அனைத்தும் நடந்தன. அசௌகரியமான வானிலை, கார் என்ஜின் கோளாறு, சக்கரங்கள் பழுதானது மற்றும் தங்குவதற்கு உகந்த இடவசதி இல்லாமல் அவர்கள் சிரமப்பட்டனர். விலூ இதைக் குறித்து பாபாவிடம் கூறிவிட்டு, "உங்கள் பணிக்காக நாங்கள் செல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்பியதால், எங்களை

மிகவும் வசதியாக கவனித்துக்கொண்டீர்கள், ஆனால் திரும்பிவந்த பயணத்தில், உங்கள் பணி முடிந்துவிட்டதால் எங்களைப் பற்றி கவலைப்படவில்லை" என்று கேலி செய்தார். விலூ, பாபாவை பல வருடங்களாக அறிந்திருந்தாலும், இது வரை அவர் பாபாவின் தெய்வீகத்தன்மையை உண்மையில் நம்பவில்லை; ஆனால் ஹமிர்பூரில் மனதைக் கவரும் பல அனுபவங்களுக்குப் பின்னர், அவர் பாபாவைக் கடவுள் என முழுமையாக நம்பினார்.

அமெரிக்காவின் ஜனாதிபதி, ஜான் எஃப். கென்னடி (JOHN F. KENNEDY), 1963 நவம்பர் 22 அன்று, டல்லாஸில் படுகொலை செய்யப்பட்டார். இது அனைத்தும் பாபா ஏற்கனவே அறிவித்த 'உலகம் முழுவதும் துன்பம் மற்றும் குழப்பத்தின்' ஓர் அங்கமாகத் தோன்றியது. கென்னடியின் மரணச் செய்தி பாபா முன்னிலையில் கொண்டு வரப்பட்டபோது, பாபா இவ்வாறு கருத்துரைத்தார்:

**அவர் ஒரு சிறந்த மனிதர், நல்லவர், நேர்மையானவர். அவர் இத்தகைய மரணத்தை சந்தித்தது, மனிதகுலத்தின் நினைவிலும் சரித்திரத்திலும் அவரை அழியாதவராகக் காட்டுவது மட்டுமின்றி, ஆன்மீக ரீதியில் அவருக்கு ஒரு பெரிய உந்துதலையும் கொடுத்தது. இருப்பினும், அது அவ்வாறு விதிக்கப்பட்டு, அவர் படுகொலை செய்யப்பட்டாலும், அது ஒரு நல்ல விஷயம் அல்ல; இது உலகம் மேலதிகமான துன்பங்களை எதிர்கொள்வதைக் குறிக்கும்.**

1963 டிசம்பர் 3 அன்று, கோஹெரின் பெற்றோர், சகோதரர் ஆஸ்பி (ASPI), அவரது மனைவி ஆகியோர் காலை 10:00 மணிக்கு மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தனர். அதற்குப் பிறகு, ஹாரி டெடோல்சொவ், தான் பயணம் செய்த கப்பல் இந்தியாவில் குறுகிய காலத்திற்கு நிறுத்தப்பட்டதால், அரை மணி நேரத்திற்காக வந்திருந்தார். ஆதி, பாதிரி, ஸரோஷ் மூவரும் 7ஆம் தேதி காலை 10:00 மணிக்கு மெஹராபாத்தில் நிலவிய தண்ணீர் பற்றாக்குறை குறித்து, பாபாவுடன் விவாதிக்க, ஒரு சந்திப்பில் கலந்து கொண்டனர்; தற்போதைக்கு ஊர்திகளில் தண்ணீர் வரவழைக்க முடிவு செய்யப்பட்டது.

ரமா, மெஹர்நாத், ஷீலா ஆகியோர் 10ஆம் தேதி பிரோஜாவுடன் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். ரமாவிற்குத் தேவைப்பட்ட சிறிய அறுவை சிகிச்சை குறித்து பாபாவிடம் விவாதிக்கப்பட்டது. நரிமன், அர்னவாஸ் இருவரும் டிசம்பர் 12ஆம் தேதி முதல் மூன்று வாரங்கள் மெஹராஸாத்தில் தங்க வந்தனர். அன்றைய தினம் (இந்தக் காலகட்டத்தில் அவர் பல நாட்கள் செய்து வந்ததைப் போல) பாபா, மண்டலி மண்டபத்தில் குருநாதருக்கான பிரார்த்தனை மற்றும் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனை (MASTER'S AND REPENTANCE PRAYERS) இரண்டையும் மொழியுமாறு கேட்டுக்கொண்ட அதே வேளையில், பாபா நாற்காலியில் அமர்ந்திருக்க, ஒவ்வொரு மண்டலியையும் அவர் முன்னால் ஓர் உயரமான இருக்கையில் நிற்க வைத்து, கால்களில் தலை வணங்கினார்.

மத்தியப் பிரதேச ஆளுநர் டாக்டர் ஹரி விநாயக் பட்டஸ்கர் (DR. HARI VINAYAK PATASKAR), ராய்ப்பூர் (RAIPUR) நகரில் மெஹர் பாபா மையம் ஒன்றைத் திறந்து வைத்தார், அங்கு அவர் ஆற்றிய உரை 'அகில இந்திய வானொலி'யில் ஒலிபரப்பப்பட்டது. அவர் பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கினார்; அமர்ஸிங் ஸைகல் ஆளுநரின் வருகையை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார். பாபா அதற்கு இணக்கம் தெரிவிக்கவே, பட்டஸ்கர், அவரது மனைவி மற்றும் அமர்ஸிங் ஆகியோர் 1963 டிசம்பர் 15 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு மெஹராஸாத்திற்கு வந்தனர். மெஹராஸாத்தின் வாயில்கள் வழியாக அவர்களின் கார்கள் சென்றதால், சாலை முழுவதும் காவல்துறையினர் வரிசையாக நிறுத்தப்பட்டனர். பட்டஸ்கர் ஒரு முக்கியமான, செல்வாக்குமிக்க அரசாங்கப் பதவியை வகித்தாலும், அவர் ஒரு நேர்மையான மற்றும் எவ்வகையிலும் பாதிக்கப்படாத நபராக இருந்தார்; மேலும் பாபா அவரைத் தழுவியபோது உள்ளம் நெகிழ்ந்துபோனார். அவருடைய மனைவி மூட்டுவலியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார், அவரை ஒரு நாற்காலியில் மண்டபத்திற்கு அழைத்துச் சென்று, பாபா முன்பாக அமரவைத்தபோது, "பாபாவின் அருகில், என்னை நெருக்கமாக அழைத்துச் செல்லுங்கள்!" என்று கதறினார். பாபாவின் அன்பையும், அறிவையும் உறுதியாக உணர்ந்ததைப் போல், அதீத நேர்மை மற்றும் நம்பிக்கையுடன் அவர் பாபாவிடம் உரையாடியது, மிகவும் மனதைக் கவரும் காட்சியாக இருந்தது.

பட்டஸ்கர் தம்பதியினரின் மகள் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்ததால், திருமதி பட்டஸ்கர் பாபாவிடம் அவளைக் குணப்படுத்தும்படி வேண்டினார். '**தினமும் காலையில் ஒரு குவளையில் தண்ணீரை நிரப்பி, அதைப் பார்த்து, பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப மொழிந்து, பின்னர் அதை அருந்த வேண்டும்**' என்று பாபா அறிவுறுத்தினார். "**எனது அருட்பார்வை அவர் மீது இருக்கும்**," என்று கூறி பாபா அந்தப் பெண்மணியிடம் உறுதியளித்தார், "**உங்கள் மீதும் இருக்கும்**."

முந்தைய நாள், மண்டபத்தில் 'நான்கு இறைப்பயணங்கள்' (THE FOUR JOURNEYS) விளக்கப்படத்தின் பெரிய சித்திரம் ஒன்றை பாபா வைத்திருந்தார். இது பட்டஸ்கரின் குறுகிய வருகை என்பதால் மண்டலி ஏன் என்று யோசிக்கத் தொடங்கினர். ஆனால், பட்டஸ்கரின் கண்கள் உடனடியாக விளக்கப்படத்தின் மீது விழுந்தன; அதைப் பார்த்து ஆர்வத்துடன், அவர் அது குறித்த விளக்கத்தைக் கேட்க விரும்பினார். அவர் பாபாவைக் காட்டிலும் அந்த விளக்கப்படத்தால் வெகுவாக ஈர்க்கப்பட்டார். நான்கு இறைப் பயணங்கள் மற்றும் மூன்று வகையான அறிவைப் பற்றிய பாபாவின் சுருக்கமான விளக்கம், பட்டஸ்கருக்கு ஒரு வித புரிதலையும், திருப்தியையும் அளித்தது.

"**நான் இறை வார்த்தைகளின் 'வார்த்தை'யை மொழியும்போது, விழிப்புணர்வு எழுச்சியுற்று பாய்ந்தோடும்**" என்று பாபா அவரிடம் கூறினார்.

தம்பதியினர் பாபாவிடம் பிரியாவிடை பெற்றபோது, பாபா கீழ்வரும் வார்த்தைகளை மொழிந்தார்: "**நினைவில் கொள்ளுங்கள், நான் மனித**

**உருவில் அவதரித்த கடவுள்!**” அவருடைய கூற்றை இருவரும் பயபக்தியுடன் ஏற்றுக்கொண்டனர். தனியார் சாலையில் குவிக்கப்பட்டிருந்த காவல்துறையினர் கூட, பாபாவின் ஆசிகளை அடையப் பெறுவதிலிருந்து விலக்கப்படவில்லை. ஆளுநரின் கார் புறப்பட்டுச் சென்றதை அடுத்து, தரிசனத்திற்கான காவலர்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டன.

டாக்கே, ஆதி, ஆதியின் நண்பர் கே.ஜி. ‘அண்ணா ஸாஹேப்’ குணே (K/G. ‘ANNA SAHEB’ GUNE) என்பவரும் உடன் இருந்தனர். அன்று டெஹ்ரா டூனிலிருந்து குமார் வந்திருந்தார்.

அக்டோபர் மாதம் மெஹராஸாத்தில் நடைபெற்ற ஜெய்ப்பூர் கவாலி பாடகரின் ‘ஆண்களுக்கு மட்டுமான’ இசை நிகழ்ச்சியின் தினத்தை ஈடுகட்ட, அஹமதுநகர், பூனா, மும்பை, நவ்ஸாரி மற்றும் மெஹராபாத் ஆகிய இடங்களிலிருந்து சுமார் 250 பெண்மணிகள், மெஹராவின் பிறந்தநாளைக் கொண்டாட மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். அஹமதுநகரின் பல்வேறு இடங்களில் முந்தைய இரவைக் கழித்த பின்னர், பெண்களின் பெரிய குழு ஒன்று பேருந்துகள் மற்றும் தனியார் வாகனங்கள் மூலம் டிசம்பர் 23 திங்கள்கிழமை காலை 9.30 மணிக்கு வந்தடைந்தனர். அவர்கள் தங்கள் குழந்தைகளையோ அல்லது மெஹராவுக்காக பரிசுகளையோ கொண்டு வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தனர். கோஹெர் அவர்களை சந்தித்து, பாபாவும் மெஹராவும் பிரதான வீட்டின் வராண்டாவில் அமர்ந்திருப்பதாகவும், அவர்கள் முதலில் பாபாவை வணங்கி, பிறகு மெஹராவை வாழ்த்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பெண்கள் பூந்தோட்டத்தில் வரிசையாக நின்று பாபாவை தரிசனம் செய்யத் தொடங்கினர். ஒலிப்பெருக்கியில், மணி இவ்வாறு அறிவித்தார்: “நீங்கள் அனைவரும் உங்கள் கவலைகளை மறந்து, நீங்கள் விரும்பும் வழியில் அவரை சந்திக்க வேண்டும் என்று பாபா விரும்புகிறார், ஆனால் இரண்டு நிமிடங்களுக்கு மேல் இல்லை. இன்று நீங்கள் அனைவரும் முற்றிலும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார்.” பாபா ஒவ்வொரு பெண்மணியையும் தழுவி, வலதுபுறம் நாற்காலியில் அமர்ந்திருந்த மெஹராவை நோக்கி அனுப்பினார். மெஹராவைத் தழுவிய பின்னர், ஒவ்வொருவரும் பிரதான முன் அறைக்கும், பாபாவின் படுக்கையறைக்கும் சென்று, மீண்டும் தோட்டத்திற்குச் சென்றனர்.

அதற்குப் பிறகு, பாபா, மண்டபத்தில் அமரப் போவதாக சைகையால் தெரிவித்த போது, கோஹெர், மெஹரா இருவரின் கைகளையும் பற்றிக்கொண்டு, பாபா நாற்காலியிலிருந்து எழுந்து மெதுவாக வராண்டாவிலிருந்து கீழே இறங்கினார். நடந்து செல்வது அவருக்கு, பெரும் துன்பமாகத் தோன்றியது, அவர் ஒவ்வொரு படியிலும் நின்று நிதானமாகச் சென்றார். மஹாராணி ஷாந்தாதேவி அவர் அருகில் நடந்து சென்றார். மெஹரா, பாபாவின் கையைப் பற்றிக்கொண்டு

நடந்தபோது, பிற பெண்களும் அவர்களைப் பின்தொடர்ந்து மண்டபத்திற்கு வந்தனர். மணி அதை, காணொளி திரைப்படம் எடுத்தார்.

பாபா, மண்டலி மண்டபத்தில் தனது நாற்காலியில் அமர்ந்து மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். மெஹரா தரையில் வலதுபுறம் அமர்ந்திருக்க, மணி ஒலிபெருக்கியில் பேசினார். அப்போது, பூனாவிலிருந்து பெண்மணிகள் குழு ஒன்று பேருந்தில் வந்தனர். அவர்கள் பாபா மற்றும் மெஹராவின் அரவணைப்பைப் பெற்றுக்கொண்டனர். பாபா அவர்களின் உடல்நலம் மற்றும் தூக்கம் குறித்து விசாரித்தார்.

அதைத் தொடர்ந்து பாபா, லதா லிமாயேயிடம் பாடுமாறு கேட்டுக்கொண்டார். அவர் டெல்லியில் தங்கப் பதக்கம் வென்ற இரண்டு பாடல்களையும் பாடினார்; அவருடைய முயற்சிகளுக்காக பாபா, லதாவை இரண்டு முறை தழுவினார். பின்னர் உஷா, கோகிலா இருவரும் பாடினர். சுபத்ரா, ஹார்மோனியத்தின் பக்கத் துணையுடன், தனது கணவர் மதுசூதனன் இயற்றி, இசையமைத்த புதிய பாடல் ஒன்றைப் பாடினார். அதன் அற்புதமான வார்த்தைகள் மெஹராவின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. பாபா அன்புடன் தனது கைக்குட்டையை வெளியே எடுத்து அவருடைய கண்ணீரைத் துடைத்தார்.

பாபா, விலூவிடம் நௌரங்காவிற்கான அவரது சமீபத்திய பயணத்தின் அனுபவங்களை எடுத்துரைக்குமாறு கூறினார்; பிரகாஷ்வதி ஷர்மா என்ற பாபா-அன்பரும் மேளாவைப் பற்றி பேசினார். அவர்கள் முடித்ததும், பாபா சில நிமிடங்கள் ஓய்வெடுக்க தனது அறைக்குச் செல்வதாகக் கூறினார், அந்த நேரத்தில் ஒவ்வொருவரும் சென்று இளைப்பாறி, புத்துணர்ச்சியோடு வரலாம். அன்று ‘பெண்மணிகள் தினம்’ என்பதால் அர்னவாஸ், பெர்விஸ் கோத்ரெஜ் உட்பட எட்டுபேர் பாபாவை தூக்கு நாற்காலியில் அவரது இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். நாற்காலி அசைந்தால், பாபாவிற்கு அதிக வலி ஏற்படும் என்று அவர்கள் அஞ்சினர், ஆனால் பாபா, சௌகரியமாக இருப்பதாகவும் கவலைப்பட வேண்டாம் என்றும் உறுதியளித்து, படிகளில் ஏறிச் செல்லுமாறும் வலியுறுத்தினார்.

சுமார் பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா தனது அறையிலிருந்து வெளியே வந்து தோட்டத்தில் அமர்ந்தார். விரும்பியதைத் தேர்ந்தெடுத்து உண்ணும் மதிய உணவு வழங்கப்பட்டது. அனைவரும் மெஹராவை சூழ்ந்து நிற்க, அவர் கேக் ஒன்றை வெட்டவே, மகிழ்ச்சி ஆரவாரத்தோடு அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் பாடப்பட்டது. பாபாவிடம் முதல் துண்டைக் கொடுத்தபோது, அதை அவர் சிறிது சுவைத்து பிரசாதமாக மெஹராவுக்கே வழங்கினார். அனைவரும் மதிய உணவு உண்ட பிறகு, பாபா மீண்டும் மண்டபத்திற்குள் நுழைந்தார். காலையில் பாபாவின் அருகில் அமர்ந்திருந்தவர்கள் பின் இருக்கைகளில் அமர வேண்டும் என்றும், காலையில் பின்னால் அமர்ந்திருந்தவர்கள் இப்போது அவர் அருகில் அமர வேண்டும் என்றும் மணி அறிவித்தார்.

பிரகாஷ்வதியும், ஃப்ரீனி நலவாலாவும் ஒரு தட்டையான பளிங்குக் கல்லைக் கொண்டு வந்தனர், அதில் பாபாவின் சிலையை வடித்து, டெஹ்ரா டூனில் அமைந்த 'மெஹர் தாம்' என்ற புதிய கோவிலில் அது வைக்கப்பட இருந்தது. பாபா பளிங்கு பீடத்தை கைகளால் தொட்டு ஆசீர்வதித்தார். பிரகாஷ்வதி, பாபாவிடம் அவரது பாதங்களை அதன் மீது வைக்குமாறு வேண்டினார். பாபா தனது நாற்காலியில் முன்னோக்கி சாய்ந்து, பளிங்குக் கல்லின் மீது பாதங்களை வைத்தார். "**நான் இப்போது அதில் முழுமையாக இருக்கிறேன்**," என்று அவர்களிடம் தெரிவித்ததும், இரண்டு பெண்மணிகளும் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, அந்தக் கல்லை கவனமாக டெஹ்ரா டூனுக்கு எடுத்துச் சென்றனர்.

இதற்குப் பிறகு, பாபா, "**விரைவில் ஏதோ பயங்கரம் நடக்கப் போகிறது**!" என்று சைகையால் தெரிவித்தார்.

இந்த மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை சீர்குலைக்கும் விதத்தில், என்ன நடக்கப் போகிறது என்று அனைவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். எல்லோருடைய ஆர்வமும் உச்சத்தை எட்டிய அந்த நேரத்தில், ஒரு மனிதன் பின் வாயிலிருந்து கூட்டத்திற்குள் நுழைந்தான்! அன்றைய தினம் ஆண்கள் எவரும் அனுமதிக்கப்படாததால், மெஹராவும் அங்கே இருந்ததால், பல கோணங்களிலிருந்தும் பலத்த கூச்சல்கள் எழுந்தன. பெண்கள் அவனைப் பற்றிப் பிடித்து வெளியே தள்ள முயன்றனர், ஆனால் அந்த மனிதன் விடாப்பிடியாக, "நான் மெஹர் பாபாவை சந்திக்க வேண்டும்!" என்று கதறினான்.

பெரிய மஞ்சள் நிற பட்டையுடன் வெள்ளை காலுறையும், கருப்பு கோட்டு, கண்ணாடி, பார்சி தொப்பி அணிந்திருந்த அந்த மனிதன், பாபாவிடம் சென்ற போது, மெஹராவும் இதர பெண்கள் அனைவரும் திகைத்துப் போயினர். பாபா அமைதியாக அமர்ந்து சலசலப்பைப் பார்த்து சிரித்தார். அந்த மனிதன் மெஹராவை நோக்கி முன்னேற முயன்றபோதுதான், 'தன்னை' கேட்டி ஈரானி என்று வெளிப்படுத்தினார்! கேட்டி அனைவரையும் ஏமாற்றினார். அவரது அலங்கார ஒப்பனையை ரானோ செய்திருந்தார், அது யார் என்று பெண்கள் அனைவரும் உணர்ந்தபோது, மண்டபம் சிரிப்பொலியால் அதிர்ந்தது.

சிரிப்பொலி அடங்கியதும், சில பஜனைகள் பாடப்பட்டன. சிறிது நேரத்தில் கேட்டி திரும்பி வந்தார், இந்த முறை ஜப்பானிய 'கெய்ஷா' பெண்ணாக (JAPANESE GEISHA GIRL) உடை அணிந்திருந்தார். பாபா அவரிடம் ஒரு ஜப்பானிய பாடலைப் பாடச் சொல்லவே, அவரது ஓங்கிய குரலைக் கேட்டு, சிரிப்பொலி இரட்டிப்பாகியது.

இன்னும் சில பெண்கள் பக்திப் பாடல்களைப் பாடினர், பின்னர் ஃப்ரீனி நலவாலா குருநாதர் மற்றும் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனைகளை (MASTER'S AND REPENTANCE PRAYERS) இந்தியில் வாசித்த பின்பு, மெஹரா கேரவாலா ஆங்கிலத்தில் பிரார்த்தனையை மீண்டும் மொழிந்தார்.

பிற்பகல் 3:15 மணிக்கு, பாபா '**அனைவரும் விடைபெறும் நேரம்**' என்று சுட்டிக்காட்டினார். ஒவ்வொருவராக அவரை அணுகி, கையை முத்தமிட்டு,

பேருந்துகளில் ஏறினர். நீள் வரிசை உருவாவதற்கு சற்று முன்பு, பாபா கூறினார், **"அனைவரும் நாள் முழுவதும் இருந்த மகிழ்ச்சியான மனநிலையில் திரும்பிச் செல்லவேண்டும்."**

பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டபோதிலும், சில நேரங்களில் அவரைப் பார்க்க தனிப்பட்ட நபர்களை அனுமதித்தார். பூனாவில் வாழும் ராமகிருஷ்ணன் ஒரு சிலருக்கு தரிசனம் வழங்கப்பட்டதை அறிந்ததும், அவர் கலக்கம் அடைந்தார். ஒரு நாள் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது, அதில் அவர் எழுதியிருந்தார்: "மெஹராஸாத்தில் பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் போது, ஏழைகளைத் தவிர்த்து, செல்வந்தர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுவதாக சிலர் நினைக்கிறார்கள்."

பாபா மகிழ்ச்சியடைந்து ராமகிருஷ்ணனுக்கு பதில் அனுப்பினார்.

**எப்படித் தோன்றினாலும், எனது தரிசனத்தை அடையப் பெற்றவர், அமைச்சரவை மந்திரியாக இருந்தாலும் சரி, கொடிய குற்றவாளியாக இருந்தாலும் சரி, அவருடைய அதிர்ஷ்டத்திற்குக் கடன்பட்டவர். செல்வந்தர்களை அனுமதித்திருந்தால், அவர்கள் என்னுடனான நெருக்கத்தில் எந்த அளவுக்கு செல்வந்தர்களாக இருக்கக்கூடும் என்பதுதான் விஷயம், அவர்களின் பாக்கெட்டுகளில் அல்ல! செல்வந்தர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் என்னை வணங்கினாலும், நான் ஏழைகளுக்கு தலைவணங்குகிறேன் என்பதை மறுக்க முடியாது!**

1963 டிசம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை காலை, ராமகிருஷ்ணன், ஷிண்டே மற்றும் ஸர்தார் ராஸ்தே ஆகியோருடன் பூனா மையத்தைக் குறித்த மற்றொரு சந்திப்பிற்காக மெஹராஸாத் வந்தார்.

டிசம்பர் 30ஆம் தேதி டெஹ்ரா டூனிலிருந்து பாபாவைப் பார்க்க கேக்கி நலவாலா திடீரென வந்தார். பாபாவைப் பார்க்க வருபவர்களுக்கு கடுமையான தடை இருப்பதை அறிந்திருந்தும், குஷ்ரு குவார்ட்டர்ஸில் ஆதியை சந்தித்தார். பாபாவின் கட்டளைகளை மீறிவிடுவோமோ - அவரது கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ என்ற அச்சத்தில் கேக்கியை மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்ல ஆதி தயங்கினார்! ஆனால் இந்த வாய்ப்பை நழுவ விடக் கூடாது என்பதில் கேக்கி உறுதியாக இருந்ததைக் கண்ட ஆதி, வாடகைக் காரில் அவரை மெஹராஸாத்திற்கு அனுப்பிவைத்தார். அலோபா அவரை முன் வாயிலில் நிறுத்தி, இந்த விஷயத்தில் பாபாவின் கட்டளைகள் தெளிவாக இருந்ததால், திரும்பிச் செல்லும்படி பிடிவாதமாகக் கூறினார். தான் வந்திருப்பதை தெரிவித்த பின்பு, பாபா, திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினால், அதற்குக் கீழ்ப்படிய மனப்பூர்வமாக இணங்குவதாகவும் கேக்கி கெஞ்சினார். இந்த நேரத்தில், பாபா கேட்கும் வரை எதுவும் பேசக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில், இரண்டு நிமிடங்களுக்காக, கேக்கியை சந்திக்க பாபா இணக்கம் தெரிவித்ததாகக் கூறி,

எரச் வாயிலை அணுகினார். கேக்கி அதற்கு உடன்பட்டதும் மண்டலி மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கேக்கி உள்ளே நுழைந்ததும், பாபாவின் அரவணைப்பால் வரவேற்கப்பட்டு, ஐந்து நிமிடங்கள் அவருடன் அமர அனுமதிக்கப்பட்டார். அப்போது டெஹ்ரா டூனில் எழுப்பப்பட்ட 'மெஹர் தாம்' கோவிலில் பாபாவின் உருவச்சிலை அமைப்பது தொடர்பாக கருத்து வேறுபாடு நிலவியது. ஒரு சிலை அல்லது பெரிய உருவப்படம் நிறுவப்படுவது தொடர்பாக பாபா, கேக்கி நலவாலாவிடம் கேட்டதற்கு, அவர் உருவப்படத்தை விரும்புவதாகக் கூறினார். பாபா இவ்வாறு பதிலளித்தார், "**நான் இதுபோன்ற அனைத்தையும் அழிக்க வந்துள்ளேன், ஆனால் டெஹ்ரா டூன் மற்றும் பிற இடங்களில் வாழும் மக்களின் அன்பு, அவர்கள் செய்ய விரும்பும் எதையும் நிறுவும் விதத்தில், எனது கொள்கை எனும் சரத்தை தளர்வடையச் செய்கிறது**."

அப்போது மெஹராஸாத்தில் இருந்த நரிமன், கேக்கியின் நிலைப்பாட்டை ஆதரித்து, சிலைகள் மனிதர்களின் உண்மையான உருவத்தை அரிதாகவே பிரதிபலிக்கின்றன என்று குறிப்பிட்டார். பாபா, டெஹ்ரா டூன் அன்பர்களுக்கு ஒரு செய்தியை கேக்கி மூலமாக வழங்கினார்; 45 நிமிடங்கள் பாபாவுடன் இருந்த பின்னர் அவர் புறப்பட்டுச் சென்றார்.

அந்த ஆண்டின் இறுதியில், இர்வின் லக் (IRWIN LUCK), பாபாவிற்காக 'என் அன்பின் இறைப்பெருங் கடலுக்கு' (TO MY DEAR OCEAN OF LOVE) என்ற நீண்டதொரு கவிதையை அனுப்பி வைத்தார். அதைக் கேட்ட பாபா, "**உங்கள் காதல்-கவிதை என்னை மிகவும் மகிழ்வித்தது. உங்கள் கடலின் ஒரு துளியான இதயத்திலிருந்து பெருக்கெடுத்த அன்பு இறைப் பெருங்கடலைத் தொட்டது**" என்று பதில் அனுப்பினார்.

இவ்வாறு 1963 நிறைவுக்கு வந்தது, ஆனால் ஏகாந்தவாசத்தில் பாபாவின் பணி தொடர்ந்ததால், அவருடன் அல்லது மண்டலியுடன் தொடர்புகொள்வதில் தடை விதிக்கப்பட்டது. இந்த உலகளாவிய பணியைக் குறித்து எதையும் கற்பனை செய்ய இயலாது, ஏனெனில் அதன் இயல்பே எல்லையற்றது என்பதால், முழுப் படைப்பிலும் உள்ள அனைவரையும், அனைத்தையும் அது உள்ளடக்கியது.

கடுமையான ஏகாந்தவாசம் தொடர்ந்தாலும், பாபாவின் அன்றாட நிகழ்வுகள் வழக்கம் போல நடந்தது. அவர் தனது பெயரிலான பணி தொடர்பாக வரும் கடிதங்கள், மண்டலியுடனான விஷயங்களைப் பற்றி விவாதிப்பதும், சீட்டு விளையாடுவதும், எப்போதாவது மக்களை சந்திப்பதும் அவ்வப்போது நடந்து வந்தது. ஆனால் அவரது உள் பணி தீவிரமடைந்து வந்தது என்பது, அவரது பௌதீக உடலின் வெளிப்படையான சோர்விலிருந்து தெளிவாகத் தென்பட்டது.

ரமா கல்சூரி பூத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது, மெஹர்நாத், ஷீலா இருவரையும் கவனிக்க ரமாவின் சகோதரர் தீரஜ் வந்திருந்தார். 1963 ஜனவரி 1 அன்று மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தார்.

ஸரோஷ், அஹமதுநகரில் பணியமர்த்தம் செய்யப்பட்ட 'பிரிகேடியர் ஜெனரல்' (BRIGADIER GENERAL) ஒருவரையும் இன்னும் சில உயர் இராணுவ அதிகாரிகளையும் தரிசனத்திற்கு அழைத்து வர, பாபா அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார். ஜனவரி 2 அன்று மதியம் 2:00 மணிக்கு அவர்கள் வருவதற்கு பாபா அனுமதி வழங்கினார்.

பூனாவின் ராணுவ ஜெனரல் பண்டாரி (ARMY GENERAL BHANDARI), டெல்லிக்குப் பணி மாற்றம் செய்யப்பட்டார். ஜனவரி 2ஆம் தேதி டெல்லிக்குச் செல்லும் வழியில், பாபாவிற்கு மரியாதை செலுத்தும் அதீத ஆர்வத்தில், மெஹராஸாத்திற்குப் புறப்படத் தயாராக இருந்த ஆதியை சந்திக்க, அவர் மனைவி மற்றும் பதினேழு வயது மகள் ரேவாவுடன் (REVA) குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு வந்தார். மெஹராஸாத் வரை தனது காரைப் பின்தொடருமாறு ஆதி அவர்களிடம் கூறி அழைத்துச் சென்ற போது, பாபா, ஸரோஷுடன் சென்ற பிற ராணுவ அதிகாரிகளுடன் பண்டாரி குடும்பத்தினரையும் அன்புடன் சந்தித்தார்.

பிரிகேடியர் ஜெனரல் பஞ்ஜாபைச் சேர்ந்த சீக்கியர், அவரிடம், '**குருநானக் ஒரு பரிபூரண குருநாதர்**, **சத்குரு**' என்று பாபா குறிப்பிட்டார்.

"குருநானக்கைப் பற்றி நீங்கள் படித்திருக்கிறீர்களா?" என்று அவரது மனைவி கேட்டார்.

"**நான் படிக்கவில்லை**," என்று பாபா சைகையால் தெரிவித்து "**அது எனக்குத் தெரியும்**!" என்று கூறினார்.

பிரிகேடியர் கேட்டார், "பாபா, இறை நாமத்தைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது நன்மை பயக்கும் என்று நான் கேள்விப்பட்டேன், ஆனால் எந்தப் பெயரைச் சொல்வது சிறந்தது?"

"**நீங்கள் உங்கள் மனைவியை நேசிக்கிறீர்களா?**"

"ஆம், பாபா. நான் அவரை மிகவும் நேசிக்கிறேன்."

"**அவர் உங்களிடமிருந்து வெகு தொலைவில் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**"

"நிச்சயமாக நான் அவரை நினைவில் கொள்வேன்."

"**உங்கள் கையில் ஒரு ஜெபமாலையுடன் அவரை நினைவில் கொள்வீர்களா? அல்லது, ஒரு மூலையில் அமர்ந்து அவர் பெயரை மீண்டும் மீண்டும் சொல்வீர்களா?**"

"இல்லை, நான் அவரைப் பற்றி தன்னிச்சையாக அன்புடன் நினைப்பேன்."

பாபா கூறினார், "**அதேபோல், இயற்கையான முறையில் இறைவனை தானாக நினைவுகூர்வதே பயனுள்ளது. மேலும் அன்பு இல்லாமல், அது சாத்தியமில்லை. பிரியமானவரை நினைவில் கொள்ளும் தீவிர தாகம், அதீத**

**ஏக்கம் இருக்கும்போது, அன்பு உதயமாகிறது; அப்போது, ஒருவரின் ஒரே சிந்தனை அவரைப் பற்றி மட்டுமே இருக்கிறது.**

**"இதுவே உண்மையான ஜபம்** (அதாவது, இறை நாமத்தை மீண்டும் மீண்டும் உச்சரிப்பது) **என்று அழைக்கப்படுகிறது. அப்போது, சாத்தியமற்றது கூட சாத்தியமாகும். இது பெயரின் மகிமை."** பாபாவின் விளக்கத்தால் பிரிகேடியர் பெரிதும் மனம் நெகிழ்ந்துபோனார்.

ஜெனரல் பண்டாரியும் அவரது மனைவியும் பாபாவிடம் கண்ணீருடன் விடைபெற்றனர். பாபாவின் அளப்பரிய கருணையால், தம்பதிகள் தம்மைப் பார்ப்பது இதுவே கடைசி தருணம் என்பதை அறிந்த பாபா அவர்களை சந்தித்தார்.

என்.பி. மிஷ்ரா, (N.P. MISHRA) (**1954,** செப்டம்பர் மாத மெஹராபாத் கூட்டங்களில் கலந்து கொண்டவர்) ஆதியுடன் வந்திருந்தார், பாபா அவரை மும்பையிலிருந்து நடைபயணமாக டெல்லிக்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தினார். அவருக்கு பிரசாதமாக பத்து ரூபாய் வழங்கப்பட்டது.

நரிமன், அர்னவாஸ், குமார் ஆகியோர் கடந்த 3ஆம் தேதி புறப்பட்டுச் சென்றனர். எரச், சில நாட்கள் மருத்துவ சிகிச்சைக்காக அவர்களுடன் பூனா சென்றார்.

ஸாம் கேரவாலா (SAM KERAWALA) ஜனவரி 6ஆம் தேதி ஆதியுடன் மெஹராஸாத் சென்று, பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டார். ராவ்ஸாஹேப் அஃப்ஸேரி (RAOSAHEB AFSERI) சமீபத்தில் பாபாவிற்கு எழுதிய கடிதத்தில், அவர் உயிரைத் துறந்த பின்னர் அவரது உடலை மெஹராபாத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார், பாபா அதை அனுமதித்தார். அன்று பூத் மருத்துவமனையில் ரமாவிற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. 10 மற்றும் 19ஆம் தேதிகளில், ரமாவைப் பார்க்க பாபா, பாவ் கல்சூரியை அனுப்பிவைத்தார். அவர் மனைவியுடன் சிறிது நேரம் உரையாடி, பாபாவின் அன்பை வெளிப்படுத்தினார்; அங்கிருந்து ருஸ்தம் காக்காவின் இல்லத்திற்குச் சென்று, அவர் தனது பாடல் வரிகளுக்கு இசை அமைப்பது பற்றி விவாதித்தார்.

1964 ஜனவரி 16 அன்று, பாபா தமது வரவிருக்கும் பிறந்தநாளுக்காக, கீழ்வரும் செய்தியை வழங்கினார்:

**கடவுளை நேசிப்பதே வாழ்க்கையின் குறிக்கோள். கடவுளோடு ஐக்கியமாவதே வாழ்வின் இறுதி இலக்கு. இந்த இலக்கை அடையப் பெறுவதற்கான உறுதியான மற்றும் விரைவான வழி, மேலும் மேலும் என்னை நேசிப்பதன் மூலம் எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வதுதான்.**

**நான் பல துன்பங்களை அனுபவித்திருக்கிறேன்; மேலும், எனது மௌனத்தைக் கலைக்கும் வரை, மேலதிகமான துன்பங்களை நான்**

**அனுபவிக்கவேண்டும். என் அன்பை என் அன்பர்கள் அனைவருக்கும் வழங்குகிறேன்.**

அஹமதுநகரின் ஆட்சியாளர் பி.எம். ஷஹானே (P.M. SHAHANE), 1964 ஜனவரி 19 ஞாயிற்றுக்கிழமை அன்று, தனது குடும்பத்துடன் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டார். மெஹர்வான் ஜெஸவாலா, மார்ச் 1ஆம் தேதி வரை மெஹராஸாத்தில் தங்குவதற்காக அன்று வந்தார். அதன் பின்னர், ஒவ்வொரு வருடமும் பாபா அவருக்கு வழங்கிய இந்த வாய்ப்பு இறுதிவரை தொடர்ந்தது.

50 வயதான டாக்டர் ஸுபோத் சந்திர ராய் (DR. SUBODH CHANDRA RAI) என்றழைக்கப்பட்ட கண் பார்வையற்ற பெங்காளி அறிஞர், 1948 முதல் நியூயார்க் நகரில் அமைந்த 'சமூக ஆராய்ச்சிக்கான நியூ ஸ்கூலில்' (NEW SCHOOL FOR SOCIAL RESEARCH) ஆசிரியராக பணிபுரிந்தார். டாம் ரிலே (TOM RILEY) 1956ஆம் ஆண்டு அங்கு ஒரு மாணவராக பயின்று வந்த போது, டாக்டர் ராயிடம் இந்திய தத்துவத்தில் பாடங்களைக் கற்று வந்தார். ஒரு நாள் டாம் ரிலே, டாக்டர் ராயிடம் மெஹர் பாபாவைப் பற்றிக் கூறி, 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தைப் பற்றி அவரிடம் குறிப்பிட்டார். இதைக் கேட்ட டாக்டர் ராய், மிகுந்த ஆர்வத்துடன், அந்தப் புத்தகத்தை எவரேனும் அவருக்காக வாசிக்க வேண்டும் என்று விரும்பினார். அதைத் தொடர்ந்து அவர் ஃபிலிஸ், அடெல், மற்றுமொரு மாணவி ரோஸ் கார்பேட் (ROSE GARBADE) மூவரையும் சந்தித்தார்; ரோஸ் கார்பேட், டாம் ரிலேயைப் போலவே 1958இல் அமெரிக்காவில் பாபாவை சந்தித்தார். ரோஸ், பாபாவின் வேறொரு புத்தகத்தை டாக்டர் ராயிடம் கொடுத்தார்.

ராய், காலரா நோயின் விளைவாக ஏழு வயதிலிருந்தே கண் பார்வையற்றவராக இருந்தாலும், அவர் கொல்கத்தா பல்கலைக்கழகத்தில் பயின்று அங்கு, பேராசிரியராகப் பணியாற்றினார்; அவர், மும்பை 'டாடா சமூக அறிவியல் பள்ளி'யில் (TATA SCHOOL OF SOCIAL SCIENCES) பணிபுரிந்தார்; லண்டன், கொலம்பியா மற்றும் நியூயார்க் பல்கலைக்கழகங்களில் பட்டதாரியாகப் பணிபுரிந்ததோடு, ஹார்வர்ட் ஆராய்ச்சி அறிஞராகவும் இருந்தார். 1963ஆம் ஆண்டில், இந்தியாவில் பயணம் செய்து, விரிவுரை வழங்குவதற்காக 'ஃபுல்பிரைட் உதவித்தொகை'யை (FULBRIGHT SCHOLARSHIP) அடையப் பெற்ற முதல் கண் பார்வையற்ற அறிஞர் ஆனார். அவரது ஆராய்ச்சியின் கருப்பொருள் 'இந்து மதத்தின் நவீன போக்குகள்' (MODERN TRENDS IN HINDUISM), மேலும் அவர் ஒரு தத்துவஞானியாகவும், ஆசிரியராகவும் அறியப்பட்டவர், 'உலகின் இன்றைய நம்பிக்கையில் இருக்கும் கிழக்கு மற்றும் மேற்கத்திய கலாச்சாரங்களின் கலவைக்குத் தூண்டுதலாக' இருந்தார்.

கொல்கத்தாவிற்கு வந்து ஏ.சி.எஸ். சாரியுடன் நீண்ட நேரம் நிகழ்த்திய உரையாடலுக்குப் பிறகு, டாக்டர் ராய் மெஹர் பாபாவை சந்திப்பதில் உறுதியாக இருந்தார். அவர் 1963 அக்டோபர் மாதத்தில் ஆதிக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்து, 1963 நவம்பர் கடைசி வாரம் அல்லது டிசம்பர் முதல் வாரத்தில் ஏதேனும் ஒரு தேதியில் அவரது வசதிக்கேற்ப மெஹராஸாத்திற்கு வர பாபா

அவரை அனுமதித்தார். ஆனால் டாக்டர் ராய் குறிப்பிட்ட நாளில் அங்கு வரத் தவறிவிட்டார். பாபா அவர் மீது மிகுந்த அக்கறையுடன் நடந்து கொண்டார். டாக்டர் ராய், அஹமதுநகருக்கு பதிலாக, தவறுதலாக மறு கோடியில் 500 மைல்களுக்கும் அப்பால் அமைந்த அஹமதாபாத்திற்குச் சென்றார். ஆனால் அவர் மெஹர் பாபாவை சந்திக்கும் வலுவான விருப்பத்தில், கடைசியாக, பள்ளி ஆசிரியராக பணிபுரிந்த ஓர் இந்தியரின் துணையுடன் அஹமதுநகரில் ஆதியின் அலுவலகத்திற்குச் சென்றார்.

1964 ஜனவரி 21 செவ்வாய் அன்று காலை 9:00 மணிக்கு, டாக்டர் ராய், இந்திய ஆசிரியர் இருவரும் ஆதியால் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அவரை அன்புடன் தழுவிய பிறகு, பாபா, அவரை இரண்டு அல்லது மூன்று முறை முத்தமிட்டு, பாபாவின் முகத்தை கைகளால் வருடி, உணர டாக்டர் ராயை அன்புடன் அனுமதித்தார். ஸுபோத் சந்திர ராய் இந்த சம்பவத்தை இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

நான் ஒரு மனிதனால் ஒருபோதும் முத்தமிடப்படாததால், நான் மிகவும் மகிழ்ச்சியாகவும், வெட்கமாகவும் உணர்ந்தேன். ஆனால் பாபா மிகவும் கருணையோடும் அன்போடும் என்னைத் தழுவி முத்தமிட்டார், அது அளப்பரிய அருள் நிறைந்தது.

ஸுபோத் சந்திர ராய் ஏறக்குறைய முக்கால் மணி நேரம் பாபாவுடன் இருந்தார். பாபா அவருக்கு ஒரு சிறிய சொற்பொழிவை வழங்கி, மறுபிறவி பற்றிய அறிஞரின் கேள்விகளுக்கு பதிலளித்தார். “**வெளியளவில் பல பிறப்பு மற்றும் இறப்புகள் உள்ளன, ஆனால் உண்மையில், ஒரே ஒரு பிறப்பும், இறப்பும் மட்டுமே உள்ளது**.” என்று அவரிடம் கூறப்பட்டது.

அப்போது டாக்டர் ராய், பாபாவிடம், “கண் பார்வை இல்லாதவருக்கு உங்கள் தரிசனம் என்றால் என்ன?” என்று கேட்டார்.

பாபா விளக்கினார், “**எனது தரிசனத்திற்கு வருபவர்கள் அனைவரும் பார்வையற்றவர்கள், ஏனெனில் என் உண்மை நிலையை எவராலும் பார்க்க முடியாது. உலகில் என்னைப் ‘பார்ப்பவர்கள்’ வெகு சிலரே, பிற அனைவரும் மாயையை மட்டுமே பார்க்கிறார்கள். ஆனால் என்னைத் தொடுவது அல்லது எனது ஸ்பரிசத்தைப் பெறுவது போன்ற தொடர்பும், எனது அரவணைப்பும் ஈடு இணையில்லாத ஆசீர்வாதத்தின் தரிசனம், எனவே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்**.”

பாபா, மௌனத்தைக் கலைப்பது குறித்து டாக்டர் ராய் கேட்டதற்கு, அவர் பதிலளித்தார், “**நான் மௌனத்தைக் கடைப்பிடித்ததே நான் அதைக் கலைக்க வேண்டும் என்பதற்காகத்தான்.**

**“எனது மௌனம், சபதம் அல்ல. மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னில் இருந்தது, அதைக் கைவிட வேண்டும் என்ற ஆவலும் என்னில் சமமாக உள்ளது. ஒரு திடீர் ஆர்வம், காலம் அல்லது நேரத்தை சார்ந்ததாக இருக்காது, ஆனால் எனது மௌனத்தைக்**

**கலைக்க வேண்டும் என்ற வெறித்தனம், என்னில் வரும் காலம் வேகமாக நெருங்கி வருகிறது.**"

டாக்டர் ராய் பல்வேறு உலக மதங்களைப் பற்றிய தனது ஆழ்ந்த ஆய்வு மற்றும் அவரது முடிவுகளைப் பற்றி பேசினார், மேலும் அது குறித்த பாபாவின் கருத்துக்களை அறிய ஆவலாய் இருந்தார். அதற்கு பதிலளித்த பாபா கூறினார், "**மதத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன, ஒன்று - சடங்கு சம்பிரதாயம்** (THE CEREMONIAL), **மற்றொன்று - ஆன்மீகம்** (SPIRITUAL); **வேறுவிதமாகக் கூறினால், ஒரு தானியத்தின் 'உமி'** (HUSK) **மற்றும் அதன் 'உட்பொருள்'** (SUBSTANCE). **ஒரு மனிதனின் உணர்வு, உட்சுழற்சியில்** (INVOLUTION) **ஈடுபடத் தொடங்கும் போது, அவன் உள்ளுக்குள் ஆழமாக மூழ்கினால், அவன் எந்த மதத்தையும் சார்ந்தவன் அல்ல, எல்லா மதங்களும் அவனைச் சார்ந்தது என உறுதிப்படக் கூற முடியும்.**"

"உங்கள் போதனைகளை நான் எவ்வாறு வகைப்படுத்த வேண்டும்? இது எந்த தத்துவத்திற்கு அல்லது மதத்திற்கு மிக நெருக்கமானது?" என்று டாக்டர் ராய் கேட்டார்.

பாபா பதிலளித்தார், "**எனது போதனைகள் எந்த மதம் அல்லது தத்துவம் சார்ந்தது அல்ல. நீங்கள் எதையேனும் அதன் நெருங்கிய ஒற்றுமைக்காக தேடுகிறீர்கள் என்றால், அது ஸூஃபியிஸம்** (SUFISM), **ஸொராஸ்ட்ரியனிஸம்** (ZOROASTRIANISM) **மற்றும் வேதாந்திஸம்** (VEDANTISM) **ஆகியவற்றின் ஒரு வகையான தொகுப்பாக இருக்கும்.**"

"இதை அறிந்துகொண்டதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அமெரிக்காவில் பேராசிரியராக, நான் ஒப்பீட்டு மதத்தை கற்பிக்கிறேன். இந்த மூன்று மதங்களையும், ஸூஃபியிஸத்தை இஸ்லாமிஸத்தின் (ISLAMISM) ஒரு பகுதியாக கற்பிக்கிறேன்."

டாக்டர் ராய் தொடர்ந்து கேட்டார், "நீங்கள் சோர்வாக உணரும்போது அல்லது பொறுமையிழப்பதாக இருந்தால் உங்கள் சைகைகளை எப்படி வெளிப்படுத்துவீர்கள்?"

கண்பார்வையற்ற டாக்டர் ராயின் கைகளை பாபா அவரது கைகளில் எடுத்து, அவர் கை சைகைகளை எவ்வாறு செய்தார் என்பதை நடைமுறையில் அவருக்குக் காட்டி, அவரது கைகளை உணரச் செய்தார். அப்போது ராய், "எனது கேள்விகளால் நான் உங்கள் பொறுமையை சோதிக்கிறேனா?" என்று கேட்டார்.

பாபா, "**இதுவரை இல்லை**" என்று கேலி செய்தார்.

டாக்டர் ராய் வினவினார், "அஹமதுநகருக்கு வருவதற்கு பதிலாக, தவறுதலாக அஹமதாபாத்திற்குச் சென்றதால், எனது வாழ்க்கையில் ஒரு நாளை இழந்துவிட்டேன். அதை எப்படி ஈடுகட்டுவது?"

பாபாவின் பதில்: "**காலம் என்பது நித்தியத்தில் உண்மையானது அல்ல.**"

டாக்டர் ராய், பாபாவிடம் ஆன்மீக மெய்ப்பொருள் தொடர்பான பல கேள்விகளைக் கேட்டார், அதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார், "'**கடவுள்**

**பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தை முழுமையாகப் படித்து, அதை உள்வாங்கும் போது, உங்கள் கேள்விகளுக்கான பதில்கள் அனைத்தும் கிடைக்கும்.**"

டாக்டர் ராய் கூறினார், "உங்கள் போதனைகள் காலங்காலமாக நிறுவப்பட்ட அதே உண்மைப்பொருள் என்பதை நான் கண்டேன்."

பாபா சிரித்துக்கொண்டே, "**இல்லாவிட்டால் அது உண்மைப்பொருளாக இருக்காது! ஏக இறைவனான உண்மைப்பொருள் ஒன்றுதான், நித்தியமானது. இருப்பினும், நான் அதைக் கற்பிக்க வரவில்லை, ஆனால் அதைவழங்க வந்துள்ளேன்.**"

பாபா சுவரிலிருந்த உலோகப் பலகையைச் சுட்டிக் காட்டினார், அதில் "**நான் கற்பிக்க வரவில்லை, விழிப்படையச் செய்ய வந்துள்ளேன்** (I HAVE COME NOT TO TEACH BUT TO AWAKEN)" என்று எரச் வாசித்தார்.

அவருடன் வந்த பள்ளி ஆசிரியர், டாக்டர் ராய் மற்றும் பாபாவின் புகைப்படத்தை எடுத்தார்; ராய், பாபாவின் அருகில் தரையில் அமர்ந்திருந்தார்.

மெஹராஸாத்திலிருந்து விடைபெறும் போது, பேராசிரியர் மண்டலியிடம், அவர் பாபாவை சந்தித்ததில் எவ்வளவு மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பதாகத் தெரிவித்ததை பல முறை கூறினார், "பாபா உண்மையில் இரக்கமுள்ளவர்!"

அதற்குப் பிறகு, டாக்டர் ராய் மெஹர் பாபாவுடனான அவரது சந்திப்பை பின்வருமாறு சுருக்கமாக எடுத்துரைத்தார்:

மெஹர் பாபாவின் அன்பு உண்மையில் 'பொய்மை அல்லாதது', மிகவும் மேன்மையானது. வாழ்க்கை உண்மையில் எதை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பதை அவர் எனக்குக் காட்டினார், அதாவது 'அதிகாரத்தின் அன்பாக' இல்லாமல், 'அன்பின் சக்தி'யாக இருப்பது. நம்மில் பெரும்பாலோர் அதிகாரம் அல்லது சக்தியின் அன்பை அனுபவித்திருக்கிறோம், ஆனால் நம்மில் மிகச் சிலரே அன்பின் சக்தியை அனுபவித்திருக்கிறோம்.

பாபாவை சந்தித்த பின்பு, நானே இந்த முடிவுக்கு வந்தேன்: அன்பின் சக்தியால் நம்மில் பலருக்கு, அவர் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்து, நடைமுறைப்படுத்தி, உத்வேகத்தை அளித்த ஒரு நபர் இங்கே இருக்கிறார். அவருடனான நேர்காணலை எனது வாழ்நாள் முழுவதும் பரிவுடன் பேணி பாதுகாப்பேன்.

ஒரு வாரத்திற்குப் பின்னர், 1964 ஜனவரி 29 அன்று, மூர்த்தி பாபாவை சந்தித்தார். அடுத்த நாள் மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பிய ரமா, 31ஆம் தேதி மெஹர்நாத், ஷீலா, தீரஜ், பிரோஜா ஆகியோருடன் ஆதியின் காரில் மெஹராஸாத் வந்தார். கோர்ஷெத் பிப்ரவரி 9 அன்று வந்து மெஹராஸாத்தில் ஐந்து நாட்கள் தங்கினார்.

ஜனவரி 30 அன்று, (ராய்ப்பூரில் வெளியிடப்பட்ட) 'கைய்டு' (GUIDE) புதிய இந்தி வார இதழுக்காக பாபா இந்தச் செய்தியை வழங்கினார்:

**காலங்காலமாக மனிதர்கள், அமைதி மற்றும் மகிழ்ச்சிக்கான போராட்டத்தில் ஆழமாக ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட்டம்தான் அவர்களைக் குழப்பத்திலும் துயரத்திலும் ஆழ்த்துகிறது. அமைதி, மகிழ்ச்சி இவற்றிற்காக போராட வேண்டியதில்லை; இரண்டும் தனக்குள்ளேயே தேடப்பட வேண்டியவை என்ற உண்மையை மனிதர்கள் உணர்ந்தால், அவர்கள் தங்கள் போராட்டங்களைக் கைவிட்டு, தங்களோடும் உலகத்தோடும் நிம்மதியாக இருப்பார்கள்.**

**நான் உங்களிடையே வந்திருப்பது, கற்பிக்க அல்ல, விழிப்படையச் செய்வதற்காக - போராட்டத்தின் மூலம் அடையப்பெற முடியாத, பேரம் பேசவும், இரவல் வாங்கவும், அள்ளி வழங்கவும் முடியாத, அந்த அமைதியையும் மகிழ்ச்சியையும் மனிதர்களில் எழுச்சியுறச் செய்வதற்காக; ஏனெனில் அது அனைத்திலும், அனைவரிலும் இயல்பாக இருப்பது.**

1964 பிப்ரவரி 18ஆம் தேதி, அமெரிக்காவில் மறுசீரமைக்கப்பட்ட ஸுஃபியிஸத்திற்கு (SUFISM REORIENTED) மெஹர் பாபா இந்தச் செய்தியை வழங்கினார்:

**எல்லா பாதைகளும் என்னுடையவை, எல்லாமே இறுதியில் என்னை நோக்கி வழிநடத்தப்படுகின்றன. ஆனால் என்னைப் பொறுத்தவரை மிகக் குறுகிய வழி, பாதை-என்று-அழைக்கப்படாத, தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் அன்பின் பாதை.**

ஹோஷங் பரூச்சா, 19ஆம் தேதி மெஹராஸாத்திற்கு ஆதியுடன் வந்து, அன்று பிற்பகல் திரும்பிச் சென்றார். ஏற்கனவே அறிவுறுத்தியபடி கஜ்வானி வந்தபோது, அவருக்கு பத்து நிமிட சந்திப்பு வழங்கப்பட்டது. பாபாவின் அறிவுறுத்தலின்படி கடந்த ஏழு மாதங்களாக மௌனம் காத்து வந்த அவர், அன்று காலை பாபாவின் முன்னால் அதைக் கலைத்தார். ராமகிருஷ்ணன் 21ஆம் தேதி வந்தவர், தான் எதிர்கொள்ளும் சிரமங்கள் அனைத்தையும் பாபா முன் வைத்தார்.

இந்த நேரத்தில், பாபா, நோஷிர் ஈரானியை ('ஸாம்' என்று அழைக்கப்பட்டார்) மெஹராஸாத்தில் ஒரு மாதம் தங்க அனுமதித்தார்.

சில பாபா அன்பர்கள் குருபிரசாத்தில் ஒரு கூட்டத்தை நிகழ்த்த வேண்டும் என முன்மொழிந்தனர், ஆனால் பாபா, '**அவர் இல்லாத வேளையில் குருபிரசாத்தை எந்த நிகழ்ச்சிக்காகவும் பயன்படுத்தக் கூடாது**' என்று குறிப்பிட்டார். '**அது அவரது தனிப்பட்ட உறைவிடமாகக் கருதப்பட வேண்டும்.**' ஏப்ரல் மாதத்தில் பாபா, பூனாவிற்குத் திரும்பி வந்தாலும், அந்த மாதத்தில் மக்களைப் பார்க்க மாட்டார் என்றும், அன்பர்கள் மற்றும் பக்தர்களுக்கு 1964 மே

மாதத்தில், குறிப்பிட்ட நாட்களில், நேரங்களில் தரிசனத்திற்கான வாய்ப்பு வழங்கப்படும் என்றும் பாபா சுட்டிக்காட்டினார்.

பென் ஹேமன் (BEN HAYMAN) கடந்த இரண்டு கோடைகாலங்களில் இந்தியா வருவதற்கான கோரிக்கையை வைத்திருந்தார், ஆனால், பாபா அதைத் தள்ளிப் போட்டுக்கொண்டே இருந்தார். இறுதியாக, ஜோஸப் ஹார்ப் போலவே பென் ஹேமனும் மே மாதத்தில் வர அனுமதிக்கப்பட்டார்.

பல அமெரிக்க அன்பர்கள் எலிஸபெத், கிட்டி டேவி மற்றும் மர்டில் பீச் மெஹர் மையத்தின் ரத் வைட் (RUTH WHITE) போன்ற பலர், இந்தியாவிற்கு பயணம் செய்ய அனுமதி கோரி எழுதினர். ஆனால், 1964 பிப்ரவரி 23 ஞாயிற்றுக்கிழமை அன்று, மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்பப்பட்ட இந்த சுற்றறிக்கை, ஒரு வாரத்திற்குப் பின்னர் இந்தியா முழுவதும் வெளியிடப்பட்டது:

**நான் 1964 ஏப்ரல் 1 முதல் ஜூன் 1 வரை, பூனாவில் இருப்பேன். என்னுடைய சொந்த காரணங்களுக்காக, இந்த ஆண்டு எவருக்கும் தரிசனம் வழங்க மாட்டேன். நான் ஓய்வெடுக்கும் நோக்கத்தில் பூனாவிற்குச் செல்வதால், நான் முற்றிலும் தொந்தரவு இல்லாமல் இருக்க விரும்புகிறேன். எனவே, என்னைப் பார்க்கும் நோக்கில் எவரும் இந்தக் கோடையில் பூனாவிற்கு விஜயம் செய்ய வேண்டாம்.**

**எவரும் என்னை அணுகவோ, அணுக அனுமதி கோரவோ கூடாது. நான் பூனாவில் தங்கியிருக்கும் காலகட்டம் உட்பட, இந்த ஆண்டு முழுவதும் எவரும் எனக்கு எழுதவோ அல்லது தொலைத்தந்தி அனுப்பவோ கூடாது; ஆனால் அவசரகாலத்தில், ஒரு தொலைத்தந்தி அனுமதிக்கப்படுகிறது.**

**இந்த ஆண்டு பூனாவில் என்னைப் பார்ப்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உங்களில் பலர், என்னைப் பார்க்க அனுமதிக்கப்படாததால் வருத்தப்படலாம்; ஆனால் எல்லா சூழ்நிலையிலும் எனது தாமனை நீங்கள் உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் முன்பே உங்களிடம் கூறியுள்ளேன் - மேலும் என்னைப் பார்க்காமல் இருப்பதும் பல சூழ்நிலைகளில் ஒன்று.**

**இந்த ஆண்டு, எனது துன்பத்தின் உச்சமாக இருக்கும்; ஆனால் 1965 எனக்கும் என் அன்பர்களுக்கும் ஓர் உன்னதமான ஆண்டாகப் பார்க்கப்படும்.**

முந்தைய ஆண்டு, பாபா தமது பிறந்தநாளைக் கொண்டாடுவதைத் தடை செய்தார்; ஆனால் 1964இல் அத்தகைய தடை இல்லாததால், அனைத்து இடங்களிலும் வாழும் பாபா-அன்பர்கள் அதை பெரிய அளவில் அனுஷ்டிக்கும் ஆர்வத்தில் இருந்தனர்; மேலும் வெவ்வேறு மையங்களில், பல்வேறு ஏற்பாடுகள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. காலத்தைப் பொறுத்தவரை, ஒவ்வோர் ஆண்டும் அவதார புருஷரின் பிறந்தநாளைக் கொண்டாடுவது, உலகம் முழுவதும் விழிப்புணர்வின் கதிர்களை மேலும் பரவச் செய்தது. “ஒளிரும் புன்னகைக்கு

முன்னர் இருளின் சக்திகள் மெதுவாகப் பின்வாங்கி, மனிதகுலத்தின் இதயத்தைப் படிப்படியாக திறக்க அனுமதிக்கிறது."

மெஹராஸாத்தில், முந்தைய ஆண்டுகளைப் போலவே, 1964 பிப்ரவரி 25 செவ்வாய்கிழமை அதிகாலை 5:00 மணியளவில், அனைத்து மண்டலியும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று உரத்த குரலில் கோஷமிட்டு, குருநாதருக்கான 'பர்வர்திகார்' பிரார்த்தனை மற்றும் 'மனம் வருந்தி மொழியும் இரங்கல்' பிரார்த்தனை (MASTER'S AND REPENTANCE PRAYERS) இரண்டையும் மொழிந்தனர். கடிதப் பரிமாற்றத்திற்கு தடை இருந்தபோதிலும், பாபா தமது அன்பர்களை பிறந்தநாள் வாழ்த்து அட்டைகள் மற்றும் தொலைத்தந்திகளை அனுப்ப அனுமதித்தார், ஒவ்வொன்றும் அவர் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. மெஹர்ஜி, படே (BADE), எல்சா மிஸ்திரி ஆகியோர் அன்று ஒரு மணி நேரம் பாபாவை தரிசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

அவரது பிறந்தநாள் செய்தியாக, இந்தத் தொலைத்தந்தி அவரது மேற்கத்திய அன்பர்களுக்கு அனுப்பப்பட்டது: **"நான் அனைத்து மனிதகுலத்திற்காகப் பிறவி எடுத்தாலும், நான் பூமியில் இருக்கும்போது என்னை நேசிப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள்."**

அந்த ஆண்டு இந்தியா முழுவதும் பரவலான கொண்டாட்டங்கள் நிகழ்ந்தன. அஹமதுநகரில் நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது, டாக்கே உரை ஒன்றை நிகழ்த்தினார். மும்பையில் 70 ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது. பூனாவில் நடந்த விழாவில் ஜஷன் வாஸ்வானி (JASHAN VASWANI) தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். கொல்கத்தாவில் டாக்டர் ஸுபோத் சந்திர ராய் (DR. SUBODH CHANDRA ROY), சமீபத்தில் பாபாவை சந்தித்ததைப் பற்றி உரையாற்றினார். ஆந்திரா முழுவதும், குறு நகரங்கள், நகரங்கள் மற்றும் கிராமங்களில் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. மெஹர்ஸ்தான் திறக்கப்பட்டதன் முதலாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், கொவ்வூரில் மூன்று நாள் விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்தினர் மாளிகைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது, கோடூரி கிருஷ்ணராவ் ஏற்பாடு செய்த ஏழைத் திட்டத்திற்கு பெரிய அளவில் உணவு வழங்கப்பட்டது. டெல்லியில், பாபாவின் பிறந்தநாள் ஏழு நாட்கள் கொண்டாடப்பட்டது, மேலும், 25ஆம் தேதி இரவு 10:00 மணிக்கு, விழாவின் ஒரு பகுதி அகில இந்திய வானொலியில் இந்தியா முழுவதும் ஒலிபரப்பப்பட்டது. பாபா வழக்கம் போல் இதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு தனது அறைக்குச் சென்றார், ஆனால் ஒலிபரப்பைக் கேட்டுக் கொண்டிருந்த மண்டலி, அமர் ஸிங் ஸைகல் நிகழ்ச்சியின் போது குருநாதருக்கான 'பர்வர்திகார்' பிரார்த்தனையை (இந்தியில்) மொழிந்ததாக பாபாவிற்குத் தெரிவித்தபோது, அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

இந்தக் காலகட்டத்தில், 21 வயதான ஜெனட் மெக்கால்பின் (JANET McALPIN), ஆஸ்திரேலியாவில் வாழும் ஆஸ்வால்ட் ஹால் (OSWALD HALL) மூலமாக

பாபாவைப் பற்றி தெரிந்துகொண்டார். அவர் ஒரு கல்லூரி மாணவர் குழுவுடன் இந்தியா வர இருந்தார்; மேலும் 1964 பிப்ரவரி தொடக்கத்தில் அவரது கல்விப் பொறுப்புகள் நிறைவடைந்ததும், அவர் மும்பையில் வாழும் நரிமன், அர்னவாஸ் இருவரையும் தொடர்பு கொண்டார். இந்த சந்திப்பதற்கான வேண்டுகோளை முன்வைத்து, பாபாவிற்கு செய்திகள் அனுப்பப்பட்டன. பாபா ஏகாந்தவாசம் மேற்கொண்டதால், அவரை சந்திப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை; ஆனால், ஏப்ரல் மாதத்தில் அவரைப் பார்க்கலாம் என்று அவர் சூசகமாக வெளிப்படுத்தியிருந்தார் (இருந்தும் அது நடக்கவில்லை). மாறாக, ஆந்திராவில் நிறுவப்பட்ட மெஹர்ஸ்தானில் தரிசனம் செய்யுமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார், அங்கு அவர் எப்பொழுதும் இருப்பதாகக் கூறினார்.

கொவ்வூரில் நடந்த பிறந்தநாள் நிகழ்ச்சியின் போது, ஜெனட் மெக்கால்பின் தான் பாபாவிடம் வந்ததைப் பற்றி குறிப்பிட்டார்; மேலும், தான் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் பாபாவின் 'தெய்வீகப் பிரசன்னத்தை' அங்கு உணர்ந்ததாகவும் கூறினார். கொவ்வூருக்குச் சென்றபின், பாபாவின் அறிவுறுத்தலின்படி, விஜயவாடாவிற்குச் சென்ற அந்த இளம் பெண், அங்கு பாபாவின் பிறந்தநாள் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தார். (ஆந்திராவில் இருந்தபோது அவர் தொலைதூரத்திலிருந்து வருகை தந்த 'அன்பின் தூதராக' காட்சிப்படுத்தப்பட்டாலும், அதை அவர் மிகவும் குறைவாகவே உணர்ந்ததாக வேடிக்கையாக நினைவுகூர்ந்தார்.) அவர் டெல்லி, நாக்பூர் மற்றும் பூனாவில் வாழும் பாபா-அன்பர்களை சந்தித்து, மையங்களுக்கும் சென்றார்.

1956 ஆகஸ்ட் மாதத்தில் ஆஸ்திரேலியாவில் ஆஸ்வால்ட் ஹாலுடன் பாபா காரில் சென்றுகொண்டிருந்தபோது, பாபா, ஒரு சிறுமி குதிரையில் சவாரி செய்வதை சுட்டிக் காட்டினார். ஏழு ஆண்டுகளுக்குப் பின்பு, ஜெனட் மெக்கால்பினை ஆஸ்வால்ட் சந்தித்து, பாபாவைப் பற்றி கூறியபோது, அவர் தனது நாட்குறிப்பைப் பார்த்து, பாபா கடந்து சென்ற அந்த நாள், எல்தாமில் (ELTHAM) ஜெனட் குதிரையில் சவாரி செய்ததைக் கண்டுபிடித்தார்!

ஜால்பாய், 1964 மார்ச் 8 ஞாயிற்றுக்கிழமை அன்று பாபாவை சந்தித்தார். அதே நாள் பிற்பகல் 3:00 மணிக்கு, ஆதி, ஸரோஷ், விலூ ஆகியோருடன் திருமதி மிர்ஸா (MRS. MIRZA), பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். பாதிரி கிணறு பம்ப் மற்றும் தண்ணீர் குழாய்களை பராமரிக்க வழக்கம்போல் அன்று வந்தார். மெஹராபாத் மேல்மலையில் வாழும் மன்ஸாரி மற்றும் கைக்கோபாத்தின் மனைவி, மகள்கள், மார்ச் 21 அன்று மெஹராஸாத்தில் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

டாக்டர். பீடெர்ஸனும் (DR. PEDERSEN) அவரது குடும்பத்தினரும் ஆஸ்திரேலியாவிற்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், பூத் மருத்துவமனையில் (BOOTH HOSPITAL) அவருக்கு பதிலாக டாக்டர். பி.ஏ. ஸௌத்வெல் (DR.B.A. SOUTHWELL), ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தவர், கோஹெருக்கு அறிமுகமான அவர் மெஹராஸாத்திற்கு வர

அனுமதிக்கப்பட்டார். இரண்டு மருத்துவர்களும் 1964 மார்ச் 22 ஞாயிற்றுக்கிழமை அன்று, ஆதியால் அழைத்து வரப்பட்டு, பாபாவின் சகவாசத்தில் அரை மணி நேரத்தைக் கழித்தனர்.

ஸரோஷ், விலூ இருவரும் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில், ஹமிர்பூர் மாவட்டம் நௌரங்காவில் நடந்த மேளாவில் கலந்து கொண்டனர். 1964 பிப்ரவரி தொடக்கத்தில், பாபா அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்து, மார்ச் 23 அன்று 'மெஹர் தாம்' என்ற பெயரில் கட்டி எழுப்பிய புதிய மையம் ஒன்றைத் திறப்பதற்காக, டெஹ்ரா டூனுக்கு அவரது பிரதிநிதியாகச் செல்லுமாறு கூறினார்.

தம்பதியினர் அதற்கு இணக்கம் தெரிவித்து, காரில் புறப்பட்டு மார்ச் 21ஆம் தேதி டெஹ்ரா டூனுக்கு வந்தனர். 1953ஆம் ஆண்டு டெஹ்ரா டூனில் பாபாவின் முதல் பொது தரிசனத்தின் தேதியுடன் இந்தத் திறப்பு விழாவும், ஒவ்வோர் ஆண்டும் அந்த நிகழ்வின் நினைவாக மேளாவும் நடத்தப்படுகிறது. குருநாதரின் 'பர்வர்திகார்' பிரார்த்தனையை (PARVARDIGAR PRAYER) பிரகாஷ்வதி இந்தி மொழியில் வானொலியில் மொழிந்ததை, மெஹராஸாத்தில் பாபாவும் கேட்க நேர்ந்தது. அந்த நேரத்தில் பாபாவின் உருவச்சிலையும் திறக்கப்பட்டது.

பல அன்பர்களும், பக்தர்களும் டெஹ்ரா டூன், 'மெஹர் தாம்' திறப்புவிழாவிற்கு வந்தனர்; ஸரோஷ், பாபாவின் கீழ்வரும் செய்தியை வாசித்தார்:

**மெஹர் மகிமையின் சுடரில் எரிவதற்காக, ஒன்றுதிரண்டு இருக்கும் விட்டில் பூச்சிகளான உங்கள் அனைவருக்கும், என் அன்பை வழங்குகிறேன்; தங்களை முழுவதுமாக எரித்துக்கொண்டவர்கள், எனது 'தாம்' எனும் உறைவிடத்தை வந்தடைவதில் ஆர்வமாக உள்ளனர்.**

ஸரோஷ், விலூ இருவரும், புது வாழ்வின் போது, பாபா தங்கியிருந்த டெஹ்ரா டூனில் அமைந்த 'மெஹர் மாஃபி'க்கு (MEHER MAFI) விஜயம் செய்தனர். கீழ்வரும் தொலைத்தந்தி பாபாவால் அங்கு அனுப்பப்பட்டது:

**மெஹர் மாஃபியில் வாழும் எனது 'பிரியமான பக்தர்களுக்கு'** (PREM BHIKHUS - பிரேம் பிக்குகள்) **என் அன்பை வழங்குங்கள், மேலும் என் அன்பின் பொக்கிஷங்களால் அவர்களின் இதயங்களின் பணப்பைகளை நிரப்புமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.**

முன்னர் இந்த கிராமம் 'மஞ்சரி மாஃபி' (MANJRI MAFI) என்று அழைக்கப்பட்டது, ஆனால் டெஹ்ரா டூனில் வாழும் குமார் அதிகாரப்பூர்வமாக இதை 'மெஹர் மாஃபி' என்ற பெயருக்கு மாற்றினார், அது இன்றும் இந்த பெயரிலேயே அறியப்படுகிறது.

23ஆம் தேதி ('மெஹர் தாம்' திறப்பு விழா தினமான அன்று), மெஹராஸாத்தில் அசாதாரணமாக ஒன்று நிகழ்ந்தது. பாபா, ஏழு முறை ஆதியின் பாதங்களில் தலை வணங்கி, அவர் குருபிரசாத்தில் தங்கி இருக்கும் மூன்று மாதங்களில் **'ஒருமுறை ஷிர்டிக்குச் சென்று, சாய்பாபாவின்**

**சமாதியை வணங்கி, 'மெஹர் பாபாவின் சார்பாக இந்த ஏழு தலைவணங்கல்களையும் சமர்ப்பணம் செய்கிறேன்' என்று மனதளவில் திரும்பத் திரும்ப மொழியுமாறும்**' அறிவுறுத்தினார்.

இந்த நேரத்தில் குமார், மெஹர் மா:ஃபியில் அமைந்த அவரது இல்லத்திற்கு வருபவர்களை கவனிப்பது மட்டுமின்றி, பாபாவின் நேர்மையற்ற முன்னாள் சீடரான கிருஷ்ணாஜியைக் கையாளுவதிலும் மும்முரமாக இருந்தார். கிருஷ்ணாஜி சத்தாராவில் இருந்தபோது, பாவ் கல்சூரி மற்றும் பிற மண்டலியிடம் முறைகேடாக நடந்து கொண்டார், மேலும் 1956இல் பாபா, கிருஷ்ணாஜிக்கு சலுகைகள் வழங்கியதை நிறுத்தியபோது, அவரை விட்டு வெளியேறினார். 1962இல் கிருஷ்ணாஜி, டெல்லியில் தனது இருப்பிடத்தை அமைத்து, மெஹர் பாபாவின் பொறுப்பாளர் என்று கூறத் தொடங்கினார். அவர் மௌனம் கடைப்பிடித்ததோடு, மெஹர் பாபாவின் கட்டளைகளைப் பின்பற்றுவதாக பிறரிடம் (எழுத்துப்பலகை மூலமாக) கூறினார். பாபாவின் பெயரில் அவர் செய்த கோமாளித்தனங்கள் அனைத்தும், அவரை அணுகுபவர்களை தன்வசப்படுத்துவதற்காகவே இருந்தன; மேலும் அவர் ஒரு வருடத்திற்கும் மேலாக இவ்வாறு போலி வேடம் போட்டுக் கொண்டிருந்தார். அவரது நடத்தை குறித்த அறிக்கைகள் வாஸ் தேவ் கெய்ன் (WAS DEO KAIN) மற்றும் மனோகர்-மோனா ஸாக்கரே (MANOHAR-MONA SAKHARE) ஆகியோரால் பாபாவிற்கு அனுப்பப்பட்டது. ஒரு கட்டத்தில், எரச், குமாருக்கு இவ்வாறு எழுதினார்:

"...தெரிந்தே அப்பாவி மக்களை முட்டாள்களாக்க கிருஷ்ணாஜியை அனுமதிப்பது மிகவும் விரும்பத்தகாதது. மெஹர் பாபாவின் பெயரில், கண்முன்னே நடக்கும் அட்டூழியங்களும், கிருஷ்ணாஜி போன்றவர்களின் ஒவ்வோர் அவதூறான அணுகுமுறையையும் பாபா-அன்பர்கள் பொறுத்துக்கொள்ள முடியாத அளவுக்கு இப்போது, துர்நாற்றம் குமட்டலை ஏற்படுத்துகிறது.

"பாபாவின் மௌனத்தை பொய்யாக நையாண்டி செய்து, கிருஷ்ணாஜியைப் போல் ஒருவர் நடந்துகொள்ளும்போதும், மெஹர் பாபாவின் வழிகாட்டுதலின் கீழ், அவர் எழுத்துப்பலகையைப் பயன்படுத்துவதாகக் கூறும்போதும், அதுவே பாசாங்குத்தனத்தின் உச்சம் என்று கூறலாம். கிருஷ்ணாஜியிடம், ஒரு போலி துறவியின் பாத்திரத்தில் மக்களை ஏமாற்றக் கூடாது (பாபாவை சந்திப்பதற்கு முன்பு, பாபாவிடம் ஒப்புக்கொண்டதற்கு இணங்க) பாபாவின் மீது பணிவும் அன்பும் கொண்ட தூய்மையான, நேர்மையான வாழ்க்கை வாழவேண்டும் என்பதைத் தவிர பாபா வேறு எதையும் கூறவில்லை.

"சுருக்கமாகச் சொன்னால், 'அவர் விரும்பும் எந்த வாழ்க்கையையும் வாழ அவருக்கு முழு சுதந்திரம் உள்ளது' என்று இந்த ஏமாற்றுக்காரரிடம் அவர் நம்பும் வகையில் மூளையில் பதியவைக்கும் அதே வேளையில், அவர் மெஹர்

பாபாவின் பெயரை வீணாக எடுத்துக்கொள்வதை நிறுத்த வேண்டும், பாபாவின் பெயரில் வர்த்தகம் செய்வதை உடனடியாகக் கைவிட வேண்டும்."

முழு விவகாரத்தின் உச்சக்கட்டம் 1964 மார்ச் 10 அன்று இரவு 9:00 மணியளவில், குமார், கிருஷ்ணாஜியைப் பார்க்கச் சென்றபோது நிகழ்ந்தது. குமார், அவர்கள் சந்தித்த அறையின் கதவைத் தாழ்ப்பாளிட்டு, கிருஷ்ணாஜியிடம் ஏன் இவ்வளவு நேர்மையற்ற முறையில் நடந்து கொள்கிறீர்கள் என்று கேட்டு பலமாகப் பல அறைகளைக் கொடுத்தார். கிருஷ்ணாஜியைப் 'பின்பற்றுபவர்கள்' கதவை வலுக்கட்டாயமாகத் திறந்து, உள்ளே நுழைந்தபோது, குமார் அவர்களின் முன்னிலையில் மீண்டும் இரண்டு அல்லது மூன்று அறைகளைக் கொடுத்தார் - இது கிருஷ்ணாஜியை மேலும் சீற்றமடையச் செய்தது.

குமாருடன் நடந்த சம்பவத்திற்குப் பிறகு, கிருஷ்ணாஜி, குமாரைக் கண்டித்து, தன்னைத் தற்காத்துக் கொள்ளும் நோக்கத்தில், சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டார். இதற்கு பதிலளிக்கும் விதமாக, 1964 ஏப்ரல் மாதத்தில், ஆதி, உண்மையை சித்தரிக்கும் அவரது சொந்த அறிக்கை ஒன்றை வெளியிட்டார். கிருஷ்ணாஜி மீது அவதூறு வழக்கு சுமத்தி நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்ல குமார் நினைத்தார்.

அந்த வருடத்தின் பிற்பகுதியில், குமார், மெஹெராஸாத்தில் பாபாவை சந்தித்தபோது, பாபா அவரிடம் கேட்டார், **"ஏன் அங்குச் சென்று, கிருஷ்ணாஜியை அடித்தீர்கள்? இப்போது வேண்டாத சிக்கல்கள், இத்தனை சுற்றறிக்கைகள், எத்தனை கடிதங்கள், எவ்வளவு குழப்பங்கள்!"**

குமார், மண்டலி மண்டபத்தில் பலகையில் எழுதப்பட்டிருந்த (மராட்டியில்) துக்காராமின் ஈரடிக் கவிதையைச் சுட்டிக்காட்டினார், அதில் **'பொய்யும், போலியுமான ஒரு துறவியை அடித்து, உதைப்பது பாவமில்லை'** என்று குறிப்பிடப்பட்டிருந்தது. குமார், "இதோ இங்கே உங்கள் தர்பாரில் நீங்கள் அத்தகைய அடையாளச் சின்னங்களை வைத்துள்ளீர்கள். அந்தக் கருத்தைதான் நானும் பின்பற்றினேன்!" பாபா லேசாக, குறும்புத்தனம் நிறைந்த புன்முறுவலை வெளிப்படுத்தி, ஆனால் **'கிருஷ்ணாஜியை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும் யோசனையைக் கைவிடுமாறு'** குமாருக்கு அறிவுறுத்தினார்.

# பூனா, குருபிரசாத் - ஏகாந்தவாசம், தரிசனம்.

(**Seclusion & Darshan In Pune, Guruprasad**)

1964 ஏப்ரல் 1 அன்று காலை 7:30 மணிக்கு, பாபா ஆண், பெண் மண்டலியுடன் மெஹராஸாத்திலிருந்து பூனாவிற்குப் புறப்பட்டார். வழியில், பாபா (எரச், பாவ் கல்சூரி, பெண்டு, ஃபிரான்சிஸ் ஆகியோருடன் ஆதியின் காரில்) முதலில் அஹமதுநகரில் (டி-3 ஜேம்ஸ் சாலையில் - T-3 JAMES ROAD) லதா லிமாயேயின் இல்லத்திற்குச் சென்ற வேளையில், லதா ஒரு கஸல் பாடி, பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தினார்; பாபாவின் புகைப்படமும் எடுக்கப்பட்டது. சகன் மற்றும் பலர் உடனிருந்தனர். பக்கத்து வீட்டில் வாழ்ந்து வந்த பிற இரண்டு பாபா-அன்பர்கள், ரகுநாத் மற்றும் ஜான்கி பட்வர்தன் (RAGHUNATH AND JANKI PATWARDHAN) ஆகியோர், பாபாவை தங்கள் வீட்டிற்கும் வருமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்கி, பாபா அங்கும் விஜயம் செய்தார். பின்பு பாபா குஷ்ரு குவார்ட்டர்ஸுக்குச் சென்றபோது, அங்கு ஏறக்குறைய 100 அஹமதுநகர் அன்பர்கள் ஒன்றுதிரண்டனர். பிரேம் கில்னானி தனது மனைவி மற்றும் மகன்களுடன், அதுபோல ரமா, ஷீலா, மெஹர்நாத் கல்சூரி ஆகியோரும் குஷ்ரு குவார்ட்டர்ஸில் வசித்து வந்தனர். கில்னானியின் மகன்கள், வினோத் (VINOD), ராஜ் (RAJ) இருவரும், ஓர் அறையில் பாபா மையத்தை உருவாக்கியது போல, மற்றுமோர் அறையில் மெஹர்நாத்தும் சிறிய மையம் ஒன்றை உருவாக்கி இருந்தார். பாபா முதலில் கல்சூரியின் இல்லத்திற்குச் சென்று, அங்கு அவர் மெஹர்நாத் உருவாக்கிய மையத்தின் கதவின் குறுக்கே கட்டப்பட்டிருந்த நாடாவை வெட்டி, உள்ளே சென்று அமர்ந்து மெஹர்நாத்திடம், **“உங்கள் மையத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்?”** என்று கேட்டபோது, ரமா குறுக்கிட்டு, மெஹர்நாத் வேறு எவரையும் அந்த அறைக்குள் நுழைய அனுமதிக்கவில்லை என்பதை பாபாவிடம் விளக்கினார்.

**“நீங்களும் ஷீலாவும் கூட இல்லையா?”** என்று பாபா கேட்டார்.

“எவரும் இல்லை,” அவர் பதிலளித்தார்.

பாபா மீண்டும் மெஹர்நாத்திடம் கேட்டார், **“அப்படியானால் உங்கள் மையத்தில் யார் வாழ்கிறார்கள்?”**

“நீங்களும், நானும் பாபா!” சிறுவன் பதிலளித்தான்.

பாபா மிகவும் மகிழ்ந்து, **“இனி ஆரத்தி யார் நிகழ்த்துவார்கள்?”** என்று கேட்டபோது, மெஹர்நாத், ஷீலா இருவரும் இணைந்து ஆரத்தி பாடினர்; பாபா அவர்களைத் தழுவி பிரசாதம் வழங்கி, பிறகு, வினோத் மற்றும் ராஜ் கில்னானியின் மையத்திற்குச் சென்று அவர்களையும் தழுவினார். அவர் காரில் அமர்ந்ததும், அவரது அஹமதுநகர் அன்பர்கள் ஒவ்வொருவரும் முன் வந்து அவர் புறப்படுவதற்கு முன்னர் அவரது கையை முத்தமிட்டனர்.

அக்பர் அச்சகத்திற்கு வெளியே அமைந்த சாலையில், பாபாவைப் பார்ப்பதற்காக ஸட்டா குடும்பம் முழுவதும் கூடி நின்றது. தூன், ஷிரின்மாய் ஸட்டா இருவரும் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தனர். தூன் சிறுவயதிலிருந்தே ஊனமுற்றவராக இருந்தார்; ஷிரின்மாயும் இப்போது கடுமையான மூட்டுவலி காரணமாக நடக்க முடியவில்லை. பாபா அவர்களின் அன்பை ஏற்கவும், புன்னகையால் அவர்களை ஆசீர்வதிக்கவும் சிறிது நேரம் அங்கு நின்றபோது, அவர்கள் ஒவ்வொருவரும் அவரது கையை முத்தமிட்டனர்.

பாபாவின் கார் அஹமதுநகர் ரயில் நிலையத்தைக் கடந்ததும், 20 அரன்காவ்ம் கிராம மக்கள் சாலையோரம் கூடியிருந்தனர். மீண்டும் அவரது 'ஜெய்' முழக்கங்களுக்கு மத்தியில் கார் நிறுத்தப்பட்டது! ஒவ்வொரு கிராமவாசியும் பாபாவின் கையை முத்தமிட்ட பிறகு, பாபா, மண்டலியுடன் பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். சிறிது தூரம் சென்றதும், பாபா பெண் மண்டலியுடன் மெஹர்ஜியின் காரில் அமர்ந்தார்; ஷேக், ஆதியின் காரை ஓட்ட, ஆதி, பாபாவின் காரை ஓட்டிச் சென்றார்.

ஒவ்வோர் ஆண்டும் பாபா குருபிரசாத்திற்கு வருவதற்கு முன்பு, மெஹர்வான், கெய்மாய், மனு ஜெஸவாலா, ஜெஹாங்கு, குல்னார் ஸுகத்வாலா ஆகியோர் அரண்மனையை சுத்தம் செய்து, அனைத்தையும் ஒழுங்குபடுத்துவது வழக்கம். இருப்பினும், பாபா வரும் வேளையில் மெஹர்ஜி, மெஹர்வான், ஜெஹாங்கு ஆகியோரைத் தவிர வேறு எவரும் அவரை வரவேற்க அனுமதிக்கப்படவில்லை.

காலை 11.30 மணிக்கு பாபா குருபிரசாத் வந்தார். அன்று காலை, வழக்கத்தை விட அதிக படிகள் அவர் நடந்து சென்றதால், சோர்வுற்ற பயணத்தின் இறுதியில் அவரது இடுப்புப் பாகம் வலித்தது, எனவே ஆண்கள் அவரை, தூக்கு நாற்காலியில் குருபிரசாத்தின் படிகளில் தாங்கிச் சென்றனர். பூனாவில் பாபா தங்கியிருந்த காலத்தில் எப்பொழுதும் போல், காக்கா மெஹராஸாத்தின் பொறுப்பாளராக அங்குத் தங்கி இருந்த அதே வேளையில், கைக்கோபாத் தனது குடும்பத்துடன் தங்குவதற்காக மெஹராபாத் மேல்மலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். 1963இல் பைதூலின் இதயக் கோளாறு காரணமாக, பாபா, பைதூலை மும்பையில் வாழ்ந்த அவரது மகள் ஸர்வார் தாராபூர்வாலாவின் இல்லத்தில் தங்க அனுப்பி வைத்தார். (அதன் பின்னர் ஒவ்வோர் ஆண்டும் பாபா, பைதூலை அவரது மகளின் இல்லத்திற்கு அனுப்பினார், மேலும் சில வாரங்கள் பூனாவில் அவரது இரண்டாவது மகள் டவ்லா மற்றும் அவரது மனைவி ஸொல்டூனுடன் தங்கியிருக்க அனுமதித்தார்.) குருபிரசாத்தில் பாபாவுடன் தங்கியிருந்த ஐந்து ஆண் மண்டலி: எரச், பெண்டு, அலோபா, பாவ் கல்சூரி மற்றும் ஃபிரான்சிஸ். பாபாவுடன் வந்த ஆறு பெண் மண்டலி: மெஹரா, மணி, கோஹெர், மெஹரு, ரானோ மற்றும் நாஜா. வழக்கம் போல நாஜா உணவு தயார் செய்ய பிந்த்ரா ஹவுஸில் தங்கினார்.



ருஸ்தம் அல்லது ஸொராப், கோர்ஷெத், எரச்,
ஜெஹாங்கிர் ஸுகத்வாலா, மெஹர்ஜி
(RUSTOM OR SOHRAB, KORSHED, ERUCH,
JEHANGIR SUKHADWALLA, MEHERJEE)

ஒவ்வொரு வருடமும் நானா கேர் நாக்பூரிலிருந்து வந்து, மூன்று மாதங்கள் மண்டலியுடன் குருபிரசாத்தில் தங்குவது உண்டு; மேலும் பால் நாத்து தனது பள்ளி விடுமுறை காலத்தில், ஐந்து அல்லது ஆறு வாரங்களுக்காக வருவது வழக்கம். மும்பையிலிருந்து, கோர்ஷெத் மூன்று மாதங்கள் தங்க அனுமதிக்கப்பட்டார். நரிமன், ஜிம் மிஸ்திரி இருவரும் ஒவ்வொரு வார இறுதியிலும் வருவதை வழக்கமாகக் கொண்டனர். இந்த ஏற்பாடுகள் பாபாவின் இறுதி காலம் வரை, அவர் பூனாவில் வசித்து வந்த போதெல்லாம் தொடர்ந்தது.

பெரும்பாலும், பாபா குருபிரசாத்தில் தமது ஏகாந்தவாசத்தில் முழு வீச்சில் ஈடுபட்டார்; வெளிநபர்கள் எவரையும் பார்க்க அனுமதிக்கவில்லை. இருப்பினும் சதாஷிவ் பாட்டீல், மெஹர்ஜி, மெஹர்வான் ஜெஸவாலா, ஜால்பாய், பெஹராம், ஷெரூ, ருஸ்தம், ஸொராப், ஜெஹாங்கு ஆகியோரின் வருகைக்கு எதிராக எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. ஆனால், இவர்களில் பெரும்பாலான ஆண்களுக்கு அலுவலக பணிகள் இருந்ததால், ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே வருவது வழக்கம். அப்போது மதுசூதன், ராமகிருஷ்ணன், பிரதாப், நரேந்திரன், கிஸன், காம்ப்ளே, ஷிண்டே, போட்டே போன்ற பல அன்பர்களை பாபா சீட்டு விளையாட அழைப்பது அவ்வப்போது நடந்தது. பெகு (PEGU) என்ற ஸியாமி பூனையும் பாபாவின் மிகையான கவனத்தைப் பெற்றது. எனவே, பாபாவின் ஏகாந்தவாச பணி தொடர்ந்ததால், அந்தக் கோடையில் குருபிரசாத்தின் சூழல் அமைதியாக, சலசலப்பின்றி இருந்தது.

இந்தக் காலகட்டத்தில், பாவ் கல்சூரி ஒரு மணி நேரம், மாலை 3:00 முதல் 4:00 மணி வரை, தனது எழுத்துப் பணியைத் தொடர்ந்த அவ்வேளையில், மெஹர்ஜி, பாபாவின் கண்காணிப்பு பணியை செய்துவந்தார். இந்த அட்டவணை அடுத்த சில ஆண்டுகளுக்கு தொடர்ந்தது.

ஒரு நாள் மெஹர்ஜி, பாபாவின் படுக்கையறையிலிருந்து மாலை 3:30 மணிக்கு வெளியே வந்தவர், நேராக பாவ் கல்சூரியைக் கடந்து எரச்சிடம் சென்றார். பாவ் கல்சூரி அவரைப் பார்த்ததும், மெஹர்ஜி ஏதேனும் செய்தியை வழங்க வந்திருக்கக்கூடும் என்று நினைத்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா கைகளைத் தட்டினார்; கோஹெர் அவரிடம் விரைந்தபோது **“பாவ் எங்கே? நான் அவரை வருமாறு அழைத்தேன். அவர் ஏன் வரவில்லை?”** என்று கேட்டார்.

பாவ் கல்சூரிக்கு கோஹெர் இதைத் தெரிவித்ததும், அவர் பாபாவின் அறைக்குள் நுழைந்தார். பாபா அதிருப்தியில், **“நீங்கள் ஏன் வரவில்லை? நான் உங்களுக்காகக் காத்திருக்கிறேன். நான் உங்களை உடனடியாக அழைத்ததாக மெஹர்ஜி கூறவில்லையா?”** என்று கேட்டார்.

“இல்லை பாபா, அவர் எதுவும் கூறவில்லை.”

பாபா, மெஹர்ஜியை அழைத்து, **“ஏன் பாவை என்னிடம் வரச் சொல்லவில்லை?”** என்று கேட்டார்.

“நான் மறந்துவிட்டேன்,” மெஹர்ஜி பதிலளித்தார். “ஆனால் நான் ஏன் உங்கள் அறையிலிருந்து சீக்கிரமாக வெளியே சென்றேன் என்று கேட்பது பாவ் கல்சூரியின் பொறுப்பு.” பாபா அதற்கு உடன்பட்டு, அதைப் பற்றி மெஹர்ஜியிடம் கேட்காததற்காக பாவ் கல்சூரியைக் கடிந்து கொண்டார். அன்று முதல், மெஹர்ஜி அவரது கண்காணிப்புப் பணியை நிறைவு செய்து வரும் நேரத்தில், பாவ் கல்சூரி வராண்டாவில் வெளியே காத்திருந்து, மெஹர்ஜி சென்ற அடுத்த நிமிடம் பாபாவிடம் செல்ல வேண்டியிருந்தது.

கண்காணிப்பாளர் மாறியதும், பாபா அயர்ந்து தூங்குவது போலத் தோன்றினாலும், திடீரென, ‘**என்ன ஆரவாரம்**’ என்று தனது விரல்களை நகர்த்தி சைகையால் கேட்பதுண்டு. கண்காணிப்புப் பணி முடிந்து புறப்படும் நபர், தொடர்ந்து கண்காணிக்கும் நபரின் காதில், பாபா எத்தனை நிமிடங்கள் குறட்டை விட்டுள்ளார் என்று கிசுகிசுப்பது அன்றாட பழக்கம், ஏனெனில் பாபா ஒவ்வொரு காலையிலும் அவர் உண்மையில் எவ்வளவு நேரம் தூங்கினார் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினார். ஆனால் பாபாவின் ‘தூக்கம்’ மிகவும் வித்தியாசமான ஒன்று. கடைசியாக அவர் தூங்கிவிட்டார் என்று தோன்றிய அந்த கணத்தில், அவர் திடீரென தன் அன்பர் ஒருவரைப் பற்றி கேட்பதும், அந்த நபரின் குடும்பம், குழந்தைகள் மற்றும் பொது நலன் பற்றி விசாரிப்பதும் என்றென்றும் நடந்தது; அல்லது, பாகிஸ்தானில் வாழும் ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றியும், அவர் விண்ணப்பித்த வேலை அவருக்குக் கிடைத்ததா என்றும் கேட்டு, மறுநாள் அந்த நபருக்குக் கடிதம் எழுதி விசாரிக்குமாறு பாபா, பாவ் கல்சூரிக்கு அறிவுறுத்தியதும் உண்டு; அல்லது பாபாவிற்கு மட்டுமே தெரிந்த சில தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி எவருக்கேனும் ஒரு குறிப்பை எழுதுமாறு கண்காணிப்பாளரிடம் கூறுவதும் அவ்வப்போது நடந்தது - ஒவ்வோர் இரவும் இப்படித்தான் கழிந்தது - இறை-மனிதன் மிகவும் குறைவாகவே தூங்குகிறார், உலகின் அனைத்து பகுதிகளிலும் வாழும் தனது அன்பர்களை நினைத்து, சந்தேகத்திற்கு இடமின்றி, அவருக்கே உகந்த வழியில், அவர்களின் நலனைக் கருத்தில் கொள்கிறார்.

பூனாவில் கடும் கோடையிலும் பாபாவின் அறையின் கதவுகளும் ஜன்னல்களும் அவரது விருப்பத்திற்கிணங்க இறுக்கமாக மூடப்பட்டன. அவரது அறைக்குள், ஒருவர் உலை அடுப்பின் உள்ளே உட்கார்ந்து இருப்பது போல் உணர்ந்தார்! நீண்ட நேரம் உள்ளே இருப்பது திணறடிப்பது போன்ற உணர்வை தந்தது. பாபா ஜன்னல்களை சிறிதளவும் திறப்பதைக் கூட அனுமதிக்க மாட்டார், கண்காணிப்பாளர் அசௌகரியத்தால் திகைத்துப் போவதுண்டு. ஆனால் குளிர்காலத்தில், ஒருவர் கதகதப்பாக உணர கம்பளி போர்வைகளை பயன்படுத்தும் அதே வேளையில், பாபா ஒரு மெல்லிய போர்வையை மட்டுமே பயன்படுத்தினார், அதுவும் வியர்வையால் நனைந்துவிடும். வியர்வை காரணமாக அவரது தலையணைகள் மற்றும் படுக்கை விரிப்புகளை அடிக்கடி மாற்ற வேண்டியிருந்தது.

பூனாவில் அந்த ஆண்டு சுட்டெரிக்கும் கோடைக்காலம் ஆதலால், இரவில் கூட வெப்பமாக இருந்தது. ஒரு முறை, பாவ் கல்சூரி, இரவுக் கண்காணிப்புப் பணியில் இருந்தபோது, அவர் பாபாவின் அறையின் ஒரு மூலையில் அமர்ந்து, வியர்வையில் நனைந்து கொண்டிருந்தார்; பாபாவும் படுக்கையில் வியர்த்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து, பாபா எழுந்து அமர்ந்து, "**என்ன யோசிக்கிறீர்கள்?**" என்று கேட்டார்.

பாவ் கல்சூரி, "ஒன்றுமில்லை, பாபா" என்று பதிலளித்தவர், வெளியே தாங்க முடியாத வெப்பம் மற்றும் பாபாவின் அறைக்குள் வெப்பம் இன்னும் அதிகமாக இருப்பதாக அவர் நினைத்தார். 'பாபா ஏன் இரவு ஓய்வு பெறும் வேளையில், அனைத்து கதவுகள், ஜன்னல்கள் மற்றும் காற்று துவாரங்களை மூட விரும்புகிறார்?' என்று பாவ் கல்சூரி ஆச்சரியப்பட்டார்.

பாபா அவரைப் பார்த்து, "**இன்றிரவு எனக்கு மிகவும் குளிராக இருக்கிறது**" என்று கூறினார்.

பாவ் கல்சூரி திடுக்கிட்டு, உடனே பதிலளித்தார், "இல்லை, பாபா, இங்கே மிகவும் சூடாக இருக்கிறது!"

"**நான் கூறுகிறேன் இங்கு மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறது**" என்று பாபா வலியுறுத்திக் கூறி, "**இன்றிரவு மிகவும் குளிராக உள்ளது!**" என்று பலமுறை திரும்பத் திரும்ப கூறிக்கொண்டே இருந்தார்.

"பாபா, உண்மையில் உஷ்ணமாக உள்ளது. எவரிடமேனும் கேளுங்கள். நான் மிகவும் உஷ்ணமாகவும், அசௌகரியமாகவும் உணர்கிறேன்" என்று பாவ் கல்சூரி வாதாடினார். ஆனால் பாபா, '**எவ்வளவு குளிராக இருக்கிறது**' என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே இருந்தார்.

இறுதியாக, பாபா சோர்ந்து போய், பாவ் கல்சூரியிடம் கேட்டார், "**என்னை என்னவாக எடுத்துக்கொள்கிறீர்கள்?**"

பாவ் கல்சூரி பதிலளித்தார், "நீங்கள் கடவுள்."

"**நீங்கள் என்னைக் கடவுளாக எடுத்துக்கொள்கிறீர்கள், இருந்தும் நான் சொல்வதை நீங்கள் நம்பவில்லை! நான் ஏக இறைவனான உண்மைப்பொருள் என்றால், நான் கூறுவதுதான் உண்மை! உண்மைப்பொருள் ஒருபோதும் பொய் பேச முடியாது. உண்மை எப்பொழுதும் உண்மையே பேசும்.**

"**உங்களுக்கு இந்தத் திடமான நம்பிக்கை இருந்தால், நீங்கள் குளிர்ச்சியாக உணர்வீர்கள், ஏனெனில் நான் குளிராக இருப்பதாகச் சொல்கிறேன்! நான் எப்பொழுதும் உண்மையே பேசுகிறேன்.**"

மேலும் அவர் வாதாடுவது தவறு என்பதை பாவ் கல்சூரி உணர்ந்தார்.

முன்பு குறிப்பிட்டதற்கு இணங்க, பூனா சேவகர்கள் பாபாவின் சகவாசத்தை நாடி ஞாயிற்றுக்கிழமைகளில் வருவதை வழக்கமாகக் கொண்டனர். ஒரு நாள், பிரதாப் அஹிர் வந்தபோது, பாபா மண்டலியிடம், "**பிரதாப், மஹாபலேஷ்வரில் (1950) என்னிடம் வந்தபோது எவ்வளவு இளஞ்**

**சிறுவனாக இருந்தார். இப்போது அவர் வளர்ந்து என்னை மிகவும் நேசிக்கிறார்.**"

பாபா அவரை நோக்கி, "**உங்களிடம் என் முன்னால் உங்கள் ஆடைகளை களையச் சொன்னது நினைவிருக்கிறதா?**" என்று கேட்டார்.

பிரதாப், "ஆம், பாபா, எனக்கு நினைவிருக்கிறது" என்றார்.

பாபா, "**உங்கள் நிர்வாண உடலை நான் பார்த்ததில் நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி**" என்று கூறினார்.

பாபாவின் சகோதரரின் மகன்கள் ஸொராப், ருஸ்தம் இருவரும் உடனிருந்தனர், பாபா அவர்களிடம் சட்டைப் பையிலிருந்து பளிங்கு கோலிகளை எடுக்குமாறு சைகையால் தெரிவித்தார். பாபா அவர்களுடன் கோலி விளையாடத் தொடங்கினார். மெஹராபாத்தில் பிரதாப், பாபாவுடன் கோலிகள் விளையாடியதை பாபா நினைவு கூர்ந்து, அவரையும் விளையாட்டில் இணையுமாறு கேட்டுக் கொண்டார். பாபா ஒரு கோலியைத் தரையில் வைத்து, சிறிது தூரத்திலிருந்து அதை வேறொரு கோலியால் அடிக்குமாறு பிரதாபிடம் கேட்டுக்கொண்டார். பிரதாப் குறி வைத்து தாக்கும் திறமை படைத்தவராக இருந்ததால், அவர் அதைத் துல்லியமாகத் தாக்கினார். பாபா மற்றுமொரு கோலியை கீழே வைத்து, அதையும் அறையுமாறு பிரதாபிடம் சைகையால் தெரிவித்தார். மீண்டும் அவர் அதை அப்படியே செய்தார். மூன்றாவது முறையும் சரியான இலக்குடன் அதை அறைந்தார். பாபா, கோலியை வெகு தொலைவில் வைத்து, பிரதாபிடம் இப்போது முயற்சி செய்யும்படி கூறினார். அவர் ஒரு சாக்லேட் பொட்டலத்தை உயர்த்தி, "**சரியாக அடித்தால், நான் உங்களுக்கு இந்த சாக்லேட் பொட்டலத்தைத் தருகிறேன்**" என்று குறிப்பிட்டார்.

பாபா பொட்டலத்திலிருந்து ஒன்றை எடுத்து பிரதாபிடம் கொடுத்ததும், அவர் அதைப் பாக்கெட்டில் வைத்தார். பிரதாப் முயற்சி செய்தார், ஆனால் கோலியைத் தாக்கத் தவறிவிட்டார். பாபா அவருக்கு மேலும் இரண்டு வாய்ப்புகள் வழங்கியும், ஒவ்வொரு முறையும் அவர் அதை அடிக்கத் தவறிவிட்டார். மூன்றாவது முறையாக பிரதாப் தவறியபோது, பாபா சாக்லேட் பொட்டலத்தைக் கொடுக்காமல், ஏற்கனவே கொடுத்த சாக்லேட்டையும் திருப்பித் தருமாறு கேட்டுக்கொண்டார்!

வெளிநபர்களுக்கு பொதுவாகத் தடை இருந்தபோதிலும், 1964 ஏப்ரல் 7 அன்று மிர்ஸா (MIRZA), அவரது மனைவி இருவரையும், ஆதியுடன் குருபிரசாத்தில் பார்க்க பாபா அனுமதித்தார். மிர்ஸா, பாபாவை ஐந்து நிமிடம் தனியாக சந்தித்தார், மேலும் பாபா அவரை தினமும் குருநாதரின் 'பர்வர்திகார்' பிரார்த்தனை, மனம்வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனை (MASTER'S AND REPENTANCE PRAYERS) இரண்டையும் தொடர்ந்து மொழிவதோடு, தெய்வீக சித்தத்திற்கு அடிபணிந்து இருக்குமாறும் அறிவுறுத்தினார். அதற்குப் பிறகு பாபா, மிர்ஸாவின் மனைவியை சிறிது நேரம் சந்தித்தார்.

8ஆம் தேதி பாபாவின் இதயத் துடிப்பிற்கான (CARDIOGRAM) பரிசோதனை செய்யப்பட்ட போது, அதில் இதயத் தமனி நோயின் (CORONARY SCLEROSIS) தாக்கம் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. 10ஆம் தேதி மறுபடியும் 'ரூபி ஹால்' (RUBY HALL) மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. சோதனைகளின் முடிவுகளிலிருந்து, பாபாவின் சர்க்கரை நோய் சிறப்பான கட்டுப்பாட்டில் இருப்பதாக டாக்டர் கிரான்ட் கூறினார்.

மஹாராணி ஷாந்தாதேவி நான்கு நாட்களுக்காக பூனா வந்தபோது, ஏப்ரல் 20 முதல் தினமும் பாபாவைப் பார்க்க அனுமதிக்கப்பட்டார். அன்று ஆதி வந்த வேளையில், ரமா, மெஹர்நாத், ஷீலா ஆகியோரின் உடல்நிலை குறித்து பாபா விசாரித்து, அவர்கள் மீது அதிக கவனம் செலுத்துமாறு அவருக்கு அறிவுறுத்தினார். ஸரோஷ், விலூ இருவரும் ஆதியுடன் 24ஆம் தேதி பூனாவிற்கு வந்து, டெல்லி மற்றும் டெஹ்ரா டூன் பயணத்தைப் பற்றி பாபாவிடம் விரிவாக எடுத்துரைத்தனர்.

இதற்கிடையில், நியூயார்க் உலக கண்காட்சி 1964 ஏப்ரல் 22 அன்று திறக்க திட்டமிடப்பட்டிருந்தது, மேலும் அமெரிக்க அன்பர்கள் பாபாவின் 'உலகளாவிய செய்தி'யைப் (UNIVERSAL MESSAGE) பரப்புவதற்கு, அழகான தகவல் சாவடி ஒன்றை எழுப்பினர். ஏப்ரல் 12 அன்று, எலிஸபெத் பேட்டர்சன், ஜேன் ஹெய்ன்ஸ் ஆகியோருக்கு, காட்சிக்கூடம் அமைக்க உதவிய அனைவருக்காகவும் கீழ்வரும் தொலைத்தந்தியை பாபா அனுப்பினார்:

**மெஹர் பாபாவின் 'உலகளாவிய செய்தி'யுடன்** (UNIVERSAL MESSAGE) **'நியூயார்க் உலக கண்காட்சி'யை அலங்கரித்த அமெரிக்காவில் வாழும் என் அன்பர்களின் அன்பு ஆசீர்வதிக்கப்பட்டது. அதை சாத்தியமாக்கிய மற்றும் கண்காட்சி நிகழ்ந்த முழு காலகட்டத்திலும் அயராது பணிபுரிந்த என் அன்பர்கள் மற்றும் சேவகர்களுக்கு எனது அன்பின் ஆசிகளை வழங்குகிறேன்.**

காட்சிக்கூடம் திறப்பது 1964 மே 8 வரை தாமதமானது, ஆனால் பாபாவின் தொலைத்தந்தி, இறுதி முயற்சிக்கான வாரங்களை, சோதனைக்கு பதிலாக மகிழ்ச்சியாக மாற்றியது. எலிஸபெத், கிட்டி, ஜேன் மற்றும் பலரின் அயராத முயற்சியால், ஒரு நாளைக்கு ஐந்து லட்சம் பார்வையாளர்கள் வந்ததாக மதிப்பிடப்பட்டது, மேலும் பலர் பாபாவின் காட்சிக்கூடத்தைக் கடந்து சென்ற வேளையில், அவரது சித்திரத்தைப் பார்க்கவும், அவரது பெயரைக் கேட்கவும் வாய்ப்பாக அமைந்தது. பாபா ஆரம்பத்திலிருந்தே, **"நான் கண்காட்சியில் எனது பணியை எனது சொந்த வழியில் செய்வேன்"** என்று சுட்டிக்காட்டியிருந்தார்; மேலும் இது, அவரால் உள்ளூர ஈர்க்கப்பட்டவர்களிடமிருந்து தெளிவாகத் தெரிந்தது, அதைத் தொடர்ந்து, மேலும் தகவல்களுக்காக மர்டில் பீச் மையத்திற்கு பலர் கடிதம் எழுதினர். ஃபிரெட் மற்றும் எல்லா வின்டர்ஃபெல்ட், மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்று கேட்டு எழுதியிருந்தனர். பாபா ஒரு கடிதத்தில் மணி மூலம் இவ்வாறு பதிலளித்தார்:

**“பாபாவின் அன்பு உங்களிடம் இருப்பதாக அவர் கூறுகிறார், எனவே உங்களிடம் கேட்கப்படும் கேள்விகளைப் பற்றி சிறிதும் பதட்டப்பட வேண்டாம். அவர் மீதான உங்கள் அன்பு தானாகவே பேசும் மற்றும் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும்.”**

கிட்டி பின்னர் இவ்வாறு விவரித்தார்:

காட்சிக்கூடத்தில் இருந்த பல சேவகர்கள் இதே கதையைக் கூறினர்: பாபாவின் சித்திரம் (1956இல் மர்டில் பீச் மையத்தில் ஜோஸஃப் ஹார்ப் எடுத்த பெரிய வண்ணப் புகைப்படம்) பார்வையாளர்களை வெகுவாக ஈர்த்தது. அவர்கள் கடந்து செல்லும்போது, திடீரென அசைவின்றி நின்று, அவர் யார் என்று கேட்பதற்கு முன்பு, சிந்தனையில் சற்று அமைதியாக, நிதானமாக மூழ்கி, அவருடைய பெயரைக் கேட்டதும் மதிமயங்கிய தோற்றத்தை வெளிப்படுத்தினர். ஒரு சிலர் துண்டு பிரசுரங்களை மறுத்தாலும், (இலவசமாக வழங்கப்பட்டது) அந்தத் தனித்துவமான ஒருவரின் நினைவே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. ‘மெஹர் பாபா’ என்ற வாசகத்தைத் தாங்கிய அழகிய வெண்கலப் பலகையில் உருவப்படத்தின் கீழ் அவரது பெயர் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்தது.

ஆட்டுக்குட்டி ஒன்றை கைகளில் தாங்கி நிற்கும் பாபாவின் அழகான சித்திரமும் (1939 ‘நீலப்பேருந்து’ பயணத்தின் போது எலிஸபெத் பேட்டர்சன் எடுத்தது) காட்சிக்கூடத்தை அலங்கரித்தது; மேலும் குழந்தைகளுக்கான இந்த செய்தி வழங்கப்பட்டது:

**நான் சிறிய விலங்குகளை விரும்புகிறேன், ஏனெனில் அவை எனது படைப்பின் ஓர் அங்கம். ஆனால் நான் குழந்தைகளை அதிகம் நேசிக்கிறேன், ஏனெனில் அவர்களுடன் நான் என்றென்றும் குழந்தை; மகிழ்ச்சியான விளையாட்டில் அவர்கள் எனது விளையாட்டுத் தோழர்கள்.**

நியூயார்க் உலக கண்காட்சி 1964 அக்டோபர் வரை நீடித்தது. இது 1965 ஏப்ரல் மாதம் மீண்டும் திறக்கப்பட்டு அக்டோபர் வரை தொடர்ந்தது.

பூனா மையத்தின் கட்டிடப் பணி நிறைவடைந்ததும், மையத்தை ஆசீர்வதிப்பதாக ராமகிருஷ்ணனிடம் பாபா உறுதியளித்தார், மேலும் பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்வதால் திறப்பு விழாவை எளிமையாகவும் அமைதியான முறையிலும் ஏற்பாடு செய்யும்படி அவருக்கு அறிவுறுத்தினார். கூட்டத்திற்கான அரங்கில் 700 பேர் வசதியாக அமரலாம், மேலும் குளியலறைகள், கழிப்பறைகள், ஒரு சிறிய அலுவலகம் மற்றும் பாபா ஓய்வெடுக்க ஒரு சிறிய அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. பணி நிறைவடைந்து, மையத்தைத் திறப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

1964 மே 1 வெள்ளிக்கிழமை அன்று, அந்தக் கோடையில் பூனாவிற்கு வந்த பின்பு, முதல் முறையாக (மருத்துவரை அவரது அலுவலகத்தில் சந்திக்கச் சென்றதைத் தவிர), குருபிரசாத்தின் எல்லைக்கு வெளியே, 441/1,

ஸோம்வார்பேட்டில் அமைந்த ‘அவதார் மெஹர் பாபா பூனா மையத்திற்கு’ (AVATAR MEHER BABA POONA CENTER) அழைத்துச் செல்லப்பட்டார். மெஹர் பாபா கடைப்பிடித்த கடுமையான ஏகாந்தவாசத்தின் விளைவாக, அனைத்து நிகழ்ச்சிகளுக்கும், தரிசனத்திற்கும் தடை விதிக்கப்பட்டதால், அவர் எந்த பொது விழாக்களையும் அனுமதிக்கவில்லை. நெருங்கிய அன்பர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர், உறவினர்கள் மட்டுமே அழைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள், உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்து வந்தனர்; ஆதலால் மொத்த நபர்களின் எண்ணிக்கை 500யும் தாண்டியது.

மெஹர்ஜியின் மகள் பெர்வின் (PERVIN), பாபாவையும் மண்டலியையும் பூனா மையத்திற்கு அன்று காலை 8:55 மணிக்கு அழைத்துச் சென்றார். பாபாவின் கார் முன் வாசலை வந்தடைந்ததும், அன்பர்கள் கூட்டம் அவரை மனதார வரவேற்று மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தது. பாபாவின் ஏழு வர்ண கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட பிரதான மண்டபத்திற்கு வெளியே அமைந்த வராண்டா அருகே கார் நின்றது.

பாபா காரிலிருந்து இறங்கியதும், மையத்தின் தலைவர் சதாஷிவ் பாட்டீல் அவருக்கு மாலை அணிவித்த போது, பாபா புன்னகையுடன், அவரை ஆரத் தழுவி, பின்பு மண்டபத்தின் வாசலை நோக்கிச் சென்றார்; அங்கு மெஹர்ஜி அவருக்கு கத்தரிக்கோல், திறவுகோல் இரண்டையும் ஒரு தட்டில் வைத்து வழங்கினார். பாபா வாசலில் கட்டப்பட்டிருந்த ஏழு வர்ண நாடாவை வெட்டி, திறவுகோலால் முன் கதவைத் திறந்தார்.

பாபா பிரதான மண்டபத்திற்குள் நுழைந்ததும், மையத்தின் ஏழு அறங்காவலர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர் பிக்குபாய் ஆகியோர் பாபாவைப் பின்தொடர்ந்து சென்றனர். மண்டபத்தின் வாசலிலிருந்து, பாபாவின் சிறப்பு மெல்லணை நாற்காலி போடப்பட்டிருந்த மேடை வரையிலான கம்பளப் பாதையில் மலர் இதழ்கள் தூவப்பட்டிருந்தன. மண்டபத்திற்குள் நுழைந்ததும், பாபா சுற்றுமுற்றும் பார்வையை சுழற்றி, சுவர்களை அலங்கரித்திருந்த அவரது சித்திரங்களைப் பாராட்டினார். அவை அவரது வாழ்க்கை மற்றும் பணியின் பல்வேறு அம்சங்களை சித்தரித்தன. பிக்குபாய் அந்த புகைப்படங்களை மையத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார். அப்போது பாபா தனது புகைப்படத்தை எடுக்குமாறு பிக்குபாயிடம் கூறினார். பெஹராம், ஜெஹாங்கு இருவரும் முழு நிகழ்ச்சிகளையும் ஒரு திரைப்படமாக எடுத்தனர்.


பாபா இருக்கையில் அமர்ந்ததும், பிரதான மண்டபத்தின் உச்சத்திலிருந்த ஏழு வர்ண ‘பாபா-கொடி’யை ஆதி கட்டவிழ்த்து பறக்கவிட்டார். அப்போது வெளியில் காத்திருந்த அன்பர்கள் மண்டபத்திற்குள் நுழைந்து, இருக்கையில் அமர்ந்தனர். மண்டபம் நிரம்பியதும், ஒரு சிறிய பக்க அறையிலிருந்து ஏழு குழந்தைகள் அவதார புருஷரை வரவேற்கும் பாடலைப் பாடிக்கொண்டே வெளியே வந்தனர். ஒவ்வொரு குழந்தையும் பாபா-கொடியின் ஏழு நிறங்களில் ஒன்றை மாலையாக கையில் ஏந்தி, ஒவ்வொருவராக பாபாவின் கழுத்தில் அந்த மாலைகளை அணிவித்தனர், பின்னர் அவர்கள் அனைத்து பூனா அன்பர்களின்

மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில், பாபாவின் முன்னால் பாடல் ஒன்றைப் பாடி நடனமாடினர். பாபாவின் அனுகூலமான பிரசன்னத்தை அடையப் பெற்றது அவர்களின் மாபெரும் பாக்கியம் என்று அறிவித்தனர். பாபாவின் முகத்தில் மலர்ந்த புன்னகையிலிருந்து, இந்த வரவேற்பில் அவர் மிக்க மகிழ்ச்சியாக இருந்தார் என்பது தெரிந்தது. அவர் குழந்தைகளைப் பாராட்டியதுடன், கடந்த பல நாட்களாக அவர்களுக்குப் பயிற்சி அளித்த மதுசூதனின் முயற்சிகளைப் பாராட்டினார். நௌரங்காவில் 'மெஹர் தாம்', கொவ்வூரில் 'மெஹர்ஸ்தான்' மற்றும் டெஹ்ரா டூனில் 'மெஹர் தாம்' ஆகியவற்றின் திறப்பு விழாக்களுக்காக மதுசூதன் இசையமைத்த பாடல்களையும் பஜனைகளையும் பூனா குழுவினர் பாடினர். அதுமட்டுமின்றி, மதுசூதனன் இந்த நிகழ்விற்காக எழுதிய மற்றொரு சிறப்புப் பாடலையும் பாடினர்.

மதுசூதனனின் பாடலுக்குப் பின்னர், ஐந்து வயது சிறுமி மெஹரா கேரவாலா ஒலிவாங்கியில் குருநாதருக்கான 'பர்வர்திகார்' பிரார்த்தனை மற்றும் மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனை (PARVARDIGAR AND REPENTANCE PRAYERS) இரண்டையும் ஆங்கிலத்தில் வாசித்தார்; அதைத் தொடர்ந்து, பவ்ஸாரின் (BHAVSAR) மகள்கள் சுதா (SUDHA), ஆஷா (ASHA) இருவரும் மராட்டியில் அதே பிரார்த்தனைகளை மொழிந்தனர். புதிய பூனா மையத்தின் அன்பர்கள் சார்பாக, ஸோமன் (SOMAN) மீண்டும் பாபாவின் இரக்கத்தன்மையால் மையத்தைத் திறந்து அருளியதற்கும், ஏதேனும் ஒரு வழியில், மையத்தின் ஸ்தாபனத்திற்காக உதவிய, அதற்காக உழைத்த அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

சதாஷிவ் பாட்டீலிடம் பாபா, "1965, **மே 1 அன்று, பூனா மையத்தின் ஒரு வருட நிறைவு நாளில் மீண்டும் ஒரே ஒருமுறை தரிசனம் வழங்குவேன். அதற்குப் பிறகு வழக்கம்போல குருபிரசாத்தில் தரிசன நிகழ்ச்சிகளை மீண்டும் தொடர்வேன்**" என்று கூறினார்.

அதைத் தொடர்ந்து, குழந்தைகள் பாபாவின் ஆரத்தியை நிகழ்த்தியதும், அவரது கையால் தொட்டு ஆசீர்வதிக்கப்பட்ட இனிப்புகள் பிரசாதமாக வழங்கப்பட்டன. பாபா, சஞ்சீவனி கேரிடம் (SANJEEVANI KHER) ஒரு பாடலைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். முந்தைய ஆண்டு குருபிரசாத்தில் அவர் பாபா முன்னிலையில் பாடியதை பெரிதும் விரும்பினார். பாபா மிகவும் மகிழ்ச்சியாக இருந்த மனநிலையில், அவரை யார் ஒருவரும் அணுகவோ, சந்திக்கவோ, மாலை அணிவிக்கவோ கூடாது என ஏற்கனவே அறிவுறுத்தி இருந்தாலும், இப்போது பாபா அனைவரையும் அனுமதித்தார். பூனாவைச் சேர்ந்த சிற்பியான நரேஷ் டோண்ட்ஃபாலே (NARESH DHONDPHALE) வடித்த பாபாவின் சிறிய வெண்கல மார்பளவு சிலையை, தொட்டு ஆசீர்வதிப்பதற்காக, டாக்டர் தேஷ்முக், பாபாவைக் கட்டாயப்படுத்தினார்; ஆனால் முதலில் பாபா '**அந்தச் சிலை என்னை ஒத்ததாகவா உள்ளது? கலைஞர் இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம்**' என்று கூறி, கேலி செய்து, பின்னர் அதைத் தொட்டு ஆசீர்வதித்தார்.



**பூனா மையம் திறப்புவிழா, 1 மே 1964**
(OPENING OF THE POONA CENTER, 1 MAY 1964)

சுமார் 10:30 மணியளவில், எரச், ஃபிரான்சிஸ் ஆகியோரின் உதவியுடன் பாபா மேடையிலிருந்து இறங்கி, தனியறையை நோக்கி நடந்தார். ராமகிருஷ்ணனின் உதவியாளர் ஹோமாய் மாலதி (HOMAI MALATI) அறையை அலங்கரித்து, அவருக்காகத் தயாராக வைத்திருந்தார். பாபா படுக்கையில் அமர்ந்து, ஒரு டம்ளரிலிருந்து இளநீரை சிறிது பருகினார். அவர் தனக்கு வழங்கப்பட்ட பழங்கள் மற்றும் பிற உணவுப் பொருட்களைத் தொட்டு, அவற்றை மண்டலி உண்பதற்கு அனுமதித்தார். பின்னர் அவர் அலுவலகத்திற்குள் நுழைந்து ஒரு நாற்காலியில் அமர்ந்தார். பதினோரு மணியளவில் கார் அலுவலக வாசலுக்கு அருகில் வரவே, பாபா அங்கிருந்து குருபிரசாத்திற்குச் சென்றார்.

ஹார்ப் தம்பதியினருடனான கடிதப் பரிமாற்றத்தில், அந்த நேரத்தில் பாபாவின் நிலையை மெஹர்ஜி இவ்வாறு விவரித்தார்:

[1964 ஏப்ரல் 4]: பாபா மிகவும் சோர்வாகவும், களைப்பாகவும் ஏப்ரல் 1 அன்று நண்பகலுக்கு சற்று முன்னர் இங்கு வந்தார். அவர் உண்மையில் மிகவும் பலவீனமாகிவிட்டார், ஓய்வெடுப்பதற்காக பூனாவிற்கு வருவது அவரது ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்க வேண்டும் என்று நாம் அனைவரும் மனதார வேண்டிக்கொள்கிறோம்... நேற்றைய தினமும், பாபா நன்றாகத் தோன்றவில்லை. அவர் தனக்குள்ளேயே முற்றிலும் உள்வாங்கியது போல, பல நேரங்களில் வெளியளவில் எதிலும் ஆர்வம் இல்லாதவர் போன்ற தோற்றத்துடன் அமைதியாக அமர்ந்திருக்கிறார். நாம் அனைவரும் பிரார்த்தனை செய்வோம், அவர், இந்த புத்திக்குப் புலப்படாத துன்பத்திலிருந்து விரைவில் வெளியே வந்து, அவரைச் சுற்றியுள்ள நிகழ்வுகளிலும், நபர்களிலும் ஆர்வம் காட்டத் தொடங்குவார் என்று நம்புகிறோம்.

[1964 மே 9]: பாபா, அது அவருக்கு ஒரு பயங்கரமான அழுத்தமாக இருந்தாலும்... ஒவ்வொருவரையும் (பூனா மையத்தின் தொடக்க விழாவில்) சந்தித்தார்; பூனாவிற்கு வருகை தந்து ஒரு மாதத்தைக் கடந்துவிட்ட போதிலும், பாபா மேலதிகமாகத் தனக்குள்ளேயே உள்வாங்கிக்கொண்டதாகத் தெரிகிறது; தொடர்ந்து அமைதியாக துன்பப்படுகிறார். கடந்த சில ஆண்டுகளில், மெஹராஸாத்தில் ஏகாந்தவாசம் மேற்கொண்ட போதிலும், கோடையில் பூனாவிற்கு வந்த வேளையிலும், அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாகத் தோன்றி, பல பார்வையாளர்களுக்குத் தமது அன்பை அள்ளி வழங்கினார், ஆனால் இம்முறை அது முற்றிலும் வித்தியாசமானது. மண்டலியில் ஒரு சில உறுப்பினர்களைத் தவிர, அவர் வேறு எவரையும் சந்திக்கவில்லை. அவர் காலை 8:00 அல்லது 9:00 மணிக்கு மண்டலியிடம் வந்து, 12:30 மணிக்கு தனது அறைக்குத் திரும்பிச் சென்று, மீண்டும் மதியம் 3:00 மணிக்கு வருகை தந்து, 4:00 மணிக்கு திரும்பிச் செல்வது தினசரி வழக்கமாகி விட்டது. உலகின் குழப்பமான சூழ்நிலை அவரை அத்தகைய மனநிலையில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பல வருடங்களில் முதன்முறையாக, நான் எவ்வளவுதான் விரும்பினாலும் குருபிரசாத்திற்கு நாள் முழுவதும் செல்ல

முடியவில்லை, எனது மதிய உணவின் போது 2:00 முதல் 4:00 வரை மட்டுமே, நான் பாபாவுடன் இருக்க அங்குச் செல்கிறேன்...

பூனா மையம் திறக்கப்பட்ட பிறகு, குருபிரசாத்திற்கு வெளிநபர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. 1964 மே 25 திங்கட்கிழமை மதியம் 2:00 மணிக்கு, கிஷோர் மிஸ்திரி, நேனே மற்றும் அவரது குடும்பத்தினர், கிஷோர் மற்றும் நேனேயின் மகள் ரஜினிக்கும் இடையேயான திருமணத்தைப் பற்றி விவாதிக்க குருபிரசாத்தில் பாபாவை சந்தித்தனர். (ஜூலை மாத இறுதியில் திருமணம் நடந்தது.) மே 28 அன்று ஸாக்கரே தம்பதியினருக்கு தரிசனம் வழங்கப்பட்டது.

ஒரு வருடத்திற்கும் முன்னதாக, 1963இல், பாபா, இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேரு, குருபிரசாத்தில் அவரை சந்திக்க வருமாறு, அமர் ஸிங் ஸைகலுக்கு அறிவுறுத்தினார். பாபாவின் விருப்பத்தை ஸைகல் தெரிவித்தாலும், நேருவால் அங்கு வருவதற்கான நேரத்தைக் கண்டுகொள்ள முடியவில்லை.

1964இல் பாபா பூனாவிற்கு வந்த பின்பு, பாவ் கல்சூரி இரவு கண்காணிப்புப் பணியில் இருந்த வேளையில், தினமும் பாபா அவரிடம், **"நான் ஏகாந்தவாசம் மேற்கொள்கிறேன், நேரு திடீரென வந்தால் என்ன நடக்கும்?"** என்று கேட்பார்.

அதற்கு பாவ் கல்சூரி இவ்வாறு பதிலளித்தார், "நேரு அப்படி வரமாட்டார் பாபா. அவர் உங்களைப் பார்க்க விரும்பினால், முதலில் எவரையேனும் அனுப்பி, சந்திப்பிற்கான நேரத்தை நிர்ணயம் செய்வார், அவர் வரும்போது, நீங்கள் ஏகாந்தவாசத்தில் இருப்பதால் சந்திப்பு சாத்தியமில்லை என்று அவருக்குத் தெரிவிப்போம்..."

**"அவர் முன்னறிவிப்பின்றி வந்தால் என்னவாகும்?"** என்று பாபா கேட்டார்.

"அது நடக்காது பாபா. நேரு மிகவும் மும்முரமாக இருக்கிறார்!"

**"ஆனால் அப்படி நடந்தால்?"**

இவ்வாறு, பாவ் கல்சூரி இரவு கண்காணிப்புப் பணிக்காக வந்ததும், கேள்விகளும் பதில்களும் ஒவ்வொரு நாளும் பரிமாறப்பட்டன.

ஆனால் 1964 மே 26 அன்று மதியம் 2:30 மணியளவில், பாபா மண்டலியிடம், **"ஜவஹர்லால் விரைவில் என்னிடம் வருவார்; அவர் வர வேண்டும்!"** என்றார்.

பாபா மேலும் கூறினார், **"அவரது சிறப்பான ஆற்றல் மற்றும் மன உறுதியின் காரணமாக, ஜவஹர்லால் அவரது சமீபத்திய மாரடைப்பிலிருந்து விரைவாக குணமடைந்தார். ஆனால் அவருக்கு மீண்டும் ஒரு பின்னடைவு** (இரண்டாவது மாரடைப்பு) **ஏற்பட்டால், அவர் உயிர்வாழ முடியாது, உடனடியாக உயிரைத் துறந்துவிடுவார்."**

பாபா கூறிய 24 மணி நேரத்திற்குப் பிறகு, நேரு காலமான செய்தி வானொலியில் அறிவிக்கப்பட்டது. எரச்சின் சகோதரர் மெஹர்வான் 1964 மே 27 அன்று மதியம் 2:30 மணிக்கு தொலைபேசி மூலம் குருபிரசாத்திற்கு செய்தியைத் தெரிவித்தார். அப்போதுதான் நேரு எப்படி பாபாவிடம் முன்னறிவிப்பின்றி 'வருவார்' என்பதை பாவ் கல்சூரி புரிந்து கொண்டார்.

அன்றைய தினம் பாபா மண்டலியிடம் இவ்வாறு குறிப்பிட்டார்:

**பண்டித்ஜியின் மறைவுடன், இந்தியா தனது முதல் பிரதமரை இழந்துவிட்டது, அவர் இதயபூர்வமாக இந்திய நாட்டிற்கான அர்ப்பணிப்பு சேவையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். ஜவஹர்லால் நேரு ஒரு அரசியல்வாதியாக நிகரற்றவர், அவரைப் போன்ற மற்றுமொரு தங்கமகனைக் கண்டுகொள்ள இந்தியா இன்னும் 700 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.**

**அவர் ஓர் உண்மையான கர்ம யோகி என்று சொல்லலாம். அமர் ஸிங் ஸைகல் அவருக்கு வழங்கிய 'கடவுள் பேசுகிறார்'** (GOD SPEAKS) **புத்தகத்தின் ஒரு பகுதியையேனும் படித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.**

பாபா மேலும் கூறினார், "**நான் மீண்டும் வரும்போது, பூமியில் எனது அடுத்த அவதார காலகட்டத்தின் போது, ஜவஹர்லால் போன்ற வேறொருவர்** (இந்தியாவின் தலைவர்) **பிறவி எடுப்பார்.**"

நியூயார்க்கின் உட்ஸ்டாக் (WOODSTOCK) நகரைச் சேர்ந்த லின் மற்றும் ஃபிலிஸ் ஆட்ட் (LYN & PHYLLIS OTT) என்ற இரண்டு கலைஞர்கள், மெஹர் பாபாவைப் பற்றி அவர்களது அண்டை வீட்டாரான யுவோன் ரிலேயிடமிருந்து (YVONNE RILEY) கேள்விப்பட்டனர். யுவோன் 1958இல் மர்டில் பீச் மையத்தில் மெஹர் பாபாவை தனது கணவர் டாமுடன் (TOM) சந்தித்தார், அவர் கல்லூரியில் படிக்கும் போது ஃபிலிஸுடன் அறிமுகமானவர். 1964 மே 26ஆம் நாள், ஆட்ட் தம்பதியினர் மெஹர் பாபாவிற்கு இவ்வாறு எழுதினர்:

அன்புள்ள மெஹர் பாபா: உங்களைப் பார்க்க நாங்கள் இந்தியா வருவதற்கான தீவிர சிந்தனையில் உள்ளோம். இந்த வாழ்க்கையில் எங்கள் இருவருக்கும் இது மட்டுமே முக்கியமான விஷயம் என்பதால் நாங்கள் வருகிறோம். நீங்கள் மெஸையா (MESSIAH), அவதார புருஷர் (AVATAR), மீட்பர் (REDEEMER) என்று நாங்கள் நம்புகிறோம். உங்களுடைய அருளையும், உங்களுடையதை மட்டுமே நாங்கள் விரும்புகிறோம், இதற்காக நாங்கள் ஏங்குகிறோம். இது ஒன்றே போதும்.

உமது கிருபையின் மூலம் உமது நோக்கத்தை நிறைவேற்றுவோம் என்று நாங்கள் நம்புகிறோம். உங்கள் நோக்கத்தின் முதன்மை வாய்ந்த முக்கியத்துவத்தில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதனால்தான் உங்களை நோக்கிய எங்கள் வருகை எங்களுக்கு மிகவும் முக்கியமானது. நாங்கள் உங்களைப் பார்க்கும் வரை, உங்களின் பிரியமானவர்களாகவே இருக்கிறோம்.

1964 ஜூன் 4ஆம் நாள், பாபா இந்தக் கடிதத்திற்கு பதிலளிக்கும் விதத்தில் தொலைத்தந்தி ஒன்றை ஆட்ட் தம்பதியினருக்கு அனுப்பினார்: **“உங்கள் கடிதம் என்னை மகிழச் செய்தது. அடுத்த ஆண்டு மே மாதம் நீங்கள் என்னை சந்திக்க முடியும், ஆனால் இப்போது அல்ல. உங்கள் இருவருக்கும் என் அன்பின் ஆசீர்வாதம்.”**

வழக்கம் போல, பாபாவிற்கும் பெண் மண்டலிக்கும் பிந்த்ரா ஹவுஸிருந்து உணவு ஒவ்வொரு நாளும் குருபிரசாத்திற்கு அனுப்பப்பட்டது. ஜால் தொராப்ஜியின் (JAL DORABJEE) விருந்தினர் மாளிகையிலிருந்து ஆண் மண்டலிக்கான உணவு ஏற்பாடு செய்யப்பட்டது. தொராப்ஜியின் ஒரே மகள் மும்பையைச் சேர்ந்த கேக்கி பிலிமோரியாவை (KEKI BILLIMORIA) மணந்தார். 1964 மே 31 ஞாயிற்றுக்கிழமை அன்று, தம்பதியினர் தங்கள் கைக்குழந்தை மற்றும் நண்பர்களுடன் எலிஃபெண்டா குகைகளுக்கு (ELEPHANTA CAVES, மும்பைக்கு அருகிலமைந்த ஒரு தீவில்) படகில் சென்று கொண்டிருந்தனர். வழியில், படகு ஒரு பயங்கரமான விபத்தில் சிக்கியது; தொராப்ஜியின் மகள், பேத்தி இருவரும் தண்ணீரில் தூக்கி எறியப்பட்டு மூழ்கினர். பாபா பார்வையாளர்கள் மீதான தடைக்கு விதிவிலக்கு அளித்து, ஜால் தொராப்ஜி, அவரது மனைவி இருவரையும் சோக சம்பவத்திற்குப் பிறகு குருபிரசாத்திற்கு அழைத்தார்; ஏனெனில் அவர்கள் தங்கள் ஒரே மகள் மற்றும் பேத்தியை இழந்த சூழலில், பாபாவின் சகவாசம் அவர்களுக்கு மிகுந்த ஆறுதலையும் ஆற்றலையும் வழங்கியது.

தொராப்ஜியின் மகள் சென்ற ஆண்டு பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தாலும், அவரது மருமகன் பாபாவின் தெய்வீகத்தன்மையை சிறிதும் நம்பவில்லை. ஆயினும்கூட, தாங்கொணா வேதனையில், கேக்கி பிலிமோரியா, பாபாவைப் பார்க்க விரும்பி, ஜால் தொராப்ஜி மூலமாக அவர் இதை பெண்டுவிடம் தெரிவித்தார். துக்கத்தில் மூழ்கியிருந்த இளைஞனைப் பார்க்குமாறு பெண்டு, பாபாவிடம் மன்றாடிய வேளையில், பாபா மீண்டும் விதிவிலக்கு அளித்து, அவரை குருபிரசாத்திற்கு அழைத்தார். கேக்கி பிலிமோரியா, பாபாவை சந்தித்ததில் உள்ளூர வெகுவாக ஈர்க்கப்பட்டு அவரிடம், “கடந்த ஆண்டு எனது மனைவி என்னை உங்களிடம் அழைத்து வர முயன்றார், அவர், ‘பாபாவிடமிருந்து நீங்கள் என்ன அடையப் பெறுவீர்கள் என்பதை என்னால் வார்த்தைகளால் சொல்ல முடியாது, ஆனால் அவரது காலடியில் சில நிமிடங்கள் அமருங்கள், அப்போது நீங்கள் அறிவீர்கள்’ என்றார் - இருந்தும் நான் வரவில்லை, இப்போதுதான் வந்தேன், எனது மனைவி சொன்னதை நான் இப்போது புரிந்துகொண்டேன், இதற்காக நான் அவருக்கு என்றென்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன், ஆனால் அவர் உயிருடன் இருந்தபோது நான் உங்களிடம் வரவில்லையே என்ற வருத்தம் என்னில் நிறைந்துள்ளது.”

கேக்கியின் மனைவி மற்றும் மகளின் திடீர் இழப்பு குறித்து, பாபா அவரை ஆறுதல்படுத்தினார், மேலும் அவர் தைரியமாகவும், அமைதியாகவும்

இருந்து, நடந்த அனைத்தும் கடவுளின் சித்தம் என அடிபணிந்து இருக்குமாறு ஆறுதல் கூறினார்.

குருபிரசாத்தில் காலையிலும், மதிய வேளையிலும், பாபா ஆண் மண்டலியுடன் பக்கவாட்டில் அமைந்த ஒரு சிறிய அறையில் அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டார். சில சமயங்களில் தனிநபர்கள் தரிசனம் நாடி வருவதுண்டு, பெரும்பாலும் நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவிலிருந்து பயணம் செய்து வந்தாலும், ஒரு நடைமுறை விதியாக, பாபா அவர்களை சந்திப்பது இல்லை. அர்னவாஸ், ஜூன் முதல் தேதியிலிருந்து பத்து நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார். புக்காரும் ஒரு குறுகிய காலம் குருபிரசாத்தில் தங்குவதற்காக வந்திருந்தார். ஷாந்தாதேவியின் மகளின் திருமணத்தில் பாபாவைப் பிரதிநிதித்துவப்படுத்த, ஆதி பலமுறை பூனாவிற்கு அழைக்கப்பட்டார்.

ஒரு நாள், ஒரு நபர் குருபிரசாத்தை அணுகிய போது, பாபா, பார்வையாளர்களை சந்திக்கவில்லை என்று அவருக்குத் தெரிவிக்க பைதூல் அனுப்பப்பட்டார். அவரைப் பற்றிய மேலும் தகவல்களைத் தெரிந்துகொள்ள பாவ் கல்சூரி அந்த நபரிடம் செல்லவே, புக்காரும் உடன் சென்றார். பாவ் கல்சூரி அவரை விசாரிக்க முயன்றபோது, அந்த நபர் பேச முடியாமல் கண்ணீர் ததும்ப அழுதுகொண்டே நின்றார். புக்கார் ஏதோ இனம்புரியாத காரணத்திற்காக, “உங்கள் மனைவி துரோகம் செய்து விட்டாரா?” என்று கேட்டதும், அந்த நபர் தலையசைத்து, மெதுவாக தனது கதையைச் சொல்லத் தொடங்கினார்: அவர் பிலாஸ்பூர் நகரைச் சேர்ந்தவர். கணவன் இது குறித்து அறியவந்த அடுத்த கணமே, மனைவி தனது காதலனுடன் ஓடிவிட்டார். கணவன் தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து, முதலில் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பினார். பயணச்சீட்டு இல்லாமல் ரயிலில் பயணம் செய்து, கண்டுபிடிக்கப்பட்டு, ஒரு வாரம் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் அப்போதுதான் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

பாபா அந்த நபரை அழைத்து, “**உங்கள் மனைவி உங்களை விட்டுப் பிரிந்ததால், நீங்கள் ஓர் அதிர்ஷ்டசாலி. அவர் உங்களுக்கு கடவுளை நினைவுகூரும் வாய்ப்பை வழங்கியுள்ளார். அவரை நினைத்து வருந்தாதீர்கள். அவர் வெளியே சென்றது நல்லது, அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். அவரால், நீங்கள் எனது தரிசனத்தைப் பெற்றுக்கொண்டீர்கள், இப்போது அவரை மறந்து விடுங்கள், தற்கொலை என்ற நினைப்பே வேண்டாம்.**” அந்த நபரை தனது இல்லத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு அறிவுறுத்தி, பயணம் மற்றும் உணவிற்கான கட்டணமும் வழங்கப்பட்டது.

பார்வையாளர்கள் மீதான தடைக்கு பாபா மற்றுமொரு விதிவிலக்கு அளித்தார்; நார்வே நாட்டைச் சேர்ந்த ஹிலரி ஸின்டிங்-லார்ஸன் (HILARY SINDING-LARSEN), ராபர்ட் மீக்குல்ஸ் (ROBERT MICHIELS) என்ற இளம் தம்பதியர் (ஏறக்குறைய

ஒரு வருடத்திற்கு முன்னதாக பாபாவை சந்தித்த பின்பு திருமணம் செய்துகொண்டனர்). ஹிலரி, ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தின் மூலம் பாபாவைப் பற்றி அறிந்து கொண்டார்; அந்தப் புத்தகத்தால் அவர் வெகுவாக ஈர்க்கப்பட்டார். அவர் இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் புடவைகள் அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்..

மேலும், டாக்டர் ஹாரி கென்மோருக்கு ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டது. ஹாரி, 1964 ஜூன் 19 அன்று மாலை நியூயார்க்கிலிருந்து பூனாவிற்கு வந்து, வெல்லஸ்லி ஹோட்டலில் (WELLESLEY HOTEL) ஒரு வாரம் தங்கினார். அவர் ஒவ்வொரு நாளும் குருபிரசாத்தில் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, கென்மோரிடம் தனது இடர்பாடுகளைப் பற்றிக் கூறினார்: “**நான் உலகளாவிய பாரத்தை சுமக்கிறேன், நான் உடல், மனம் மற்றும் ஆன்மீக ரீதியில் துன்பப்படுகிறேன். என் உடல் துன்பம் என்னைச் சுற்றியுள்ளவர்களால் பார்க்கப்படுகிறது. எனது மன ரீதியிலான துன்பம் தீவிரமானது, எல்லையற்றது. எனது ஆன்மீகத் துன்பத்தைப் பொறுத்தவரை, அது என்றென்றைக்கும், மீண்டும் மீண்டும் எல்லையற்றதாக இருப்பது. நான் எனது மௌனத்தைக் கலைக்கும் போது, அனைத்து துன்பமும் முடிவுக்கு வரும்.**”

ஜூன் மாதத்தின் பிற்பகுதியில் - அவரை சுற்றியிருந்தவர்களால் பார்க்கப்படும் விதத்தில் - பாபா தனது வலது புறம் கடுமையான முதுகுவலியை அனுபவிக்கத் தொடங்கினார். டாக்டர். கிரான்ட்டை கலந்தாலோசிக்குமாறு பாபாவிற்கு அறிவுறுத்தப்பட்டது; அவர் ஒப்புக்கொண்டார், ஆனால் எக்ஸ்ரே எடுக்க இணங்கவில்லை. ஜூன் 30 அன்று, பாபாவின் சர்க்கரை மற்றும் கொழுப்பின் அளவைக் கண்டறியும் இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. யூரியா அளவு அதிகமாக இருப்பதற்கு, சிறுநீரகக் கோளாறு காரணம் என்பதால், பாபாவின் உணவில் புரதம் குறைக்கப்பட வேண்டும் என்று டாக்டர் கிரான்ட் பரிந்துரைத்தார். அவர்கள் மெஹராஸாத் திரும்பிய பிறகு, வலி குறைந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளில், பாபாவிற்கு மூன்று முறை கடுமையான சிறுநீரக வலி ஏற்பட்டது, மேலும் இரண்டு முறை ஒரு கோதுமை தானிய அளவு கற்கள் சிறுநீர் வழியாக வெளிவந்தன. பாபா தனது கழுத்து வலிக்காக ஒவ்வொரு நாளின் சில பகுதிகளில் பிரத்யேக கழுத்துப்பட்டையை அணிந்திருந்தார்; மேலும் நிவாரணம் அளிக்கும் விதத்தில் கோஹெர் அவருக்கு அவ்வப்போது ஒத்தடம் வழங்கவும் அனுமதித்தார்.

பாபா, ஆண், பெண் மண்டலியுடன், 1964 ஜூலை 1 அன்று மெஹராஸாத்திற்குப் புறப்படவிருந்தார், மேலும் அவருக்குப் பிரியாவிடை வழங்குவதற்காக, பூனா அன்பர்கள் ‘பந்த் கார்டன்’ (BUND GARDEN) சாலையில் அனுமதிக்கப்படுவார்கள் என்பதை அறிந்து, அனைவரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். பருவமழை தொடங்கி, பாபா புறப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு

முன்பிருந்தே, இரவும் பகலும் மழை பெய்து கொண்டிருந்ததால், அதிர்ஷ்டம் அன்பர்கள் பக்கம் சாய்ந்தது; அனைவரும் 1ஆம் தேதி அதிகாலையில் குருபிரசாத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டனர்.

பெண்டு, பாவ் கல்சூரி, அலோபா ஆகியோர் மூட்டை முடிச்சுகளை சரக்கு வண்டிகளில் ஏற்றுவதில் மும்முரமாக இருந்தனர், மேலும் அன்பர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால், அனைத்து பொருட்களையும் எடுத்துச் செல்வது கடினமாக இருந்தது. அன்பர்களும் பக்தர்களும் பாபாவின் முன்னால் அமர்ந்து வழியை முழுவதுமாக அடைத்தது, அற்புதமான காட்சியாக இருந்தது. ஒருபுறம், பாபா, பெண்டுவிடம் சீக்கிரம், சீக்கிரம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார், மறுபுறம் அவர் அன்பர்கள் மத்தியில் சிரித்து ஆரவாரம் செய்து கொண்டிருந்தார் - மதுசூதன் ஒரு பாடலையும் பாடி ஆர்த்தியுடன் நிறைவு செய்தார்!

எல்லா பொருட்களையும் சரக்கு வாகனங்களில் ஏற்றிய பிறகு, பாபா புறப்படுவதற்காக எழுந்தார். திரள் திரளான மக்கள் கூட்டத்தினூடாக அவரை வழிநடத்துவது மண்டலிக்குக் கடினமாக இருந்தது, இருந்தும் அவர்கள் சமாளித்தனர். மெஹர்ஜியின் காரில் பாபா அமர்ந்திருந்தபோது, உணர்ச்சிப் பெருக்கில், பூனாவைச் சேர்ந்த ஒருவர் பாபாவை தரிசனம் செய்ய விரைந்தார், ஆனால் அலோபா அவரைத் தடுத்து நிறுத்தினார்.

வாயில்கள் வரையிலும், அதைக் கடந்து செல்லும் பாதைகளில் இருபுறமும் பாபா-பக்தர்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்தனர். காலை 8:00 மணியளவில், பாபாவின் கார் மெதுவாக அவர்களைக் கடந்து சென்றபோது, ஒவ்வொருவரும் வேகமாக அவரது கையைத் தொட அல்லது முத்தமிட முன்னோக்கிச் சென்றனர். இந்தக் கோடைகாலத்தில் குருபிரசாத்தில் அன்பர்கள் அவருடன் இருந்த நேரம் மிகக் குறுகியதாக இருந்ததால், இந்தப் பிரிவால் அவர்களின் இதயங்கள் “பாபா... மெஹர் பாபா... எங்கள் பிரியமான தந்தையே!” என்று கூக்குரலிட்டது.

அவர்களைப் பார்த்து மகிழ்ச்சியில் சிரித்துக்கொண்டே ஜன்னல் ஓரமாக அமர்ந்திருந்த பாபா, அவர்கள் முத்தமிடவோ தொடவோ வசதியாக கையை மேலும் நீட்டினார். அவர்களின் முகங்கள் அன்பினால் பிரகாசமாக ஒளிர்ந்தன, அவர்கள் நின்ற இடத்திலேயே நின்று, கார் பார்வையிலிருந்து மறையும் வரைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பூனா மாவட்டத்தின் எல்லையை விட்டு வெளியேறிய பிறகு, மழைக்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை, மேலும் சாலையோரம் வறண்ட வயல்வெளிகளின் நீட்சியை மட்டும் காணமுடிந்தது. அவர்கள் அஹமதுநகரை வந்தடைந்ததும், அக்பர் பிரஸ் வாசல் மற்றும் ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸ் அருகே காரை நிறுத்துமாறு ஆதியிடம் அறிவுறுத்தினார்; அங்கு (காரில் அமர்ந்த வண்ணம்) பாபா இராணுவத்தைச் சேர்ந்த சிலர் உட்பட கிட்டத்தட்ட 300 அன்பர்களை சந்தித்தார். நேற்று முன்தினம், ஜபல்பூரை (JABALPUR) சேர்ந்த, 26 வயதான, கோக்கரன் ஸ்ரீவஸ்தவா (GOKARAN SHRIVASTAVA) என்ற கல்லூரி

மாணவர், பாபாவை தரிசனம் செய்ய வந்திருந்தார். கோக்கரன் 1961இல் ஜபல்பூரில் அவரது பேராசிரியர் ஒருவரிடமிருந்து பாபாவைப் பற்றி முதன்முதலில் தெரிந்துகொண்டார். பேராசிரியர் சுரேந்திர பட்நகரின் (SURENDRA BHATNAGAR) வீட்டு சுவரை அலங்கரித்த பாபாவின் புகைப்படம் அவரை மிகவும் கவர்ந்தது; நீண்ட நாட்களுக்குப் பின்னர், அது யார் என்று கோக்கரன் கேட்டறிந்ததைத் தொடர்ந்து, அவர் பாபாவிற்கு கடிதம் எழுதினார்; அவர் 1962இல் கிழக்கு-மேற்கு சகவாசத்தில் (EAST-WEST GATHERING) கலந்து கொண்டார், மேலும் அவர் 1963இல் குருபிரசாத்திற்கு வந்தார்.

உள்ளூர் தபால்காரர் தினமும் மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கப்படுவது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் என்று கோக்கரன் யோசித்துக்கொண்டிருந்தார். அவர் அஹமதுநகரை வந்தடைந்ததும், ஃபெராம், அவரை மெஹராஸாத்திற்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார், ஏனெனில் பாபா அங்கு வந்ததும், கோக்கரனை சந்திக்க அனுமதி வழங்கியிருந்தார். ஃபெராம் குவிந்திருந்த ஒரு பெரிய தபால் மூட்டையை அவரிடம் கொடுத்து, அதையும் உடன் எடுத்துச் செல்லுமாறு கூறியதால், கோக்கரன் ஓர் அதிர்ஷ்டசாலி தபால்காரர் ஆனார்! கோக்கரன் கடிதங்களை காக்காவிடம் கொடுத்தபோது, அவர் மெஹராஸாத் வளாகத்தை சுற்றிக் காண்பித்தார். (சில ஆண்டுகளுக்கு முன்பு, கோக்கரன் தேசிய கேடட் கார்ப்ஸில் (NCC) இருந்தபோது, அவர் பயிற்சிக்காக பிம்பல்காவ்ம் பகுதிக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு அவர் ஒரு பணியாளிடமிருந்து சிறிதளவு உப்பு கடனாக வாங்க மெஹராஸாத்திற்குச் சென்றபோது, அது அவதார புருஷரின் இல்லம் என்று அவருக்குத் தெரியாது.)

பாபாவின் கார் குஷ்ரு குவார்ட்டர்ஸ் அருகே நின்றதும், ஒவ்வொருவரும் முத்தம் கொடுக்கும் விதத்தில் பாபா ஜன்னலுக்கு வெளியே கையை நீட்டினார். ஃபெராம் மெஹராஸாத் முகவரிக்கு வந்த மேலும் சில கடிதங்களையும், தொலைத்தந்திகளையும் கொடுத்தார். பாபா ஏகாந்தவாசம் மேற்கொள்வதை அறிந்த கோக்கரன், சற்று தொலைவில் நின்றுகொண்டிருக்க, யாரோ ஒருவர் பாபாவிடம் அவரைப் பற்றி கூறவே, அவர் முன்னோக்கி அழைக்கப்பட்டார். பாபா அவரிடம் கையை நீட்டி, அன்புடன் அவர் கன்னத்தை வருடினார். முதன்முறையாக கோக்கரனுக்கு பாபாவின் முகத்தை அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது; அவர் மனதை ஆழமாகத் தொட்ட, மறக்க முடியாத காட்சி அது! பாபாவின் ஏகாந்தவாசத்தின் காரணமாக, அவர் அங்கு நிற்காமல் நேரடியாகச் சென்றிருந்தால், கோக்கரனுக்கு பாபாவை இவ்வளவு நெருக்கத்தில் பார்க்கும் பாக்கியம் கிடைத்திருக்காது.

பாபா காரை மீண்டும் ஔரங்காபாத் சாலையில் டி.எஸ்.பி. சந்திப்பில் (D.S.P. CORNER) நிறுத்தியபோது, அங்கு லதா லிமாயே சுமார் 20 நபர்களுடன் காத்திருந்தார். அவர்களுக்கும் பாபாவின் கையை முத்தமிடும் பாக்கியம் கிடைத்தது. பயணத்தின் போதும், அதற்குப் பின்னரும் பாபா சோர்வாகக் காணப்பட்டார், ஆனால் ஒரு வானிலை திசைகாட்டி போல், அவரது உடல்நிலை

ஒவ்வொரு கணமும் மாறியது. ஒரு கணம் அவரது முகம் இளஞ்சிவப்பு நிற ரோஜா மலர் போலவும், அடுத்த கணம் வாடிய மலராகவும் இருக்கும். பிரபஞ்சத்தின் பாரம் நிச்சயமாக அவரது தோள்களில் அதீத தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், அவரது எல்லையற்ற துன்பங்களுக்கு மத்தியில், எல்லையற்ற பேரின்பத்தின் கதிர்கள் சில நேரங்களில் பிரகாசித்ததைக் காண முடிந்தது.

பாபா, மெஹராஸாத்தை வந்தடைந்தார், அங்கு மலர் தோரணங்கள் அவரை வரவேற்கும் வகையில் வாசல்களை அலங்கரித்தன, மேலும் வண்ண நிற சுண்ணாம்பு பிரதான வீட்டின் வாசலை ஒளிரச் செய்தது. பாபா, காக்காவை அன்புடன் தழுவினார். மேலும், மெஹராஸாத், அன்பானவருக்கு அடைக்கலம் வழங்கும் அதிர்ஷ்டத்தை அடையப் பெற்றதில் மீண்டும் முகம் மலர்ந்தது.



‘உலகளாவிய செய்தி’ தகவல் குறிப்பேட்டில் வெளியிடப்பட்ட புகைப்படம்
(PHOTOGRAPH USED ON THE ‘UNIVERSAL MESSAGE’ BROCHURE)



ஒவ்வொரு நொடியும்,

ஒவ்வொரு கணமும்

எனது பெயரை திரும்பத்

திரும்ப மொழியுங்கள்!

அது உங்கள்

ஆழ்மனதில் மிகவும்

இயல்பாக இருந்தால்,

சிரமமான

தருணங்களில்

உங்களுக்கு உதவவும்,

உங்களைப்

பாதுகாக்கவும்

தானாகவே வெளிப்படும்.



-அவதார் மெஹர் பாபா